تحفة الهند

பிஸ்மில்லா ஹிர் றகுமா னிர் றகீம்.

# துஹ்பத்துல் ஹிந்து.

## முதற் பிரிவும் இரண்டாம் பிரிவும்.

இது
மதுரை
ஹலரத்து முகம்மது இப்றூஹீம் சாகிபு நக்ஷபந்தி
அவர்களின் மாணாக்கருள் ஒருவராகிய
நெல்லிகுப்பம்
அப்துர் றஹ்றுமான் சாகிபு அவர்களால்
ஹிந்தி பாஷையிலிருந்து
மொழிபெயர்க்கப்பட்டு,

சென்னை:
யூநானி வைத்திய
கலாநிதி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜ்ரி ௧௩௨0ஹு ஜமாதியுல்அவ்வல்மீ
1902ஹு செப்டம்பர்மீ.

*Registered Copy - Right.*

கைவிலை அணா-12. வி-பி-அணா-15.

பிஸ்மில்லாஹி.

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பதியாதெனில்:—௧௮௬௭௵ (௨௫ - வது) ஆக்டின் (௨௰ - வது) பிரிவில் (௬ - வது) விதியின் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மதராசில் காபிரயிட், ரிஜீஸ்தர் செய்யப்பட்டிருக்கின்றது.

இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும் காப்பிரைட் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆகையால் இந்த துஹ்பத்துல் ஹிந்துவையாவது அல்லது இதை வேறுபாஷையில் மொழிபெயர்த்தாவது அல்லது சில பாகத்தையாவது இந்நூல் ஆசிரியர் உத்தரவின்றி ஒருவரும் அச்சிடக்கூடாது. அப்படி அச்சிட்டால் மேற்கண்ட ஆக்ட்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய் அதனால் உண்டாகும் நஷ்டமனைத்தும் வசூல்செய்யப்படும்.

இங்ஙனம்,

☞ அப்துர்றஹ்மான்.

நெல்லிகுப்பம்

பிஸ்மில்லாஹி.

# எச்சரிக்கை

ஒரு புஸ்தகத்தைக் கோர்வைசெய்யவும், மொழிபெயர்க்கவும், அச்சிடவும், எவ்வளவோ பிரயாசையும், பொருள் விரையமும் உண்டென்பது அறிவுடையார்க்குத் தெரிந்தவிஷயமே. இந்த அருமையான பிரயாசையை அற்பமாகவும் மதிக்காமல் அயோக்கியரான சில அச்சுக்கூடத் தலைவர்களும், புஸ்தகவியாபாரிகளும் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிற என்னுடைய புஸ்தகத்தை என்னுடைய அநுமதியில்லாமல் கள்ளத்தனமாய் அச்சிட்டு விற்பனைசெய்து வருவதாய்க் கேள்விப்படுகிறேன். கூடிய சீக்கிரத்தில் இக்கள்ளர்களைக் கண்டுபிடித்து நியாயஸ்தலத்திற்கு இழுக்க முயற்சித்துவருகிறேன். ஆதலால் இப்புத்தகம் வாங்குகிற புண்யவாளர்கள் அக்கள்ளர்களின் புஸ்தகங்களை வாங்காமல் என்னுடைய புத்தகங்களின் முதற்பக்கத்தினடியிற் கண்டிருக்கும் முத்திரைக்குள் என்னுடையபெயர் ஹிந்துஸ்தானியில் கையெழுத்து எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களை வாங்கும்படி கோருகிறேன். அப்படிக் கையெழுத்து இல்லாத புத்தகங்களைக் கொண்டுவந்து கொடுத்தாலும், அல்லது அப்படிப்பட்ட புத்தகங்களை வைத்து விற்குமவர்களைக் காண்பித்தாலும் அவர்களுக்குத் தக்க இனாம் கொடுக்கப்படும்.

இப்புத்தகம் தேவையுள்ளவர்கள் நெல்லிகுப்பம், தைக்கால்தெருவு, தா - அப்துல்கபூர் சாகிபு அவர்களிடத்தில் கைவிலைக்கும் வாலியூபேயபல் போஸ்ட்டு மூலமாகவும் இதனடியிற்கண்ட விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| கைவிலைக்கு புஸ்தகம் | 1 - க்கு - 0—12—0 |
| வி, பி, போஸ்ட் மூலமாய் புஸ்தகம் | 1 - க்கு - 0—15—0 |

இங்ஙனம்

☞ அப்துர்றஹ்மான்.

நெல்லிகுப்பம்.

பிஸ்மில்லாஹி.

محك المذاهب

# மிஷக்குல் மதாஹிப்

(மார்க்கங்களின் உறைகல்)

என்னும் புத்தக

# விளம்பரம்

இது மிகவும் உபயோகமுள்ள அருமையான ஓர் புத்தகம். இதில் மார்க்க உண்மையை அறியும்வழியும், ஹிந்து மதஸ்தாபகர்களின் பூர்வோத்திரமும், புத்தசமயத்தை உண்டுபண்ணினவருடைய சங்கதியும், அதன் விவரமும், கிறிஸ்தவர்கள், யகூதிகள், மஜூஸிகள் இவர்களுடைய மார்க்கமும், திரியேகத்துவமென்னு முக்கடவுள் ஒன்றாயிருக்கிற கோட்பாடு பரவின சங்கதியும், நாஸ்திகருடைய எண்ணங்களும், தவ்ஹீது ரிஸாலத்து இவைகளை இயற்கையோடு ஒத்திடுகிற விவரமும், இஸ்லாம்மார்க்கத் தூய்மையும், அதை ஸ்தாபித்தவருடைய மகிமையும், கூறப்பட்டிருக்கின்றன. இதன்றியில் உலகத்தில் எத்தனை மார்க்கங்கள் பரவியிருக்கின்றன? இஸ்லாம் மார்க்கமானது எந்த மார்க்கத்தோடு ஒத்திருக்கிறது? எந்த மார்க்கத்துக்கு விரோதப்படுகின்றது? மதவைக்கியம் மனிதனுக்கு அவசியமா? இல்லையா? அதனால் அவனுக்கு என்னலாபம்? மதவைக்கியம் அவசியமென்றால் மனிதன் முழுநம்பிக்கையோடு சார்வதற்கு எந்தமதம் உண்மையுள்ளது? இன்ன மதந்தான் உண்மையுள்ளதென்று எதனால் அறியலாம்? என்ற இவ்விஷயங்களையும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. தமிழில் இம்மாதிரியான புத்தகம் இதுவரையில் எவரும் பார்த்திருக்கமாட்டார்கள். அதை வாசித்துணர்பவர்கள் அதன் நன்மையைத் தெரிந்துகொள்வார்கள். அப்புத்தகம் இப்போது அச்சிடப்படுகிறது. ஒருதொகைப் பிரதிகள் மாத்திரம் அச்சிடப் படுகின்றபடியால், விருப்பமுள்ளவர்கள் உடனே ஆடர்கள் அனுப்பவேண்டியது.

இங்ஙனம்,

☞ அப்துர்றஹ்மான்

நெல்லிக்குப்பம்.

# விஷய அட்டவணை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| முகவுரை | 1 |
| இப்புத்தகம் கோர்வை செய்தவர் இஸ்லாமான சங்கதி | 2 |
| இதற்கு துஹ்பத்துல்ஹிந்தென்று பேரிட்டகாரணம் கீழே நோட்டாக யெழுதப்பட்டிருக்கிறது. | 4 |
| இதை வாசிப்பவர்களுக்குச் சில விண்ணப்பங்கள் | 6 |
| 1-வது அத்தியாயம் 1-வது பிரிவு ஆண்டவனை அறிவது. | 9 |
| ஹிந்துமார்க்கப்படி ஆண்டவனை அறிவது. | 11 |
| பிரம்மா விஷ்ணு மகாதேவன் முதலானவர்களின் சங்கதி. | 12 |
| விஷ்ணு விபசாரம் செய்து கல்லாய்ச் சமைந்தது. | 15 |
| சாலக்கிராமம் என்ற கல்லின் பூஜை. | 15 |
| கணேசர் உற்பத்தி | 16 |
| பிரம்மாவும் விஷ்ணுவும் மகாதேவனுடைய லிங்கத்தை அளந்தது. | 17 |
| வேதாந்த சாஸ்திரப்படி பிரமமத்துக்கு அஞ்ஞானசம்பந்தமுண்டென்பது. | 18 |
| ஆண்டவன் படைக்கிறவனென்பதில் சாஸ்திரங்களின் பேதம். | 18 |
| பகவான் பத்து அவதாரங்களெடுத்தாரென்பது. | 21 |
| 2-வது பிரிவு மலக்குகளைக் குறித்துப் பேசுவது | 24 |
| ஹிந்து மார்க்கத் தேவர்களும் தேவதைகளும் | 24 |
| வசுவென்பவருடைய விந்துவை மீன் விழுங்கினதும் அம்மீன் வயிற்றில் சத்தியவந்தி என்ற பெண் பிறந்ததும் அப்பெண்ணை பாரசார விபசாரமாய்ச் சேர்ந்து அதனால் வியாசர் பிறந்ததும். | 25 |
| வியாசர் தம் சகோதரன் மனைவிகளை விபசாரமாய்ச் சேர்ந்து பாண்டு முதலானவர் பிறந்தது. | 27 |
| வியாசர் செய்தது விபசாரமல்லவென்று இந்திரமனன் என்பவர் சொல்லுகிற சமாதானத்துக்கு மறுப்பு கீழே நோட்டாக எழுதப்பட்டிருக்கிறது. | 28 |
| பாண்டுராஜன் தன் மனைவிகளை புத்திரபாக்கியம் தேடிக்கொள்ள உத்தரவளித்ததும் பஞ்சபாண்டவர் பிறந்த வரலாறும். | 29 |
| தேவர்களின் குரு பிரகஸ்பதியைக் குறித்த ஓர் ஆச்சரியமான சரித்திரம். | 29 |
| இந்திரனையும் சந்திரனையம் குறித்த ஓர் ஆச்சரியமான சரித்திரம். | 31 |
| 3-வது பிரிவு வேதங்களைக் குறித்துப் பேசுவது. | 33 |
| வேதம் இன்னின்ன லக்ஷணங்களோடிருக்கவேண்டுமென்பது. | 33 |
| ஹிந்துக்கள் தங்கள் வேதத்தைக் குறித்துச் சொல்லுகிற சமாதானத்துக்கு மறுப்பு. | 35 |
| 4-வது பிரிவு நபிமார்களைக் குறித்துப் பேசுவது. | 36 |
| ஹஜரத்து நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசலமவர்களால் வெளிப்பட்ட அற்புதங்களிற் சில. | 39 |
| குர்ஆனே மஜீது எல்லா அற்புதங்களிலும் பெரிய அற்புதமென்பது. | 47 |
| குர்ஆனைப்போல் உண்டுபண்ண ஒருவராலும் முடியாமற் போயிற்றென்பதும் அதைக்குறித்த ஆயத்துக்களும் | 48 |
| ஹஜரத்து நபிசல்லல்லாகு அலைகுவசல்லாமவர்களுடைய குணாதிசயங்கள். | 50 |
| அஹ்லுபைத்துகள், அஸ்ஹாபுகள், இமாம்கள், வலிமார்கள் முதலானவர்களுடைய குணங்களும் நடவடிக்கைகளும். | 55 |

இந்துமார்க்கப் பெரியோர்களுடைய குணங்களும் நடவடிக்கைகளும் 64
பிரம்மா தமது மகள்பேரில்மோகமானது, 64
பிரம்மாவுடைய சிரசு அறுபட்ட காரணம் 65
பிரம்மாவானவர் தமது மகளை மனைவியாக வைத்திருந்து பின்பு அவளைத் தமது மகனுக்கு விவாகம் செய்துகொடுத்தாரென்பது. 65
உலகத்தில் பிரம்மாவுடைய பூஜை நின்றுபோனகாரணம். 65
பிரம்மாவுடைய நடவடிக்கைகளைக் குறித்து ஹிந்துக்கள் சொல்லுகிற சமாதானத்துக்கு மறுப்பு. 66
விஷேசமான ஓர் ஹிக்காயத்து. 67
பிரம்மாவுக்குத் தாழான பெரியோர்களின் நடவடிக்கைள் 68
ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் நடவடிக்கைகள் 68
வியாசருக்கு வேதவியாசர் என்று பேர்வந்த காரணம். 68
விசுவாமித்திரர் நாயாகிச்சொர்க்கம் போனது. 69
5-வது பிரிவு கியாமத்து நாளைக் குறித்துப் பேசுவது 69
ஹிந்து மார்க்கத்தில் ஜன்மம் எடுக்கிற சங்கதி. 71
உலகத்தின் முடிவைப்பற்றி இந்து மத சாஸ்திரங்கள் கூறுகின்ற பேதம். 72
6-வது பிரிவுவணக்கத்துக்குஉரியவனைக்குறித்துப்பேசுவது. 76
இந்துக்கள் தங்கள் தெய்வங்களைப் பூஜிக்கிற முறையும் சோடச உபசாரமும். 77
இந்துக்கள் வணங்கும் சில தெய்வங்களின் பேர்கள். 78
ஜுவாலை முகியென்ற ஸ்தலத்தின் பெருமையைக்குறித்த சுலோகம். 79
ஜுவாலை முகியின் பூஜாரிகள் செய்கிற ஓர் சூது. 80
தேவிபூஜையும் அல்குல் வணக்கமும். 81
லிங்கபூஜையும் அதன் காரணங்களும். 83
ஹிக்காயத்து. 84
பசுவின் வணக்கமும் அதன் சாணி மூத்திரம் கலந்துள்ள பஞ்சகவ்வியத்தின் பெருமையும். 84
ஹிக்காயத்து. 85
கிரகங்களின் வணக்கம். 86
ஷிருக்குபிதுஅத்தைப்பற்றி ஹிந்துக்கள் ஆக்ஷேபிப்பது. 88
அதற்கு மறுமொழி. 91
ஷிருக்கு செய்வதை ஆண்டவன் மன்னிக்கமாட்டானென்பது. 92
பிராணிகளின் சப்தங்களால்சகுனம் பார்ப்பது. 93
சோதிடம் பார்ப்பதும் குறிகேட்பதும் 93
ஆண்டவனல்லாதவர்கள் பேரால் ஜீவராசிகளை அறுப்பது 93
ஆண்டவனல்லாதவர் பேரால் சத்தியம் பண்ணுவது. 93
அல்லாவுடைய பேரோடு மற்றவர்களுடைய பேரைச் சேர்ப்பது. 93
ஆண்டவனல்லாதவர்களிடத்தில் கோரிக்கைகளைக் கேட்பது 94
அல்லாவுடைய சிபத்துக்களில் மற்றவரைக் கூட்டாக்குவது 94
ஆலிம் அல்லது பெரியோர்களுக்கு முன்னால் பூமியை முத்தமிடுவது. 95
விளையாட்டான சபையை சூபிகள் வணக்கமென்றெண்ணுவதாய் ஹிந்துக்கள் சொல்வதற்கு மறுப்பு. 95
குத்புறப்பானி அப்துல்காதிர் ஜெய்லானி றகிமகுல்லா அவர்களுடைய வாக்கியம். 97
நிஜாமுத்தின் அவுலியா அவர்களையும் காஜி வியாவுதீன் சாகிபவர்களையும் குறித்த ஓர் சரித்திரம். 98

சில சூபியாக்கள் இராகம் கேள்பதற்குள்ள விதிகள். 99
இந்துக்கள் எங்கள் பெரியோர்கள் சக்திமான்களாயிருந்தார்களென்பதற்கு மறுப்பு. 102
ஜைனமார்க்கம். 104
விநோதமான ஓர் ஹிக்காயத்து. 104
நானுக்என்பவர் மார்க்கம். 105
7-வது பிரிவு மதபேதங்களைக்குறித்து. 106
இந்துமார்க்கக் கொள்கைகளும் ஆறு சாஸ்திரங்களும் அவற்றை உண்டுபண்ணிவர்களுடைய பெயர்களும் அவை ஒன்றுக்கொன்று பேதப்பட்டிருப்பதும். 108
ஆறு சாஸ்திரங்கள் தவிர வேறே மூன்று சாஸ்திரங்கள். 113
புராணங்களின் பேதம். 114
8-வது பிரிவு தப்புமார்க்கத்தாரை இஸ்லாம் மார்க்கத்தில் அழைப்பதைக் குறித்தது. 116
இஸ்லாம் மார்க்கத்தில் சேர்கிற ஒருவனுக்கு முதலில் போதிக்கவேண்டிய விஷயங்கள். 116
ஒருவரை இஸ்லாமாக்குவதில் தாமதம் செய்வது பெருங்குற்றம். 116
இந்துமார்க்கத்தில் இதரமார்க்கத்தாரைச் சேர்க்கக்கூடாதென்பதைக்குறித்து கேட்கவேண்டிய இரண்டு கேள்விகள். 117
வாதசம்பந்தமான ஓர் இக்காயத்து. 118
எங்கள் ஒளியான மார்க்கத்தை விட்டு உங்கள் இருளானமார்க்கத்தில் என் வருவோமென்று சில இந்துக்கள் சொல்வதற்கு மறுப்பு. 120
ஓர் ஹிக்காயத்து. 121
எங்களை முஸ்லிமாக்க ஆண்டவனுக்குப் பிரியமிருந்தால் இந்துக்கள் வீட்டில் என் பிறப்பிக்கிறானென்பதற்கு சமாதானம். 122
தகப்பன் பாட்டன் முதலான முன்னோர்களுடைய மார்க்கம் கெட்டதாயிருந்தால் அதைவிட்டுவிட வேண்டுமென்று இந்துமார்க்கத்திலும் ஏற்படுகின்றது. 125
ஹிரணியனை தெய்வ விரோதியென்றுஇந்துக்கள்சொல்வதின்பேரில் வருகிற ஆக்ஷேபம். 127
இஸ்லாமானவர்கள் தங்கள் நபியுடைய கலிமா ஓதுகிறார்களே பின்பு ஹனபிமாலிக்கி என்று ஏன் சொல்லுகிறார்கள் என்பதற்குச் சமாதானம். 129
பமை ஸஜ்ஜாத ரங்கீங்குன் என்ற பைத்தினால் பீரானவர் மார்க்க விரோதமான உத்திரவு செய்தால் வழிப்படவேண்டுமென்று விளங்குகிறதே என்பதற்குச் சமாதானம். 131
ஹிந்துவிலும் மூஸல்மானிலும் என்ன பேதமிருக்கிறதென்பதற்கு உத்தரம். 133
இதுவரையில் முன் அச்சிட்டிருந்த துஹ்பத்துல் இந்து முதற் பிரிவிலடங்கிய விஷயங்கள். பின்னால் 2-ம் பிரிவாய் அச்சிட்டுப் பிரசுரிப்பதற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததும் இப்போது ஒரே பாகமாய் இதனோடு சேர்க்கப்பட்டிருப்பதுமான விஷயங்களாவன:—
2-வது அத்தியாயம் வணக்கங்களுடைய விவரம் இதில் 6-பிரிவுகள் உண்டு. 134
1-வது பிரிவு அசுத்தங்களையும் அவற்றை நீக்குமுறைகளையும் குறித்தது. 134
இந்துமார்க்க சூதகபாதக அசுத்தங்களின் வேடிக்கை. 138
2-வது பிரிவு தொழுகையைக்குறித்து. 140
இந்துக்களின் சந்தியாவந்தனம். 141
காயத்திரி என்ற மூலமந்திரத்தின் பெருமையைக் குறித்து சொல்லியிருப்பவை. 142

டி மந்திரமும் அதன் அர்த்தமும். 143
பரலிலும் சுன்னத்திலும் வித்தியாசம். 144
சலாத்துல் குத்துவாத்து 144
3-வது பிரிவு நோன்பைக்குறித்தது. 145
இந்துக்களின் விரதம். 146
4-வது பிரிவு ஜக்காத்தைக்குறித்தது. 147
இந்துக்களுடைய திரவிய சம்பந்தமான வணக்கம். 147
5-வது பிரிவு ஹஜ்ஜைக்குறித்தது. 148
இந்துக்களுடைய யாத்திரை ஸ்தலங்கள். 149
கபுறுகளின் ஜியாரத்து. 150
பாக் பட்டணத்தில் பிரபல்லியமாயிருக்கிற சொர்க்கவாசலுக்கு மார்க்க ஆதாரமில்லை. 151
சொர்க்கவாளிகளென்று தீர்மானிக்கப்பட்டவர்கள். 151
நரகவாளிகளென்று தீர்மானிக்கப்பட்டவர்கள். 152
6-வது பிரிவு இறந்துபோனவர்களுக்கு சவாபு செலுத்துவதைக் குறித்தது. 152
இந்து மார்க்கத்தில் சவாபு செலுத்துவதும் சங்கல்பம் செய்வதும். 154
இந்துக்கள் தங்கள் தெய்வங்களின்பேரால் ஹோமம் வளர்ப்பதும் தற்பணம் செய்வதும். 156
ஹோமம் வளர்ப்பதைப்பற்றி இந்திரமனன் சொல்கிறசமாதானமும் அதற்கு மறுப்பும் அடியில் நோட்டா யெழுதப்பட்டிருக்கிறது. 157
இதரமார்க்கத்தார் செய்கிறசெயல்களை இஸ்லாம் மார்க்கத்தார் விட்டு விடவேண்டுமே என்று இந்துக்கள் கேட்கிற கேள்வியும் அதற்கு விடையும். 161
3-வது அத்தியாயம் விவகாரம் இதில் 6 பிரிவுகள் உண்டு 1 வது பிரிவு விவாகத்தைக்குறித்தது. 126
இந்துக்களின் விவாகம். 163
இந்துக்களில் விதவையான ஸ்திரி மறுவிவாகம் செய்யக்கூடாதென்பது. 164
ஹிக்காயத்து. 167
2-வது பிரிவு சில ஹலாலான வஸ்துக்களையும் ஹறாமான வஸ்துக்களையும் குறித்தது. 168
சாராயம் ஏன் ஹறாமாயிற்று. 169
3-வது பிரிவு ஒருவரையொருவர் சந்திக்கும்போது செய்யவேண்டிய காரியம். 170
ஹிந்துக்கள் சந்திக்கும்போது செய்யும் மரியாதை. 171
4-வது பிரிவு காரியங்களைத்தொடங்கும்போது செய்யும் 172
5-வது பிரிவு ஜாதிகளின் மேன்மை தாழ்மையைக் குறித்தது. 173
ஹிந்துக்களின் நான்கு ஜாதிகளும் அவர்கள் தொழில்களும் 175,176
ஹிந்துக்களின் நான்கு ஜாதிகளும் உற்பத்தியான விதம். 177
பிராமணனை உயர்த்துவதில்சொல்லப்பட்டிருக்கிற ஓர் சுலோகம். 177
சூத்திரனுடைய தாழ்மை. 178
6-வது பிரிவு நீதியைக்குறித்து. 178
இந்துமார்க்க விவகார சாஸ்திரம். 178
இந்துமார்க்கத்தில் சத்தியம் செய்விப்பது 8-வகை என்பது. 179
4-வது அத்தியாயம் இந்துக்கள் ஆக்ஷேபிக்கிற சில சங்கதிகளுக்கு உத்தரம். 181
அற்புதங்கள் ஆறுவகை யென்பது. 184
சிற்றப்பன் மகளைக் கட்டுவது வெட்கக் கேடென்று இந்துக்கள் ஆக்ஷேபிப்பதும் அதற்கு உத்தரமும். 185
இஸ்லாமானவர்கள் அதிக அசுத்தமானவர்களாம். 190
இஸ்லா மானவர்களுக்கு எச்சிலென்கிற அசங்கிதமே கிடையாதாம், ஹிக்காயத்து. 191
மாடறுக்கிறவனை ஆண்டவன்

மன்னிக்கமாட்டா னென்று இஸ்லாம் மார்க்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறதாம். 192
பசுவானது இஸ்லாமானவர்களுக்கு மூத்திரத்தையா தருகின்றது? என்பதற்கு மறுப்பு 194
இந்துவா யிருக்கிறவன் இஸ்லாமாகுவது நல்ல பதார்த்தம் ஊசிப்போவது போலவாம். 194
பறையன் சக்கிலி முதலான எந்த ஜாதியையும் இஸ்லாமானவர்கள் மார்க்கத்தில் சேர்த்துக் கொள்வது குற்றமாம். 195
கத்னுசெய்வதில் ஆண்டவனுக்குப் பிரியமிருந்தால் பிறக்கும் போதே அப்படி பிறப்பிக்க மாட்டானு என்பதற்கு சமாதானம். 198
இஸ்லாமானவர்கள் ஜீவவதை செய்து புலாலைப் புசிக்கிறார்கள் என்பதற்கு உத்தரம் 200
இஸ்லாமானவர்கள் பிணத்தை ப்பூமியில் புதைப்பது குற்றமாம். 202
ஹிக்காயத்து. 203
அனுபந்தம் இஸ்லாம் மார்க்கத்தின் நன்மைகளைக்குறித்தது. 205
இக்காயத்து அக்பர் ஆபாதில் ஒருதுரை. 207
இஸ்லாமார்க்கத்தில்சேர்ந்த சில நண்பர்களுடைய நாமங்களும் விர்த்தாந்தங்களும். 211
ஆரிய சமாஜத்தார் புராணாதிபிரமாணங்களால் தங்கள் மார்க்கின் மீது சார்கிற குற்றங்களை நிவர்த்திக்க சொல்கிற ஒரு தந்திரமும் அதற்கு மறுப்பும். 223
இந்துக்களுடைய வேதத்தில் அன்னிய தெய்வ வணக்கமும் அசத்தியவாக்குமுண்டென்பதற்கு அறிகுறியாக சில வேத சுருதிகள். 224
மனைவி வயிற்றிலிருந்து புருஷன் பிறப்பது. 227
இந்துமத பரிபாலர்களாய்க் கூடியிருந்த பரேலிப் பண்டிதர்கள் இந்து மத வேதங்களைப் பற்றி கூறியிருக்கிற சாக்ஷியம் நோட்டாயெழுதி யிருக்கிறது. 228
குர்ஆன் ஷரீபைப்பற்றி ஐரோப்பியர்களின் நன்குமதிப்பு. 229
பிரம்ம சமாஜத்தார் ஒஹீயும் வேதமும் இறங்குவது மெய்யென்று நம்பாமல் மறுப்பதற்கு உத்தரம். 229
நம் நபி அலைகிஸ்ஸலா மவர்களைக்குறித்துச் சில சீர்மைத் துரைமார்கள் கொடுத்திருக்கிற நற்சாக்ஷிப் பத்திரங்கள். 233

முற்றிற்று.

# பிழைதிருத்த அட்டவணை.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 2 | போகிதில்லை | போகிறதில்லை. |
| 8 | 29 | விருப்பமில்லாத | விருப்பமுமில்லாத. |
| 8 | 31 | நபிசல்லல்லாகு அவர்களின் | நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின். |
| 22 | 3 | பாதளத்திற்போய் | பாதாளத்திற்போய் |
| 22 | 15 | பகமான் | பகவான். |
| 24 | 6 | வகைளாயிருக்கின்றன | வகைகளாயிருக்கின்றன. |
| 29 | 23 | பிறருக்கொடுத்து | பிறருக்குக்கொடுத்து. |
| 29 | 25 | சொர்க்கித்துக்கு | சொர்க்கத்துக்கு. |
| 32 | 5 | கடவதென்று | கடவனவென்று. |
| 32 | 23 | சுகதே | சுகமே. |
| 32 | 24 | சொல்லுகிதாவது | சொல்லுகிறதாவது. |
| 32 | 29 | யேகிக்கவேண்டும் | யோசிக்கவேண்டும். |
| 33 | 34 | ரிருக்கக்கூடாது | இருக்கக்கூடாது. |
| 35 | 7 | பின்பற்றினவர்களுக்கும் | பின்பற்றினவர்களும். |
| 35 | 27 | நாலாவதுபிரிவில் | நாலாவதுஅத்தியாயத்தில். |
| 36 | 13 | அப்டடிக்கில்லாமல் | அப்படிக்கில்லாமல். |
| 36 | 28 | விரேந்தமாகவும் | விரோதமாகவும். |
| 39 | 12 | அப்துல்முனுபு | அப்துல்மனுபு. |
| 40 | 13 | ويقولو | ويقولوا |
| 40 | 25 | எதிருகள் | எதிரிகள். |
| 43 | 20 | உடம்புபேசினது | உடும்பு பேசினது. |
| 43 | 24 | ஹஷாதத்துகலிமா | ஷஹாதத்துகலிமா. |
| 52 | 28 | அதிக உயரமும் காபாவுக்குச்சரியானஎடையுமுள்ள ஒரு மலக்கு | காபாவின் உயரத்துக்குச் சரியான இடுப்பளவுள்ள அதிக உயரமான ஒரு மலக்கு. |
| 56 | 13 | கிமியாபே | கிமியாவெ. |
| 56 | 26 | தலைவரராக்கி | தலைவராக்கி. |
| 59 | 4 | வார்தைக்கு | வார்த்தைக்கு. |
| 69 | 15 | இப்படியாயிருந்தன | இப்படியா யிருந்தனவென்று. |
| 79 | 5 | பூஜிக்கிறார்கள் | பூஜிக்கிறவர்கள். |
| 80 | 25 | மீளுவீர்கள் | மீளுவீர்கள் என்றும். |

| பக்கம் | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 95 | 17 | நிறைவேற்றுகிறவர்ளென்றும் | நிறைவேற்றுகிறவர்களென்றும். |
| 96<br>97 | 23,24,25<br>16, 19 | றஹ்மத்துல்லா | றகிமதுல்லா. |
| 87 | 35 | அப்வ்விடத்தில் | அவ்விடத்தில். |
| 100 | 1 | பெரியேர்களில் | பெரியோர்களில் |
| 100 | 32 | முதன்மையானவர்களும் | முதன்மையானமர்களுமான. |
| 104 | 13 | ஜனங்களிலிருந்து | ஜனங்களிலிருத்து. |
| 104 | 16 | ஆர்களிடத்தில் | அவர்களிடத்தில். |
| 104 | 34 | அற்கு | அதற்கு. |
| 117 | 14 | சந்தேம்மில்லாமல் | சந்தேகமில்லாமல். |
| 124 | 27 | அவர்ககளுடைய | அவர்களுடைய. |
| 126 | 30 | அலைகிவஸ்ஸலாம் | அலைகிமஸ்ஸலாம். |
| 147 | 22 | அவனிடத்திதலேயே | அவனிடத்திலேயே. |
| 158 | 9 | போட்டெடுத்து | போட்டெரித்து. |
| 158 | 17 | செய்கிறார்ளோ | செய்கிறார்களோ. |
| 164 | 29 | எண்ணாமலிருக்கிறார்கள் | எண்ணாமலு'மிருக்கிறார்கள் |
| 165 | 1 | கைப்பெண்ணை | கைம்பெண்ணை. |
| 165 | 3 | சொல்லப்படுகிறவாகள் | சொல்லப்படுகிறவர்கள். |
| 168 | 16 | பொருகள் | பொருள்கள். |
| 169 | 18 | இருங்கின்றன | இருக்கின்றன. |
| 170 | 30 | முறையுமுள்ள | முறையுள்ள. |
| 176 | 33 | படுத்துவேண்மென்றும் | படுத்தவேண்டுமென்றும். |
| 178 | 9 | விதிக்கவேண்டுமென்து | விதிக்கவேண்டுமென்று. |
| 197 | 35 | அகல்கில சல்லமவர்கள் ஆலாகுசல்லல் | சல்லல்லாகு அலைகிவசல்மவர்கள். |
| 198 | 1 | ண்டவனால் | ஆண்டவனால். |
| 200 | 16 | புகள் | புழுக்கள். |
| 200 | 35 | பக்ஷண | பக்ஷணி. |
| 204 | 4 | ஒப்பவிக்கிறது | ஒப்புவிக்கிறது. |
| 207 | 32 | ஆலோசிதுத் | ஆலோசித்து. |
| 208 | 30 | ஷராஎந்த | ஷரா என்ற. |
| 240 | 31 | شهيبث | شهبث |

பிஸ்மில்லாஹி.

நாகூர்

தலைமைப் புலமை

தர்காவித்துவான்

ம-ள-ள-ஸ்ரீ

## த. செவத்தமரைக்காய சீரியரவர்களாற்

செய்யப்பட்ட

# சிறப்புப்பாயிரம்.

கழிநெடி லாசிரிய விருத்தம்.

நீரார்ந்த நெடியநிலை யுடைஇய நிலநிலைவிரிந்த நிராத ரத்தின்
பேரார்ந்த குபிர்நெறி யிற்பெரிதார் ந்துபரம் பரையின்பே ரல்லாந்து
காராந்த பைசாச தெய்வநிலையினைத் தெனவே கடைப் பிடித்துட்
சூராந்த பலிநிலையில் பலநிலையின் வழிதழுவித் துகள் குலாவி (க)

கல்லுருவஞ் செம்புருவ மண்ணுருவம் பொன்னுருவங் கதிர்களேயு
மெல்லுருவ மதியுருவ மெத்தனையோ வத்தனையு மிறையென் றெண்ணிப்
புல்லுருவஞ் சேர்தருமன் பதையெனும்பொய்வழக்கியலேபொலிருந்துநிற்போர்
பல்லுருவ மெவ்வுருவு நீத்தவொரு தனிநிலையோன் பரிவினோடும். (உ)

உண்மைவழி யொருவழி தீன்வழியவழி யுறுதிநிலை யுணர்வுற் றோங்க
வண்மைவழி தருகுநரன் றிகபரசாதன முறையுமு வந்துற் றோப்பி
யெண்மைவழி நரகவழி யடையாமை யாக்குநரீ மென்று மென்றுங்
கண்மைவழி வழீஇயநவ நிலைக்குரிமை காட்டிய முஹம்ம தென்போர். (௩)

மல்குநிலை யறுஷேறி மற்றுமுற்ற வயினேறு மலர்த்தாள் போற்றி
புல்குநிலை மண்டோயா தமரர்முடி சுமந்தேகும் பொற்றாள் போற்றி
நல்குநிலை மெய்யடிய ரீடேறுமொளி யெழில்சேர் நறுந்தாள் போற்றி
பல்குநிலை யெந்நிலையுங் கொடுத்தருளி யடுத்தாளும் பதங்கள் போற்றி (௪)

வாழ்வினையில் வாழ்குதிரென் றக்குலத் தார்விளித் தவர்தம் மதத்துளாய
சூழ்வினையும் பொய்வினையுங் கற்பனையுஞ் சற்பனையுஞ் சுருதியென்னுஅ
வீழ்வினையு மினைத்தென முன்னெடுத் தெடுத்துத் தடுத்து நிலைவிடுத்துரும
லூழ்வினையி னரியதொரு துஹ்பதுல் ஹிந்தெனு நூலையுரை செய்தானால். ()

அருங்கலை கண் முழுதுணர்ந்தோனற் றவத்தினாகரத்தோனரிய மார்க்கத்
தொருங்கலையி னாழிநிகர் விரிமனத்தோ னூர்காஞ்சி யுதித்துமேன்மை
நெருங்கலையி னெல்விநகர் வதிதரு மோன்மனத்துவந்து ஞேயமுற்றோர்
மருங்கலையு மெழில்குணத்தோ னப்துர்றஹ்மான்சாஹிப் வாழி வாழி.

முற்றுப் பெற்றது.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# நூன்முகம்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன். அஅஸ்ஸல் இஸ்லாம வல் முஸ்லிமீன் வஅதல்லஷ்ஷிர்க்க வல்முஷ்ரிகீன். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ஸைய்யிதில் முர்சலீன முகம்மதின் வஆலிஹி வ ஸஹ்பிஹி அஜமயீன்.

இணைவைப்பவராகிய வழிக் கேட்டினரின் அனுதாரப் புதர் மொழிகளுக் கிணங்காது சத்திய மார்க்கத்தை வெளிப்படுத்தும் உண்மைத் தூதுவரும் எங்கள் தபோபலனுமாகிய முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை இவ்வுலகின் கண்ணே எழுந்தருளும்படி செய்தானே அவனையே புகழ்கின்றேன், அவனே புகழனைத்திற்கு முரியவனென்று பிரமாணிக்கின்றேன்.

எங்களின் தபோபலனாகிய சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின்மீதும், அவர்களின் தோழர் மீதும், அவர்களின் வீட்டார் மீதும், நீங்காக் கருணையையும் அன்பையும் பொழியுமாறு அப்புகழுக்குரிய ஒரு தனிமுதல்வன் மாட்டு ஆதரவு வைக்கின்றேன்.

பின்னர் அசத்தனாகிய நான் ஹிந்துமதாபிமானிகளி லொருவரின் சென்னியினின்று ஜனனமாய் அம்மார்க்கப் பயிர்ச்சியிற் றேர்ந்து அம்மார்க்கப் பிரபல கிரந்தங்களை ஆய்ந்து நோக்குமிடத்து உண்மையாகவே அம்மார்க்கம் ஒரு பெரு மிருட்டிலிருப்பதாக எனக்குப் புலப்பட்டு அவ்வந்தகாரத்தினின்று நீங்குவழி தேடுமிடத்து, ஹிஜ்ரி ஆயிரத்து முன்னூறும்(1300) ஆண்டில் மனசாக்ஷியத்திற்கு இயைந்தவாறு உயிரின் பிரயோஜனத்திற் குரித்தாய தோர் சுடரை நோக்கி ஆனந்தமடைந்து அவ்வெளிச்சத்திலேயே நான் தரிப்பட்டேன். அல்ஹம்து லில்லாஃ, அவ்வெளிச்சம் இஸ்லாம் மார்க்கமேயாம்.

அதற்குக் கைமாறாக ஹிந்து மார்க்கத்திலுள்ள அஞ்ஞானங்களை ஒருவா றெடுத்து என் தேசாபிமானிகளுக்குக் காட்டுங் கருத்தினனாக இருக்கு மவ்வேலையில், ஆரியதேசத்திலே க்ஷத்திரிய வம்சத்திலே பிறந்து வளர்ந்து தேரிய ஹிந்து குருவாகிய அனந்தராம் என்னும் ஆதிப்பெயருள்ளவர் அம்மார்க்கத்தை வெறுத்து, சத்திய மார்க்கமாகிய இஸ்லாமிற் சேர்ந்த பிரயோஜனமாக என் கருத்துக் கியைந்தாங்கு துஹ்பத்துல் ஹிந்தென்னும் ஒரு புத்தகம் ஹிந்ஸ்தானி பாஷையில் வரைந்து அச்சியற்றப்பட்டதாய் என் பார்வைக்கு வந்தது. அதைக் கண்ணுற்றபோதென் கருத்தைமாற்றி அப்புத்தகத்தைத் தமிழில் மொழிபெயர்த்தால் இத்தேசவாசிகளுக் குப்போதுமென்னுங் கருத்தினனே ஹிஜ்ரி ஆயிரத்து முன்னூற்றுப் பதினான்காம் (1314) ஆண்டில் அப்புத்தக முதலாம் அத்தியாயத்தை மொழிபெயர்த்து துஹ்பத்துல்ஹிந்து முதற்பிரிவென்னு மகுடமிட்டச்சு பதிப்பித்தேன். அதனிறுதியில் மற்ற மூன்றத்தியாயங்களையும் அனுபந்தத்தையும் பின்னர் 2-ம் பிரிவாயச்சிட்டு வெளிப்படுத்தப் படுமெனக் குறிப்பு காட்டியிருந்தேன். சொற்பகாலத்தில் ஷை புத்தகங்களெல்லாம் செலவாய்ப்போய்ப் பிறகெழுதிய கடிதக்காரருக்கனுப்ப அப்புத்தகமில்லாமையாலும் அதைவாசித்துணர்ந் தின்புற்ற நண்பர்கள் 2-ம் பிரிவு வேண்டுமென்றுவலா யநந்தங் கடிதங்களனுப்பியதாலும், மீண்டுமம் முதற்பிரிவையும் முன் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரண்டாம் பிரிவையும் வெவ்வேறு பாகமாய்ப் பிரிக்காமல் முற்றும் ஒரே புத்தகமாக்கி முன்னிலும்விசேஷமாய் ஆங்காங்கு வேண்டும் ஆயத்து, ஹதீஸ், பைத்துகளை அதற்குரிய அறபெழுத்துகளா லமைத்து ஹிஜ்ரி ஆயிரத்து முன்னூற்றிருபதாம் (1320) ஆண்டில் இப்புத்தகம் அச்சியற்றப்பட்டது.

இங்ஙனம்:

அப்துர்றஹ்மான் நெல்லிகுப்பம்.

بسم الله الرحمن الرحيم

تحفة الهند

பிஸ்மில்லா ஹிர்றகுமா னிர்றகீம்.

# து ஹ் ப த் து ல் ஹி ந் து.

## மு க வு ரை.

மகா பரிசுத்தமான அல்லாஹுதஆலாவைப் புகழ யாரால் முடியும்? அவன் வினோதமாகிய பலபடைப்புகளைப் படைத்து, எல்லாவற்றிலும் மனிதனைச் சிறப்பாக்கி வைத்து, அவனுக்குப் பகுத்தறிவென்னும் பிரகாசமான விளக்கைக் கொடுத்தருளினான். அவன் அதன் மூலமாய்ப் பொய்யில் நின்றும் மெய்யைப் பிரித்துத் தன் நாயனை அறிந்துகொள்ளுகிறான். அந்த வெளிச்சமான விளக்கைத் துராசையென்கிற தூசி படாமல் காப்பாற்றி அதன் வெளிச்சத்தில் உலகத்தில் ஊர்ஜிதமாயிருக்கிற பல மார்க்கங்களையும் பார்த்துப் பார பட்சமில்லாமல் ஞாயமாய் யோசித்தால், சந்தேக மில்லாமல் தப்பு மார்க்கங்களை வெறுத்துச் சத்திய மார்க்கத்தைக் கைக்கொண்டு, நாயனுடைய பொருத்தத்துக்கு வழிப்படுவான். என்றாலும் மனிதன் இயல்பாகவே மறதி யுள்ளவனாகையால், அந்தப் பகுத்தறிவென்கிற முத்தைத் துராசையென்கிற இருட்டிலிருந்து வகுத்தெடுக்கிறது மகாகஷ்டமாகையால், ஆண்டவன் தனது பூரண தயவினால் சகல தப்பு மார்க்கத்திலிருந்து சத்திய மார்க்கத்தை எல்லாருக்கும் வகுத்துக் காட்டும்படிக்கும், * குபிரும் ஷிருக்குமென்கிற அஞ்ஞானத்திலிருந்து இஸ்லாமென்கிற மெய்ஞ்ஞானத்தில் எல்லாரையும் ஆக்கும்படிக்கும் † நபிமார்களை வழிகாட்டிகளாக அனுப்பினான். சொந்தமாக நமது நாயகம் செய்யிதுல் முர்சலீன் றஹ்மத்துன் லில்ஆலமீன் ஹஜரத்து அஹ்மது முஜ்தபா முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களைச் சர்வலோகத்துக்கும் வழிகாட்டுகிறவர்களாக அனுப்பினான். அவர்கள் நம்மெல்லாரையும் தகப்பன் பாட்டனுடைய பாரம்பரை வழக்கங்களென்கிற இருட்டிலிருந்து சத்திய மார்க்கமென்கிற வெளிச்சத்திற் கொண்டுவந்தார்கள். இன்னும் தாய் தந்தையைப் பார்க்கிலும் அதிக தயாளமாய் இகபரத்தின் சொற்பசொற்ப லாபநஷ்டங்களையும் அறிவித்து நம்மைத் தேற்றினார்கள்.

---

* குபிரும் ஷிருக்குமென்றால்=மாறுசெய்தலும் இணைவைத்தலும் என்பதாம். † நபிமார்கள்=தீர்க்கதரிசிகள்.

* குர்பாஞகிறேன். இப்பேர்ப்பட்ட தயாளமுள்ள தேற்றுகிற வர் இதற்கு முன்னும் உண்டானதில்லை, இனியும் உண்டாகப்போகி தில்லை. அல்லாஹும்ம ஸல்லி வ ஸல்லிம் அலைஹி, வஅலாஆலிஹி வஅஸ்வாஜிஹி, வஅஸ்ஹாபிஹி அஜ்மயீன்.

பின்பு ‡ முகம்மது உபைதுல்லா வென்னும் பேருடையவனும், முன்ஷி கோட்டேமல் என்பவருடைய குமாரனும், கஸ்பா † பாயல் என்னும் ஊருடையவனுமாகிய அடியேன் சொல்லுகிற தென்னவென் றால், இந்த ஏழையாகிய யான் எனது சிறுபிராயத்தில் என் தந்தையி ன் ஜீவகாலத்தில் § புத்தை வணங்கும் மார்க்கத்திற் சிக்கியிருந்தேன். அப்பொழுது ஆண்டவன் கிருபை என்னைக் கைப்பிடித்திழுத்தது. அ தாவது இஸ்லாம் மார்க்கத்தின் நன்மைகளும் ஹிந்து மார்க்கத்தின் கெடுதிகளும் என்மனதிற்றோன்றி, என் முழு இருதயத்தோடு இஸ் லாம் மார்க்கத்தை விசுவாசித்து, என்னை றசூல் சல்லல்லாஹு அலை ஹிவசல்ல மவர்களுக்கு வழிப்பட்டவர்களில் ஒருவனாக எண்ணிக் கொண்டேன்.

பின்பும் அழியாத சுகம் அல்லது மாருத துக்கத்துக்கு மூலாதா ரமாயிருக்கிற மார்க்க உண்மையை ஆராயாமல் சும்மா விருக்கிறதும், தகப்பன் பாட்டனுடைய பாரம்பரை வழக்கங்களென்கிற தப்புவழி யான வலையிற் சிக்கியிருக்கிறதும் மகா மூடத்தனமென்று என் மனம் எனக்கு ஆலோசனை சொல்லிற்று.

ஆகையால் உலகத்தில் பிரபல்லியமாய் வழங்கிவருகிற மதங்களி ன் தன்மையை அறிய முயன்றேன். எந்த மதத்தையும் சாராமற் பொதுவாய் ஒவ்வொரு மதத்தையும் ஆராய்ச்சி செய்தேன்; ஹிந்து மதத்தையும் உணர்ந்தேன்; அந்த மதத்தின் கிரந்த கர்த்தாக்களாகிய பெரிய பெரிய பண்டிதர்களிடத்திலும் சம்பாஷித்தேன்; கிறிஸ்து மா ர்க்கத்தின் கொள்கைகளையும் தீர அறிந்தேன். இஸ்லாம் மார்க்கத் தின் கிரந்தங்களையும் வாசித்தேன்; ஆலிம்களாகிய முகம்மதிய சாஸ்

---

* குர்பாஞகிறேன்=பலியாகிறேன். ‡ இவர் இஸ்லாமாகுமுன் இவருக்கு அனந்தராம் என்று பேராயிருந்தது. † பாயல் என்பது பைட்டாலா இராஜாவின் அதிகாரத்துக்குள்பட்ட ஓர் ஊர். அவ்விட த்தில் குபிர் அதிக மும்மரமாயிருப்பதால் அதைக் காசிக்கு இரண்டா வதென்று ஹிந்துக்கள் சொல்லுகிறார்கள். ஆனல் இந்தப்பட்டணத் தில் இஸ்லாம் விர்த்தியாகிவருகின்றது. இதில் அநேகர்குபிரை விட் டு இஸ்லாமாகிறார்கள். இந்தப்பட்டணம் லூதியாணவுக்குக் கிழக்கே ஒருநாள் பிரயாணத்தி லிருக்கிறது. § புத்து=விக்கிரகம்.

திரிகளிடத்திலும் தர்க்கம் பண்ணினேன்; பின்பு ஒரு மதத்தையும் சாராமல் ஞாயமாய் எல்லா மதங்களிலும் எது உண்மையானதென்று நன்றாய் யோசித்தேன்; இஸ்லாம் மார்க்கத்தைத் தவிர மற்றெல்லா மார்க்கங்களையும் தப்பென்று கண்டேன். இஸ்லாம் மார்க்கத்தின் நன்மைகள் வெகு அழகாய்த் துலங்கின. இந்த மார்க்கத்தின் காரண குருவான ஹஜரத்து நபி முகம்மது ஸல்லல்லாஹு அலைகிவசல்லம் அவர்களோ நாவாற்புகழ்ந்து முடியாத நன்மைகளையும் நற்குணங்களையுமுடையவர்களா யிருக்கின்றார்கள். இன்னும் இந்த மார்க்கத்திலிருக்கும் விசுவாசங்களையும், வணக்கங்களையும், வியவகாரங்களையும், நல்லொழுக்கங்களையும் எவனறிகிறானோ, அவன் தான் தானே இந்த மார்க்கத்தின் உண்மையைத் தெரிந்துகொள்ளுவான்.

* சுப்ஹானல்லா எப்பேர்ப்பட்ட மார்க்கம்! அதிலுள்ள ஒவ்வொரு விஷயமும் ஆண்டவனை நினைப்புண்டாக்காம லிருக்கவில்லை. எப்படியும் ஆண்டவனருளால் பகலும் இரவும் போலவும் ஒளியும் இருளும் போலவும் மெய்யும் பொய்யும் வெவ்வேறே பிரிந்து தோன்றின.

ஏற்கெனவே வெகுநாளாய் மனமானது இஸ்லாமென்கிற ஒளியால் பிரகாசமடைந்தும் நாவானது கலிமாஷஹாதத்து என்கிற மணத்தினால் பரிமளம் பெற்றுமிருந்தது. என்றாலும், துராசையும் ஷைத்தானுமாகிய இரண்டு பகைவர்களும் நிலையற்ற இந்தப் பூலோக வாழ்க்கையின் இன்ப சுகங்களென்கிற விலங்கை என்காலில் மாட்டி, என்னைச் சிறையாக்கினார்கள். ஆகையால் கொஞ்சநாள் வெளிப்படையில் ஹிந்து மதாசாரங்களில் கெட்டுழன்றிருந்தேன். கடைசியில் ஆண்டவனுடைய உதவியானது என்னை நோக்கி: விலைமதிக்கத்தகாத இந்த முத்தை எதுவரையில் மறைவென்கிற சிப்பியில் வைத்திருப்பாய்? ஆனந்தத்தைக் கொடுக்கும் பரிமளமான இந்த வாசனைத் திரவியத்தை எதுவரையில் மூடலான பெட்டியில் வைத்திருப்பாய்? அந்த முத்தைக் கழுத்துக்கு ஆரமாகச்செய்; அந்தப் பரிமளமான அத்தரைப்பூசி ஆனந்தசுகத்தை அனுபவித்துக் கொள்ளென்று என்னைத் தூண்டிற்று.

தவிர இஸ்லாம் மார்க்கத்தை யனுசரித்து அதை மறைத்து, காபிர்களைப்போல் உடை உடுத்துகிறது நரகம் சேர்க்குமென்று நற்கிரியைகளையுடைய ஆலிம்களும் பத்துவாவினால் தீர்மானித் திருக்கிறார்க

* சுப்ஹானல்லா வென்பது ஆச்சரியச்சொல். அதன் அர்த்தம் ஆண்டவன் துய்யவன் என்பதாம்.

ஷ். ஆகையால் அல்ஹம்துலில்லாஃ ஹிஜ்ரி 1264௵ நோன்பு பெருநாளில் இந்த ஏழையின் இஸ்லாமென்னும் சூரியன் மறைவென்னும் மேகத்தைவிட்டு நீங்கித் துலாம்பரமாய்ப் பிரகாசித்தது. முஸ்லிமான சகோதரர்களுடன் கூடிப் பெருநாள் தொழுகையை நிறைவேற்றினேன். فلله الحمد حمدا كثيرا طيبا مباركا فيه பலில்லாகில் ஹம்து ஹம்தன் கஸீறன் தைய்யிபன் முபாரக்கன் பீஹி.

வெகு நாளாய்ப் பொதுப்பிரயோஜனத்துக்காக இஸ்லாம் மார்க்கத்தின் உண்மையையும் ஹிந்து மார்க்கத்தின் தப்பையும் குறித்து ஒரு புஸ்தகம் எழுதினால் பாரபட்சமில்லாமல் ஞாயமாய்ப் பார்க்கிற புத்திசாலிகளுக்கு சத்தியமும் அசத்தியமும் நன்றாய் விளங்கிவிடுமென்று எண்ணியிருந்தபடி அல்ஹம்துலில்லாஃ ஹிஜ்ரி 1268௵ - த்தில் * துஹ்பத்துல் ஹிந்து என்னும் பேருள்ள இந்தப் புஸ்தகம் முடிவாகி லூதியானா வென்னும் ஊரிலுள்ள அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பட்டது.

இந்தப் புஸ்தகம் நான்கு அத்தியாயங்களும் முடிவில் ஒரு அனுபந்தமுமாக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது.

1—வது அத்தியாயம் விசுவாசத்தின் விபரம்.

2—வது அத்தியாயம் வணக்கங்களின் விபரம்.

3—வது அத்தியாயம் வியவகாரங்களின் விபரம்.

4—வது அத்தியாயம் ஹிந்துக்களின் ஆக்ஷேபனைகளுக்கு உத்தரம்

அனுபந்தமானது இஸ்லாம் மார்க்கத்தின் நன்மைகளைக் குறித்தது.

இப்பொழுது புத்திமான்களிடத்தில் நான் கேட்டுக்கொள்ளுகிறதென்னவென்றால், பிடிவாதத்தையும் பாரபக்ஷத்தையும் தூரப்படுத்தி எப்பக்கமும் சாராமல் இப்புஸ்தகத்தை யோசனையுடன் பார்த்துவருவீர்களாக. அப்படிப் பார்த்து வரும்பொழுது சத்தியம் வெளியாய்விட்டால் அதை அங்கீகரித்து அசத்தியத்தை விடுவதற்குத் தாமசம் பண்ணவேண்டாம், தகப்பன் பாட்டனுடைய பின்பற்றுதலினால் தப்பு வழியென்கிற காட்டில் அலைந்து திரியவேண்டாம். கவனிக்கவேண்டும். ஆண்டவன் மனிதனுக்குப் புத்தியைக் கொடுத்தது தன்

---

* இந்தப் புஸ்தகத்தில் அதிகமாய் ஹிந்துமார்க்கத்தின் சங்கதிகளும், ஹிந்துதேசத்தில் வசிக்கும் சில இஸ்லாமானவர்களில் வழங்கிவருகிற ஹிந்துக்களின் வழக்கங்களும், அவைகளுக்கு றத்தும் எழுதியிருப்பதினால் இதற்குத் துஹபத்துல் ஹிந்து என்று பேர்வைக்கப்பட்டது. அதற்கு அர்த்தம் இந்தியாவுக்குக் காணிக்கை என்பதாம்.

யை அறிவதற்காகவே. ஆகையால் உண்மை மார்க்கத்தை அங்கீகரிப்பதில் தன் புத்தியைக்கொண்டு யோசிக்காமல் ஒருவரையும் பின்பற்றக் கூடாது. வெகு சீக்கிரத்தில் அழிந்துபோகிற துன்யா உடைய (லௌகீக) காரியங்களில் எப்படித் தனக்குக் கொஞ்சமாவது நஷ்டம் நேரிடுகிறதா யிருந்தால் ஒருவருடைய சொல்லையும் கேட்காமல் பூரணமான யோசனையுடன் செய்கிறீர்களோ, அப்படியே அல்ல, அதைக்காட்டிலும் அதிகமாய் தீன் உடைய (வைதீக) காரியங்களில் பூரணயோசனையுடன் ஆராய்ச்சி செய்யவேண்டும். ஏனென்றால், அதின் பலன் எப்போது மழியாமலிருக்கும். மார்க்க விஷயங்களில் கபோதிகளைப் போலும் பைத்தியக் காரர்களைப்போலும் நடந்துகொள்ள வேண்டாம். இந்த அவிவேகத்தினால் மாறுதலை தனையில் அகப்படுவீர்கள்

இன்னும் தன்மார்க்கம் கடுகவ்வளவும், அன்னியமார்க்கம் மலையவ்வளவுமாயிருந்த போதிலும் தன் மார்க்கத்தை விடோமென்று அனேக ஹிந்துக்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். ஆனால் இதில் ஒரு புதுமை என்னவென்றால் தீன் உடைய (வைதீக) காரியங்களில் மாத்திரம் இந்த ஏற்பாட்டைக் கையாடுகிறார்கள். துன்யா உடைய (லௌகீக) காரியங்களில் தங்கள் முன்னோர்களைப் பின்பற்றவேண்டுமென்கிற எண்ணம் அவர்களுக் கில்லை. அதாவது ஒருவனுடைய *தகப்பன் பாட்டன் ஆகிய இவர்கள் ஏழைகளாகவும், சீர்கெட்டவர்களாகவும் கீர்த்தியடையாதவர்களாகவு மிருந்தால், அவர்களுடைய மக்களும் தகப்பன் பாட்ட னிருந்தபடியே நாமு மிருக்கவேண்டு மென்று சீமான்தனத்தையும் கீர்த்திபெறவேண்டு மென்பதையும் விட்டு விடுகிற தில்லையே, மேலும் காசு பணம் சம்பாத்தியம் செய்வதில் விடாமுயற்சியா யிருக்கிறார்கள். தீன் உடைய காரியத்தில் எப்படியும் தன் மார்க்கம் பொய்யென்றும், இஸ்லாம் மார்க்கம் மெய்யென்றும் சூரியனைப்போல் துலாம்பரமாய்த் தெரிந்துவிட்டால் அப்பொழுது முன்னோர்களுடைய பின் பற்றுதலை விடக்கூடாதென்று சாக்குச் சொல்லுகிறார்கள். ஆ! ஆ! இந்தப் புத்திக்கு என்னென்று சொல்லலாம்? வேறொன்று மில்லை. இவர்கள் துன்யாவே (இகலோகவாழ்க்கையே) பெரும்பாக்கிய மென்றும்; ஆகிறத்து (பரலோக) வாழ்க்கை ஒன்றுமில்லை யென்று மெண்ணி யிருக்கிறார்கள். ஆனால் ஹிந்துக்களின் மார்க்கத்திலும் மற்றெல்லா மார்க்கத்திலும் ஆகிறத்துடைய வாழ்க்கைக்கு முன்னே துன்யா வுடைய வாழ்க்கை ஒருபொருட்டுமல்ல.

இப்பொழுது இந்தப் புஸ்தகத்தை வாசிக்கும் கனவான்களிடத்தில், முன்னதாகச் சில விண்ணப்பங்களைச் செய்துகொள்கிறேன். அவை பின் வருபவைகளாம்.

1-வது ஹிந்துக்களின் பெரியோர்களைப்பற்றி இப்புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற சரித்திரங்களைப்போல் இன்னும் அனேக மிருக்கின்றன. இவ்விடத்தில் அறிகுறியாகச் சில எழுதப்பட்டன. ஆனால் சில ஹிந்துக்கள் மார்க்கத்தைக் குறித்துப் பேசும்பொழுது இந்தச் சரித்திரம் அறவே இல்லையென்று சாதிக்கிறார்கள். அவர்களின் சாஸ்திர புராணங்கள் அனேக முஸ்லிம்களுக்குத் தெரியாதபடியால், அதற்கு ஒன்றும் சொல்லாமல் சும்மா இருந்துவிடுகிறார்கள். ஆகையால் அவர்களிடம் பேசும்பொழுது முன்னே மார்க்கத்தைக்குறித்துச் சம்பாஷிக்க வேண்டுமென்கிற கருத்தை வெளியிடாமல் அந்தச் சரித்திரங்களை அவர்களிடத்திலேயே கேட்டால், ஒளிக்காமல் உண்மையைச் சொல்லிவிடுவார்கள். இப்படி அவர்களே சொன்ன பிற்பாடு பேசவேண்டியதைப் பேசுங்கள். இதைத் தவிர அனேக ஹிந்துக்களுக்குத் தங்கள் மார்க்கத்தைக்குறித்து ஒன்றும் தெரியாதாகையால், அதனாலும் அந்தச் சரித்திரங்களை ஒப்புக்கொள்ளார்கள்.

2-வது இப்புஸ்தகத்தில் இந்துக்களின் பெரியோர்களுடைய துர் நடத்தைகளைக்குறித்து எழுதப்பட்டிருக்கிற சங்கதி மெய்யாகவே இருக்குமென்று எண்ணவேண்டாம். ஏனென்றால், அவர்களில் சிலர் ஆண்டவனுக்குப் பிரீதியுள்ள மூமினாக இருந்திருக்கவும். அவர்களைக் குறித்துப் புராணங்களில் எழுதப்பட்டிருக்கிற சங்கதி சுத்த பொய்யாயிருக்கவும் கூடும். இன்னும் இத்தேசத்தில் ஆண்டவனால் சில நபிமார்களும் உண்டாகியிருக்கலாம். ஆனால் ஹஜ்ரத்து காத்திமுல் அம்பியாவாகிய முகம்மது ஸல்லல்லாஹு அலைகிவசல்லமவர்கள் நபியாக அனுப்பப்பட்ட நாளிலிருந்து முன்னுள்ள மார்க்கங்களெல்லாம் மாற்றப்பட்டன வென்பது தெரிந்தவிஷயம்.

3-வது யாதொரு ஹிந்துவினிடத்தில் மதவிஷயத்தைக் குறித்துப் பேசவேண்டியதாயிருந்தால், அதில் மார்க்கத்தின் உண்மையைக்காட்ட வேண்டுமென்பதையும், அசத்திய மார்க்கத்தார் சத்தியமார்க்கத்தை யடையவேண்டு மென்பதையும், மனதில் எண்ணிக்கொள்ள வேண்டியது. தர்க்கத்தினால் எதிரியைத் தாழ்த்தித் தான் மேன்மையடைய வேண்டுமென்கிற துராசைக்கு இடங்கொடுக்கக் கூடாது. பேசும்பொழுது மிருதுவான வார்த்தைகளை வழங்கவேண்டும். கோபங்காட்டக் கூடாது. மேலும் எதிரி கடினமான வார்த்தைபேசினால் நாம் பொறுத்துக்கொள்ள வேண்டும். இன்னும் ஹிந்துக்களின் பெ

ரியோர்களை இழிவாய்ப்பேசலாகாது. அதனால் ஒரு பிரயோசனமு மில்லை. அது பல நஷ்டத்தையே கொடுக்கும்.

4–வது இந்தப் புஸ்தகத்தில் சில பிரிவுகளின் சங்கதி வேறே சில் பிரிவுகளை அனுசரித்ததா யிருக்கின்றது. ஆகையால் இந்தப் புஸ்தகத்தைத் துவக்கத்திலிருந்து கடைசிவரையில் கூடியமட்டும் ஒழுங்காய்ப் பார்வை யிடவேண்டியது.

5–வது புஸ்தகம் பெரிதாகாமலிருப்பதற்காக நான் அனேக * சரித்திரங்களைச் சுருக்கி எழுதி யிருக்கிறேன். ஆகிலும் அசலான சங்கதிகளை விட்டு விடவுமில்லை

6–வது இந்தப் புஸ்தகம் கோர்வைசெய்தது இந்துமார்க்கத்தை மாத்திரம் குறித்தல்ல; இஸ்லாம் மார்க்கத்தின் அவசியமான அனேக சங்கதிகளும் இதில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆகையால் இதை வாசிக்கும் கல்விமான்கள், வாசிக்கத் தெரியாத மற்ற முஸ்லிம்களுக்கும் தெரியப்படுத்த வேண்டியது. அதனால் பெரும் பலனைப் பெற்றுக் கொள்வீர்கள்' இந்தப் புஸ்தகத்தில் அவசியமும் வெகு விநோதமுமான சங்கதிக ளெழுதப்பட்டிருக்கின்றன. பார்வையிட்டால் அதன் பிரயோசனம் தெரியும்.

7–வது வாசிப்பவர்களைச் சந்தோஷப்படுத்துவதற்காக இப்புஸ்தகத்திற் சில விடங்களில் சில விகடமான சங்கதிகளு மெழுதியிருக்கின்றேன். இந்தக் குற்றத்தை மன்னிக்கவேண்டியது.

8–வது ஸலவாத்து ஓதி இந்த ஏழையாகிய அடியேனையும் என்னுடைய உஸ்தாதுமார்களையும் என் சினேகிதர்களையும் மற்ற முஸ்லிமான ஆண் பெண் அனைவரையும் ஆண்டவன் தன் ஹபீபுடைய பொருட்டால் † ஆகிரத்தில் ‡ அதாபை விட்டும் காக்கும்படி துஆச் செய்ய வேண்டியது. ஒருவன் தன் முஸ்லிமான சகோதரனுக்காக துஆச் செய்தால் அப்பொழுது ஒரு § மலக்கானவர் உனக்கு மப்படியே உண்டாவ தாகவென்று சொல்லுகிறதாய் ஹதீதில் வந்திருக்கின்றது.

9–வது இந்தப் புஸ்தகத்தில் ஏதாவது பிழையிருந்தால் திருத்துதல் செய்து கொள்ளவேண்டியது.

10–வது இந்தத் துன்யா அனந்தமாயிரவருஷம் நிலைத்திருக்கிறதாயிருந்தாலும் கடைசியில் நாம் ஒருநாள் அதை விட்டுவிட வேண்டி

---

* அவைகளின் விபரம்=ஸவுத்துல் ஜப்பார் என்னும் கித்தாபைப்பார்க்க. † ஆகிறத்து=மறுமை. ‡ அதாபு=வேதனை. § மலக்கு=வானவர்.

யதா யிருக்கின்றது. ஆகையால் முஸ்லிமான சகோதரர் அனைவரும் மவுத்தை நினைவுவைத்து துன்யாவுடைய வாழ்க்கையின் இன்ப சுகங்களை வெறுத்து ஆகிறத்துடைய பிரயாணத்துக்கு வேண்டிய பண்டங்களாகிய நற்கிரியைகளைச் சம்பாத்தியம் செய்யவேண்டியது. (தன் வாழ்நாளைத்) தொழுகை, நோன்பு, ஸக்காத்து முதலான சரீரசம்பந்தமும் திரவிய சம்பந்தமுமான வணக்கங்களிலும் ஷரகுடைய மற்றக் கட்டளைகளை நிறைவேற்றுவதிலும் செலவு செய்யவேண்டியது. குர்ஆனை மஅனவுடன் ஓதியும் கிதாபுகளைப் பார்வையிட்டும் உபதேசங்களைக் கேட்டும் தஸ்பீஹு, சலவாத்து, இஸ்திக்பாரு இவைகளை மிகுதியாய் ஓதியும் வரவேண்டியது. ஜனங்கள் நற்கிரியைகளைச் செய்யாமலிருந்தால் அவைகளைச் செய்யும்படி அவர்களை ஏவவேண்டியது; துற்கிரியைகள் செய்கிறவர்களைச் செய்ய வேண்டாமென்று விலக்க வேண்டியது. குணங்களை அழகுபடுத்துவதற்காக இஹ்யாவுல் உலூம், கீமியாயெ ஸஆதத்து, மின்ஹாஜுல்ஆபிதீன் முதலான கிதாபுகளை வாசித்தும் கேட்டும் வரவேண்டியது, எல்லாக் காரியங்களைப்பார்க்கிலும் நபி ஸல்லல்லாஹு அலைகிவஸல்லம் அவர்களுடைய சுன்னத்தாகிய நடவடிக்கைகளுக்கு இணங்கி நடப்பதை முற்படுத்த வேண்டியது. இதற்குச் சரியான பாக்கியம் ஒன்றுமேயில்லை. இக்காலத்தில் அநேகர்சுன்னத்தைப் பித்அத்தென்றும், பித்அத்தைசுன்னத்தென்று மெண்ணியிருக்கிறார்கள். "என் உம்மத்தானது கலகத்திலான வேளையில் யாதொருவன் என் சுன்னத்தாகிய நடவடிக்கைகளை உறுதியாய்ப் பிடிப்பானாகில், அவனுக்கு நூறு ஷஹீதுடைய சவாபு கிடைக்கு" மென்று ஹதீதில் வந்திருக்கின்றது.

ஆகையால் ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிற இந்த வார்த்தைப்பாட்டை விசுவாசித்து எல்லா சுன்னத்துகளையும் கொண்டு வருவதில் முக்கியமாய்க் கைம்பெண்களை மறுவிவாகம்செய்து கொடுப்பதில் அதிக முயற்சி செய்யவேண்டியது; கல்யாணத்தில் மேளவாத்தியமுதலிய கெட்ட வழங்ககளைத் தூரப்படுத்த வேண்டியது; துர்க்குணமும் துராசையும் துன்யாவுடைய விருப்பமில்லாத ஆலிம்களுடைய சொல்லை நம்பவேண்டியது. சாவு வாழ்வு முதலிய துன்யாவின் சகல காரியங்களிலும் நபிஸல்லல்லாஹு அவர்களின் சுன்னத்துக்கு வழிப்படுவதை விட்டு விடவேண்டாம். சுன்னத்துக்கு விரோதமான வழக்கத்தைத் தூரப்படுத்த வேண்டியது; நபிஸல்லல்லாஹு அலைகிவஸல்லம் அவர்களின் கிளையார்களையும் தோழமார்களையும் சகல அவ்லியாக்களையும் ஸாலிஹீன்களையும் உவந்திருக்க வேண்டியது. வல்லாமு அலா மனித்தப அல் ஹுதா.

பிஸ்மில்லா ஹிர்றகுமா நிர்றகிம்.

# 1—வது அத்தியாயம்; விசுவாசத்தின் விபரம்.

இதில் எட்டுப் பிரிவுகளடங்கி இருக்கின்றன. முதலாவது பிரிவு ஆண்டவனை அறியும் விபரம்.

முஸ்லிம்களாகிய நாமெல்லாம் கீழ் எழுதும் சங்கதிகளை உறுதியாய் நம்பி விசுவாசிக்கிறோம். அவைகளாவன:—சர்வலோகத்தையும் படைக்கிறவன் ஒருவனே. அவனின் சுத்தமான நாமம் அல்லாஹ். அவனுக்கு ஒன்றும் இணையில்லை. ஏனென்றால் உலகத்துக்கு இரண்டு அதிகாரிகளிருந்தால் அதன் கட்டுப்பாடுகள் கெட்டுப்போகும். எல்லாப் பெருமைகளும் பூரணத்தன்மையும் அவனுக்கே சொந்தம். அவன் எல்லாக் குற்றங் குறைகளைவிட்டு மகா சுத்தமா யிருக்கிறான். ஏனென்றால் குற்றங் குறையுள்ளவன் ஆண்டவனா யிருக்கத்தகாது. அவன் எந்தக்காரியத்திலும் யாதொரு ஜின் அல்லது மனிதன் அல்லது மலக்கு முதலானவர்களின் தேவை யுள்ளவனல்ல. ஏனென்றால் வேறொருவருடைய தேவையுள்ளவன் சர்வலோகத்தையும் படைக்கவும், சகல சங்கதிகளை அறியவும், எல்லாருடைய முறைப்பாட்டைக் கேட்கவும், எல்லாருக்கும் இரணம் செலுத்தவும், எல்லாருடைய கோரிக்கைகளை நிறைவேற்றவும் அவனால் எப்படி முடியும்?

சகல வஸ்துவுக்கும் ஆண்டவன் வேண்டியவனா யிருக்கிறான். எந்தவஸ்துவும் ஒரு நேரத்திலாவது அவனைவிட்டுத் தேவையற்றதாகாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேளையிலும் அவனே வேண்டியவனா யிருக்கிறான். ஆண்டவன் எல்லா நேரத்திலும் எல்லா வஸ்துக்களையும் அறிகிறான். அந்தவஸ்து இருட்டிலிருந்தாலும், வெளிச்சத்தி லிருந்தாலும், பூமியி லிருந்தாலும், வானத்தி லிருந்தாலும், மலையின் சிகரத்திலிருந்தாலும், சமுத்திரத்தின் ஆழத்திலிருந்தாலும் சரியே, ஆதியிலிருந்து அந்தம்வரையில் ஒவ்வொரு வஸ்துவின் சங்க என்ன விதமாய் எந்த நேரத்தில் எந்த விடத்தில் என்ன நடந்தது என்ன நடக்கும் என்பனவாகிய இவைகளெல்லாம் ஆண்டவனுக்குத் தெரியும். ஒவ்வொருவனுடைய மனரகசியத்தை அறிகிறான். அப்படி அறியாவிட்டால் அவன் ஆண்டவன் தன்மைக்கு அருளனாகான். அவன் அறிகிறது மனிதர், ஜின்னுகள், மலக்குகள், இவர்கள் அறிகிறதுபோலல்ல. ஏனென்றால் இவர்கள் அடங்கலுக்கும் ஆண்டவன் அறிவிக்கிறதுகொண்டு புத்தி, ஐயறிவு இவைகளின் மூலமாய் ஏதொன்றும் தெரியவருகிறது; தவிர, இவர்களுக்கு ஒருவேளையில் ஒருவஸ்து தெரிய வருகின்றது, ஒருவேளையில் தெரியவில்லை, இன்னும் எல்

லா வெளியிலும் எல்லாவஸ்துவும் தெரியவில்லை, ஆண்டவன் தானே யாதொருவர் அறிவிக்கிறதன்றிப் புத்தி ஐயறிவன்றி எல்லாவற்றையும் அறிந்து கொள்ளுகிறான். ஒவ்வொரு வஸ்துவையும் ஒவ்வொரு நேரத்திலும் கண்களின்றிப் பார்க்கிறான். ஒருவஸ்துவும் ஒருநேரத்திலும் அவனுடைய பார்வைக்குப் புறம்பாகாது. இருளான இரவில்நடக்கும் சிற்றெறும்பின் காலடியையும் பார்க்கிறான். எறும்பூறும் சத்தம் முதல் எல்லாவற்றையும் காதன்றிக் கேட்கிறான்; எந்தவேலையையும் செய்யச் சக்தியுள்ளவனா யிருக்கிறான்; நாடினதைச் செய்வான். அவனுடைய நாட்டத்தினாலும் * 'குன்' என்கிற ஒரு உத்தரவினாலும் சர்வலோகங்களும் உண்டாகிவிட்டன. இஷ்டமானால் ஒரு உத்தரவினால் எல்லாவற்றையும் அழித்துவிடுவான். இப்படியெல்லாம் செய்யச் சக்தியில்லாதவன் தேவத்தன்மைக்கு லாயக்காகமாட்டான். அவனுடைய சக்தியானது மனிதர், ஜின்னுகள், மலக்குகள், இவர்களுடைய சக்தியைப் போலல்ல. ஏனென்றால் இவர்களெல்லாம் ஆண்டவனின் தேவையுள்ளவர்களா யிருக்கிறார்கள். தங்கள் சுயமாய் ஒன்றும் செய்யமாட்டார்கள். தவிர இவர்களின் சக்தி பலக்குறைவானது ஒருவேளை நடக்கும், ஒருவேளை நடக்காது. ஆண்டவன் சக்தியோ பலமுள்ளது; எப்போதும் நடக்கும். ஆண்டவன் ஒருவரைப் பெறவுமில்லை; அவனை ஒருவர் பெறவுமில்லை; அவன் ஒருவருக்குச் சகோதரனுமல்ல; ஒருவருக்குப் பந்துவுமல்ல; எவ்விதத்திலும் ஆண்டவனுக்குச் சமானம் ஒரு வஸ்துவுமில்லை. அவன் சரியும், சமானமும், சாயலும், மாதிரியும் இல்லாதவனா யிருக்கிறான்.

இவ்விடத்தில் ஆண்டவனை இவ்வுலகத்தில் கண்ணால்பார்க்கலாமென்கிறது ஏற்படாமலிருக்க, பின்பு நீங்கள் ஆண்டவனையெப்படி அறிந்தீர்களென்று யாராவது கேட்பார்களானால், அதற்கு மறுமொழியாவது:—நாங்கள் ஆண்டவனை அவன் படைப்புகளைப் பார்த்தறிந்தோம். உதாரணமாக சாயமேற்றிய புடவையைக்கண்டு அதைச் சாயம் தீர்த்தவன் ஒருவன் உண்டென்று அறிந்து கொள்ளுகிறோம். இன்னும் எழுத்தைக்கண்டால் எழுதுகிறவன் ஒருவன் இல்லாமல் எழுத்துத்தானே உண்டாகாதாகையால், இதை எழுதினவன் ஒருவன் உண்டென்று அறிந்துகொள்ளுகிறோம். நாற்காலியைப்பார்த்துத் தச்சனை அறிந்துகொள்ளுகிறோம். பின்பு வானம், பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரம், மண், தண்ணீர், நெருப்பு, மரம், கல், கடல், ஜீவராசி, மனிதன், மேகம், மழை, புல், பூண்டு, சூடு, குளிர்ச்சி,

* குன் என்பது அறபுவாக்கியம். அதன் அர்த்தம் ஆகிவிடு என்பதாம்.

வரட்சி, கொழுமை, நோய், சவுக்கியம் முதலிய சகல சிருஷ்டிப்பொருள்களையும் பார்த்து இவைகளைப் படைத்த ஆண்டவன் ஒருவன் உண்டென்பதை மனிதன் ஏன் அறியமாட்டான்?

தவிர, நாம் ஒரு காரியத்தை நினைக்கிறோம். அந்தக்காரியம் அநேகமாய் நாம் நினைத்தபடி முடிகிறதில்லை. நம்முடைய அந்த எண்ணத்தை மாற்றினது யார்? அதை மாற்றினவன்தான் ஆண்டவன். மனிதன் கவனிக்கவேண்டிய தென்னவென்றால், கொஞ்ச காலத்துக்குமுன் தன்னுடையபேரும் அடையாளமும் உலகத்தில் இருந்ததில்லை. பின்பு முதலில் ஒரு சொட்டு இந்திரியமாயிருந்து, அதனால் மனிதனானான். இப்படி ஆக்கினது யார்? தானே தன்னை உண்டாக்கினான் என்று எண்ணுகிறதா யிருந்தால், இப்பொழுது தன் சரீரத்தில் ஒரு உரோமத்தையும் படைக்கச் சக்தியில்லாதவனாயிருக்க, முன்னே பேரும் அடையாளமு மில்லாத தன்னைத் தானே எப்படி உண்டாக்கிக்கொள்வான்? ஆகையால் இவனைப்படைத்தவன் இவன்தானல்லவென்றும், இவனல்லாத வேறொருவன் இவனைப் படைத்தவனென்றும் தெரியவருகின்றது. ஆனதால், எல்லாவற்றையும் படைத்தவன்தான் ஆண்டவன். மனிதன் ஆண்டவனுடைய படைப்புகளை கவனத்துடன் பார்த்தால் சந்தேக மில்லாமல் ஆண்டவன் உண்டென்கிறது அவனுக்கு நன்றாய் விளங்கிவிடும்.

ஹிந்துக்களின் மார்க்கப்படி ஆண்டவனை அறிவதில் அநேகபேதங்களுண்டு. அதைக்குறித்து இந்த அத்தியாயத்தின் 7 - வது பிரிவில் கொஞ்சம் விவரித்தெழுதப்படும். இவ்விடத்திலும் கொஞ்சம் சொல்லப்படுகின்றன. ஹிந்துமார்க்கப்படி தெய்வம் இரண்டுவகைப்பட்டிருக்கின்றது. ஒன்று நிர்க்குணதெய்வம். அதாவது எக்குணமு மில்லாதது. இன்னுமொன்று சகுண தெய்வம். அதாவது குணங்களையுடையது. நிர்க்குணமானது சகலசிருஷ்டியும் அழிந்துபோகிறபோதுள்ளது. அப்பொழுது அதன் நிலைமையை ஒன்றும் சொல்ல முடியாது. சகுணமானது அவைகளைப் படைக்க நாடும்பொழுதுள்ளது. இன்னும் பிரம்மத்தினிடத்தில் * "மாயை" தோன்றி அதனால் ராஜசம், சாத்விகம், தாமசமென்னும் மூன்று குணங்களுண்டாயினவாம். ராஜச குணத்தின் புறத்தால் பிரம்மாவின் சொரூபத்தில் வெளியாகி, படைப்புகளைப் படைக்கின்றதாம்; சாத்விக குணத்தின் புறத

---

* அஞ்ஞானமானது விட்சேப சக்தியுடன் (படைக்கும் தத்துவத்துடன்) சேர்ந்தால் அதற்கு மாயை என்று சொல்லுகிறார்கள். ஆகையால் மாயை என்பது அஞ்ஞானமென்றும் விட்சேப சக்தியென்றும் இரண்டு பகுதிகளுள்ளதா யிருக்கின்றது.

தால் விஷ்ணுவின் சொரூபத்தில் வெளியாகிப் படைப்புகளைக் காக்கின்றதாம்; தாமசகுணத்தின் புறத்தால் மஹாதேவனுடைய சொரூபத்தில் வெளியாகிப் படைப்புகளை அழிக்கின்றதாம். இதன் விபரம் இந்த அத்தியாயத்தின் ஏழாவது பிரிவில் சொல்லப்படும்.

† இந்துக்கள் சொல்லுகிறபடி பிரம்மா, விஷ்ணு, மஹாதேவன் ஆகிய இந்த மூன்று தேவர்களும் தெய்வீக அதிகாரமுள்ளவர்களாம்: ஒரு தெய்வம் மூன்றுதெய்வங்களாய்ப் பிரிந்தவர்களாம்; சர்வலோகத்தின் ஆதீனமும் அதிகாரமு முள்ளவர்களாம்.

இவ்விடத்தில் கவனிக்கவேண்டிய தென்ன வென்றால்:—முதலாவது ஆண்டவனுக்கன்றி மற்றெவருக்கும் சர்வலோக அதிகாரமும் ஆதீனமுமில்லை. ஆண்டவன் மூன்றாய்ப் பிரிவதும் கூடாது. அப்படியே இந்த மூவரும் தெய்வீக அதிகாரமும் சர்வலோகத்தின் ஆதீனமும் உடையவர்களா யிருந்தார்களென்றே ஒப்புக்கொள்கிறதாயிருந்தால், தெய்வீகத்தின் இலக்ஷணங்களாகிய நீதியும் நற்குணங்களுமுள்ளவர்களாயும், துர்க்குணங்க ளில்லாதவர்களாயு மிருக்கவேண்டியது அவசியம். ஆனல் இந்துமத சாஸ்திர புராணங்களில் இந்த மூவரையும் குறித்து எழுதியிருக்கிற வர்ணிப்புகளைப் பார்வையிட்டால், சொற்ப புத்தியுள்ளவனும் அவர்களின் விவேகத்தைப்பற்றி ஆச்சரியப்படாதிரான். அவைகளில் சிலவற்றை உதாரணமாக இவ்விடத்தில் எழுதுவாம். மகா பாரதத்தில் எழுதியிருக்கிற தென்னவென்றால், அத்திரி முனியின் மனைவி வெகு பத்தினியா யிருந்தாள். அவள் கற்பை அழிக்க வேண்டுமென்று பிரம்மா, விஷ்ணு, மஹாதேவன் இந்த மூவரும் அவன் வீட்டு வாசற்படியில்வந்து பிச்சை கேட்டார்கள். அவள் இவர்களுக்குப் பிச்சை போடுவதற்காக வீட்டிலிருந்து வெளியே வர, இவர்கள் அவளைப்பார்த்து நாங்கள் இப்படிப் பிச்சை வாங்கமாட்டோம், எங்களை வீட்டிற்குள்ளழைத்து நீ நிர்வாணியாயிருந்து எங்களுக்கு அன்னமிடுகிறதா யிருந்தால், நாங்களிருப்போமென்றார்கள். அதற்கு அந்த மங்கை தன் கணவனிடத்தில்

† முருத் ஆபாது என்ற ஊரில் உள்ள இந்திரமனன் என்பவர், கோர்வைசெய்த புஸ்தகத்தில் இந்த மூவரும் கடவுளால் உண்டாக்கப்பட்டவர்களா யிருக்கிறார்களென்றும், விஷ்ணுவானவர் அவதாரியா யிருப்பதால் அவர் முன்னிருவரிலும் மேன்மையானவரென்றும் எழுதியிருக்கிறார். வேதத்தில் இந்த மூவரும் மெய்யாகவே யிருந்ததில்லை யென்றும்; பிரம்மா, விஷ்ணு, மகாதேவன் என்ற இந்த மூன்று நாமங்களும் கடவுளுடைய காரணப் பேர்களா யிருக்கின்றனவென்றும் தெளிவாய்ச் சொல்லப்பட் டிருக்கின்றன. ஸௌத்துல் ஜப்பார் 2 - வது வாலயம 14 - ம் பக்கம்.

விடைபெற்று, இந்த மூவரையும் வீட்டிற்குள்ளழைத்து அன்னமிடும் பொழுது அவர்கள்மேல் தண்ணீரைத்தெளிக்க. உடனே இந்த மூவரும் சிறுபாலகராய் விட்டார்கள் என்பதாம்.

சிநேகிதர்களே! மேற்கண்ட சங்கதிகளினால் இந்த மூவரும் கொடிய துஷ்டர்களென்றும், மோசக் கருத்துள்ளவர்களென்றும், காமிகளென்றும், தாங்கள் கொண்ட கருத்து நிறைவேறாமல், ஒரு ஸ்திரீயின் வல்லமையினால் சிறுபாலகராகும்படியான ஈனர்களாயிருந்தார்களென்றும் தெரியவருகின்றதல்லவா? இப்பேர்ப்பட்டவர்கள் எங்கேயாவது தெய்வீக அதிகாரமும் சர்வலோகத்தின் ஆதீனமுமுள்ளவர்களாவார்களா?

இன்னும் பதும புராணத்தில் எழுதியிருக்கிற தென்னவென்றால்:—தேவேந்திரன் ஒருநாள் மஹாதேவனைத் தெரிசிக்கும்பொருட்டுக் கைலாசகிரி பர்வதத்திற்குப் போனான். அவ்விடத்தில் அவலட்சணமும் சிவந்த கண்ணும் நீண்ட பற்களுமுடைய ஒருவன் உட்கார்ந்திருக்கக் கண்டு, அவனை நோக்கி, மஹாதேவர் எங்கேயிருக்கிறாரென்று கேட்க, அவன் தேவேந்திரனுடைய கேள்விக்கு யாதொரு பதிலும் சொல்லாமல் அவனைக் கடிந்துபேசினான், அதனால் தேவேந்திரன் கோபமாகித் தன் * கசையினால் அவன் தோள்மீது ஓர் அடியடிக்க, அந்தக் கசை உடனே சாம்பலாயெரிந்துபோயிற்று. இதைக் கண்ட தேவேந்திரன் திகைத்து நின்றான். உண்மையில் அந்த அவலட்சணமாயிருந்தவர் மகாதேவரானபடியால், அவர் தேவேந்திரனை எரித்துச் சாம்பலாக்கிவிட எண்ணினார். அதற்குள்ளாகத் தேவர்களுக்கெல்லாம் குருவாகிய பிரகஸ்பதி அவ்விடத்தில் வந்து தேவேந்திரனுக்காகச் சிபாரிசுசெய்தார். தேவேந்திரனும் பிரகஸ்பதியும் மகாதேவரை வெகு வணக்கத்துடன் ஸ்தோத்திரம் செய்தார்கள். மஹாதேவர் தேவேந்திரனுடைய குற்றத்தை மன்னித்து இருவரையும் நோக்கி, உங்களுக்கு வேண்டியதைக் கேளுங்களென்றார். இருவரும் மகாதேவரைப்பார்த்து, தங்களுடைய கண்களில் சுவாலித்தெரிகிற இந்தக் கோபாக்கினியைத் தணித்துக் கொள்ளும்படி பிரார்த்திக்கிறோமென்றார்கள். அதற்கு மகாதேவர் இந்த அக்கினி தணியாது; ஆனால், இதை எங்கேயாவது எறிந்து விடுகிறேனென்று, அந்தக் கோபாக்கினியைச் சமுத்திரத்தில் கங்காநதி சங்கமாகுமிடத்தில் எறிந்துவிட்டார். அந்த அக்கினி அவ்விடத்தில் விழுந்தவுடனே ஒரு பாலகனாய்ச் சமைந்து அழத்தொடங்கினது. அந்த அழுகையின் சப்தம் வானம் பூமியைத் திடுக்கிடச் செய்தது. அப்பொழுது பிரம்மா அவ்விடத்தில் வந்தார்.

* கசை=தண்டாயுதம்.

சமுத்திரம் பிரம்மாவுக்கு மரியாதைசெய்து அந்தப் பாலகனைப் பிரம்மாவின் மடிமீது வைத்து, இந்தப் பாலகனுக்குத் தாங்களே பேர் சூட்டுங்களென்றது. அந்த அருமையான பிள்ளை பிரம்மாவின் தாடியை வெகு வலுவாய்ப் பிடித்திழுக்க, அதனால் பிரம்மாவுக்கு வலி தோன்றிக் கண்ணீர் விட்டார். அந்தப் பிள்ளையால் பிரம்மாவின் கண்ணிலிருந்து நீர் வடிந்ததின் நிமித்தம் பிரம்மாவானவர் அந்தப்பிள்ளைக்கு "ஜலந்தரன்" என்று நாமஞ்சூட்டினார். பின்பு பூதகணங்களின் குருவாகிய சுக்கிரதேவனை அழைத்து ஜலந்திரனை சகல பூதகணங்களுக்கும் அரசனாக்கும்படிக்கும், பூதகணங்களின் தலைவனான காலநேமியின் புத்திரியாகிய ப்ரந்தாள் என்னும் பெண்ணை அவனுக்கு விவாகம் செய்விக்கும்படிக்கும் உத்திரவு செய்தார். சுக்கிரன் பிரம்மாவின் உத்திரவின்படியே செய்தான். ஜலந்தரன் அப்பொழுதே பலசாலியான வாலிபனானான். உலகத்தின் சகல ராஜாக்களும், வீரர்களும், பூதகணங்களும், தேவர்களும், ஆகிய இவர்களுள் ஒருவரும் அவனையெதிர்க்கக்கூடாதவனாயிருந்தார்கள். அதனால் அவன் வெகு பெருமையும் கர்வமுமடைந்து, தேவேந்திரனைச் சொர்க்கத்திலிருந்து நீக்கிவிட்டான். இதைப்பற்றித் தேவர்கள் மனஸ்தாபப்பட்டு இதைப்பிரம்மாவினிடம் அறிக்கையிட்டார்கள். பிரம்மா அவர்களை விஷ்ணுவினிடம் சொல்லும்படி அனுப்பினார். அப்படியே அவர்கள் விஷ்ணுவுக்குத் தெரியப்படுத்த, விஷ்ணு ஜலந்தரனைக் கொல்லவேணுமென் றெண்ணினார். விஷ்ணுவின் சித்தத்தை அறிந்த நாரதமுனி ஜலந்தரனைக்கொல்ல மஹாதேவனாலும் மற்றெவர்களாலும் முடியாதென் றாலோசித்து, ஜலந்தரனிடம்போய் தந்திரமாய் அவனை நோக்கி, ராஜரீகத்துக்குண்டான சகலபாக்கியமும் உம்மிடத்திலிருந்தும் மகாதேவனுடைய மனைவியாகிய வெகு அழகு சௌந்தரியமுள்ள பார்வதி உம்முடைய கைவசமில்லாம லிருக்கிறது ஒரு குறைவாயிருக்கின்றதென்றான். இதைக்கேட்ட ஜலந்தரன் மகாதேவனிடம் பார்வதியைக்கேட்க, அவள் கிடைக்காதபடியால், ஜலந்தரன் மகாதேவனிடம் யுத்தங்கொடுத்தான். மகாதேவனுக்கும் அவர் புத்திரன் ஜலந்தரனுக்கும் பெருஞ்சண்டை நடந்தது. பிரம்மா விஷ்ணு முதலான சகலதேவர்களும் மகாதேவனுக்கொத்தாசையாயிருந்தும் ஜலந்தரனையெதிர்க்க முடியவில்லை. விஷ்ணுவானவர், ஜலந்தரனுடைய மனைவியாகிய ப்ரந்தாள் வெகு கற்புடையவளாயிருப்பதால் அவள் கற்பழியாதவரையில் ஜலந்தரன் சாகமாட்டானென்றாலோசித்து, விஷ்ணுவானவர், ஜலந்தரனைப்போல் ரூபமாறி, அவன் மனைவியிடம்போய், அவள் கற்பையழித்தார். பின்பு ஜலந்தரன் மகாதேவனுடைய கையால் கொலையுண்டுசெத்தான். ஜ

லந்தரனுடைய மனைவியாகிய ப்ரந்தாள் விஷ்ணுசெய்த இந்தமோசத்தை அறிந்து விஷ்ணுவை நீ கல்லாய்ச்சமைந்து போகக்கடவதென்று சாபங்கொடுத்தாள். அவள் சாபத்தால் விஷ்ணுவானவர் கல்லாய்ச்சமைந்து கண்டிகாநதியிற்போய் விழுந்தார்: (அந்தக்கல்லைச் சாலக்கிராம் என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது அந்த நதியிலிருந்து கற்களை எடுத்துக்கொண்டுவந்து பூஜைசெய்கிறார்கள்) பின்பு ஜலந்தரன் மாண்ட விசனத்தினால் அவன் மனைவியாகிய ப்ரந்தாள் தணல்மூட்டி அதில் எரிந்து சாம்பலானாள். அந்தச் சாம்பலிலிருந்து துளசிச்செடி முளைத்தது, விஷ்ணுவானவர் ப்ரந்தாளுடன் வெகு இன்பத்தை அனுபவித்தபடியினாலும், அவள்பேரில் மோகித்திருந்தபடியினாலும், அவள் நெருப்பிலெரிந்து இறந்துபோனதைப்பற்றி வெகு விசாரப்பட்டு அவளின் சாம்பலின்மீது உட்கார்ந்து அதிக துயரமாயிருந்தார். இதைப்பார்த்த மற்றத் தேவர்கள் துளசியிலையை அவர் சிரசின்மேல் வைத்தார்கள். அது விஷ்ணுவினுடைய ஆசைநாயகியின் சாம்பலிலிருந்து முளைத்ததாகையால், அதனால் விஷ்ணுவின் மனம் திருப்தியடைந்தது. (விஷ்ணுவைப் பூஜைசெய்கிறவர்கள் நாளதுவரையில் சாலக்கிராம் என்னும் கல்லை விஷ்ணுசொரூப மென்றெண்ணி, அதன்மேல் துளசியிலையைச்சாற்றிப் பூஜிக்கிறார்கள்.) இந்தச் சரித்திரம் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டது.

சிநேகிதர்களே! இந்தச் சரித்திரத்தினால் ஸ்ரீமகாதேவமூர்த்தி வெகு நற்குணமுடையவரா யிருந்தாரென்று தெரியவருகின்றது.

ஆ! ஆ! உலகத்தில் தன்னைக் கண்டுகொள்ள வந்தவனுக்குப் பிரியங்காட்டி உபசாரம் செய்வதல்லவோ நற்குணம்? மகாதேவர் தம்மைத்தெரிசிக்க ஆவலாய்வந்த தேவேந்திரனுக்குத் தமதுபிரியத்தைக் காட்டாமற்போனாலும் அவனைக் கடிந்துபேசினது என்னகுணம்? இது மாத்திரமா, அவனைக்கொல்லவும் எண்ணங்கொண்டாரே; இன்னும்தமது கோபாக்கினியைத் தணித்துக்கொள்ள தம்மால்முடியவில்லையே?

பிரம்மாவானவர் ஒருபாலகன், அவருடைய தாடியைப்பிடித்திழுக்க அதைச் சகிக்கமுடியாமல் கண்ணீர்விட்டார். விஷ்ணுவானவர் சூதுமார்க்கமாய் அன்னிய ஸ்திரீயைக் கற்பழித்து, அவள் சாபத்தால் கல்லாய்ச்சமைந்தார். பின்பும் அவள் மோகத்தால் விசாரமடைந்திருந்தார். (இந்துக்கள் நாளதுவரையில் துளசியைச் சாலக்கிராமத்தின்பேரில் சாற்றிப் பூசைசெய்கிறார்கள். இது விஷ்ணுசெய்த ஓர் அக்கிரமத்தை ரூபிக்கிற அடையாளமாயிருக்க, இந்துக்கள் இதை ஒரு வணக்க மென்கிறார்கள்.)

விஷ்ணு சித்தனாகிய நாரதமுனி ஜலந்தரனை வஞ்சித்து மகாதேவனிடத்தில் பார்வதியைக் கேட்கும்படி செய்து மிகப் பேதையான மகாதேவருடைய மானத்தைக் குலைத்தான்.

பிரம்மா, விஷ்ணு, மகாதேவர் இந்தமூவரும் இந்துக்கள் சொல்கிறபடி சர்வலோகத்தின் ஆதீனமும், அதிகாரமும் உடையவர்களாயிருக்க, இந்த மூவரும் ஒன்றுசேர்ந்து ஜலந்தரனைக் கொல்லச் சக்தியிழந்தார்கள்.

இப்பேர்ப்பட்ட துர்க்குணமும் மோசக்கருத்தும் பலவீனமும் உள்ளவர்களைத் தெய்விக அதிகார முள்ளவர்களென்றும் பராபரனென்றும், சர்வலோக ஆதீனமுள்ளவர்க ளென்றும் சொல்லுகிறது அவிவேகமும், குருட்டுத் தனமுமேயொழிய வேறென்னென்று சொல்லலாம்?

இன்னும் சில * புராணங்களில் எழுதியிருக்கிற தென்னவென்றால், ஒருநாள் மகாதேவருடைய மனைவியாகிய பார்வதி நலங்கிட்டு ஸ்நானம் பண்ணும்பொழுது தன் சரீர அழுக்கைத்திரட்டி அதனால் கணேசனென்று தனக்கு ஒரு புத்திரனை உண்டாக்கினாள். அந்தப் புத்திர சிகாமணியை வீட்டின் வாசற்படியில் உட்காரவைத்து வீட்டிற்குள் ஒருவரையும் வரவிடாதேயென்றாள். அப்படியிருக்கப் பார்வதியின் கணவரான மகாதேவர் வெளியிலிருந்துவந்து வீட்டிற்குள் போகநாடினார். அப்பொழுது கணேசன் அவரை உள்ளேபோகக் கூடாதென்று தடுத்தான், அதனால் மகாதேவர் கோபமாகி அவன்சிரசை அறுத்தெறிந்துவிட்டார். இதை அறிந்த பார்வதி வெகு துயரப்பட்டு அழுதாள். அவள் மகாதேவனைநோக்கி கணேசனை உயிராக்குமென்றாள், மகாதேவர் தம்மால் கூடியவரையில் கணேசனுடைய சிரசைத் தேடியும் அகப்படாதபடியால், ஒரு யானையின் தலையை அறுத்து கணேசனுடைய சரீரத்தில்பொருத்தி கணேசனை உயிராக்கினார். பின்பு கணேசனைப்பார்த்து, யாதொருவன் யாதொரு காரியம் செய்கிறதாயிருந்தால், முன்னே உன்நாமத்தை நினைப்பானாக; இன்னும் யாதொருவன் யாதொரு தெய்வத்துக்குப் பூஜை செய்கிறதாயிருந்தால் முதல்முதல் உனக்குப் பூஜை செய்வானாக என்று கணேசனுக்கு வரங்கொடுத்தார்.

---

* இந்தச் சரித்திரத்தின் கடைசியான வாசகம் ஸ்காந்தபுராணத்திலும், முழுவாசகத்தின் கருத்துச் சிவபுராணத்திலும் எழுதப்பட்டிருக்கின்றன. ஸ்வுத்து 2 - ம் வாலம் 84 - 85 - ம் பக்கம்.

சினேகிதர்களே ! இதனாலும் மகாதேவர் நீதியும் விவேகமும் இல்லாதவரெனத் தெரிகின்றதல்லவா? பின்பு இப்பேர்ப்பட்டவர் எப்படிச் சர்வ அதிகாரமுள்ள ஆண்டவனாவார்?

இன்னும் சிவபுராணத்தில் எழுதியிருக்கிற தென்னவென்றால்:—முதல்முதல் விஷ்ணுவின் நாபியிலிருந்து தாமரைதோன்றி, அதிலிருந்து பிரம்மா உண்டானார். பின்பு பிரம்மா விஷ்ணு என்னும் இவர்களுக்குள் விவாதம் நடந்தது. பிரம்மாவானவர் விஷ்ணுவைநோக்கி உன்னை நான் உண்டாக்கினேனென்றார். விஷ்ணுவானவர் பிரம்மாவைப்பார்த்து உன்னை நான் உண்டாக்கினேனென்றார். இப்படி இருவரும் விவாதம் செய்துக்கொண் டிருக்கும்பொழுது, ஆகாயத்தில் ஒரு புகைதோன்றி அந்தப் புகையிலிருந்து பிரம்மாவுக்கு ஒரு சப்தம் வந்தது. அதாவது நீ பிரம்மா; யாருடைய நாபியிலிருந்து தாமரை தோன்றிற்றோ அவன் விஷ்ணு; அவனாலேதான் நீ தோன்றினாய்; இப்பொழுது நீ படைப்புகளைப் படையென்பதாம். பிரம்மா அந்தப் புகையைக் கூர்மையாய் நோக்குகையில் அதில் ஒருலிங்கம் (கோசம்) தோன்றிற்று. அந்த லிங்கத்தின் அளவைக்கண்டு வருவதற்காகப் பிரம்மாவானவர் அன்னப்பட்சியாகி ஆகாயத்தில் பறந்தார். விஷ்ணுவானவர் பன்றிரூபமெடுத்துப் பாதாளத்திற்குப்போனார். இருவரும் பதினாயிரம் வருஷம் வரையில் தேடியும் அந்த லிங்கத்தின் முடிவு அகப்படவில்லை. ஆனதால் பிரம்மாவானவர் இதுதான் எனது கடவுள், இதுதான் என்னை உண்டாக்கினதென் றறிந்துகொண்டு அப்பொழுதிருந்து அந்த லிங்கத்தை வணங்கத் தொடங்கினார். (இது நாளதுவரையிலும் நடந்து வருகின்றது.)

சினேகிதர்களே! இதனாலும் பிரம்மாவும், விஷ்ணுவும் அறிவில்லாதவர்களாயிருந்தார்களென்று தெரியவருகின்றது. ஏனென்றால், இருவரில் ஒவ்வொருவரும் ஒருவர் மற்றொருவரை உண்டாக்கினதாக வீண்சண்டைசெய்யத் தலைப்பட்டார்கள். பின்பு பிரம்மாவானவர் ஒரு பெரிய கோசத்தை அதன் அளவு அகப்படாததின் நிமித்தம் அதுதான் தனது கடவுளென்று அறிந்தார். கடவுளை அறிகிறது இப்படித்தானா? இன்னும் இருவரும் அந்த லிங்கத்தின் முடிவைக் கண்டுவரக் கூடாதவர்களாய் விட்டார்கள். இதுதானா தெய்வசக்தி? கோசத்தின் அளவைத் தெரிந்துகொள்ள எந்தப் புத்திசாலியும் முயற்சி செய்வானா? ஆ! இது வெட்கங்கெட்ட விகடர்களின் தொழிலாயிருக்கின்றது. இப்பேர்ப்பட்டவர்களைத் தெய்வ சுபாவ முள்ளவர்களென்றும் தேவனென்றும் சொல்வது சுத்தக் குருட்டுத்தனம்.

இன்னுமோர் புதுமை, சில புராணங்களில் இவர்களை இகழ்ந்து எழுதியிருக்கின்றது. உதாரணமாக பதுமபுராணத்தில் பிரம்மாவை அகங்காரியென்றும், மகாதேவனைக் காமியென்றும், விஷ்ணு ஒருவர் மாத்திரம் சுத்தமானவரென்றும் எழுதியிருக்கின்றது. அதே புரா ணத்தில் விஷ்ணுவானவர் ஜலந்தரனுடைய மனைவியைக் கற்பழித்தா ரென்றும் சொல்லி யிருக்கின்றது. ஆ! ஆ!! சுத்தமானவர் இப்படி த்தானிருக்க வேண்டியது.

இன்னும் ஸ்காந்த புராணத்தில் எழுதியிருக்கிற ஓர் சுலோகத் தைப் பாருங்கள்.

(சுலோகம்.)

"விஷ்ணு தர்சன மாத்திரேணே சிவத்துரோஹ பிரஜாயதே
சிவத்துரோஹ நசந்தேஹோ நரகம்யாந்தி தாருணம்."

இதன் கருத்துச் சிவத்துரோகம்செய்து விஷ்ணுவைத் தரிசித் தால் சிவன் உக்கிரங்கொண்டு சந்தேகமில்லாமல் நரகத்துக்காளாக்கு வான் என்பதாம்.

இன்னும் இந்துக்கள் சொல்லுகிறபடி எல்லாச் சாஸ்திரங்களிலு ஞ் சிறந்தது வேதாந்த சாஸ்திரமாம். அதில் பிரம்மத்தினிடம் அஞ் ஞானசம்பந்தமுண்டாகி அதனுல் சகல சிருஷ்டிகளு முண்டாய்விட்ட னவென்று எழுதப்பட் டிருக்கின்றது.

இன்னும் சாங்கிய சாஸ்திரப்படி உலகம் ஆண்டவனுல் அல்ல, பி ரகிருதியினுல் உண்டாயிற்றும். இன்னும் மீமாம்ஸ சாஸ்திரத்தில் ஆ ண்டவன் படைக்கிறவ னல்லவென்றும், கர்மத்தினுல் உலகம் உண்டா யிற்றென்றும் எழுதியிருக்கின்றன. இன்னும் சிலர் உலகவுற்பத்தி, காலத்தினு லென்கிருர்கள்; இன்னும் சிலர் சுபாவத்தினு லென்கிருர்க ள். எப்படியும் இந்துக்களின் அநேக சாஸ்திரங்களின் கருத்து என் னவென்றுல் ஆண்டவன் ஒருவஸ்துவையும் படைக்கிறவனல்ல வென் பதே.

ஆ! ஆ! என்ன புதுமை! சர்வலோகத்துக்கும் எஜமானுகிய ஆ ண்டவனை ஒன்றும் செய்யாதவ னென்கிருர்கள். ஆண்டவன் ஒன்று ம் செய்யாதவனுயிருந்தால், சர்வலோகத்தின் சம்ரட்சணை யார் செய் கிறதென்று அவர்கள் யோசிக்கவில்லை. அவர்கள் சொல்கிறதையோ சித்தால் ஆண்டவன் உண்டாயிருக்கிறதும், இல்லாமலிருக்கிறதும் இ ரண்டும் சரியே. அவர்களின் ஆண்டவனுல் ஒருவருக்கு லாபமு மில்லை. பின் இப்பேர்ப்பட்டவன் ஆண்டவனு யிருக்கிறதில் யாருக்

கு என்ன உபயோகம்? ஜனங்கள் பொல்லாத காரியங்களை விட்டுவிடவும் நல்ல காரியங்களைச் செய்யவும் தேவையில்லையென்றாயிற்று. ஏனென்றால், சர்வலோகத்துக்கும் அதிகாரியாயிருக்கிறவன் ஒன்றுமே செய்யாதவனாயிருக்கிறான். அவன் நல்லவர்களை ரட்சிக்கவுமாட்டான்; பொல்லாதவர்களை சிக்ஷிக்கவுமாட்டான். பின்பு இப்பேர்ப்பட்ட ஆண்டவனுக்கு எவன் பயப்படுவான்? இன்னும் அவனிடத்தில் எவன் என்னபலனைக் கோருவான்?

இதைத்தவிர ஆண்டவனை அவன் படைப்புகளின் திருஷ்டாந்திரத்தினாலே யொழிய மற்றப்படி அறியமுடியாது. ஏனென்றால் ஓர் கட்டிடத்தைக் கட்டினவனைக் காணக்கூடவில்லையானால், அந்தக் கட்டிடத்தைப் பார்த்து இதைக் கட்டினவன் ஒருவனுண்டென் றறிந்துக் கொள்ளலாம். அப்படியே ஆண்டவனை இவ்வுலகத்தில் கண்ணாற் காணக்கூடாதபடியால், அவன் படைப்புகளின் திருஷ்டாந்திரத்தினாலேயே அவனறியப்படவேண்டும். அப்படியிருக்க அவன் படைத்தது ஒன்றுமில்லையென்றால் பின்பு அவனை யெப்படி அறிகிறது?

சர்வலோகத்துக்கும் எஜமானாகிய ஆண்டவன் அறிவுள்ளவனாகவும், பார்வையுள்ளவனாகவும், கேள்வியுள்ளவனாகவும், படைக்கும் சக்தியுள்ளவனாகவும், சகல சம்ரக்ஷணை செய்கிறவனாகவும், நித்திய ஜீவனுள்ளவனாகவு மிருக்க, அவன் ஒருகுணமு மில்லாதவனென்றும், ஒன்றும் செய்யாதவனென்றும் அவர்கள் சொல்வது ஆச்சரியமான வார்த்தையா யிருக்கிறது!

இன்னும் குருடும் அறிவில்லாததுமானபிரகிருதியினால் உலகமுண்டாயிற்றென்றும், அல்லது படைப்புகளின் செயலாகியகர்மத்தினால் உண்டாயிற்றென்றும், அல்லது அறிவும் உயிருமில்லாத காலத்தினால் உண்டாயிற்றென்றும், ஆண்டவனாகிய பிரம்மத்தினிடம் அஞ்ஞானம் தோன்றிற்றென்றும், அந்த அஞ்ஞானமே உலக உற்பத்திக்குங் காரணமென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆ! இதென்ன அவிவேகம்! ஆண்டவன் அஞ்ஞானமுள்ளவனா யிருந்தால், பின்பு உலகத்தின் காரியம் எப்படி நடக்கும்? ஆண்டவனுக்கு அறிவில்லையென்று ஒருமூடனும் சொல்லமாட்டானே!

இவ்விடத்தில் நீதிமான்களாகிய சினேகிதர்களை நான் கேட்டுக்கொள்ளுகிற தென்னவென்றால், எங்கள் மார்க்கப்படி ஆண்டவனுக்கு சொல்லப்பட்டிருக்கிற இலட்சணங்களையும், இந்து மார்க்கப்படி சொல்லப்பட்டிருக்கிற அவலட்சணங்களையும், நன்றாய் ஆலோசித்து நீங்களே தீர்மானஞ் செய்யுங்கள். நாங்கள் ஆண்டவன் எந்தவிலை

யிலும் எந்த வஸ்துவையும் நன்ருய் அறிகிருனென்கிருேம். இந்துக்களோ ஆண்டவனுக்கு அஞ்ஞான சம்பந்த முண்டாயிற்றென்று சொல்லுகிருர்கள். நாங்கள் ஆண்டவனைத்தவிர வேருெருவனை சிருஷ்டிக்கிறவனென்றும் லாப நஷ்டங் கொடுக்கிறவனென்றும் எண்ணுகிறது * ஷிருக்கென்கிருேம். இந்துக்கள் ஆண்டவன் ஒன்றுஞ் செய்யாதவனென்கிருர்கள்.

ஆண்டவனே! எல்லா மறிந்திருக்கிற உனக்கு அஞ்ஞான சம்பந்த முண்டாயிற்றென்றும் நீ ஒன்றும் செய்யாதவனென்றும் உன்னைத் தவிர வேருெருவன் உலகத்தை படைக்கிறவனென்றும் எண்ணுகிறதை விட்டும், உன்னைத்தவிர வேருெருவருக்குப் பயப்படுகிறதைவிட்டும், உன்னைத்தவிர வேருெருவரிடத்தில் ஆதரவு வைக்கிறதைவிட்டும் நாங்கள் காவற்பாடு தேடுகிருேம். ஆயிரம் ஆயிரம் மன்னிப்புங் கேட்கிருேம்.

ஆண்டவனே! நீயே சர்வலோக ஆதீனமும் அதிகாரமும் உடையவன்; நீயே சர்வலோகத்தையும் படைக்கிறவன்; நீயே பிழைப்பூட்டுகிறவன்; நீயே மரணமாக்குகிறவன்; நீயே பெருமையைக் கொடுக்கிறவன்; நீயே தாழ்மைபாக்குகிறவன்; நீயே இரக்ஷிக்கிறவன்; நீயே சிக்ஷிக்கிறவன்; நீ நாடினதைச் செய்வாய்; உனக்கு நிகர் ஒருவருமில்லை; எல்லாரும் உன் அடிமைகளாகவும் உன்சமுகத்தில் தாழ்மையானவர்களாகவு மிருக்கிருர்கள்.

இவ்விடத்தில் இந்துக்கள் இதற்கு ஜவாபாக எங்கள் வேதசாஸ்திரங்களின் சில வாக்கியங்களால் ஆண்டவன் எல்லாவற்றையும் அறிகிருனென்றும், காதின்றிக் கேட்கிருனென்றும், கண்ணின்றிப் பார்க்கிருனென்றும், படைப்புகளைப் படைக்கிருனென்றும், தெரியவருகிறது. இன்னும் மகாபாரதம் ஆதிபர்வத்தில் பிர்ம்மா, விஷ்ணு, சிவன், இந்திரன் முதலான சகலரையும கடவுள்படைத்தார் என்றும், அவர் எப்போது மிருக்கிறுர் இனிமேலு மிருப்பார் என்றும், அவர் அழியமாட்டாரென்றும், அவர் எல்லாவிடத்திலும் சூழ்ந்திருக்கிருரென்றும், அவர் கொடை யுடையவரென்றும், அவர் பலவீனர்களுக்குப் பலத்தைக் கொடுக்கிறவரென்றும், இவ்விதமாய் ஆண்டவனைப் புகழ்ந்தெழுதி யிருக்கின்றனவென்று சொல்லுவார்களானல், அதற்கு மறுமொழியாவது: ஆண்டவன் ஒருகுணமு மில்லாதவனென்கிறதும், ஒன்றும் செய்யாதவனென்கிறதும், இதுவும் உங்கள் வேதசாஸ்திரங்களால்தானே ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது. இந்தப் பேதம் உங்கள்

* ஷிர்க்கு—ஆண்டவனுக்கு ஒப்பிடல்.

மார்க்கத்தில்தானே யிருக்கிறது. ஆகையால் எந்த சாஸ்திரத்தில் ஆண்டவன் ஒன்றும் செய்யாதவனென்று எழுதியிருக்கின்றதோ, அந்த சாஸ்திரத்தை நீங்கள் தப்பென்று தள்ளிவைத்திருந்தால், நீங்கள் சொல்லுகிற இந்த வார்த்தையை நம்பலாம். நீங்களோ அந்த சாஸ்திரத்தை உண்மையானதென்று விசுவாசிக்கிறீர்கள். உங்களுடைய அனேக சாஸ்திரங்கள் ஆண்டவன் ஒன்றையும் படைக்கிறவனல்லவென்றே கூறுகின்றன. இரண்டொருவாக்கியம் அந்த சாஸ்திரங்களுக்கு விரோதமாயிருந்தால் அதனால் எதை ஸ்தாபிக்கலாம்?

இன்னும் இந்துக்களின் மார்க்கத்தில் எழுதியிருக்கிறதென்னவென்றால், யாதொருவன் கர்வங்கொண்டு தேவாதிகள் முதலானவர்களுக்கு இடைஞ்சல் செய்வானாகில், அப்பொழுது ஆண்டவன் ஒருசொரூபமெடுக்கிறானும்; அதாவது ஒரு சரீரத்தில் இறங்குகிறானும். அதற்கு அவதாரமென்று சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் ஆண்டவன் இருபத்துநான்கு அவதாரமெடுத்தானென்றும், அதில் பத்து அவதாரங்கள் சிறந்தவையென்றும், அந்தப் பத்தில் கிரேதாயுகத்தில் எடுத்தது நான்கு அவதாரங்களென்றும், திரேதாயுகத்தில் எடுத்தது மூன்று அவதாரங்களென்றும், துவாபரயுகத்தில் எடுத்தது இரண்டு அவதாரங்களென்றும், கலியுகத்தில் எடுத்தது ஒரு அவதாரமென்றும் சொல்லுகிறார்கள்.

கிரேதாயுகத்தில் எடுத்த நான்கு அவதாரங்களாவன:—

1—வது மச்சாவதாரம்:—சிங்காசூரன் பிரம்மாவினுடைய நான்கு வேதங்களையும் திருடி விழுங்கிவிட்டுச் சமுத்திரத்திற்போய் ஒளித்துக்கொண்டானும், பிரம்மா இதைப் பகவானுக்கு அறிவிக்கப் பகவான் மீன் அவதாரமெடுத்துச் சமுத்திரத்தின் ஆழத்தில்போய்ச் சிங்காசூரனைக்கொன்று, அவன் வயற்றிலிருந்த வேதங்களை எடுத்துப் பிரம்மாவசம் கொடுத்தாராம்.

2—வது கூர்மாவதாரம்:—தேவர்கள் பதினான்கு இரத்தினங்களையெடுக்கிறதற்காகச் சமுத்திரத்தைத் தயிர்போற் கடையவேண்டுமென்று மகேந்திரகிரி பர்வதத்தை மத்தாகவும், வாசுகிநாகனை வடமாகவுமாக்கி, தேவர்கள்கூடிச் சமுத்திரத்தைக் கடையும்பொழுது மகேந்திரகிரி பர்வதம் அதிக பளுவானபடியால் பாதாளத்தில் இறங்கத் தலைப்பட்டதாம். தேவர்கள் அதைத்தாங்க முடியாமல் பகவானிடத்திற் சொல்லப் பகவான் ஆமைரூபமெடுத்து அந்தப் பர்வதத்தின் கீழ்த் தமது முதுகைவைத்துத் தாங்கினாராம். அப்பொழுது தேவர்கள் தங்கள் எண்ணப்படி சமுத்திரத்திலிருந்து பதினான்கு இரத்தினங்களையெடுத்தார்களாம்.

3–வது வராக அவதாரம்:—ஒரு ராக்ஷதன் பூமியை அதிலுள்ளவர்களுடன் பாயாகச்சுருட்டிக்கொண்டு பாதாளத்துக்குப் போய்விட்டானும். அப்பொழுது பகவான் பன்றி ரூபமெடுத்துப் பாதளத்திற் போய், அந்த ராக்ஷதனைக்கொன்று பூமியை மீட்டுக்கொண்டு வந்தாராம்.

4–வது * நரசிம்மாவதாரம்:—ஹிரணியகர்ப்பன் தன்னை ஜனங்கள் வணங்கும்படி உத்திரவு செய்தானும். அவன்மகன் பிரகலாதன் அவன் சொல்லுக்கு வழிப்படாமல், ஆண்டவனை வணங்கினபடியால் ஹிரணியகர்ப்பன் இரும்புத்தூணை நெருப்பில் சிவக்கக்காய்ச்சிப் பிரகலாதனை அதில் கட்டி வதைசெய்ய எத்தனித்தானும். அப்பொழுது உடனே பகவான் நரசிங்காவதாரமாய் வந்து ஹிரணியகர்ப்பனைக் கொன்றாராம்.

திரேதாயுகத்தில் எடுத்த மூன்று அவதாரங்களாவன:—

1–வது வாமனவதாரம்: தேவர்களுடைய கோரிக்கையின்படி பகவான் ஐம்பத்திரண்டங்குல உயரமாய் அவதாரமெடுத்து நீதிமானுங் குணசாலியுமாயிருந்த மாபலிச் சக்கிரவர்த்தியை வஞ்சித்து அவனை ராஜரீகத்திலிருந்து நீக்கினராம்; இந்த வஞ்சனையைப் பகவானுடைய மகத்துவ மென்கிறார்கள்.

2–வது பரசுராம அவதாரம்: ஸஹஸ்ரபாகூ என்னும் ஒரு க்ஷத்திரிய ராஜன், பரசுராமனுடைய தந்தையாகிய ஜமதக்னி பிராமணனைக் கொலைசெய்ததின் நிமித்தம், பகவான் அதற்கு பதில்வாங்கும்பொருட்டு ஜமதக்னி பிராமணன் வீட்டில் பரசுராம அவதாரமாய்ப் பிறந்திருந்தாராம், அவர் ஓர் அம்பைக்கையிற் பிடித்து ஒருகொலைக்குப் பதிலாக உலகத்திலுள்ள க்ஷத்திரியர்களை யெல்லாம் கொன்று அவர்களின் பூண்டை அழித்தாராம். அந்தக்கொலையுண்ட க்ஷத்திரியரின் மனைவிகளைப் பிராமணர் சேர்ந்து அதனால் மறுபடியுஞ் சந்ததியுண்டாயிற்றும். இப்பொழுது க்ஷத்திரியரா யிருக்கிறவர்கள் அவர்கள்தானும்,

3–வது ஸ்ரீராமாவதாரம்: இராவணனைக் கொல்லும்பொருட்டுப் பகவான் தசரதமகாராஜன் வீட்டில் ஸ்ரீராமாவதாரமாய்ப் பிறந்திருந்தாராம். இராவணன் இராமருடைய மனைவி சீதையைச் சிறையெடுத்துக்கொண்டு போனபடியால், இராமர் அனுமாருடைய உதவியினால்

* நரன் என்றால் மனிதன், சிம்மம் என்றால் சிங்கம், இதன் கருத்து:—பகவான் தமது முற்பாதி பாகம் சிங்கம்போலும், பிற்பாதி பாகம் மனிதன்போலுமாக அவதரித்து வந்தாரென்பதே.

இராவணனைக் கொன்று தமது மனைவியாகிய சீதையைச் சிறையிலிரு ந்து மீட்டுக்கொண்டு வந்தாராம். வால்மீக ராமாயணத்தில் எழுதியி ருக்கிறதென்னவென்றால், இராவணனுடைய சகோதரியாகிய சூர்ப்ப நகை இராமரை நோக்கி, நீர் என்னை விவாகம்செய்துகொள்ளுமென் று சொல்ல, அதற்கு இராமர் எனக்கு விவாகமாய்விட்டது, என்தம் பி இலக்ஷ்மணருக்கு விவாகமாகவில்லை, நீ அவரிடத்தில் போ என்றா ர். உண்மையில் அப்பொழுது இலக்ஷ்மணருக்கு விவாகமாகியிருந்தது. இராமர், சூர்ப்பநகையுடைய காதையும், மூக்கையும் அறுக்கும்படி இ லக்ஷ்மணருக்கு இரகசியமாய்ச் சொல்லியனுப்ப, இலக்ஷ்மணர் அப்ப டியே செய்தாராம். இதின் நிமித்தமே இராமருக்கும், இராவணனு க்கும் பகைநேரிட்டதென்கிறார்கள். இன்னும் இராமர் குற்றமில்லா தசாதாரண ஜனங்களையும், பிராம்மணர்களையும் கொன்று தமது மனை வியை இராவணனிடத்திலிருந்து மீட்டுக்கொண்டுவந்து பின்பு தமது வீட்டில் சேர்த்துக்கொண்டபடியால், அயோத்தியாவின் ஜனங்கள் அவரை அசுத்தரென்று வெறுத்ததாகவும் எழுதியிருக்கின்றது.

துவாபரயுகத்தில் எடுத்த இரண்டு அவதாரங்களாவன:—

1–வது கிருஷ்ணவதாரம்: மதுராபுரியின் அரசனாகிய கம்சனைக் கொல்லும்பொருட்டுப் பகவான் வசுதேவனுடைய வீட்டில் கம்சனு டைய சிறிய தந்தையின் புத்திரியாகிய தேவகி யென்பவளின் வயிற் றில் பிறந்து கம்சனைக்கொன்று மதுராபுரியின் அதிகாரத்தை உக்கிர சேனனுக்குக்கொடுத்தாராம். இந்த அவதாரி ஸ்திரிகளிடத்தில் அதி க பரிகாசம் பண்ணினாராம்.

2–வது புத்தாவதாரம்: இது நாளதுவரையில் ஜகந்நாதத்தில் ம னிதசொரூபமாய்ச் சந்தனமரத்தினால் செய்துவைக்கப்பட்டிருக்கின்ற து. அது பழையதாய்விட்டால் பின்பு புதிதாய்ச் செய்துவைத்து விடு கிறார்கள். யாதொருவன்வயசில் ஒருதரம் அந்தச் சொரூபத்தைத் தரி சிப்பானாகில், அவன் வயசில் செய்த பாவங்களெல்லாம் புண்ணியமாய் மாறுகின்றன வென்கிறார்கள். இந்த ஜகந்நாதத்தில் ஹிந்துக்கள் ஒருவர் மற்றொருவருடைய எச்சிலுக்குப் பேணுகிறதில்லை,

கலியுகத்தின் அந்தியகாலத்தில் சம்பல பட்டணத்தில் வைஷ்ண தத்தன் என்னும் பிராமணன் வீட்டில் ஒரு அவதார முண்டாகுமாம். அதற்குக் கலிகாவதாரமென்று பேராம். அந்த அவதாரமுண்டானால் கலியுகம் புரண்டு கிரேதாயுகம் ஆரம்பமாகுமாம். ஹிந்துமார்க்கப் படி ஆண்டவனை அறியும் சங்கதி முடிந்தது.

இவ்விடத்தில் கொஞ்சம் கவனிக்கவேண்டும். முதலாவது ஆண் டவன் ஒரு ஜீவராசியின் சரீரத்தில் இறங்குகிறது கூடவேகூடாது.

ஏனென்றால் ஜீவராசியின் சரீரம் முந்தி இந்திரியமும் சதைக்கட்டியு மாகி மாதாவின் வயிற்றிலிருந்து சூதக உதிரத்தை உண்டு, பின்பு அவ் விடத்திலிருந்து மர்மஸ்தான வழியாய்வெளிப்பட்டு பசி, தாகம், நித் திரை, மலம் ஜலம் முதலான சரீர அவஸ்தைக் குட்பட்டுப் பலவீனப்ப டுகின்றது. இவைகளெல்லாம் ஆண்டவனுடைய பரிசுத்தத்துக்கு வி ரோதமானவைகளா யிருக்கின்றன, அப்படியிருக்கப் பன்றி முதலான அருவருப்பான சரீரத்தில் இறங்குகிறதும், மனிதசரீரத்தில் வந்து பா வம், மோசம், காமம். அவிவேகம் முதலான துர்க்கிரியைகளில் காலங் கழிக்கிறதும், இவைகளெல்லாம் பரத்துவ மகுத்துவத்திற்கு எவ்வள வும் தகாததும் தூரமானதுமா யிருக்கின்றன.

சிநேகிதர்களே! ஆண்டவனை அறியும் விஷயத்தில் ஹிந்து மார்க் கத்தில் சொல்லியிருக்கிற சங்கதிகள் புத்திக்கு அழகாயிருக்கின்றன வா? அல்லது இஸ்லாம் மார்க்கத்தில் சொல்லிய சங்கதிகள் அழகா யிருக்கின்றனவா ? பாரபட்சமில்லாமல் ஞாயமாய்ச் சொல்லுங்கள். சொற்ப புத்தியுள்ளவர்களும் இந்தச் சங்கதிகளைக் கேட்டு இந்த இர ண்டு மார்க்கத்திலும் எது உண்மையானதென்பதை உணர்ந்து கொ ள்வார்கள்.

## 2—வது பிரிவு மலக்குகளைக் குறித்துப் பேசுவது.

நமது இஸ்லாம் மார்க்கத்தில் மலக்குகள் * என்னும் ஓர் படைப் புண்டு என்கிறோம். அவர்கள் ஆண்டவனுடைய அடிமைகள். ஒளி யினால் படைக்கப்பட்டவர்கள். அவர்கள் ஆணுமல்ல, பெண்ணுமல் ல. யாதொன்றைத் தின்னவும் குடிக்கவுமாட்டார்கள் ஆண்டவனை வணங்குகிறதே அவர்களின் ஜீவனமா யிருக்கின்றது. அவர்கள் சுத் தமானவர்கள். பாவஞ் செய்யார்கள். ஆண்டவன் அவர்களை எந்தெ ந்த வேலையில் நியமித்தானோ, அந்த வேலையிலேயே நிலைத்திருக்கிறார் கள். ஒருபோதும் ஆண்டவனுக்கு விரோதம் செய்யார்கள், அவர்க ள்இத்தனைபேர் என்பதை ஆண்டவன்தா னறிவான். ஆண்டவன் அவ ர்களுக்கு மிக வலுவையும் பலத்தையும் கொடுத்திருக்கிறான்.

ஹிந்துக்களுடைய மார்க்கத்தில் மலக்குகளுடைய சங்கதி ஒன் றும் தெரியவில்லை. ஆனால் தேவர்களென்று சில படைப்பிருக்கின்ற னவாம். அவர்களில் ஆணும் பெண்ணு முண்டாம். அவர்களைத் தே வாதிகளென்றும், தேவதைகளென்றும், சொல்லுகிறார்கள். உலகத் தின் சகல காரியங்களும் அவர்களின் கைவசமே யிருக்கின்றனவாம்.

* மலக்கு=வானவர், அல்லது தேவதூதர்.

தேவேந்திரன் சொர்க்கத்துக்கு இராஜாவாம். இன்னும் மழையை வ
ருஷிக்கச் செய்கிறவனும். யமதர்மராஜன் நரகத்துக்கு அதிகாரியாம்.
ஜனங்கள் இறந்தபின் அவர்களின் செய்கையைக் குறித்து நியாயம் தீ
ர்க்கிறவனும். நாரதமுனி விஷ்ணுவின் சித்தமாம். சித்திரகுப்த்தன்
ஜனங்களின் கிரியைகளை யெழுதுகிற கணக்கப்பிள்ளையாம். பிரகஸ்ப
தி தேவர்களுக்கெல்லாம் குருவாம். இப்படி அனேகம் தேவர்களி
ருக்கிறார்கள். தேவர்கள் எட்டுவகையென ஸாங்கிய சாஸ்திரத்தில்
எழுதப்பட் டிருக்கின்றது. இன்னும் மூன்று தேவர்களை எல்லாரி
லும் சிறந்தவர்க ளென்கிறார்கள். அவர்களாரென்றால், பிரம்மா, வி
ஷ்ணு, மகாதேவன் இவர்கள் தான். இந்த மூவரையுந்தான் பரத்
துவ மகத்துவ முள்ளவர்களென்றும் ஒரு தெய்வம் மூன்றாய்ப் பி
ரிந்தவர்களென்றும் சொல்லுகிறார்கள். இன்னும் பதுமபுராணத்தி
ல் மூன்று தேவதைகள் எல்லாத் தேவதைகளிலும் சிறந்தவர்க
ளென்றும் அவர்கள் மேற்கண்ட மூன்று தேவர்களுக்கும் உதவிசெ
ய்கிறவர்களென்றும் எழுதப்பட்டிருக்கின்றது. அவர்க ளாரென்றால்
1-வது மஹா காளி:—இவள் மகா தேவனின் உதவிக்காரியாம்.
2-வது மகாலக்ஷ்மி:—இவள் விஷ்ணுவின் உதவிக்காரியாம். 3-வது
சாவத்ரி:- இவள் பிரமாவின் உதவிக்காரியாம். இன்னும் இந்த மூன்
று தேவதைகளால் ஒன்பதுகோடி தேவதைகள் உண்டானார்க ளென்
று சொல்லுகிறார்கள். தேவர்கள் உண்பார்கள், குடிப்பார்க ளென்று
ம் சொல்லுகிறார்கள். தேவர்கள் பாவஞ் செய்யாமலும் ஆண்டவனுக்
கு விரோதம் செய்யாமலும் சுத்தமாயும் இருக்க வேண்டியது அவசிய
மென்று ஹிந்துக்கள் எண்ணுகிறதில்லை. ஏனென்றால் அவர்கள் சொ
ற்படி அவர்களின் தேவர்களால் சகல புத்திமான்களும் அருவருப்பா
கும்படியான பெரிய பெரிய காரியங்கள் வெளியா யிருக்கின்றன.
அவைகளைக் குறித்து நாலாவது பிரிவில் பிரமாவின் வர்ணிப்பில் கொ
ஞ்சம் விவரிக்கப்படும்.

இன்னும் மகாபாரதம் ஆதிபருவத்தில் எழுதப்பட்டிருக்கிற தெ
ன்னவென்றால், வசு என்னும் ராஜன் வேட்டையாடக் காட்டுக்குப்
போக அங்கே தன் மனைவியை நினைத்ததில் காமம் மீறி விந்துஸ்கலி
தமாய் விட்டபடியால் ராஜன் அந்த விந்துவை ஒர் இலையில் வைத்து
ஒர்பறவையினிடம் கொடுத்து அதைத் தன் மனைவியினிடம் கொண்டு
போய்ச் சேர்க்கும்படி யனுப்பினான்; அந்தப் பறவை அதை எடுத்துக்
கொண்டு பறந்து வரும்பொழுது வழியில் வேறொரு பறவை அந்த இ
லையைக் கண்டு அந்தப் பறவையுடன் சண்டை செய்ய, அந்த இலையி

ல் துவாரம் விழுந்து அதிலிருந்த ராஜனுடைய விந்து தண்ணீரில் விழ, அதை ஓர் மீன் விழுங்கிவிட்டது. (உண்மையில் அந்த மீன் சொர்க்க ரம்பையர்களில் ஒன்றும், பிரமாவின் சாபத்தினால் மீனாய்விட்டதாம்.) பின்பு பத்துமாதம் சென்றபின் அந்த மீன் ஓர் செம்படவன் கையிலகப்பட, அவனதன் வயிற்றைக் கீறினதில் அதில் ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண்குழந்தையு மிருக்கக் கண்டு, அந்த இரண்டு குழந்தைகளையும் வசு என்னும் ராஜனிடம் கொண்டுபோனான். ராஜன் ஆண்குழந்தையைத் தான் வைத்துக்கொண்டு பெண்குழந்தையை அந்தச் செம்படவனுக்குக் கொடுத்துவிட்டான். செம்படவன் அந்தக் குழந்தைக்குச் சத்தியவந்தி யென்று பேரிட்டான். அவள் வளர்ந்து வாலிபமான பொழுது அதிக அழகும் வெகு உண்மையு முள்ளவளாயிருந்தாள். அவள சரீரத்தில் மீன் நாற்றமிருந்தபடியால் அவளை மச்சகந்தி யென்று சொல்லுவார்கள், அவள தகப்பனாகிய செம்படவன் அவளுக்குச் சிறிய படகொன்று செய்து கொடுத்தான். அவள் வழிப்போக்கர்களிடம் கூலி வாங்காமல் அவர்களை அந்தப் படகில் ஏற்றிக் கரை சேர்க்கிறவளா யிருந்தாள். இப்படியிருக்க, ஒருநாள் பராசர ரிஷி அவ்வழியாய் வந்து அந்தப் பெண்ணைக் கண்டு, அவள்பேரில் மோகித்து அவளிடம்சேர எண்ணங் கொண்டார். இதை யறிந்த அவள் பராசர ரிஷியைப் பார்த்து, நாம் இந்தக்கெட்ட வேலையைச் செய்யும்படி பிராமணர் முதலானவர்கள் கண்டால் என்ன சொல்லுவார்கள் என்றாள். அப்பொழுது பராசர ரிஷி ஏதோ ஓர் மந்திரத்தை ஓதினார். உடனே மேகந் தோன்றி இருள் வந்து கப்பிக்கொண்டது. அவர் அந்தப் பெண்ணின் கையைப் பிடித்தார். அதற்கு அவள் நான் கன்னிகையா யிருக்கிறேன். கன்னியழிந்தால் பெரும் பங்கமென்றாள். அதற்கு அவர் நீ கன்னி யழியமாட்டாய் முன்போலவே கன்னிகையா யிருப்பாய், இன்னும் என்னிடத்தில் எதையாவது கேள் என்றார். அவள் என் சரீரத்தில் மீன் நாற்றமா யிருக்கிறது. அது நீங்கும்படி ஆசீர்வதிக்க வேண்டு மென்றாள். அவர் ஆசீர்வதித்தார். உடனே அவள் சரீரத்தி லிருந்து ஒரு காத தூரம் பரிமளம் வீசினது. பின்பு அவர் அவளைச் சேர்ந்தார். அதனால் உடனே அவள் கெர்ப்பமாகி அப்பொழுதே ஒரு பிள்ளையைப் பெற்றாள். அந்தப் பிள்ளை அப்பொழுதே வாலிபமாகித் தாயை நோக்கி உனக்கு யாதொரு கஷ்ட முண்டான நேரத்தில் என்னை நினைக்க வேண்டியதென்று சொல்லிவிட்டு, அப்பொழுதே தவஞ்செய்யக் காட்டுக்குப்போய்விட்டார். அந்தப் பிள்ளையின்பேர் வேதவியாசர். அதன் அர்த்தம் வேதத்தை வெவ்வேறாகப் பிரிக்கிறவர் என்பதாம். அவர்தான் வேதத்தை நான்கு

பாகங்களாய்ப் பிரித்தவரென்கிறார்கள். பின்பு அந்தப் பெண்ணின்மேல் பரிமளவாசத்தைக் கண்ட செம்படவன் முதலானவர்கள் அந்தப் பெண்ணைப்பார்த்து உன் சரீரத்தில் இந்தப்பரிமளவாசம் எப்படிவந்ததென்றார்கள். அதற்கு அவள் நான் ஒரு ரிஷீசுவரரைப் படகேற்றிக் கரைசேர்த்தேன். அவர் எனக்கு ஆசிர்வாதங் கூறினார். அதனால் இந்தப் பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டேனென்றாள். பின்பு அவளுக்குப்பரிமளகந்தியென்று பேர் வைக்கப்பட்டது. அப்படியிருக்க ஓர் இராஜன் அவள்மீதுமோகித்து அவள தகப்பனாகிய செம்படவனிடம் அவளைக் கேட்க, அவன் ராஜனைப்பார்த்து உம்மால் அவளுக்குப் பிறக்கும் பிள்ளைக்கு உமது பட்டத்தைக் கட்டுகிறதாயிருந்தால் அவளை உமக்குக் கொடுப்பேனென்றான். இராஜன் அதை ஒப்புக்கொள்ளாமல் மந்திரியைப் பார்த்துக் கங்கையின்வயிற்றிலிருந்து எனக்கு ஒருபிள்ளைபிறந்திருக்க, செம்படவனுடைய வம்சத்துக்கு என் பட்டத்தைக் கொடுக்கிறது சரியல்லவென்றான்; ஆனால் ராஜனுடைய மனதிலிருந்த மோகாக்கினி தணியாமலேயிருந்தது. இதையறிந்த கங்கையின் வயிற்றிற்பிறந்த பீஷ்மர் என்னும் ஷ ராஜகுமாரன் செம்படவனிடம்போய் உன் மகள்வயிற்றிற் பிறக்கும்பிள்ளைக்கே பட்டங்கட்டுகிறேனென்று வாக்களித்து சத்தியவந்தியாகிய மச்சகந்தியைத்தோள்மீது தூக்கிக்கொண்டு வந்து தன் தந்தையாகிய ராஜனிடம் விட்டான், அவள் வயிற்றி லிராஜனுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தன. இராஜன் இறந்தபின் மச்சகந்தியின் மூத்தமகன் பட்டத்துக்கு வந்தான். அவன் காலத்துக்குப் பிறகு இளையவன் சிங்காசனமேறினான். பீஷ்மர் பனாரசின் இரண்டு ராஜகுமாரத்திகளைச் சிறைபிடித்துக்கொண்டு வந்து மேற்படி இளையவனுக்கு விவாகம் செய்வித்தார். அவனால் அவர்களுக்குச் சந்ததி யுண்டாகவில்லை. அவன் இறந்தபின் மச்சகந்தி பீஷ்மரைப் பார்த்து வம்சம் அழியாமல் விர்த்தியாகும்படி நீ உன் சகோதரனுடைய மனைவிகளைச்சேர்ந்து வருவாயாக என்றாள். பீஷ்மர் அதை ஒப்புக்கொள்ள வில்லை. பின்பு பராசர ரிஷியால் தன் வயிற்றில் பிறந்து தவஞ்செய்யக் காட்டுக்குப் போயிருந்த தன் புத்திரர் வேதவியாசரைக் காட்டிலிருந்து வரவழைத்து நீ உன் சகோதரனுடைய மனைவிகளைச்சேர்ந்து சந்தானவிர்த்தியாகும்படி செய்யெ[illegible] வியா[illegible]தை ஒப்புக்கொண்டு மூந்தி ஒருத்தியைச் சேர்ந்தார். அவள் [illegible]டைய பயங்கரமான ரிஷிக்கோலத்தைக் கண்டு பயத்தினால் கண்களை மூடிக்கொண்டாள். வியாசர் அவளைச்சேர்ந்தபின், தன் தாயினிடம் வந்து இவள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளை வெகு பாக்கியமும் பலமும [illegible]த்தியும் ராஜரீகமும் உடையவனாவான். ஆனால் இவள் என்னைக் கண்டு கண்களை மூடிக்கொண்டபடியால் அந்தப் பிள்ளை குருடனாய்ப் பிறப்பானென்றார். அப்படியே அவளால் திருதராஷ்டிரன் குருடனாய்ப்பிறந்

தான். பின்பு மற்றொருத்தியைச் சேரப்போனார். அவள் அவரைக் கண்டமாத்திரத்தில் திடுக்கிட்டு அவள்மேனிநிறம் மாறினது. வியாசர் அவளைச்சேர்ந்தபின் எனது பயத்தினால் இவள்மேனிநிறம் மாறி மஞ்சனித்தபடியால் இவளுக்குப் பிறக்கும் பிள்ளை பாண்டுரோக முள்ளதாயிருக்குமென்றார். அப்படியே அவள் வயிற்றில் பாண்டுராஜன் பிறந்தான். பின்பு மச்சகந்தி அவளையே வியாசரிடம் போகும்படி உத்தரவுசெய்தாள். அவள் வியாசருடைய பயங்கரமான கோலத்தைப்பார்க்கச் சகிக்காமல் தனது வெள்ளாட்டிக்குத் தன் ஆடையை உடுத்தி வியாசரிடம் அனுப்பினாள். அந்த வெள்ளாட்டி வியாசருக்கு அதிக மரியாதைசெய்தாள், வியாசர் அவளைச் சேர்ந்தார். அவளுக்கு விதுரராஜன்பிறந்தான். *

---

* முராத் ஆபாதென்னும் ஊரில் வசிக்கும் இந்திரமனன் என்பவர் சொல்லுகிறதென்னவென்றால், மதாசாரத்தில் எழுதியிருக்கிறபடி எங்கள் மார்க்கத்தில் விதவையான பெண்பிள்ளைக்குச் சந்ததி வேண்டுமென்று ஆசை யிருந்தால் அல்லது யாதொரு பெண்பிள்ளையின் புருஷன் வியாதியினால் போகஞ்செய்ய சக்தியில்லாதவனா யிருந்தால், அவள் தன் கொழுனன் முதலானவர்களைச் சேர்ந்து சந்ததியைப் பெறலாம். அவன் தன் தகப்பன், 'குருபோலொத்தவர்களாகிய தன் பெரியோர்களிடத்தில் உத்திரவுகேட்டுத் தேகத்தில் எண்ணெய் பூசிக்கொண்டு அவளை முத்தங்கொள்ளாமல் இருட்டான வீட்டில் கெர்ப்பந்தரிக்கிற நாள்களின் இரவில் அவளுக்கு கெர்ப்பந் தரிக்கிறவரையில் அவளைச்சேர வேண்டும். அவன் இப்படிச் செய்யாமல் சேர்வானாகில் பாவியாவான். இந்தச் செய்கைக்கு நியோகமென்று சொல்லப்படும். ஆனால் மனுஸ்மிருதியில் இந்தச் செய்கை கலியுகத்தில் நிறுத்தப்பட்டது என்று எழுதப்பட்டிருக்கின்றது.

இந்திரமனன் இதனால் வியாசரைக் காப்பாற்றினபோதிலும் தன் மார்க்கத்துக்கு இழிவை உண்டாக்கினார். சகல புத்திமான்களும் ஒரு ஸ்திரீ பல புருஷர்களின் அனுபோகத்திலிருக்கக் கூடாதென்றே சொல்லுவார்கள். இவ்வகையாய் உண்டான சந்ததியை யாருடைய சந்ததியென்று சொல்லுகிறது? நல்லது இதனாலாவது வியாசர்பேரில் விபசாரக் குற்ற மில்லையென்று ஏற்பட்டதா? இல்லையே. ஏனென்றால் அவர் செய்த இந்தச் செய்கை ஹிந்து மார்க்கப்படியுமில்லை; வியாசர் அந்தப் பெண்பிள்ளைகளுக்குக் கொழுனனா யிருக்கவுமில்லை; அவர்களின் புருஷனாகிய விசித்திர வீரிய ராஜாவின் சகோதரனா யிருக்கவுமில்லை. இவர் பிராமணன். அவன் க்ஷத்திரியன். இவர் பராசரரிஷியின் விந்துவாற் பிறந்த விபசார புத்திரர். அவன் சந்தன மகாராஜன் குமாரன். அந்தப் பெண்பிள்ளைகள் சந்ததியை விரும்பவுமில்லை. மேலும் வியாசரைக் கண்டு அருவருப்பானார்கள். வியாசரும் தகப்பனிடத்திலாவது குருவினிடத்திலாவது உத்திரவு கேட்கவுமில்லை. இடம் இருட்டறையு மல்ல. வியாசரின் கோலத்தைக் கண்டு அந்தப் பெண்பிள்ளைகள் அருவருப்பானார்கள். வியாசரும் ஒருத்தி கண்களை மூடிக்கொண்டதையும் மற்றொருத்திக்கு நிறம் மாறினதையும் நன்றாய்ப் பார்த்திருக்கின்றார். இன்னம் வெள்ளாட்டியையும் அநுபவித்திருக்கின்றார். ஆகையால் எவ்விதத்தாலும் இந்தச் செய்கை நியோகமாகாது. மூன்று பெண்பிள்ளைகளில் ஒருத்தியை யாவது நியோக முறையாய்ச் சேர்ந்தாரென்று ஏற்படாதபடியால் அது விபசாரமென்றே ஸ்தாபிக்கப்பட்டது. ஹிந்து மார்க்கப் படிக்கும் மகமதீய மார்க்கப்படிக்கும் மற்றெல்லா மார்க்கப்படிக்கும் புத்தியின் ஒழுங்குப்படிக்கும் வியாசர் விபசாரம் செய்தவரென்று ஸ்தாபிக்கப்பட்டார். (ஸௌத்துல்ஜப்பார். 92-94-ம் பக்கம்.)

ஒருநாள் பாண்டுராஜன் வேட்டை யாடுவதற்காகக் காட்டுக்குப் போனான், அவ்விடத்தில் ஒரு பெரியவர், தாமும் தபது பத்தினியும் மான் ரூபமெடுத்து இருவரும் காமக்கலவியி லிருந்தார்கள். பாண்டுராஜன் அதையறியாமல் அது மெய்மானென் றெண்ணி அதை அம்பாலெய்தான். அதனாலந்தப் பெரியவர் வருத்தமுற்றுப் பாண்டுராஜனைப்பார்த்து நீ காமக்கலவியி லிருக்கும்போது சாகக்கடவாயென்று சாபங்கொடுத்தார். பாண்டு ராஜன் வீட்டுக்குவந்து தன் மனைவிகளிடத்தில் இந்தச் சங்கதியைச்சொல்லி, இனி நான் உங்களைச்சேரக் கூடாதவனா யிருக்கிறேன்; ஆனால் சந்ததி யில்லாதவன் சொர்க்கம் போகானென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகையால், அடி குந்தி, எவ்விதமாவது எனக்குச் சந்ததியைத் தேடிக்கொள்ளென்று தன் மனைவியாகிய குந்திக்குச்சொன்னான். பின்பு குந்தி யமதர்மராஜனால் தர்மபுத்திரர் என்று ஒரு புத்திரனையும், வாயுபகவானால் பீமசேனன் என்று ஒரு புத்திரனையும், தேவேந்திரனால் அர்ச்சுனன் என்று ஒரு புத்திரனையும் ஆக மூன்று புத்திரர்களையும் பெற்றாள். இதைப்பற்றிப் பாண்டுராஜன் அதிக சந்தோஷப்பட்டு, குந்தியைப்பார்த்து நீ புத்திரர்களைத் தேடிக்கொண்டதுபோல் உன் சக்களத்தியாகிய மாதுரிக்கும் புத்திரர்களைத் தேடிக்கொள்ளென்றான். அப்படியே அவளுக்கும் அசுவினிகுமார தேவரால் இரண்டுபுத்திரர்கள் உண்டானார்கள். ஒருவன்பெயர் நகுலன், மற்றொருவன் பெயர் சகாதேவன். இந்த ஐவரும் பஞ்ச பாண்டவர்களென்று சொல்லப்பட்டு பாண்டுராஜனுடைய குமாரர்களென்று எண்ணப்பட்டார்கள்.

ஆ! ஆ! என்ன ஆச்சரியம்! மனைவிகளைப் பிறருக்கொடுத்து அதனால் புத்திரபாக்கியத்தை யடைகிறதுதான் சொர்க்கம்போகக் காரணமோ! அப்படியானால் அவர்கள் மார்க்கத்தில் விபசாரமே சொர்க்கத்துக்குத் திறவுகோல்போ லிருக்கின்றது. இன்னம் இந்த ஐவருக்கும் துரோபதை யென்னும் ஒரு மனைவியுண்டு. அவளை ஒவ்வொருவரும் எவ்வேழுநாள் முறையாய் அநுபவித்து வந்தார்களாம்.

இன்னும் ஷை மகாபாரதம் ஆதிபருவத்தில் எழுதப்பட்டிருக்கிறதென்னவென்றால் பீஷ்மர் தமது மாற்றான் தாயாகிய மச்சகந்தியை நோக்கிச் சொல்லத்தொடங்கின தாவது:—ஓர் தபோதனருக்கு மமுணையென்னும் ஓர் மனைவியிருந்தாள். ஒருநாள் அந்தத் தபோதனருடைய சகோதரராகிய பிரகஸ்பதி அவளைச்சேர வந்தார். அவள் அவரைநோக்கி, உமது சகோதரரால் என் வயிற்றில் கெர்ப்பந் தரித்திருக்கின்றது. அந்தக் கெர்ப்பத்திலிருக்கிற பிள்ளை வேதம் ஓதுகின்றது. இப்போது தாமும்சேர்ந்தால் உமது இந்திரியமும் அதோடு தரித்

து அந்தப்பிள்ளைக்கு நெருக்கத்தையுண்டாக்குமென்றாள். அவளென்னசொல்லியும் பிரகஸ்பதி தன் ஆசையை அடக்கமுடியாமல் அவளைச் சேரத்துணிந்தார். அப்பொழுது கெர்ப்பத்திலிருந்த அந்தப்பிள்ளை அவருக்குக் கேட்கும்படி என்னிடத்தை நெருக்கமாக்காதேயென்று சொல்லிற்று. பிரகஸ்பதி அதையுங் கேட்காமல் விந்துவையிறக்கினார். அந்தப்பிள்ளை தன் காலால் கெர்ப்பப்பையின் வாயைமூடி அந்த விந்துவைச் சிதறப்பண்ணிற்று. அதனால் பிரகஸ்பதி கோபமாகி நீ என் ஆசையைக் கெடுத்தபடியால் நான் பகவானிடத்தில் நீ அந்தகனாய்ப் பிறக்கும்படி வரங்கேட்கிறேன் என்றார். அப்படியே அந்தப்பிள்ளை கபோதியாய்ப் பிறந்தது. (ஆ! ஆ! அயலான் மனைவியை ஆவலாய்க்கூடும் இப்பேர்ப்பட்ட காமிகள் விபசாரம்செய்கிற வேளையில் பகவானைவேண்டி வரங்கேட்டால் அந்த வேண்டுதல் வீணாகுமா?) பின்பு அந்தப்பிள்ளை வேதமோதிய பெரிய சாஸ்திரியானான். ஒரு அழகிய பெண் அவனுக்கு மனைவியாக வாய்த்தாள். அவளால் அவனுக்கு கௌதமர் என்னும் ஒரு புத்திரனும் இன்னும் சில புத்திரர்களும் பிறந்தார்கள். ஆனால் அவள் தன் கணவனை வெறுத்திருந்தாள், ஒருநாள் அவன் மனைவியைப்பார்த்து, நீ யேன் விசனமாயிருக்கிறா யென்றான். அவள் தன் நிர்ப்பாக்கியத்தை முறையிட்டாள். அதற்கு அவன் நீ என்னை க்ஷத்திரியர்களிடம் அழைத்துக்கொண்டு போய்விடு, நான் அவர்களிடம் உனக்கு ஏதாவது வாங்கித் தருகிறேனென்றான். அதற்கு அவள் கோபமாகி, நான்கேட்டு வாங்கும்பொருளை விரும்பவில்லை. இனிமேல் நான் உமது வீட்டின் காரியங்களைப் பார்க்கமாட்டேன். நீர் என்ன செய்தாலும் செய்துகொள்ளு மென்றாள். அதற்கு அவன் நான் இன்றையிலிருந்து எந்தப் பெண்பிள்ளையும் ஒருபுருஷனைத் தவிர மறுபுருஷனை விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்றும், அப்படி செய்துகொண்டால் பூலோகத்தில் மானபங்கமும் நரகலோகத்தில் மாறாதவேதனையும் அனுபவிப்பார்களென்றும் ஒரு ஏற்பாடு செய்துவிடுகிறே னென்றான். அதைக்கேட்டு அவள் கோபமாகி, தன் மக்களைப்பார்த்து இவரைக் கட்டித் தூக்கிக் கொண்டுபோய் ஆற்றில் போட்டு விடுங்களென்றாள். அப்படியே அவர்கள் தங்கள் தந்தையை ஒரு பலகையில் கட்டித் தூக்கிக்கொண்டுபோய்க் கங்கையில் எறிந்து விட்டார்கள். அவன் அந்த ஆற்றில்மிதந்து ஓரிராஜன் ஸ்நானம் பண்ணிக்கொண்டிருந்த விடத்திற் போய்ச் சேர்ந்தான். இராஜன் அவன் அந்தகனா யிருக்கக்கண்டு, அவனால் தன் மனைவிகள் புத்திரபாக்கியத்தை யடைவார்களென் றெண்ணி, அந்த அந்தகனைத் தன்வீட்டிக்கழைத்துக்கொண்டுபோய், தன் மனைவிகளில் ஒருத்தியை அவனிடம்

போகும்படி உத்திரவு செய்தான். அவள் அந்தகனிடம் போகப் பிரிய மில்லாதவளாய்த் தன் தோழியைத் தனக்குப் பதிலாக அனுப்பினாள். அந்தத்தோழி அந்தக் கபோதியினால் பதினொரு பிள்ளைகளைப் பெற்றாள். அந்தக் குருடன் அவர்களுக்கு வேதமோதிக் கொடுத்துத் தேற்றினான். பின்பு இராஜன் தன்னுடைய மற்றொரு மனைவியை அந்தக் கபோதியினிட மனுப்பினான். அவன் அவள் சரீரத்தின் பேரில் கையைத் தடவி உனக்குப் பலசாலியான ஒரு புத்திரன் பிறப்பானென்று ஆசீர்வதித்தான், அவள் அப்போதே கெர்ப்பமாகி ஒரு புத்திரனைப் பெற்றாள். (ஏன் பெற மாட்டாள நல்லோர்களாகிய பெரியோர்களின் வாக்கு வீணாய்ப் போகிறதுண்டா?) இப்படிப்பிராமணரால் நல்ல க்ஷத்திரியர்கள் உண்டாகிக் கொண்டிருந்தார்களென்று பீஷ்மர் தமது மாற்றாந்தாயாகிய மச்சகந்திக்கு சொன்னார் என்பதாம்.

இன்னும் ஷை ஆதிபருவத்தில் எழுதப்பட்டிருக்கிற தென்னவென்றால், விஸ்வாமித்திரன் அதிகமாய்த் தவஞ்செய்வதைத் தேவேந்திரன் பார்த்து இவன் அதிக தவத்தினால் என் அதிகாரத்தை அதாவது சொர்க்கத்தின் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வானாகையால் இவன் தவத்தை அழிக்க வேண்டுமென்று கருதி, சொர்க்க ரம்பையர்களில் ஒருத்தியை விஸ்வாமித்திரனிட மனுப்பினான். அவள் தன் பகட்டினாலும் நடன சங்கீதத்தினாலும் விஸ்வாமித்திரனைத் தன்னுடன் கூடச்செய்து அவனைத் தவத்திலிருந்து ஒதுக்கிவைத்தாள்.

சிநேகிதர்களே, ஒருவனை வணக்கத்திலிருந்து நீக்கிவைப்பது ஷைத்தானுடைய வேலையல்லவோ.

இன்னும் ஷை ஆதிபருவத்தில் எழுதப்பட்டிருக்கிறதென்னவென்றால் ஒருநாள் தேவேந்திரனும் சந்திரனும் கௌதமரிஷியின் மனைவியாகிய அகலிகைமீது மோகங்கொண்டு இருவரில் ஒருவன் சேவலாய் நடுராத்திரியில் கூவினான். கௌதமரிஷி சேவல் சத்தங்கேட்டுப் பொழுது விடிந்துவிட்டதென்றெண்ணிச் சீக்கிரமாயெழுந்து ஸ்நானம் பண்ணுவதற்காகக் கங்கைக்குப் போனார். கங்கை அவரைப் பார்த்து இன்னம் நேரம் அதிகமா யிருக்கின்றது. இது ஸ்நானம் பண்ணுகிறவேளை யல்லவென்றது. அது கேட்டுக் கௌதமரிஷி திரும்பி விட்டுக்குவர, சந்திரன் வாசற்படியில் காவல் காத்துக்கொண்டிருக்கிறதையும் தேவேந்திரன் தமதுமனைவியைக்கூடிக்கொண்டிருக்கிறதையும் கண்டு, மிகுந்த கோபமாய்த் தமது கையிலிருந்த மான்தோலால் சந்திரனை ஓர் அடி அடித்து இந்த அடியின் காயம் எப்போதும் உன் சரீரத்தி லிருப்பதாக என்று சாபங் கொடுத்தார். அப்போதே

சந்திரனுக்குக் கறை விழுந்துவிட்டது. (இப்பொழுது சந்திரனில் தோன்றுகிற கறுப்பு அந்த அடையாளந்தானும்.) இந்திரன் பயந்து ஓட்டம் பிடித்தான். கௌதமரிஷி இந்திரனுக்கு நீ ஒரு யோனிக்காக இவ்வளவு பிரயாசை பெடுத்துக்கொண்டதின் நிமித்தம் உன் தேகத்தில் ஆயிரம் யோனிகள் உண்டாகக் கடவதென்று சாபங் கொடுத்தார். அப்போதே இந்திரனுடைய தேகத்தில் ஆயிரம் யோனிகள் உண்டாய்விட்டன. இதனால் இந்திரன் வெட்க மடைந்து ஓர் தடாகத்தி லிறங்கி, தாமரையினுள் ஒளிந்துகொண் டிருந்தான். சரித்திரத்தைச் சுருக்குகிறேன். பின்பு வெகுகாலத்திற்குப் பிறகு விஷ்ணுவின் அனுக்கிரகத்தினால் இந்திரனுடைய தேகத்தி லிருந்த அந்த யோனிகள் கண்ணின் சொரூபமாய் மாறிவிட்டன. பின்பு அவ்விடத்திலிருந்து புறப்பட்டுச் சொர்க்கம் போனான் என்பதாம்.

இவ்விடத்தில் கொஞ்சம் யோசிக்கவேண்டியது. சந்திரன் ஹிந்துக்கள் வணங்குகிற தேவர்களில் ஒன்று. இந்திரன் அவர்கள் சொல்லுகிறபடி சொர்க்கத்தின் இராஜா. இந்த இருவருடைய தேகத்தில் அவர்கள் சொல்லுகிறபடி நாளதுவரையில் விபசாரத்தின் அடையாள மிருந்துகொண் டிருக்கின்றது. அதாவது சந்திரனில் கறுப்பும் இந்திரனில் ஆயிரங் கண்களுமே. இன்னும் இருவருங் கூடி ஒரு பெண்ணை விபசாரஞ் செய்யப்போனார்கள். ஆ! இப்பேர்ப்பட்ட வெட்கங்கெட்டவர்களு முண்டா? விபசாரத்தின் கொடுமையால் தேகத்தில் ஆயிரம் யோனியின் அடையாள முள்ள ஒருவன் எந்த சொர்க்கத்துக்கு இராஜாவா யிருக்கிறானோ அந்தச் சொர்க்கத்தில் வசிப்பவர்களின் சுகம் இன்பமில்லாத சுகமே. இன்னும் திவான் என்னும் பிராமணன் சொல்லுகிறாவது: யமதர்ம ராஜனால் பாண்டு ராஜனுடைய மனைவியாகிய குந்தி தர்ம புத்திரனைப் பெற்றாள் என்பதே. இந்த யமதர்ம ராஜன் ஹிந்துக்கள் சொல்லுகிறபடி சர்வலோகத்துக்கும் நியாயாதிபதியாம். இறந்தபின் ஒவ்வொருவருடைய செய்கைகளைக் குறித்துக் கேள்வி கணக்குக்கேட்டு அவரவர்களுக்குத்தக்க தீர்ப்புச்செய்கிறவனும்.

கொஞ்சம் யோசிக்க வேண்டும். சர்வ லோகத்துக்கும் நியாயாதிபதியா யிருக்கிறவன் பிறர் மனைவியை விபசாரம் செய்தா னென்று எல்லாருக்கும் பரிஷ்காரமாய்த்தெரிந்திருக்க, அவர்கள் விபசாரத்தைக் குற்றமாக எண்ணுவார்களா? அந்த நியாயாதிபதி விபசாரம் செய்தவர்களை எப்படித் தண்டிப்பார். கொஞ்சம் யோசியுங்கள. சினேகிதர்களே! ஹிந்துக்கள சொல்லுகிறபடி சொர்க்கத்துக் கதிகாரி இந்திரன். இவனே கௌதம ரிஷியின் மனைவியைக் கற்பழித்தவன். இன்னும் நரகத்துக் கதிகாரி யமதர்மராஜன். இவன் பாண்டு ராஜனுடைய ம

ஊவி குந்தியை விபசாரம் செய்தவன். எந்த மார்க்கத்தில் சொர்க்க லோக நரக லோகத்தினுடைய யோக்கியதை இப்படிக் கெட்டுச்கிடக் கிறதோ, அந்த மார்க்கத்தில் ரட்சிப்பை ஆதரவு வைக்கிறது மதி மோசம்.

## 3—வது பிரிவு வேதங்களைக் குறித்துப் பேசுவது.

முஸ்லிம்களாகிய நாமெல்லாம் கீழ் எழுதும் சங்கதிகளை மெய் யென்று விசுவாசிக்கிறோம். ஜனங்கள் நேர்வழி பெருவதற்காக ஆ ண்டவனால் சில நபிமார்கள்பேரில் வேதங்கள் இறங்கின. அவைக ளெல்லாம் ஆண்டவனுடைய திருவசனங்களே. அவைகளில் நான்கு வேதங்கள் ஊர்ஜ்ஜிதமா யிருக்கின்றன. தவுருத்து வேதம் ஹஜரத் து மூசாநபி அலைகிஸ்ஸலாம் பேரிலும், ஸபூர் வேதம் ஹஜரத்து தாவூ து நபி அலைகிஸ்ஸலாம் பேரிலும், இஞ்சில் வேதம் ஹஜரத்து ஈசாந பி அலைகிஸ்ஸலாம் பேரிலும், குர்ஆன்ஷரீப் என்னும் புர்கான் வே தம் ஹஜரத்து முகம்மது முஸ்தபாஸல்லல்லாகு அலைகிவஸல்லம் அ வர்கள் பேரிலும் இறங்கினது. ஆனால் குர்ஆன்ஷரீப் இறங்கினது முதல் முன்னுள்ள வேதங்களின்படி நடக்கவேண்டுமென்று தேவையி ல்லை. இப்பொழுது எல்லாரும் குர்ஆன்ஷரீபின்படி நடந்துகொள் ள ஆண்டவனுடைய கட்டளையாகிவிட்டது.

ஹிந்து மார்க்கத்தில் அவர்கள் சொல்லுகிறபடி தெய்வ வாக்கா னவேதங்கள் நான்குண்டு. இன்னும் மகாபாரதத்தில் வேதத்தை நான் குபாகங்களாக வகுத்தவர் வியாசர் என்று எழுதப்பட் டிருக்கின்றது. இன்னும் சிலர் நான்கு வேதங்களும் பிரம்மாவினுடைய நான்கு வாய் களால் வெளிப்பட்டன வென்கிறார்கள். பிரம்மாவுக்கு நான்கு முகங் க ளுண்டான காரணம் அடுத்து வரும் பிரிவில் சொல்லப்படும். இப் பொழுது குர்ஆன்ஷரீபிலிருக்கிற அளவற்ற பிரயோசனங்களிற் சில வற்றைச் சுருக்கமா யெழுதுகிறேன்.

1-வது:- ஆண்டவனுடைய வேதத்தை ஜனங்களுக்காக எவர் கொண்டு வந்தாரோ, அவர் நற்குணங்களால் புகழப்பட்டவராயும் து ற்செய்கைகளைச் செய்யாதவராயுமிருக்க வேண்டும். எங்களுக்குக் குர் ஆன் ஷரீபைக்கொண்டு வந்த ஹஜரத்து முகம்மது ஸல்லல்லாகு அ லைகிவஸல்லமவர்கள் இப்படியே யிருந்தார்கள். அவர்களுடைய நற்கு ணங்களையும் அற்புதங்களையும் அடுத்த பிரிவில் பார்த்தால் தெரியும். அப்படிக்கில்லாமல் அந்த வேதங்கொண்டு வந்தவர் துற்செய்கையும் துற்குணமும் துராசையு முள்ளவராரிருக்கக்கூடாது. உதாரணமாக,

ஹிந்துக்கள் பிரம்மாவைத் தெய்வ வாக்காகிய வேதஞ் சொன்னவரெ ன்கிறார்கள். அவர் துற்செய்கையும் துற்குணமு முள்ளவரா யிருந் தாரென்பது அவர்கள் மார்க்கத்தினாலேயே ஸ்தாபிக்கப்பட் டிருக்கி ன்றது. அதுவும் அடுத்த பிரிவைப் பார்த்தால் தெரியவரும்.

2-வது:-வேதத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட சரித்திரங்களிலும், மார் க்கத்தின் மூலாதாரமான பிரதானசங்கதிகளிலும் பேதமில்லாமலிருக் க வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் ஆண்டவனுடைய வேதத் தைப் பொய்யாக்கும்படி நேரிடும். குர்ஆன் ஷரீபினுடைய யாதொ ருசரித்திரத்திலும், மார்க்கத்தின் மூலாதாரங்களிலும், ஒன்றுக்கொன் று பேதமில்லாம லிருக்கின்றது. அப்படிக் கில்லாமல் அதன் சரித்தி ரங்களிலும் மூலாதாரங்களிலும் பேதம் வரக்கூடாது. உதாரணமா க, ஹிந்துக்கள் சொல்லுகிறபடி ஆறு சாஸ்திரங்களும் வேதத்திலிரு ந்து எடுக்கப்பட்டன. அவைகளின் சரித்திரங்களிலும் மார்க்கத்தின் மூலாதாரமான சங்கதிகளிலும் பெரிய பேத மிருக்கின்றது. அதன் விபரம் இந்த அத்தியாத்தின் 5-வது 7-வது பிரிவுகளைப் பார்த்தால் தெரியவரும். இதற்குமுன் 1-வதுபிரிவிலும் கொஞ்சம் சொல்லப்ப ட்டிருக்கின்றது.

3-வது:-ஆண்டவனுடைய வேதம் பொதுவாய் உலகமெங்கும் பரவவேண்டியது ஞாயம். அப்படியே குர்ஆன் ஷரீப் உலகத்தில் அதிகமாய்ப் பரவியிருக்கின்றது. முஸ்லிம்கள் வசிக்கும் சிற்றூர்களி லும் குர்ஆன்ஷரீப் இல்லாத ஊரில்லை. ஹிந்துக்களுடைய வேத மோ அதிகப் பிரயாசையெடுத்துத் தேடிப்பார்த்தால் ஒரு பெரிய ஜி ல்லாவில் எங்கேயாவது ஒன்றிரண்டு அகப்படுவதும் அரிது. பெரும் பான்மையுமில்லாமலே யிருக்கும். ஒருவேளை பனாரசில் இருந்தால் இருக்கலாம். வேறெங்கும் இருக்கிறதாகப் புலப்படவில்லை.

4-வது:-ஆண்டவன் தன் வேதக்கட்டளையை எதுவரையில் உலக த்தில்நடத்திவைக்க நாடினானோ, அதுவரையில் அவன்காவலால், அத ன் வாசகத்திலாவது அர்த்தத்திலாவது மாறுபாடுகள் வராமல்காக்கப் படவேண்டும். அப்படியே குர்ஆன் ஷரீபானது ஹஜரத்து முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமுடைய காலத்திலிருந்து நாளது வரையி ல் காக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் குர்ஆன் ஷரீப் முழுமையும் மனப்பாடஞ் செய்திருக்கிற ஹாபிஸுகள் அனந்தமாயிரம் பேர் உல கத்திலிருக்கிறார்கள். குர்ஆன் ஷரீப் காக்கப்படுவதற்கு இது ஒரு ஏதுவாயிருக்கின்றது. இன்னமோர் சங்கதி; குர்ஆன் ஷரீப் உண் மையான வேத மென்பதற்கும், முகம்மது ஸல்லல்லாகு அலைகிவ

ஸல்லம் மெய்யான நபி யென்பதற்கும் பரிஷ்காரமான ஒரு திருஷ்டாந்த மிருக்கின்றது. அதாவது ஆண்டவன் குர்ஆன் ஷரீபில் لحافظون "நாம் இந்த குர்ஆனைக் காக்கிறவரா யிருக்கின்றோம்" என்று திருவுளமா யிருக்கிறான். அப்படியே உதயகிரியிலிருந்து அஸ்தகிரிவரையில் எத்தனை குர்ஆன்ஷரீபுகள் பரவியிருக்கின்றனவோ அவைகளடங்கலிலும், ஹஜரத்து முகம்மது ஸல்லெல்லாகு அலைகிவஸல்ல மிடத்திலிருந்து அவர்களைப் பின்பற்றினவர்களுக்கும், உடன்வாசிகளுமாகிய அஸ்ஹாபுகளுக்கும் கிடைத்த குர்ஆனில் என்னவாசகமிருக்கின்றதோ அதே வாசக மிருக்கின்றது. ஒன்றிலாவது ஸேர் ஸபர் என்னும் கீழ்விலங்கு மேல்விலங்கிலும் (வாசகக்குறியிலும்) கூடவித்தியாசமில்லை. தவறி எவ்விதத்திலாவது யாதொரு பிழையுண்டாய் விட்டால் உடனே குர்ஆன்ஷரீபை மனப்பாடஞ் செய்திருக்கிற ஹாபிஜுகளும் ஆலிம்களும் அந்தப்பிழையை நீக்கிவிடுகிறார்கள். இவ்விதமாய் ஆண்டவன்சொன்ன முன்னறிவிக்கை நிறைவேறிக் குர்ஆன் ஷரீப் காக்கப்பட்டு வருகின்றது. இனி கியாம நாள்வரையில் இப்படியே காக்கப்பட்டுவரும். அப்படிக்கில்லாமல், ஹிந்துக்களுடைய வேதத்தைப்போல் அது யாருடைய வாக்கியம், யார் மூலமாய்க் கிடைத்தது என்று தெரியாதபடி சந்தேகமுள்ளதா யிருக்கக்கூடாது. அந்த வேதத்தை மனப்பாடஞ்செய்தவர் உலகத்தில் ஒருவருமேயில்லை.

ஹிந்துக்கள் இவ்விடத்தில் வேதம் ஆண்டவனுடைய பூர்வீகவாக்கியமென்றும் பிரம்மாவினால் எங்களுக்குக் கிடைத்தது என்றும் சொல்வார்களானால் அதற்கு மறுமொழியாவது:—நீங்கள் சரித்திரம் எழுதுவதில் அதிகத் திறமையில்லாதவர்கள். சரித்திரங்களின் உண்மையை வகுத்தறியும் ஏற்பாடு உங்களில் இல்லவேயில்லை. எங்கள் சரித்திரங்களின் உண்மையை வகுத்தறிவதற்கு இதற்கே சொந்தமாக ஒருசாஸ்திரம் ஏற்பட் டிருக்கின்றது. அதன் விபரம் நாலாவது பிரிவில் வரும். இப்படி உங்கள் சரித்திரங்களின் உண்மையை நிதானிக்கக் கூடாததி நிமித்தம் பிரம்மா என்று ஒருவர் இருந்தாரோ, இல்லையோ என்றும், உங்கள் பெரியோர்களின் கட்டுக் கதையோ என்னமோ வென்றும் சந்தேகிக்க இடமாகின்றது. இன்னும் அந்த வேதத்தைக் குறித்து உங்கள் சாஸ்திரங்களில் நீங்கள் சொல்லுகிற இந்தச் சொல்லுக்கு விரோதமாய்ச் சொல்லப்பட் டிருக்கின்றது. எப்படியென்றால்,பிரம்மாவானவர் வேதங்களை நெருப்பு, காற்று, சூரியன் இவைகளினால் தெரிந்துகொண்டாரென்று மனு சாஸ்திரத்தில் எழுதப்பட் டிருக்கின்றது. இந்தச் சொல்லின்படி வேதம் ஆண்டவனுடைய பூர்வீக வாக்கியமென்றாகுமா ! கொஞ்சம் கவனியுங்கள்.

5-வது:—குர்ஆன்ஷரீபானது சொல்லடுக்கின் அழகும் இலக்கண இலக்கியங்களுக் கிசைதலுமாயிருப்பதுடன் பொய்யைவிட் டொழிந்திருக்கின்றது. விதம் விதமான வாசகங்கள் அதிலுண்டாயிருக்கின்றன. மார்க்க சம்பந்தமான சகல கல்விகளும் குர்ஆன்ஷரீபி லிருந்துதான் வெளிப்பட்டன. இன்னம் உலகத்தில் எத்தனை கல்விக ளிருக்கின்றனவோ, அவைக ளெல்லாவற்றின் மூலாதாரங்கள் குர்ஆன்ஷரீபில் காணப்படுகின்றன. ஆனால் அவைகளை அறிய நிதானமான புத்தியும் நேரான விளக்கமும் வேண்டும்,

6-வது:—அந்த வேதத்தில் ஆண்டவனுடைய புகழும் அவனை ஒன்றுபடுத்தும் விபரமும் சொல்லியிருக்க வேண்டியது அவசியம். அப்படியே குர்ஆன்ஷரீபில் ஆண்டவனை ஒன்றுபடுத்துகிறதி லுண்டாயிருக்கிற நன்மைகளும் இணை வைக்கிறதி லுண்டாயிருக்கிற கெடுதிகளும் வெகுதெளிவாய் சொல்லப்பட் டிருக்கின்றன. அப்படிக்கில்லாமல் அந்த வேதத்தில் ஆண்டவன் வெறுமையானவனென்று சொல்லியிருக்கவும், அன்னியர்களுடைய புகழே அதில் அதிகமாயிருக்கவுங்கூடாது. உதாரணமாக ஹிந்துக்களுடைய வேதத்தில் ஆண்டவனை ஒன்றுபடுத்தும் சங்கதி மிகவும் குறைவாகவே யிருக்கின்றது. மேலும் வேதத்திலிருந்து எடுக்கப்பட்ட சில சாஸ்திரங்களால் ஆண்டவன் ஒன்றையும் படைக்காதவனென்றும் வெறுமையா யிருக்கிறவனென்றும் ஸ்தாபிக்கப் படுகின்றன. (இந்த அத்தியாயத்தின் 7-வது பிரிவைப் பாருங்கள்.) இன்னும் அதில் ஆண்டவன்புகழ் கொஞ்சமாகவும் மற்றவர்களின் புகழே அதிகமாகவுமிருக்கின்றது. இன்னும் அவர்களிடத்தில் காயத்திரி மந்திரமானது எல்லா வேதங்களின்சாரமும் எல்லா மந்திரங்களிற் சிறந்ததுமா யிருக்கின்றது. ஆகையினால் தான் அதை மூலமந்திரமென்று சொல்லுகிறார்கள். அதில்கூட ஆண்டவனுடைய புகழைக்காணோம். சூரியனுடைய புகழே அதில் இருக்கின்றது. அந்தமந்திரத்தின் வாசகம் சீர்கெட்டதாகவும், ஆண்டவனை ஒன்றுபடுத்துவதற்கு விரோதமாகவு மிருக்கின்றது. அந்த காயத்திரி மந்திரத்தின் லக்ஷணமும் அதன் அர்த்தமும் 2-வது அத்தியாயத்தின் 2-வது பிரிவில்விவரித்துச் சொல்லப்படும்.

## 4-வது-பிரிவு: நபிமார்களைக் குறித்துப் பேசுவது.

நபிமார்கள் ஆண்டவனை வணங்க வழிகாட்டுகிறவர்கள். அவர்கள் மூலமாய் ஒவ்வொருவனும் தன் ரட்சிப்பை யடைகிறான். அவர்களைப் பின்பற்றாமல் ஒருவருக்கும் ரட்சிப்புண்டாகாது. அறியவேண்டிய தென்னவென்றால், ஆண்டவன் பூமியின்மீ திருக்கிற சகலவஸ்துக்க

ளையும் மனிதனுடைய பிரயோசனத்துக்காகவே படைத்திருக்கிறான். மனிதனை தன் ரட்சிப்பைத் தேடிக்கொள்ளும்படி உண்டாக்கினான். அவன் ரக்ஷிப்பாவதென்னவென்றால், அழியாத சுகத்திலிருக்கிறதும், மாறாத துக்கத்திலிருந்து நீங்குகிறதுந்தான். இது எப்போதுகிடைக்குமென்றால், தன்னைப் படைத்தநாயனை அறிந்து அவனுக்குப்பிரியமான வேலைகளையும் பிரியமில்லாத வேலைகளையும் உணர்ந்து, அவனுடைய உத்திரவுக்கே கீழ்ப்படிந்து அவனுக்குப்பிரியமான வேலைகளையே செய்து, பிரிய மில்லாத வேலைகளைத் தவிர்த்து வந்தால்தான் கிடைக்கும். ஆகையால் ஒவ்வொருவர் பேரிலும் விழுந்தகடமை யென்னவென்றால், எந்த மனிதர்மூலமாக ஆண்டவனுக்குப் பிரியமான வேலைகளையும் பிரியமில்லா வேலைகளையும் தெரிந்துகொள்ளக் கூடுமோ, அப்பேர்ப்பட்ட ஒருவரைத்தேடி, அவரைத் தனக்குப் பீராகவும் குருவாகவும் வழிகாட்டியாகவும் நியமித்துக்கொள்ள வேண்டும். அப்படிப் பட்டவர் அகப்படாவிட்டால், இதற்கு முன் சென்றுபோனவர்களில் அப்படிப்பட்டவர் யாரவது இருந்தால் அவருடைய வாக்கியங்களை, நம்பிக்கையுள்ள கிதாபுகளினாலும் நம்பிக்கையுள்ள மனிதர்களின் வாய் மொழியினாலும் தீர அறிந்து, அதின்படி நடந்து வரவேண்டும். அப்படிப் பட்டவரைத் தேடுவதிலும் அறிவதிலும் அதிக யோசனைசெய்ய வேண்டும். ஏனென்றால்,

اي بسا ابليس آدم‌روي هست پس بهر دستي نشايد داد دست

"அனேக பசாசுகள் மனிதரூபத்திலிருப்பதால் ஒவ்வொருவரிடத்திலும் கையைக் கொடுக்கலாகாது, அதாவது எல்லோருக்கும் சிஷ்யனாயிராதே" யென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் எங்கள் மார்க்கப்படி அப்பேர்ப்பட்டவர்களை அறிவது எப்படியென்றால் ஆண்டவன், தன் அடிமைகளின் பிரயோசனத்துக்காகத் தனக்குப் பிரியமான வேலைகளையும் பிரியமில்லாத வேலைகளையும் காண்பிக்கிறதற்கு அந்த மனிதர்களில் நின்றுமே தனக்கு அதிகப் பிரீதியும் தன்னிடத்தில் அதிக பதவியும் பெற்றிருக்கிற பெரியோர்களின் வாய்மொழியாய்த் தன் வேதத்தை அடியார்களுக்கு அனுப்புகிறான். இதின் நிமித்தமே அவர்களுக்குப் பைகாம்பர் என்றும், நபியென்றும், ரசூல் என்றும் பேராயிற்று. இந்தச் சொற்களுக்குத் தீர்க்கதரிசியென்றும், திருத்தூதரென்றும் அர்த்தமாகும். அவர்கள் எவ்வளவு நல்லவர்களும் நற்குணமுடையவர்களுமா யிருந்தார்களென்றால், அவர்கள் ஜீவித்திருக்கிற வரையில் ஒருபோதாவது அவர்களால் யாதொரு குற்றங்குறைக ளுண்டாகவில்

லை. துராசையைவிட்டு அதிக சுத்தமாயிருந்தார்கள். ஒருபோதும் பொய் சொன்னதில்லை. ஒருவரை வஞ்சிக்கவுமில்லை. ஒருவருக்கு அக்கிரமம் பண்ணவுமில்லை. நபிமார்கள் குற்றஞ் செய்கிறவர்களாயிருந்தால் மற்றவர்களைக் குற்றஞ்செய்ய வேண்டாமென்று எப்படித் தடுப்பார்கள். ஜனங்கள் அவர்களுடைய வார்த்தையை எப்படி நம்புவார்கள்? குற்றமும் மோசமும் செய்கிறவர்களுடைய வார்த்தை ஒருபோதும் நம்பப்படுகிற தில்லை. பின்பு ஆண்டவனுடைய ரசூலாகிய அவர்கள் ஜனங்களுக்குப் போதிக்கிற தென்னவென்றால், ஆண்டவன் உங்களுக்கு ரக்ஷிப்பின் வழியைக் காட்டும்படி எங்களை அனுப்பியிருக்கிறான். ஆகையால் நீங்கள் எங்களைப் பின்பற்றி நடவுங்கள். இல்லாவிட்டால் எப்பொழுதும் நரகவேதனையை அனுபவிப்பீர்கள் என்பதாம். பின்பு ஜனங்கள் அவர்கள் நபி என்பதை ரூபிக்கும்படி யாதொரு அடையாளங் கேட்டால் அப்போது ஆண்டவன் அவர்களை உண்மையாக்குவதற்காக அவர்களால் சில அற்புதங்களை வெளிப்படுத்துகிறான். உதாரணமாக:—கட்டை, கல் இவைகளைப் பேசச்செய்கிறது; இரண்டு மூன்றுபடி தானியத்தால் அனேகமாயிரம் பேர்களுடைய பசியைத்தீர்த்து வைக்கிறது, சில அந்தரங்கமான சங்கதிகளைச் சொல்லுகிறது; விரற்களிலிருந்து தண்ணீர் பெருகியோடச் செய்கிறது; இன்னும் இப்படிப்பட்ட அனேக காரியங்களைச் செய்கிறதுமாம். இப்படிப்பட்ட அற்புதங்கள் நபிமார்களால் வெளியானால் அதை முஅஜிஸாவென்று சொல்லப்படும். நபிமார்கள் உலகத்தில் அனேகம்பேர் உண்டானார்கள். அவர்கள் இத்தனைபேர் என்பதை ஆண்டவன் நன்றா யறிந்திருக்கிறான். அவர்களெல்லாரிலும் முதல் முதல் உண்டானவர் ஹஜரத்து ஆதம் அலைகிஸ்ஸலாம். மானிடரெல்லாம் அவருடைய சந்ததிதான்.' எல்லாரிலும் கடைசியானவர் ஹஜரத்து முகம்மதுஸல்லல்லாகு அலைகிவஸல்லமாயிருக்கும், ஆனால் அவர்களின் றூகு (ஆன்மா) படைப்புகளுக்கெல்லாம் முதல் முதல் உண்டாயிற்று. அவர்கள் மக்கமாநகரத்தில் பிறந்தார்கள். அவர்களுக்கு நாற்பது வயதானபொழுது ஆண்டவன் ஜிப்ரயீலென்னும் தேவதூதரை அவர்களிடமனுப்பித் தீர்க்கதரிசன முரைத்தான். அந்நாள்முதல் அவர்களுக்கு நபிபட்டமாயிற்று. பின்பு குர்ஆன் ஷரீப் என்னும் வேதமிறங்கத் தலைப்பட்டது. அவர்கள் மக்கத்தில் பதின்மூன்று வருஷ மிருந்தார்கள். அவ்விடத்தில் அவர்களுச்கு மிகுராஜாயிற்று. அதாவது ஜிப்ரயீல் என்னும்தேவதூதர் புராக்கு என்னும் ஓர் வாகனத்தைக் கொண்டுவந்தார். ஹஜரத்து நபியவர்கள் அதின்மேலேறி மஸ்ஜிது அக்ஸாவென்னும் பைத்துல் முகத்தஸுக்குப் போனார்கள். பின்பு அவ்விடத்திலிருந்து

ஏழுவானங்களேயுங் கடந்து அர்ஷு குர்ஸி முதலிய எல்லாவற்றையும் கண்டார்கள். சுவர்க்கம் நரகம் இவைகளேயும் சுற்றிப்பார்த்தார்கள். அந்த இரவில் ஆண்டவனருளால் அனேக பாக்கியங்களேப் பெற்றுக் கொண்டார்கள். பின்பு ஹஜரத்து நபியவர்களுக்கு ஐம்பத்துமூன்று வயதானபொழுது ஆண்டவனுடைய உத்திரவினுல் மதினு பட்டணம் போனுர்கள். அவ்விடத்தில் பத்துவருஷமிருந்து அவ்விடத்திலேயே உபாத்தானுர்கள். அவர்கள் அடக்கமான கப்ருஷரீபு அவ்விடத்தில்தா னிருக்கின்றது. ஹஜ்ரத்து நபியவர்களின் நான்கு தலேமுறைகளாவன:—ஹஜரத்து நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்லமாகிறவர்கள் அப்துல்லா உடைய குமாரர். அப்துல்லாவாகிறவர் அப்துல் முத்தலிபுடைய குமாரர். அப்துல் முத்தலிபாகிறவர் ஹாஷிமுடைய குமாரர். ஹாஷிமாகிறவர் அப்துல்முனுபுடைய குமாரர் என்பதே. அவர்கள் உலகத்தில் அறுபத்துமூன்று வருஷம் ஜீவித்திருந்தார்கள். ஆண்டவன் நபிபட்டத்தை அவர்களோடு முடிவாக்கினுன். இனி கியாமத்து நாள்வரையில் அவர்கள் மார்க்கந்தான் ஆண்டவனுடைய சமுகத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டதாயிருக்கும். முன்னுள்ள மார்க்கங்களெல்லாம் மாற்றப்பட்டுப் போயின. இப்போது வானத்திலிருக்கிற ஈசாநபி அலேகிஸ்ஸலாம் ஒருதரம் பூமியில் வருவார்கள். முகம்மது சல்லல்லாகு அலேகிவஸல்லமுடைய மார்க்கத்தையே பின்பற்றியிருப்பார்கள். ஹஜரத்து முகம்மது சல்லல்லாகு அலேகிவசல்லமவர்களால் வெளிப்பட்ட அற்புதங்கள் அனந்தமுண்டு. அவைகளில் சில அற்புதங்களே இவ்விடத்தில் எழுதுகிறேன்.

## சந்திரன் பிளக்கப்பட்டது.

இஸ்திப்ஸார் என்னும் கிதாபில் எழுதப்பட்டிருக்கிறதென்னவென்றுல், மக்கத்துக் காபிர்களின் தலேவர்களான ஹிஷாமின் குமாரன் அபூஜஹல், வாயிலின்குமாரன் ஆசு, முத்தலிபின்குமாரன் அஸ்வது முதலானவர்கள் ஓரிரவு கூட்டங்கூடி ஹஜரத்து நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்லமிடத்தில் வந்து நீர் உண்மையான நபியாயிருந்தால் சந்திரனே இருபிளப்பாகும்படி செய்து எங்களுக்குக்காண்பியுமென்றுர்கள். அப்பொழுது ஹஜரத்து நபியவர்கள் ஆண்டவனே வேண்டித் துவாகேட்டார்கள். உடனே சந்திரன் இரண்டுதுண்டாய்ப் பிளந்து பின்பு சேர்ந்துவிட்டதென்று இப்னுஅப்பாசு ரலியல்லாகு அன்குவால் முஹத்திஸ் அபூநயூம் றக்மதுல்லாகி அலேகி தங்கள் கிதாபுமதாரின் நுபுவ்வாவில் நகல்செய் திருக்கிறுர்கள்.

நபியவர்களின் முன்னுல் சந்திரன் இரண்டுதுண்டானதைக்கண்ட மக்கத்தின் காபிர்கள் இவர் சூனியஞ் செய்திருந்தால் நமது பேரி

ல் மாத்திரந்தான் செய்திருப்பார். உலக முழுவதின்பேரில் செய்ய மாட்டார்; ஆகையால் வெளியி லிருந்து வருகிற வழிப்போக்கர்களைக் கேட்கவேண்டு மென்றார்கள். அப்படியே வழிப்போக்கர் வந்த பொழுது இந்த அற்புதத்தைக் கண்டதாகச் சாட்சி கொடுத்தார்களென்று அப்துல்லாகிப்னு மஸ்கூது ரலியல்லாகு அன்குவினால் இமாம் அகமது ஹம்பல் ரக்மத்துல்லாகி அலைகி தங்கள் கிதாபில் ரிவாயத்து செய்திருக்கிறார்கள்.

இன்னும் இந்த அற்புதத்தைக் குறித்து இமாம்புகாரி, இமாம் முஸ்லிம் முதாலான அனேக முஹத்திஸீன்கள் மிகுந்த அஸ்ஹாபிகளால் ரிவாயத்து செய்திருக்கிறார்கள். தவிர இந்த அற்புதத்தைக் குறித்து ஆண்டவனும் குர் ஆனில் அறிவித்திருக்கிறான். அஃதெப்படியென்றால்.

اِقتربت الساعۃ وانشق القمر * وان یروا آیۃ یعرضوا ویقولو سحر مستمر *

"கியாமத்து நாள் நெருங்கிவிட்டது. (வானம் எப்படிப் பிளக்குமென்று உங்களுக்குச் சந்தேகமிருந்தால் பாருங்கள்.) சந்திரன் பிளந்து விட்டது. (காபிர்கள் தங்கள்வழக்கபடி) யாதொரு அற்புதத்தைக் கண்டால் நிராகரிக்கிறார்கள். இன்னும் பூர்வீக சூனியமென்கிறார்கள்" என்பதாம்.

## காபிர்களின் கண்களில் மண் விழுந்தது.

ஹுனைன் யுத்தத்தில் காபிர்களாகிய விரோதிகள் பெருங்கூட்டமாய்த் திரண்டு முஸ்லிம்களின்பேரில் அடர்ந்தேறினார்கள். அவர்கள் அநேக மாயிரம்பேர் இருந்தார்கள். அப்பொழுது ஹஜரத்து நபியவர்கள், ஒரு பிடிமண்ணெடுத்து அவர்கள் பாளையத்தின் பக்கமா யெறிந்தார்கள். எதிரிகளில் ஒருவனாவது கண்களில் மண்விழாதபடி தப்பித்துக் கொள்ளவில்லை அதனால் எதிருகள் தோல்வியடைந்தோடினார்களென்று இப்னு அப்பாசு, சல்மா, இவர்களால் இமாம் முஸ்லிம் ரிவாயத்து செய்திருக்கிறார்.

## கொஞ்ச வஜீபனத்தினால் ஒரு படைமுழுதும். திருப்தியடைந்தது.

ஒருதரம் அறபிக் காபிர்களில் அநேகர் சேர்ந்து ஹஜரத்து நபியவர்களுடன் யுத்தம்செய்வதற்காக மதினாபட்டணத்தின்பேரில் படையேறி வந்தார்கள். அப்பொழுது ஹஜரத்து நபியவர்கள் சல்மான்பாரசி றலிறயல்லாகு அன்குவின் ஆலோசனைப்படி எதிரிகளுடைய படைக

ளுக்கும் தங்கள் படைகளுக்கும் நடுவே ஒரு அகழ்வெட்டும்படி ஆக்
கியாபித்தார்கள். அதுபோல நபியகர்களின் அஸ்ஹாபுகள் அகழ்
தோண்டத் தொடங்கினர்கள். ஹஜரத்நபியவர்கள் இவ்வளவு மேன்
மையும் பெருமையு முடைவர்களாயிருந்தும் அகழ்தோண்டுவதில் தா
ங்களும் அஸ்ஹாபுகளுடன் கூட்டானர்கள். அகழ் தோண்டும்பொழு
து அதில் மிகவும் உறுதியான ஒரு கற்பாறை தென்பட்டது. அதை
உடைக்க ஒருவாரலும் முடியாதபடியால் நபியவர்ளிடம் அறிக்கை
செய்தார்கள். ஹஜரத்து நபியவர்கள் தங்கள் முபாறக்கான திருக்கர
த்தினல்கட்டப்பாறையெடுத்து அதன்பேரிலடித்தார்கள். உடனே அ
ந்தப் பாறை நொறுங்குண்டு மணலாய் விட்டது. இன்னும் அப்பொ
ழுது யுத்தவீரர்களுக்கு மூன்றுநாளாக ஆகாரஞ்சித்தப்படுத்திச் சாப்
பிடச் சாவகாசமில்லாம லிருந்தபடியால் நபியவர்கள் அதிக பசியுள்ள
வர்களா யிருந்தார்கள். ஜாபிர் ரலியல்லாகு அன்கு சொல்லுகிற தென்
னவென்றல், "நான் ஹஜரத்து நபியவர்களுடைய பசியின் தன்மை
யை அறிந்து என் வீட்டுக்கு வந்து ஒரு ஆட்டுக்குட்டியை தக்பீர்செய்
தேன். அப்பொழுது என் வீட்டிலிருந்த நாலுபடி கோதுமையை மா
வாக அரைக்கும்படி என் மனைவியிடம் சொல்லி விட்டு, நான் ஹஜரத்து
நபியவர்களிடம் வந்து இரகசியமாய் என் வீட்டில் விருந்துக் குண்
டான இவ்வளவு சாமான்க ளிருக்கின்றன; தாங்களும் தங்களின் சில
அஸ்ஹாபுளுமாக என்வீட்டுக்கு வரவேண்டுமெனக் கோருகின்றேனெ
ன்று சமுகத்தில் அறிக்கை செய்தேன். அப்பொழுது ஹஜரத்து ந
பியவர்கள் பலத்த சப்தமாய், ஓ அகழ் தோண்டுகிறவாகளே ? ஜாபிர்
உங்களுக்கு விருந்து செய்திருக்கிறர், சீக்கிரம் வாருங்களென்று சொ
ல்லிப் பின்பு என்னைப் பார்த்து, நான் உம்முடைய வீட்டில் வரு
வதற்குமுன், சட்டியை அடுப்பிலிருந்து இறக்கவேண்டாம், ரொட்டி
யும் சுடவேண்டா மென்றார்கள். பின்பு ஹஜரத்தவர்கள் என் வீ
டுக்குவந்தார்கள். பிசைந்திருந்த மாவிலும் சட்டியி லிருந்த இறைச்
சியிலும் தங்கள் முபாறக்கான உமிழ்நீரைச் சேர்த்து விர்த்தியாகும்ப
டிதுவாசெய்த பின்பு. ரொட்டி சுடும்படி உத்திரவு செய்தார்கள். ஹஜர
த்து நபியவர்கள் தங்கள் திருக்கரத்தினல் ஒட்டிலிருந்த ரொட்டியை
யெடுத்து இறைச்சியுடனும்ஆணத்துடனும் சேர்த்து அஸ்ஹாபுகள்
ஆயிரம்பேர் பசிதீர்ந்து திருப்தி யடைகிறவரையில் தின்னக்கொடுத்து
க்கொண் டிருந்தார்கள். பின்பு ஹஜரத்தவர்களுடைய உத்திரவுப்படி
நாங்களும் தின்று அடுத்த வீட்டுக்காரர்களுக்கும் பங்கிட்டோம்."
என்பதே. இவ்விதமாய் மிஷ்க்காத்துஷரீபு, றவுலத்துல் அஹ்பா
ப், மஆரிஜுன் நுபுவ்வா முதலானகிதாபுகளில் எழுதப்பட்டிருக்கின்
றது.

## ஹஜரத்து நபியவர்களின் விரல்களிலிருந்து தண்ணீர் சுரந்தது.

இன்னும் ஜாபிர் றலியல்லாகு அன்கு சொல்கிற தென்னவென்றால், "ஹுதைபாவின் யுத்தத்தில் ஜனங்கள் அதிக தாகமானார்கள். ஹஜரத்து நபியவர்களிடம் ஓர் பாத்திரத்தில் தண்ணீர் இருந்தது. அந்தத் தண்ணீரினால்ஹஜரத்தவர்கள் ஒலுச்செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது அஸ்ஹாபுகள் ஹஜரத்தவர்களின் சமுகத்தில், எங்களிடம் ஒலுச்செய்யவும் குடிக்கவும் தண்ணீரில்லை. இதோ தங்களிடத்திலிருக்கிற தண்ணீர்மாத்திரந்தா னிருக்கிற தென்றார்கள். அப்போது ஹஜரத்தவர்கள், தங்கள் முபாறக்கான திருக்கரத்தை அந்தத் தண்ணீர்ப் பாத்திரத்தில் விட்டார்கள். பின்பு ஹஜரத்தவர்களின் விரல்களிலிருந்து தண்ணீர் ஆறுய்ப்பெருகி யோடிற்று. நாங்கள் அந்தத் தண்ணீரைக் குடித்து அதனால் ஒலுவும்செய்து கொண்டோம்" என்பதே. பின்பு இதைக்குறித்து ஒருவர் ஜாபிர் ரலியல்லாகு அன்குவிடம் அந்தத் தினத்தில் நீங்கள் எத்தனைபே ரிருந்தீர்களென்று கேட்க. அதற்கு ஜாபிர் ரலியல்லாகு அன்கு லக்ஷம்பே ரிருந்த போதிலும் திருப்தி யடைந் திருப்பார்கள்; ஆனால் நாங்கள் ஆயிரத்திஐந்நூறுபேர் மாத்திரமிருந்தோ மென்றார். இவ்விதமாய் மிஷ்காத்து ஷரீபில் எழுதப்பட் டிருக்கின்றது.

## உடும்பு பேசினது.

ஒரு நாட்டறபி காட்டிலிருந்த ஒரு உடும்பைப் பிடித்துக்கொண்டு வருகிறபோது, வழியில் ஜனக் கூட்டமா யிருக்கிறதைக் கண்டு, இவர்கள் யார்? ஏன் கூடியிருக்கிறார்க ளென்று கேட்டான். அதற்கு ஜனங்கள். அப்துல்லா உடைய குமாரர் முகம்மது சல்லல்லாகு அலைகி வஸல்லம் தாம் நபியென்று பிரசங்கம் செய்துகொண்டிருக்கிறார், அதற்காக ஜனங்கள் கூடியிருக்கிறார்களென்று சொன்னார்கள். அந்த நாட்டறபி அந்தக் கூட்டத்தில் நுழைந்து, ஹஜரத்து நபியவர்களைப்பார்த்து, லாத்து, உஸ்ஸா, என்னும் சாமிகளின்பேரில் ஆணையாக உம்மைப் பார்க்கிலும் அதிகப் பொய்யரும் உம்மைப் பார்க்கிலும் எனக்கு அதிக விரோதியும் ஒருவருமில்லை யென்றான். அப்பொழுது அவ்விடத்திலிருந்த ஹஜரத்து உமர் ரலியல்லாகு அன்கு அவனைக் கண்டிக்க நாடினார். அதற்கு நபியவர்கள், ஓய் உமரே, நபித்தனம் சாந்த குணத்தை விரும்புகின்ற தென்றார்கள். பின்பு ஹஜரத்தவர்கள், அந்த நாட்டறபியைப் பார்த்து, ஓ நாட்டறபி! ஆண்டவன்பேரில் ஆணையாக நான் வானத்திலும் பூமியிலும் விசுவாச முள்ளவனாகவும் ஜனங்களி

டத்திலும் மலக்குகளிடத்திலும் புகழப்பட்டவனாகவு மிருக்கிறேன். நீ ஆண்டவனுக்குப் பயப்படு; விக்கிரக ஆராதனையை விட்டுவிடு; ஆண்டவன் ஒருவனென்பதையும் என் நபித்தனத்தையும் ஒப்புக்கொள்ளென்றார்கள். அதற்கு அந்த நாட்டறபி லாத்து, உஸ்ஸாவென்னும் சாமிகளின்பேரில் ஆணையாக, இந்த உடும்பு உமதுபேரில் ஈமான் கொள்ளாதவரையில், நான் உம்மை விசுவாசிக்க மாட்டேனென்று சொல்லி உடும்பை ஹஜரத்தவர்களின் சமுகத்தில் விட்டான். அது ஓடத்தலைப்பட்டது. ஹஜரத்தவர்கள், ஓ உடும்பே, இங்கே வாவென்று கூப்பிட்டார்கள். அது திரும்பிவந்தது. மறுபடியும் ஹஜரத்தவர்கள், ஓ உடும்பே, என்றார்கள். அதற்கு அந்த உடும்பு அழகான சப்தமாய் இதோ வந்தேன், அடிபணிந்தேன் என்றது. ஹஜரத்தவர்கள். நீயாரை வணங்குகிறாயென்று கேட்டதற்கு, வானத்தில் அர்ஷ் என்னும் சிம்மாசனத்தையும், பூமியில் அதிகாரத்தையும், சொர்க்கத்தில் சுகத்தையும், நரகத்தில் துன்பத்தையும் உண்டுபண்ணின அல்லாகுதஆலாவை வணங்குகிறேனென்று சொல்லிற்று. பின்பு ஹஜரத்தவர்கள், நாம் யாரெனச்சொல்லென்று கேட்க, தாங்கள் அல்லாகுதஆலாவுடைய திருத்தூதர்; நபிமார்களுக்கெல்லாம் முத்திரையானவர்களாயிருக்கிறீர்கள். எவன் தங்களை விசுவாசிக்கிறானோ அவன் ரட்சிப்படைவான். விசுவாசிக்காதவன் நரகவேதனையை அனுபவிப்பானென்று சொல்லிற்று. நாட்டறபி, உடம்பு பேசின இந்த வார்த்தையைக்கேட்டுச் சற்றுநேரம் திகைத்துநின்று, பின்பு நபியவர்களைப் பார்த்து வேறொரு திருஷ்டாந்தமும் அற்புதமும் நான் கேட்கவில்லை. இதனாலேயே தாங்கள் உண்மையான நபியென்று எனக்கு விசுவாசமுண்டாய் விட்டது என ஹஷாதத்து கலிமா சொல்லி இஸ்லாமானபின், ஹஜரத்தவர்களைப் பார்த்து, யாரசூலல்லா அல்லாவின்பேரில் ஆணையாக நான் முந்தி வரும்பொழுது எனக்குத் தங்களைப்பார்க்கிலும் வேறொருவரும் அதிக விரோதியாய்த் தெரியவில்லை. இப்பொழுது நான் தங்களை என் செவி கண், தாய், தகப்பன், பிள்ளைகள் இவர்களைப்பார்க்கிலும் அதிகமாய் நேசிக்கிறேனென்றான். அதற்கு ஹஜரத்தவர்கள், அல்ஹம்து லில்லா என்று ஆண்டவனைப் புகழ்ந்தார்கள். இவ்விதமாய் றவுலத்துல் அஹபாப், மஆரிஜுன் நுபுவ்வா முதலான கிதாபுகளில் எழுதப்பட்டிருக்கின்றது.

## பள்ளிவாசலின் தூண் அழுதது.

ஹஜரத்து முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் பள்ளிவாசலின் ஒரு பேரீத்த மரத்தூணிற் சாய்ந்து கொத்பாஎன்னும் உ

பதேச மோதுவார்கள். பின்பு ஹஜரத்தவர்களுக்காக மிம்பர் என்னும் உபதேசமேடை கட்டப்பட்டபொழுது, ஹஜரத்தவர்கள் அந்தமேடையில் ஏறினார்கள். அப்பொழுது அந்தபேரீத்தமரத்தூண் இப்பொழுதே பிளந்து போகிறதுபோல் பலத்த சப்தமாய் அழுதது. அஜரத்தவர்கள் மேடையை விட்டிறங்கி வந்து, தங்கள் திருமேனி அந்தத்தூணிற் படும்படி சாய்ந்து நின்றார்கள். அப்பொழுது அந்தத்தூண் சிறுகுழந்தை அழுகிறபோது யாராவது அதை அழாதபடி ஓயப்பண்ணினால், அந்தக் குழந்தை எப்படி அழுது ஓயுமோ, அப்படியே அந்தத்தூணும் அழுது ஓய்ந்தது. அப்போது அஜரத்தவர்கள், இந்தத்தூண் ஆண்டவனுடைய புகழைக் கேட்டுவந்த தாகையால் அந்த விசனத்தினால் அழுதது என்று திருவுளமானார்கள். இவ்விதம் ஜாபிர்ரலியல்லாகு அன்குவினால் இமாம்புகாரி நகல்செய் திருக்கிறதாக மிஷ்காத்து ஷரீபில் எழுதப்பட்டிருக்கின்றது.

## நரகத்தின் பயத்தால் மலையழுததும் ஒட்டகம் பேசினதும்.

ஹஜரத்து அலிறலியல்லாகு அன்குவின் சகோதரர் அக்கீல்றலியல்லாகு அன்குசொல்லிகிற தென்னவென்றால், நான் ஒரு பிரயாணத்தில் ஹஜரத்து நபியவர்களுட னிருந்தேன். அப்போது அவர்களால் சில அற்புதங்களைக் கண்டேன். அவைக ளென்னவென்றால்:-

1-வது:- நான் அதிக தாகமுள்ளவனா யிருந்தபடியால் ஹஜரத்தவர்களிடம் எனக்குத்தாகமா யிருக்கிற தென்றேன். ஹஜரத்தவர்கள் அதோ அந்த மலையினிடம் போய் அல்லாவுடைய நபி எனக்குத்தண்ணீர் கொடுக்கும்படி சொல்லுகிறார்களென்று அந்த மலைக்குச் சொல்லென்றார்கள். நான் அப்படியே போய்ச் சொன்னதற்கு, அந்த மலை என்னிடம் பேசத் தொடங்கி, " மனிதர்களும் கற்களும் எரிகொள்ளியாகிற நகரத்துக்குப்பயப்படு என்று அல்லாகுதஆலா திருவுளமான இந்த சங்கதி எனக்கு தெரிந்தநாள் முதல், நான் அழுத அழுகையினால் என்னிடம் தண்ணீரில்லாமல் வறண்டுவிட்டதென்று நபியவர்களிடம் போய்ச் சொல் என்றது.

2-வது:- நாங்கள் ஓர் இடத்தில் இறங்கியிருக்கும்போது, இருந்தாப்போலிருந்து ஒரு ஒட்டகம் ஓடிவந்து ஹஜரத்து அவர்கள் சமுகத்தில் முழங்கால் மடியிட்டு, அடைக்கலம் அடைக்கல மென்றது. அதைப்பின்தொடர்ந்து ஒரு நாட்டறபி கையில் வாளை யுருவிப் பிடித்துக்கொண்டு வந்தான். ஹஜரத்து நபியவர்கள் அவனைப்பார்த்து, நீ இந்தப் பேதையான ஒட்டகத்தை என்ன செய்யலாமென்று எண்ணுகிறாயென்றார்கள். அதற்கு அவன், அல்லாவுடைய ரசூலே! நான் இந்த

ஒட்டகத்தை என்வேலைக்கு உதவுமென்றும், அதனால் எனக்குப் பிரயோசன முண்டாகுமென்றும் கிரயத்துக்கு வாங்கினேன். இப்பொழுது இதுஎனக்குவழிப்படாமல் முரட்டுத்தனம் பண்ணுகின்றது; ஆகையால் இதை அறுத்து இதன் இறைச்சியை உபயோகப்படுத்தலாமென்றெண்ணுகிறேனென்றான். ஹஜரத்து நபியவர்கள் அந்த ஒட்டகத்தைப்பார்த்து; நீயேன் வழிப்படாமலிருக்கிறா யென்றார்கள். அதற்கு ஒட்டகம் யாரசூலல்லா! நான் அவனுடைய வேலையை செய்யக்கூடாதென்று முரட்டுத்தனம் பண்ணவில்லை. ” ஆனால் யாதொருவன் இஷாத்தொழுகை தொழவில்லையோ அவனுக்கு ஆண்டவனுடைய வேதனை வருமென்று, தாங்கள் திருவுளமா யிருக்கிறதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த நாட்டறபியும் இவனுடைய குடும்பஜனங்களும் இஷாத்தொழுகை தொழுகிறதே யில்லை. ஆகையால் இவர்கள்பேரில் இறங்குகிற வேதனை என்பேரிலும் இறங்குமென்று பயந்து இவனுக்கு வழிப்படாமல் ஓடிக்கொண்டிருக்கிறே னென்றது. அஜரத்தவர்கள் நாட்டறபியைப்பார்த்து, இது சொல்கிறது மெய்தானா வென்றார்கள். அதற்கவன் மெய்தான், ஆகிலும் இனிமேல் இஷாத்தொழுகையில் சோம்பல் செய்கிறதில்லை என்றும், என் குடும்பஜனங்களையும் இதைப்பற்றிக் கண்டிப்பே னென்றும், நான் சத்தியம் பண்ணினேனென்று சொன்னான். பின்பு ஒட்டகம் அவனுக்கு வழிப்பட்டது. இவ்விதமாய் றவுலத்துல் அஹபாப், மஆரிஜுன்னுபுவ்வா முதலான கிதாபுகளில் எழுதப்பட்டிருக்கின்றது,

## பொடிக்கற்கள் தஸ்பீஹ் செய்தது.

இன்னும் மஆரிஜுன நுபுவ்வா முதாலான கிதாபுகளில் எழுதப்பட்டிருகிற தென்னவென்றால்: ஒருதடவை ஹஜ்ரத்து நபியவர்கள் தரையிலிருந்து சில பொடிக்கற்களைக் கையிலெடுத்தார்கள். அப்பொழுது அந்தக் கற்கள் தேன் குளவி சப்த மிடுகிறது போல் ஆண்டவனைத் தஸ்பீஹ் (தோத்திரம்) செய்தன. பின்பு நபி யவர்கள், அந்தக் கற்களைத்தரையில் வைக்கச் சும்மா இருந்தன. பின்பு அவைகளையெடுத்து ஹஜரத்து அபூபக்பர் ஸித்தீக்கு ரலியல்லாகு அன்கு உடைய கையில் வைக்க, அப்பொழுதும் அப்படியே தஸ்பீஹ் செய்தன. பின்பு ஹஜரத்து உமர் ரலியல்லாகு அன்குவுடைய கையிலும், ஹஜரத்து உஸ்மான் றலியல்லாஹு அவர்கள் கையிலும் வைத்தார்கள். அவர்கள் கைகளிலும் அப்படியே தஸ்பீஹ் செய்தன. இன்னுமொரு ரிவாயத்தில்ஹஜரத்து அலிரலியலலாகு அன்ஹுவும் அவ்விடத்தில் ஹாஜராயிருந்தார்களென்றும், அவர்கள் கையில் “சுப்கானல்லாகிவல் ஹம்துலில்லாகி” என்று தஸ்பீஹ் செய்தன வென்றும்; பி

ன்பு அபூஸர்ரலியல்லாகு அன்கு நபியவர்களுடைய உத்திரவுப்படி அ வைகளைக் கையிலெடுக்க, அவைகள் தஸ்பீஹ் செய்யாமற் சும்மா வி ருந்தபடியால்! அபூஸர் ரலியல்லாகு அன்கு நபியவர்களைப் பார்த்து, யாரசூலல்லா, இந்தக்கற்கள் அவர்களுடைய கைகளிலெல்லாம் தஸ்பீ ஹ்செய்து என்கையில் சும்மாவிருக்கிறதேன்? என்றதற்கு, நபியவர்க ள் அவரைப்பார்தது! அபாஸரே. நீர் குல்பாவுர் ராஷிதுான்களுக்குச் சமானமாகலா மென்று எண்ணுகிறீரோ வென்று திருவுளமானதாக எழுதப்பட்டிருக்கிறது.

## மரம் பேசினது.

இன்னும் மஆரிஜுன் நுபுவ்வா முதலான கிதாபுகளில் ஹுலை பின்குமாரர் பரீதா ரலியல்லாகு அன்கு சொல்லுகிறதாக எழுதப்பட் டிருக்கிற தென்னவென்றால்: ஒருநாட்டறபி ஹஜரத்து நபியவர்களிட ம் வந்து, யாரசூலல்லா! நான் இஸ்லாமாகித் தங்களின் சமுகத்தில் வந்தேன். ஆனால் என்னுடைய விசுவாசம் அதிகரிக்கும்படி தாங்க ள் எனக்கு ஒரு அற்புதங் காட்டுங்க ளென்றான். ஹஜரத்தவர்கள், நீ என்ன அற்புதங் கேட்கிறு யென்றார்கள். அதற்கு அவன், அதோ அந்த மரத்தைக் கூப்பிடுங்க ளென்றான். ஹஜரத்தவர்கள், நீ போ ய், நான் அழைக்கிறதாக அந்த மரத்துக்குச் சொல்லி அழைந்துவா வென்றார்கள். நாட்டறபி அந்த மரத்தினிடம் போய், அல்லாவுடை ய ரசூல் உன்னைக் கூப்பிடுகிறார்க ளென்றான். மரம் வேரோடே பெ யர்ந்து ஹஜரத்தவர்களின் சமுகம்வந்து சேர்ந்து. "அஸ்ஸலாமு அ லைக்க யாரசூலல்லா" என்று சொல்லிற்று. இதைக்கண்ட நாட்டற பி, எனக்கு இந்த அற்புதமே போதுமென்றான். பின்பு அந்தமரம் நபியவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தது.

## இலந்தைமரம் பிளந்து வழிவிட்டது,

இன்னும் ஷெ கிதாபில் எழுதப்பட்டிருக்கிற தென்னவென்றால்:- தாயிபுடைய யுத்தத்தில் ஹஜரத்து நபியவர்கள் ஒட்டைகையின் மீதே றிப் போய்கொண்டிருக்கும் பொழுது, வழியில் அதிக முட்களுள்ள ஓர் இலந்தை மரம் எதிர்ப்பட்டது. அந்தவேளையில் ஹஜரத்து நபியவ ர்களின் கண்களில் நித்திரை மயக்கமா யிருந்தது. ஒட்டகம் அந்த ம ரத்துக்குச் சமீபத்தில் வந்தபொழுது, மரம் நடுவில் பிளந்து, பாதி ஒருபக்கமும் பாதி மறுபக்கமுமாய் விட்டது. ஹஜரத்தவர்களின் ஒட் டகம் சவுக்கியத்துடன் அதைவிட்டுக் கடந்தது. அந்தமரம் நாளது வரையில் அப்படியே இரண்டாய்ப் பிரிந்து நிற்கிற தென்றும், அதற்கு

مُبْرَكَة "நபியவர்களின் இலந்தை" யென்று பேர் சொல்லப்படு கிறதென்றும் சொல்லுகிறார்கள்.

## கொஞ்சம் பாலினால் அதிகம்பேர் திருப்தியானது.

இன்னும் ஹஜரத்து அபூஹுறைரா ரலியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது: ஒரு நாள் நான் அதிக பசியாயிருந்தேன். ஹஜரத்தவர்கள் நான் பசியா யிருக்கிறதை அறிந்து, என்னைத் தங்கள் வீட்டுக் கழைத்துக்கொண்டு போய், ஒருசிறு பாத்திரத்திலிருந்த பாலினால் சபாயென்னும் சத்திரத்திலுள்ளவர்களை யெல்லாம் திருப்தியடையச் செய்து, எனக்கும் திருப்தியடையும்படிச் சாப்பிடக் கொடுத்தார்கள்; பின்பு தாங்களும் பருகினார்கள்,

## பைத்தியம் நீங்கினது.

இன்னும் இப்னு அப்பாசு ரலியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:- ஒரு பெண்பிள்ளை தன் மகனை ஹஜரத்து நபியவர்களின் சமுகம் கொண்டுவந்து, யாரசூலல்லா! இவன் என் மகன், இவனுக்குக் காலையிலும் மாலையிலும் பைத்தியம் வந்துவிடுகிறதென்றாள். ஹஜரத்தவர்கள், தங்கள் திருக்கரத்தை அவன் நெஞ்சின் பேரில் வைத்து, துவாசெய்தார்கள். உடனே அந்தப் பையனுக்கு வாந்தி வந்து, அவனுக் குள்ளிருந்து கறுத்த நாய்க்'குட்டியைப்போல் ஒன்று வெளிப்பட்டு ஓடிவிட்டது. பையன் சவுக்கிய மடைந்தான் என்பதேயாம்.

இன்னுமிவைகளைத்தவிர மற்ற அற்புதங்களையும் அறியப் பிரிய முள்ளவர்கள், நபியின் சரித்திர புஸ்தகங்களையும் ஹதீது கிதாபுகளையும் பார்வையிடவேண்டியது,

ஹஜரத்தவர்கள் உண்மையான நபியென்பதை ரூபிக்கிறதற்கு எல்லாவற்றிலும் ஆண்டவனுடைய வாக்கியமாகிய குர்ஆன் ஷரீப் பெரிய அற்புதமாயிருக்கின்றது. ஏனென்றால், அறபு ராஜ்ஜியத்தில் மிகவும் தேர்ந்த நாகரீகமுள்ள பெரிய பெரிய புலவர்களாகிய வித்துவான்களிருந்தார்கள். அவர்கள் தங்கள் நாவில் வல்லவராயிருப்பதைப்பற்றி. மற்ற ராஜ்ஜியங்களைத் தங்களுக்கு முன்னால் அஜம் அதாவது ஊமை என்கிறார்கள். இன்னும் அவர்களில் அநேகம்பேர் பெருமையினாலும் கபடத்தினாலும் எரிச்சலினாலும் எப்படியாவது நபியவர்களைப் பொய்யராக்க வேண்டுமென்று எண்ணியிருந்தார்கள். இன்னுமவர்கள் ரோஷத்தினால் ஹஜரத்தவர்களுக்கு விரோதிகளா யெழும்பி, தங்கள் சொத்துகளையும் அழித்து உயிர்களையும் இழந்தார்கள். இப்படி-

க்கெல்லாமிருந்தும் ஹஜரத்து நபியவர்கள், அவர்களிடத்தில் குர்ஆன் ஷரீபின் சூராக்களுக்கு நிகரான ஒரு சூராவைக்கோர்வை செய்துகொண்டு வரும்படி கேட்டதுந்தவிர, அப்படிச்செய்ய உங்களால் முடியாதென்றும் சொன்னார்கள். அப்பொழுது அவர்களில் ஒருவராலும் அப்படிச்செய்ய முடியவில்லை. அவ்விடத்தில் அவர்களின் நாகரீகமும் புலமைத்தனமும் தலைகாட்டாமல் பதுங்கிவிட்டன. ஒரு சிறு சூராவுங் கோர்வை செய்யத் திறமை குலைந்துவிட்டார்கள். இதைக்குறித்து குர்ஆன் ஷரீப் பகருசூரா மூன்றாம் ருக்கூவில் ஆண்டவன் திருவுளமாகிறதைப் பாருங்கள்.

وان كنتم في ريب مما نزلنا علي عبدنا فاتوا بسورة من مثله وادعوا شهداءكم
من دون الله ان كنتم صادقين * فان لم تفعلوا ولن تفعلوا فاتقوا النار التي وقودها
الناس والحجارة * اعدت للكافرين *

“நாம் நம்முடைய அடிமையின்பேரில் இறக்கின வேதத்தைப்பற்றி நீங்கள் சந்தேகப்பட்டால் அதற்கு நிகரான ஒரு சூரத்தைக்கொண்டுவாருங்கள். இன்னும் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிருந்தால், ஆண்டவனைத்தவிர உங்களுக்கு உதவி செய்கிறவர்களைக் கூப்பிடுங்கள். பின்பு நீங்கள் அப்படிச் செய்யவில்லையானால், அப்படிச்செய்யவு மாட்டீர்கள். காபிர்களுக்காகத் தயார்செய்து வைத்திருக்கிறதும், மனிதர்களும், கற்களும் அதற்கு எரிகொள்ளியாயிருக்கிறதுமான நாகத்துக்குப் பயந்து கொள்ளுங்கள்” என்பதாம்.

இன்னும் சூரத்து யூநுசில் திருவுளமாயிருக்கிறதென்னவென்றால்,

ام يقولون افتريه قل فأتوا بسورة مثله وادعوا من استطعتم من دون الله
ان كنتم صادقين *

“குர்ஆனை அவர் கோர்வை செய்தாரென்று அவர்கள் சொல்லுகிறார்களோ; (அப்படியானால்) இம்மாதிரியான ஒரு சூரத்தைக் கொண்டுவாருங்கள்.” (என்றும்) “நீங்கள் உண்மையுள்ளவர்களாயிருந்தால் அல்லாவைத் தவிர யாரைக்கூப்பிட சக்தி பெறுவீர்களோ, அவர்களைக் கூப்பிடுங்கள் (என்றும்) நீர் (அவர்களுக்குச்) சொல்லும்” என்பதாம்.

இன்னும் சூரத்து ஹூது இரண்டாம் ருகூவில் சொல்லுகிறதாவது:—

ام يقولون افتريه قل فاتوا بعشر سور مثله مفتريات وادعوا من استطعتم من دون الله ان كنتم صادقين * فان لم يستجيبوا لكم فاعلموا انما انزل بعلم الله الايات *

" அதை அவர் கோர்வை செய்தார் யென்கிறார்களோ? (அப்படிச்சொல்லிகிறவர்களுக்கு) அதற்கு நிகரான பத்து சூரத்துகளை நீங்கள் கோர்வை செய்துகொண்டு வாருங்கள்." "நீங்கள் உண்மை யுள்ளவர்களா யிருந்தால் அல்லாவைத்தவிர யாரைக் கூப்பிட உங்களுக்குச் சக்தியுண்டோ, அவர்களைக் கூப்பிடுங்கள்." "பின்பு நீங்கள் சொல்லுகிறதை ஒருவரும் செய்யவில்லையானால், இது தேவ ஞானத்தினால் இறங்கினதென்று அறிந்து கொள்ளுங்கள் என்று நீர் சொல்லும் என்பதே.

இன்னும் சூரத்து பனீஇஸ்ராயில் பத்தாம் றுகூவில் திருவுளமாயிருக்கிறதென்னவென்றால்:—

قل لئن اجتمعت الانس والجن علي ان يأتوا بمثل هاذا القرآن لا يأتون بمثله ولوكان بعضهم لبعض ظهيرا *

"இந்த குர்ஆன் ஷரீபைப்போல் கொண்டு வருகிறதற்காக மனிதர்களும் ஜின்னுகளும் ஒன்று சேர்ந்தாலும் இதற்கு நிகரானதைக் கொண்டுவர மாட்டார்கள். அவர்கள் சிலருக்குச் சிலர் ஒத்தாசை செய்கிறவர்களா யிருந்தாலும் சரி என்று சொல்லும் என்பதே.

குர்ஆன் ஷரீபினுடைய இந்த வாக்கியங்கள் ஹஜரத்தவர்கள் உண்மையான நபியென்பதின்பேரிலும், குர்ஆன் ஷரீப் அல்லாவுடைய திருவசன மென்பதின் பேரிலும் எப்படிப்பட்ட திருஷ்டாந்தமா யிருக்கின்றது பாருங்கள். ஏனென்றால், ஹஜரத்து நபியவர்கள், தாங்கள் நபியென்று பொய்ப் பிரசங்கம் பண்ணி யிருப்பார்களானால், வெகு நாகரீகத்தை யுடைய வித்துவான்களாகிய அநேக புலவர்களுக்கு முன்னால் இவ்வளவு தீரமாய், இந்தக் குர்ஆன் ஷரீபைப்போல் பத்து சூரத்து அல்லது ஒரு சூரத்து உண்டாக்க, உங்களாலும் உங்களுக்கு ஒத்தாசையாய் வருகிறவர்களாலும், மனிதர்களும் ஜின்னுகளும் ஒன்றுகூடினாலும் முடியாதென்று சொல்லமாட்டார்கள். ஏனென்றால் பொய்ப் பிரசங்கம் பண்ணுகிறவன், நான் எப்படி மனிதனா யிருக்கிறேனோ, அப்படியே மற்றவர்களு மிருக்கிறார்கள்; ஆகையால், நான் இந்த வாக்கியத்துக்கு நிகரான வாக்கியம் உண்டாக்

க உங்களால் முடியாதென்று சொல்வேனுகில், ஒருவேளை யாராவது அதற்கு நிகரான வாக்கியத்தையே உண்டுபண்ணிக் கொண்டுவந்தால், நான் வெட்கப்படும்படி நேரிடுமென்று நன்ருய் அறிந்திருக்கிருன். ஆகையால் எவ்விதத்திலும் பொய்யனுல் இவ்வளவு தீரமாய்ப் பிரசங்கம் செய்யமுடியாது. ஹஜரத்தவர்கள் உண்மையான நபியாயிருந்தபடியாலும், இந்த வாக்கியங்கள் சந்தேகமில்லாமல் அல்லாவுடைய திருவசனமா யிருந்தபடியாலும், குர்ஆன் ஷரீபில் நாலு இடத்தில், இப்பேர்ப்பட்ட வாக்கியஞ்சொல்ல ஒருவராலும் முடியாதென்று பரிஷ்காரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படியே ஒருவராலுஞ் சொல்ல முடியவில்லை. சினேகிதர்களே! கொஞ்சம் கவனியுங்கள். ஹஜரத்தவர்களுடைய காலத்திலிருந்து நாளதுவரைக்கும் ஒவ்வொரு காலத்திலும் இஸ்லாம்மார்க்கத்துக்கு அநேக விரோதிக ளிருந்திருக்கிருர்கள். இக்காலத்திலும் கிறிஸ்தவபாதிரிகள் எப்படியாவது இஸ்லாம்மார்க்கத்தைப் பொய்யாக்க வேண்டு மென்று இரவும் பகலும் அதே சிந்தையா யிருக்கிருர்கள். இன்னும் இதற்காகப் பற் பல கல்விகளையும் அறபி பாஷையையும் நன்ருய்ப் படித்துத் தேறுகிருர்கள். ஒரு காலத்திலாவது ஒருவராவது குர்ஆன் ஷரீபைப்போல இரண்டு மூன்றுவரியுள்ள வாசகமாவது எழுதவில்லை. தவிர குர்ஆன் ஷரீபில் புலமை சமர்த்தான பொய்க்கட்டுகள் சுத்தமாய்க் கிடையாது, துன்யா ஆகிறத்தென்னும் இகலோக பரலோகத்தின் இலக்ஷணங்களும்; வணக்கங்கள், வியவகாரங்கள் இவைகளின் முறைமைகளும், நற்குண துற்குணங்களின் விபரமும் இப்படியேமுற்றிலும் புத்தியான சங்கதிகளின் விபரமே அதிலிருக்கின்றன. அப்படியிருப்பதுடன் சொல்லடுக்கின் அழகும், இலக்கண சாஸ்திரத்துக் கிசைதலும் அதிலிருக்கின்றன. ஆனுல் இவைகளில் கூர்மையாய் நோட்டமிட்டு குர்ஆன் ஷரீபுடைய வாசகங்களை யறிந்து அது ஆண்டவனுடைய திருவசன மென்பதையும், ஹஜரத்தவர்கள் மெய்யான நபியென்பதையும் உணர்ந்துகொள்ள, மனிதன் நீதிமானுகவும் யோசனை யுடையவனுகவு மிருக்க வேண்டும். ஏனென்ருல் நேரான புத்தியுள்ளவனிடம் இதனுண்மையைத் தெரிந்துகொள்வதில் கொஞ்சமாவது சந்தேகமேயில்லை. யாதொருவன் இதனுலும் நல்லவழிக்கு வரவில்லையானுல், அவன் மூதேவி யென்றே ஆதியில் தீர்மானிக்கப்பட்டவனு யிருக்கிருன்.

இன்னும் ஹஜரத்து நபியவர்களின் குணங்களும் நடவடிக்கைகளும் சகலரும் விரும்பத் தகுந்தனவா யிருக்கின்றன. அவைகளும் அவர்கள் உண்மையான நபியென்பதை ரூபிக்கிற சாக்ஷிகளா யிருக்கின்றன. அவைகளில் சில பின்வருமாறு:—

மிஷ்காத்து ஷரீபில் அனசுரலியல்லாகு அன்கு சொல்லுகிறதாக எழுதப்பட்டிருக்கிறதென்னவென்றால், நான் பத்துவருஷம் வரையில் நபியவர்களின் பணிவிடையிலிருந்தேன். இவ்வளவு காலத்திற்குள் ஒருபோதாவது அவர்கள் என்னை உப் (சீ) என்று சொன்னதில்லை. இன்னும் ஒருபோதாவது நீயேன் இந்தவேலை செய்யவில்லையென்றாவது, ஏன் இந்தவேலை செய்தாயென்றாவது கேட்டதில்லை. இன்னும் ஷெ கிதாபில் அவரே சொல்லுகிறதாக எழுதப்பட்டிருக்கிறதென்னவென்றால், நான் எட்டுவயதில் நபியவர்களின் பணிவிடையில் வந்து பத்து வருஷகாலம் அவர்களுக்கு ஊழியம் செய்துவந்தேன். அவர்கள் ஒரு போதாவது யாதொரு வஸ்து பழுதானதைப் பற்றி என்னைக் கோபித்ததில்லை, தங்கள் வீட்டிலுள்ளவர்களில் யாராவது என்னைக் கோபித்தால் அப்பொழுது நபியவர்கள், விடுங்கள், சும்மா இருங்கள், அவரைக்கோபிக்காதீர்கள்; விதியிலுள்ளபடிதான் நடக்குமென்பார்கள்.

இன்னும் ஷெ கிதாபில் அவர் சொல்லுகிறதாக எழுதப்பட்டிருக்கிற தென்னவென்றால், நபி சல்லல்லாகு அலைகி வசல்லம் எவ்வளவு நற்குணமுள்ளவர்களாயிருந்தார்களென்றால், மதீனாவிலுள்ள ஜனங்களின் யாதொரு வெள்ளாட்டியாயிருந்தாலும், அவள் அவர்கள் கையைப்பிடித்து இங்கே வாருங்களென்று எங்கே அழைத்தாலும் கூடவே போவார்கள்.

இன்னுமவர் சொல்லுகிறதாவது, ஒருவன் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய சமுகத்தில் வந்து, இரண்டு மலைகளுக்கிடையிலிருந்த ஆடுகள் அவ்வளவையும் தனக்குக் கொடுக்கும்படி கேட்டான். ஹஜரத்து நபியவர்கள் அப்படியே அந்த ஆடுகளையெல்லாம் அவனுக்குக் கொடுத்துவிட்டார்கள். பின்பு அவன், தன் ஜனங்களிடத்திற் போய், ஓ என் ஜனங்களே! நீங்கள் இஸ்லாமாய் விடுங்கள். ஆண்டவன்பேரில் ஆணையாக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லம் பெருங்கொடை கொடுக்கிறார். தாம் ஏழையாய் விடுவதைப்பற்றி அவர் பயப்படுகின்றாரில்லை என்றான்.

இன்னும் தயாளுவான நபி சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் கேட்கிற எவனுக்கும் இல்லையென்று சொன்னதில்லை என்று ஜாபிர் ரலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள்.

இன்னும் அனசு ரலியல்லாகு அன்கு சொல்லுகிறதென்னவென்றால், ஒருதரம் நான் ஹஜரத்து நபியவர்களுடன் கூடி நடந்துகொண்டிருந்தேன். ஹஜரத்தவர்களின் மேல் உறப்பான ஒரு துப்பட்டி

யிருந்தது. அப்பொழுது ஒரு பட்டிக்காட்டான் அவ்விடம்வந்து ஹஜரத்தவர்களுடைய துப்பட்டியைப் பிடித்து அவர்களை வெகு வலுவாயிழுத்தான். ஹஜரத்தவர்கள் அவன் நெஞ்சுவரையில் வந்துவிட்டார்கள். அந்தத் துப்பட்டியின் ஓரம் அஜரத்தவர்களின் பிரடியில் பதிந்து அதன் அடையாள மிருக்கக்கண்டேன். பின்பு அவன், ஓய் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே ! உம்மிடத்திலிருக்கிற இந்தப் பொருள் உம்முடையதுமல்ல, உம்முடைய தகப்பனுடையதுமல்ல, அல்லாவுடைய பொருள், அதில் எனக்கும் கொடுமென்றான். பின்பு ஹஜரத்தவர்கள் அவனைப்பார்த்துச் சிரித்து அவன் கேட்டதையும் கொடுத்தார்கள்.

இன்னும் அபூஹுறைறா ரலியல்லாகு அன்கு சொல்லுகிற தென்னவென்றால், ஒருவர் நபிநாயகத்தினிடம் வந்து யாரசூலல்லா ! காபிர்களின்பேரில் பத் துஆச் (சாபமிடல்) செய்யுங்களென்றார். அதற்கு ஹஜரத்தவர்கள், ஆண்டவன் என்னை நபியாய் உண்டாக்கினது கெடுதி சொல்லுகிறதற்காக அல்ல, மேலும் என்னை ஜனங்களுக்காகக் கிருபையாய் உண்டாக்கினான் என்று திருவுளமானார்கள்.

இன்னும் பீவி ஆயிஷா ரலியல்லாகு அன்ஹா சொல்லுகிறதென்னவென்றால், ஹஜரத்து நபி சல்லல்லாகு அலைகிவசல்லம் ஒருவரையும் திட்டுகிறதில்லை, யாதொருவன் ஹஜரத் தவர்களுக்குத் தீங்குசெய்தால், அதற்குப் பதில் செய்யாமல் அவனை மன்னித்து விடுவார்கள்.

இன்னும் அனசு ரலியல்லாகு அன்கு சொல்லுகிற தென்னவென்றால், ஹஜரத்து நபியவர்கள் எப்பேர்ப்பட்ட * தவக்கலை உடையவர்களா யிருந்தார்களென்றால், தங்கள்சொந்த விஷயத்துக்கு ஒன்றையும் சேர்த்து வைத்துக் கொள்ளவில்லை.

இன்னும் பீவி ஆயிஷா றலியல்லாகு அன்ஹாசொல்லுகிற தென்னவென்றால், ஹஜரத்து நபி சல்லல்லாகு அலைகிவசல்லம் என்னை நோக்கி, அய் ஆயிஷா ! நான் விரும்பினால் தங்கமலை என்னுடன் நடந்துவரும். அதிக உயரமும் காபாவுக்குச் சரியான எடையுமுள்ள ஒரு மலக்கு என்னிடம் வந்து; ஆண்டவன் உமக்கு சலாம்சொல்லி நீர் நபியும் அடிமையுமா யிருக்கப் பிரியமோ? அல்லது நபியும் இராஜாவுமாயிருக்கப் பிரியமோ? வென்று கேட்கிறானென்றார். நான் ஆலோசனை கேட்கும் பாவனையாக ஜிப்ரயீல் அலைகிஸ்ஸலாமைப் பார்த்தேன். அதற்கு ஜிப்ரயீல் அலைகிஸ்ஸலாம் என்னை நோக்கி, உம்முடைய இச்

* தவக்கல்=நமது காரியங்களை ஆண்டவன் செய்வானென்னும் உறுதியான நம்பிக்கை.

சையைக் குறையும். அதாவது அடிமைத்தனத்தையும் ஏழ்மைத்தனத்தையும் தெரிந்து கொள்ளுமென்று சைக்கினை செய்தார். பின்பு நான் நபியும் அடிமையுமா யிருப்பேனென்று சொன்னேன் என்பதாய்த் திருவுளமானார்கள். இதற்குப் பின்னால் ஒருபோதாவது ஹஜரத்து நபியவர்கள் யாதொன்றின்பேரில் சாய்ந்து வஜீபனம் செய்ததில்லை என்றும், நான் அடிமைகள் உண்பதுபோல் உண்பேன்; அடிமைகள் உட்காருவதுபோல் உட்காருவேன் என்றும் சொல்லுவார்கள் என்று பீவிஆயிஷா ரலியல்லாகு அன்ஹா சொல்லி யிருக்கிறார்கள்.

இன்னும் ஹஜரத்து அலிமுர்த்தலா ரலியல்லாகு அன்கு சொல்லுகிற தென்னவென்றால், ஹஜரத்து நபியவர்கள் ஒரு யஹூதியாகிய ஆலிமுக்குச் சில தங்கக்காசுகள் கடன்கொடுக்க வேண்டியதாயிருந்தது. அந்த யஹூதி ஹஜரத்தவர்களிடம் கடனைக்கேட்டான். அதற்கு ஹஜரத்தவர்கள், ஓ யஹூதி! இப்போது உனக்குக் கொடுக்கிறதற்கு என்கையில் ஒன்றுமில்லை யென்றார்கள். அதற்கு அந்த யஹூதி, ஓ முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே! நீர் என் கடனைக்கொடுக்காதவரையில் நான் உம்மைவிட்டுப் பிரியேனென்றான். அதற்கு ஹஜரத்தவர்கள், நல்லது நான் அப்படியே உன்னிடத்தில் உட்கார்ந்திருக்கிறேனென்று சொல்லி அவனிடம் உட்கார்ந்திருந்தார்கள். பின்பு ஹஜரத்தவர்கள், அந்த யஹூதியினிடமிருந்து ளுஹர், அசர், மக்ரிபு இஷா, பஜர் இந்த ஐந்துவேளைத் தொழுகைகளையும் தொழுதார்கள். அதுவரையில் அவனிடமிருந்தார்கள். ஹஜரத்தவர்களுடைய அஸ்ஹாபுகள் அந்த யஹூதியைக்கடிந்து பேசிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் இப்படிப்பேசினது ஹஜரத்தவர்களுக்குப்பிரியப்படவில்லை. அஸ்ஹாபுகள் ஹஜரத்தவர்களைப் பார்த்து யாரசூலல்லா! ஒரு யஹூதியானவன் தங்களைத்தடுத்து வெளியே புறப்படவிடாம லிருக்கிறதா? என்றார்கள். அதற்கு ஹஜரத்தவர்கள்' நான் ஒருவர்பேரிலும் அக்கிரமம் செய்யாமலிருக்கும்படி என்னுடைய நாயன் என்னைத் தடைசெய்திருக்கிறானென்றார்கள். பின்பு பொழுது விடிந்தவுடனே, அந்த யஹூதி. அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாகு வஅஷ்ஹது அன்னக்க ரசூலுல்லாகி, அதாவது, வணக்கத்திற் குரியவன் அல்லாகு தஆலாவைத்தவிர ஒருவருமில்லை என்றும், உண்மையாக நீர் அல்லாவுடைய ரசூலாயிருக்கிறீர் என்றும் நான் சாட்சிசொல்லுகிறேன் என்று இவ்விதம் கலிமா ஓதி இஸ்லாமானபின், என்னுடைய சொத்தில் அரைவாசியை அல்லாவுடைய பாதையில் தர்மம் செய்துவிட்டேன் என்றுசொல்லி, கேளுங்கள் நபியே, நான் தங்களுக்கு இப்படி மரியாதை தப்பி நடந்தது, தவுராத்து வேதத்தில் தங்களைக்குறித்துச் சொல்லப்பட்டி

ருக்கிற புகழான நற்குணங்கள் தங்களில் இருக்கின்றனவா வென்று அறிந்துகொள்ளும் பொருட்டே இப்படிச்செய்தேன். அந்தப்புகழான குணங்களாவன:—முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அப்துல்லாவுடைய குமாரர், அவர் மக்காவில் பிறப்பார், மதீனாவுக்கு யாத்திரை செய்வார், அவருடைய ராஜாங்கம் ஷாம் தேசத்திலிருக்கும், முகம்மது கெட்ட நாவும் அழுத்தமான நெஞ்சு முள்ளவரல்ல, அவர் வீண்வார்த்தை பேசார்; என்பனவாகிய இவைகளேயென்று சொல்லி, மறுபடியும் அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாகு வஅஷ்ஹது அன்னக்க ரசூலுல்லாகி மெய்யாகவே ஆண்டவனைத்தவிர வணக்கத்துக்குரியவன் ஒருவனுமில்லை. இன்னும் மெய்யாகவே தாங்கள் அல்லாவுடைய ரசூலா யிருக்கிறீர்களென்று நான் சாக்ஷி சொல்லுகிறேன் என்று சொல்லியபின்பு இது என்னுடைய சொத்து, ஆண்டவனுடைய உத்திரவுப்படி எப்படி இதைச் செலவுசெய்ய ஞாயமோ அப்படிச்செலவு செய்யுங்களென்று சொன்னான்.

இன்னும் இபுனுமஸ்கூது ரலியல்லாகு அன்கு சொல்லுகிற தென்னவென்றால், நபிசல்லல்லாகு அலைகி வசல்லம் கோரைப்பாயின்மேல்படுத்து எழுந்தபோது, அவர்களின் திருமேனியில் பாயின் அடையாளம் பதிந்திருந்தது. நான் ஹஜரத்தவர்களின் சமுகத்தில் யாரசூலல்லா! தங்களுக்காக மிருதுவான விரிப்பு விரிக்கவும் நல்லவஸ்திரங்களை சித்தப்படுத்தவும் தாங்கள் எங்களுக்கு உத்திரவு செய்தால் அதிக நன்மையா யிருக்குமென்றேன். அதற்கு ஹஜரத்தவர்கள், துன்யாவில் எனக்கு என்னவேலை யிருக்கின்றது. வாகனத்தின்மேல் ஏறிப்போகிற ஒருவன் அதிலிருந்தபடியே ஒரு மரத்தின் நிழலில் இளைப்பாறி, உடனே அம்மரத்தைவிட்டுச் சீக்கிரத்தில் போய்விடுகிறதுபோல், துன்யாவில் எனக்கும் அவ்வளவே போதுமென்றார்கள்.

இன்னும் அபூ உமாமா ரலியல்லாகு அன்கு, நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானதாகச் சொல்லுகிற தென்னவென்றால், "உனக்குப் பிரியமானால் மக்கத்திலுள்ள பத்ஹா என்னும் இடத்தை உனக்காக தங்கமாக்கிப் போடுகிறேனென்று என்னுடைய நாயன் என்னிடம் திருவுளமானான். அதற்கு நான் ஆண்டவனே! நான் அதை விரும்பவில்லை, நான் ஒரு நாள் திருப்தியும் ஒருநாள் பட்டினியுமாயிருக்கிறதையே விரும்புகிறேன். நான் பட்டினியா யிருக்கும்பொழுது உன்னிடம் தாழ்மையோடு கெஞ்சுவேன்; நான் திருப்தியடையும்பொழுது உனக்கு நன்றியறிந்து துதி செலுத்துவேன்" என்று சொன்னேன் என்பதே.

இவ்விடத்தில் ஹஜரத்தவர்களின் நற்குணங்களில் சில மாத்திரம் சொல்லப்பட்டன. அதிகமாய் அறியப் பிரியமுள்ளவர்கள் மதாரிஜுன்நுபுவ்வா, ஷமாயிலே திர்மதி முதலான சரித்திரங்களையும்; ஹதீது கிதாபுகளையும் பார்வையிட்டு ஹஜரத்தவர்கள் என்ன நற்குண முள்ளவர்களா யிருந்தார்களென்று தெரிந்து கொள்ளுவார்கள்.

இதற்காகவே ஆண்டவன், குர்ஆன் ஷரீபில் وانك لعلي خلق عظيم "அய் முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமே! நீர் வலுப்பமான நற்குணத்தின்பேரி லிருக்கிறீர்" என்று திருவுளமா யிருக்கிறான். இப்படி குர்ஆன் ஷரீபே அவர்களின் குணத்தைப்பற்றிப் புகழும்போது மற்றவர்கள் என்ன புகழப் போகிறார்கள்?

நபிமார்களுக்குப் பின்னால் மார்க்கத்தின் வழிகாட்டிகள் யாரென்றால், நபிமார்களுடைய நாயிபுகளென்னும் ஸ்தானாதிபதிகள் தான். அவர்கள் இந்த வழிகாட்டுதலான வேலையை நிறைவேற்றுகிறதற்கு ஒரு குற்றமும் செய்யக்கூடாதென்பது அனுவசிய மென்றாலும், அப்படியிருந்தும் அவர்களுடைய நடவடிக்கைகளும் குணங்களும் வெகு அழகாகவே யிருக்கின்றன. அப்படி அவர்களால் யாதேனும் பெருங் குற்றம் சம்பவித்தால், உடனே ஆண்டவன் அவர்களுக்குத் தவுபா என்னும் மன்னிப்புக் கேட்குதலைக் கொடுத்து விடுகிறான்.

நபி சல்லல்லாகு அலைகி வசல்லமுடைய நாயிபுகள் அக்காலமுதல் நாளது வரைக்கும் உலகத்தில் உண்டாய்க்கொண்டே வருகிறார்கள். அவர்க ளெல்லாரிலும் மேன்மையானவர்களும் சிறந்தவர்களும் யாரென்றால், ஹஜரத்து நபியவர்களுடைய அஹ்லுபைத் தென்னும் பந்துக்களும், அஸ்ஹாபுகளென்னும் உடன்வாசிகளுமே. அவர்கள் விசுவாசத்துடன் நபியவர்களைக் கண்ணாற் கண்டவர்கள்; அவர்களுக்குப் பின்னால் சிறந்தவர்கள் தாபியீன்கள்; அவர்கள் விசுவாசத்துடன் அஸ்ஹாபுகளைக் கண்டவர்கள்; அவர்களுக்குப் பின்னால் சிறந்தவர்கள் தபாதாபியீன்கள்; அவர்கள் விசுவாசத்துடன் தாபியீனைக் கண்டவர்கள்; அவர்களுக்குப் பின்னால் சிறந்தவர்கள் யாரென்றால், ஆலிம்களென்னும் முகம்மதிய சாஸ்திரிகளும் பெரியோர்களுமே. இவர்களின்தொகை ஆயிரங்கள் லக்ஷங்களுக்குக் குறையாது. இந்த நாயிபுகளுடைய நற்குணங்களையும் நடவடிக்கைகளையும் கேட்டால் மனதுக்கு வெகு இன்பத்தைக் கொடுக்கின்றது. இன்னும் அவர்களில் அநேகரால் அற்புதங்களும் வெளிப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் அந்தப் பெரியோர்களின் நற்குணங்களிலும் அற்புதங்களிலும் சிலவற்றை மாத்திரம் எழுதுகிறேன் கவனியுங்கள்.

றவுலத்துல் அஹ்பாப் முதலான கிதாபுகளில் எழுதப்பட்டிருக்கின்றதென்னவென்றால், நபி சல்லல்லாகு அலைகி வசல்லம் ஒருதரம் ராணுவத்துக்காகச் சாமான்கள் தயார் செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது ஹஜரத்து உமர் ரலியல்லாகு அன்கு தமது சொத்தில் அரைவாசியை நபியவர்களின்சமுகத்தில் கொண்டுவந்தார். நபியவர்கள் அவரைப் பார்த்து, குடும்ப ஜனங்களுக்காக என்ன வைத்துவிட்டு வந்தீர் என்றுகேட்க, அதற்கு அவர், அரைவாசி முதல்வைத்தேனென்றார். ஹஜரத்து அபூபக்கர் சித்தீகு ரலியல்லாகு அன்கு தமது சொத்து முழுமையும் எடுத்துக்கொண்டு வந்தார். ஹஜரத்தவர்கள் அவரைப்பார்த்து குடும்பஜனங்களுக்காக என்னவைத்துவிட்டு வந்தீர் என்று கேட்க, அதற்கவர், அல்லாவையும் ரசூலையும் வைத்தேனென்றார்.

இன்னும் கீமியாயெ ஸஆதத்து என்னும் கிதாபில் எழுதப்பட்டிருக்கிறதென்னவென்றால், ஒருநாள் ஒரு அடிமை அபூபக்கர் சித்தீக்கு ரலியல்லாகு அன்கு அவர்களுக்குப் பால் கொண்டுவந்து கொடுத்தான். அவர்கள் அதைக் குடித்தார்கள். பின்பு அது ஹலாலானவஜ்ஹின்படியாய், அதாவது கிரமப்படி சாப்பிடத் தகுந்ததாயிருக்கவில்லையென்று தெரியவந்தது. உடனே ஹஜரத்து அபூபக்கர் சித்திக்கு ரலியல்லாகுஅன்கு தொண்டையில் விரலைவிட்டு அந்தப்பாலை வாந்தி பண்ணின பின்பு, ஆண்டவனே! என்னுடைய நரம்புகளில் மிச்சமாயிருந்துவிட்ட பாலின் தீங்கைவிட்டும் உன்னிடம் காவல் தேடுகிறேனென்றார்கள்.

இன்னும் ஸவாயிக்கெ முஹ்றிக்கா முதலானகிதாபுகளில் எழுதப்பட்டிருக்கிறதென்னவென்றால், ஹஜரத்து உமர் ரலியல்லாகு அன்கு தங்களுடைய அரசாட்சியின் நாட்களில் ஸாரியா என்னும் பேருள்ள ஒருவரை ஒரு படைக்குத் தலைவாராக்கி, ஒரு திசையை நோக்கியனுப்பியிருந்தார்கள். அவர் ஒருநாள் அஜம் தேசத்தில்; காபிர்களின் மிகைப்பினால் தன் படையோடு முறிந்தோடினார். அந்நேரத்தில் ஹஜரத்து உமர் ரலியல்லாகு அன்கு மதீனாவில் மிம்பரென்னும் உபதேச மேடையில் கொத்பா என்னும் உபதேசமோதிக்கொண்டிருந்தார்கள். அப்படி ஓதிக்கொண்டிருக்கும் பொழுது இந்தச் சங்கதி அவர்களுக்கு கஷ்பு என்னும் ஞான திருஷ்டியினால் தெரிந்து கொத்பாவின் நடுவில்" யாஸாரியா அல்ஜபல்" ஓய் ஸாரியாவே! மலைப் பக்கம்போய்த்தங்கியிரும் என்றுசொல்ல ஆரம்பித்தார்கள். ஸாரியா என்னும் படைத்தலைவர் அஜரத்து உமர் ரலியல்லாகு அன்குவுடைய இந்த சப்த

த்தை அவ்விடத்தில் கேட்டு எச்சரிக்கையாகி மலையில் போய்த் தங்கித் தேறுத லடைந்துப் பின்பு காபிர்களை எதிர்த்து அவர்களை முறியடித்தார்.

இன்னும் ஷெ கிதாபில் எழுதப்பட்டிருக்கிற தென்ன வென்றால், மிஸர் பட்டணத்தில் இஸ்லாமுடை அதிகாரம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன், அவ்விடத்தி லுள்ளவர்கள் நீல் என்னும் ஆற்றுக்குக்காணிக்கையாக ஒரு கன்னிகையான பெண்ணைச் சிங்காரித்து அதில் போட்டுவிடுவார்கள். அப்பொழுது அந்த ஆறு வற்றாமல் ஓடிக்கொண்டிருக்கும். பின்பு அவ்விடத்தில் இஸ்லாமுடைய அதிகாரம் ஸ்தாபிக்கப்பட்ட பொழுது, அந்தப் பட்டணத்துக்கு அதிகாரியாய் நியமிக்கப்பட்ட அம்றுப்னுல் ஆஸ் ரலியல்லாகு அன்கு அந்தக் கொடிய வழக்கத்தைத் தடுத்து விட்டார். ஆறு சுத்தமாய் வற்றிப் போயிற்று. அவ்விடத்துக் குடிகள் அந்தப் பட்டணத்தை விட்டு வேறேயெங்கேயாவது போய்விட வேண்டுமென்று எண்ணினார்கள். இதையறிந்த அம்றுப்னுல் ஆஸ் ரலியல்லாகு அன்கு இந்தச் சங்கதிகளை அஜரத்து உமர் ரலியல்லாகு அன்குவுக்கு எழுதி யனுப்பினார். அஜரத்து உமர் றலியல்லாகு அன்கு அதற்கு ஜவாபாக அம்றுப்னுல் ஆஸுக்கு ஒரு காகிதம் எழுதி, அதற்குள் ஒரு துண்டு கடிதத்தை அடக்கம் செய்து அனுப்பினார்கள். அந்தக் காகிதத்தின் வாசக மென்னவென்றால்,"நீர் அந்த வழக்கத்தை நிறுத்தினது நலமே; இதற்குள்ளடக்கமாயிருக்குந் துண்டுக் கடிதத்தை அந்த நீலாற்றில் போட்டுவிடு"மென்பதே. அந்தத் துண்டு கடிதத்திற்குள் எழுதி யிருந்த தென்னவென்றால், "அல்லாவுடைய அடிமை அமீறுல்முமினீனாகிய உமருடைய இந்தக் காயிதம் நீலாற்றுக்குவருவது. பின்பு நீ உன் சுயசக்தியினால் ஓடிக்கொண் டிருந்தாயானால் இப்பொழுது நீ ஓடமாட்டாய், ஆண்டவன் உன்னை ஓட்டிவைத்திருந்தால் நான் அந்த உக்கிரமுள்ளவனாகிய ஒரு தனி முதற் கடவுளிடம் உன்னை ஓட்டிவைக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்" என்பதே. அம்றுப்னுல்ஆஸ் இந்தத் துண்டுக் கடிதத்தை ஆற்றில்போட, ஆண்டவன் ஆற்றை ஜாரியாய் ஓடச்செய்தான், அப்பொழுதிருந்து அந்தக் கொடிய வழக்கம் அந்தப் பட்டணத்திலிருந்து நிறுத்தப்பட்டது.

இன்னும் சரித்திரங்களில் எழுதியிருக்கிற தென்னவென்றால், ஒருநாள் ஹஜரத்து உஸ்மான் றலியல்லாகு அன்கு ஒரு கப்றண்டை நின்று தங்கள் முபாறக்கான தாடி நனையும்படி அதிகமாய்க் கண்ணீர்விட்டழுதார்கள். கூடவிருந்தவர்கள் நீங்கள் நரகத்தின் பயத்தினாற் கூட இன்று அழுததுபோல் ஒருபோதும் அழுத தில்லையே; இன்று என்

இப்படி அழுதீர்களென்று கேட்டதற்கு, அவர்கள்; நான் நபி சல்லல்லாகு அலைகி வசல்லம் திருவுளமாகக் கேட்டிருக்கிறேன். அதாவது; ஆகிறத்துடைய மன்ஜில்களில் முந்தினதானது கப்று, அதில் சுகமடைந்தவனுக்கு மற்ற மன்ஜில்கள் இலேசாகும். அதில் கஷ்டமடைந்தவனுக்கு மற்ற மன்ஜில்களும் கஷ்டமாயிருக்கும் என்பதே. ஆகையால் முந்தின மன்ஜிலில் மற்ற மன்ஜில்களின் விசாரமிருக்கவேயிருக்கு மென்றார்கள்.

இன்னும் உஸ்மான் ரலியல்லாகு அன்கு அநேக நேரங்களில் மத்தியானத்துக்குமுன்னே மஸ்ஜிதுநபவிஎன்னும் மதீனத்துப் பள்ளிவாசலில் தரையில் படுத்து நித்திரை செய்வார்கள். விழித்தெழுந்தால் அவர்களின் சரீரத்தில் பொடிக் கற்களின் அடையாளம் பதிந்திருக்குமென்றும் எழுதப்பட்டிருக்கின்றது.

இன்னும் ஷைக் ஸாதீ ரஹமதுல்லாகி அலைகி போஸ்தானில் எழுதியிருக்கிற தென்னவென்றால். ஒருதடவை ஹஜரத்து உமர் றலியல்லாகு அன்கு ஒரு தெரு வழியாய்ப் போகும்போது அவர்களின் பாதம் ஒரு அற்ப மனிதனுடைய காலின்மேல் அசந்தர்ப்பமாய்ப் பட்டுவிட்டது. அவன் கோபமாகி நீ குருடனா? என்று கேட்டான். அதற்கு அவர்கள் நான் குருடனல்ல, ஆனால் அசந்தர்ப்பமாய்ப் பட்டுவிட்டது, நீ மன்னித்துக்கொள் ளென்றார்கள்

இன்னும் ஷிகிதாபில் எழுதப்பட்டிருக்கிற தென்னவென்றால், ஒருவன் அஜரத்து அலிறலியல்லாகு அன்கு விடம் ஒருமஸ்அலா கேட்டான். அதற்கு அவர்கள் ஜவாபு சொன்னார்கள். அப்போது அந்த சபையிலிருந்த ஒருவர், இந்த மஸ்அலா நீங்கள் சொல்லியபடி அல்லவென்றார்; அதற்கு அவர்கள், உமக்கு நன்றாய்த்தெரிந்திருந்தால்சொல்லுமென்றார்கள். அவர் அந்த மஸ்அலாவை உள்ளபடி சொன்னார்; அதற்கு அலிரலியல்லாகு அன்கு நான் மறந்துவிட்டேன், இவர் சொல்லுகிறதுதான் சரியென்றார்கள்.

இன்னும் ஸவாயிக்கே முஹ்றிக்காவில் எழுதப்பட்டிருக்கிற தென்னவென்றால், ஹஜரத்து மஆவியா ரலியல்லாகு அன்கு ளிறாரிப்னுஹம்ஜாவிடம் ஹஜரத்து அலிறலியல்லாகு அன்கு உடைய குணங்களை எனக்குச் சொல்லுமென்று கேட்க, ளிறாரிப்னு ஹம்ஜா அதைச்சொல்ல அஞ்சினார். அஜரத்து மஆவியா றலியல்லாகு அன்கு ஆணையிட்டுக் கேட்க அவர் சொல்லத் தொடங்கினார். அதாவது அஜரத்து அலிறலியல்லாகு அன்கு மிகப் பெருந்தன்மையும் ஆண்டவனுடையபக்தியுமுள்ளவர்களாயிருந்தார்கள்; இன்னும்பெரியபலசாலியா

யு மிருந்தார்கள். அவர்களின் வாக்கு அதிக மேன்மையானதா யிரு
ந்தது. அதிகாரமும் நீதியு முடையவர்களா யிருந்தார்கள். அவர்க
ளுடைய இல்மென்னும் கல்வி பல பக்கமும் செல்லுகிறதா யிருந்தது.
அவர்களின் வார்த்தை பூராயத்தை யுடையதா யிருந்தது. துன்யா
வையும் அதினுடைய அலங்காரங்களையும் வெறுத் திருந்தார்கள்.
அவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் அதிகமாய்ச் சிந்தினது.
அதிக முயற்சியும் ஆலோசனையு முடையவர்களா யிருந்தார்கள்.
காய்ந்த வெறும் ரொட்டியும் முரட்டுப்புடவையும் போதுமென்று
திருப்தி யடைந்தவர்களா யிருந்தார்கள். தங்களை ஒரு அற்ப ம
னிதனாக எண்ணியிருந்தார்கள். நாங்கள் கேட்கிற கேள்விகளுக்
கெல்லாம் ஜவாபு சொல்லுவார்கள். நாங்கள் அவர்களை அழைத்தா
ல் அங்கீகரிப்பார்கள். மார்க்கத்தை யுடையவர்களுக்கு மரியாதை
செய்வார்கள். ஏழைகளைச் சேர்ந் திருப்பார்கள். தப்பிதமான வார்
த்தைக்கு வழிப்படமாட்டார்கள். எந்த ஏழையும் அவர்களுடைய நீ
தியைவிட்டு நிராதரவாகான். "ஒரு இரவில் அவர்கள் தனியாய்த்
தங்கள் தாடியைக் கையால் தடவிக்கொண்டு விசாரத்தோடு, அய்து
ன்யா! நான்உன்பேரில் மகிழ்ந்து போகமாட்டேன், உன்னுடைய மா
யத்தில் அகப்பட மாட்டேன், இந்தமாயத்தை மற்றவர்களுக்குக் கொ
டு, நீ யென்னைவிரும்புகிறாய், நான் உன்னை வெறுக்கிறேன், நான் உன்
னைவிரும்புவது முடியாது, முடியாது, நான் உன்னை விரும்புகிறது மகா
தூரம், நான் உன்னை மூன்று * தலாக்கு சொல்லிவிட்டேன், இனி உன்
னளவில் திரும்பேன், உன் வயசு கொஞ்சம், உன்னுடைய அபாயங்கள்
அதிகம், துக்கமே, துக்கமே வழிச்செலவு கொஞ்சமா யிருக்கின்றது.
பிரயாணம் தூரமாயிருக்கின்றது, வழியில் அபாயம் அதிகமாயிருக்கி
ன்ற" தென்று சொல்லிக்கொண்டிருக்க நான் கண்டேனென்றுசொ
ன்னார். மஆவியா றலியல்லாகு அன்கு இந்த வார்த்தைகளைக் கேட்டு
அழுதுவிட்டதுந் தவிர, ‡ அபுல்ஹசன் பேரில் ஆண்டவன் கிருபை
செய்வானாக, சத்தியமாய் அவர் அப்படியேயிருந்தார், நீர் சொன்ன
து மெய்தான் என்று சொன்னார்கள்.

இன்னும் ஷை கிதாபில் எழுதப்பட்டிருக்கிற தென்னவென்றால்,
இமாம் அசன் ரலியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:—நான் என்
னுடைய நாயன் வீட்டளவில் கால் நடையாய்ப்போகாமல் என்னுடை
ய நாயனைச் சந்திக்க எனக்கு வெட்கமாயிருக்கிறது என்பதே. இதி

* தலாக்கு=திரஸ்கரித்தல், அல்லது நீக்கல்.

‡ அபுல்ஹசன்=அலிறலியல்லாகு அன்குவினுடைய பேர்.

ன் நிமித்தமே அவர்கள் தங்களுடன் ஏறுவாகனங்கள் நடந்துவர இருபத்தைந்து ஹஜ்ஜு கால் நடையாய்ப்போய்ச் செய்திருக்கிறார்கள்.

இன்னும் ஷை கிதாபில் அபூநயீம் என்பவர்களால் பேசிவரப்படுகிற தென்னவென்றால், இமாம் அசன் ரலியல்லாகு அன்கு இரண்டு தரம் தங்கள்சொத்து முழுமையும் ஆண்டவன்பேரால் கொடுத்துவிட்டார்கள். இன்னும் மூன்றுதரம் தங்கள் சொத்தில் அரைவாசியை ஆண்டவன்பேரால் பகிர்ந்து விட்டார்கள். உதாரணமாக இரண்டு பாதரட்சை அல்லது இரண்டு மேஜோடு இருந்தால் அதில் ஒன்றைக்கொடுத்து விடுவார்கள்.

இன்னும் ஷை கிதாபில் எழுதப்பட்டிருக்கிற தென்னவென்றால், ஒரு கிழவி இமாம் அசன், இமாம் உசைன், அப்துல்லாகிப்னு ஜஅபர் றலியல்லாகு அன்கு ஆகிய இந்த மூவருக்கும் விருந்துசெய்தாள். பின்பு இமாம் அசன் றலியல்லாகு அன்கு அந்தக் கிழவிக்கு ஆயிரம் தங்கக்காசும் ஆயிரம் ஆடும் இனுமாய்க் கொடுத்தார்கள். இமாம் உசைன் ரலியல்லாகு அன்குவும் அவ்வளவு இனுமே கொடுத்தார்கள். அப்துல்லா றலியல்லாகு அன்கு அவளுக்கு இரண்டாயிரம் தங்கக்காசும் இரண்டாயிரம் ஆடும் இனுமாய்க் கொடுத்தார்கள்.

இன்னும் அனேக சரித்திரங்களினால் தெரியவருகிற தென்னவென்றால், எஜீது என்னும் பாதகத்துரோகி அக்கிரமமாய் அரச அதிகாரத்துக்கு வந்தபொழுது, இமாம் உசைன் றலியல்லாகு அன்குவைத் தனக்கு பைஅத்து கொடுக்கும்படி அதாவது, தான் அரசனாயிருக்கப் பொருந்திக் கையடித்துக் கொடுக்கும்படிக்கும், தனக்கு வழிப்படும்படிக்கும் சொன்னான். அதற்கு இமாம் உசைன் ரலியல்லாகு அன்கு இந்தத் துர்நடத்தையுள்ள அயோக்கியனுக்கு பைஅத்து கொடுக்கிறது றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமுடைய மார்க்கத்துக்கு விரோதமாயிருக்கிறதென்றெண்ணி, அவனுக்கு பைஅத்து கொடுக்கிறதை விட்டு விலகிக் கொண்டார்கள். அதன் நிமித்தம் தங்கள் அருமையான உயிரையும் அல்லாவுடைய பாதையில் குர்பான்செய்து, தாகத்தின் கடினத்தையும் பலவிதமான துன்பங்களையும் அனுபவித்து, தங்கள் அருமைக் குமாரர்களில் மிகுதம் பேருடன் யுத்தகளத்தில் ஷஹீதானார்களே யொழிய, அந்த அயோக்கியனுக்கு பைஅத்து கொடுக்கச் சம்மதிக்கவில்லை. ஆ! ஆ!! வைராக்கிய மென்றால் இதுதான் வைராக்கியம் !!!

---

இன்னும் ஹஜரத்து இமாம் அபூஹனீபா றலியல்லாகு அன்கு தங்கள் குழந்தைகளுக்காக யாதொரு உணவு பதார்த்தமாவது வஸ்தி

மாவது கிரயத்துக்கு வாங்குகிறதா யிருந்தால், அதற்குமுன்னே அவ்வளவு உணவுபதார்த்தத்தை அல்லது வஸ்திரத்தை ஆலிம்களுக்கு வாங்கிக் கொடுப்பார்களென்று ஹஜரத்து மிஸ்அர் என்பவர் சொல்லியிருக்கிறதாக இப்னி ஹஜர் மக்கி ஷப்அவி றக்மதுல்லாகி அலைகி தங்கள் கலாயிதுல் உக்கான் என்னும் கிதாபில் எழுதி யிருக்கிறார்கள்.

இன்னும் ஷை கிதாபில் எழுதப்பட்டிருக்கிற தென்னவென்றால், அசனிப்னு ஜியாத் சொல்லுகிறார். அல்லாவின்பேரில் ஆணையாக இமாம் அபீஹனீபா றலியல்லாகு அன்கு அவர்கள் பிரபுக்களும் பாத்ஷாக்களும் கொடுக்கிற வெகுமதியை ஒருபோதும் அங்கிகரித்ததில்லை. ஒருதரம் ஹஜரத்து இமாமவர்கள் வர்த்தகத்துக்காகக்கொஞ்சம் ஜவுளிதினுசுவாங்கித் தங்கள் வர்த்தகக் கூட்டாளியிடம் அனுப்பினார்கள். அதில் ஒருபீஸ் கொஞ்சம் பழுதா யிருந்தபடியால் அதை யனுப்பும்பொழுது வாங்குகிறவர்களுக்கு அந்தப் பீஸில் உள்ள பழுதைக்காட்டி விற்கும்படி சொல்லி யனுப்பினார்கள். அவர் மறதியாய் அந்தப் பீஸை விற்கும்பொழுது அதில் உள்ள பழுதைக் காட்டவில்லை. எல்லாத்தினுசையும் விற்பனை செய்துவிட்டார். இந்தச் சங்கதி இமாமவர்களுக்குத் தெரிந்தபொழுது அந்த வர்த்தகத்தினால் வந்த பணத்தைத் தங்கள் செலவில் கொண்டுவரத் தங்களுக்குப் பிரியப்படவில்லை. அந்த வர்த்தகத்தின் கொள்முதல் லாபம் எல்லாஞ்சேர்ந்து இருபதினாயிரம் திர்ஹத்துக் கிருந்தது. அப்படியே ஏழைகளுக்குத் தர்மம் செய்து விட்டார்கள்.

இன்னும் ஷை கிதாபில் எழுதப்பட்டிருக்கிற தென்னவென்றால், ஹஜரத்து இமாம் அபூஹனீபாறலியல்லாகு அன்கு நாற்பது வருஷம் வரையில் இஷாவுக்குச்செய்த ஒலுவைக்கொண்டு பஜர்தொழுதார்கள் என்றும், அநேகம் இரவுகளில் ஒரு ரக்அத்துத் தொழுகையில் குர்ஆன் முழுமையும் ஓதிமுடிப்பார்கள் என்றும், அதில் அவர்கள் அழுகிற சப்தத்தை அண்டை அயலில் உள்ளவர்கள் கேட்டு அவர்கள் பேரில் இரக்கப்படுவார்கள் என்றும் எழுதப்பட்டிருக்கின்றது.

இன்னுமொரு ரிவாயத்தில் எந்தவிடத்தில் இமாமவர்கள் மவுத்தானார்களோ அந்தவிடத்தில் ஏழாயிரம் குர்ஆன் ஓதி முடித்திருக்கிறார்களென்றும் வந்திருக்கின்றது.

இன்னும் மவுலானா ஜாமீ றக்மதுல்லாகி அலைகி தங்கள் நப்ஹாத்துல் உன்ஸ் என்னும் கிதாபில் எழுதியிருக்கிற தென்னவென்றால், ஹஜரத்து குத்துபு றப்பானி ஷைக் அப்துல்காதர் ஜெய்லானி றலியல்லாகு அன்குவுடைய தாயார், அபூ அப்துல்லாவுடைய மகள் பாத்தி

மா அம்மாள் சொல்லுகிருர்கள்: என் மகன் அப்துல்காதர் பிறந்தது முதல் றம்லான்மாதத்துடைய பகலில் பால்குடித்ததில்லே.

இன்னும் ஒருதரம் மேகத்தினுல் றம்லானுடைய பிறை தெரியாம லிருந்தது. ஜனங்கள் அப்துல்காதர் ஜெய்லானியுடைய தாயார் பாத்திமா அம்மாளிடத்தில் பிறையைப் பற்றிக் கேட்க, அவர்கள் இன்று அப்துல்காதர் பால் குடிக்கவில்லே யென்ருர்கள். பின்பு அது றம்லானுடைய நாளாகவே யிருந்ததாகத் தெரியவந்ததென்று சொல்லுகிருர்கள்.

இன்னும் ஷெ கிதாபில் ஷைக் அப்துல்காதர் ஜெய்லானி றலியல்லாகு அன்கு சொல்லுகிறதாய் எழுதப்பட்டிருக்கிற தென்னவென்ருல், நான் சிறுபிராயத்தில் அறபாவுடையநாளில் ஒருமாட்டை ஓட்டிக்கொண்டு காட்டுக்குப் போனேன். அந்தமாடு என்னேப்பார்த்து ஒய் அப்துல்காதரே! உம்மை இந்த வேலேக்காகப் படைக்கவில்லே, இந்தவேலே செய்யும்படி உமக்குக் கட்டளே யிடவுமில்லே யென்று சொல்லிற்று. நான் இதைக் கேட்டுப் பயந்துத் திரும்பி வீட்டுக்குவந்து மேல்வீட்டின்மேல் ஏறினேன். அங்கே அறபாவி லிருக்கிற ஹாஜிகளெல்லாம் எனக்குத் தெரியக் கண்டேன். நான் என் தாயாரிடத்தில் வந்து அம்மா! நீங்கள் என்னே ஆண்டவனுடைய, வணக்கத்துக்காக விட்டுவிடுவதுந் தவிர, பக்தாதுக்குப் போய்க் கல்வி கற்கவும் நல்லோர்களேச் சந்திக்கவும் உத்திரவு கொடுக்கவேண்டு மென்றேன். அதற்குத் தாயாரவர்கள், ஏன் என்னகாரண மென்ருர்கள். நான் சங்கதிகளேச் சொன்னேன். தாயாரவர்கள் ரொம்பவும் விசாரப்பட் டழுதார்கள். பின்பு என் செலவுக்காக நாற்பது தங்கக் காசுகளே என் சட்டையில் வைத்து தைத்துவிட்டதுந் தவிர, எனக்குப் பிரயாணத்துக்காக உத்திரவு கொடுத்தனுப்பும்பொழுது, நான் எப்போதும் பொய் சொல்லாம லிருக்கும்படி என்னிடம் வாக்குத்தத்தம் வாங்கிக்கொண்டு, எனக்கு உத்திரவு கொடுத்தார்கள். நான் பிரயாணக்காரருடன் கூடிப் பக்தாதுக்குப் போகிறபோது, வழியில் அறுபது சவார்களான கள்ளர்களின் ஒருகூட்டமானது பிரயாணக்காரர் மேல்வந்து விழுந்தது. என்னிடம் ஒருகள்ளன் வந்து, ஓய் "பக்கீரே! உம்மிடம் என்னவிருக்கிற தென்ருன். அதற்கு நான், நாற்பது தங்கக் காசுக ளிருக்கின்றன வென்றேன். நான் பரிகாசம் பண்ணுகிறேனென் றெண்ணிக்கொண்டு அவன் போய்விட்டான்; பின்பு வேருெருவன் வந்து, அப்படியே கேட்க, நான் உண்மையைச் சொன்னேன். அந்த இரண்டு சவார்களும் இந்தச் சங்கதியைத் தங்கள் எஜமானிடம் போய்

ச் சொல்ல, அவன் என்னைக் கூப்பிட்டு அவ்விதமே கேட்டான். நான் முன்போலவே ஜவாபு சொன்னேன். பின்பு அவன், என் சட்டையைக் கிழித்துப் பார்க்க, நான் சொன்னபடியே யிருக்கக்கண்டு, நீ ஒளிக்காமல் உண்மையைச் சொன்ன காரண மென்ன வென்றான். நான் என் தாயார் என்னைப்பொய் சொல்லாமலிருக்கும்படி என்னிடம் வாக்குத்தத்தம் வாங்கினார்கள்; ஆகையால் நான் அதற்கு விரோதம் செய்யமாட்டேனென்றேன். இதைக் கேட்ட அக்கள்ளர்களின் எஜமான் வெகு விசாரப்பட்டழுது, நான் பல வருஷங்களாக என் நாயனுடைய வார்த்தைப் பாட்டுக்கு விரோதஞ் செய்துகொண் டிருக்கிறேனென்று சொல்லி, அந்த எஜமானும் அவனைச் சேர்ந்த கள்ளர்களும் இனி களவு செய்கிறதில்லையென்று என்கையின் பேரில் தவுபாசெய்தார்கள்.

இன்னும் கீமியாயெ ஸஆததது என்னும் கிதாபில் எழுதி யிருக்கிறதென்னவென்றால், ஹஜரத்து உவைசுல்கர்னி றலியல்லாகு அன்கு, தெருவில் விழுந்துகிடக்கும் பேரீத்தங்கொட்டைகளை எடுத்துத் தங்களுக்கு ஆகாரமாக்கிக் கொள்வார்கள். இன்னும் தெருவில் விழுந்துகிடக்கிற சிறுசிறு கந்தைகளை யெடுத்துச் சுத்தப்படுத்தித் தங்களுக்கு வஸ்திரமாக்கிக் கொள்வார்கள். இப்படிப்பட்ட தெண்டிப்புள்ளவர்களா யிருந்தார்கள்.

இன்னும் ஹஜரத்து மவுலானா முகம்மது இஸ்மாயீல் ஷஹீதே தெஹ்லவி றக்மத்துல்லாகி அலைகி ஹஜரத்து செய்யிது அக்மது பாத்ஷாவுடன் சேர்ந்து, காபிர்களுடன் யுத்தம்செய்கிறவர்களா யிருந்தார்கள். அவர்கள் செய்யிது அகமது பாத்ஷாவுடைய முதல் மந்திரியாயிருந்தும், சில நேரங்களில் தங்கள் குதிரைக்காகக் காட்டிற்குப் போய் புல் வெட்டிக்கொண்டு வருவார்கள்; தங்கள் கையால் பட்டாளத்தின் ஒட்டகப் பொதிகளைக் கட்டுவார்கள்; விறகு பிளப்பார்கள்; அதிக டம்பமில்லாமலே யிருப்பார்கள்; செய்யிது அகமது பாத்ஷாவும் இப்படியே யிருப்பார்களென்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

இன்னும் மவுலானா குத்துபுத்தீன் சாகிபவர்கள் சொன்னதென்னவென்றால், ஒருதரம் மவுலானா அப்துல்ஹை சாகிப் றக்மத்துல்லாகி அலைகி கப்பலில் ஏறி யிருந்தார்கள். அவர்களின் பீவியும் அதே கப்பலில் பல்லக்கில் உட்கார்ந்திருந்தார்கள். தொழுகையின் நேரம் வந்த உடனே ஹஜரத்து மவுலானா அவர்கள் தொழுதுகொண்டு, தங்கள் பீவியையும் தொழும்படி சொன்னதற்கு, அந்தம்மாள் நானும் பல்லக்கி லிருந்தபடியே இயன்றமட்டும் தொழுதுகொண்டேனென்றார்கள். அதற்கு மவுலானா அவர்கள், அது சரியல்ல பல்லக்கைவிட்டி

றங்கி, நின்று தொழுதுகொள்ளுங்க ளென்றார்கள். பீவியவர்கள், தங்களை நன்றாய் மூடிக்கொண்டு பல்லக்கைவிட்டிறங்கி, கப்பலில் நின்று தொழுதுகொண்டிருக்கும் பொழுது மவுலானா அவர்கள், ஜனங்களுக்கு அதைப்படிப்பிக்கிறதற்காக உயர்ந்தசப்தமாய்' ஜனங்களே' அப்துல்ஷைஹ யுடைய பீவி தொழுகிறதைப் பார்த்துக்கொள்ளுங்களென்று சொன்னார்கள். அதாவது, உங்கள் பீவிமார்களும் யாத்திரையில் இப்படியே தொழுதுகொள்ளவேண்டும்; வெட்கப்பட்டு, அல்லாவுடைய பர்லான கரியங்களில்குறைசெய்யக் கூடாதென்பதே அவர் கருத்து.

இனி ஹிந்து மார்க்கத்தின் வழி காட்டிகளான பெரியோர்களும் அநேகம்பேர் இருந் திருக்கிறார்கள். ஆனால் அவர்களின்நடவடிக்கைகளும் குணங்களும் ஆச்சரிய மானவைகளா யிருக்கின்றன. அவைகள் புத்தியை மயங்கச் செய்கின்றன. அவர்கள் மார்க்கத்தின் பெரியவழி காட்டியானவர் பிரம்மா. அவர்கள் அவரை ஆண்டவனுடைய தூதர் என்றும் ஆண்டவனே யென்று மெண்ணுகிறார்கள். அவர்கள் சொல்லுகிறபடி நான்கு வேதமும் பிரம்மாவுடைய நான்கு வாயினால் வெளிப்பட் டிருக்கின்றன. இன்னும் வேதத்தைத் தெய்வ வாக் கென்று மெண்ணுகிறார்கள். மற்ற சாஸ்திரங்களும் அந்தவேதத்திலிருந்தே வெளிப்பட்டன வென் றெண்ணுகிறார்கள்.

பிரம்மாவானவர் அவர்களின் வழி காட்டிகளுக்கெல்லாம் ஆதியானவர். மகாபாரதம் ஆதிபருவத்தில், பிரம்மவானவர் தேவர்களுக்கெல்லாம் உபாத்தியாயரென்றும், மகாதேவனும் அந்தப் பிரம்மாவினாலேயே உண்டானாரென்றும், வேறொரு இடத்தில் பிரம்மாவுடைய இரண்டு புருவத்திலிருந்து மகாதேவன் உண்டானாரென்றும் எழுதப்பட்டிருக்கின்றன.

ஆகையால், அந்தப் பிரம்மாவைக் குறித்து அவர்களின் அநேக சரித்திர புராணங்களில் எழுதியிருக்கிற தென்னவென்றால்: பிரம்மாவானவர், முன்னே தமது புத்திரியாகிய சரஸ்வதியையும் காமதேவனையும் சிருஷ்டித்தார். காமதேவன் பிரம்மாவை நோக்கி, நான் யாருடைய மனதில் போய் நுழைவேனோ அவர்களின் புத்தி ஒழிந்துபோகும்படி வரங் கொடுக்கவேண்டு மென்று கேட்க, பிரம்மாவானவர், அப்படியே அவனுக்கு வரங்கொடுத்தார். காமதேவன் பிரம்மாவுடைய மனதில் போய் நுழைந்தான். பிரம்மாவுடைய புத்தி ஒழிந்து காமம் மீறினது. அவர் தமதுபுத்திரியாகிய சரஸ்வதியைச் சேர எண்ணங்கொண்டார். இதை யறிந்த சரஸ்வதி வெட்கப்பட்டு ஒரு பக்கம் திரும்பிவிட்டாள். அந்தப் பக்கத்தில் பிரம்மாக்கு ஒருமுக முண்டா

கி சரஸ்வதியை மோகத்துடன் பார்க்க, சரஸ்வதி பின்னால் திரும்பிவிட்டாள், அந்தப் பக்கமும் பிரம்மாவுக்கு ஒருமுகமுண்டாகி அவளை அவ்விதமே பார்க்க, அவள் மறுபக்கம் திரும்பினாள். அங்கேயும் இதேமாதிரி யாயிற்று. இப்படியே பிரம்மாவுக்கு நான்கு முகங்களுண்டாயின. அவருக்கு நான்கு முகங்க ளுண்டானதற்குக் காரண மிதுதானும். ஆகையால் அவருக்குச் சதுர்முகப் பிரம்மாவென்று பேராம். பின்பு சரஸ்வதியானவள், எந்தப்பக்கம் திரும்பினாலும் பிரம்மா தன்னை விடேனென்கிறாரென் றெண்ணி ஓடத் தொடங்கினாள். பிரம்மாவும் விடாமல் பின்னால் ஓடினார். சரஸ்வதிபூமிக்குள் மறைந்தனள். பின்பு வெளிப்பட்டு ஓடும்பொழுது பிரம்மா அவளைத் துரத்தினார். இப்படிச் சரஸ்வதி ஒருவேளை பூமிக்குள் மறைந்தும் ஒருவேளை வெளிப்பட்டும் அவருடைய கைக்குத்தப்பி ஓடிக்கொண்டிருந்தாள். ஆனாலும் அந்தச் சாமர்த்தியவான் அவளை விட்டாரில்லை. இந்தச் சங்கதி தேவர்களுக்குத் தெரியவந்த பொழுது, மகாதேவன் இந்தக் குற்றத்திற்குப் பதிலாக பிரம்மாவுடைய ஒரு சிரசையறுத்துவிட்டார். சிலர் பிரம்மர் இந்தக் குற்றஞ் செய்ததின் நிமித்தமே அவருக்குப் பூஜையில்லாமல் நின்று விட்டதென்றும், மற்றத் தேவர்கள் வணங்கப்படுகிறார்களென்றும் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் பிரம்மாவானவர் மகாதேவனுடைய மனைவியாகிய பார்வதியைச் சினேகித்தபடியால் மகாதேவன் அவருடைய சிரசை அறுத்துவிட்டா ரென்றுஞ் சொல்லுகிறார்கள். இன்னும் குருக்ஷேத்திர பூமியில் தானேஸ்வரத்தின் கீழ்ச் சரஸ்வதியானவள் ஆற்றின் ரூபமாய் ஒரு இடத்தில் பூமிக்குள் மறைந்தும் ஒரு இடத்தில் வெளிப்பட்டும் ஓடுகிறதாயுஞ் சொல்லுகிறார்கள். நாளது வரைக்கும் மேற்கண்ட சரித்திரத்தின் அடையாளம் ஒழியாம லிருக்கின்றது.

இன்னும் மற்ச புராணத்தில் பிரம்மாவானவர் தமது குமாரத்தியைத் தமக்கு மனைவியாக்கித் தேவர்களின் நூறு வருஷம் வரையிலும் வைத்திருந்து பின்பு அவளைத் தமது குமாரன் சுவாயம்புவனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தாரென்று எழுதப்பட் டிருக்கின்றது.

இன்னும் வாமன புராணத்தில் பிரம்மாவானவர், மகாதேவனுடைய லிங்கத்தின் முடிவைக் காணாமலிருக்க, நான் அதைக் கண்டுவந்தேனென்று பொய்சொன்னதின் நிமித்தம், உலகத்தில் அவர்பூஜை நின்றுவிட்டதென்று எழுதப்பட் டிருக்கின்றது.

இன்னும் சில புராணங்களினால் பிரம்மா மதுபானம் செய்தாரென்றும் தெரியவருகின்றது. இன்னும் அவர் எவ்வளவு புத்திசாலியா

யிருந்தாரென்றால், ஒருதரம் சிவனுடைய லிங்கமாகிய கோசத்தை அளவெடுக்க முயன்று அதன் தீர்மானம் அகப்படாததின் நிமித்தம் இதுதான் என்னுடைய ஆண்டவன், இதுதான் என்னை உண்டாக்கினதென்றறிந்து அதற்கு வணங்கத் தலைப்பட்டார்.

ஆ! ஆ! ஆண்டவனை இப்படித்தான் அறியவேண்டும்! மார்க்கத்தின் வழி காட்டுகிறவர் இவ்வளவு புத்திசாலியாய்த்தா னிருக்கவேண்டும்.

பிரம்மாவுடைய சங்கதிகளை இன்னு மதிகமாய் அறியவேண்டுமானால், மகாபாரதம், லிங்கபுராணம், வாயுபுராணம் முதலான சரித்திரங்களை பார்வையிட வேண்டியது. எவ்விதத்திலும் ஹிந்துமத சரித்திர புராணங்களால் பிரம்மாவானவர், குற்றங்குறையில்லாமல் சுத்தமாயிருந்தவ ரல்லவென்றும், தமது குமாரத்தியை அநுபவித்தவரா யிருந்தாரென்றும் தெரிய வருகிறது. பின்பு இப்போ்ப்பட்ட குற்றங்குறையுள்ளவரும் நீதியற்றவருமானவரைப் பின் பற்றுவதில் என்ன உபயோகம்? பொய்யனும் பாவியுமாயிருக்கிற ஒருவன் ஆண்டவனுக்குத் தூதனுகயிருக்கத் தகான். பொய்யனுடைய வார்த்தையை நம்புகிறது புத்தியீனம். மேலும் புத்தியில்லாதவன்கூட பொய்யனுடைய வார்த்தையை நம்பமாட்டான்.

இவ்விடத்தில் சில ஹிந்துக்கள் பிரம்மாவானவர் சாமர்த்தியாய் அதாவது வல்லமையுள்ளவரா யிருந்தாரென்றும் சாமர்த்தியாயிருக்கிறவரைப் பாவம் ஒன்றும் செய்யாதென்றும் சொல்லுகிறார்கள். அதற்கு மறுமொழியாவது, எவன் காமத்துக்குக் கீழ்ப்பட்டுப் புத்தியிழந்தானே, அவன் எப்படி சாமர்த்தியாயிருப்பான்? பிரம்மாவைப் பாவம் ஒன்றும் செய்யாதென்றால் பின்னையேன் மகாதேவன் அவருடைய சிரசை அறுத்துவிட்டார்? உலகத்தில் ஏன் அவருடைய பூஜை நின்றுவிட்டது? அப்படியே சாமர்த்தியா யிருக்கிறவரைப் பாவம் ஒன்றும் செய்யாதென்றே வைத்துக்கொண்டாலும், அப்பொழுதும் ஆண்டவனுடைய தூதராயிருக்கிறவர் பாவங்களைவிட்டுச் சுத்தமாயிருக்க வேண்டும். ஏனென்றால், பாவஞ் செய்கிறவனின் உபதேசம் ஜனங்களுக்குப் பிரயோசனங் கொடுக்காது. ஒருவன் தான் துர்நடத்தையிலிருந்துகொண்டு, மற்றவர்களைத் துர்நடத்தை செய்யவேண்டாமென்று சொன்னால், ஜனங்கள் அவனைப் பரிகாசம் பண்ணுவதுந் தவிர, இது கெட்டவேலையா யிருந்தால் அவன் ஏன் செய்கிறானென்றும் சொல்லுவார்கள். உதாரணமாக ஹல்வா தின்றுகொண்டிருக்கிற ஒருவன், ஜனங்களைப்பார்த்து, இதில் பாஷாணம் கலந்திருக்கிறது, இதை

நீங்கள் தின்னவேண்டாமென்று சொன்னால், ஜனங்கள் அவன் சொல்லுவதை நம்பமாட்டார்கள். அதில் பாஷாணம் கலந்திருந்தால் அவன் ஏன் தின்கிறானென்றே சொல்லுவார்கள்.

இன்னும் சில ஹிந்துக்கள் பரமேசுவரனுடைய கட்டளையில் பிரம்மா இப்படிச் செய்வாரென்றிருந்தபடியாலும், பரமேசுவரனுடைய அந்தக் கட்டளையைப் பிரம்மாவினாலும் தட்ட முடியாதென்று ஜனங்கள் உணர்ந்து கொள்ளும்படிக்கும் பிரம்மாவினால் இச்செய்கை நடந்து விட்டதென்றும் சொல்லுகிறார்கள். அதற்கு மறுமொழியாவது: ஆண்டவனுடைய தூதரா யிருக்கிறவர் இப்படி அபகீர்த்தி யடைந்து அதனால் மார்க்கத்தின் சகல காரியங்களும் கெட்டுப் போகும்படியான பாவஞ் செய்வதில்தானா பரமேசுவரனுடைய கட்டளையைத் தட்ட முடியாதென்று அறியவேண்டும்? வேறே யாதொரு துன்பத்தைப் பிரம்மாவுக்குக் கட்டளையிட்டுப் பிரம்மா அதை அனுபவித்தால் அதனாலும் ஆண்டவனுடைய கட்டளையைப் பிரம்மாவினாலும் தட்ட முடியாதென்று ஜனங்கள் அறிந்து கொள்ளலாமே. ஆண்டவனுடைய கட்டளையைத் தட்டமுடியா தென்பது சகல புத்திமான்களும் ஒத்துக் கொள்ளுகிற வார்த்தைதான். ஆனால், ஆண்டவனுடைய தூதராயிருக்கிறவர் பாவியாயும் பேராசை யுள்ளவருமா யிருக்கலாமென்பது நேரான புத்திக்கு மாறாகயிருக்கின்றது.

ஒருநாள் ஒரு பண்டிதர் இதற்குப் பிரதியுத்தரமாக, ஜனங்களின் வெளிப்பார்வையில் பிரம்மா இப்படிச் செய்தாரென்று தோன்றினதே யொழிய, உண்மையில் பிரம்மா அப்படி நடக்கவில்லை என்று சொன்னார். அதற்கு மறுமொழியாவது, அப்படியானால் பாவமும் விபசாரமும் செய்கிற ஒவ்வொருவரும் நான் பாவம் செய்யவில்லை, உங்கள் பார்வையில் அப்படித் தோன்றின தென்று சொல்லலாமே. உண்மையில் பிரம்மா பாவஞ் செய்யவில்லை யென்றே வைத்துக்கொள்வோம். பின்பு மகாதேவன் அவர் தலையை ஏன் அறுத்தார்? மகாதேவனும் அவர் தலையை அறுக்கவில்லை, இதுவும் பார்வையின் தப்புதான் என்பீர்களோ? அப்படியானால்இதுஉங்கள்புராணங்களின் தப்பு. அதில் முழுமையும் பொய்யும் தப்புமே நிறைந்திருக்கின்றன. அதனால் உங்கள் மார்க்கம் தப்பென் றாயிற்று. தப்பு மார்க்கத்தில் மோக்ஷ முண்டென்று நம்புகிறது பெருந்தப்பு.

### ஹிக்காயத்து.

நான் இஸ்லாம் மார்க்கத்தை விசுவாசித்து அதை வெளியிடாமல் மறைத்துக்கொண்டிருந்த நாட்களில் ஒருநாள் தீவான்சந்து என்

னும் பிராமணரிடத்தில் ஐயரே! ஒருவன், ஒரு அரசனைக் காண வேண்டுமானால் யாதொரு மந்திரி அல்லது பிரபுவின் மூலமாய்க் காணுகிறதா? அல்லது இன்ன இன்ன அற்பர்களால் காணுகிறதா? என்று கேட்டேன். அதற்கு அவர், மஹாராஜா! ராஜ சமுகத்தில் இப்பேர்ப்பட்ட அற்பர்களை யார் சட்டை பண்ணுகிறாரென்றார். அதற்கு நான், இந்த ராஜாக்களின் சமுகத்தில் அற்பர்களின் மூலமாய்ப் போக முடியாதென்றால்' அந்த ராஜனுடைய அதாவது ஆண்டவனுடைய சமுகத்திலும் அற்பர்களின் மூலமாய் ஒருபோதும் போக முடியாதென்றேன், அதற்கு அவர், ஆம், மெய்தானென்றார்; பின்பு நான், நீங்கள் சொல்லுகிறபடி தமது குமாரத்தியையனுபவிக்க எண்ணங்கொண்ட அற்பராகிய பிரம்மாவின் மூலமாய் எப்படி ஆண்டவனுடைய சமுகம் சேருவீர்களென்றேன். அதற்கு அவர், மகாராஜா! நான் உமக்குச் சொல்வதைக் கேளும். உமது மனதிலிருக்கிறதை மனதில்தானே வையும், இப்படி வெளிப்படுத்த வேண்டாமென்று சொன்னார்.

இனிப் பிரம்மாவுக்குத் தாழான வழிகாட்டிகளாகிய பெரியோர்களுமிருந்திருக்கிறார்கள். அவர்களுடைய நடவடிக்கைகளும் குணங்களு மப்படியேதா னிருக்கின்றன. ஒருவர் தன்மகளை யனுபவிக்கிறவரா யிருக்கிறார், ஒருவர் அன்னிய ஸ்திரீயை விபசாரஞ் செய்தவரா யிருக்கிறார், ஒருவர் இப்படியும் அப்படியும். ஒருவர் எல்லாத் துர்க்குணங்களுமுள்ளவரா யிருக்கிறார். உதாரணமாக: மகாபாரதம் முதலான நூல்களில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி இரவும் பகலும் கோபிகா ஸ்திரீகளின் கவலையாகவே யிருந்தாரென்றும், பரிகாசம் பண்ணுகிறவரா யிருந்தாரென்றும், புள்ளாங்குழலூதி அதை அவர்கள் கேட்கச் செய்வாரென்றும், ஒருதரம் சிலஸ்திரீகள் குளித்துக்கொண் டிருக்கும்பொழுது, அவர்களின் ஆடைகளை எடுத்துப் புன்னை மரத்தில் ஏறிக்கொண்டு அந்த ஸ்திரீகளை நிர்வாணிகளாய்ப் பார்த்தாரென்றும், அன்னியன் மனைவியாகிய ராதாவென்னும் ஒருத்தியைச்சிநேகித்துஅவளின்புருஷன் ஜீவித்திருக்கும்பொழுது அவளைத் தமக்கு மனைவியாக்கிக் கொண்டாரென்றும், எழுதப்பட்டிருக்கின்றன. அவர்செய்த இத் தகாக்கிரியைகளை ஹிந்துக்கள் தங்கள் பஜனைகளிலும் கீர்த்தனைகளிலும் பாடுகிறதுந் தவிர, சில வேளையில் கிருஷ்ணனைப்போலும் அவரின் மனைவிகளைப்போலும் வேஷம்போட்டுக் கூத்தாடவும் செய்கிறார்கள். அதற்கு ராஜலீலை யென்கிறார்கள்.

இன்னும் மகாபாரதத்தில் வசு என்னும் ராஜனுடைய விந்துவாற் பிறந்த மச்சகந்தியைப் பராசரரிஷி (விபசாரமாய்ச்) சேர்ந்து அதனால் வியாசர் பிறந்தாரென்று எழுதியிருக்கின்றது. இந்த வியாசர்

தான் அனேக புராணங்களையும், ஹிந்துக்கள் எல்லா சாஸ்திரங்களிலும் சிறந்ததாயெண்ணுகிற வேதாந்த சாஸ்திரத்தையும் உண்டுபண்ணினூர். இன்னும் வேதத்தை நான்கு பாகங்களாய் வகுத்தவர் வியாசர் தானென்றும்; அதனுல் அவருக்கு வேதவியாசர் என்று பேராயிற்றென்றும் சொல்லுகிறுர்கள். இவரும் அவர்கள் மார்க்கத்துக்குப் பெரிய ஒருவழி காட்டிதான். இவரோ விசித்திர வீரிய ராஜனுடைய மனைவிகளாகிய விதவைகளுடன் விபசாரஞ்செய்தவர். (25 முதல் 28-வது பக்கம்வரையிற் பார்க்கவும்.)

இன்னும் விசுவாமித்திரரிஷி அனந்தமாயிர வருஷம் தவஞ்செய்து ஒருநாள் ஊர்வசியின்பேரில் மோகித்து அவளால் கெட்டுத் தம்முடைய தவமழிந்து அந்தப் பாவத்தின் நிமித்தம் குஷ்டரோகங்கொண்டு கடைசியில் நாயாகி, ஊர்வசியின் பின்னுல் தொடர்ந்து சொர்க்கம் போனுரென்று எழுதப்பட்டிருக்கின்றது.

எப்படியும் ஹிந்துமார்க்க வழிகாட்டிகளாகிய பெரியோர்களின் நடவடிக்கைகளும் குணங்களும் இப்படியாயிருந்தன. அவர்களுடைய சாஸ்திர புராணங்களாலேயே வெளியாகின்றது. அதிகமாய்ப் பார்க்கவேண்டுமானுல் மகாபாரதம், பதுமபுராணம் முதலான சரித்திரங்களைப் பார்வையிடவேண்டியது.

ஆகையால் இப்பொழுது ஹிந்துக்கள் அந்த வழிகாட்டிகளைப் பின் பற்றுவதை விட்டுவிட வேண்டுவது கடமையா யிருக்கின்றது. ஏனென்றுல், இப்பேர்ப்பட்டவர்கள் ஆண்டவனுக்குத் தூதராயிருக்கவும், வழிகாட்டிகளா யிருக்கவும் எவ்வளவும் தகாது. ஹஜரத்து முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் இக்காலத்துக்கு நபியாயிருக்கிறுர்கள். அவர்களுடையவும், அவர்களின் நாயிபுகளாகிய பெரியோர்களுடையவும் குணங்களையும் நடவடிக்கைகளையும் நோட்டமிடுங்கள் உங்கள் பெரியோர்களாகிய பிரம்மா முதலானவர்களின் குணங்களையும் நடவடிக்கைகளையும் நோட்டமிடுங்கள். பின்பு யாரைப் பின்பற்றுவதில் ஆண்டவனிடம் சேரலாமென்ற நம்பிக்கை யுண்டாகின்றது; என்பதை நியாயமாய் யோசித்து நீங்களே தீர்மானியுங்கள். நாம் ஹிந்துக்களுடைய பிரயோசனத்துக்காக இந்த வார்த்தைசொன்னேம். ஆண்டவன் அவர்களுக்கு நேர்வழியைக் கொடுக்கவேண்டியது.

## 5—வது பிரிவு கியாமநாள் அதாவது நியாயத் தீர்ப்புநாளைக் குறித்துப் பேசுவது.

கீழே எழுதும் சங்கதிகளை நாங்கள் மெய்யென்று உறுதியாய் விசுவாசிக்கிறேம். அதாவது; இவ்வுலகத்தின் சகல இயல்பும் கெட்

டுப் பார்வைக்குத் தோன்றுகின்றனவெல்லாம் ஒன்றுமில்லாமல் அழிந்துபோகும். பின்பு ஆண்டவன் எல்லாவற்றையும் உயிராக்குவான். ஒவ்வொருவருடைய நன்மை தீமையான காரியங்களைக் குறித்துக் கேள்வி கணக்குக்கேட்டுத் தான் நியாயாதிபதியாயிருந்து நீதிசெலுத்துவான். அக்கிரமம் செய்தவர்களிடத்திலிருந்து அக்கிரமம் செய்யப்பட்டவர்களின் பாத்தியத்தை வாங்கிக் கொடுக்கப்படும். நியாயத்தீர்ப்பு முடிந்தவுடனே நபிமார்களைப் பின்பற்றிப் பாவங்களைவிட்டு நீங்கினவர்களும், உலகத்தில் பாவத்துக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டவர்களுமாகிய நல்லவர்கள் சொர்க்கம் புகுவார்கள்; பின்பு ஒருபோதும் அதைவிட்டு நீங்கார்கள்; மரணமாகவு மாட்டார்கள்; நபிமார்களைப் பின்பற்றாதவர்களாகிய பொல்லாதவர்கள் நரகம் புகுவார்கள்; ஒருபோதும் அதைவிட்டு நீங்கார்கள்; சாகவுமாட்டார்கள். வேதனை குறையவுமாட்டாது. நபிமார்களுடைய உத்திரவை அங்கீகரித்தவர்கள் சரீர இச்சையாகிய துராசைக்கு வழிப்பட்டுப் பாவஞ்செய்து உலகத்திலேயே மன்னிப்புக்கேட்காமல் இறந்துபோனால், தங்கள் பாவத்துக்குத் தகுந்தபடி நரகத்தில் தண்டனையடைந்து பின்பு சொர்க்கம் புகுவார்கள். சிலரை ஆண்டவன் தண்டிக்காமலே மன்னித்து விடுவான். ஆனால் யாதொருவன் அன்னியர்களுக்கு ஜவாபு சொல்லவேண்டிய குற்றங்களாகிய களவு, வழிப்பறி, கொலை, திட்டுதல், புறம்பேசல், மானக்குறைவு செய்தல், லஞ்சம் வாங்குதல் முதலான பாவங்களைச் செய்திருந்தால் அவன் யாருக்குக் குற்றஞ் செய்தானோ அவர்கள் சம்மதிக்கிறதன்றி அந்தக்குற்றம் மன்னிக்கப்படமாட்டாது. இன்னும் அந்தநாளில் ஆண்டவனுடைய உத்திரவினால் நல்ல ஜனங்கள் முஸ்லிம்களில் பாவிகளாயிருக்கிறவர்களுக்கு மன்னிக்கும்படி மன்றாடுவார்கள். ஆண்டவன் அதை அங்கீகரிப்பான். குப்ரு என்னும் பாவத்தைத் தவிர மற்றப்பாவங்களில் ஆண்டவன் நாடினதை மன்னிப்பான்.

இன்னும் சொர்க்கத்தில் அதிக சவுக்கியத்தைக் கொடுக்கும் வஸ்துக்களும், உணவு குடிப்புக்குள்ள நல்ல நல்ல பதார்த்தங்களும், வினோதமான உடுப்புகளும், அழகான மாளிகைகளும் உண்டு. அதில் விசுவாசிகளான சிநேகிதர்களும், சொந்தமான பந்துக்களும், புருஷன் மனைவி எல்லாரும் ஒருவரை ஒருவர் சந்திப்பார்கள். எக்காலமும் ஜீவித்து இதே ஆனந்தத்திலிருப்பார்கள்.

இன்னும் நரகத்தில் துன்பமான வேதனைகளும், நெருப்பும், பாம்புகளும், தேள்களும், உருக்கப்பட்ட செம்புக்குச் சமானமான கொதிநீரும், முட்களும், துர்நாற்றமும், நெருப்புக்காரை, நெருப்புச்

சங்கிலி, மலக்குகளுடைய அடியிடி அதட்டுதல் முதலானவைகளுமுண்டு. ஆண்டவன் அதைவிட்டுக் காப்பானாகவும். கியாமத்து, சுவர்க்கம், நரகம் இவைகளுடைய சங்கதிகளைப் பூரணமாய் அறிய வேண்டுமானால் பெரிய கிதாபுகளைப் பார்வையிட வேண்டியது.

ஹிந்துக்களின் மார்க்கத்தில் நியாயத் தீர்ப்பைக்குறித்து எழுதியிருக்கிறதென்னவென்றால்: எப்பொழுது பாவஞ்செய்த ஒருவன் சாகிறானோ, அப்பொழுது யமதருமராஜனுடைய தூதர்கள் அந்தப் பாவியினுடைய ஆத்துமாவை அவரிடம் கொண்டு போகிறார்கள். யமதருமராஜன் அவனுடைய செய்கைகளைக் குறித்துக் கேட்கிறார். பின்பு அவன் எந்தத் தண்டனைக்கு ஆளாவனோ, அதற்குத் தகுந்த ஒரு சரீரம் அவனுக்குக் கிடைக்கிறது. அவன் அந்தச் சரீரத்தில் தன்னுடைய குற்றத்தின் தண்டனையை அனுபவித்துப் பின்பு அதிலிருந்து வேறொரு சரீரத்தில் வருகிறான். இப்படியே ஆயிரக் கணக்கான ஜன்மமெடுக்கிறான். செய்கைக்குத் தகுந்தபடி ஈ, கொசு, பன்றி, நாய் முதலான சகலவித ஜீவராசியாக ஜன்மமெடுக்கிறான், சிலவேளை மரமாகவும் ஆய்விடுகிறான். சிலர் கல்லாகவும் ஆய்விடுகிறானென்கிறார்கள், இப்படி அநேக ஜன்மங்களெடுத்துத் தன் குற்றங்களுக்குத் தகுந்த தண்டனை யடைந்து எப்பொழுது பாவங்களை விட்டுச் சுத்தமாகிறானோ, அப்பொழுது அவனுக்கு முத்தியுண்டாகின்றது. முத்தியென்பது தன் நினைவற்றுப் பிரம்மத்தில் கலந்து விடுகின்றதாம். இன்னும் சிலவேளை பாவங்களின் நிமித்தம் நரகம் போய் அவ்விடத்திலிருந்து மறுமடி ஜன்மமெடுத்து வருகிறானாம். கர்மவியாகம் என்னும் சாஸ்திரத்தில் எழுதியிருக்கிறதென்னவென்றால், "யாதொரு மிலேச்சன் * தன் ஜீவ காலத்தில் நல்ல காரியங்களைச் செய்தால் அவன் செத்த பின் சூத்திரனாகிறான். யாதொரு சூத்திரன் தன் மார்க்கப்படி நல்ல காரியங்களைச் செய்தால் அவன் செத்தபின் வைசியனாகிறான். யாதொரு வைசியன் தன்மார்க்கத்தில் சரியா யிருந்தால் அவன் செத்தபின் க்ஷத்திரியனாகிறான். க்ஷத்திரியன் நல்ல காரியங்களைச் செய்து செத்தால் பிராமண ஜன்மமெடுக்கிறான். பிராமணன் நல்ல காரியங்களைச் செய்து செத்தால் அவன் மோக்ஷத்தை யடைகிறான்" என்பதே. இன்னும் எப்பொழுது நற்கிரியைகளைச் செய்த ஒருவன் சாகிறானோ, அப்பொழுது அவன் எந்தத் தெய்வத்தை வணங்கிக்கொண்டிருந்தானோ, அந்தத் தெய்வத்தினிடமே போகிறானெ

* பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என ஹிந்துக்கள் நான்கு வகுப்பினராயிருக்கிறார்கள், அவர்களல்லாதவர்களை மிலேச்சரென்று ஹிந்துகள் சொல்லுகிறார்கள்,

ன்றும் சொல்லுகிறார்கள். இன்னும் ஒருவன் சொர்க்கம்புகுந்தால் அவனுக்கு நியமிக்கப்பட்ட காலம் வரையில் அவ்விடத்திலிருந்து, பின்பு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு மறுபடி ஜன்ம மெடுக்கிறானென்றும் சொல்லுகிறார்கள்.

இன்னும் அவர்களுடைய சொற்படி சொர்க்கத்தில் யாதொருவன்பாவஞ் செய்தால் அவனுக்கும் தண்டனை கிடைக்கிறது. எப்படியென்றால், மகாபாரதம் ஆதிபருவத்தில்,சொர்க்கத்தில் யயாதிமகாராஜன் "எனக்குச் சமானமானவர்கள் ஒருவரு மில்லையென்று நான் எண்ணுகிறேனென்று" சொன்னான் என்றும், அப்படிச்சொன்ன குற்றத்திநிமித்தம் இந்திரன் அவனைச் சொர்க்கத்திலிருந்து மண்ணுலகத்தில் தள்ளிவிட்டானென்றும், பின்பு அவன் அந்தக்குற்றத்தை விட்டுச் சுத்தமாகிச் சொர்க்கம் போனானென்றும் எழுதப்பட்டிருக்கின்றன.

இன்னும் பிள்ளைகள் செய்த குற்றத்துக்காகத் தகப்பன் பாட்டன் முதலானவர்களும் நரகவேதனை அனுபவிக்கிறார்க ளென்பது ஹிந்துக்களின் சித்தாந்தமா யிருக்கின்றது. உதாரணமாக, மகாபாரதம் ஆதிபருவத்தில் விவாகமில்லாத பிரமசாரியான ஒரு பெரிய தபோதனர் தமது முன்னோர்களைக் கட்டித் தொங்கவிட்டிருக்கிற ஒரு கிணற்றினிடம்போய், அதில் தொங்குகிறவர்களை நீங்கள் யாரென்றுகேட்க, அதற்கவர்கள், "நாங்கள் பெரிய தபசிகளாகவும் யாகம் செய்கிறவர்களாகவு மிருந்தோம். எங்கள் குமாரன் விவாகம் செய்யாமலிருந்த பாவத்தின் நிமித்தம் நாங்கள் இறந்தபின் நரகத்தில் தள்ளப்பட்டோம்" என்று சொல்ல, இதைக்கேட்ட அந்தப் பிரம்மசாரியானவர் வாசுகிநாகனுடைய சகோதரியை விவாகம்செய்து கொண்டாரென்று எழுதப்பட்டிருக்கின்றது.

இனி உலகத்தின் முடிவைப்பற்றி ஹிந்துமத சாஸ்திரங்களின் வாக்கியங்கள் ஒன்றுக்கொன்று பேதப்பட் டிருக்கின்றன.

**நியாய சாஸ்திரம்.** சொல்லுகிறதாவது: உலக உற்பத்திக்குத் துவக்கம் ஒன்றுமில்லை, அதற்கு முடிவு உண்டு. உலகத்தின் அழிவு இருவகைப்படும். அதில் ஒருவகை:—பிரம்மாவுக்கு மோக்ஷமுண்டாகி, தர்மம் அதர்மங்களைத் தவிர மற்றதெல்லாம் அழிந்து, உலகம் எவ்வளவு கால மிருந்ததோ அவ்வளவு காலம் ஒன்று மில்லாமலிருந்து, பின்பு அந்த அழிந்திருந்த படைப்புகளிலிருந்தே யாதொருவன் பிரம்மாவாகி, முந்தி அழிந்துபோன அந்தப் படைப்புகளையே முன்னிருந்ததுபோல் புதிதாய்ப்படைக்கிறான். இவ்விதமாய் உலகம்

அழிவதற்குக் **கண்டப்பிரளயம்** என்று பெயர். இந்தக் கண்டப்பிரளயம் அநேகந்தடவை உண்டாகும். மற்றொருவகை:—எல்லாப்படைப்புகளுக்கும் மோக்ஷமுண்டாகி, சர்வலோகமும் பிரம்மாவும், கர்மம், தர்மம், அதர்மம் முதலான சர்வமும் ஒன்றுமில்லாமல் அழிந்துபோகும். நான்கு பூதங்களில் முந்தி மண்ணும், பின்பு நெருப்பும், பின்பு காற்றும், பின்பு தண்ணீரும் அழிந்துபோகும். இவ்விதமாய் அழிவதற்கு **மஹாப்பிரளயம்** என்று பெயர். இது ஒரேதடவை யுண்டாகும் என்பதே.

**வேதாந்த சாஸ்திரம்** சொல்லுகிறதாவது: உலகத்தின் அழிவு மூன்று வகைப்படும். அதில் ஒருவகை:—எப்பொழுது பிரம்மாவின் வயதில் ஒருநாள் கழிந்து போகின்றதோ, அப்பொழுது அநேகபடைப்புகள் ஒழிந்து இரவு முழுமையும் ஒன்றுமில்லாமலிருந்து மறுநாளானவுடனே மீண்டும் உண்டாய்விடுகின்றன, இவ்வகையான அழிவு அடிக்கடி உண்டாகும். இதற்கு **வைநந்தன** வென்று பெயர். இரண்டாவது வகை:—எல்லாப் படைப்புகளும் அஞ்ஞானத்துக்குள் ஐக்கியமாகி, அஞ்ஞானத்தைத் தவிர மற்றதெல்லாம் அழிந்துபோவது. இவ்வகையான அழிவு ஒரேதடவை யுண்டாகும். இதற்கு **பிராகிர்தம்** என்று பெயர். மூன்றாவது வகை:—அஞ்ஞானமு மொழிந்து ஞானப்பிரகாச மாகிறது. இவ்வகையான அழிவுக்கு **ஆத்தஷ்கம்** என்று பெயர். இதுவும் ஒரே தடவைதான் உண்டாகும். பஞ்சபூதங்கள் அழிகிறதெப்படி யென்றால், மண் தண்ணீரில் ஐக்கியமாகும், தண்ணீர் நெருப்பில் ஐக்கியமாகும், நெருப்பு காற்றில் ஐக்கியமாகும், காற்று ஆகாயத்தில் ஐக்கியமாகும், ஆகாயம் மாயையில் ஐக்கியமாகும் என்பதே.

**சாங்கிய சாஸ்திரம்** சொல்லுகிற தென்னவென்றால்: உலகம் அழிகிறநேரம் வந்துவிட்டால் ஐந்து தத்துவங்களும் ஐந்து தன்மாத்திரைகளில் மறைந்துவிடும்; ஆகாயம் சப்தத்திலும், காற்று ஸ்பரிசத்திலும், நெருப்பு ரூபத்திலும், தண்ணீர் ரசத்திலும், மண் நாற்றத்திலும் ஐக்கியமாய் விடுகின்றது. இந்த ஐந்து தன்மாத்திரைகளும் அகங்காரத்தில் ஐக்கியப்பட்டு, அகங்காரம் மஹதத்துவத்தில் ஐக்கியமாகி, மஹதத்துவம் பிரகிருதியில் கலந்துவிடுகின்றது என்பதே.

### ஓர் விண்ணப்பம்.

மேற்சொன்ன வார்த்தைகளுக்கு வியாக்கியானஞ் செய்கிறதாயிருந்தால், அதற்கே தனியாய் ஒரு கல்வி கற்கவேண்டியதாயிருக்கின்றபடியால்; அதை அறிவது கஷ்டமாயிருக்குமென்று நான் இவ்விடத்தில்

அந்த வார்த்தைகளுக்கு அதிக விபரம் எழுதாமல் பேர்களைமட்டும் எழுதிவிட்டேன். ஏழாவதுபிரிவில் கொஞ்சம் விபரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது பார்த்துக் கொள்ளுங்கள்.

ஆகக்கூடி ஹிந்துக்கள் சொல்லுகிறபடி எல்லாச்சாஸ்திரங்களும் சத்தியமானவைகளாயிருக்க, பின்பு அந்தச் சாஸ்திரங்களில் இவ்வளவு பேதங்க ளிருக்கின்றன. ஒன்றின்வாக்கியம் மற்றொன்றை ரத்து செய்துகொண்டிருக்கின்றது. இவ்வளவு பேதங்க ளிருப்பதுடன் எல்லாம் சத்தியமானவைகளென் றெண்ணுகிறது அவிவேகமா யிருக்கின்றது. ஏனென்றால், ஒருவன் இன்று திங்கள் கிழமை என்றும், வேறொருவன் வியாழக்கிழமை யென்றும், மற்றொருவன் வெள்ளிக்கிழமை யென்றும் சொன்னால், மூவரும் உண்மை சொல்லுகிறார்களென்பது ஒருபோதும் கூடாது. புத்திசாலிகள் இந்த மூன்றும் உண்மையென்பது புத்தியில் அமையவில்லையென்றே சொல்லுவார்கள். இப்பொழுது நான் ஹிந்துக்களிடத்தில் கேழ்க்கிறதாவது. உலகத்தின் முடிவைக் குறித்து இந்த மூன்று சாஸ்திரங்களும் ஒன்றுக்கொன்று ஒவ்வாத சங்கதிகளைச்சொல்லு கின்றனவே, நாங்கள் எதை உண்மை யென் றெண்ணுகிறது, எதைப் பொய்யென் றெண்ணுகிறதென்பதே.

ஒருவேளை யிவ்விடத்தில் ஹிந்துக்களுக்கு, இஸ்லாம் மார்க்கத்தின் சில சங்கதிகளிலும் பேதமிருக்கின்றதேயென்று சந்தேகம் வரலாம். அதற்கு மறுமொழியாவது: எங்கள் மார்க்கத்தின் சில விஷயங்களில் பேத மிருக்கிறதெல்லாம் புருகு என்னும் நடவடிக்கைகளி லிருக்கின்றதே யொழிய, உசூல் என்னும் விசுவாசத்திலும் மூலாதாரமான சங்கதிகளிலும் ஒரு பேதமு மில்லை. உங்கள் மார்க்கத்திலோ மூலாதாரங்களிலேயே பேத மிருக்கின்றது. எப்படி யென்றால், மேற்சொன்ன சாஸ்திரங்களில் உலகத்தின் முடிவைக்குறித்துச் சொல்லியிருக்கிற பேதம் இவ்விடத்தில் வெளியாய் விட்டது. இன்னும் ஆண்டவனை அறியும் விஷயத்தில் உங்கள் சாஸ்திரங்களிலுள்ள பேதங்கள் இந்த அத்தியாயத்தின் 1-வது பிரிவில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் பேதமான சங்கதிகளை இந்த அத்தியாயத்தின் 7-வது பிரிவில் சொல்லப்படும்.

இன்னும் உலக உற்பத்தியின் விஷயத்தில் உங்கள் வேதமும் சாஸ்திரங்களும் கூறுகின்ற பேதங்களை நான் எவ்வளவென்றுதான் எழுதுவேன், உங்கள் புராணங்களாலேயே தெரிந்துகொள்ளுங்கள்.

எங்கள் மார்க்கத்தின் பெரிய மூலாதாரங்களான சங்கதிகள் ஐந்துண்டு. 1-வது: ஆண்டவன் வணக்கத்துக் குரியவன், எல்லாவற்

றையும் படைக்கிறவன், எல்லாவற்றின் சுதந்திரத்தை யுடையவன்,
கட்டாயமாய் வேண்டியவன், நல்ல இலக்ஷணங்களை யுடையவன், அ
வலக்ஷணங்களையும் குற்றங்குறைகளையும் விட்டு சுத்தமானவன், தனி
த்தவன், இணையில்லாதவன், சக்தியுள்ளவன், ஒன்றும் தேவை யில்
லாதவனென் றெண்ணுகிறது; 2-வது: நபிமார்கள் உண்மை யானவ
ர்களென் றெண்ணுகிறதும்; 3-வது: நபிமார்கள்பேரில் ஆண்டவன்
அனுப்பின வேதங்கள் உண்மையானவையென் றெண்ணுகிறது; 4-
வது: கியாமத்தென்னும் நியாயத்தீர்ப்பு நாளில் அவரவர்களின் செய்
கைகளைக் குறித்துக் கேள்வி கணக்குக் கேட்கிறது மெய் யென் றெ
ண்ணுகிறது; 5-வது: மலக்கென்னும் வானவர்க ளிருக்கிறது உண்
மையென் றெண்ணுகிறதுமாகிய இவைகளே.

இந்த ஐந்து மூலாதாரங்களிலும் உதயகிரியிலிருந்து அஸ்தகிரி
வரையிலும் எத்தனை முஸ்லிமான கூட்டங்களிருக்கிறார்களோ அவர்
களில் ஒரு கூட்டத்துக்காவது பேத மில்லை. மார்க்கத்தின் புரூகு
என்னும் நடவடிக்கைகளில் பேத மிருக்கிறதினால் அதனால் மார்க்கத்
துக்குயாதொரு பழுதில்லை. ஏனென்றால், மனிதன் இயல்பாகவே மற
தி யுள்ளவனா யிருக்கிறான். ஒருவேளை யாதொரு * ராவியானவருக்
கு மறதி சம்பவித் திருக்கலாம். அல்லது குர்ஆன்ஷரீப் அல்லது ந
பியின் வாக்கியமாகிய ஹதீதின் அர்த்த மறிவதில் யாதொரு இடத்தி
ல் யாதொருவருக்குத் தவறுத லுண்டாகி யிருக்கலாம். அல்லது, இ
ன்னும் யாதொரு விதத்தால் மார்க்கத்தின் புரூகு என்னும் உட்பிரி
வாகிய நடவடிக்கைகளில் யாதொருபேத முண்டாய்விட்டால், அதனா
ல் யாதொரு பாதகமில்லை. மார்க்கத்தின் உசூல் என்னும் விசுவாசத்தி
ல் பேத மிருக்கிறதுதான் மார்க்கத்தைப் பொய்யாக்கும்.

இதைத்தவிர எங்கள் இஸ்லாம் மார்க்கத்தில் ஐந்துகாரியங்கள்
கடமையா யிருக்கின்றன. 1-வது: لا اله الا الله محمد رسول الله லாஇ
லாஹ இல்லல்லாகு முகம்மதுர் றசூலுல்லாஹி என்னு கலிமாஓதி
அதின்படி விசுவாசிக்கிறது, 2-வது: ஐந்துநேரம் தொழுகிறது, 3-வ
து: ஸக்காத்தென்னும் தானங் கொடுக்கிறது, 4-வது: றம்லான் மாத
த்தில் நோன்பு வைக்கிறது' 5-வது: சக்தியிருந்தால் ஒருதரம் மக்கா
விலுள்ள காபத்துல்லாவென்னும் ஆலயத்துக்குப் போய் ஹஜ்ஜென்
னும் வணக்கத்தை நிறைவேற்றுகிறது.

---

* தாமே நேரில்பார்த்தும் கேட்டதுமான அல்லது பிறர்சொல்
லக்கேட்ட ஒரு விஷயத்தை மற்றவருக்கு அறிவிப்பவர் "ராவி" என்
னப் படுவார்.

இந்த ஐந்துகாரியங்களும் கடமையென்பதின்பேரில் இஸ்லாமுடையஎல்லாக் கூட்டங்களும் ஒரேவாக்கா யிருக்கிறார்கள். உங்கள் கூட்ட மப்படி யல்ல. உங்களில் கர்மகாண்டத்தார் ஸந்தியாவந்தனமென்னும் தினகால பூஜைமுதலிய வணக்கங்களைச்செய்வது கடமையென் றெண்ணுகிறார்கள். ஞானகாண்டத்தார் அவைகளெல்லாம் அவசிய மில்லையென்றும், பூஜை தவம் வணக்கம்முதலான வெளிப்படையான எல்லாக்காரியங்களும் பொம்மைவிளையாட் டென்றும் சொல்லுகிறார்கள்.

ஒருவேளை நீங்கள், சில இஸ்லாமானபக்கீர்களும் தொழுகை நோன்பு முதலிய வணக்கங்களைக் கடமையென் றெண்ணாமல் அவைகள் துவக்கத்தில்தான் கடமையென்றும், மனிதன் பூரண ஞானியாய் விட்டால் அவனுக்கு அவைகளெல்லாம் அவசியமில்லையென்றுஞ் சொல்லுகிறார்களே என்பீர்கள்; அதற்கு மறுமொழியாவது: அப்படிச் சொல்லுகிறவர்கள் முஸ்லிம்களல்ல; அவர்கள் எங்கள் மார்க்கத்துக்குப் புறம்பான காபிர்களென்றும்அல்லா ரசூலுக்கு விரோதிகளென்றும் எண்ணப்படுவோர்கள். இவர்களோ பேருக்கு மாத்திரந்தான் முஸ்லிம்களா யிருக்கிறார்கள். ஆகையால் எவ்விதத்திலும் எங்கள் மார்க்கத்தின் மூலாதாரங்களிலும் கடமையான காரியங்களிலும் எங்களில் ஒருவருக்கும் பேதமில்லை.

## 6-வது பிரிவு வணக்கத்துக் குரியவனைக் குறித்துப் பேசுவது.

யாரை வணங்கத்தகுமோ அவனே வணக்கத்துக் குரியவன். வணக்கமென்பதென்ன? கலப்பறுதலாய்க் கனம் பண்ணுகிறதும், தன்னை அந்த வணக்கத்துக் குரியவன் முன்னால் அதிகத்தாழ்மையாக்கி சிஜ்தா வென்னும் சாஷ்டாங்க முதலான வந்தனங்களைச் செய்கிறதும், அவனைத் தன் எஜமானென்றும் தன் கோரிக்கைகளை நிறைவேற்றுகிறவ னென்றும் எண்ணித் தன்னுடைய தீன் துன்யாவென்னும் இகம் பரமென்னும் இருலோகத்திலும் தனக்கு வேண்டியவைகளை அவனிடத்திலேயே கேட்கிறதும், அவனுக்கே நேர்ச்சை யென்னும் பிரார்த்தனை செய்கிறதும், அவனுக்காகவே நோன்பு வைக்கிறதும், இன்னுமிவைகள்போலொத்த காரியங்களுக்கு வணக்கமென்று பேர். இப்படிப்பட்ட வணக்கமான காரியங்களால் அவனைக் கனம்பண்ணவேண்டும். முஸ்லிம்களாகிய எங்களிடத்தில் வணக்கத்துக்குரியவன் பரிசுத்தமான அல்லாகு தஆலாவே யொழிய வேறொருவனு மல்ல; எவனொருவன் ஆண்டவனைத் தவிர வேறொருவனை வணக்கத்துக்குரியவ

னென்று சொல்வானே, அவன் இஸ்லாம் மார்க்கத்துக்குப் புறம்பான காபிராயிருப்பான். ஹஜ்ரத்து முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் எல்லாப் படைப்புகளுக்கும் மேன்மையானவர்களாகவும் பூரணமானவர்களாகவு மிருந்தும் அவர்களை யாதொருவன் வணக்கத்துக் குரியவர்களென்று சொல்வானாகில் அவனும் காபிராய்விடுவான். எங்கள் மார்க்கத்தின் மூலாதாரப் பொருளாகிய பரிசுத்தமான கலிமாவாகிய லாஇலாக இல்லல்லாஹு முகம்மதுர் றசூல்லாகி என்பதின் அர்த்தம் எப்படி யிருக்கிறது பாருங்கள், அதாவது வணக்கத்துக் குரியவன் அல்லாகு தஆலாவைத்தவிர வேறொருவரு மில்லை. முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அல்லாகு தஆலாஉடையதிருத்தூதரா யிருக்கிறார்கள் என்பதே.

ஹிந்துக்களின் வணக்கத்துக்குரிய தெய்வங்கள் அநேகமுண்டு. அந்தத் தெய்வங்களின் பேரால் பற்பலவகையாய் விக்கிரகங்களைச் செய்துவைத்துப் பூஜிக்கிறார்கள், அப்படிப் பூஜிக்கும் பொழுது அவைகளைக் கனம் பண்ணுவதற்காக ஷோடஸ வுபசாரமென்னும் பதினாறு காரியங்களை நிறை வேற்றுகிறார்கள். அவைகளாவன:—

ஆவாஹனம்=மந்திரமோதித் தெய்வத்தை யழைக்கிறது.
சிங்காசனம்=பித்தளைமுதலிய ஆசனத்தில் விக்கிரகத்தை நிறுத்துகிறது.
ஸ்நானம்=விக்கிரகத்தை முழுக்காட்டுகிறது.
லேயனம்=சந்தன முதலியவைகளைப் பூசுகிறது.
அக்ஷதம்=அரிசி தூவுகிறது.
புஷ்பம்=புஷ்பஞ் சாத்துகிறது.
நைவேத்தியம்=சாதம் படைக்கிறது.
ஆச்சயனம்=தண்ணீர்ப் புகட்டுகிறது.
தாம்பூலம்=வெற்றிலை பாக்குக் கொடுக்கிறது,
வஸ்திரம்=உடை உடுத்துகிறது,
பூஷணம்=ஆபரணம் தரிக்கிறது.
தூபம்=நல்வாசனையான புகை காட்டுகிறது.
தீபம்=தீபங் காட்டுகிறது.
சங்கம்=மணி யாட்டுகிறது.
ஸ்தோத்திரம்=துதி செய்கிறது.
பிரதக்ஷணம்=சுற்றி வருகிறது.

இன்னும் சிலர் வேறே சில வணக்கங்களையும் செய்கிறார்கள். அதாவது, சாஷ்டாங்க தண்டம் (எட்டு உறுப்புகளும் தரையில் படும்படி விழுந்து இகபரத்தில் தனக்கு வேண்டியவைகளை அதனிடத்தில்

கேட்கிறது.) விஸர்ஜனம் (மந்திரமோதி தெய்வத்தை அனுப்பிவிடுகிறது.) முதலான இவைகளே.

யோசிக்கவேண்டும். ஆண்டவனைவிட்டு மற்றவர்களை வணங்குகிறதும், மற்றவர்களிடத்தில் அதிலும் தன்னால் உண்டுபண்ணப்பட்ட விக்கிரகத்தினிடத்தில் தன்னுடைய கோரிக்கைகளைக் கேழ்க்கிறதும், உயிருள்ளவர்கள் உயிரில்லாதவைகளையும், புத்தியுள்ளவர்கள் புத்தியில்லாதவைகளையும், சக்தியுள்ளவர்கள் சக்தியில்லாதவைகளையும் வணங்குகிறது என்ன மதிமோசமா யிருக்கிறது.

இவ்விடத்தில் மேற்கண்ட பதினாறு காரியங்களாகிய வணக்கங்களெல்லாம் எந்த தெய்வத்தின்பேரால் விக்கிரகம்செய்து வைக்கப்பட்டதோ, அந்த தெய்வத்துக்கே யொழிய விக்கிரகத்துக் கல்லவென்று யாதொரு ஹிந்து சொன்னால், அதற்கு மறுமொழியாவது:-எவன் அந்தந் தெய்வத்தையும் மற்றெல்லாவற்றையும் படைத்தானோ, எவன் எல்லாருடைய கோரிக்கைகளையும் நிறைவேற்றுகிறானோ, எவன் எல்லா வஸ்துக்களையும் எல்லா நேரங்களிலும் பார்க்கிறானோ, எவன் எல்லா வேளைகளிலும் கேழ்க்கிறானோ, எவன் சர்வ சக்தியுமுள்ளவனா யிருக்கிறானோ அவனையே வணங்குங்கள்.

இப்பொழுது அவர்கள் வணங்கும் சில தெய்வங்களின் பேரைக் கேளுங்கள்.

விஷ்ணு; இவரைக்குறித்து 1-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. சாலக்கிரா மென்னும் கல்லின் பேரில் துளசி இலையைச் சாற்றி இவரை வணங்குகிறார்கள்.

கிருஷ்ணன்: தசரதமஹாராஜனுடைய புத்திரர் **ராமச்சந்திரன்**. அவரின் மனைவி சீதை. அவரின் சகோதரர் **லக்ஷ்மணர்**. இவர்களின் பேரால் செய்யப்பட்ட விக்கிரகங்கள் வணங்கப்படுகின்றன. இன்னும் இவர்களைக்கனம்பண்ணுவதில் கீர்த்தனைகளைப் பாடியும் தாளம்,மத்தளம்,வீணை முதலியவாத்தியங்களுடன் கூத்துகளை ஆடியும் வருகிறார்கள். இராகம் சங்கீதம் வாத்தியம் இவைகளெல்லாம் சுத்தவிளையாட்டும்வேடிக்கையும் சுகம் பாராட்டுதலுமாயிருக்கின்றன. அப்படியிருக்க அவைகளுக்கு வணக்கமென்று பேர் வைத்திருக்கிறார்கள்.

கணேசர் இவரைக் குறித்து 1-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கின்றது. இவர் மனிதசரீரமும் யானைத்தலையு முள்ளவர். எல்லாத் தெய்வங்களுடைய பூஜைக்கு முந்தி இவரைப் பூஜிக்கிறது அவசியமென் றெண்ணுகிறார்கள்.

**மஹாகாளி:** இவளை வணங்கும்முறை யெப்படியென்றால், எந்தெ ந்தவிடத்தில் அவள் வாசம்பண்ணுகிறதாக எண்ணுகிறார்களோ, அந் தந்த இடங்களுக்கு உதாரணமாக ஜுவாலைமுகி, காங்கடா, சாமுண் டி, பத்ரகாளி முதலிய இடங்களுக்குப் போய் மேற்சொன்ன சோட ச உபசாரங்களைச் செய்து வணங்குகிறார்கள். ஜுவாலைமுகியைப் பூ ஜிக்கிறார்கள் அந்த இடத்தைச் சகல தீர்த்தங்களிலும் மேன்மையா னதென் றெண்ணுகிறார்கள். அதைக் குறித்துச் சொல்லப்பட்டிருக் கிற

சுலோகம்.

காஷிவாஸம் யுகமஷ்டம் யுகமேக ம்பர்த்தோதகம்
திர்க்கௌட்ஸமம் புண்யம் ஜுவாலம்முகிப் பிரதர்சனம்.

இதன்கருத்து. காசியில் எட்டியுக மிருந்தால் எவ்வளவு புண் ணியமோ அவ்வளவு புண்ணியம் பர்த்தோதகம் என்னும் பொய்கை யில் ஒருயுகமிருக்கச் சித்திக்கும். இதற்குக் கோடிமடங்கு புண்ணி யம் ஜுவாலைமுகியை ஒருதரம் தரிசிப்பதால் கிடைக்கும் என்பதே.

இன்னும் அந்த ஜுவாலைமுகி என்னு மிடத்தில் மலையடிவாரத் தி லிருந்து சில அக்கினிச் சுவாலைகள் புறப்படுகின்றன. அதைப் பெரி ய அற்புதமென் றெண்ணுகிறார்கள். ஆண்டவனுடைய பூமியில் சில விடத்தில் தண்ணீர் புறப்படுகின்றது. சில விடத்தில் பொன் வெள் ளி செம்பு முதலான உலோகங்கள் வெளிப்படுகின்றன. சில விடங் களில் உப்பு வெட்டி யெடுக்கப் படுகின்றது. இப்படிப் பற்பல விட ங்களில் பற்பல பொருள்கள் வெளிப்படுகின்றன. அப்படியே சில விட ங்களில் நெருப்பு புறப்பட்டால் அது என்ன ஆச்சரியம். உலகத்தி ல் நெருப்பைக் கக்குகிற மலைகள் அனந்தமுண்டு. கிருஸ்று என்னு ம் பாத்ஷா அடங்கியிருக்கிற விடத்தில் ஒரு அக்கினிக்கனி யிருக்கின் றது. இதைத்தவிர உலகத்தில் அநேக புதுமைகளிருக்கின்றன. அ வைகளையெல்லாம் வணங்கும்படி ஆண்டவன் அவர்களுக்கு உத்திரவு செய்யவில்லை. பாருங்கள் சில இரும்புக் கதிர்களை கல்லில் தீட்டினா ல் அதிலிருந்து நெருப்புப்பொரி பறக்கின்றது. சகிமுகிக் கல்லிலிரு ந்து நெருப்புப்பொரி பறக்கின்றது. சில நேரங்களில் இரவில் கற்க ண்டையுடைத்தால் அதிலிருந்து நெருப்புப்பொரி பறக்கின்றது. இ ன்னும் அறபு ராஜ்ஜியத்தில் பச்சைக் கொம்பிலிருந்து நெருப்புண்டா கின்றது. யாதொருவன் இரவில் தாடியைச்சீவினால் அதிலிருந்து நெ ருப்பின் மின்னல் தோன்றுகின்றது. சில நேரங்களில் இரவில் கம்ப ளியை உதறினால் அதிலிருந்து நெருப்பு உண்டாகின்றது. சில இரு

ளான இரவுகளில் மாட்டின் சரீரத்தைக் கையால் தேய்த்தால் அதிலிருந்து நெருப்பின் மின்னல்கள் வெளிப்படுகின்றன. ஆகையால் ஹிந்துக்கள் இவைகளையும் வணங்கவேண்டும்.

இன்னு மந்த ஜுவாலைமுகியின் பூஜாரிகள் ஒரு சூதும் செய்கிறார்கள். அதாவது, காலை ஒரு ஜாமத்துக்குப் பின்னிருந்து இரவு ஒரு ஜாமம் செல்லுகிறவரையில் காளிக்கு நைவேத்தியம் பண்ணுகிறார்கள். அந்த வேளையில் உள்ளே ஒருவரையும் போகவிடுகிறதில்லை. அந்த வேலைக்காக அதிக நம்பிககையுள்ள பன்னிரண்டு பூஜாரிகள் எப்போதும் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். அவர்களைத் தவிர மற்றப் பூஜாரிகள் அந்தவேளையில் அவ்விடம் போகக்கூடாது. பன்னிரெண்டு பூஜாரிகளும் அவரவர்கள் முறைப்படிபோய்க் கதவைச் சாத்தி ஒரு பூஜாரியைமாத்திரம் கூடவைத்துக்கொண்டு நைவேத்தியம் பண்ணுகிறார்கள். இவ்வளவு மறைவாய்ச் செய்கிறதினால் ஒருவேளை அந்த அக்கினிச் சுவாலைகளில் ஒவ்வொரு ஜாமத்துக்கும் போதுமான சில எரியும் சாமான்களாகிய மசாலைவர்க்கங்களைப் பர்த்திசெய்து விடுகிறார்களென்று சந்தேகிக்க இடமாகின்றது. இன்னும் இந்த அக்கினிச்சுவாலை மசாலைவர்க்கங்களைப் பர்த்திசெய்கிறதினால்தான் எரிந்துகொண்டிருக்கிறதென்று ஒருவர் சொல்லக்கேட்டு மிருக்கிறேன். ஆனால் அந்த அக்கினிச் சுவாலைகளில் யாதொன்று நூர்ந்துபோனால் அதை விளக்கினால் மறுபடி எரியப்பண்ணுகிறார்கள். இதை நான் கண்ணால் பார்த்திருக்கிறேன். இன்னும் அந்த இடத்தில் தண்ணீருக்கு நடுவேயிருந்து அக்கினிச்சுவாலை புறப்படுகிறதாய்ச் சொல்லுகிறார்களே அது சுத்தத்தப்பு. அதன் உண்மை யென்னவென்றால், அந்த இடத்தில் ஒரு தொட்டி யிருக்கின்றது. அதை ஓமகுண்டமென்று சொல்லுகிறார்கள். அதன் ஒரு மூலையில் தரைமட்டத்தில் கல்லிலிருந்து தண்ணீர் வெளிப்படுகின்றது. அது அவ்விடத்திலிருந்துதான் புறப்படுகின்றதோ அல்லது தூரத்திலிருந்து வருகின்றதோ ஆண்டவனறிவான். தண்ணீர் மிகவும் கொஞ்சமாய் வருகின்றது. எட்டு ஜாமத்தில் ஒரு சிறு பாத்திரம் நிரம்பும். அதற்குக் கொஞ்சம் மேலே ஒரு அக்கினிச் சுவாலை புறப்படுகிற இடமா யிருக்கின்றது. ஆனால் அது தண்ணீருக்குச் சமீபமா யிருப்பதால் அடிக்கடி நூர்ந்துகொண்டே யிருக்கின்றது. யாதொருவன் அந்தக் குண்டத்தில் ஓமம் வளர்க்க நாடினால் ஒரு துணியால் அந்தத் தண்ணீரைத் துடைத்துவிட்டு விளக்கினால் அந்தச் சுவாலையை எரியப் பண்ணுகிறார்கள். பின்பு அதின்பேரில் நெய், தேன், எள், கோதுமை; பாதம், கொப்பரை இவைகளைத் தடையங்களாகவும் மனுவு

களாகவும் கொட்டுகிறார்கள். இதற்குத் தான் ஓமம் வளர்க்கிறதென்று பெயர். இந்தப் பொருள்களை தேவதையின்பேரால் கோரிக்கைசெய்து நெருப்பில்போட்டுக் கொளுத்தி விடுகிறார்கள். ஆகக்கூடி அந்தப் பொருள்களால் அந்தச் சுவாலை நன்றாயெரிகின்றது. அந்த வேளையில் புறப்படுகிற தண்ணீர் பூமியிலேயே தடைப்பட்டிருக்கின்றது. நல்லது அவ்வளவு நெருப்பு எரிகிற விடத்தில் அரை, முக்கால் வராகனெடை திட்டமுள்ள தண்ணீர் என்ன செய்யும், நான் சிறு பிராயத்தில் ஓர் இரவு ஓமம்வளர்க்கிறதற்காக அவ்விடத்திற்குப் போயிருந்தேன். இவைகளை என்கண்ணால் பார்த்தேன். அதற்கு இருபது வருஷங்களுக்குப் பின்னால் பலதரம் அவ்விடத்திற்குப் போயிருக்கிறேன். அப்பொழுதெல்லாம் அதை நான் கவனிக்கவில்லை. இப்பொழுது அந்தத் தண்ணீர் வருகின்றதோ இல்லையோ ஆண்டவனறிவான். ஆகக்கூடி எவ்விதத்திலும் இந்தப் புதுமைகளையெல்லாம் பார்த்து, அவைகளைத் தனக்கு வணங்குமிடமாக்கிகொள்ளாமல் எவன் இந்தப் புதுமைகளைப் படைத்தானோ அவனையே வணங்கவேண்டும்.



தேவிபூஜை இன்னுமொருவகையுண்டு. அதாவது ஒரு பளிங்குத்துண்டில் இவ்விதமாய் ஒரு ஷட்கோண சக்கரம் ஸ்தாபித்து அதன்மேல் விக்கிரகத்தை நிறுத்தி, மேற்சொன்ன சோடச உபசாரங்களைச்செய்து பூசை செய்கிறார்கள்.

இன்னொருவகை, யாதொரு பெண்பிள்ளையின் அல்குலை மேற்சொன்னபடி பூஜை செய்கிறார்கள். இன்னும் சிலர் தங்களுடைய கோசத்தை அதில் நுழைத்து ஜபம் செய்கிறார்கள். ஆனால் விந்துவை உள்ளே சிந்த விடுகிறதில்லை. அதற்குப் பகபூஜையென்று பெயர். இவ்வகையான பூஜைசெய்கிறவர்கள் வாம மார்க்கரென்று சொல்லப்படுகின்றார்கள். வாமர் என்று மஹாதேவனுக்குப் பெயர். இந்த வாம மார்க்கர் மஹாதேவனையும் தேவியையும் வணங்குகிறார்கள். தங்கள் மார்க்கத்தை மற்ற இந்துக்களுக்கு ரொம்பவும் மறைக்கிறார்கள். மாம்சம் தின்னுகிறதும் மதுபானஞ் செய்கிறதும் அவர்களிடத்தில் பெரும் புண்ணியமாம். இன்னுமவர்கள் "ஸஹஹஸர் பக்தர் ஸனுமுக்தி" அதாவது ஆயிரம் அல்குலை தரிசிக்கிறதினால் முக்தியுண்டாகின்றது என்று சொல்லுகிறார்கள்.

இன்னு மொருவகை ஜோதி: அதாவது நெய் விளக்கேற்றி தே
வியை ஹாஜரா யிருக்கிறதாக வெண்ணி மேற்சொன்னபடி வணங்கு
கிறார்கள். மஹாலட்சுமி: பொன், வெள்ளி, திரவியம் பாக்கியம்
இவைகளை லக்ஷ்மியின் வாசஸ்தலமென் றெண்ணி மேற்சொன்னபடி
வணங்குகிறார்கள். சாஸ்வதி: அவர்கள் சொல்லுகிறபடி ஆற்றின் ரூ
பமாய் வெளியா யிருக்கிறாள். சங்காநதி அவர்கள் சொல்லுகிறபடி
மஹாதேவனுடைய சிரசிலிருந்து புறப்பட் டிருக்கிறது. அதன் தண்
ணீர் அதிக தெளிவானது. பாரக்ஷநாதேவி: ராமச்சந்திரர் பாரக்ஷ
நாதேவியைப் பூஜை செய்து இலங்கையை ஜெயித்தாரென்று சொல்
லுகிறார்கள். அந்த நாளில் இந்துக்கள் கத்தி. கட்டாரி, கேடயம் மு
தலியவைகளையும்; யானை குதிரை, ஒட்டகம் முதலியவைகளையும் பு
ஸ்தகம், பேனா, மைக்கூடு முதலியவைகளையும் இன்னும் இப்படிப்ப
ட்ட அனேக வஸ்துக்களையும் பூஜை செய்து அவைகளிடம் உதவி
தேடுகிறார்கள். அவைகளைத் தங்கள் வசமாக்கிவைத்த ஆண்டவனுக்
கு நன்றியறிதலான துதி செலுத்துகிறார்களில்லை. பாருங்கள் எங்
கள் ஹஜரத்து முகம்மது சல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் குதி
ரை அல்லது ஒட்டகத்தின்மீது ஏறினால்,

سبحن الذي سخرلنا هذا وماكنا له مقرنين * وانا الى ربنا لمنقلبون *

“சுப்ஹானல்லதீ சக்கற லனா ஹாதா வமா குன்னா லஹு முக்
ரினீன். வஇன்னா இலா றப்பினா லமுன்கலிபூன்” இந்தமிருகத்தை நம
க்கு வசப்படுத்திவைத்த ஆண்டவன் துய்யவன். நாம் அதை வசப்
படுத்த சக்தி யுள்ளவர்களா யிருக்கவில்லை. நாம் நம்முடைய ஆண்ட
வனளவில் திரும்புகிறவர்களா யிருக்கிறோமென்று நன்றி யறிதலான
துவா ஓதுவார்கள். இந்தப்பேதைகளான ஹிந்துக்கள் தங்கள் கை
வசப்பட் டிருக்கிறவைகளைப் பூஜிக்கிறார்கள். நல்லது ஒரு பிரபுவான
வர் ஒரு ஏழைக்கு போஜனமாவது வஸ்திரமாவது கொடுத்தால், அந்
த ஏழை அந்தப் பிரபுவுக்கு நன்றியறிந்து அவரைப் புகழவேண்டு
மேயொழிய அந்தப் போஜனத்தையாவது வஸ்திரத்தையாவது வண
ங்கி, அவைகளிடம் நீங்கள் எங்களுக்கு உதவி செய்யுங்களென்றுகே
ள்கக்கூடாது. யாதொருவன் அந்தப் போஜனத்தினிடம் அல்லது வ
ஸ்திரத்தினிடம் இப்படிச் செய்வானாகில் ஜனங்கள் அவனைப் பைத்தி
யக்கார னென்பார்கள்.

மஹாதேவன்: இவரை வணங்குவ தெப்படியென்றால், மஹாதே
வனுடைய லிங்கமென்னும் கோசத்தைப்போல் ஒன்று செய்து அ
தை ஜலஹரியில் வைத்து மேற்சொன்னபடி வணங்குகிறார்கள். ஜல
ஹரியென்பது பெண்பிள்ளையின் பாஜை (பெண்குறியைப்) போலுள்

ள ஓர் பீடம். இன்னும் மஹாதேவனுடைய லிங்கத்தின்மேல் ஜலதாரை அதாவது பால் அல்லது பாலும் தண்ணீரும் கலந்து மெதுவாகத் தாரையாய் ஊற்றுகிறார்கள். ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் சிறுவர்களும் வாலிபர்களும் விருத்தாப்பியர்களும் எல்லாரும் போய் அந்த லிங்கத்தைத் தரிசித்து வருகிறார்கள்.

லிங்கபூஜையின் காரணம் அநேகமாயெழுதி யிருக்கிறார்கள். 1-வது பிரிவில் அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லப்பட்டிருக்கின்றது. சிவபுராணத்தில் அதைக் குறித் தெழுதியிருக்கிற தென்னவென்றால், ஓர் தடவை மஹாதேவனுடைய மனைவியாகிய பார்வதி தன்னைக்கூடும்படி மஹாதேவனைக் கூப்பிட, அவர் முந்திமறுத்து மறுபடி அதற் கிணங்கிக் கூடினபொழுது பார்வதி நெருக்கப்பட்டுப் பதறும்படி தம்முடைய ஆண் அங்கத்தை அதிகமாய் நீட்டினார். பார்வதி இதை விஷ்ணுவினிடம் முறையிட, விஷ்ணுவானவர் தமது சக்கரத்தால் மஹாதேவனுவடைய லிங்கத்தை அறுத்துவிட்டார். மஹாதேவன் அதிக கோபமானார். விஷ்ணுவானவர் மஹாதேவனுக்கு அதிக தாழ்மையும் மரியாதையும் செய்து தம்மைத் தப்பித்துக்கொண்டார். அதுமுதற்கொண்டு லிங்கபூஜை ஆரம்பித்தது என்பதே.

இன்னும் அதேபுராணத்தில் வேறொருபக்கத்தில் சிலபிராமணரிஷிகள் தவஞ் செய்துகொண் டிருந்தார்கள். மஹாதேவன் அவர்களின் நல்லெண்ணத்தைச் சோதிக்கிறதற்காக அவர்களின் மனைவிகளிடம்போய்த் தமது லிங்கத்தை நிர்வாண மாக்கினார். அந்தப் பிராமணர்களின் சாபத்தினால் மஹாதேவனுடைய லிங்கம் அவருடைய சரீரத்திலிருந்து அறுந்து விழுந்துவிட்டது. மஹாதேவன் தம்முடைய சுயரூபமானபொழுது, பிராமணர்கள் மஹாதேவனை அதிகமாய்ப் புகழ்ந்தார்கள். மஹாதேவன் சந்தோஷப்பட்டு லிங்கத்தைப் பூஜிக்கும்படிக் கட்டளை யிட்டார். அதுமுதற்கொண்டு லிங்கபூஜை ஆரம்பமாயிற்று என்று எழுதப்பட்டிருக்கின்றது.

இன்னு மிதைக் குறித்து வேறு மாதிரியான சரித்திரங்களு மிருக்கின்றன. இப்பேர்ப்பட்ட மானங்கெட்ட சங்கதிகளை விட்டும் ஆண்டவன் எல்லாரையும் காப்பானாகவும்.

வணக்கத்துக்காக இப்பேர்ப்பட்ட மார்க்கத்தை உண்டு பண்ணின பெரியோர்களின் புத்தியை மெச்சிக்கொள்ளவேண்டும். கோசத்தைக் குய்யத்தில் வைத்து ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள் எல்லாரும் பார்த்தால் மோகத்தின் நினைப்பில்லாதவர்கள்கூட உசாராய் விடு

வார்கள், இந்தவணக்கம் ஆண்மை சக்தியுண்டாக நல்ல அவிழ்தமா யிருக்கின்றது.

### ஹிக்காயத்து.

ஒருநாள் ராமச்சந்திர பண்டிதரிடம் விக்கிரக வணக்கத்தைக் குறித்து வாதம் நடந்தது. நான் அவரிடம் விக்கிரகத்தை வணங்குவது ஏனென்றதற்கு, அவர் நாங்கள் உண்மையில் விக்கிரகத்தை வணங்கவில்லை; ஆனால் மனம் அலையாமல் பற்றுதலா யிருப்பதற்கு ஒரு விக்கிரத்தைக் குறிப்புக்காக முன்னால் வைத்துக்கொள்ளுகிறோம் என்று சொன்னார். அதற்கு நான், கோசத்தின் ரூபமும் குய்யத்தின் ரூபமும் பார்வைக்கு நேரேயிருந்தால், மனம் ஏன் பற்றுதலாயிராது! மேலும் அதிக தடமாட்டத்திலாகிவிடு மென்றேன். அதற்குப் பண்டிதர் சும்மா யிருந்துவிட்டார்.

பசு: அவர்கள் சொற்படி பசுவின் சரீரத்தில் தேவர்கள் வாசமா யிருக்கிறார்கள். அதை வணங்கும் வகை எப்படியென்றால், பொன் கொப்பிகள்செய்து அதன் கொம்புகளிலும், வெள்ளி லாடங்கள் செய்து அதன் கால்களிலும், ஒரு வெள்ளித் தகட்டை அதன் முதுகின் பேரிலும் வைத்துப் போர்வைபோட்டுப் பின்பு அதைப் பூஜைசெய்து பிராமணர்களுக்குக் கொடுத்துவிடுகிறார்கள். பசுவிற்கு அதிக மரியாதை செய்கிறார்கள். அதன் சாணியையும் மூத்திரத்தையும் வெகு சுத்தமானதென்றும், சுத்தமாக்குகிறதென்றும் எண்ணுகிறார்கள். பசுவின் சாணி, மூத்திரம், பால், தயிர், நெய் இவைகள் கலந்துள்ள பஞ்சகௌவிய மென்பது அவர்களிடத்தில் அதைவிட சுத்தமானது ஒன்றுமில்லை. அவர்களில் அதிக பக்தராயிருக்கிறவர்கள் தினந்தோறும் பஞ்சகௌவியம் சாப்பிடுகிறார்கள். யாதொரு பிராமணன் பூணூலில்லாமல் சாப்பிட்டால் ஹிந்துக்களிடத்தில் அந்தக் குற்றம் நிவர்த்தியாகிறதற்காக காயத்திரியென்னும் மூலமந்திரமோதி அந்த நாளில் பசுவின் மூத்திரத்தைத் தவிர வேறொன்றும் சாப்பிடக் கூடாதாம். யாதொரு இந்து மறதியாய் இதர ஜாதியானுடைய பாத்திரத்தில் யாதொன்றைத் தின்றாலும் குடித்தாலும் அவனைச் சிலநாள் விரதமிருக்கச்செய்து அவனுக்குப் பஞ்சகௌவியம் கொடுக்கிறார்கள். அப்பொழுது அவன் சுத்த மாய்விட்டான் என்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். பசுவின் கால்தூசி பறந்து சரீரத்தில் பட்டுவிட்டால் அது அவர்களிடத்தில் அதிக சுத்தமாம். அதற்குக் கௌஹூரியென்று பெயர். மிலேச்சர்களுடைய வீட்டில் உட்கார்ந்து சாப்பிடுகிறதும் தண்ணீர் குடிக்கிறதும் அவர்களிடத்தில் ஆகாதாம். ஆனால் அந்தமிலேச்சன் வீட்டில் பசுக்க ளிருந்தால் ஆகுமாம். இதர ஜாதியின் வீட்டுத்தண்

ணீர் குடிக்கிறதும் ஆகாதாம். ஆனால் மோருடன் கலந்திருந்தால் ஆகுமாம். மிலேச்சனுடைய வீட்டில் உட்கார்ந்து பலகாரம் சாப்பிடுகிறது ஆகாதாம்; ஆனால் பசுக்களுள்ள இடமாயிருந்தால் ஆகுமாம்.

ஆ! ஆ! என்ன புதுமை. படைப்புகளுக்கெல்லம் மேன்மையான மனுஷனுடைய வாயை அசுத்தமானதென்றும், மிருகஜாதியான பசுவின் சாணி மூத்திரம் இவைகள் சுத்தமானவைகளென்றும், சுத்தமாக்குகிறவைகளென்றும் எண்ணுகிறார்கள். இன்னொருவேடிக்கை! எந்தப் பசுவிற்கு இவ்வளவுமரியாதை செய்கிறார்களோ அதை கௌமாதா என்று சொல்லுகிறார்கள். அது சாகிற தருணத்திலிருந்தால் அந்த மாதாவை வீட்டிற்கு வெளியே போட்டுவிடுகிறார்கள். அது செத்தால்,தோட்டி சக்கிலிகள்வசம் கொடுத்துவிடுகிறார்கள். அவர்கள்அதைக் கடைவீதிவழியாய்த் தலைதொங்கி பூமியில் தேயும்படி தூக்கிக்கொண்டுபோகிறார்கள்.

ஆ! ஆ! மாதாவின் ஜனஸா வெகு சிறப்புடன்போகின்றது, பின்பு அந்தத் தோட்டி சக்கிலிகள் அதன் மாமிசத்தைத் தின்னுகிறார்கள். மிகுந்த மாமிசத்தையும் எலும்புகளையும் காக்கை நாய் முதலானவைகள் தின்னுகின்றன. இன்னும் அதன் தோலால் ஜோடுகள் செய்து எல்லாஇந்துக்களும் அணிகிறார்கள். தங்கள் மாதாவை வெகு கோலப்படுத்துகிறார்கள்.

ஹிக்காயத்து.

லாஹூரின் தலைவராகிய றஞ்சித்சிங் கென்பவர் ஒருநாள் மௌலானா ஜான்முகம்மது சாகிபவர்களிடம் மௌலவிசாகிபே! எங்கள் முன்னோர்களும் உங்கள் முன்னோர்களும் எல்லாரும் புத்திமான்களாகவே யிருந்திருக்கிறார்கள். இப்போது நான் இந்த இரண்டு மார்க்கங்களிலும் எது உண்மையானதென்று உம்மைக் கேழ்க்கிறேனென்றார். அதற்கு மௌலானா அவர்கள், நீர் எங்கள்பேரில் அதிகாரியாயிருக்கிறீர். நாங்கள் உண்மையைச் சொன்னால் மனஸ்தாபப்படுவீர்; உம்முடைய தாட்சண்ணியத்துக்காகத் தப்பு சொன்னால் அதிகாரிகளுக்கெல்லாம் பெரிய அதிகாரியாகிய ஆண்டவன் கோபமாவான். இந்தச் சங்கடத்திற் கென்னசெய்யலாமென்றார், அதற்கு றஞ்சித்சிங்கு, எந்த வார்த்தை உண்மையோ அதை அஞ்சாமல்சொல்லுமென்றார், மௌலானா அவர்கள், அவரைப் பார்த்து, எங்கள் மார்க்கத்தில் ஒரு வஸ்துவை யேன்தின்னக் கூடாதென்று விலக்குப்பட்டிருக்கிறதின் காரணம்—அந்த வஸ்து பன்றியைப்போல் அசுத்தமும் கெடுதலுமாயிருத்தல், அல்லது அது மனிதனைப்போல் சிறந்ததாயிருத்தல்

இவ்விரண்டிலொன்றுதான் பிரதான காரணம். இப்பொழுது நான் உங்களைக் கேள்கிறேன். உங்கள் மார்க்கத்தில் பசு எந்த காரணத்தினுல் விலக்கப்பட்டிருக்கிறது. அசுத்தமா யிருக்கிறதினுல் விலக்கப்பட்டது என்பீர்களானுல், பின்னையேன் அதற்குவணக்கமும் மரியாதையும் செய்கிறீர்கள். அப்படியல்ல அது சிறந்ததா யிருக்கிறதினுல் விலக்கப்பட்டது என்பீர்களானுல். பின்னையேன் பாதரக்ஷை முதலியதில் அதன்தோலை வழங்குகிறீர்கள்என்ருர். இதைக் கேட்ட லாகூரின் தலைவர்மறுமொழி சொல்லாமல் வாய்மூடினுர்.

**சூரியன், சந்திரன்:** தினந்தோறும் குளித்து, சூரியனுக்கு முன் தண்ணீர் தூவுகிறுர்கள். இன்னும்சிலர் சூரியன்சந்திரனுடைய சொரூபஞ் செய்து வைத்து வணங்குகிறுர்கள்.

நியாயமாய்ப் பாருங்கள். ஆண்டவன் சூரியன் சந்திரன் இவைகளை உலகமெங்கும் பிரகாசிக்கும்படியான விளக்காக அமைத்திருக்கிறுன். அதுபோலவே ஆண்டவன் குர்ஆன்ஷரீபில்,

تبارک الذي جعل في السماء بروجا وجعل فيها سراجا وقمرا منيرا *

வானத்தில் புருஜென்னும் ராசிகளைப் படைத்து அதில் பிரகாசமான விளக்காகிய சூரியனையும் சந்திரனையும் அமைத்தவன் வெகுமேன்மையானவன் என்று திருவுளமாயிருக்கிறுன்.

இந்தப் பாக்கியத்தின் பேரிலும் ஆண்டவனுக்கு நன்றியறிந்து அவனைப் புகழவேண்டுமே யொழிய, சந்திர சூரியர்களை வணங்கக்கூடாது. உதாரணமாக, ஜனங்கள் அச்சமற்று நடப்பதற்காக ஒருவன் இருட்டான வழியில் விளக்கேற்றி வைத்தால், நடக்கிறவர்கள் அந்த விளக்கேற்றி வைத்தவனுக்கு நன்றியறிந்து அவனைப் புகழவேண்டுமே யொழிய, அந்த விளக்குக்கு வந்தனம் செய்தல் கூடாது.

இன்னும் சிலர் சந்திர சூரியர்களைத் தவிர வானத்தின் கிரகங்களையும் வணங்குகிறுர்கள். அவை: **புதன், சுக்கிரன், செவ்வாய், குரு, சனி, ராகு, கேது,** இவைகளே. அவர்கள் இந்தக் கிரகங்களை வணங்குகிறது எதற்கென்றுல், அவைகள் இவர்களிஷ்டப்படி தங்கள் நற்பலனைக் காட்டவும் துற்பலனைக் காட்டாம லிருக்கவுமே. முதலாவது கிரகங்களில் துற்பலனும் நற்பலனும் இல்லை என்பதை அவர்கள் அறியவில்லை. அப்படி யிருந்தாலும் அவிழ்தங்களில் எப்படிச் சூடு குளிர்ச்சி கொழுமை வரட்சி என்னும் இவைகளை ஏற்றுக்கொள்ளும் தன்மையிருக்கின்றதோ, அப்படியே அவைகளிலும் அத்தன்மை யிருக்கக்கூடும். அந்த அவிழ்தம் யாதொருவனுடைய அனுபோகத்தில் வந்தால், அப்பொ

ழுது ஆண்டவன் அந்த அவிழ்தத்தைக் கொண்டு சவுக்கியப்படுத்த அல்லது அசவுக்கியப்படுத்த நாடினுைகில், அந்த அவிழ்தத்தின் தன்மையின்படி அதில் சூடு அல்லது குளிர்ச்சியை, வரட்சியை அல்லது கொழுமையை உண்டுபண்ணுகிறுன். ஆகையால் அந்தக் குணத்தை உண்டுபண்ணுகிறவன் ஆண்டவனே. எப்படியென்றுல், காசினிக்கீரையிலும் பருப்புக்கீரையிலும் ஆண்டவன் குளிர்ச்சியின் தன்மையை வைத்திருக்கிறுன். அந்தக் காசினிக்கீரைக்கும் பருப்புக் கீரைக்கும் தங்கள் குணத்தைப்பேதப் படுத்திக்கொள்ளச் சக்தியில்லை. பின்பு யாதொருவன் அந்த அவிழ்தங்கள் அவனிஷ்டப்படி பலன் தருவதற்காக அவைகளை வேண்டிக்கொண்டால் அவன் மூடனென்று எண்ணப்படுவான். அதுபோலவே ஆண்டவன் குரு என்னும்கிரகத்தில் நற்பலனின் தன்மையையும், சனியென்னும் கிரகத்தில் துற்பலனின் தன்மையையும் வைத்திருந்தால், ஒருவன் அவைகளைப் புகழ்ந்து வேண்டிக்கொள்ளுகிறதினுல்,அவைகள் தங்களின் தன்மையைப்பேதப்படுத்திக்கொள்ள அவைகளுக்கு என்ன சக்தி யிருக்கின்றது.கிரகங்களோ ஆண்டவனுடைய அமைப்பின்கீழ் இருக்கின்றன. ஆண்டவன் அவைகளில் என்ன குணங்களை வைத்தானே அந்தக் குணங்கள் மலக்குகள் மூலமாய் வெளிப்படுகின்றன. உதாரணமாக, சூரியனில் உஷ்ணமும்பிரகாசமும், சந்திரனில் குளிர்ச்சியும் பிரகாசமும் வெளியாகின்றன.

والنجوم مسخرات بامره *

"நக்ஷத்திரங்களெல்லாம் அல்லாவுடைய உத்திரவுக்கு வசப்பட்டிருக்கின்றன" வென்றும்,

فسبحان الذى بيده ملكوت كل شيء واليه ترجعون *

"எல்லா வஸ்துக்களின் சுதந்திரத்தையுடைய நாயன் துய்யவன், அவனளவிலேயே நீங்கள் மீளுவீர்கள்" ஆண்டவன் திருவுளமானதுபோல் கிரகங்கள் மலக்குகள் எல்லாம் அவனுடைய வல்லமையின்கீழ் இருக்கின்றுர்கள்.

ஹிந்துக்கள் வணங்கும் தெய்வங்களை யெவ்வளவென்றுதான் சொல்லலாம். அவர்களில் தாழ்ந்தவர்கள் முதல் மேன்மையானவர்கள் உள்பட எல்லாரும் அதிகமாய் ஆண்டவன் படைத்தபடைப்புகளையே வணங்குகிறுர்கள். அவைகளையே தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுகிறவைகளென்றும் லாபநஷ்டங் கொடுக்கிறவைகளென்றுமெண்ணுகிறுர்கள். துக்கமே கைசேதமே! உண்மையான ஆண்டவனை மறந்து அவனின் அடிமைகளை வணங்கத் தலைப்பட்டார்களே.

இவ்விடத்தில் ஹிந்துக்கள் கேட்கிறதென்னவென்றால், ஓ முஸ்லிம்களே! நீங்கள் இந்தப் பிரிவில் எங்கள் மார்க்கத்தை குறித்துப் பல ஆட்க்ஷேபங்கள் செய்திருக்கிறீர்களே. இந்த ஆக்ஷேபங்களெல்லாம் உங்கள் மார்க்கத்திலும் உண்டு. ஆண்டவனைத்தவிர மற்றவர்களை வணக்கத்துக் குரியவர்களாய் நியமித்துக் கொள்ளுகிறதும், மற்றவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுகிறவர்களென்றும், லாபநஷடங் கொடுக்கச் சக்தியுள்ளவர்களென்றும் எண்ணுகிறதும் உங்கள் மார்க்கத்திலுமுண்டு. நாங்கள் அனேகம் முஸ்லிம்களைப் பார்க்கிறோம். ஒருவன் யாதொருவர் அடங்கியிருக்கிற கப்றை வணங்குகிறான்; அதன்பேரில் மூக்கை வைத்துத் தேய்க்கிறான். பிரார்த்தனை செய்கிறான். கோரிக்கைகளைக் கேழ்க்கிறான். ஒருவன் சைய்யிது சுல்த்தான் பேரால் ஆடுகளை அறுக்கிறான். ஒருவன் ஹஜரத்து இமாம் ஜாமின் பேரால் காசுமுடிந்துக் கையில்கட்டி அவர்களைத் தனக்குக்காவலாக எண்ணிக்கொள்ளுகிறான். ஒருவன் ஹஜரத்து பீரானபீர் தஸ்த்தகீரைத் தன் ஆண்டவனாக எண்ணி யிருக்கிறான். தன் கோரிக்கைகள் நிறை வேறுகிறதற்காக அவர்களுக்குக் கியார்வீன் செய்கிறான். ஒருவன் அவர்களின் கப்றின் புறமாய் முகம்நோக்கிக் கைகட்டிப் பதினொரு அடி நடந்து யாஷைகு அப்துல்காதிர் ஷை அன்லில்லா அதாவது ஷைகு அப்துல்காதிரே! ஆண்டவனுக்காக ஏதாவது கொடுங்களென்கிறான், ஒருவன் யாஷைகு அப்துல் காதிர் அல்மதத் என்கிறான், ஒருவன் யாமுஹ்யிதீன் உங்களைத்தவிர யார் என்னை விசாரிப்பாரென்கிறான். ஒருவன் அய்மீரான்! சீக்கிரமாய் விசாரியுங்கள். ஏன் இவ்வளவு தாமசமென்கிறான். ஒருவன் அவ்வல் முஹ்யிதீன் ஆகிர் முஹ்யிதீன் லாகிர் முஹயிதீன் பாத்தின் முஹ்யிதீன் என்கிறான். ஒருவன் பீர்தஸ்த்தகீருடைய பேரால் விளக்கேற்றி அதற்கு முன்னால் கைகட்டி நிற்கிறான். ஒருவன் பீர்தஸ்த்தகீருடைய பேரால் கொடி ஏற்றி அதற்கு மரியாதை செய்கிறான். ஒருவன் இமாம் உசைனுடைய பேரால் தாஷியா செய்து ரிஸ்க்கும் அவ்லாதும் கேட்கிறான். ஒருவன் செய்யிது சாலார் ஷைகு மதார், இவர்களிடத்தில் கோரிக்கைகளைக் கேட்கிறான். ஒருவன் காஜா முஈனுத்தீனுடைய கப்றினிடம் காசுபணங் கேட்கிறான். ஒருவன் வலிமார்களால் லாபத்தை ஆசை வைத்தும் நஷ்டத்தைப் பயந்தும் அவர்களுக்குக் காணிக்கை செலுத்துகிறான். எப்படியென்றால், ஒருவன் பாபா ஷைகு பரீது ஷக்கர் கஞ்சுடைய கிச்சடியும், ஒருவன் ஷா அப்துல்ஹக்குடைய தோஷாவும், ஒருவன் ஹஜரத்து அலியுடைய குண்டாவும், ஒருவன் ஹஜரத்து அப்பாசுடைய ஹாஜிரியும், ஒருவன் பீரந

லீருடைய காணிக்கை மூன்று பல கரைகளும், பீர்நபவியுடைய உப்பும், பந்தகீ சாகிபுடைய கப்ரின் போர்வையும் செய்கிறான். ஒருவன் ஹஜரத்து ஷாஹ் கமீஸுடைய கப்றை வணங்குகிறான். ஒருவன் ஹஜரத்து ஷைக் சதுருத்தின் மாலேரியுடைய கப்றை வணங்குகிறான். ஒருவன் ஹஜரத்து பூஅலி கலந்தருடைய கப்றை வணங்குகிறான். ஆடு முதலானவைகளை விடுகிறான். ஒருவன் ஷாஹ் இனயத்து வலியுடையபேரால் விளக்கேற்றுகிறான், கோரிக்கைகளைக் கேட்கிறான்.

ஒருவன் யாதொருவனுக்காக துவா செய்தால் அல்லாவுடைய பேருடன் மற்றவர்களுடைய பேரைச் சேர்த்து அல்லாவும் * பஞ்சதனும் உன்னை ராஜியாய் வைப்பார்களாகவு மென்கிறான். ஒருவன் அல்லாவும் பீரும் உன் கஷ்டங்களை லேசாக்குவார்க ளென்கிறான். ஒருவன் அல்லாவும் றசூலும் உன்பேரில் கிருபை செய்வார்க ளென்கிறான். ஒருவன் அல்லாவும் கௌசுல் அகுலமும் உன் எண்ணத்தை நிறைவேற்றுவார்க ளென்கிறான்.

ஒருவன் அல்லாவுடைய பேர் சொல்லாமலே பீர்சாகிப் மஹ்பூப் உன்னைச் சந்தோஷமாய் வைப்பார்களென்கிறான். இன்னும் சில பீர்ஜாதாக்கள் தாதாபீர் உன்னைச் சந்தோஷமாக்கி வைப்பாரென்றும், ஜத்தெ பாக் உன் எண்ணத்தை நிறைவேற்றுவாரென்றும் சொல்லுகிறார்கள்.

ஒருவன் அல்லாவுடைய பேரைப்போல் பெரியோர்களின் பேரை உச்சரித்து வருகிறான். எப்படியெனில், ஒருவன் யாஅலி என்கிறான். ஒருவன் யாஉசைன் என்கிறான். ஒருவன் யாமீரான் என்கிறான், இன்னும் இந்தப் பெரியோர்கள் எந்த வேளையிலும் நம்முடைய கூப்பிடுதலைக் கேட்கிறார்களென்றும், நம்முடைய சங்கதியை அறிகிறார்களென்றும் எண்ணியு மிருக்கிறார்கள். இன்னும் சிலர் நம்முடைய சங்கதி நம்முடைய பீருக்குத் தெரியும் என்கிற எண்ணத்தினல் அவருடைய ரூபத்தை மனதில் தியானம் பண்ணுகிறார்கள்.

ஒருவன் வலிமார்களிடம் தன் பிள்ளைகளுக்கு வயசைக் கேட்கிறான். இன்னும் தன் பிள்ளைகள் ஜீவித்திருக்கிறதற்காக வலிமார்களுடைய பேரைச் சேர்த்துத் தன்பிள்ளைகளுக்குப் பேர் வைக்கிறான். எப்படியென்றால், ஒருவன் தன் பிள்ளைக்கு இமாம் பக்ஷ் என்றும், ஒ

---

* பஞ்சதன்=ஐந்து பேர். அவர்க ளாரென்றால், முகம்மது நபி சல்லல்லாகு அலைகி வசல்லம், அலிறலியல்லாகு அன்கு, இமாம் ஹசேன், இமாம் ஹுசேன், பாத்திமத்துஸ் ஸொஹ்ரு றலியல்லாகு அன்ஹும் இவர்களே.

ருவன் பீர்பக்ஷ் என்றும், ஒருவன் அலிபக்ஷ் என்றும், ஒருவன் அசன்பக்ஷ் என்றும், ஒருவன் உசைன் பக்ஷ் என்றும், ஒருவன் மீரான் பக்ஷ் என்றும், ஒருவன் சாலார்பக்ஷ் என்றும், ஒருவன் அப்துன்நபி என்றும், ஒருவன் அப்துர் றசூல் என்றும் பேரிடுகிறான்.

ஒருவன் தன் பிள்ளையுடைய தலையில் யாதொரு வலியுடைய பேரால் மயிர் வைக்கிறான். சிலர் முகர்றம் மாசத்தில் பிள்ளைகளுடைய கழுத்தில் சிகப்புநாடா போடுகிறார்கள். பச்சை உடைகளை உடுத்தாட்டுகிறார்கள். ஒருவன் பாபா பரீதுடைய பேரால் பேடி போடுகிறான். ஒருவன் யாதொருவருடைய பேரால் ஆடறுக்கிறான். ஒருவன் யாதொருவருடைய பேரால் சத்தியம் பண்ணுகிறான். சிலர் பிள்ளைகளுக்கு அம்மை வார்த்தால் மாரியைப் பூஜிக்கிறார்கள்.

இன்னும் சிலர் உயிர்ப் பிராணிகளின் சப்தங்களால் சகுனம் பார்க்கிறார்கள். இன்னும் உங்களில் சில லப்பைமார்கள் பால்கிதாபு பார்த்து யாதொருவனுக்கு "உன்பேரில் பீர்சாகிப் கோபமா யிருக்கிறார்கள்; ஆகையால் உன் பிள்ளை நசலா யிருக்கிறது" என்று சொல்லுகிறார்கள். ஒருவனுக்கு "செய்யிது சுல்த்தான் உன்பேரில் கோபமா யிருக்கிறார்கள் ; ஆகையால் உன் ஜீவனம் கஷ்டமா யிருக்கிறது; அவர்களுக்குக் காணிக்கையைச்செலுத்து" என்கிறார்கள். ஒருவனுக்கு சியாப்பரி லால்பரியுடைய பயங்காட்டி அவைகளைப் பூஜிக்கச் செய்கிறார்கள்.

நாங்கள் எங்கள் தெய்வங்களின் பேரால் சாலக்கிராமம், மஹாதேவனுடைய லிங்கம் முதலானவைகளை வைத்துக்கொள்ளுகிறோம். நீங்கள் உங்கள் வலிமார்கள்பேரால் கொடி ஜண்டா முதலானவைகளை நட்டுக்கொள்ளுகிறீர்கள். நாங்கள் எங்கள் தெய்வங்களின் பேரால் விக்கிரகங்கள்செய்து பூஜிக்கிறோம். நீங்கள் உங்கள் வலிமார்களுடைய கப்றுகளை வணங்குகிறீர்கள். நாங்கள் எங்கள் தேவியின் பேரால் ஜோதி கொளுத்துகிறோம். நீங்கள் உங்கள் பெரிய பீர்பேரால் விளக்குகளைக் கொளுத்துகிறீர்கள். நாங்கள் கிருஷ்ணமூர்த்தியின் வணக்கத்தில் பாட்டுகளைப் பாடுகிறோம், கூத்துகளை ஆடுகிறோம். நீங்கள் உங்கள் பீருடைய பேரால் சபை ஜோடித்து தாளம் மத்தளம் வீணை வாத்தியங்களோடு ராகங்களைக் கேட்கிறீர்கள். உங்கள் மார்க்கத்தின் பெரிய சூபியென்னும் யோகிகளெல்லாம் இவ்வகையான சபையை வணக்கமென் றெண்ணுகிறார்கள். இன்னும் அவர்கள் அந்தச் சபையில் ஒலுச் செய்துகொண்டு உட்காருகிறார்கள். இன்னும் சில முஸ்லிம்கள் உங்கள் பெரியோர்கள் அடங்கியிருக்கும் கப்றுகளின்

வணக்கத்தில் கஞ்சினியென்னும் தாசிகளைவைத்து நாட்டியம் பண்ண ச் செய்கிறார்கள். நீங்கள் முந்தி, இந்துக்கள் வேடிக்கை விளையாட்டை வணக்கமென் றெண்ணுகிறார்களென்று எங்கள்பேரில் ஆட்சேபஞ் சொன்னீர்களே, இப்பொழுது பாருங்கள்; இந்தச் சபையும் தாளம் மத்தளம் வீணைவாத்தியம் கஞ்சினி நாட்டியம் முதலான இவைகளும் வேடிக்கையும் விளையாட்டுமா யிருக்கின்றதே.

பின்பு இந்த எல்லாக்கெடுதிகளும், ஆண்டவனைத்தவிர மற்றவர்களை லாபநஷ்டங் கொடுக்கிறவர்களென் றெண்ணுகிறதும் உங்கள் மார்க்கத்திலு முண்டா யிருக்கின்றது. ஆகையால், நீங்கள் எங்கள்பேரில் ஆக்ஷேபஞ் செய்கிறது வீணாயிருக்கின்றது என்றால்,

அதற்கு மறுமொழி.

நமக்கும் உங்களுக்கும் வாதமிருக்கிற தெல்லாம் மார்க்கத்தைக் குறித்தேயொழிய ஜனங்களின் நடவடிக்கையைக்குறித்தல்ல. எங்கள் மார்க்கத்துக்கு மூலாதாரம் குர்ஆன்ஷரீபும், அதீதுமா யிருக்கின்றது. உங்கள் மார்க்கத்துக்கு மூலாதாரம் வேதமும் சாஸ்திரமுமா யிருக்கின்றது. ஆகையால் நாங்கள் உங்கள் மார்க்கத்தின் எந்தக் காரியங்களைக்குறித்து ஆக்ஷேபஞ் செய்தோமோ, அந்தக் காரியங்களெல்லாம் உங்கள் வேதத்திலும் சாஸ்திரங்களிலும் ஆகுமாயிருக்கின்றன. அப்படி நாங்கள் சொல்லுகிறது தப்பாயிருக்கும் பட்சத்தில் நீங்கள் எங்களை மறுத்து இது எங்கள் மார்க்கத்தில் ஆகாதென்று சொல்லுங்கள் பார்க்கலாம். நீங்கள் எங்கள்பேரில் ஆக்ஷேபமாக, உங்கள் மார்க்கத்திலும் ஆண்டவனைத் தவிர மற்றவர்களை வணங்குவது ஆகுமா யிருக்கிறதென்றும், தெரியாத முஸ்லிம்களில் வழங்கி வருகிற இன்னும் சிலகாரியங்களையும் சொன்னீர்களே, அவைகளைக் குறித்து அவர்களிடத்திலேயே உங்கள் பிரியம்போல் கேட்டுக்கொள்ளுங்கள். இந்த ஆக்ஷேபங்க ளெல்லாம் எங்கள் மார்க்கத்தின்பேரில் வரமாட்டாது. இவைகளில் ஒன்றாவது எங்கள் மார்க்கத்தில் ஆகாது. இவைகளெல்லாம் குர்ஆன்ஷரீபுக்கும் ஹதீதுக்கும், நேர்விரோதமா யிருக்கின்றன, இப்பேர்ப்பட்ட சங்கதிகளை எங்கள் மார்க்கத்தில் ஷிர்க்கென்றும், பித்அத்தென்றும் சொல்லுகிறார்கள். ஷிர்க்கென்றால் யாதொருவனை அல்லது யாதொன்றை ஆண்டவனுக்குச் சமானமாக்குவது. பித்அத்தென்றால் ஹஜரத்து நபி சல்லல்லாகு அலைகி வசல்லமுடைய காலத்திலும் அவர்களின் அஸ்காபுகளுடைய காலத்திலும் ஏற்படாத நூதன காரியத்தை ஜனங்கள் மார்க்கத்தின் காரியமென்றெண்ணிச் செய்வதாம். எங்கள் மார்க்கத்தில் ஷிர்க்கு பித்அத்து இவைகளுக்குச்

சரியான பாவம் ஒன்றுமில்லை. இந்தக் காரியங்களைத் தெரியாத முஸ்லிம்கள் உங்களைப்போன்ற இந்துக்களின் சகவாசத்தினால் கற்றுக் கொண்டார்கள். அவர்கள் செய்கிறதினால் அதற்கு யாதொரு நம்பிக்கையில்லை. எங்கள் மார்க்கத்தில் இந்த வேலைகள் ஆகவே ஆகாது. மேலும் அல்லாவுடையவும் ரசூலுடையவுமான உத்திரவுக்கு முற்றிலும் விரோதமானவைகளா யிருக்கின்றன. எங்கள் மார்க்கத்தில் ஷிர்க்குடைய கெடுதியைக் குறித்துச் சொல்லியிருக்கிற அவ்வளவு, மற்றவைகளைக் குறித்துச் சொல்லவில்லை. ஆண்டவன் திருவுளமாயிருக்கிறதைப் பாருங்கள்.

ان الله لايغفران يشرك به ويغفر مادون ذلك لمن يشاء *

"மெய்யாகவே ஆண்டவன் தனக்கு ஷிர்க்கு செய்வதை மன்னிக்கமாட்டான். அதைத் தவிர உள்ள பாவத்தை அவன் நாடினவனுக்குப் பொருப்பான்" என்பதே.

இன்னும் ஆண்டவன் தன்னுடைய ஹபீபு முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுக்குத் திருவுளமாகிறதைப் பாருங்கள்.

قل لا املك لنفسي نفعا ولاضرا الا ماشاء الله ولو كنت اعلم الغيب
لاستكثرت من الخير وما مسني السوء ان انا الا نذير و بشير لقوم يؤمنون *

"ஆண்டவன் நாடினதன்றி, நான் என்சுயமாய் ஒரு லாபத்தையாவது நஷ்டத்தையாவது அனுபவிக்கமாட்டேன். நான் கைபென்னும் மறைவான சங்கதிகளை அறிகிறதாயிருந்தால் அநேக நன்மைகளைச் சேகரித்துக்கொள்வேன். எனக்குத் தீமையும் அணுகாது. என் வேலையெல்லாம் மூமினானவர்களுக்குச் சொர்க்கத்தின் நல்மாராயம் சொல்லுகிறதும், நரகத்தின் அச்சம் பூட்டுகிறதுந்தான் என்று நீர் சொல்லும்" என்பதே.

பாருங்கள் ஹஜரத்து முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமுடைய மர்த்தபா சர்வலோகத்திலும் மேலிட்டிருந்தும் ஆண்டவன் அவர்களைக்கூட லாப நஷ்ட முண்டாக்குகிறவர்களாகவும், கைபை அறிகிறவர்களாகவு மாக்கவில்லை. பின்பு, மற்றவர்களால் லாபத்தை ஆசிக்கிறதும் நஷ்டத்தை பயப்படுகிறதும் இன்னும் அவர்கள் கைபை அறிவார்களென்று அவர்களிடம் கோரிக்கைகளைக் கேள்க்கிறதும் எப்படி ஆகும்.

இன்னும் الطيرة شرك உயிர்ப் பிராணிகளின் சப்தத்தினால் சகுனம் பார்க்கிறது ஷிர்க்கென்று ஹதீதில் வந்திருக்கின்றது. இன்னும்

من اتي عرافا فسئله عن شيئ لم يقبل له صلوة اربعين ليلة *

யாதொருவன் மறைவான சங்கதிகளைக் காட்டுகிறவனாகிய குறி சொல்லுகிறவன், சோதிடசாஸ்திரி, கட்டையுருட்டி, பால் பார்க்கிறவன் அல்லது பிராமணன்போலொத்தவனிடம் வந்து, அவனிடத்தில் யாதொன்றைக் கேட்டானாகில். அவனுடையதொழுகை நாற்பது இரவுகளுக்கு கபூலாகாதென்று ஹதீதில் வந்திருக்கின்றது.

இன்னும் *لعن الله من ذبح لغير الله ஆண்டவனைத் தவிர யாதொருவரைக் கனம் பண்ணுவதில் மிருகங்களை அறுக்கிறவன்பேரில் ஆண்டவன் லானத்து செய்கிறானென்று ஹதீதில் வந்திருக்கின்றது.

இன்னும் من احلف بغير الله فقد اشرك யாதொருவன் ஆண்டவனைத் தவிர வேறொருவருடையபேரால் சத்தியம் பண்ணுவானாகில் திடனாக அவன் முஷ்ரிக்காய் விட்டானென்று ஹதீதில் வந்திருக்கின்றது.

இன்னும் தப்ஸீரு அஜீஜியில் எழுதப்பட்டிருக்கிற தென்னவென்றால், ஒருவர் நபி சல்லல்லாகு அலைகி வசல்லமுடைய சமுகத்தில், அல்லாவும் தாங்களும் நாடின காரியம் நடக்குமென்றதற்கு, நபி சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள், جعلتني لله ندا بل ماشاء الله وحده * அவரைநோக்கி நீ என்னை அல்லாவுக்குச் சமானமாக்கினாய். அப்படியல்ல; அல்லாமாத்திரம் நாடினதுதான் நடக்குமென்றார்கள் என்பதே. இதனால் அல்லாவும் றசூலும் உன்னைச் சந்தோஷமாக்கி வைப்பார்களென்றுவது அல்லாவும் பீர்சாகிபும் உன் கோரிக்கைகளை நிறைவேற்றுவார்களென்றுவது சொல்லுகிறது ஆகாதென்று தெரியவருகின்றது, இன்னும்

يسال احدكم ربه حاجته كلها حتي الملح ويسئله ششع نعله اذا انقطع*

ஒவ்வொருவனும் தனக்கு வேண்டியவைகளைத் தன் ஆண்டவனிடத்திலேயே கேட்பான். எதுவரையிலென்றால், உப்பைக்கூட ஆண்டவனிடத்திலேயே கேட்பான். செருப்பின் வார் அறுந்துபோனால் அதையும் ஆண்டவனிடத்திலேயே கேட்பான் என்று ஹதீதில் வந்திருக்கின்றது. அதாவது, அற்பவஸ்துவாயினும் ஆண்டவனிடத்திலேயே கேட்கவேண்டுமென்பதாம்.

இன்னும் பவுஸால் கபீர் என்னும் கிதாபில் எழுதப்பட்டிருக்கிற தென்னவென்றால், ஷிர்க்கென்பது ஆண்டவனுக்குச் சொந்தமான ஸிபத்துகளென்னும் லக்ஷணங்களில் மற்றவர்களைக் கூட்டாக்குகிறது. எப்படியென்றால், ஆண்டவன் தவிர மற்ற யாதொருவர் விஷயத்தில், அவர் நாடினது உடனே ஆய்விடுமென்றாவது, அல்லது பார்வை கேள்வி முதலான ஐயறிவன்றி அல்லது புத்தியின் திருஷ்டாந்தமன்றி அல்லது இல்ஹாமென்னும் உதிப்பன்றி அவருக்கு அறிவு உண்டாகிறதென்றாவது, அல்லது அவர் யாதொருவன்பேரில் கோபமானால் அல்லது முனிந்தால் அவன் ஏழையாக அல்லது வியாதியுள்ளவனாக அல்லது மற்ற ஆபத்துக்களில் அகப்பட்டவனாக ஆய்விடுவானென்றாவது, அல்லது அவர் யார்பேரில் கிருபையாகிறாரோ அவன் சவுக்கிய முள்ளவனாக அல்லது சீமானாக ஆய்விடுவானென்றாவது, அல்லது அவர் யாதொரு வியாதியஸ்தனுக்கு ஆரோக்கியத்தியத்தைக் கொடுப்பாரென்றாவது எண்ணுகிறது. இந்த எண்ணத்தினால் ஷிர்க்கு சம்பவிக்கும் என்பதே.

இதனால் ஆண்டவனைத் தவிர மற்ற யாதொருவரிடத்தில் ரிஸ்க்கு கேட்கிறது, அல்லது வியாதியஸ்தனுக்குச் சவுக்கியம் கொடுக்கும்படி கேட்கிறது, அல்லது அதிகவயசைக் கேட்கிறது, இன்னும் அவருடைய கோபத்துக்குப் பயந்து அல்லது அவரால் பிரயோசனத்தை ஆசைவைத்து அவருக்குக் காணிக்கைச் செலுத்துகிறது இவை முதலானவைகள் ஷிர்க்கென்று தெரிய வருகின்றன.

இன்னும் தப்ஸீரு அஜீஜியில் எழுதப்பட்டிருக்கிற வாசகத்தின் கருத்தென்னவென்றால், ஆண்டவனுடைய பேரைப்போல் மற்றவர்களுடைய பேரை உச்சரிக்கிறதும், அப்துர் றசூல், பந்தேஅலி, அப்துந் நபி, பந்தேஹைதர், ஹுசைன்பக்ஷ், பீர்பக்ஷ், மீறான்பக்ஷ், பீரான்பக்ஷ், மஹ்றூப் பக்ஷ், கலந்தர் பக்ஷ், பூஅலி பக்ஷ், பன்வி பக்ஷ், சாலார்பக்ஷ், மதார்பக்ஷ் காஜாபக்ஷ், இமாம்பக்ஷ், சுல்த்தான்பக்ஷ், இப்படிப்போல் பிள்ளைகளுக்குப் பேரிடுகிறதும், ஆண்டவனைத் தவிர மற்றவர்களுடைய பேரால் ஜீவராசிகளை அறுக்கிறதும், நேர்ச்சை செய்துகொள்ளுகிறதும், அல்லது ஆபத்து நீங்குகிறதற்காக யாதொருவரைக் கூப்பிடுகிறதும், அல்லது அவரால் லாபநஷ்டமுண்டாகுமென்றெண்ணுகிறதும் இவைகளெல்லாம் ஷிர்க்குடைய காரியங்களாயிருக்கும். ஆனால் யாதொரு பெரியோரை வஸீலாப் பிடித்து ஆண்டவனிடம் ஆண்டவனே! நான் இன்ன பெரியோரின் வஸிலாவினால் உன்னிடம் கேட்கிறேன். நீ என்னுடைய இன்ன கஷ்டத்தை இலேசாக்கி வையென்று கேட்கிறது ஆகும் என்பதே.

இன்னும் தூர்ருல் முக்தாரில் எழுதப்பட்டிருக்கிற தென்னவென்றால்,

مايفعلون من تقبيل الارض بين يدي العلماء والعظماء فحرام والفاعل والراضي به آثمان*

ஆலிம்களுடையவும் பெரியோர்களுடையவும் முன்னால் பூமியை முத்தமிடுகிறது ஹராமா யிருக்கும். அப்படிச் செய்கிறவனும் அதைச் சம்மதிக்கிறவனும் ஆகிய இருவரும் குற்றவாளிகளா யிருக்கிறார்கள் என்பதே.

இன்னும் ஹஜரத்து காஜிசனுவுல்லா றக்மத்துல்லாகி அலைகி தங்கள் இர்ஷாதுத்தாலிபீன் என்னும் கிதாபில் எழுதியிருக்கிற தென்னவென்றால். யாஷைகு அப்துல்காதி ரென்கிறதும், யா காஜா ஷம்சுத்தீனே துர்கே பானிப்பட்டி யென்கிறதும் ஆகாது. ஆனால் பெரியோர்களின் வஸீலாப் பிடித்து ஆண்டவனிடம் கேட்கிறது ஆகும் என்பதே.

ஆகக்கூடி எங்கள் மார்க்கத்தில் ஆண்டவனைத்தவிர மற்றவர்களை வணக்கத்துக் குரியவர்களாய் நியமித்துக்கொள்ளுவதும், கோரிக்கைகளை நிறைவேற்றுகிறவர்களென்றும் லாப நஷ்டம் கொடுக்கிறவர்களென்று மெண்ணுவது ஆகாது. மேலும் ஷிர்க்கா யிருக்கின்றது.

இன்னும் விளையாட்டும் வேடிக்கையுமான சபையை சூபியாக்கள் வணக்கமென் றெண்ணுகிறார்களென்று நீங்கள் சொன்னீர்களே, கேளுங்கள். எங்கள் மார்க்கத்தில் ஒருவன் சூபியாகிறது மகா கஷ்டம். எவன் தன் துராசைகளை விட்டு முற்றிலும் மார்க்கத்திற்குக் கீழ்ப்படிந்து வணக்கங்களினாலும் தெண்டிப்பினாலும் தன் இருதயத்தைச் சுத்தப்படுத்தினானோ அவனையே எங்கள் மார்க்கத்தில் சூபியென்றுசொல்லுகிறார்கள். தாளம் மத்தளம் வீணை வாத்தியங்களைக் கேட்கிற இந்த ஜனங்களோ, தங்கள் அவிவேகத்தினாலும் அசட்டையினாலும் இப்பேர்பட்ட சபைகளுக்கு வரத்துப்போக்கா யிருக்கிறார்கள். எவர்களுடைய சில குணங்களைக் குறித்து நாலாவது பிரிவில் சொல்லபட்டிருக்கிறதோ அவர்கள்தான் மெய்யான சூபிகள். சூபிகளிடத்தில் ஒரு மூச்சாவது ஆண்டவனுடைய நினைவைவிட்டு மறதியாகிறது கூடாதே; விளையாட்டும் வேடிக்கையும் அவர்களிடத்தில் எப்படியாகும். எங்கள் மார்க்கத்தில் விளையாட்டும் வேடிக்கையும் விலக்கானதா யிருக்கின்றது. ஆண்டவன் சூறத்து அன்ஆமில்,

وذر الذين اتخذوا دينهم لعبا ولهوا وغرتهم الحيوة الدنيا*

"விளையாட்டையும் வேடிக்கையையும் தங்கள் மார்க்கமாக எடுத்துக்கொண்டவர்களையும், பூலோக வாழ்க்கை அவர்களை மறதியாக்கி வைத்ததே அவர்களையும், விட்டு நீங்குங்கள்" என்று திருவுளமா யிருக்கிறான். இன்னும் சூறத்து லுக்மானில்,

ومن الناس من يشترى لهو الحديث ليضل عن سبيل الله بغير علم ويتخذها هزوا اولئك لهم عذاب مهين*

அறிவில்லாமல் ஆண்டவனுடைய பாதையை விட்டு வழிகெடுக்கிறதற்காக விளையாட்டான வார்த்தைகளை விலைக்கு வாங்குகிறவர்களும் அதைப் பரிகாசமாக்கிக் கொள்ளுகிறவர்களுமான சில ஜனங்களுண்டு. அவர்களுக்குச் சிறுமையான வேதனை யுண்டாகின்றது" என்று திருவுளமா யிருக்கிறான்.

இந்த ஆயத்தாகிறது இராக வாத்தியத்தினுடைய பழிப்பில் இறங்கினதென்று குர்ஆன் ஷரீபில் முபஸ்ஸிரீன்களென்னும் வியாக்கியானிகள் எழுதி யிருக்கிறார்கள்.

இன்னும் *وامرني ربي بمحق المعازب والمزامير "மஆஸிபையும், மஸாமீரையும், அழிக்கும்படி ஆண்டவன் எனக்கு உத்திரவு செய்திருக்கிறான்" என்று நபிசல்லல்லாகு அலைகி வசல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். மஆஸிபென்பது கையினால் அடிக்கப்படுகிற வாத்தியம். மஸாமீரென்பது வாயினால் ஊதப்படுகிற வாத்தியம். இவ்விதமாய் மிஷ்க்காத்து ஷரீபில் எழுதப்பட்டிருக்கின்றது.

இன்னும் எங்கள் மார்க்கத்தின் வெகு பிரபல்லியமான நான்கு இமாம்களுண்டு. அவர்கள் யாரென்றால், ஹஜரத்து இமாம் அபூஹனிபா றகமதுல்லா, ஹஜரத்து இமாம் மாலிக்கி றஹமதுல்லா, ஹஜரத்து இமாம் ஷாபியீ றஹமதுல்லா, ஹஜரத்து இமாம் அகமது ஹம்பல் றஹமதுல்லா இவர்களே, இந்த நான்கு இமாம்களிடத்திலும் வாத்தியங்களைக் கொண்டு இராகம் கேட்கிறது ஹராமாயிருக்கின்றது. ஆனால் பெருநாள்களில் எப்போதாவது அல்லது கல்யாணத்தில் யாதொருவன் தாயிரா கொட்டினாலும் அல்லது மங்களமான வாசகத்தையுடைய அல்லது யுத்தவீரர்களின் புகழ்ச்சியுள்ள கஸல் என்னும் பாடல்களைப் பாடினாலும் குற்றமில்லை. ஏனென்றால், இவ்வளவில் யாதொரு மறதியுண்டாகாது. இதின்பேரில் நேமமாய் எப்

போதும் செய்கிறதுதான் ஆகாது. அது மறதிக்குக் காரணமா யிருக்கின்றது.

இன்னும் இக்காலத்தில் எங்கள் சூபியாக்களின் நான்கு தரீக்குகள் என்னும் வழிகள் அதிக பிரபல்லியமானவைகளா யிருக்கின்றன. அவைகளாவன:—காதிரீ, சுஹர்வர்தீ, நக்ஷபந்தீ, சிஷ்த்தீ. இந்தநான்கு தரீக்குக்கு ஹஜரத்து மஹ்பூபு சுப்ஹானி குத்துபு றப்பானி ஷைக் அப்துல்காதிர் ஜெய்லானி அவர்கள் இமாமா யிருக்கிறார்கள். அவர்கள் ஒருபோதாவது அப்பேர்ப்பட்ட சபையை யுண்டாக்கவில்லை. மேலும்தாங்கள் கோர்வைசெய்திருக்கிற குன்யத்துத் தாலிபீன் என்னும் கிதாபில் இந்தச்சபை தாள மத்தளம் போலொத்த பாவமான வாத்தியங்களை விட்டு ஒழிந்திருந்தால் ஆகுமென்றும், அந்த வாத்தியங்களில் யாதொன்று அந்தச் சபையில் உண்டா யிருந்தால் அவைகளெல்லாம் ஹறாமாக்கப் பட்டவைகளா யிருப்பதால், அவ்விடத்தில் உட்காரக் கூடாதென்றும் எழுதி யிருக்கின்றார்கள்.

இன்னும் சுஹர்வர்திய்யா தரீக்குக்கு ஹஜரத்து ஷிஹாபுத் தீனெ சுஹர்வர்தி றஹ்மதுல்லா இமாமா யிருக்கிறார்கள். அவர்களாலும் இப்பேர்ப்பப்பட்ட சபை ஏற்படவில்லை. மேலும் அவர்களின் பிரதானமான முரீதென்னும் சிஷியர் ஹஜரத்து முஸ்லிஹு த்தீன் சாதி ஷீறாஸிறஹ்மதுல்லா தாங்கள் கோர்வைசெய்த குலிஸ்தான் என்னும்கிதாபில், நான் முதலில் வாலிப இச்சையினால் இராகங்கேட்கிறவனா யிருந்தேனென்றும், பின்பு தவ்பாச் செய்து ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேனென்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்போது யோசியுங்கள். மன்னிப்புக் கேட்கிறது பாவத்துக்காகவா? வணக்கத்துக்காகவா?

இன்னும் நக்ஷபந்திய்யா தரீக்குக்காரருக்கு இராகத்தைக் குறித்துள்ள கடினமான நிராகரிப்பு எல்லாருக்கும் தெரிந்திருக்கின்றது. இனிச் சிஷ்த்திய்யா தரீக்குமட்டும் பாக்கியாயிருக்கின்றதோ? அந்தத் தரீக்கின் இமாம்கள்கூட வாத்தியங்களுடன் இராகம் கேட்க வில்லை, யாதொருவன் அவர்கள் அப்படிக் கேட்டதாக யாதொரு சரித்திரம் சொல்லுவானாகில், அது சுத்தத் தப்பும் ஆதாரமில்லாததும் கட்டுக் கதையுமா யிருக்கும். ஆனால் இம்மாத்திர முண்டு. சில பெரியோர்கள், சந்தடியற்ற ஓர் இடத்தில் உட்கார்ந்து தங்கள் முரீதுகளின் நாவினால் எப்போதாவது ஒரு வேளாவேளை அல்லா ரசூலுடைய புகழை அல்லது எதைக்கேட்டால் ஒருவிதப்பேரின்ப முண்டாகுமோ அப்படிக்கொத்த வாசகமுள்ள இராகத்தைக் கேட்டிருக்கிறார்கள். அப்

வ்விடத்தில் தாளமத்தளமென்ன; மற்ற விளையாட்டும் வேடிக்கையும் நடக்க என்ன சக்தி யிருக்கின்றது. இப்பேர்ப்பட்ட இராகங்கூட எல்லாரும் கேட்கவில்லை. சிலர்மாத்திரம் கேட்டிருக்கிறார்கள். சிலர் அதைக்குறித்து நிராகரித்துக்கொண்டே யிருந்திருக்கிறார்கள். உதாரணமாக, ஹஜரத்து நிஜாமுத்தீன் அவ்லியா ஒரு வேளாவேளை இராகம் கேட்கிறவர்களா யிருந்தார்கள், அவர்களின் கலீபாவாகிய ஹஜரத்து நசிறுத்தீனே சறுகே தெஹ்லி என்பவர்கள் இராகத்தைக் குறித்து நிராகரிக்கிறவர்களா யிருந்தார்கள். ஒருவர் ஹஜரத்து நஸீருத்தீனிடத்தில் உம்முடைய பீர் இராகம் கேட்கிறாரே, நீர் ஏன் கேட்கிறதில்லை என்றதற்கு, அவர்கள், யாதொரு பீர் மார்க்கத்துக்கு விரோதமான யாதொரு காரியஞ் செய்தால் அந்தக் காரியத்தில் பீரைப் பின்பற்றி நடக்கக் கூடாதென்றார்கள். அவர்கள் அப்படிச் சொன்னதை அந்த மனிதன் ஹஜரத்து நிஜாமுத்தீன் அவ்லியா யிடத்தில் சொல்லிவிட்டார். அதற்கு அவர்கள், நஸீருத்தீன் உண்மை சொல்லுகிறார். மார்க்க விரோதமான காரியத்தில் பீரைப் பின்பற்றக் கூடாதென்பது மெய்யே என்றார்கள்.

இன்னும் ஹஜரத்து காஜி ஸியாவுத்தீன் சாகிப் மர்கூமே ஷாமீ என்பவர்கள், ஹஜரத்து நிஜாமுத்தீன் அவ்லியா இராகம் கேட்கிறதைப்பற்றி அவர்களின்பேரில் வெறுப்பா யிருந்தார்கள். ஹஜரத்து காஜி ஸியாவுத்தீன் சாகிபவர்கள் மரண வியாதியா யிருக்கும் பொழுது, ஹஜரத்து நிஜாமுத்தீன் அவ்லியா ஷெ காஜி சாகிபர்களை நசல்வினவ வந்து, மார்க்க ஒழுங்குப்படி உள்ளே வர உத்திரவு கேட்டார்கள். அதற்கு ஷெ காஜி சாகிபவர்கள், என் காலம் கடைசியாய் விட்டது. நான் என் நாயனிடம் சேருகிறேன். இந்த வேளையில் பித்அத்தியானவர் என் முன்னேவர எனக்குப் பிரியமில்லை யென்றார்கள். அதற்கு நிஜாமுத்தீன் அவ்லியா அவர்கள் பித்அத்தியானவன் பித்அத்தை விட்டுத் தவுபாச் செய்து வந்திருக்கிறானென்று காஜிசாகிபிடம் சொல்லுங்க ளென்றார்கள். காஜி சாகிபவர்கள், இந்த வார்த்தையைக் கேட்டவுடனே, தங்கள் தலைப்பாகையைக் கொடுத்து, இதை ஹஜரத்து நிஜாமுத்தீனுடைய பாதத்தின்கீழ் விரித்து, தாங்கள் இதின் பேரில் நடந்து உள்ளே வரும்படி கோருகிறேனென்று சொல்லுங்க ளென்றார்கள் என்றும், பின்பு ஹஜரத்து நிஜாமுத்தீன் அவ்லியா அவர்கள் அந்தத் தலைப்பாகையை மரியாதையுடன் வாங்கித் தலையின்மீது வைத்துக்கொண்டு உள்ளே சென்றார்கள் என்றும், பின்பு எப்பொழுது வெளியே வந்தார்களோ அப்பொழுதே ஹஜரத்து காஜி சாகிபவர்கள் பரலோகத்துக் கெழுந்தருளினார்க ளென்றும்; அவர்க

லோ அடக்கம் செய்கிற வரையில் ஹறஜரத்து நிஜாமுத்தின் அவ்லியாவி ன் கண்ணீர் நிற்கவில்லை யென்றும் ரிவாயத்து செய்யுப்பட் டிருக்கி ன்றது.

இன்னும் இவ்விதமான இராகமும் அந்தச் சில பெரியோர்கள் சி ல நிபந்தனையான விதிகளுடன் கேட்டிருக்கிறார்கள். அவைகளாவன:—

அந்தச் சபையில் யாதொரு வாலிபனாவது பெண் பிள்ளையாவது அழகிய சிறு பையனாவது இருக்கக் கூடாது.

இராகத்துக்குக் கூலி வாங்குகிற சங்கீதவா னிருக்கக் கூடாது.

இராகத்தின் வாசகம் குப்ரும் பாவமுமானதா யிருக்கக்கூடாது.

அந்த வாசகத்தில் உயிராயிருக்கிற யாதொரு ஆசைநாயகி அல்ல து ஆசை நாயகனுடைய புகழிருக்கக் கூடாது.

இராகத்துடன் தாளம், மத்தளம், தம்பூர், வீணை முதலிய வாத் தியங்க ளிருக்கக் கூடாது.

அப்பொழுது தொழுகையின் நேரமா யிருக்கக் கூடாது.

அந்தச் சபையில் யாதொரு தேருத முரீது யிருக்கக் கூடாது என்பவைகளே.

இவ்வளவு கட்டுப்பாடுகளில் வேடிக்கை விளையாட்டு எங்கேயிரு க்கிறது பாருங்கள். அப்படி யிருந்தும் அந்தப் பெரியோர்கள் அ தை அழகென் றெண்ணவில்லை. மார்க்கத்தின் யாதொரு ஆலிமான வர் அதைக் குறித்து அவர்களை நிராகரித்தபொழுது. அவர்கள் தாங் கள் செய்தது குற்றமென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

உங்கள் பெரியோர்களோ மேற் சொன்னபடி விளையாட்டும் வே டிக்கையும் பாவங்களும் குற்றங்களுமே அவர்களின் நடவடிக்கைகளா யிருந்தன.

மேற்சொன்ன சங்கதிகளால், யாதொரு ஹிந்து நமதுபேரில் ஆ ட்சேபமாக. நீங்கள் இப்போது சொல்லிவந்தபடி உங்கள் முன்னோ ர்களாகிய பெரியோர்களின் ஒரு சக்தியு மிருந்ததில்லை யென்றும், அ வர்கள் யாதொருவனுக்கு யாதொரு லாபமாவது நஷ்டமாவது உண் டாக்காத சுத்த அசக்தரா யிருந்தார்களென்றும் தெரியவந்தது. எ ங்கள் முன்னோர்களாகிய பெரியோர்கள் அதிக சக்திமான்களா யிருந் தார்கள், அவர்களிடத்தில் ஜனங்கள் தங்கள் கோரிக்கைகளைக் கே ட்டுத் தங்கள் எண்ணப்படி பெற்றுக்கொள்ளுகிறார்களென்று சொன் னால்; அதற்கு மறுமொழியாவது, நாங்கள் மேற்சொன்ன சங்கதிக

னால் எங்கள் முன்னோர்களாகிய பெரியோர்களில் ஒரு சக்தியு மிருந்த தில்லை என்று ஏற்படவில்லை. ஆனால் அவர்கள் ஆண்டவனுக்குச் ச மானமானவர்க ளல்லவென்றும், ஆண்டவனுக்கு முன்னால் (உங்களு க்கு எங்களுக்கு முன்னாலல்ல) சக்தி யில்லாதவர்களா யிருக்கிறார்க ளென்றும் ஏற்பட்டது. யாதொருவருக்கு லாபநஷ்டம் உண்டாக்குவ து இரண்டுவகைப்பட் டிருக்கின்றது. அதில் ஒன்று தன்சுயமாய் ஒரு வருக்கு லாபநஷ்டத்தை யுண்டாக்கச் சக்தி வைத்திருக்கிறது. இது ஆண்டவனுக்கே சொந்தம். மற்ற ஒருவருக்கும் இந்தச்சக்தியில்லை. நபியானாலும் வலியானாலும் சரி. இன்னுமொன்று நபியாவது வலி யாவது ஆண்டவனுடைய சமுகத்தில் யாதொருவருக்காகத் துவாகே ட்டால் அவர்களின் துவா அங்கீகரிக்கப் படுகின்றது. இவ்வகையா ன லாபம் எங்கள் பெரியோர்களால் அநேகமாயிரம்பேருக்குக் கிடை த்திருக்கின்றது. இன்னும் சில கொடியர்களுக்கும் துஷ்டர்களுக்கு ம் அவர்களின் துவாவினால் நஷ்டம் நேரிட்டிருக் கின்றது. இதி ன் நிமித்தமே எங்களின் எல்லா உலமாக்களிடத்திலும் யாதொரு வன் ஜீவித்திருக்கிற யாதொரு பெரியோரிடத்தில் போய், தாங்கள் எனக்காக என்னுடைய இன்ன கோரிக்கையை நிறைவேற்றி வைக் கும்படி ஆண்டவனிடத்தில் துவா கேளுங்களென்று சொல்லுகிறது ஆகுமா யிருக்கின்றது. நீங்கள் என் கோரிக்கையை நிறைவேற்றி வையுங்க ளென்று சொல்லக் கூடாது. இதைத்தவிர மவுத்தாய்ப் போன பெரியோர்களின் கப்றினிடம் போய் அவர்களிடத்தில், தாங்கள் எனக்காக ஆண்டவனிடம் துவா செய்யுங்களெனச் சொல் லுவது ஆகுமென்று சில சூபியாக்களாகிய மஷாயிகுகள் சொல்லுகிறா ர்கள். ஆனால் தொலை தூரத்திலிருந்து எந்தப் பெரியோர்களையும் கூ ப்பிடக் கூடாது. ஏனென்றால், எந்த வேளையிலும் எந்தச் சங்கதியும் ஆண்டவனுக்கே யொழிய மற்றவர்களுக்குத் தெரியாது. இன்னும் எங்களின் சில பெரியோர்களுக்குச் சில வேளைகளில் ஆண்டவன் அ றிவித்ததினால் தொலை தூரத்தின் சங்கதி தெரியவந்து மிருக்கின்றது. இந்த அத்தியாயத்தின் நாலாவது பிரிவைப் பாருங்கள்.

இப்பொழுது எங்கள்பெரியோர்களால் ஜனங்களுக்குக் கிடைத் திருக்கிற பிரயோசனங்களைக் கொஞ்சம் காது தாழ்த்திக் கேளுங்கள். முதலாவது எல்லாப் பெரியோர்களிலும் சிரேஷ்டமானவர்களும், மு தன்மையானவர்களும் பெரியோர் ஹ்ஜரத்து முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமா யிருக்கிறார்கள். அவர்களால் உண்டான பிரயோஜன ங்கள் அளவிலடங்காதவைகளா யிருக்கின்றன. அக்கால முதல் கியா மத்து நாள் வரையில் எத்தனை முஸ்லிமான ஆண்பெண்களிருக்கிறார்க

ளோ, அவர்களெல்லாம் ஹஜரத்து நபியவர்களின் பொருட்டாலும் அவர்களின் வழிகாட்டலாலும் நரகத்தைவிட்டுத் தப்பிச் சொர்க்கத்துக்கு ஆளானார்கள். இன்னும் முஸ்லிமானவர்கள் செய்கிற கருமங்களைத் திங்கட்கிழமையும் வெள்ளிக்கிழமையும் மலக்குகள் ஹஜரத்து நபியவர்களின் சமுகத்தில் அறிக்கை யிடுகிறார்களென்றும், ஹஜரத்தவர்கள் நல்ல கருமங்களை எப்போது மழியாத சாதனத்தில் எழுதச்செய்கிறார்களென்றும், கெட்ட கருமங்களைக்கேட்டால் முஸ்லிமானவர்களுக்காக ஆண்டவனிடத்தில் மன்னிப்புக் கேட்கிறார்களென்றும் அதீதில் வந்திருக்கிறது. பாருங்கள் இந்தப் பிரயோசனம் நாளதுவரைக்கும் நடந்துவருகின்றது.

இன்னும் கியாமத்து நாளில் ஹஜரத்தவர்களின் (ஷபாஅத்தென்னும்) மன்றாட்டத்தினால் பாவிகள் மன்னிக்கப்படுவார்கள். சிலர் வேதனையின்றி மன்னிக்கப்படுவார்கள். சிலர் நரகத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள். இன்னும் ஹஜரத்தவர்களால் ஜனங்களுக்குக் கிடைத்திருக்கிற பிரயோஜனங்களை முற்றிலும் சொல்லுகிறதா யிருந்தால், ஆயிரம் கிதாபுகளிலும் அடங்காது. இதின் நிமித்தமே, ஆண்டவன், குர்ஆன்ஷரீபில் *انا ارسلناك رحمة للعلمين "அய்முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே! நாம் உம்மைச் சர்வ லோகத்துக்கும் கிருபையானவராய் அனுப்பினோம்" என்று திருவுளமா யிருக்கிறான்.

இன்னும் ஹஜரத்தவர்களைத் தவிர இன்னும் எத்தனை நபிமார்களிருந் திருக்கிறார்களோ அவர்களாலும் இப்படிப்பட்ட பிரயோசனம் ஜனங்களுக்கு கிடைத்திருக்கிறது. நபிமார்களுக்குப் பிந்தினவர்கள் வலிமார்களா யிருக்கிறார்கள். அவர்களாலும் பிரையோசனமென்கிற அனேக ஊற்றுக் கண்கள் சுறந்திருக்கின்றன. சொந்தமாக ஹஜரத்தவர்களின் அஹ்லுபைத்தென்னும் வம்சத்தாரினாலும் அஸ்ஹாபுகளினாலும் தாபியீன்களினாலும் சத்திய மார்க்கம் உலகத்தில் பரவினது.

அவர்களுக்குப் பின்னால் ஹதீதுடைய இமாம்களாகிய ஹஜரத்து முகம்மதுப்னு இஸ்மாயில் புகாரி, ஹஜரத்து முஸ்லிம், ஹஜரத்து திர்மதி, ஹஜரத்து நிஸாயி, ஹஜரத்து இப்னுமாஜா, ஹஜரத்து அபுதாவூது, றஹிமஹூமுல்லா முதலானவர்களும்,

இன்னும் பிக்ஹூடைய இமாம்களாகிய ஹஜரத்து அபூஹனீபா, ஹஜரத்து மாலிக்கி, ஹஜரத்து ஷாபியி, ஹஜரத்து அகுமது ஹம்பல்;

ஹஜரத்து அபூயூசுபு, ஹஜரத்து இமாம் முகம்மது, ஹஜரத்து சுப்யான், ஹஜரத்து ஸுபர் றஹிமஹுமுல்லா முதலானவர்களும்,

இன்னும் அக்காயிதுடைய இமாம்களாகிய ஹஜரத்து அபுல்ஹசன் அஷ்அரிய்யி, அஜரத்து அபூமன்சூறுல் மாதுறைத்திய்யி றகிமகுமுல்லா முதலானவர்களும், இன்னும் சுலூக்கு, தஸெளவ்வுபு, மாரிபாவுடைய இமாம்களாகிய அஜரத்து அசன்பசரி, அஜரத்து ஜுனைது, அஜரத்து ஷிப்லி, அஜரத்து ஷேக்அப்துல்காதர் ஜெய்லானி, அஜரத்து மௌலூதேச் சிஷ்த்தி, அஜரத்து இமாம் கஸ்ஸாலி, அஜரத்து அஹமதே ஸர்ஹிந்தி, அஜரத்து முஜத்திதே அல்ப ஸானி றஹ்மதுல்லா முதலானவர்களும் இவர்களைத் தவிர இன்னும் அனேக இமாம்களுமுண்டு. இவ்விடத்தில் அதிக பிரபல்லியமானவர்களை மாத்திரம் யெழுதப்பட்டது. இவர்களெல்லாம் நன்றாய் ஆராய்ச்சிசெய்து குர்ஆன் ஷரீப் அதீது இவைகளின் அர்த்தங்களை அறிந்து, அவைகளிலிருந்து மார்க்கத்துக்குரிய மஸ்அலாக்களை யுண்டுபண்ணி ஜனங்களுக்குக் கொடுத்தார்கள்.

உங்கள் பெரியோர்களோ ஒருவர் மற்றொருவருக்கு வஞ்சகம் செய்து அவருடைய அதிகாரத்தைப் பிடிங்கிக்கொண்டார். ஒருவர் அநேக லக்ஷம் ஜனங்களைக் குற்றமில்லாமல் சங்காரம் பண்ணினர். ஒருவர் மற்றொருவருடைய மனைவியை விபசாரமாய்ச் சேர்ந்தார். ஒருவர் மற்றொருவருடைய மூக்கை யறுத்தார். ஒருவர் மற்றொருவருக்குத் துற்குணத்தைக் காண்பித்தார். இவைகளைக் குறித்த சங்கதிகள் இரண்டாவது நாலாவது பிரிவுகளில் நடந்துவிட்டன.

இன்னும் நீங்கள், எங்கள் பெரியோர்கள் அதிக சக்திமான்களா யிருந்தார்களென்றும், அவர்களிடத்தில் ஜனங்கள் தங்கள் கோரிக்கைகளைக் கேட்டு அதின்படிப் பெற்றுக் கொள்ளுகிறார்க ளென்றும் சொன்னீர்களே ; அந்தச் சக்திமான்கள் யார் ? உங்கள் சொற்படி மகாதேவனால் உண்டுபண்ணப்பட்ட ஜலந்தரனை எல்லாருஞ் சேர்ந்துக் கொல்லமுடியாமற் போனார்களே; அந்தத் தேவர்கள்தானே உங்கள் சக்திமான்கள் ? இன்னும் அந்த ஜலந்தரன் தனது பிள்ளைப் பருவத்தில் எவருடைய தாடியைப் பிடித்து அழுகப்பண்ணினனோ அந்தப் பிரம்மாதானே உங்கள் சக்திமான் ? இன்னும் தமது கோபாக்கினியைத் தணிக்கமுடியாமலும் விக்கினேசுவரனுடைய தலையைத் தேடிப் பெற்றுக் கொள்ளாமலும் போனாரே; அந்த மகாதேவன் தானே உங்கள் சக்திமான்? இன்னும் ஒரு லிங்கமென்னும் கோசத்தை அள்ளெடுக்க முயன்று அதின் முடிவைப் பெற்றுகொள்ளாமல் போனார்களே; அந்

தப் பிரம்மாவும் விஷ்ணுவுந்தானே உங்கள் சக்திமான்கள்? இந்த எல்லாச் சங்கதிகளும் இதில் கொஞ்சம் சொல்லப்பட் டிருக்கின்றன. இதைத் தவிர மகாபாரதம் முதலான உங்கள் இதி காச புராணங்களைப் பார்வையிட்டு உங்கள் பெரியோர்கள் எப்படிப்பட்ட அசக்தரா யிருந்தார்க ளென்பதைத் தெளிந்து கொள்ளுங்கள்.

மெய்யாகவே சர்வ சக்தி யுள்ளவனு யிருக்கிறதும், எல்லா அசக்தியும் எல்லா வேண்டுதலையும் விட்டுச் சுத்தமா யிருக்கிறதும், ஆண்டவனுக்கே சொந்தமான மகத்துவமா யிருக்கின்றது. மற்றவர்களில் அந்த மகத்துவம் இல்லவே இல்லை. ஆண்டவனில் அந்த மகத்துவ மிருப்பதனுலேயே அவன் வணக்கத்துக்குரியவனு யிருக்கிறுன், இதின் நிமித்தமே, லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி என்கிறது, எங்கள் மார்க்கத்தின் விசுவாசத்திற்கு மூலாதாரப் பொருளா யிருக்கின்றது. அதாவது, ஆண்டவனைத் தவிர வணக்கத்துக் குரியவன் வேருெருவனுமில்லை. முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் ஆண்டவனுடைய தூதை ஜனங்களுக்குச் செலுத்துகிறதற்காக அவனுல் அனுப்பப்பட்ட திருத்தூதா யிருக்கிறுர்க ளென்பதாம்.

இன்னும் சில பேதைகள் ஆண்டவனை விட்டு மற்றவர்களிடத்தில் தங்கள் கோரிக்கைகளைக்கேட்டுத் தங்கள் எண்ணப்படிப் பெற்றுக் கொள்ளுகிறுர்களே, அதன் காரணமென்னவென்றுல், ஆண்டன் தனது அடிமைகளின் பேரில் கிருபையுள்ளவனு யிருக்கிறுன். யாதொருவன் யாதொருவரிடத்தில் யாதொன்றைக் கேட்டால், ஆண்டவன் அதைக் கொடுக்க நாடினுல், எவ்விதத்திலும் கொடுத்துவிடுகிறுன். எப்படியென்றுல், சிறுபிள்ளைத் தன் தாய்தகப்பனை மறந்து பால் கொடுப்பவளையே நத்தியிருக்கின்றது. அதற்கு யாதொரு வஸ்து தேவையா யிருந்தால் பால் கொடுப்பவளிடம் கேட்கின்றது. அப்பொழுது அந்தப் பிள்ளையின் தகப்பன், பால் கொடுப்பவள் ஏழையா யிருக்கிறுள், அவள் என்னத்தை அதற்குக் கொடுக்கப்போகிறு ளென்றறிந்து, அவன் தானே அந்த வஸ்துவை அதற்கு வாங்கிக் கொடுக்கிறுன். அந்த அறிவில்லாத பிள்ளை இந்த வஸ்துவைப் பால் கொடுப்பவள்தான் எனக்கு வாங்கிக் கொடுத்தா ளென்று எண்ணிக் கொள்ளுகின்றது. அப்படியே, யாதொருவன் ஆண்டவனை விட்டு மற்ற யாதொருவரிடத்தில் கேட்டால், ஆண்டவன் அவனுக்குக் கொடுத்துவிடுகிறுன். அப்பொழுது அந்தப் பேதை மனத்தன் நான் யாரிடத்தில் கேட்டேனே, அவர்தான் எனக்குக் கொடுத்தாரென்று எண்ணிக் கொள்ளுகிறுன். இந்

த எண்ணத்தினுல் அவனுடைய ஷிர்க்கு அதிகரித்துகொண்டே போகின்றது. கடைசியில் நரக வேதனையில் தள்ளி விடுகின்றது,

இவ்விடத்தில் ஜைனர் என்று சொல்லப்படுகிற சில இந்துக்கள், நாங்கள் முஷ்ரிக்கல்ல வென்றும், ஆண்டவனைத் தவிர மற்றவர்களை நாங்கள் வணக்கத்துக் குரியவர்களென்று எண்ணுகிறதில்லை யென்றும், விஷ்ணுவையாவது கிருஷ்ணனையாவது மகாதேவனையாவது சத்தியையாவது கங்காவையாவது யமுனவையாவது மற்றெவர்களையாவது நாங்கள் வணங்குகிறதில்லை யென்றும் சொல்லுகிருர்கள். அதற்கு மறுமொழியாவது; உங்களிடத்தில் கடவுளென்பதே இரண்டுவகைப்பட்டிருக்கின்றது. அதில் ஒன்று: நிற்குண பரமேஸ்வரன். அதற்கு யாதொரு குணமுமில்லை. அது ஒன்றும் செய்யாமல் வெறுமையா யிருக்கிறதென்று நீங்கள் எண்ணுகிறீர்தள். இன்னுமொன்று: சாகார பரமேஸ்வரன். நீங்கள் சொல்லுகிறபடி இந்த நர ஜனங்களிலிருந்து யாதொருவன் யோக முறைகளினுல் ஞானதிருஷ்டிக் காரணுக ஆய்விட்டால்; அவனே சாகார பரமேஸ்வரனுகிருன். இப்பேர்ப்பட்ட பரமேஸ்வரன் உங்களிடத்தில் இருபத்து நான்குபேருண்டு. அர்களிடத்தில் முந்தினவன் ஆதிநாதன். கடைசியானவன் மகாவீரன் நல்லது, யாரிடத்தில் ஒருநிற்குண பரமேஸ்வரனும் இருபதினுன்கு சாகார பரமேசுவரர்களும் ஆக இருபத்தைந்து பரமேசுவரர்க ளிருக்கிருர்களோ, அவர்களை விட அதிக முஷ்ரிக்கு வேறே யாரிருக்கிருர்கள்?

## ஹிக்காயத்து.

ஒருதடவை ஷாஜிஹானுபாத் என்னும் நகரவாசியான கனவானும் சங்கைமானுமாகிய ஒரு முசாபிரை லாகூரில், கண்டேன். அவர் வெளியரங்கத்தில் ஜைனரா யிருந்தார். நான் அந்த நாள்களில் என் இஸ்லாமை மறைத்து வைத்திருந்தேன். நான் அவரை நோக்கி, லாலாஜி! உலகத்தில் எத்தனையோ மார்க்கங்களிருக்கின்றன. எல்லாரும் தன்மார்க்கமே உண்மையான தென்றும், இரக்ஷிப்புக்குக் காரணமான தென்றும், மற்றவர்களைத் தப்பு மார்க்கத்தாரென்று மெண்ணியிருக்கிருர்கள். இந்த எல்லா மார்க்கங்களும் உண்மையா யிருப்பது அசாத்தியம். ஏதாவது ஒரு மார்க்கந்தான் உண்மையா யிருக்கலாம். அதற்கு விரோதமாகிய மற்ற மார்க்கங்க ளெல்லாம் தப்பாகவே யிருக்கும். ஏனென்ருல், உண்மைக்கு எதிரில் தப்புதா னிருக்கும். இப்பொழுது நான் தங்களை இந்த எல்லா மார்க்கங்களிலும் எது உண்மையான தென்று கேட்கிறேன் னென்றேன். அற்கு அவர், எந்த மார்க்கத்தில் ஷிர்க்கில்லையோ, அதுதான் எல்லா மார்க்கத்தில் நின்

றும் உண்மையான தென்றுர். இந்த வார்த்தை எனக்கு வெகு அழகாயிருந்தது. பின்பு நான் இஸ்லாம் மார்க்கத்தில்தான் ஷிர்க்கில்லையென்றேன். அதற்கு அவர், ஆம் மெய்தானென்றுர். பின்பு நான், இப்பொழுது நாமென்ன செய்கிறது? நமது முன்னோர்களின் மார்க்கத்தை விட்டு விடுகிறதா? என்றேன், அதற்கு அவர், எல்லா மார்க்கங்களிலும் எந்தெந்த வேலைகள் விலக்கா யிருக்கின்றனவோ அந்தவேலைகளை உதாரணமாக: விபசாரம், களவு முதலான பாவங்களை விட்டுவிட வேண்டியது. அப்பொழுது எல்லா மார்க்கங்களின்படி நடந்துகொண்டதாக ஆய்விடு மென்றுர். அதற்கு நான், கட்டாயமாய்ச் செய்ய வேண்டிய வணக்கங்களை யெப்படி நிறைவேற்றுகிறது. இஸ்லாமானவர்களின் தொழுகை கடமையா யிருக்கின்றது. இந்துக்களுக்கு அது விலக்கா யிருக்கின்றது. இப்பேர்ப்பட்ட காரியங்களுக்கு என்ன செய்கிற தென்றேன். அவர் அதற்குத் தைரியம்வேணுமென்றுர். இந்த வார்த்தையினுல் இவர் மனதால் முஸ்லிமாயிருக்கிருரென்று தெரிந்து கொண்டேன். அப்பொழுது நான் அவரை நோக்கி லாலாஜி! என்னுடைய சங்கதியை நான் தங்களுக்கு வெளியிடா திருக்கிறேன். தாங்களும் தங்களுடைய சங்கதியை எனக்கு மறைக்கிறீர்கள். அந்தரங்கத்தில் இருப்பது இருக்கவே இருக்கிற தென்றேன். அதற்கு அவர், அப்படியேதா னென்றுர்; இந்த வார்த்தையைக் கேட்ட உடனே நான் அதிக சந்தோஷ மடைந்தேன். பின்பு இருபக்கமும் பேச்சு நடந்தது. நான் என்னுடையவும் என் சிநேகிதர்களுடையவு மான சங்கதிகளைச் சொன்னேன். அவர், தாம் வெகு நாளாய் அந்தரங்கத்தில் இஸ்லாமா யிருக்கிறதாகவும், ஐந்து நேரமும் தொழுது வருகிறதாகவும், ஆனுல் தமது துர் அதிர்ஷ்டத்தினுல் வெளியரங்கமான மறைப்பை அதாவது காபிர்களின் அடையாளத்தை நீக்காம லிருக்கிறதாகவும் சொன்னுர். இப்பொழுது அவருக்கும் எனக்கும் அதிக சிநேகமா யிருக்கின்றது. அந்தக் கனவான் நாளது வரையில் அந்தரங்கத்தில் இஸ்லாமா யிருக்கிருர். அவருடைய பேர் அப்துல்லா. ஆண்டவன் அவருக்கு வெளியரங்கமான இஸ்லாமைக் கொடுத்து, அவரை இரு பதியிலும் சந்தோஷமாக்கி வைப்பானுகவும்.

நானுக் என்பவரைப் பின்பற்றின ஸிக்க சாதியாராகிய சில இந்துக்கள், நாங்கள் ஷிர்க்கைவிட்டு ஒழிந்திருக்கிறோ மென்றும், எங்கள் பாபா நானுக் என்பவரும் மற்ற குருமார்களும் ஷிர்க்கு செய்யவில்லையென்றும், பாபா நானுக் உடைய வாக்கியத்தில் தவ்ஹீதாகிய வாசகம் அநேகமாயிருக்கின்றன வென்றும் சொல்லுகிருர்கள். அதற்கு

மறுமொழியாவது: நீங்கள் சொல்லுகிறபடி உங்கள் பாபா நானுக் ஷிர்க்கு செய்யவில்லையென்றாலும், அவர் ஷிர்க்கு செய்கிறவர்களை வெறுத்து அவர்களைவிட்டு என் நீங்கவில்லை? நபி ஸல்லல்லாஹு அலைகிவசல்லமுடைய உத்திரவை என் ஒப்புக்கொள்ள வில்லை? ஆண்டவனுடைய றசூலுக்கு வழிப்பட்டால்தானே ஷிர்க்கைவிட்டுநீங்கினதும் ஆண்டவனிடத்தில் ஒப்புக்கொள்ளப்படும். ஒருகால் நீங்கள் பாபா நானுக், நபி ஸல்லல்லாஹு அலைகிவசல்லமை அறிந்து அவர்களைக் குறித்துத் தம்முடைய கோர்வைகளான நூல்களில் "**பாஜா முகம்மத் பகத் அஜாயின்**" முகம்மது சல்லல்லாஹு அலைகி வசல்லமைப் பின்பற்றுவிட்டால் வணக்கம் வீணாகுமென்று அவர்களைப் புகழ்ந்தெழுதியிருக்கிறாரே என்பீர்களோ? அப்படியானால் நீங்கள் பாபா நானுக் உடைய சிஷ்யர்களா யிருக்கிறீர்கள்; அவர்சொன்ன இந்தச் சங்கதியை நீங்கள் மெய்யென்று நம்பினால், உங்கள் குருவின் உத்திரவுக்குக் கீழ்ப்படிந்துச் சீக்கிரமாய் உங்கள் முழு இருதயத்தோடு கலிமாச்சொல்லி இஸ்லாமாய் விடுங்கள். அப்பொழுது நீங்கள் ஆண்டவனுடைய சமுகத்தில் அங்கீகரிக்கப் பட்டவர்களா யிருப்பீர்கள்.

## 7-வது பிரிவு மதபேதங்களைக் குறித்துப் பேசுவது.

எங்கள் இஸ்லாம் மார்க்கத்தின் எழுபத்துமூன்று கொள்கைக்காரர்கள் பிரபல்லியமா யிருக்கிறார்கள். அந்த எல்லாக் கொள்கைக்காரரின் அபிப்பிராயங்களான சில சங்கதிகள் ஒன்றுக்கொன்று பேதமாயிருந்தாலும், மூலாதாரங்களான நிர்ணயங்களிலும் மொத்தமான அநேக மஸ்அலாக்களிலும் எல்லாக் கொள்கைக்காரருக்கும் ஒற்றுமையுண்டு. எப்படியென்றால், ஆண்டவன் எல்லாவற்றையும் படைக்கிறவன், எல்லாவற்றின் சுதந்தரத்தை யுடையவன், அவன் தனித்தவன், இணையில்லாதவன், பூரணமான வருணிப்புகளைக்கொண்டு வருணிக்கப்பட்டவன், குறைவான வருணிப்புகளைவிட்டுச் சுத்தமானவன் என்றெண்ணுகிறதும்; ஆண்டவனைத் தவிர மற்றவர்களின் வணக்கத்தைக் குபிர் என்றெண்ணுகிறதும், ஆண்டவனால் அனுப்பப்பட்ட எல்லா நபிமார்களும் உண்மையானவர்கள் என்றெண்ணுகிறதும், எல்லா மலக்குகளையும் உண்மையென் றெண்ணுகிறதும், ஆண்டவனால் நபிமார்களுக்கு எத்தனை வேதங்க ளிறங்கினவோ அவைகளெல்லாம் உண்மையென் றெண்ணுகிறதும், கியாமத்து நாளில் கேள்வி கணக்குக் கேட்கப்படு மென்பதையும், சொர்க்கம் நரகம் உண்டென்பதையும் உண்மையென் றெண்ணுகிறதும், இஸ்லாமானவர்கள் எப்பொழுதும் சொர்க்கத்தி லிருப்பார்களென்கிறதும், காபிர்கள் சொர்க்கமிழந்து நரக

த்திற் கிடந்து வேகுவார்களென்கிறதும், நாள் ஒன்றுக்கு ஐந்து நேரத்துத்தொழுகைப் பதினேழு ரக்கஅத்து கடமையென்கிறதும், சொத்துள்ளவன்பேரில் ஸக்காத்தென்னும் தானமும், காபதுல்லாவின் ஹஜ்ஜு என்னும் வணக்கமும் கடமையென்கிறதும், தாய் தந்தையருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டு மென்கிறதும், குடும்ப ஜனங்களுடனும் அண்டை அசல் வீட்டாருடனும் தயாளமாயிருக்கவேண்டு மென்கிறதும், ஆண்டவனுடைய கிருபையை ஆதரவு வைத்து அவனுடைய வேதனைக்குப் பயந்திருக்கவேண்டு மென்கிறதும், மார்க்கத்துக்கும் ஆண்டவனுடைய எல்லா வேதங்களுக்கும் நபிமார்களுக்கும் மலக்குகளுக்கும் மரியாதை வைக்கவேண்டு மென்கிறதும்; விபசாரம், களவு, லஞ்சம், அனீதம், வட்டிவாங்கல். சாராயக்குடி, சூதுவிளையாடல், பொறாமை, புறம்பேசல், முகஸ்துதி, பெருமை, தன்னை மதித்தல் முதலான வெளியரங்கமும் அந்தரங்கமுமான பாவங்களைக் கெடுதியா யெண்ணுகிறதுமான இந்தச் சங்கதிகளின் பேரில் இஸ்லாமான எல்லாக் கொள்கைக்காரரும் ஒற்றுமையா யிருக்கிறார்கள். இவைகளில் ஒருவருக்கும் பேதமும் நிராகரிப்புமில்லை. சில உட்பிரிவான சங்கதிகளிலும், சில்லரையான மஸ்அலாக்களிலும் பல அபிப்பிராய பேதங்களுமுண்டு. என்றாலும், இந்தப் பேதம் அல்லாவுடையவும் றசூலுடையவுமான வாக்கியங்களில் இருந்ததல்ல. அல்லா றசூலுடைய வாக்கியங்களில் ஒரு அணுப்பிரமாணமும் பேதங்கிடையாது. ஆனால், சில ஆயத்துகளுடையவும் அதீதுகளுடையவுமான அர்த்தம் சிலருடைய அபிப்பிராயத்தில் ஒரு மாதிரியும், சிலருடைய தாற்பரியத்தில் ஒரு மாதிரியுமாக ஏற்பட்டிருக்கும். அல்லது யாதொரு அதீதின் ராவியானவருக்குத் தவறுதலுண்டாகி, அவர் அதைப் பிசகாய் வேறேவிதமாய்ச் சொல்லியிருந்து மார்க்கத்துடையவர் அதை உண்மையான அதீதென்றெண்ணி, அதின் பேரில் நடவடிக்கை நடத்தியிருக்கலாம். இதைத்தவிர இந்தப் பேதத்துக்கு இன்னும் அநேக காரணங்க ளிருக்கின்றன. அவைகளால் அல்லா றசூலுடைய வாக்கியங்களில் யாதொரு பேதமில்லையென்று நன்றாய்த் தெரியவந் திருக்கின்றது. அத்துடன் எல்லாக் கொள்கைக்காரரும் அல்லா றசூலுடைய வாக்கியங்களில் யாதொரு பேதமில்லையென்றும், இந்தப்பேதம் அவரவர்களின் அபிப்பிராயத்தினால் உண்டானதென்றும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். பின்பு நாங்கள், இந்தப் பேதத்தில் எல்லாக் கொள்கைக்காரரும் உண்மையின்பேரி லிருக்கிறார்களென்று எண்ணுகிறதில்லை. அடங்கலில் நின்றும் ஒரு கொள்கைக்காரர் மாத்திரந்தான் உண்மையின்பேரி லிருக்கிறார்களென்று எண்ணுகிறோம். அவர்கள் யாரெ

ன்ருல், நபி யவர்களுடையவும் அவர்களின் அஸ்ஹாபுகளுடையவுமா ன சுன்னத்தாகிய நடவடிக்கை எந்தக் கொள்கைக் காரரிலிருக்கின்ற தோ, இன்னும் எந்தக் கொள்கைக்காரர் நபி யவர்களுடைய உத்திர விலும் நடவடிக்கையிலும் அதிகமும்குறைச்சலும் செய்யாம லிருக் கிருர்களோ, அவர்களே உண்மையின் பேரிலிருக்கிற கொள்கைக்கா ரர். இதின் நிமித்தமே அவர்களுக்கு சுன்னத்து ஜமாஅத்து அதா வது நபியவர்களின் நடவடிக்கையைப் பின்பற்றின கூட்டமென்று பேர் ஏற்பட்டிருக்கின்றது.

இந்து மார்க்கத்தின் கொள்கைகள் நூற்றுக்கணக்கா யிருக்கின் றன என்ருலும், அவைகளில் பிரதானமான கொள்கைகள் ஆறு சா ஸ்திரங்களே. இந்த ஆறு சாஸ்திரங்களின் மூலாதாரமான சங்கதிக ளிலும், மகா முக்கியமான சங்கதிகளிலும் பெரிய பேத மிருக்கின்ற து. இவ்வளவு பேத மிருக்கிறதுடன் இந்துக்கள் அந்த ஆறு சாஸ்தி ரங்களையும் சத்தியமானவைகளென்று விசுவாசிக்கிருர்கள். இப்படி ஒன்றுக்கொன்று பேதமா யிருக்கிறதுடன் அவைகளெல்லாம் உண் மையாகவும் ஒன்றும் தப்பில்லாமலு மிருப்பது புத்திக்கு வெகுதூர மா யிருக்கின்றது. இதைக்குறித்து இந்த அத்தியாயத்தின் ஐந்தாவ து பிரிவில் கொஞ்சம் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது அந் த ஆறு சாஸ்திரங்களின் பெயரையும், அவைகளில் ஒன்றுக்கொன்று பேதமா யிருக்கிற சில மூலாதாரங்களான சங்கதிகளையும் மாத்திரம் எழுதுகிறேன்.

1-வது **வேதாந்த சாஸ்திரம்:** இது வியாசமுனிவரால் உண்டுபண் ணப்பட்டது. இந்த சாஸ்திரக்காரர் வேதாந்திகளென்று சொல்லப் படுகிருர்கள். அவர்க ளிடத்தில் ஆண்டவனைத் தவிர வேறேயா தொரு வஸ்துவு மில்லை. எல்லாப் படைப்புகளையும் நினைவின் சொப் பன மென் றெண்ணுகிருர்கள். இன்னு மவர்கள் சொல்லுகிறதாவ து: பிரமத்தினிடம் மாயை தோன்றினதினுல் அது ஈசுவரனென்று சொல்லப்பட்டது. அந்த ஈசுவரன் மூன்று பகுதியானுன். ராஜசகு ண சம்பந்தத்தினுல் பிரம்மாவாகவும், சாத்வீககுண சம்பந்தத்தினுல் விஷ்ணுவாகவும், தாமசகுண சம்மந்தத்தினுல் சிவனுகவும் ஆனுன். பிரம்மா சிருஷ்டிக்கிறவரானுர், விஷ்ணு காக்கிறவரானுர், சிவன் அழி க்கிறவரானுர் என்பதே.

ஆகக்கூடி அவர்கள் சொல்லுகிறபடி உலகத்தின் எல்லாக் காரி யங்களும் அந்த மூவருடைய கைவசமே யிருக்கின்றன. பிரமம் என் னும் கடவுள் ஒன்றும் செய்யாமல் வெறுமையா யிருக்கின்றது. இ

ந்த மூவருங்கூட உண்மையில் தாங்களே பிரம்மமாயிருக்கிறார்கள். மாயாசம்பந்தத்தினால் ஈசுவரரென்று சொல்லப்படுகிறார்கள். இன்னும் பிரம்மத்திற்கு அவித்தியா சம்பந்தமுண்டானபடியால் ஜீவனென்று சொல்லப்பட்டது. அதாவது, இந்த எல்லா ஜீவர்களும் தானே பிரம்மமா யிருக்க, அவித்தை என்னும் அஞ்ஞான சம்பந்த முண்டானதின் நிமித்தம் தன்னைத்தான் ஜீவனென் றெண்ணுகின்றார்களாம். அவர்களிடத்தில் பிரம்மமும், பிரம்மாவும், விஷ்ணுவும், சிவனும், ஜீவனும் இவைக ளெல்லாம் ஒன்றேயாம். இன்னும் அவித்தையை அஞ்ஞானமென்றும் சொல்லுகிறார்கள். அந்த அஞ்ஞானமானது விட்சேபமென்றும், ஆவரணமென்றும் இரண்டு சக்திகளுள்ளதா யிருக்கின்றது. விட்சேப மென்பது தோற்றுவிக்கும் சக்தி. ஆவரணமென்பது மறைக்கும் சக்தி இன்னுமவர்களிடத்தில் மோட்சமாகிறது தன்னைத்தான் ஜீவனென் றெண்ணியிருக்கிற அஞ்ஞானம் நீங்கித் தன்னைத்தான் பிரம்மனென் றெண்ணிப் பிறப்பையும் இறப்பையும் விட்டு நீங்குவதேயாம். அவித்தையின் விஷயத்தில் வேதாந்திகள் இரண்டு கொள்கை யுடையவர்களா யிருக்கிறார்கள். சிலர் அவித்தை ஒன்றுதா னென்கிறார்கள். ஆகையால் அவர்களிடத்தில் மோட்சம் ஒருவருக்கும் கிடைக்கவில்லை. இன்னும் சிலர் அவித்தை அநந்தமுண் டென்கிறார்கள். அவர்களிடத்தில் மோட்சம் அநேகருக்குக் கிடைத்துவிட்டது. ஏனென்றால். அவர்களிடத்தில் ஞானமுண்டாய் விடுவதே மோட்சம். எப்பொழுது ஒருவனுடைய அஞ்ஞானம் நீங்கிவிட்டதோ அப்பொழுது அவனுக்கு ஞானமுண்டாகித் தன்னைத்தான் பிரம்மமென்று அறிந்துகொண்டான். ஆகையால் அவனுக்கு மோட்ச முண்டாய்விட்டது என்கிறார்கள்- இன்னும் அஞ்ஞானத்திற்கு சாத்வீக, ராஜச, தாமசமென்னும் மூன்று குணங்களுண்டென்றும், ராஜச குணத்தினால் ஆசையும் துக்கமும் சந்தோஷமும் உண்டாகுமென்றும், சாத்வீக குணத்தினால் புத்தியும் ஆனந்தமும் உண்டாகுமென்றும், தாமசகுணத்தினால் கோபமும் அறிவின்மையும் உண்டாகு மென்றும் சொல்லுகிறார்கள். இந்த மூன்று குணங்களும் பிரம்மத்தினிடம் சேருகின்றனவென்று முன்னமே தெரியவந்திருக்கின்றது. இன்னும் கியாமத்தென்னும் பிரளய விஷயத்தில் அவர்களின் கொள்கையைக் குறித்து 5-வது பிவிரில் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

2-வது சாஸ்திரம் மீமாம்சை: இது ஜைமினிமுனிவரால் உண்டுபண்ணப்பட்டது. இந்த சாஸ்திரக்காரரை மீமாம்சகர் என்கிறார்கள். அவர்கள் மார்க்கத்தில் ஆண்டவன் படைக்கிறவனென்று எண்ணுகிற

தில்லே. இன்ப துன்பம், சுகதுக்கம், பாக்கியநிர்ப்பாக்கியம் முதலான சகலமும் கர்ம்மத்தினுலேயே உண்டாகின்றன வென்கிருர்கள். வேதாந்திகள் மும்மூர்த்திகளை பிரம்மத்தின்தோற்றமென்றும் தெய்விக அதிகார முள்ளவர்களென்று மெண்ணுகிறதை மீமாம்சகர் ஒப்புக்கொள்ளுகிற தில்லே. இந்த நர ஜனங்களில் நின்றுமே யாராவதொருவன் எப்போதாவது பிரம்மாவாகவும் ஒருவன் சிவனுகவுமாய் விடுகிருனென்கிருர்கள். உலகத்திற்கு ஆதி யந்த மில்லேயென் கிருர்கள். மலேகளேயும் சமுத்திரங்களேயும் எப்போது மிருப்பவைகளென் றெண்ணுகிருர்கள். ஜடங்கள் உருவாகுவது சிறிய அணுக்களால் என்றெண்ணுகிருர்கள். பாகிக்கவராத அணுவைத்தொட்டும் நிராகரிக்கிறவர்களா யிருக்கிருர்கள். அவர்கள் மோக்ஷத்திற்கு ஞானமும் கர்மமுமே காரணமென்கிருர்கள். இன்னும் மனிதன் தன்னுடைய காரியங்களில் சுயசக்தி யுள்ளவனு யிருக்கிருனென்கிருர்கள். இன்னு மவர்கள் பதார்த்தம் பத்தென்கிருர்கள். இதன் விபரம் நியாய சாஸ்திரத்தைப் பற்றிப் பேசும்போது சொல்லப்படும்.

**3-வது நியாயசாஸ்திரம்:** இது கவுதமமுனிவரால் உண்டுபண்ணப்பட்டது. அந்த சாஸ்திரத்தில் பெரும்பாலும் பலாசிபக் கல்வியும் தர்க்க முறைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. சில இந்துக்கள் இந்த சாஸ்திரத்தை வேதாங்கமென்று அதாவது வேதத்தின் உறுப்பென்று எண்ணுமல், வேதத்திற்குப் புறம்பானதென் றெண்ணுகிருர்கள். என்றுலும், அப்போதும் அவர்களிடத்தில் அந்த சாஸ்திரம் தள்ளுபடியான தல்ல. இந்த சாஸ்திரத்தை வாசித்துணர்ந்தவர்கள் நையாயிகரென்று சொல்லப்படுகிருர்கள். இந்தச் சாஸ்திரத்தின் சாரமென்னவென்றுல், ஆண்டவன் ஆதியந்த மில்லாதவனுகவும் படைக்கிறவனுகவு மிருக்கிருன் என்பதே. இன்னும் ஆண்டவன் தான் படைத்த ஒரு சொரூபத்தைப் பற்றியிருந்து அதன்மூலமாய் ஜீவன்களுக்கு வேதத்தை அனுப்புகிருனென்றும்; அந்தவேதம் இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என நான்கு வகைப்பட்டிருக்கின்றதென்றும் சொல்லுகிருர்கள். இன்னும் சொர்க்க நரகத்தில் எப்போது மிருக்கிறதை அவர்கள் ஒப்புக்கொள்ளுகிற தில்லே. ஆண்டவனுக்குள்ள சிபத்துகள் எட்டென்றும், அவைகளில் ஞானம், பிரயத்தனம், இச்சை, சங்கிபை, பரிமாணம், பார்த்தக்துவம், என்ற இந்த ஆறு சிபத்துகளேயும் அநாதித்துவ முடையவைக ளென்றும்; சையோகம், வியாகம், என்ற இரண்டு சிபத்துகளேயும் நூதனமானவைகளென்றும் எண்ணுகிருர்கள். இன்னு மவர்களிடத்தில் சகலமும் பதினுறு பதார்த்தத்திற்குப் புறம்பாகவில்லே. அதாவது எல்லா வஸ்துக்களும் பதினுறு

மூலங்களுள் அடங்குகின்றன என்பதே. அந்தப் பதினறு பதார்த்தங்களையும் விவரித்தால் பெருகுமென்றும், அவைகளை விவரமாய் அறிவது கஷ்டமாயிருக்குமென்றும் இவ்விடத்தில் அவைகளின் பேர்களை மாத்திரம் எழுதப்படுகின்றது. அவை: பிரத்தியட்சம், பிரமாணம், பிரமேயம், ஐயம், திஷ்டாந்தம், சித்தாந்தம் அவயவம், தர்க்கம், நிர்ணயம், வாதம், செற்பம், விதண்டை, ஹேதுஆபாசம், சலம், ஜாதி, நிக்கிரகஸ்தானம் இவைகளே. இந்தப் பதினறு பதார்த்தங்களையும் அவைகளிருக்கும் தன்மைப்படி அறிவதே மோக்ஷத்துக்குக் காரணமென்று நையாயிகர் நிர்ணயங்கொண் டிருக்கிருர்கள். உலகம் அவர்களிடத்தில் அநாதித்துவ முடையதாம்; ஆனல் அழிந்து போகுமாம். 5-வது பிரிவில் இதைக்குறித்துச் சொல்லப்பட் டிருக்கிறது.

4-வது வைசேஷிக சாஸ்திரம்: இது கணாத முனிவரால் உண்டுபண்ணப்பட்டது. இந்த சாஸ்திரக்காரரை வைசேஷிகர் என்று சொல்லுகிருர்கள். இந்த சாஸ்திரத்தின் அநேக விஷயங்கள் நியாயசாஸ்திரத்திற்கு ஒத்திருக்கின்றன. ஆனல் இவர்களிடத்தில் பதார்த்தம் ஏழாம். அவை "* திரவியம், குணம், கர்மம், சாமான்யம், விசேடம், சமவாயம், அபாவம்" என்பனவாம்.

5-வது சாங்கிய சாஸ்திரம்: இது கபில முனிவரால் உண்டுபண்ணப்பட்டது. இந்த சாஸ்திரக்காரர் ஆண்டவன் படைக்கிறவனென்று எண்ணுகிறதில்லை. சகல வஸ்துக்களும் பிரகிருதியினல் உண்டாகின்றன வென்கிருர்கள். அதாவது பிரகிருதியை முதற்காரணமென்றும், பிரபஞ்சமென்னும் சகல படைப்புகளும் அநாதியானவையென்று மெண்ணுகிருர்கள். இன்னும் எந்த வஸ்துவும் அழிந்துபோகுமென்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. காரியம் காரணத்துக்குள் ஐக்கியமாகு மென்கிருர்கள். இந்த சாஸ்திரத்தில் முக்கியமான வாதம் நான்கு தத்துவங்களைக் குறித்ததா யிருக்கின்றது.

க-வது தத்துவம் பிரகிருதி: அதாவது ஒவ்வொரு வஸ்துவுக்கும் காரணமாம். இந்தப் பிரகிருதி காரணமாய் மாத்திரமே யொழிய காரியமா யிருக்கிறதில்லை. அது ராஜச, சாத்விக, தாமச மென்னும் முக்குணங்களையுடைய அறிதற்கரிய எங்கும் வியாபித் திருக்கிற ஒரு மூலதத்துவமாம்.

---

* திரவியம்-பொருள், குணம்-பண்பு, கர்மம்-தொழில், சாமான்யம்-பொது, விசேடம்-சிறப்பு, சமவாயம்-ஒற்றுமை அல்லது சம்பந்தம், அபாவம்-இன்மை.

உ-வது தத்துவம் பிரகிருதி விகுருதி: அதாவது சிலவஸ்துக்களின் காரணமானது சிலவஸ்துக்களின் சம்மந்தத்தினால் காரியமாகின்றது, இது மூன்று வகைப்பட்டிருக்கின்றது. 1-வது வகை மஹாதத்துவம். 2-வது வகை அகங்காரம். இது மூன்றுவித மாகும். அதில் சத்வகுணம் மிகுத்தால் வியாகிருத அகங்கார மென்றும், ராஜசகுணம் மிகுத்தால் தைஜச அகங்கார மென்றும், தாமசகுணம் மிகுத்தால் பௌதிக அகங்கார மென்றும் சொல்லப்படும். 3-வது வகை தன் மாத்திரை. அவை: சப்தம் (ஓசை), ஸ்பரிசம் (தொடுவது), ரூபம் (பார்ப்பது), ரசம் (சுவைப்பது), கந்தம் (முகருவது) என ஐந்தாம்.

ங-வது தத்துவம் விகுருதி: அதாவது காரியமாய் மாத்திரமேயொழிய காரணமா யிருக்கிறதில்லை. இது இரண்டு விதப்படும். முதலாவது இந்திரியம். அதாவது பஞ்ச புலன்களும் சில அவயவங்களுமாம். இரண்டாவது பஞ்ச பூதங்கள். இந்தப் பஞ்ச பூதங்கள், பஞ்ச தன்மாத்திரைகளிலிருந்து உற்பத்தியாயின. எப்படியென்றால், ஆகாசம் சப்தத்திலிருந்தும், வாயு ஸ்பரிசத்திலிருந்தும், அக்கினி ரூபத்திலிருந்தும், தண்ணீர் ரசத்தி லிருந்தும், மண் நாற்றத்திலிருந்தும் உற்பத்தியாயினவாம்.

ச-வது தத்துவம் பிரகிருதியுமல்ல, விகுருதியுமல்ல அதாவது காரணமும் காரியமு மல்ல வென்பதாம். அதைப் புருஷனென்றும் ஆத்மாவென்றும் சொல்லுகிறார்கள். ஆத்மாவானது இரண்டு வகைப்படும். ஒன்று ஜீவாத்மா அதாவது உயிர். அதையும் அநாதி யென்று எண்ணுகிறார்கள். மற்றொன்று பரமாத்மா, அதாவது பிரம்ம மென்னும் கடவுள். இவர்கள் உறுதியாய் நம்பி யிருக்கிற தென்ன வென்றால், பிரகிருதியானது புருஷனென்னும் ஆத்மாவுடன் சேர்வதினால் பிரபஞ்சமாகிய உலகம் உற்பத்தியாகின்றது என்பதே.

இன்னும் பிரகிருதியைக் குருடென்றும் ஆத்மாவை முடமென்றும் சொல்லுகிறார்கள். இதன் கருத்து, இந்த இரண்டும் ஒன்றுடன் மற்றொன்று சேர்வதன்றி அது தனியாய் ஒன்றும் செய்யமுடியாது என்பதே. இன்னும் பிரளய காலத்தில் அதாவது உலகம் அழியும்போது ராஜச சாத்விக தாமசமென்னும் முக்குணங்களும் சமமாயிருக்குமென்றும், உலக உற்பத்தியின்போது சாத்விககுணம் மிகுத்திருக்கு மென்றும், அப்பொழுது மகத்துவம் உற்பத்தியாகுமென்றும் சொல்லுகிறார்கள். இதன் கருத்தாவது, அவர்களிடத்தில் பிரகிருதியானது ஆத்மாவுடன் சம்மந்தப்பட்டுச் சத்வகுணம் மிகுத்தால் அப்பொழுது மேற்சொன்னபடி மகதத்துவமும், மகத்துவத்திலிருந்து

அகங்காரமும், அகங்காரத்திலிருந்து பதினொரு இந்திரியங்களும் பஞ்சதன்மாத்திரைகளும் பஞ்சபூதங்களும் உண்டாகின்றன. உலகம் அழியும்போது பஞ்சபூதங்கள் பஞ்ச தன்மாத்திரைகளிலும் பஞ்சதன்மாத்திரைகள் அகங்காரத்திலும், அகங்காரம் மஹதத்துவத்திலும் மஹதத்துவம் பிரகிருதியிலும் ஒடுங்குகின்றனவாம்.

6-வது **பதஞ்சலி சாஸ்திரம்:** இதை யோக சாஸ்திர மென்றும் சொல்லுகிறார்கள். பதஞ்சலி முனிவரால் உண்டுபண்ணப் பட்டது. இந்த சாஸ்திரம் அநேக சங்கதிகளில் சாங்கியசாஸ்திரத்துக்கு ஒத்திருக்கின்றது. இன்னு மிந்த சாஸ்திரத்தின்படி யோகமென்னும் பாடுபட்டு வணங்கினாலன்றி மோக்ஷம் கிட்டாது.

இன்னும் இந்த ஆறு சாஸ்திரங்களைத் தவிர வேறே மூன்று சாஸ்திரங்களிருக்கின்றன. அவைகள் பிராமணரிடத்தில் தள்ளுபடியானவைகளாம். அவைகளில்,

1 - வது **ஜைனசாஸ்திரம்** ஜைனர் என்பவரால் உண்டுபண்ணப் பட்டது. இந்த சாஸ்திரக்காரரின் சித்தாந்த மென்னவென்றால், மனிதன் நற்கிரியைகளினால் ஞானதிருஷ்டிக் காரனாகிறா னென்றும், பின்பு அவனுடைய வார்த்தை ஆண்டவனுடைய வார்த்தையே யென்றும், அவனே சாகார பரமேஸ்வரன் என்றும், இப்பேர்ப்பட்ட பரமேஸ்வரர் இருபத்துநாலுபேர் உண்டாயிருக்கிறார்க ளென்றும், அவர்களில் முந்தினவன் பேர் ஆதிநாதனென்றும், கடைசியானவன்பேர் மகா வீரனென்றும் சொல்லுகிறார்கள். இன்னும் ஆண்டவனே நிற்குண பரமேஸ்வரன், அதாவது ஒரு குணமு மில்லாதவனென் றெண்ணுகிறார்கள். இதன் கருத்து, ஆண்டவன் ஒன்றும் செய்யாமல் வெறுமையா யிருக்கிறா னென்பதே. இன்னும் அவர்களிடத்தில் பெண்பிள்ளை ஆண்ஜென்ம மெடுக்காதவரையில் அவளுக்கு மோக்ஷமில்லையாம். இன்னும் அவர்களில் சிலர் புண்ணியந் தேடிக்கொள்ளுகிறதற்காக உணவு பதார்த்தங்களைத் தின்னாமல் இறந்துபோகிறார்கள். இதற்குச் சந்தாரை யென்று பேராம். பிராமணர்கள் இந்தக் கூட்டத்தை வெகு அருவருப்பா யெண்ணுகிறார்கள். இந்த ஜனங்களுக்கு முன்னால் வருவதைப் பார்க்கிலும் புலியின் அல்லது யானையின் வாயில் அகப்பட்டுச் சாகிறது நலமென் றெண்ணுகிறார்கள்.

2-வது **புத்தசாஸ்திரம்:** புத்தரால் உண்டு பண்ணப் பட்டது. இன்னு மிவரின்பேர் சாக்கியமுனி யென்றும், இவர் சுத்தோதனனென்னும் ராஜாவினுடைய குமாரர் என்றும், இவரின் மாதாவின் பேர் மாயாதேவி யென்றும், உந்தி வழியாய்ப் பிறந்தவ ரென்றும்

சொல்லுகிறார்கள். பிராமணர்கள் இவரைப் பத்து அவதாரிகளில் ஒன்பதாவது அவதாரி என்றும், இந்தப் புத்த சாஸ்திரம் அவர் உண்டு பண்ணவில்லை என்றும் எண்ணுகிறார்கள். இந்தப் புத்த மதத்தார் ஆண்டவன் படைக்கிறவனென்று எண்ணுகிறதில்லை. உலகத்துக்கு ஆதியந்தம் உண்டென்பதை ஒப்புக்கொள்ளுகிறதில்லை. ஒவ்வொரு நிமிஷமும் உலகம்அழிந்து உண்டாகின்றதென்கிறார்கள். இந்த ஜனங்கள் அதிகமாய்க் குளிக்கிறதும் ஸ்நானம் பண்ணுகிறதுமா யிருக்கிறார்கள். செத்தப் பிராணியை ஆண்டவனால் கொல்லப்பட்டதென்றுத் தின்று விடுகிறார்கள். தாங்கள் ஜீவராசிகளைக் கொல்லுகிறதில்லை. பூமியிலிருந்துப் புல்லைப் பிடுங்குகிறதில்லை. ஸ்திரிபோகத்தை அருவருப்பாய் எண்ணுகிறார்கள்.

3-வது நாஸ்திகசாஸ்திரம்: சார்வாகன் என்பவனால் உண்டு பண்ணப்பட்டது. இந்த சாஸ்திரக்காரர் நான்கு பூதங்களைத் தவிர வேறொரு வஸ்துவில்லை என்றும், சகலமும் இந்த நான்கு பூதங்களினாலேயே உண்டாயினவென்றும் சொல்லுகிறார்கள். இன்னுமவர்கள் எந்த வஸ்து பஞ்சபுலன் என்னும் ஐயறிவுகளுக்குத் தெரியவருகின்றதோ அதுதான் உண்டென்று எண்ணுகிறார்கள். புத்தியினால் அனுமானித்தறியும் பொருட்கள் உண்டென்பதைஅவர்கள் நம்புகிறதில்லை. ஆண்டவன் உண்டென்பதையும் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. சொர்க்க நரகமில்லை என்றும், மனிதனுக்கு அவன் எண்ணப்படி நிறைவேறுகிறதே சொர்க்கமென்றும் அவன் யாதொருவனுக்குக் கீழ்படிந்திருக்கிறதே நரகமென்றும் சொல்லுகிறார்கள். பூலோக இன்ப சுகங்களை அனுபவிக்கிறதும் கீர்த்திமானா யிருக்கிறதுமே வாழ்நாளின் பலனென்கிறார்கள், இந்துமார்க்கக் கோட்பாடுகளின் விவரம் சுருக்கமாய்முடிந்தது. ஆனால் இந்த இடத்தில் உண்டாகிற ஆக்ஷேபங்கள் புத்திமான்களுக்குத் தெரிந்திருக்கின்றன. நான் இவ்விடத்தில் அந்த சாஸ்திரங்களின் சாரங்களை வாதமில்லாமல் விவரித்திருக்கிறேன். புத்திமான்களுக்கு இந்தப் பிரிவில் வாதத்துக்கிட மிருக்கின்றது. முக்கியமான வாதம் சாஸ்திரங்கள் ஒன்றுக்கொன்று பேதமா யிருப்பதே.

சினேகிதர்களே! இந்துமத சாஸ்திரங்களிலுள்ள பேதங்களைத் தெரிந்து கொண்டீர்களல்லவா? இப்பொழுது அவர்களின் புராணங்களில் தேவர்களுற்பத்தியைக் குறித்துச் சொல்லியிருக்கிற பேதங்களில் சிலவற்றை எடுத்துக் காட்டுகிறேன் பாருங்கள்.

சிவபுராணத்தில், "ஆதிசக்தியினிடத்தி லிருந்து ஒரு வித்து உண்டாயிற்று. அதனுடைய வல்லமையினாலே சிவன் பிறந்தார், சி

வனிடத்திலே விஷ்ணு பிறந்தார். அவ்விஷ்ணுமயம் லோக முழுவது" மென்று சொல்லப்பட் டிருக்கிறது.

இன்னும் சில புராணங்களில், "ஆதியிலே பிரம்மா முந்தித் தண்ணீரைப் படைத்துத் தன்னுடைய விந்தை அந்தத் தண்ணீரிலே விட்டார். அது முட்டையாகி மிதந்தது. அந்த முட்டையை, முக்கண்ணனாகிய சிவன் தோன்றி உடைத்தான். அப்பொழுதே குற்றமில்லாத பஞ்ச பூதங்களும் உண்டாயின வென்று சொல்லப்பட் டிருக்கிறது.

நாரத புராணத்தில், நாராயணனுடைய வலது பக்கத்திலிருந்து பிரம்மா தோன்றினா ரென்றும். இடது பக்கத்தி லிருந்து விஷ்ணு தோன்றினா ரென்றும், நடுவி லிருந்து சிவன் தோன்றினா ரென்றும் சொல்லப்பட் டிருக்கின்றது.

இலிங்கபுராணத்தில், இவ்வுலக அண்டத்திலிருந்து சிவனானவர் ரூபிகரித்துப் பிறகு தனது இடது பக்கத்தி லிருந்து விஷ்ணு லக்ஷுமி யென்பவர்களையும், தனது வலதுபக்கத்திலிருந்து பிரம்மா சரஸ்வதி யென்பவர்களையும் உண்டாக்கினா ரென்றுஞ் சொல்லப்பட் டிருக்கின்றது.

மார்க்கண்டேய புராணத்தில், லக்ஷுமியி லிருந்து விஷ்ணுவும், காளியிலிருந்து சிவனும். சரஸ்வதியிலிருந்து பிரம்மாவும் தோன்றினார்களென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

வராக புராணத்தில், திரிமூர்த்திகளி லிருந்து சக்தி தோன்றி அந்தக் சக்தி லக்ஷுமி, காளி, சரஸ்வதியென மூன்றுயிற் றென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படித் தேவர்க ளுற்பத்தியைக் குறித்துப் புராணங்கள் கூறுகின்ற பேதங்களைத் தெரிந்துக் கொண்டீர்களே; இப்பொழுது அந்தத் தேவர்களின் பரத்துவத்தைக் குறித்துப் புராணங்கள் கூறுகின்ற பேதங்களைப் பாருங்கள்,

"ஸ்காந்தபுராணத்தில், சிவத்துரோகஞ் செய்து விஷ்ணுவைத் தரிசித்தால் சிவன் உக்கிரங் கொண்டு நரகத்துக் காளாக்குவான். ஆதலால் விஷ்ணுவினுடைய பெயரை உச்சரிக்க லாகா" தென்று சிவனைப் புகழ்ந்தும் விஷ்ணுவை இகழ்ந்து மிருக்கின்றது.

பாகவதத்தில், இதற்கு முழு விரோதமாக, சிவனைப் பூசித்துத் தியானிப்பவர்கள் பாஷாண்ட பதிதர்க ளென்றும், மோக்ஷ மடையார்களென்றும்; நாராயணனைத் தியானிப்பவர்கள் மோக்ஷ மடைவார்க

ளென்றும், சிவனை இகழ்ந்து விஷ்ணுவைப்புகழ்ந்துப் பேசியிருக்கின்றது.

இப்படித்தேவர்களின் உற்பத்தியையும் பரத்துவத்தையும் குறித்த முக்கியமான சங்கதிகளில் இவ்வளவு பேதமிருந்தால் ஜனங்கள் எதை நம்பி யாரை வணங்குகிறது?

## 8-வது பிரிவு தப்புமார்க்கத்தாரை இஸ்லாம் மார்க்கத்தில் அழைப்பதைக் குறித்துப் பேசுவது.

எங்கள் மார்க்கத்தில் மற்ற மார்க்கத்தாருக்கு அறிவிக்கவேண்டிய முக்கியமான சங்கதி யென்னவென்றால், பெருமை தங்கிய அஜரத்து முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமாகிறவர்கள் ஆண்டவன் புரத்தி லிருந்து உண்மையான நபியாகவும், நபிமார்களுக்கெல்லாம் முத்திரையாகவும் எழும்பி யிருக்கிறார்கள். யாதொருவன் அவர்கள் மார்க்கத்தை ஒப்புக்கொள்ளுவானாகில் ஆண்டவனுடைய காவலுக்குள்ளாகி விடுவான். ஒப்புக்கொள்ளாதவன் எக்காலமும் நரகவாதியா யிருப்பான் என்பதே.

பின்பு, யாதொருவன் இஸ்லாமாக நாடினால் முந்தி அவனுக்கு ஆண்டவனைத் தவிர வேறே யாதொரு உண்மையான வணக்கத்துக்குரியவனும் அதிகாரியும் சுதந்திரனு மில்லையென்று போதித்து, பின்பு ஈமானுடைய சிபத்துகளென்ற விசுவாசத்தின் முறைகளைக் கற்றுக்கொடுக்கவேண்டியது கடைமையா யிருக்கின்றது. பின்பு அவனை முழுக்காட்ட வேண்டியது முஸ்தகப்பா யிருக்கிறது.

யாதொருவன், இஸ்லாமாக வந்த ஒருவனை நீ யின்னம் பொறு, பின்னால் இஸ்லாமாவா யென்றுவது. அல்லது நான் உன்னை இஸ்லாமாக்க மாட்டேன், வேறே யெங்கேயாவது போய் இஸ்லாமாய் விடு என்றுவது சொல்லுவானாகில், இப்படிச் சொன்னவன் காபிராய் விடுகிறான்.

இன்னும் யாதொருவன் இஸ்லாமாய் விட்டால், பின்பு அவனை ஆதரிக்கிறது எல்லா முஸ்லிம்களின் பேரிலும் கடைமையா யிருக்கின்றது. இன்னும் ஆண்டவனிடத்தில் அந்தப் புதிதாய் இஸ்லாமானவனுடைய பதவி அதிகமாகும்.

இந்துக்களின் மார்க்கத்தில் மற்ற மார்க்கத்தாரைச் சேர்க்கிறது கூடவே கூடாது. மேலும் அவர்களில் பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்ற நான்கு வகுப்பார் இருக்கிறார்களே. அவர்களும் ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரில் சேர முடியாது. இன்

னும் யாதொரு இந்துவானவன் இஸ்லாமாகிப் பின்பு இந்துவாக நாடினால், அவனையும் பின்பு இந்துக்களில் சேர்க்கக் கூடாதாம் இவ்விடத்தில் இந்துக்களை நான் இரண்டு கேள்வி கேட்கிறேன்.

1-வது கேள்வி: உங்கள் மார்க்கம் ஆண்டவனால் அருளப்பட்டதா ? அல்லது இல்லையா ? ஆண்டவனால் அருளப்பட்ட தல்ல வென்பீர்களானால், நீங்கள் அந்தமார்க்கத்தை விட்டுவிடவேண்டும். ஆண்டவனால் அருளப்பட்டதுதான் என்று சொல்லுவீர்களானால் நான் சொல்லுகிறேன். ஆண்டவனுடைய கடாக்ஷம் எல்லாருக்கும் பொதுவானதாயிருக்கிறது. எந்த மார்க்கம் ஆண்டவனால் அருளப்பட்டதாயிருக்கிறதோ, அந்த மார்க்கம் சகல ஜனங்களுக்கும் பொதுவா யிருக்க வேண்டும். பின்பு என்ன காரணத்தினால் இந்துக்களைத் தவிர மற்றவர்கள் அந்தக் கடாக்ஷத்துக்குப் பாத்திய மற்றவர்களாக வேண்டும்? மற்ற மார்க்கத்தார் ஏன் அதில் வரக்கூடாது ?

பாருங்கள்; இஸ்லாம் மார்க்கம் சந்தேகம் மில்லாமல் ஆண்டவனால் அருளப்பட்டதா யிருப்பதால் ஒவ்வொருவருக்கும் பொதுவாயிருக்கின்றது. யூதர்கள் கிறிஸ்தவர்கள், மஜூஸிகள் பிராமணர் க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், பறையர், சக்கிலியர் முதலானமற்ற சாதிகளில் நின்றும் எவன் இந்த மார்க்கத்தில் வந்தாலும் சுத்திகரிக்கப் படுகிறான். உங்கள் மார்க்கம் என்ன பூரணமா யிருக்கிறது. அதில் இந்துக்களைத் தவிர மற்றவர்களுக்கு இடமில்லை. மேலும் இந்துக்களிலும் பிராமணனைத் தவிர மற்றவர்களுக்கு மோக்ஷமுண்டாகா தென்றும் சொல்லுகிறீர்கள். இதைக் குறித்து இந்த அத்தியாயத்தின் 5-வது பிரிவில் விவரிக்கப்பட் டிருக்கின்றது.

2-வது கேள்வி: நீங்கள் எங்கள் இஸ்லாம் மார்க்கம் ஆண்டவனால் அருளப்பட்டதென்று சொல்லுகிறீர்களா ? அல்லது இல்லையா ? ஆண்டவனால் அருளப்பட்டதுதா னென்று சொல்லுவீர்களானால், நான் சொல்லுகிறேன்: யாதொருவன் இந்த மார்க்கத்தில் வரவில்லையானால், அவன் சந்தேக மின்றி நரகவாதி யாவானென்று எங்கள் மார்க்கம் கூறுகின்றது. ஆகையால் நீங்கள் இஸ்லாமாய்விட வேண்டியதா யிருக்கின்றது. ஏனென்றால், எந்த மார்க்கம் ஆண்டவனால் அருளப்பட்டதாயிருக்கின்றதோ, அந்தமார்க்கத்தை ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் ஆண்டவனுடைய கோபத்துக் குள்ளாய் விடுவீர்கள். உங்கள் மார்க்கம் ஆண்டவனால் அருளப்பட்ட தல்லவென்பீர்களானால், நான் சொல்லுகிறேன்: எங்கள் மார்க்கம் ஆண்டவனால் அருளப்பட்ட தல்ல வென்றால், நாங்கள் என்ன செய்யவேண்டும் ?

நாங்கள் நற்கதி யடையும் பொருட்டு எந்தமார்க்கத்தை அனுசரிக்கிறது? எங்கள் மார்க்கமோ நீங்கள் சொல்லுகிறபடி ஆண்டவனால் அருளப்படாததா யிருக்கிறது, உங்கள் மார்க்கத்திலாவது எங்களுக்காக யாதொரு வழியுண்டா? இல்லையா? உண்டு என்றால், பின்பு இஸ்லாமானவர்களை ஏன் உங்கள் மார்க்கத்தில் சேர்க்கக்கூடாதென்கிறீர்கள். இல்லையென்றால், நான் கேட்கிறேன்: நீங்கள் எங்கள் மார்க்கத்தையும் ஆண்டவனால் அருளப்பட்ட தல்ல வென்கிறீர்கள். உங்கள் மார்க்கத்திலும் எங்களைச் சேர்க்கக்கூடா தென்கிறீர்கள். பின்பு நாங்கள் என்னகெதியாகிறது? ஆண்டவன் எங்களை வீணுக்காகவா படைத்தான்? இதற்கு என்ன மறுமொழி யிருக்கிறது காண்பியுங்கள்.

ஹிகாயத்து

நான் என்னுடைய இஸ்லாமை மறைத்துக்கொண்டிருந்த நாள்களில், சிலசினேகிதர்களுக்கு இஸ்லாம் மார்க்கத்தின் நன்மைகளைச் சொல்லி அவர்களுக்கு ஆசையைப் பூட்டிக்கொண் டிருந்தேன். ஆண்டவன் கிருபையால் பத்துப் பதினொரு இந்து நேசர்கள் என்போதனையால் அந்தரங்கத்தில் இஸ்லாமு மானார்கள். அந்தச்சினேகிதர்களுக்காகவே அநேக நேரங்களில் பண்டிதர்களிடத்தில் வாதமும் தர்க்கமுமா யிருந்தது. அந்தச் சினேகிதர்களின் சகவாசம் வெகு ஆச்சரியமானதாயிருந்தது. நாளதுவரையில் அதன் ஆனந்தம் மனதில் நிறைந்திருக்கின்றது. ஆண்டவன் அவர்களை வெளியரங்கத்தில் இஸ்லாமாக்கும்படி துவா செய்கிறேன்.

உண்மையே உயரும் என்றபடி, அந்தத் தர்க்கத்தில், தங்கள் மார்க்கத்தில் மிகவும் தேர்ந்திருந்த பெரிய பெரிய பண்டிதர்களும் சரியான உத்தரம் சொல்ல முடியாமல் வாய்மூடினார்கள். அந்த நாளில் நாங்கள் ஒரு சினேகிதருக்கு வெகுநாளாய் இஸ்லாம் மார்க்கத்தைக் குறித்து ஆசையைப் பூட்டிக்கொண்டு வந்தோம். அதற்கு அவர், இன்னபண்டிதர் மார்க்கவிஷயமான தர்க்கத்தில் தோல்வி யடைவாரானால், நானும் இஸ்லாம் மார்க்கத்தை ஒப்புக்கொள்ளுவே னென்றார். அப்படியே எல்லாச் சினேகிதருடைய சம்மதியின்பேரில் அயலூரி லிருந்த அந்தப் பண்டிதர் வரவழைக்கப் பட்டார். அவர் ஆறு சாஸ்திரங்களிலும் தேர்ந்தவரா யிருந்தார், பின்பு தர்க்கம் ஆரம்பமாகிப் பதினைந்துநாள் வரையில் பலபல மாதிரியான வாதங்கள் நடந்து வந்தன. நான் இஸ்லாமா யிருக்கிறது அந்தப் பண்டிதருக்குத் தெரியாது. எல்லாரிடத்திலும் இப்படித்தான் தர்க்கம் பண்ணுகிறதுபோ லிருக்கிற தென்று எண்ணிக்கொண் டிருந்தார்.

ஓர் இரவு ஆண்டவ னருளால் ஒரு வார்த்தை என் யோசனையில் விழுந்தது. மறுநாள் அந்த வார்த்தையைக் கொண்டு தர்க்கம் பண்ண ஆரம்பம் செய்தேன். முதல் முதல் நான் பண்டிதரிடத்தில் கேட்டதென்னவென்றால், பண்டிதரே நான் தங்களிடத்தில் ஒரு கேள்வி கேட்கிறேன். அதாவது இஸ்லாமானவர்கள் தங்கள் மார்க்கத்தின் பேரிலேயே நிலைத்திருப்பார்களானால் அவர்களுக்கு மோட்ச முண்டா? இல்லையா? என்றேன். அதற்கவர் ஆ! ஆ! ஏனில்லை? உண்டு என்றார். பின்பு நான் இஸ்லாமானவர்களுடைய மார்க்கம் உண்மையா? இல்லையா? என்றேன். அதற்கவர், ஆம், அவர்களுக்காக அது உண்மைதானென்றார். அதற்கு நான், அவர்கள் மார்க்கத்துக்கு மூலாதாரம் குர்ஆன்ஷரீபா யிருக்கிறது. அந்தக் குர்ஆன்ஷரீப் மெய்யானவேதமா? இல்லையா? என்றேன். அதற்கவர், ஏனில்லை? மெய்யானவேதமே என்றார். அதற்கு நான், பண்டிதரே தாங்கள் இந்தப் பேச்சின்பேரில் நிலைத்திருக்கவேண்டும். நீங்கள் குர்ஆன்ஷரீப் மெய்யான வேதமென்று சொல்லியிருக்கிறீர்கள். இனி இந்தப் பேச்சைவிட்டு மாறக்கூடா தென்றேன். அதற்கவர், ஆ! ஆ! குர்ஆன்ஷரீபு உண்மைதானென்றார். அப்பொழுது நான், குர்ஆன்ஷரீபில் "யாதொருவன் இஸ்லாம் மார்க்கத்தைத் தவிர வேறே மார்க்கத்தைத் தேடுவானாகில் அவனில் நின்றும் அது அங்கீகரிக்கப்படாது. அவன் மறுமையில் நஷ்டமடைந்த பேர்களில் ஒருவனாவான்" என்று எழுதியிருக்கின்றது. நீங்கள் குர்ஆன்ஷரீபு உண்மையான வேதமென்று ஒப்புக்கொண் டிருக்கிறீர்கள். குர்ஆன்ஷரீபோ இஸ்லாம் மார்க்கத்தைத் தவிர மற்ற மார்க்கம் ஆண்டவனுக்குப் பிரீதியில்லையென்று கூறுகின்றது. இப்பொழுது நீங்களும் சீக்கிரமாய் இஸ்லாமாய் விடுங்கள், உங்கள் மார்க்கத்தை விட்டுவிடுங்களென்றேன் பண்டிதர் இந்த வார்த்தையைக் கேட்டுக் குர்ஆன்ஷரீபில் இப்படிச் சொல்லியிருந்தால் அது உண்மையான வேதமல்லவென்றார். அதற்கு நான், குர்ஆன்ஷரீப் உண்மையான வேதமல்ல வென்றால், இஸ்லாமானவர்களுக்கு அவர்கள் மார்க்கத்தில் மோக்ஷ மில்லை யென்றாகவேண்டும். அப்படியானால் நான் கேட்கிறேன். யாதொரு இஸ்லாமானவன் உங்களிடத்தில் வந்து, எங்களை உங்கள் மார்க்கத்தில் சேர்த்துக்கொண்டு, நாங்கள் முத்தியடையும்படி யாதொரு வணக்கத்தின் வழியைக் காட்டுங்களென்று கேள்க்கும் பட்சத்தில், உங்களின் யாதொரு சாஸ்திரத்தில் இஸ்லாமானவர்களுக்காக யாதொரு வணக்கத்தின் முறை எழுதியிருக்கின்றதா? இல்லையா? என்றேன். அவர் எங்கள் சாஸ்திரங்களில் அவர்களுக்காக யாதொரு வணக்கத்தின் முறை எழுதி யிருக்கவில்லையென்றார். அதற்கு, நான் பதில் சொல்லு

கிறதற்கு முன்னே இந்தத்தர்க்கத்தை உண்டு பண்ணின ஷெ சினேகிதர், தாமே பண்டிதரைப்பார்த்து, ஆ! ஆ! பண்டிதரே, இது வெகு புதுமையான பேச்சாயிருக்கின்றது. இஸ்லாமானவர்களுக்கு அவர்கள் மார்க்கத்திலும் மோட்சமில்லை, நீங்களும் அவர்களுக்காக ஒருவழியைக் காட்டுகிறதில்லை யென்றால், பின்பு அந்த ஏதுமற்றவர்கள் என்னதான் செய்கிறது? எப்படித் தன்னைப்படைத்த ஆண்டவனை வணங்குவார்கள்? பாருங்கள், இஸ்லாமானவர்கள் உங்கள் மார்க்கத்தில் உங்களுக்கு மோட்சமில்லையென்று சொல்லுகிறதுடன் எங்கள் மார்க்கத்தில் வாருங்கள், அதில் உங்களுக்கு மோட்சமுண்டாகு மென்றுஞ் சொல்லுகிறார்கள். நீங்களோ இஸ்லாமானவர்களுக்கு மோட்சம் அந்த மார்க்கத்திலு மில்லை, இந்த மார்க்கத்திலு மில்லை, அவர்களுக்கு வணக்கத்தின் யாதொரு வழியுமில்லை யென்கிறீர்கள். அவர்களுக்கு எவ்விதத்திலும் மோட்சமில்லை யென்றால், ஆண்டவன் அவர்களைப் புற்பூண்டாகவா படைத்திருக்கிறான்? போதும் உங்கள் மார்க்கமே தப்பானதென்று உணர்ந்துகொண்டேன் என்று சொன்னார். இதோடு இந்தத் தர்க்கம் முடிந்தது. அந்தச் சினேகிதரும் அந்தரங்கத்தில் ஈமான் கொண்டார். அல்ஹம்து லில்லா.

குபிர் என்ற அஞ்ஞானத்தை விட்டு இஸ்லாம் மார்க்கத்தை ஒப்புக்கொள்ளுங்களென்று இந்துக்களுக்குச் சொல்லப்பட்டால், அல்லது மத சம்பந்தமான யாதொரு விஷயத்தில் பேச்சு வந்துவிட்டால், சில இந்துக்கள், நாங்கள் எங்கள் ஒளியான மார்க்கத்தைவிட்டு உங்கள் இருளான மார்க்கத்தில் ஏன் வருவோமென்று சொல்லுகிறார்கள். அதற்கு மறுமொழியாவது, எங்கள் மார்க்கமே ஒளியான மார்க்கம், அதில் ஆண்டவனை ஒன்றுபடுத்தும் சங்கதியே நிறைந்திருக்கின்றது. உங்கள் மார்க்கமே இருளான மார்க்கம், அதில் ஷிர்க்கென்ற இணை வைப்பதுவே நிறைந்திருக்கின்றது.

எந்த மார்க்கத்தில் மாட்டுச் சாணி மூத்திர மிவைகளைச் சாப்பிடுகிறதும், கோசம் உபஸ்த மிவைகளை வணங்குகிறதும் இன்னும் மற்ற வெழ்க்கங்கெட்ட காரியங்களைச் செய்கிறதும் ஆகுமென்றும், புண்ணியமென்று மெழுதி யிருக்கின்றதோ, அந்த மார்க்கம் எப்படி ஒளியான மார்க்கமாகும்? நீங்கள் எங்கள்மார்க்கத்தைக் குறித்து என்ன என்ன ஆக்ஷேபங்கள் செய்திருக்கிறீர்களோ, அவைகளுக்குத் தக்க ஜவாபுகள் கொடுக்கப்பட் டிருக்கின்றன. பின்பு உங்களுடைய மார்க்கமும் எங்களுடையமார்க்கமும், ஒளியும் இருளுமா யிருக்கிற மற்றச் சங்கதிகளை, இந்தப்புஸ்தகம் முழுமையும் பார்வையிட்டு நியாயமா

யோசித்து, எது ஒளியானது எது இருளானது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

இன்னும் சிலர், புத்தியின் திருஷ்டாந்திரங்களைக் கொண்டு நோக்குகையில் இஸ்லாம்மார்க்கம் மேலிட்டதாகவே யிருக்கின்றதென்றும், ஆனால் எங்கள் புராணங்களில் தன் மார்க்கம் கடுகெவ்வளவும் அன்னியர் மார்க்கம் மலையவ்வளவுமா யிருந்தபோதிலும், அப்போதும் தன் மார்க்கத்தை விடக்கூடாதென்று எழுதி யிருக்கிறதே யென்று சொல்லுகிறார்கள்.

அதற்கு மறுமொழியாவது, தன் மார்க்கம் தப்பென்பது மனச்சாட்சியாய்த் தெரிந்த பிற்பாடு, பின்பும் அதன்பேரிலேயே நிலைத்திருக்கிறது சுத்த மூடத்தனம். இதனால் இப்பேர்ப்பட்ட மதியீனமான வார்த்தை யெழுதி யிருக்கிற உங்கள் புராணங்களும் தப்பு என்று ஏற்படுகின்றன. ஏனென்றால், நான் பாஷாணம் தின்றிருக்கிறேன் என்று மனச்சாட்சியாய் அறிந்தவன், அதை நிவர்த்திக்க வழிதேடாமல் பின்பும் அதையே தின்றால் அவன் சாகவே சாவான். சத்தியம் எதுவோ அதையே மார்க்கமென்று சொல்லவேண்டும். அசத்தியத்தை மார்க்கமென்று சொல்லக்கூடாது, நீங்கள் இஸ்லாம் மார்க்கத்தை ஒப்புக்கொண்டீர்களானால் இதே உங்கள் மார்க்கமாகும். பின்பு அதை விடக்கூடாது.

### ஹிக்காயத்து.

ஒருநாள் நான் என்னுடைய ஒரு சிநேகிதருக்கு முன்னால் என் பீராகிய அஜரத்து மவுலானா அலாவுத்தீன் சாகிபவர்களிடம் மார்க்க விஷயத்தைக் குறித்துப் பேசிக்கொண் டிருக்கும்போது, நான் மேற்படி அஜரத்தவர்களிடம், தங்களுக்கு இஸ்லாம் மார்க்கம் தப்பென்று மனச்சாட்சியாய்த் தெரிந்துவிட்டால், தாங்கள் இந்த மார்க்கத்தை விட்டுவிடுவீர்களா? இல்லையா? என்றதற்கு, மேற்படி அஜரத்தவர்கள் இஸ்லாம் மார்க்கம் தப்பென்றாகுவது அசாத்தியம். அப்படியே இஸ்லாம் மார்க்கம் தப்பென்று நமக்கு மனச்சாட்சியாய் தெரிந்து, பின்பு நாம் அதை விடாம லிருந்தால் அல்லாவுடைய லானத்தென்ற முனிவு நமதுபேரிலிறங்கு மென்றார்கள். மறுநாள் அந்தச் சிநேகிதருக்கு முன்னாலேயே விஷ்ணுதேவ பண்டிதருக்கும் நமக்கும் தர்க்கம் நடந்தது. நான் மேற்படி பண்டிதரிடம் பண்டிதரே! இந்து மார்க்கம் தப்பென்று உங்கள் மனச்சாட்சியாய்த் தெரிந்துவிட்டால், நீங்கள் இந்து மார்க்கத்தை விட்டுவிடுவீர்களா? இல்லையா? என்றேன். அதற்கவர், ஒருபோதும் விடமாட்டோமென்றார். அதற்கு நான், ஜவாபு சொல்ல

வாயெடுப்பதற்கு முன்னமே, அந்தச் சிநேகிதரே மேற்படி பண்டிதரைப் பார்த்து, ஐயரே, இதென்ன கிரமமான வார்த்தையா? ஒரு மார்க்கம் தப்பென்றறிந்த பிற்பாடும் அதை விடக்கூடாதென்பது நியாயமா? இப்பேர்ப்பட்ட அக்கிரமமான வார்த்தை இஸ்லாமானவர்கள் சொல்லுகிறதில்லையே என்றார். சில நாள் சென்ற பின் இந்தச் சிநேகிதரும் இந்து மார்க்கத்தின் கெடுதிகளையும் இஸ்லாம் மார்க்கத்தின் நன்மைகளையும் உணர்ந்து அந்தரங்கத்தில் இஸ்லாமாய்விட்டார். அல்ஹம்து லில்லா.

இன்னும் சிலர் இஸ்லாமானவர்களுடைய மார்க்கம் வெகு அழகானதா யிருக்கிறதென்றும், ஒரே கடவுளைத்தவிர வேறொருவரையும் அவர்கள் வணங்குகிறதில்லை யென்றும், இந்துக்களுடைய மார்க்கம் ரொம்பவும் கெட்டதா யிருக்கிறதென்றும், அதில் ஆயிரக்கணக்கான தெய்வங்களை அவர்கள் வணங்குகிறார்களென்றுஞ் சொல்லுகிறார்கள். ஆனால் இப்படிச் சொல்லுகிறவர்கள் தங்கள் முன்னோர்களுடைய கட்டுப்பாடுகளுக்கு அமைந்திருப்பதினால் இஸ்லாம் மார்க்கத்தை ஒப்புக் கொள்ளுகிறார்களில்லை.

எப்படியென்றால், சில இந்துக்கள் ஆண்டவனுக்கு எங்களை முஸ்லிமாக்கப் பிரிய மிருந்தால் எங்களை இந்துக்கள் வீட்டில் ஏன் பிறப்பிக்கிறான்? முஸ்லிம்களுடைய வீட்டிலேயே பிறப்பிக்க மாட்டானா? ஆகையால் நாங்கள் முந்தியே இந்துவாய்ப் பிறந்திருக்கிறோம். இப்பொழுது நாங்கள் ஆண்டவனுடைய சிருட்டிப்பை எப்படிப் பேதப்படுத்துவோ மென்று சொல்லுகிறார்கள்.

அதற்கு மறுமொழியாவது, எவன் எந்தக் கூட்டத்தில் பிறந்தானோ அவன் அந்தக் கூட்டத்தின் நடவடிக்கையின் பேரிலேயே யிருக்கவேண்டு மென்கிற அவசியமில்லை. மேலும் தன் புத்தியினால் உண்மையான மார்க்கத்தை ஆராய்ந்து, எந்த மார்க்கம் ஆண்டவனால் அருளப்பட்டதா யிருக்கிறதோ, அந்த மார்க்கத்தின்படி நடந்துக்கொள்ளவேண்டியது அவசியம். இதின் நிமித்தமே எங்கள் இஸ்லாம் மார்க்கத்தில் ஒவ்வொரு ஆண்பெண்ணும் அவர்கள் புத்தி பூரணமான உடனே, தன் மார்க்கம் உண்மை யென்பதின் ஆதாரங்களை அறியவேண்டிய கடமையா யிருக்கின்றது. தகப்பன் பாட்டனுடைய கட்டுப்பாடுகளிலேயே இருந்துவிடக் கூடாது.

ஆகையால் ஆண்டவன் உங்களை இந்துக்களின் வீட்டில் பிறப்பித்தது நீங்கள் இந்துவாகவே இருக்கிறதற்கல்ல. மேலும் நீங்கள் புத்தியினால் ஆராய்ந்து உண்மையான மார்க்கத்தைத் தேடி இஸ்லாமா

ப் விட்டீர்களானால், ஆண்டவனிடத்தில் மற்ற முஸ்லிம்களுடைய பதவியைக்காண உங்கள் பதவி மேலிட்டிருப்பதற்காகவே உங்களை அப்படிப் பிறப்பித்தான். தகப்பன் பாட்டன் முதலான முன்னோர்களுடைய மார்க்கத்தை விட்டுவிடுகிறது மகா கஷ்டமாகையால், ஆண்டவனுக்காக நீங்கள் அதை விட்டு விடுகிறதின் நிமித்தம் உங்களுக்கு மேன்மையான பதவி கிடைக்கும். இஸ்லாம் மார்க்கத்தின் பொருட்டால் உங்கள் மனக் குருடு நீங்கி நீங்கள் ஞானமுள்ளவர்களாய் விடுவீர்கள். அப்படியே ஆண்டவன் குர்ஆன்ஷரீபில் "ஈமான் கொண்டவர்களுக்கு ஆண்டவன் காரிய கர்த்தனாயிருந்து, அவர்களை இருட்டிலின்றும் வெளிச்சத்தில் கொண்டுவருகிறான்" என்று திருவுளமாயிருக்கிறான்.

இன்னும் நீங்கள் முந்தியே இந்துவாய்ப் பிறந்திருக்கிறோமென்று சொன்னீர்களே, அதுவும் தப்புத்தான். ஏனென்றால், நீங்கள் எந்த நாளில் பிறந்தீர்களோ, அந்த நாளில் உங்கள் பேரில் இந்துக்களின் யாதொரு அடையாளமுமிருந்ததில்லை. அப்பொழுது நீங்கள் இராம லக்ஷ்மணனையும் அறிந்ததில்லை. பிரம்மா விஷ்ணுவையும் உணர்ந்ததில்லை. உங்கள்கழுத்தில் பூணூலுமிருந்ததில்லை. அப்பொழுது சந்திபாவந்தனமும் உங்களுக்குத் தெரியாது. தர்ப்பணமும் அறிந்திருக்க மாட்டீர்கள். பிற்பாடுதான் நீங்கள் இந்துவானீர்கள்.

இன்னும் ஆண்டவனுடைய சிருட்டிப்பை நாங்கள் எப்படிப் பேதமாக்கிக் கொள்ளுவோமென்றீர்களே. கேளுங்கள்; நபி சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் பின்பற்றுதலினால் ஆண்டவனுடைய சிருட்டிப்பில் பேதம் சம்பவிக்காது. மேலும் இது ஆண்டவனுக்கு ரொம்பவும் பிரீதியானதாயிருக்கின்றது. எப்படியென்றால், யாதொரு அரசன் தன்னுடைய ஒரு பட்டாளத்தை ஒரு கோட்டையில் வைத்து சம்ரக்ஷணை செய்துகொண்டிருந்து, பின்பு ஒரு காலத்தில் அந்த அரசன் தன்னுடைய பிரதான ஸ்தானாதிபதியின் மூலமாய் வாய்மொழியாயும் சொல்லி, அவனிடம் தாக்கீதும் கொடுத்து அந்தப் பட்டாளத்தினிடம் அனுப்பி, அந்தப் பட்டாளத்தை அந்தக் கோட்டையிலிருந்துப் புறப்பட்டு இன்னபட்டணத்துக்குப் போங்களென்றும் இந்தஸ்தானாதிபதியின் உத்திரவுக்குக்கீழ்படிந்திருங்களென்றும், அப்படியிருந்தீர்களானால், நாம் உங்கள் பேரில் சந்தோஷமாகி உங்களுக்கு அநேக வெகுமானங்களைக் கொடுப்போமென்றும், பைரங்கமான உத்திரவு செய்திருக்க, அந்தப் பட்டாளத்தின் ஜனங்கள், அரசன் எங்களை முதல் முதல் எந்தக் கோட்டையில் வைத்திருக்கிறா

ரோ அதிலேயே யிருப்போம். அரசனுக்கு எங்களை அந்தப் பட்டணத்தில் வைக்கப் பிரிய மிருந்தால் எங்களை முதல் முதல் இந்தக்கோட்டையில் ஏன் வைக்கிறார். நாங்கள் இந்தக்கோட்டையை விடுவது அரசனுடைய உத்திரவுக்கு விரோதமாகின்றது என்று சொல்லுவார்களானால், அந்தப் பட்டாளத்தின் ஜனங்கள் மகா மூடர்களென்று எண்ணப்படுகிறதுந் தவிர, அரசனுடைய கோபத்துக்குள்ளாய் விடுவார்களல்லவா? அப்படியே ஆண்டவன் உங்களை முந்தி இந்துக்களின் வீட்டில் பிறப்பித்துப் பின்பு நீங்கள்வளர்ந்து புத்திப் பூரணமானதின் பின்னால் தன்னுடைய பிரதான ஸ்தானாதிபதியாகிய அஜரத்துமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் மூலமாய் குர் ஆன் ஷரீப் என்ற வேதக்கட்டளையாகிய தாகீதையும் கொடுத்து, அதில் நீங்கள் உங்கள் தகப்பன் பாட்டனுடைய மார்க்கத்தை விட்டு நீங்கி நீங்கள் சொர்க்கத்தை யடையும்படிக்கும், நாம் உங்கள் பேரில் சந்தோஷ மாகும்படிக்கும், இஸ்லாம் மார்க்கத்தை ஒப்புக்கொள்ளுங்களென்று உத்திரவு அனுப்பி யிருக்க, நீங்கள் இஸ்லாமானால் ஆண்டவனுடைய சிருட்டிப்பில் பேதம் வருகின்றதென்றால், உங்கள் புத்தியின்பேரில் அதிக பரிதாபப்பட வேண்டியதாயிருக்கிறது. யாதொருவன் யாதொருவனுடைப் வீட்டில் பிறந்தால் அவன் இருந்தது போலவே இருக்கவேண்டியது அவசிய மென்றால், ஏழைகளின் வீட்டில் பிறந்த ஒருவன் தான் சீமானாய் விட்டால்; அவன் அந்தத் திரவியங்களை அனுபவிக்கிறது கூடாதென்றாகிறது. ஏனென்றால், அவன் தகப்பன் பாட்டன் ஏழைகளா யிருந்திருக்க இவன் அவர்களுக்கு ஏன் விரோதம் செய்கிறான். இன்னும் ஒருவனுடைய தகப்பன் பாட்டன் கபோதிகளா யிருந்தால் இவனும் அவர்க ளிருந்தபடியே இருக்கவேண்டு மாகையால் தன்கண்களைக் குருடாக்கிக் கொள்ளவேண்டும். இன்னும் எவனுடைய தகப்பன் பாட்டன் குஷ்டரோகிகளா யிருந்தார்களோ அவர்ககளுடைய பிள்ளைகளுக்கும் அந்த ரோகம் தொட்டால், தகப்பன் பாட்டன் இருந்தது போல் இருக்கவேண்டு மாகையால், அவர்கள் அதற்கு யாதொரு பரிகாரம் செய்யாம லிருக்க வேண்டும், ஒரு இந்துவும் இப்படி இருக்க நாங்கள் பார்த்ததில்லையே.

ஒருக்கால் நீங்கள் இப்பேர்ப்பட்டகாரியங்களில் தகப்பன் பாட்டனைப் பின்பற்றக் கூடாதென்றும், இவைகளில் தன் புத்தியினால் முயற்சிசெய்ய வேண்டுமென்றும், மார்க்க விஷயமான கரியங்களில் தகப்பன் பாட்டனுடைய பின்பற்றுதல் போது மென்றும், சொல்வீர்களானால், அதற்கு மறுமொழியாவது, இப்பேர்ப்பட்ட காரியங்களில் தகப்பன் பாட்டனைப் பின் பற்றமல் தன் புத்தியினால் முயற்சி செய்ய

வேண்டு மென்றால், மார்க்க விஷயமான காரியம் எல்லாவற்றிலும் முற்படுத்தப்பட்டதும் முக்கியமானதுமா யிருப்பதால், அதில் தன் புத்தியை அதிகமாய்ச் செலவு செய்யவேண்டும். அவைகளை யாதொருவருடைய பின்பற்றுதலின்பேரில் வைக்கக்கூடாது, இல்லாவிட்டால் எவனுடைய தகப்பன் பாட்டன் திருடனாகவும், அனீதக்காரனாகவும், விபசாரம் செய்கிறவனாகவும், மதுபானம் பண்ணுகிறவனாகவு மிருந்தானோ, அவனும் அவர்களைப் பின்பற்றிக் கட்டாயமாய்க் களவும் அனீதமும் விவசாரமும் மதுபானமும் பண்ண வேண்டி வரும். இது வோ ஒருவரிடத்திலும் ஆகாது.

கொஞ்சமாவது யோசியுங்கள்; ஆண்டவன் உங்களுக்குப் பார்க்கக் கண்ணையும், கேட்கக் காதையும், பேச நாவையும் கொடுத்தான். இப்படியே ஒவ்வொரு வஸ்துவையும் ஒவ்வொரு வேலைக்காகக்கொடுத்திருக்கிறான். பின்பு எல்லாவற்றிலும் மேன்மையான இந்தப் புத்தியை ஏன்கொடுத்தான் என்று உங்களை நான் கேட்கிறேன். இதற்குப் புத்திமானா யிருக்கிறவன் என்ன சொல்லுவான்? தன்னைப் படைத்த ஆண்டவனை அறிந்து அவனுடைய பொருத்தத்துக்குள்ளிருந்து தன்னுடைய நற்கதியைத் தேடுகிற தற்காக, உண்மையான மார்க்கத்தையும் பொய்யான மார்க்கத்தையும் வகுத்தரியும் பொருட்டு, ஆண்டவன் புத்தியைக் கொடுத்தான் என்றே சொல்லுவான். பின்பு ஆண்டவனால் கொடுக்கப்பட்டபுத்தியை இப்படியேவெறுமையாய், விட்டுவிடுகிறதும் மெய் பொய்யில் வகுத்தறியாமல் மற்றவர்களுடைய கட்டுப்பாடுகளில் மாத்திரம் அமைந் திருக்கிறதும் கடினமான பாவமா யிருக்கிறது. மார்க்க உண்மையை அறிவதில் தகப்பன் பாட்டனுடைய பின்பற்றுதலே போதுமென்றால், பின்பு ஆண்டவன் உங்களுக்கு வெவ்வேறே புத்தியையேன் கொடுக்கிறான். அவனவன் தன் மார்க்க உண்மையை விளங்கி யறிவதற்காகவே ஆண்டவன் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறே புத்தியைக் கொடுத்திருக்கிறானாகையால், ஒவ்வொருவரும் தன் தகப்பன் பாட்டனுடைய மார்க்கம் ஆண்டவனுடைய பொருத்தத்துக்கு நேராயிருந்தால் மாத்திரம் அதின்படி நடக்கவேண்டும், விரோதமா யிருந்தால் அதை விட்டுவிட வேண்டும்.

இன்னும் உங்கள் சாஸ்திரங்களினாலேயே தகப்பன் பாட்டனுடைய மார்க்கம் கெட்டதா யிருந்தால், அதை விட்டுவிட வேண்டுமென்று ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றது.

எப்படியென்றால், இரணியன் கெட்ட மார்க்க முடையவனாயிருந்தான். அந்தப்பாதகன் தன்னைத்தான் ஆண்டவனென்று சொல்லிக்

கொண்டிருந்தான். அவன் மகன் பிரகலாதன், அவன் மார்க்கத்தைக் கெட்டதென் றறிந்து அதை விட்டுவிட்டான். இரணியனுடைய மார்க்கம் தன் துதியா யிருந்தது. பிரகலாதனுடைய மார்க்கம் ஆண்டவன் துதியா யிருந்தது. ஆகையால் உங்கள் சாஸ்திரங்களில் பிரகலாதன் தன் தகப்பனுடைய மார்க்கத்தைக் கெட்ட தென் றெண்ணி அதை விட்டுவிட்டபடியால் பிரகலாதனை அதிகமாய்ப் புகழ்ந்தெழுதி யிருக்கின்றது.

ஒருக்கால்நீங்கள் இரணியனுடைய மார்க்கமும் பிரகலாதனுடைய மார்க்கமும் ஒன்றாகவே யிருந்ததென்றும், ஆனால் இவருடையநிர்ணயமும் நடத்தையும் வெவ்வேறாக யிருந்ததென்றும் சொல்லுவீர்களானால், அதற்கு மறுமொழியாவது, மார்க்கம் பேதமாகிறதினாலேயே நிர்ணயமும் நடத்தையும் பேதமாகும், வேறொன்றும் பேதமாகாது. ஆகையால், பிரகலாதன் எப்படித் தன் தகப்பனுடைய கெட்ட நிர்ணயத்தையும் கெட்ட நடத்தைகளையும் விட்டு நல்ல நிர்ணயத்தையும் நல்ல நடத்தைகளையும் எடுத்தானோ, அப்படியே நீங்களும் ஆண்டவனைத் தவிர மற்றவர்களை வணங்குகிறது ஆகுமென்ற கெட்ட நிர்ணயத்தையும் விக்கிரகம் வணங்குகிற கெட்ட நடத்தையையும் விட்டு ஆண்டவனை வணக்கத்துக் குரியவனென்றும், ரசூலை வழிகாட்டுகிறவர்களென்றும், விசுவாசிக்கிற நல்ல நிர்ணயத்தையும் ஆண்டவனுடைய வணக்கங்களென்ற தொழுகை நோன்பு முதலான நல்ல நடத்தைகளையும் எடுத்துக் கொள்ளுங்கள். பின்பும் நீங்கள், இரணியன் தன் தகப்பன் பாட்டனுடைய மார்க்கத்தைவிட்டுத் தன்னை வணங்கவேண்டுமென்ற புதுமார்க்கத்தை உண்டுபண்ணின படியினாலே, பிரகலாதன் அதை விட்டுத்தன் முன்னோர்களுடைய மார்க்கத்தையே அநுசரித்தான் என்று சொல்லுவீர்களானால், அதற்கு மறுமொழியாவது, உங்கள் சொற்படி இரணியன் தன் முன்னோர்களுடைய மார்க்கமாகிய ஆண்டவன் வணக்கத்தை விட்டுத் தன்னை வணங்கவேண்டு மென்ற புதுமார்க்கத்தை யுண்டுபண்ணினதினால் பிரகலாதன் அதைக் கெட்டதென்றெண்ணி யெப்படி விட்டுவிட்டானோ, அப்படியே உங்கள்முன்னோர்களும் அஜரத்து ஆதம், அஜரத்து நூகு, அலகிவஸ்ஸலாம் முதலான தங்கள் முன்னோர்களின் பூர்வீக மார்க்கமாகிய தௌஹீதென்ற ஒருமைப்படுத்துதலை விட்டு ஷிர்க்கென்ற விக்கிரக வணக்கத்தை யெடுத்துக் கொண்டபடியால் நீங்களும் அவர்கள் மார்க்கத்தை விட்டு அஜரத்து ஆதம், அஜரத்து நூகு, அலைகிமஸ்ஸலா முடைய பூர்வீக மார்க்கமாகிய தௌஹீதை யெடுத்துக் கொள்ளுங்கள்.

பின்பு நீங்கள் அஜரத்து ஆதம், அஜரத்து நூகு முதலானவர்கள் எங்கள் முன்னோர்க ளல்ல, நாங்கள் பிரம்மாவுடைய வம்சமென்று சொல்லுவீர்களானால், இது சுத்தத் தப்பான வார்த்தை. ஏனென்றால் நீங்கள் பிரம்மாவுடைய வம்சமென்றால் உங்கள் சொற்படி பிரம்மாவுக்கு நான்கு முகங்களுண்டு. அந்த நான்கு முகம் உங்களுக்கும் இருக்கவேண்டும். அப்படியல்ல, நீங்கள் ஷைத்தானுடைய போதனையினால் உங்களை பிரம்மாவுடைய வம்சமென்று ஏற்படுத்திக்கொண்டீர்கள், உண்மையில் நாங்களும் நீங்களும் எல்லாரும் ஆதமுடைய மக்களாகவே யிருக்கிறோம். அவரே ஆதிமனுஷன், அவரே சகல சாதி மனிதருக்கும், ஆதிபிதாவா யிருக்கிறார். அப்படி யல்லவென்று நீங்கள் ஆதமுடைய வம்சத்தை விட்டுப் புறம்பாகித் தேவ ஜாதியாகிய பிரம்மாவுடைய வம்ச மென்பீர்களானால், அதனால் உங்களுக்கு இன்னமொரு கெடுதி சம்பவிக்கும், அதென்னவென்றால், பிரம்மாவானவர் தம்முடைய மகளாகிய சரஸ்வதியைத் தமக்கு மனைவியாக்கிக் கொண்டார். உங்களிடத்தில் முன்னோர்களுடைய காரியங்களில் பின்பற்றுதல் அவசியமா யிருக்கிறபடியால், நீங்களும் உங்கள் குமாரத்திகளை மனைவியாக்கிக் கொள்ளும்படி நேரிடும்.

இன்னும் சில இந்துக்கள் இந்த ஏழையாகிய என்பேரில் ஆட்சேபமாக, நீ உன் முன்னோர்களுடைய மார்க்கத்தை விட்டுவிட்டாயே உன் தகப்பன் பாட்டன் முதலான முன்னோர்கள் மூடர்களாகவா யிருந்தார்கள். நீ மாத்திரந்தானா பெரிய புத்திசாலியாய்ப் பிறந்து விட்டாயென்று கேட்கிறார்கள்.

அதற்கு மறுமொழியாவது: பிரகலாதன் தன் தகப்பனாகிய இரணியனுடைய மார்க்கத்தை விட்டு விட்டதின் நிமித்தம் சாஸ்திரங்களில் பிரகலாதனைப் புகழ்ந்தும், இரணியனை இகழ்ந்து மெழுதி யிருக்கின்றன. இன்னு மிவ்விடத்தில் இதற்கு மறுமொழி சொல்லுகிறவன் இரணியன் மூடனா யிருந்தானென்றும். பிரகலாதன் புத்தி சாலியாய்ப் புறந்தானென்றுஞ் சொல்லலாம்.

இன்னு மிவ்விடத்தில் உங்கள் மார்க்கத்தின் பேரில் முக்கியமான ஒரு ஆக்ஷேபம் வருகின்றது. அதற்கு என்ன நியாயம் சொல்லுவீர்களோ தெரியாது. அதென்னவெனில், நீங்கள் இரணியனை யேன் கெட்டவனென்றும் தெய்வ விரோதியாகிய துஷ்ட னென்றுஞ் சொல்லுகிறீர்கள்? அவன் ஒரு அடிமையா யிருந்துத் தன்னை ஆண்டவனென்று சொன்னதினால் தானே? அப்படியானால் நான் கேட்கிறேன் உங்கள் ராமச் சந்திரன், பரசுராமன், கிருஷ்ணன் முதலானவர்களும்

அடிமைகளா யிருந்து தங்களை ஆண்டவனென்று சொல்லி யிருக்கிறார்களே; அவர்களை யேன் துஷ்டர்களென் றெண்ணுகிறதில்லை. அவர்களையும் கெட்டவர்களென்றெண்ணி அவர்களின் பின்பற்றுதலை விட்டு முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமுடைய பின் பற்றுதலை யெடுத்துக் கொள்ளுங்கள். அவர்களோ தங்களை ஆண்டவனென்று சொல்லாமல் அடிமை யென்றே சொல்லி யிருக்கிறார்கள். மேலும் அடிமையாயிருக்கிறதைத் தங்களின் மேன்மை யென் றெண்ணுகிறார்கள். எப்படி யென்றால், "அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு அஷ்ஹது அன்னமுகம்மதன் அப்துஹு வரசூலுஹு" என்ற கலிமா ஷகாதத்தினால் அது வெளியாகும். அதன் அர்த்தமென்ன வென்றால், நான் சாக்ஷி சொல்லுகிறேன். வணக்கத்துக் குரியவன் ஆண்டவனைத் தவிர வேறொருவனுமில்லை. அவன் தனித்தவன் அவனுக்கு யாதொரு இணையில்லை. மீண்டும் நான் சாக்ஷி சொல்லுகிறேன். முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மாகிறவர்கள் அவனுடைய உரிய அடியாரும் உண்மைத் தூதாங்கருமாயிருக்கிறார்கள் என்பதாம்.

ஒருக்கால் நீங்கள் இராமன் கிருஷ்ணன் முதலானவர்கள் தேவ அவதாரிகளா யிருந்தபடியால் நாங்கள் அவர்களைப் பின்பற்றி அவர்களை வணங்குகிறோ மென்று சொல்லுவீர்க ளானால், அதற்கு மறுமொழியாவது—இரணியன் எப்படி மனித சுபாவமான பசி, தாகம் நித்திரை, மரணம் முதலானவைகளுக் குட்பட்டு பலயீன முள்ளவனாயிருந்தானோ, அப்படியே ராமன் கிருஷ்ணன் முதலானவர்களுமிருந்தார்கள். அதெப்படி யென்றால், ராமனுடைய மனைவியாகிய சீதையை ராவணன் சிறை யெடுத்துக்கொண்டு போனதினால் இராமர் அதிகப் பிரயாசையும் கஷ்டமும் பட்டுக் கடைசியில் அனுமார் முதலான குரங்குகளின் உதவியினால் அந்தச் சீதையை மீட்டுக்கொண்டு வந்தாரென்றும், கிருஷ்ணனுடைய காலில் ஒரு வேடனுடைய அம்பு பட்டு அந்தக் காயத்தின் அவஸ்தையினால் அவர் இறந்து போனாரென்றும், இன்னு மிப்படிப்போலவே உங்கள் தேவர்களின் தாழ்மைத் தனமும் அடிமைத் தனமும் உங்கள் சாஸ்திரங்களினாலேயே ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. பின்பு இந்த ராமன் கிருஷ்ணனில் இரணியனுக்குள் இல்லாத தெய்வ லட்சணம் என்ன யிருந்தது?

இவ்விடத்தில் இந்துக்கள் ஆட்சேபமாக, சில இஸ்லாமான வர்களும் தங்கள் முன்னோர்களின் நடவடிக்கை மார்க்கத்துக்கு விரோதமானதா யிருந்தாலும் அதை விடுகிறார்களில்லை. எப்படி

யென்றால், கலியாணத்தில் சேரா கங்கணம் முதலான கெட்ட வழக்கங்களையும், யாதொருவர் மவுத்தானால் மூன்றும் வியாரத்து, நாற்பதாம் பாத்தியா, ஆறுமாச பாத்தியா, வருஷ பாத்தியாவும், சந்தனக்குடம், முஹர்ரம்பஞ்சா, பராத்துஇரவு முதலான பித்அத்துகளையும் இன்னும் மார்க்கத்தில் ஆதாரமில்லாத அநேக காரியங்களையும் செய்கிறதுந்தவிர, சில இஸ்லாமானவர்கள் இன்ன காரியம் மார்க்கத்துக்கு விரோதமானதா யிருந்தாலும் எங்கள் முன்னோர்களின் வழக்கமா யிருக்கிறபடியால், அதை நாங்கள் ஒருபோதும் விடமாட்டோ மென்று ஞ் சொல்லுகிறார்களே யென்றால், அதற்கு மறுமொழியாவது, முன்னோர்களின் வழக்கம் மார்க்கத்துக்கு விரோதமானதா யிருந்தபோதிலும் அதை விடக்கூடாதென்று சொல்லுகிறது எங்கள் மார்க்கத்தில் ஆகாது.

தகப்பன் பாட்டன் முதலான முன்னோர்களுடைய நடவடிக்கையாவது, உஸ்தா தென்ற போதகருடைய நடவடிக்கையாவது, ஆலிமென்ற எங்கள் சாஸ்திரிகளின் நடவடிக்கையாவது, பீர்முர்ஷிதென்ற குருமார்களின் நடத்தையாவது, ஹாக்கிமென்ற அதிகாரியின் நடத்தையாவது, பாத்ஷா என்ற எங்கள் ராஜாக்களின் நடத்தையாவது, இன்னும் யாதொருவருடைய நடத்தையாவது மார்க்கத்துக்கு விரோதமானதாயிருந்தால் அதை விட்டுவிட வேண்டுமென்று எங்கள் மார்க்கத்தில் வந்திருக்கின்றது. யாதொருவன் மார்க்கத்தைப் பார்க்கிலும் முன்னோர்களுடைய வழக்கமே மேலென் றெண்ணி, மார்க்கத்துடைய கட்டளையைத் தாழ்மையாய் நினைப்பானாகில் அவன் இஸ்லாமா யிருக்கமாட்டான். மேலும் இஸ்லாமை விட்டும் அப்புறப்பட்டுக் காபிராகவும் முர்த்தத்தாகவும் ஆய்விடுகிறான். ஏனென்றால், நாங்கள் முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமுடைய மார்க்கத்திலிருக்கிறோமே யொழிய தகப்பன் பாட்டன் உஸ்தாது ஆலீம் பீர்முர்ஷிது ஹாக்கிம் பாத்ஷா முதலானவர்களுடைய மார்க்கத்தி லிருக்க வில்லை. ஆகையால் முன்னோர்களின் நடவடிக்கை எது மார்க்கத்துக்கு ஒத்திருக்கிறதோ அதுதான் நல்லது. எது மார்க்கத்துக்கு விரோதமானதா யிருக்கிறதோ, அது யாருடைய நடத்தையா யிருந்தாலும் அதின்படி நடக்கிறது கூடவே கூடாது. மார்க்கத்துடைய காரியங்களில் நபியவர்களுக்கு மாத்திரந்தான் தவறுதலுண்டாகாது; தகப்பன் பாட்டன் உஸ்தாது ஆலிம் பீர்முர்ஷிது ஹாக்கிம் பாத்ஷா முதலான இவர்களுக்கெல்லாம் தவறுத லுண்டாக இடமுண்டு.

இவ்விடத்தில் யாதொரு இந்துவுக்கு இஸ்லாமானவர்கள் நபியுடையகலிமா ஓதுகிறார்களே, பின் ; ஹனபி, மாலிக்கி, ஷாபிஇ, ஹம்ப

லி, காதிரி, சிஷ்த்தி, நக்ஷபந்தி, சுஹர்வர்த்தி, உவைசி, முஜத்திதி, அஷ்அரி, யாத்துரைதீ என்று ஏன் சொல்லுகிறார்களென்றும், இந்த முன்னோர்களை யேன் பின்பற்றுகிறார்களென்றுஞ் சந்தேக மிருந்தால், அதை நிவர்த்திக்க மறுமொழியாவது; நாங்கள் எங்களை இந்தப் பெரியோர்களின் மார்க்கத்தி லிருக்கிறோ மென்று எண்ணுகிறதில்லை. இந்தப் பெரியோர்களும் நபி யவர்களுடைய மார்க்கத்திலேயே யிருக்கிறார்கள். நாங்களும் நபி யவர்களுடைய மார்க்கத்திலேயே யிருக்கிறோம். ஆனால் இந்தப் பெரியோர்கள் குர்ஆன் அதீதுடைய பொருள்களை நன்றாயறிந்து அவைகளில் நின்றும் வேண்டுமான மஸ்அலாக்களை உண்டுபண்ணி யிருக்கிறார்கள். ஆகையால் எந்த முஸ்லிமுக்கு எந்தப்பெரியோரிடத்தில் அதிகநன்கு மதிப்பு இருந்ததோ அந்த முஸ்லிம் அந்தப் பெரியோரின் மூலமாய் முகம்மதிய மார்க்கத்தைக் கற்றுக்கொண்டு, தன்னை அந்தப் பெரியோரைச் சேர்ந்தவனென்று சொல்லத்தலைப் பட்டான். உண்மையில் எல்லாரும் முகம்மதிய மார்க்கத்துடையவர்களாகவே யிருக்கிறார்கள். இன்னும் அதீதில் நின்றும் மஸ்அலா உண்டாக்குகிறதும், *நாசிகு மன்சூகான அதீதுகளை வகுத்தறிவதும் எங்கள் சக்திக்குப் புறம்பானதா யிருக்கிறபடியால், ஏலாமைக்காக நாங்கள் அவர்களை பின்பற்றுகிறோம். யாதொருவன் அதீதில் நின்றும் மஸ்அலா உண்டாக்கும்படியான பூரண கல்வி யுள்ளவனாய் விட்டால் அவன் அவர்களைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், குர்ஆனில் * فسئلوا اهل الذكر إن كنتم لاتعلمون "உங்களுக்குத் தெரியாவிட்டால் தெரிந்தவர்களிடம் கேட்டுக் கொள்ளுங்களென்று' வந்திருக்கின்றது.

இதன்றி யாதொரு மஸ்அலாவில் இன்ன இமாமுடைய இன்ன சொல் குர்ஆனுக்கு அல்லது அதீதுக்கு மாற்றமா யிருக்கிறதென்று மனச்சாட்சியாய் எங்களுக்குத் தெரிந்துவிட்டால், அப்பொழுது நாங்கள் இந்த மஸ்அலாவில் இமாமவர்கள் தவறிப் போனார்களென்று எண்ணி அந்த மஸ்அலாவில் இமாமவர்களுடைய சொல்லின்படி நடிவடிக்கை நடத்த மாட்டோம். ஏனென்றால், அல்லா றசூலுடைய வாக்கியங்களில் தவறுத லிராது. இமாம்களுடைய சொல்லில் தவறுத லிருப்பது அசாத்திய மல்ல. இந்தத் தவறுதலில் இமாமின் பேரில் கொஞ்சமும் குற்றமில்லை. மஸ்அலா உண்டாக்குவதில் தவறிப்போவதின் பேரிலும் அவர்களுக்கு நற்கூலியுண்டு. தவறிப் போவது தன் தெரியுதலில் உள்ளதல்ல. இன்னும் எங்கள் இமாம்கள்

* நாசிகு = முன்சொல்லை மாற்றுகிற பின்வாக்கியம். மன்சூகு = பின்சொல்லால் மாற்றப்பட்ட முன் வாக்கியம்.

“நம்முடையசொல் அதீதுக்கு மாற்றமானதென்று உங்களுக்கு மனச் சாக்ஷியாய் தெரியவந்தால் அதை விட்டுவிட்டு அதீதின்படி அமல் நடத்துங்க” ளென்று சொல்லியிருக்கிறார்கள். எப்படியும் எங்கள் மார்க்கத்தில் யாருடைய சொல்லானாலும் அல்லா றசூலுடையவாக்கியங்களுக்கு மாற்றமாயிருந்தால் அதின்படி நடக்கிறது கூடவேகூடாது. இது குர்ஆன் ஷரீபின் வாக்கியத்தினால் ஏற்படுகின்றது. எப்படியென்றால்,

يايها الذين آمنوا اطيعوا الله واطيعوا الرسول واولي الامر منكم فان تنازعتم في شيء فردوه الي الله والرسول ان كنتم تؤمنون بالله واليوم الآخر ذلك خير واحسن تاويلا*

ஓ, ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாவின்பேரிலும் கடைசி நாளின்பேரிலும் ஈமான் கொண்டவர்களா யிருந்தால், அல்லாவுக்கும் றசூலுக்கும் உங்களின் காரியகர்த்தர்களுக்கும், வழிப்படுங்கள் பிறகு உங்களுக்கும் அவர்களுக்கும் யாதொரு விஷயத்தில் விகற்ப மிருந்தால் (அதாவது நீங்கள் ஒன்றும் உங்கள் காரிய கர்த்தர்கள் ஒன்றும் சொல்லுகிறதா யிருந்தால்) அந்த விஷயத்தை அல்லா றசூலுடைய புரத்தில் திருப்பி ஒத்திடுங்கள் (அதாவது அல்லா றசூலுடைய சொல் எப்படியிருக்கிறதோ, அப்படியே நடவுங்கள். உங்கள் அபிப்பிராயத்துக்கு ஒத்திருந்தால் உங்கள் அபிப்பிராயமே சரியென் றெண்ணுங்கள். உங்கள் காரிய கர்த்தர்களின் அபிப்பிராயத்திற்கு ஒத்திருந்தால் அவர்களுடைய அபிப்பிராயமே சரியென் றெண்ணுங்கள்.) இது நன்மையாயும் தாவீலால் அதிக அழகானதாயு மிருக்கிறது, என்று, ஆண்டவன் திருவுளமா யிருக்கிறான். இதன் கருத்து எவ்விதத்திலும் அல்லா றசூலுடைய உத்திரவைமுற்படுத்திக் கொள்ளுங்களென்பதே,

இவ்விடத்தில் யாராவது தீவானேஹாபிஸ் என்ற கிதாபில்,

بمي سجاده رنگين كن گرت پير مغان گويد*

* “ பமை ஸஜ்ஜாத றங்கீங்குன்
கரத் பீரே முகாங்கோயத்”

என்று எழுதியிருக்கிற பைத்தினால் (கவியினால்) பீரானவர் மார்க்கத்துக்கு விரோதமான யாதொரு உத்திரவைச் செய்தால் அதின்படி செய்ய வேண்டுமென்று விளங்குகிறதே என்பார்களானால், அதற்கு மறு மொழியாவது :

* மேற்கண்ட பைத்துக்குப் பொருள்=தொழுகையின் விரிப்பைச் சாராயத்தில் நனைத்துக் கொள்ளும்படி உன் பீர் உனக்குச் சொன்னால் அதன்படி செய் என்பதே.

1-வது இந்தச் சொல்லின் கருத்து வேறேயா யிருக்கின்றது. வெளியரங்கமான கருத்தல்ல.

2-வது திவானேஹாபிஸ் என்ற கிதாபை ஆதாரமாய்க் கொள்ள அது எங்கள் மார்க்க சம்மந்தமான கிதாபல்ல.

3-வது எங்களிடத்தில் ஒரு ஏற்பாடுண்டு. அதாவது யாதொரு பெரியோரின் யாதொரு பைத்தாவது வாசகமாவது மார்க்கத்துக்கு விரோதமானதா யிருந்தால் அதற்குச் சரியான தகவல் பிடித்து மார்க்கத்துக்கு ஒற்றுமையாய் அதின் அர்த்தத்தைச் சரிபடுத்திக்கொள்ள வேண்டியது. அல்லது அந்தப் பெரியோரின் கருத்தாகிய அதின் அர்த்தம் நமக்குத் தெரியவில்லை யென்று நினைத்துக்கொள்ள வேண்டியது. ஆனால் அதன் வெளியரங்கமான அர்த்தம் மார்க்கத்துக்கு விரோதமா யிருக்கிறபடியால் அதை ஒப்புக்கொள்ளக் கூடாது.

அல்லது அந்தச் சொல் அந்தப் பெரியோரின் சொல் அல்ல வென்றும், அறிவீனனுன அல்லது துன்மார்க்கனுன யாரோ ஒருவன் அதைச் சொல்லி அந்தப் பேரியோரின் பேரால் சேர்த்துவிட்டா னென்றும் எண்ணிக்கொள்ள வேண்டியது. எப்படியென்றால், ஜனங்கள் தாங்களே அநேகம் அதிதுகளைப் பொய்க்கட்டாகக் கட்டி இது நபி சல்லல்லாகு அலைகி வசல்லம் திருவுளமானதென்று பிரசித்தப்படுத்தி யிருக்கிறார்கள். இது பரிக்ஷிக்கப்பட் டிருக்கின்றது.

அல்லது அந்தப் பெரியோருக்குப் பேரின்பம் மேலிட்டுப் பிரக்கிணைமாறி யிருக்கும்போது அவரால் அந்தச் சொல் வெளிப்பட்டிருக்கும். பிரக்கிணை மாறின வேளையில் உண்டாகும் காரியங்களைப் பற்றி ஆண்டவனும் குற்றம் பிடிக்கமாட்டான், அந்த வேளையில் சொன்ன சொல்லை ஆதாரமாகவும் எடுக்கத் தகாது.

அல்லது எப்போதாவது அந்தப் பெரியோர் அந்த வார்த்தையை விட்டும் தௌபாசெய்து மீண்டிருப்பார் என்று எண்ண வேண்டியது.

எப்படியும் மார்க்கத்துக்கு விரோதமாக ஒருவருடைய சொல்லையும் சனதாகப் பிடிக்கக்கூடாது. இன்னும் யாதொருவன் அஜரத்து மவுலானுறூம் றக்மதுல்லாகி அலைகி தங்கள் பீராகிய அஜறத்து ஷம்சுத்தப்ரேஸ் றக்மத்துல்லாகி அலைகியுடைய உத்தரப்படி சாராயக்குடத்தைத் தூக்கிக்கொண்டு வந்தார்க ளென்றும், அஜரத்து பீரவர்கள் நமக்கு ஆசைநாயகி வேண்டு மென்றதற்கு அஜரத்து மவுலானு றூம் த

ங்கள் பீவியை அழைத்து வந்து விட்டார்களென்றும், அஜரத்து பீரவர்கள் நமக்கு அழகிய சிறுவன் வேண்டுமென்றதற்கு அஜரத்து மவுலானா தங்கள்மகனை ஹாஜர் படுத்தினார்களென்றும், பின்பு அஜரத்து பீரவர்கள் நாம் உம்முடைய நல்லெண்ணத்தையும் மன உறுதியையும் சோதித்தோமென்று சொன்னார்களென்றும் சிலகிதாபுகளில் எழுதப்பட்டிருக்கிறதே என்று சொல்லுவானாகில், அதற்கு மறுமொழியாவது இப்பேர்ப்பட்டசரித்திரங்கள் சுத்தப்பொய்யும் விரோதிகளின் கட்டுக்கதையுமாயிருக்கின்றன. இம்மாதிரியான சரித்திரத்தை யாதொரு கிதாபில் எழுதி யிருந்தாலும், அது யாதொரு துர்மார்க்கனால் சேர்க்கப்பட்டிருக்கும். அல்லது அந்தக் கிதாபைக் கோர்வைசெய்தவர் அந்தச் சரித்திரத்தின் உண்மையை சரிவர அறியாமல் எழுதி யிருக்கவேண்டும். சில ஜனங்கள் நபி சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்பேரினாலேயே அநேகப் பொய்க்கட்டுகளைக் கட்டியிருக்கும் பொழுது யாதொரு வலியின்பேரால் கட்டுகிறது என்ன ஆச்சரியம். இம்மாதிரியான சரித்திரங்களினால் எங்கள் மார்க்கத்தின் பேரில் யாதொரு ஆக்ஷேபமும் வராது. எப்படியும் எங்கள் மார்க்கத்தில் அல்லா றசூலுக்கு விரோதமாக யாதொருவருக்கு யாதொரு உத்திரவு செய்கிறதும், யாதொருவருடைய உத்திரவைக் கேட்கிறதும், யாதொருவருடைய சொல் செயல் இவைகளினால் சனது பிடிக்கிறதும் (பிரமாணமாகக் கொள்ளுகிறதும்) கூடவே கூடாது. அவர்கள் உஸ்தாதாயிருந்தாலும் பீராயிருந்தாலும் யாரா யிருந்தாலும் சரி. யாதொருவன் அல்லா றசூலுடைய உத்திரவைப் பார்க்கிலும் மற்றவர்களுடைய உத்திரவை அழகாக்கி வைப்பானாகில் அவன்காபிரும் முர்த்ததுமாகி இஸ்லாம் மார்க்கத்தைவிட்டு அப்புறப்பட்டவனாய் விடுகிறான்.

இன்னும் சிலர் ஹிந்துவிலும் முசல்மானிலும் என்ன பேதமிருக்கிறது? ஆண்டவன் அவரவர்களுக்கு ஒரு வரம்பு ஏற்படுத்தி விட்டானையால் அவரவர்களும் தங்கள் தங்களுடைய வரம்பைக்கடக்காமலிருக்கவேண்டு மென்று சொல்லுகிறார்கள், அதற்கு மறுமொழியாவது, ஹிந்துவிலும் முசல்மானிலும் ஏன் பேதமில்லை? வானம் பூமியைப்போலுள்ள பேத மிருக்கிறது. அந்தப் பேதத்தின் விவரம் இந்தப் புஸ்தகத்தில் அநேகமாய் வந்திருக்கிறது. இந்த வரம்பு நீங்களே ஏற்படுத்திக்கொண்ட தொழிய ஆண்டவன் உங்களை அந்த வரம்பில் நிலையா யிருங்களென்று உத்திரவு செய்யவில்லை. ஆண்டவன் யார்மூலமா யிந்த உத்திரவு செய்தான் காண்பியுங்கள்? இதில் உங்கள்பெரியோர்களை சனதாய்க்கொண்டு வருவீர்களானால், அவர்களின் வார்த்தையில் யாதொரு நம்பிக்கை யில்லை. ஏனென்றால் அவர்களோ

உங்கள் சொல்லின்படி பாவிகளும், பொய்யர்களும், ஆசையின் அடிமைகளுமா யிருந்திருக்கிறார்கள். இதைக்குறித்து முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு அதன்வரம்பில் நிலையா யிருக்க வேண்டியது ஆவசியகம். ஏனென்றால் அந்த மார்க்கத்தின் காரண கர்த்தரான அஜரத்து முகம் மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களால் ஆண்டவனுடைய பொருத்தத்துக்கு விரோதமான சொல்லாவது செயலாவது குணமாவது ஒருபோதாவது வெளியான தில்லை. சல்லல்லாகு அலைகி வஅலா ஆலிகி வஅஸ்ஹாபிகி அஜ்மயீன்.

## 2—வது அத்தியாயம் வணக்கங்களுடைய விபரம்.

இதில் 6 - பிரிவுக ளடங்கியிருக்கின்றன. 1 - வது. பிரிவு அசுத்தங்களையும் அவற்றை நீக்கும் முறைகளையும் குறித்துப் பேசுவது.

முஸ்லிம்களாகிய எங்களிடத்தில் அசுத்தங்கள் பலவகைப்பட்டிருக்கின்றன. முதலாவது அசுத்தம் இருதய அசுத்தமாம். அதாவது:—கெட்ட நிர்ணயம், கெட்ட குணம், பாவஞ்செய்வதின்பேரில் மனந்துணிதல் முதலியவைகளாம். இதை நீக்குவ தெப்படியென்றால்; முந்தி நல்ல நிர்ணயங்களைப் படித்து கெட்ட நிர்ணயங்களைவிட்டுத் தன்னைக் காக்கவேண்டும். நிர்ணயத்துடைய விபரத்தில் அநேகம் கிதாபுகளிருக்கின்றன. அவற்றால் இதைத் தெரிந்துகொள்ளலாம். இப்புத்தகத்தின் 1 - வது அத்தியாயத்திலும் நிர்ணயங்களைச் சுருக்கமாய்ச் சொல்லப்பட் டிருக்கிறது. அதன்படி தன்னுடைய நிர்ணயத்தைச் சீர்படுத்திக்கொண்டு அதற்கு விரோதமானவைகளைவிட்டு நீங்கியிருக்கவேண்டும். பின்பு கெட்ட குணங்களையும் பாவங்களையும் விட்டுவிடவேண்டும். இதன் விபரத்தை கீமியாயெ ஸஆதத்து, இஹ்யாவுல் உலூமித்தீன், முதலான ஸுலூக்குடையவும் பிக்ஹுடையவுமான கிதாபுகளில் விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளால் தெளிந்து கொள்ளலாம்.

2 - வது. அசுத்தமானது:—சரீரம், பிடவைமுதலியவைகளின் அசுத்தமாம். இந்த அசுத்தத்தை நீக்கு முறையை மாத்திரம் இவ்விடத்திற் கூறவேண்டுமென்பது நமது முக்கிய நோக்கம். ஆதலால், எங்கள் மார்க்கத்தில் இந்த அசுத்தமானது ஹக்கீகீ என்றும் ஹுக்மீ என்றும் இரண்டுவகைப் பட்டிருக்கிறது.

ஹக்கீகீ யென்பது மலம், மூத்திரம், சாணி, இரத்தம், சீழ், பன்றி, நாய் முதலியனபோல் தன்னிலேயே அசுத்தமாயிருக்கும் பொருள்களாம். இவ்வகையான அசுத்தம் படுகிறதினால் அசுத்தமாய்ப் போன ஒரு வஸ்துவை நன்றாய்த் தேய்த்துத் தண்ணீர் முதலியவைகளைக்கொண்டு அந்த அசுத்தம் நீங்கும்படி கழுவினால் அந்த வஸ்து சுத்தமாய்ப்போம்.

இன்னும் யாதொரு அசுத்தமான வஸ்து நெருப்பில் எரிந்து சாம்பலாய்ப்போனாலும், அல்லது உப்புடன் சேர்ந்து அதுவும் உப்பாய்ப்போனாலும், அல்லது இன்னும் யாதொரு விதத்தால் அதன்குணம் மாறிப்போனாலும் அந்தவஸ்தும் சுத்தமாய்விடும்.

இன்னும் பூமியாவது,' சுவராவது, மரமாவது, பூமியில் விழுந்திருக்கும் மற்றும் யாதொரு பொருளாவது அசுத்தமாய்ப்போனால் அந்த அசுத்தத்தின் குணமில்லாதபடி அது காய்ந்துபோனால் சுத்தமாய்விடும். இதைத்தவிர இதன் உட்பிரிவிலடங்கிய மற்றும் சில்லரை மஸ்அலாக்கள் பிக்ஹூ கிதாபுகளில் எழுதப்பட்டிருக்கின்றண. அவற்றைப் பார்த்துக் கொள்ளவும்.

இனி ஹூக்மியான அசுத்தமென்பது எந்த நிலைமையில் தொழுதல் முதலான சில காரியங்களைச் செய்யக்கூடாதோ அந்த நிலைமையேயாம். அதெப்படியென்றால்; ஆசையுடன் விந்துஸ்கலிதமாகுதல், அல்லது சொற்பனஸ்கலிதமாகுதல், அல்லது சேர்க்கைசெய்தல் (விந்துஸ்கலிதமாகவில்லையானாலும்சரி) இவ்வகையாய் அசுத்தப்பட்டிருக்கிற நிலைமைக்கு ஜனாபத்து என்று பெயர்.

முன், பின் துவாரங்களால் மலம், ஜலம் முதலியவை புறப்படல், அல்லது சரீரத்திலிருந்து இரத்தம், சீழ் முதலியவை புறப்பட்டு அதன் ஸ்தானத்தைவிட்டுக் கடத்தல், அல்லது வாய் நிரம்பியசத்தி செய்தல், அல்லது நித்திரைசெய்தல், அல்லது பிரக்கினை மாறல், அல்லது போதையுள்ள யாதொரு வஸ்துவைத்தின்றாவது, குடித்தாவது மஸ்துகொள்ளல், அல்லது பைத்தியங்கொள்ளல் இன்னுமிவை போன்ற சில காரியங்கள் சம்பவித்தால் அந்த நிலைமைக்கு ஹதசு என்று பெயர்.

யாதொரு பெண்பிள்ளைக்குக் கர்ப்பக்கோளறையிலிருந்து வழக்கம்போல் உதிரம் ஜாரியானால் அந்த நிலைமைக்கு ஹைழு என்று பெயர்.

யாதொரு பெண்பிள்ளை பிரசவித்து அவளின் உள்ளிலிருந்து உதிரம் புறப்பட்டால் அந்த நிலைமைக்கு நிபாசு என்று பெயர்.

இனி ஜனுபத்து என்ற அசுத்தமானது வாய்க் கொப்பளித்து நாசியில் தண்ணீர்செலுத்தி சர்வாங்கமும் நனையும்படி குளிக்கிறதினல் நீங்கிப்போம். ஹதசு என்ற அசுத்தமானது ஒலுச்செய்து கொள்ளுகிறதினல் அதாவது முகம் கை கால் இவைகளை விதிப்படிகழுவி தலையை ஈரக்கையால் தடவிக்கொள்ளுகிறதினல் நீங்கிவிடும்.

ஹைலு, நிபாசு என்ற அசுத்தமானது அதன் உதிரம் நின்று அவள் முழுகிக் கொள்வதினல் நீங்கிப்போம்.

ஆனல் இந்த ஹுக்மியான அசுத்தத்தினல் மனிதனுடைய தேகம் அசுத்தமாகிறதில்லை. ஆகையால் அவன் யாதொரு வஸ்துவைத் தொட்டாலும் அல்லது அவன் வெயர்வை யாதொரு வஸ்துவிற்பட்டாலும் அது அசுத்தமாகாது. ஆனல் அவன் அந்த வேளையில் தொழுகவும் இன்னும் சில காரியங்களைச் செய்யவும் கூடாதென்று மார்க்க விலக்கு ஏற்பட்டிருக்கிறது.

இன்னும் இந்த அசுத்தம் நீங்குவதற்கு சில நாட்கள் செல்லவேண்டுமென்ற விதியில்லை. எப்பொழுது ஒலுச்செய்து அல்லது முழுகிக்கொண்டானே அப்பொழுதே ஹதசும் ஜனுபத்தும் நீங்கிவிட்டது. பெண்பிள்ளைக்கு ஹைலு, நிபாசுடைய இரத்தம் நின்று எப்பொழுது அவள் முழுகிக் கொண்டாளோ அப்பொழுதே சுத்தமாய்விட்டாள்.

ஹைலுடைய இரத்தம் பத்துநாளைக்கு மேற்பட்டும் நிபாசுடைய இரத்தம் நாற்பது நாளைக்கு மேற்பட்டும் காண்கிறதாயிருந்தால் அந்த அதிகப்பட்டது ஹைலு நிபாசாகாது. அது வியாதியாயிருக்கும். அதற்கு இஸ்திஹாஜா (பெரும்பாடு) என்று பெயர். அந்த நிலைமையில் அவள் குளித்துத் தொழுகலாம்.

இந்துக்களுடைய மார்க்கத்திலும் வெளியரங்கமான அசுத்தம் இருவகைப்பட் டிருக்கிறதாய்த் தெரியவருகின்றது. அதில் ஒன்று ஹக்கீகியும் மற்றென்று ஹுக்மியுமா யிருக்கிறது. ஹக்கீகியான அசுத்தம் பலவகைப்பட் டிருக்கிறது.

1 - வது வகை: மல ஜலங்கள் முதலியன. இவ்வகையான அசுத்தம் பிடவை முதலியவைகளிற் பட்டால் தண்ணீரினல் கழுவுகிறார்கள். சரீரத்திற்பட்டால் மண்ணல்தேய்த்துத் தண்ணீரால் கழுவவேண்டுமாம்.

2 - வது வகை: யாதொரு இந்துவின் வாயானது செம்புபாத்திரத்தில் பட்டால், அதைச் சாம்பலால் தேய்த்துக்கழுவ வேண்டும். வெள்ளி அல்லது பொன் பாத்திரத்தில் பட்டால் தண்ணீரினல் மாத்

திரம் கழுவினுற்போதும் (இல்லாவிட்டால் தேய்ந்துபோகுமல்லவா?) இன்னும் பொன் பாத்திரமானது காற்றினுல் சுத்தமாய் விடுமென்றும் சிலர் சொல்லுகிருர்கள். இந்துவல்லாத இதர ஜாதியான் வாயானது இவர்கள் பாத்திரத்தில் பட்டால் அதை நெருப்பில் காய்ச்சி மண்ணுலும் தேய்த்துக் கழுவவேண்டுமாம்.

ஆ! ஆ!! என்ன ஆச்சரியம்!!! மனிதனுனவன் எல்லாச் சிருஷ்டிகளிலும் மேன்மையுடையவனு யிருப்பதுந் தவிர, இந்துக்கள் மனிதனை நரநாராயணனென்றுஞ் சொல்லுகிருர்கள். அப்படியிருக்க, கடவுளுடைய நாமத்தைத் துதிப்பதும் போஜனம் அருந்துவதுமான அவன் வாய்பட்ட பாத்திரத்தை அசுத்தமான தென்றும் குதிரையின் வாய், பசுவின்சாணி, மூத்திரம் இவைகளைச் சுத்தமானவைக ளென்றும் எண்ணுகிருர்கள்.

3-வதுவகை: வஸ்திரமானது சரீரத்திலிருந்து களையப்பட்டால் அது அசுத்தமாய் விட்டதென்று எண்ணுகிருர்கள். அதைச் சுத்தப்படுத்தாமல் உடுத்திக்கொண்டு பூஜைசெய்வது ஆகாதாம்; ஆனுல் அதைச் சுத்தப்படுத்துவது எப்படியென்றுல்:—அந்தவஸ்திரம் வெள்ளையாயும் நூலால் நெய்யப்பட்டதாயு மிருந்தால் அதைத் தண்ணீரில் துவைக்கவேண்டும். சாயப்புடவையாயிருந்தால் அதன்மேல் தண்ணீர் தெளித்தால்போதும்; (துவைத்தால் சாயம் போய்விடும்) பட்டாடையா யிருந்தால் அதன்மேல் காற்றுப்பட்டால் போதும் (தண்ணீர்பட்டால் மேனிகெட்டுப்போமல்லவா?)

4-வதுவகை: தரையைச் சுத்தப் படுத்துவதற்குச் சாணியினுலாவது தண்ணீரினுலாவது மொழுகவேண்டுமாம். இன்னும் மலபாதைக் கிருந்து சுத்திசெய்துகொண்ட ஒருவன் சுத்தமாவதற்கு அவர்கள் மார்க்கம் கூறுகிற தென்னவென்றுல், முந்தி இடதுகையின் வலப்புறத்து விரல்களைப் பத்துதரம் மண்ணுல் தேய்த்துத் தண்ணீரால் கழுவவேண்டும். பின்பு அதுபோலவே அந்தக் கையின் பின்பக்கத்தைப் பத்துதரம் கழுவி பிறகு இரண்டுகைகளையும் ஒன்றுய்ச் சேர்த்து ஏழுதரம் மண்ணுல் தேய்த்துத் தண்ணீரால் கழுவவேண்டும். கடைசியாய்ப் பன்னிரண்டு தரம் வாய்கொப்பளிக்க வேண்டும் என்பதே.

இனி அவர்கள் மார்க்கத்தில் ஹுக்மியான அசுத்தம் யாதெனில், மனிதன் இரவில் நித்திரைசெய்து காலையில் எழுந்தால் அவன் அசுத்தனுய் விட்டானும். அவன் குளிக்காமல் பூஜைசெய்யவும் சாப்பிடவும் கூடாதாம்.

ஒருவன் தான் பூஜைசெய்யும் ஆசனத்தை விட்டெழுந்து வேறே இடத்திற்போனால் அவன் அசுத்தனாய் விட்டானாம். அவன் மீண்டும் கை கால்களைக்கழுவி வாயைக் கொப்பளித்துக்கொண்டு பூஜைசெய்ய வேண்டுமாம்.

யாதொரு பெண்பிள்ளைக்கு மாத உதிரங்கண்டால் அவள் தேகமெல்லாம் அசுத்தமாய் விட்டதென்றும், சுத்தமாயும் உலர்ந்துமிருக்கிற அவள் கையினாலுங்கூட யாதொரு வஸ்திரத்தையாவது பாத்திரத்தையாவது தொடக்கூடாதென்றும், ஆறுநாள்கழித்து அவள் முழுகின பிறகுதான் அவள் ஒரு வஸ்துவைத்தொடவும் மற்றவர் அவளைத் தொடவும் கூடுமென்றும் சொல்கிறார்கள்.

இவ்விடத்தில் புத்தி மயங்குகின்றது: ஏனென்றால் உதிரம் கண்டது ஓரிடத்திலாயிருக்க தேகமெல்லாம் எப்படித் தீட்டும் அசுத்தமுமாயிற்று?

இன்னும் ஒரு பெண்பிள்ளை பிரசவித்தாளாகில் அவள் சரீரமெல்லாம் அசுத்தமாய்விட்டதாம். அவள் மாத்திரமா? அவளுடைய சகல பந்துக்களும், அவள் பிரசவித்த சேதியைக்கேட்ட அயலூரிலிருக்கிற அல்லது வழிப் பிரயாணத்திலிருக்கிற அவளுடைய இனத்தார் எல்லாரும் அசுத்தமாய் விட்டார்களாம். இதற்கு சூதக அசுத்தமென்று பேராம். இப்படி அசுத்தமானவர்கள் சந்தியா வந்தனமென்ற திரிகால பூஜையும், தற்பணமும் அதாவது இறந்துபோன முன்னோர்களுக்கு ஜலமளித்தலும் செய்யக்கூடாதாம். இன்னுமிவர்கள் கையால் அன்னியர் தண்ணீர் குடிக்கிறதும் ஆகாதாம். * நாற்பது நாள்கழித்து பிரசவித்த அந்தப் பெண்பிள்ளையின் தேகம் சுத்தமாகின்றதாம். நாற்பதுநாள் சென்றபின் அவள் முழுகி பசுவின் சாணத்தினாலும் அதன் மூத்திரத்தினாலும் தலையைக்கழுவி அதன் மூத்திரத்தைக் குடித்தாளாகில் சுத்தமாகிறாளாம்.

இனி அவளுடைய பந்துக்கள் சுத்தமாகுவதெப்படியென்றால்:— பிராமணராயிருந்தால் பதினோராம் நாளிலும், க்ஷத்திரியராயிருந்தால் பதின்மூன்றும் நாளிலும், வைசியராயிருந்தால் பதினைந்தாம்நாளிலும், சூத்திரர் என்ற கம்மாளர் முதலானவர்களாயிருந்தால் முப்பதாம் நாளிலும், பூணூலை மாற்றிக் கொண்டு கங்காநதியின் ஜலத்தைக் குடிக்கிறதினால், சுத்தமாகிறார்களாம். இன்னு மிவர்கள் பசுவின்சாணத்தையும் மூத்திரத்தையும் சாப்பிட்டால் அதிகசுத்தமாகிறார்களாம்.

---

* இந்துக்களுடைய மார்க்கத்தில் தீபாசுடைய அதிக நாட்கள் பத்தேதான். ஆனால் வழக்கத்தில் நாற்பதுநாளா யிருக்கிறது.

இன்னும் சூதகநாட்களில் வழங்கிவந்த மண் பாத்திரங்களை எடுத்தெறிந்துவிடுகிறார்கள்.

ஆ! ஆ!! ஒருபெண்பிள்ளை பிரசவிக்க அவளுடைய பந்துக்களெல்லாம் அசுத்தமாய்ப்போவது மகாபுதுமை; இன்னும் பிரசவித்த சேதிபோகிற போது அதோடு கூட்டவே சூதக அசுத்தமும் துடர்ந்து ஓடினது அதிலும் மகாபுதுமை! இன்னும் ஜாதிக்குத் தக்கபடி இந்த அசுத்தம் சிலரிடத்தில் பதினொருநாளும், சிலரிடத்தில் பதின்மூன்று நாளும், சிலரிடத்தில் பதினைந்துநாளும், சிலரிடத்தில் முப்பதுநாளும் தங்கியிருப்பது எல்லாவற்றிலும் பெரியபுதுமை! இவர்களின் சூதக அசுத்தம் மிகப் புத்தியுள்ளதென்றே சொல்லவேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு ஜாதியிடத்திலும் அவரவர்களின்மேன்மை தாழ்மைக் குத்தக்கபடி இருந்துவிட்டுப் போய் விடுகிறது.

இன்னும் ஒருவன் இறந்துபோனால் அப்போதும் இப்படியே அவனுடைய பந்துக்களெல்லாம் அசுத்தமாய்ப் போகிறார்களாம். இதற்குப் பாதக அசுத்தமென்றுபேராம். இந்தப்பாதக அசுத்தத்தின் அநேகவிஷயங்களும், பின்பு ஒவ்வொரு ஜாதியும் சுத்தமாகுவதும் சூதக அசுத்தத்தில் எப்படியோ அப்படியேதான். ஆனால் சில விஷயங்களில் மாத்திரம் வித்தியாச முண்டு.

இன்னும் பிரேதத்துடன் எத்தனைபேர் போகிறார்களோ அவர்கள் அன்னியராயிருந்தாலும் அத்தனைபேரும் அசுத்தமாய்ப் போகிறார்களாம். அவர்கள் எல்லாரும் ஸ்நானம்செய்து வேஷ்டிகளைத் துவைக்கவேண்டுமாம். அம்மம்ம!! தன் குடும்பத்தையும் அசுத்தமாக்கி அன்னியரிடத்திற்கும் செல்லுகிற இந்தக் கடினமான அசுத்தத்தை விட்டும் ஆண்டவனிடம் காவல் தேடுகிறேன்.

இன்னு மவர்களிடத்தில் வேறொருவகையான அசுத்தமுண்டு. அதாவது:—பறையன், சக்கிலி, மாத உதிரங்கண்டவள், பிரசவ உதிரங்கண்டவள், பெரும்பாவஞ் செய்பவர் இவர்களில் யாதொருவருடைய தேகமாவது, பிணம், நாய், கழுதை, பூனை, காக்கை, கோழி, கோஜாயிவுடைய சரீரம் இவைகளில் யாதொன்றுவது அவர்களுடைய யாதொரு உறுப்பில் பட்டுவிட்டால் அவர்களுடைய தேகம் முழுமையும் வஸ்திரத்துடன் அசுத்தமாய் விட்டதாம். அந்த வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்தால்தான் அந்த அசுத்தம் நீங்குமாம். இந்த அசுத்தத்தை நான் ஹகீகியென்று சொல்வேனா அல்லது ஹுக்மியென்று சொல்வேனா ஒன்றும் புத்தியில் அமையவில்லை. இன்னும் யா

தொரு ஹிந்துவானவன் போஜனம் செய்கிற தாயிருந்தால் சாஸ்திரப்படி தரையைச் சாணத்தால் மொழுகி இடுப்பில் கட்டியிருக்கிற வஸ்திரம் தவிர மற்ற வஸ்திரங்களைக் களைந்து விட்டுச் சாப்பிடவேண்டுமாம். அப்படி அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கிற விடத்தில் அவன் சகோதரனானாலும் வெளியே போய்வந்த வஸ்திரத்துடன் பிரவேசித்தால் அந்த போஜனமும் இடமும் அசுத்தமாய் விடுகின்றனவாம். பின்பு அவன் அதைப் புசிப்பது ஆகாதாம்.

இவ்விடத்தில் அசுத்த மென்பது எப்படித் தாக்கினது பாருங்கள். போஜன விடத்தில் அடிவைத்தவுடனே எல்லாம் அசுத்தமாய் விட்டன. சட்டை, தலைப்பாகு, அங்கவஸ்திரம் இவைகளெல்லாம் சரீரத்தின் மேற்பாகத்திலிருக்கின்றன. இவைகளை அசுத்தமென்றெண்ணி சாப்பிடும்பொழுது களைந்து விடுகிறார்கள். இடுப்பில் கட்டுகிறவஸ்திரம் சரீரத்தின் கீழ்ப்பாகத்திலிருக்கிறது. அசுத்தமானவஸ்துக்கள் புறப்படுகிற இரண்டு இடங்களும் அந்த வஸ்திரத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதால், பெரும்பான்மை அந்தவஸ்திரம் அசுத்தமாக இடமுண்டு; இன்னும் பூமியிலிருந்து சிறுநீருடையவும், அசுத்த ஜலத்துடையவுமான துளிகள் மற்றவஸ்திரங்களிற் பார்க்கிலும் இடுப்பில் கட்டும் வஸ்திரத்தில் அதிகமாய்த் தெறித்திருக்கலாம். அப்படியிருக்க அந்த வஸ்திரத்தை சட்டை, தலைப்பாகு, அங்கவஸ்திரம் இவைகளைக் காட்டிலும் சுத்தமுடையதென்றால் புத்திசூன்யமென்றே சொல்லவேண்டும்.

## 2-வது பிரிவு தொழுகையைக் குறித்துப் பேசுவது.

முஸ்லிம்களாகிய எங்கள் பேரில் இராப்பகலாகிய ஒருநாளில் தொழுகையென்னும் ஒருவணக்கத்தை ஆண்டவன் விதித்திருக்கிறான். அத்தொழுகையின் ஐந்து நேரங்கள் யாவருக்கும் தெரிந்தனவாயிருக்கின்றன.

தொழுகையென்பது மனம், வாக்கு, காயம் இம்மூன்றினாலும் ஆண்டவனைக்கனப்படுத்துகிற ஒருவணக்கமாயிருக்கிறது. அதெப்படியென்றால்;.

மனதால் ஆண்டவன் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறனென்றெண்ணி ஓதுகிற சொற்களுக்குப் பொருளையுணர்ந்து ஆண்டவனுடைய பெருமையை மனதில் நாட்டி அவனுடைய வேதனைக்குப் பயந்தும் அவனுடைய கடாக்ஷத்துக்கு ஆதரவுவைத்து மிருக்கவேண்டும்.

வாக்கால் (நாவால்) ஆண்டவனுடைய புகழையும் அவனது பெருமையையும் சொல்லி வர்ணித்துப் பின்பு தன்னுடைய தாழ்மைத் தனத்தையும் அடிமைத்தனத்தையும் முறையிட்டுத் தனக்குச் செம்மையான வழியைக்காட்டும்படி அவனிடத்தில்கெஞ்சிக் கேள்க்கவேண்டும். இது பாத்திஹா என்ற சூரத்தில் அமைந்திருக்கிறது.

காயத்தால் (சரீரத்தால்) ஆண்டவனைக் கனப்படுத்துவதற்காகக் கைகட்டிநிற்க வேண்டும். அப்படிக் கை கட்டுவதற்குமுன்னே ஆண்டவனைத் தவிர மற்றெல்லா வஸ்துக்களையும் விட்டு, நான் கையெடுத்தேனென்ற எண்ணத்தோடு இரண்டு கைகளையும் காதுகள் வரையில் உயர்த்த வேண்டும். பின்பு அவனைக் கனப்படுத்துவதற்காகக் குனிந்து றுக்கூஉ செய்யவேண்டும்; பின்பு அவனைக்கனப்படுத்துவதற்காகவே சர்வாங்கத்திற்கும் மேலாயிருக்கிற நெத்தியைத்தரையில் படிய வைத்து சஜ்தாசெய்யவேண்டும்; பின்பு அவனைக் கனப்படுத்துவதற்காகவே இரண்டு முழங்கால்களையும் மடியிட்டு இருப்பு இருக்கவேண்டும்.

இப்படி மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களாலும் ஒரே ஆண்டவனைக் கனப்படுத்துவதற்குத் தொழுகை யென்று பெயர். இத்தொழுகையில் எத்தனை வணக்கங்கள் சேர்ந்திருக்கின்றன பாருங்கள். இந்த எல்லாக்காரியங்களையும் ஆண்டவனையன்றி மற்றவர்களைக்கனப்படுத்துவதற்காகச் செய்யவே கூடாது.

இனி இந்து மார்க்கத்தில் இராப்பகலாகிய ஒருநாளில் சந்தியாவந்தன மென்ற ஒருவணக்கம் கடமை என்று கூறப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு மூன்று நேரங்களுண்டு. அவை:—பிராதக்காலம், (சூரியன் உதயமாகிற நேரம்.) மத்தியானம் (சூரியன் உச்சியிலிருக்கிற நேரம்.) சாயங்காலம் (சூரியன் அஸ்தமிக்கிற நேரம்.) இவைகளேயாம்.

சந்தியாவந்தன மென்பது மனம், வாக்கு, காயம் இம்மூன்றினலும் ஆண்டவனையல்ல அவனால் சிருஷ்டிக்கப்பட்ட படைப்புகளைக் கனப்படுத்துகிற ஒரு வணக்க மாயிருக்கிறது. அதெப்படி யென்றால்;

மனதால் பிரம்மா, விஷ்ணு, மகாதேவன் என்ற திரிமூர்த்திகளைத்தியானம் பண்ணவேண்டும். அப்பொழுது இரண்டு கண்களையும் மூக்கையும் மூடிக்கொண்டு, மேற்கண்ட மூவரில் விஷ்ணுவானவர் கரியநிறமும், நான்கு கைகளும்; ஒருகையில் சங்கும் மறுகையில் சக்கரமும் மற்றொருகையில் கோலும் பிடித்திருக்கிற பாவனையாக அவரின்

ரூபத்தை, உந்தியினிடத்திலும், பிரம்மாவானவர் சிவப்பு உடையும் நான்கு முகங்களுமுள்ளவராய்த் தாமரைப்புஷ்பத்தில் உட்காந்திருக்கிற பாவனையாக அவரின் ரூபத்தை மார்பினிடத்திலும், மகாதேவரானவர் மூன்று கண்களும் ஐந்து முகங்களும் சிவப்பு உடையுமுள்ளவராயும் நெத்தியில் நீறு பூசினவராயு மிருக்கிற பாவனையாக அவரின் ரூபத்தைக் கபாலத்தினிடத்திலும் தியானம் பண்ணவேண்டும்.

வாக்கால் காயத்திரியென்னும் மூலமந்திரத்தை ஜபித்து இன்னும் சில மந்திரங்களையும் ஓதவேண்டும்.

காயத்தால் சூரியனுக்கு வணக்கஞ் செய்யவேண்டும். அதெப்படியென்றால் உதயகால சந்தியாவந்தனத்தில் கிழக்குமுகமாய் நின்று இரண்டு கைகளையும் (துவாவிற்போல்) ஏந்த வேண்டும். மத்தியான சந்தியாவந்தனத்தில் சூரியன் உச்சியில் இருக்கிறபடியால் நேராய் நின்று இரண்டு கைகளையும் ஏந்தவேண்டும். சாயங்கால சந்தியாவந்தனத்தில் மேற்கு முகமாய் நின்று இரண்டு கைகளையும் ஏந்த வேண்டும்.

இப்படி மன மொன்றை, வாக்கொன்றை, சரீரமொன்றைக் கனப்படுத்துகிற வணக்கந்தான் சந்தியாவந்தனம். இந்துக்களுடைய மார்க்கத்தில் இந்த சந்தியாவந்தனத்தைப் பார்க்கிலும் மேன்மையான வணக்கம் ஒன்றுமேயில்லை. அப்படியிருக்க இதிற்கூட ஆண்டவனுடைய நாமத்தைக் காணோம்.

இன்னும் காயத்திரியென்ற மூலமந்திரமோதுகிறது அவர்களிடத்தில் பெரும் புண்ணியமாம். இன்னும் காயத்திரி மந்திரத்துக்குச் சமமான மந்திரம் ஒன்றுமே யில்லையென்று எல்லா இந்துக்களும் ஒத்துச் சொல்லுகிறார்கள்.

இன்னும் ஒருபிராமணன் தனிமையில் உட்கார்ந்து காயத்திரி மந்திரத்தை ஆயிரம் தரம் ஓது வானாகில், சர்ப்பமானது தன் தோற்சட்டையிலிருந்து கழண்டு எப்படிச் சுத்தமாகின்றதோ அப்படியே அந்தப் பிராமணனும் தன் பாவங்களிலிருந்து சுத்தமாகின்றானாம்.

இன்னும் காயத்திரி மந்திரத்தால் ஆகாதகாரியம் ஒன்றுமேயில்லையாம். இன்னுமிந்த மந்திரத்தை எவ்வளவு வர்ணிக்கிறார்களென்றால்; பிரம்மாவும், விஷ்ணுவும், சிவனும், வேதமும், இந்தக் காயத்திரி மந்திரத்தினாலேயே உண்டானார்களென்று சொல்லுகிறார்கள்.

இன்னும் மனுசாஸ்திரத்தில், பண்டிதன் தனது மார்க்கத்துடைய மற்றக்காரியங்களைச் செய்யாமற்போனாலும், அவன்காயத்திரி மந்

திரத்தை ஓதுகிறதினல் சந்தேகமில்லாமல் மோக்ஷத்தை யடைகிருன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் காயத்திரி மந்திரத்தைக் காட்டிலும் சிறந்தது வேதத்தில் வேறொன்று மில்லையென்றும், எப்படி காசிக்குநிகரான பட்டணம் ஒன்று மில்லையோ அப்படியே காயத்திரி மந்திரத்துக்கு நிகரான மந்திரம் ஒன்று மில்லையென்றும், காயத்திரி மந்திரமானது வேதத்துக்கும் வேதியருக்கும் மாதாவாயிருக்கிறதென்றும், அதை ஓதுகிறவர்களை அது பாதுகாக்கிறதென்றும் சிவபுராணத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இன்னும் யாராவதொருவன் சூரியனுக்கு எதிரே உட்கார்ந்து காயத்திரி மந்திரத்தை யோதினல் அவனுடைய திகிலும் துன்பமும் நீங்கி விடுமென்றும், அவன் ஹறுமான (ஆகாத) வஸ்துக்களைத் தின்பதும், கெட்ட சகவாசத்திலிருப்பதும் அவனை நஷ்டப்படுத்தாதென்றும், சூரிய நாராயண உபநிடதத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இவ்வளவு பெருமையும் புகழுமுள்ள காயத்திரி மந்திரம் இதோ இருக்கிறது பாருங்கள்.

ஓம் பூர் புவ சுவ தத்ஸ்வ துர்பரேயணம்
பர்கோதே பஸ்ய தீமஹி தியோயோன பர்ச்சோதயாத்.

இந்தக் காயத்திரி மந்திரத்தின் துவக்கத்தில் ஓம் என்ற பதமிருக்கின்றதே அது எந்த மந்திரத்துக்கும் துவக்கத்திலிருக்கும். வேதத்தின் துவக்கத்திலு மிருக்கின்றது. இந்த ஓம் என்ற பதம் இரண்டரை அக்ஷரங்களால் சேர்க்கப்பட் டிருக்கிறது. அவற்றுள் ஒன்று அகாரம் மற்றொன்று உகாரம் இன்னுமொன்று அரைமகாரம். அகாரமென்பது அரியென்ற விஷ்ணுவையும், உகாரமென்பது உருத்திரனென்ற சிவனையும், அரை மகாரமென்பது சத்தியென்ற தேவியையும் குறிக்கும். பின்பு இரண்டாவது பதம் பூர் என்பதற்குப் பூமியென்று அர்த்தம். மூன்ருவது பதம் புவ என்பதற்கு ஆகாயமென்று அர்த்தம்; நான்காவது பதம் சுவ என்பதற்குச் சுவர்க்கமென்று அர்த்தம். பின்பு காயத்திரி மந்திரத்திலுள்ள மற்றச் சொற்களுக்குப் பொருளென்னவென்ருல் "நாங்கள் சூரியனுடைய பெரும் பிரகாசத்தில் தியானம் பண்ணுகிருேம் அது எங்களுக்கு வழிகாட்டும்" என்பதே.

இப்போது பாருங்கள், இந்துக்கள் இவ்வளவாய் ஏற்றிப் புகழ்கின்ற காயத்திரியென்னும் இந்தப் பரம பொக்கிஷத்தைப் பிராமணருக்கும் க்ஷத்திரியருக்கும் தவிர மற்றவர்களுக்குப் படித்துக் கொடுப்பது ஆகாதென்றெண்ணி; இதர இந்துக்களுக்கு இதை அதிகமாய் ம

றைக்கிறார்கள். மேலும் பிராமணருக்கும் க்ஷத்திரியருக்குங்கூட பகிரங்கமாய்ப் படித்துக்கொடுக்கிறதில்லை. காதினிடத்தில் மெதுவாய்ச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அந்த காயத்திரி மந்திரத்தின் வாசக மோசுத்தவினைதாயிருக்கிறது. அதை ஓதுவதினால் பாவமேயொழியவேறொன்றும் சித்திக்க ஏது வில்லை.

ஒருக்கால் இவ்விடத்தில், இஸ்லாமானவர்களும் ஆண்டவனுக்கல்லாமல் மற்றவர்களுக்குத் தொழுகிறார்களே என்று இந்துக்களுடைய எண்ணத்தில் வரக்கூடும். அதெப்படியென்றால்; தெரியாத பேதைகளான சில ஜனங்கள் பர்லு தொழுகை ஆண்டவனுக்கென்றும், சுன்னத்துத் தொழுகை நபிக்கு என்றும் சொல்லுகிறார்கள். இன்னும் சில பெண்பிள்ளைகள் பீவிபாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்கள்பேரால் தொழுகிறார்கள். இன்னும் சிலர் ஸலாத்துல்குத்துவாத்து (நடைத் தொழுகை) அதாவது பகுதாதுப் பட்டணத்தின் திசையை நோக்கிப் பதினோரு அடிகள் நடந்து அதில் ஹஜரத்து முஹ்யித்தீன்அப்துல் காதிர் ஜெய்லானி றகிமகுல்லா அவர்களுடைய நாமங்களைச் சொல்லுகிறார்கள்.

ஆதலால் அதற்கு மறுமொழியாவது:—சுன்னத்தென்றால் ஹஜரத்து நபியவர்களைப் பின்பற்றுதலென்ற கருத்தாயிருக்கும். அதாவது நபியவர்கள் பர்லல்லாத எந்தத் தொழுகையைத் தொழுதிருக்கிறார்களோ அந்தத் தொழுகையில் அவர்களைப் பின்பற்றி நாங்களும்தொழுகிறோ மென்பதுதான். இதேயொழிய சுன்னத்துத் தொழுகையை நபிக்காகத் தொழுகிறதல்ல. பர்லு தொழுகைக்கும் சுன்னத்துத் தொழுகைக்கும் வித்தியாசமென்னவென்றால்; பர்லைத் தொழாதவன் நரகவேதனைக்கு ஆளாகுவான். அதுகடமை யென்பதை நிராகரிப்பவன் காபிராய்விடுவான். சுன்னத்தைத் தொழாதவன் கியாமத் தென்ற நியாயத்தீர்ப்பு நாளில் பழிக்கப்படுவான். பர்லு தொழுகை யென்பதும் சுன்னத்துத் தொழுகையென்பதும் எல்லாம் ஆண்டவனுக்கே தொழப்படுகின்றனவா யிருக்கின்றன.

ஆனால் ஆண்டவனுக்கென்று நபில்தொழுகைகளைத் தொழுது அதனால் கிடைக்கும் சவாபென்னும் நன்மையை நபியவர்களுடைய றூஹுக்காவது பீவிபாத்திமாறலியல்லாகு அன்ஹாவுடைய றூஹுக்காவது இன்னும் யாதொரு பெரியோருடைய றூஹுக்காவது செலுத்தினால் குற்ற மில்லை.

இன்னும் சலாத்துல் குத்துவாத்து என்னும் தொழுகையைத் தொழுகிறவர்கள் கிப்லாவை நோக்கியே தொழுகிறார்கள் ஆனால் மற்ற

பூபு சுப்ஹானி முஷ்யித்தீன் அப்துல்காதிர் ஜெய்லானியவர்களைக் கன ப்படுத்துவதை மனதில் சிந்தித்து பகுதாதின் திசையை நோக்கிப் ப தினொரு அடிகள் நடக்கிறார்கள். அல்லது அமலிய்யாத்துகளில் நி ன்றும் அதை ஒரு அமலாக எண்ணியிருப்பார்கள். என்றாலும் எங் கள் மார்க்கத்தில் இதற்கு யாதொரு ஆதாரமுமில்லை. இது ஒரு து ர்வழக்கமாய் நடந்து வருகிறது. நிஜாமுத்தீன் அவ்லியாவுடைய காலத்தில் உலமாக்கள் ஒரு பத்வாயெழுதி இந்தச் செயலை ரத்துசெ ய்திருக்கிறார்கள். இக்காலத்திலும் ஹஜரத்து சைய்யிதுல்புகஹா மு ப்த்தீ முகம்மது ஸதுருத்தீன் தெஷ்லவி என்பவர் இந்தச் செயல் ஹ றுமென்பதாய் ஒருபத்வாயெழுதியிருக்கிறார் அதில் தெஷ்லி, வி ஹாராம் பூர், லூதியானு, கோட்ருய், லாகூர், கிஸ்வர், அமுர்தசரம் மு தலான ஊர்களிலுள்ள உலமாக்கள் கையொப்ப முத்திரைகள் பதித்தி ருக்கிறார்கள்.

எவ்விதத்திலும் எங்கள் மார்க்கத்தில் ஆண்டவனுக்கன்றி மற்ற வர்களுக்கு வணங்குவதும், காபத்துல்லாவையே தவிர மற்றதை வ ணக்கத்துக்காக முகம்நோக்கும் கிப்லாவாக்கிக் கொள்வதும் கூடவே கூடாது.

## 3-வது பிரிவு நோன்பைக்குறித்துப் பேசுவது.

எங்கள் மார்க்கத்தில் நோன்புவைப்பதுண்டு. நோன்பென்பது ஆண்டவனைக்கனப்படுத்துவதற்காகச் சற்றேறக்குறைய காலை நாலும ணி முதல் சூரியன் அஸ்தமிக்கிறவரையில் தின்னல், பருகல், போகித் தல் இவைகளைவிட்டு நீங்கியிருக்கவேண்டிய ஒரு வணக்கமாயிருக்கிற து. இரவில் ஹலாலான உணவில் நின்றும் எது கிடைத்தாலும் அதை ப்புசிக்கலாம்:

ஒவ்வொரு வருஷத்திலும் றமலான் என்ற ஒருமாச முழுவதும் நோன்பு வைப்பது கடமையாயிருக்கிறது. அந்த நோன்பை அனுசரித் தவன் நன்மையைப் பெறுவான். அனுசரிக்காமல் விட்டவன் கொடிய பாவியாவான். அது கடமையல்லவென்று நிராகரிப்பவன் காபிராவான்.

இன்னு மிந்தநோன்பைத்தவிர நபிலான நோன்புகளும் உண்டு. அவைகளை அனுசரிப்பவன் நன்மையை அடைவான். அனுசரிக்காத வன் பாவியாகமாட்டான். நோன்பானது பெரியவணக்கமாயிருக்கி றது. ஆண்டவனுக்கேயன்றி மற்றவர்களுக்கென்று நோன்பு வைப் பது குபிராயிருக்கும்.

இனி இந்துக்கள் தாங்கள் வணங்கும் தெய்வங்களுக்காகவும் விக்கிரகங்களுக்காகவும் நோன்பு வைக்கிறார்கள்: அதற்கு விரதமென்று சொல்லுகிறார்கள்.

ஏகாதசியில் அதாவது பிறைபிறந்த பதினோராம் நாளில் விஷ்ணுவுக்காக விரதமிருக்கிறார்கள். சதுர்த்சியென்ற பதினாலாம் பிறையன்று மகாதேவனுக்கும், செவ்வாய்க் கிழமையில் அனுமாருக்கும், ஞாயிற்றுக்கிழமையில் சூரியனுக்கும்,சனிக்கிழமையில் சனீஸ்வரனுக்கும், ஆவணிமீ அஷ்டமியில் கிருஷ்ணனுக்கும், கார்த்திகைமீ அமாவாசையில் இலக்ஷ்மிக்கும், சித்திரை அற்பசிமாதங்களின் நவராத்திரிகளில் தேவிக்கும், சிலர் காலிகாவுக்கும், இன்னும் இப்படிப்போலவே மற்றும் தெய்வங்களுக்கும் விரதமிருக்கிறார்கள்.

இன்னும் சில தானியங்களையும் தின் பண்டங்களையும் மற்ற நாட்களில் புசிப்பது ஆகுமென்றும் அவைகளை விரதகாலங்களில் புசிக்கக் கூடாதென்றும் சொல்லுகிறார்கள்.

இன்னும் சிலவிரதங்களில் இரவிலாவது பகலிலாவது ஒன்றையும் புசிக்கக்கூடாதாம். சிலர் பகலில் தின்கிறார்கள், இரவிலும் ஏதாவது கொஞ்சம் பலகாரம் சாப்பிடுகிறார்கள்.

எவ்விதத்திலும் இந்து மார்க்கத்தில் ஆண்டவனுக்கென்று ஒரு விரதத்தையும் காணோம். மற்றவர்களுக்காக வைக்கும் விரதமாகவே யிருக்கிறது.

இந்துக்களுக்கு இவ்விடத்தில் சில இஸ்லாமானவர்களும் மக்தூமெ ஜிஹானியான் என்பவர்கள் பேராலும், சிலர் அலிமுர்த்தலாவுடைய பேராலும், சில பெண்பிள்ளைகள் சைய்யிது சுல்தான் என்பவர்கள் பேராலும், பீவி முறாது என்பவர்கள் பேராலும் நோன்புவைக்கிறார்களென்று சந்தேகம் வரக்கூடும்.

அதைநிவர்த்திக்க மறுமொழியாவது:—இப்பேர்ப்பட்ட ஜனங்கள் வழிகெட்டவர்களாயும் மார்க்கந் தெரியாதவர்களாயு மிருக்கிறார்கள். அவர்கள்செய்கிற இச்செயல்களால் எங்கள் மார்க்கத்தின் மேல் யாதொரு ஆக்ஷேபமும் வரமாட்டாது. ஏனென்றால் இச்செயல்களில் ஒன்றாவது ஆகுமென்று எங்கள் மார்க்கத்தில் சொல்லியிருப்பதில்லை ஆண்பிள்ளையானாலும் பெண்பிள்ளையானாலும் ஆண்டவனைத்தவிர மற்றவர்களைக் கனப்படுத்துவதற்காகத் தொழுகை நோன்பு முதலியவணக்கங்களைச் செய்தால் அவர்கள் ஆண்டவனுக்கு இணைவைத்தவர்களாகிறார்கள்.

## 4-வது பிரிவு ஸக்காத்தைக் குறித்துப் பேசுவது.

வணக்கமானது **பதனி** என்றும் **மாலீ** என்றும் இருவகைப்பட்டிருக்கிறது. பதனியென்பது தொழுகை, நோன்பு முதலியனபோல் சரீரத்தால் செய்யப்படுகிற வணக்கங்களுக்குப்பெயர். மாலியென்பது திரவியத்தால் செய்யப்படுகிற வணக்கமாயிருக்கும். அதாவது தன் சொத்தில் கொஞ்சத்தை ஆண்டவன் பேரால் கொடுப்பதாம். அதெப்படியென்றால், ஸக்காத்து என்ற தானம்கொடுக்கப் போதுமான முதலுள்ளவன்பேரில் ஸக்காத்து பரலாயிருக்கிறது. அது கடனல்லவென்று நிராகரிப்பவன் காபிராவான். இன்னும் நோன்பு பெருநாளில் **சதக்கயெ பித்று** என்ற தானமும் ஹஜ்ஜுப் பெருநாளில் **குர்பானி** என்றபலியும் செய்வது அவன் பேரில் வாஜிபாயிருக்கிறது. இன்னுமிவைகளைத் தவிர நபிலான சில்லரைதானங்களும் உண்டு.

இந்த எல்லாவகையான வணக்கங்களையும் நாங்கள் ஆண்டவனுடைய பிரியத்துக்காகவே செய்கிறோம். இந்த அமல்களை நாங்கள் செய்கிறதினால் ஆண்டவன் எங்கள் பேரில் பிரியப்படுகிறானென்று அவனிடத்தில் உறுதியான நம்பிக்கைவைத்திருக்கிறோம். இன்னும் எந்த வணக்கம்செய்யக் கடமையானதாயிருக்கிறதோ அந்த வணக்கத்தைச் செய்யாமல் விட்டுவிட்டால் ஆண்டவன் எங்கள் பேரில் கோபமாவானென்று அவனுக்கு அதிகமாய்ப்பயப்படுகிறோம். ஆகக்கூடி தேகசம்பந்தமுள்ள வணக்கமாயிருந்தாலும், திரவியசம்பந்தமுள்ள வணக்கமாயிருந்தாலும் எந்த வணக்கத்தையும் நாங்கள் ஆண்டவனுடைய சமுகத்தையடைய அவனிடத்திதலேயே ஆதரவு வைத்து அவனுக்கே பயந்து செய்கிறோம்.

இந்துக்கள் ஆண்டவனையல்ல; மற்றவர்களுடைய சமுகத்தையும் பொருத்தத்தையும் அடைவதற்காவது அல்லது அவர்களுக்குப் பயந்தாவது தேகசம்பந்தமுள்ள வணக்கங்களையும் திரவிய சம்பந்தமுள்ள வணக்கங்களையும் செய்கிறார்கள்.

அவர்களின் தேகசம்பந்தமுள்ள வணக்கத்தை முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. இனி திரவியசம்பந்தமுள்ள வணக்கமாவதென்னவென்றால், தேவிபேரால் மிருகத்தை உயிராகவிட்டு விடுவது அல்லது பலிகொடுப்பது. மற்றும் தேவர்கள் பேரால் சொத்தில் ஓர் பாகமெடுத்து அதனால் ஹோமம் வளர்ப்பது. தேவர்களுக்காக பிரார்த்தனை யென்னும் காணிக்கை செலுத்துவது; இவைகளெல்லாம் திரவியசம்பந்தமுள்ள வணக்கங்களாயிருக்கின்றன.

இவ்விடத்தில் யாதொரு ஹிந்து, சில இஸ்லாமானவர்களும் பிர் சாஹிப் அல்லது செய்யிதுசுல்தான் இவர்களுக்காகத் தங்கள் சொத்தில் பத்திலொருபாகத்தை எடுத்துவைக்கிறார்கள் என்றும், சிலர் தங்கள் தானியத்தில் நின்றும் அஜரத்து அலிமுர்த்தலாறலியல்லாகு அன்கு பேரால் மாசூல்எடுக்கிறார்களென்றும், சிலர் யாதொருபெரியோருடையபேரால் தங்கள் நகையைக்கழட்டிக் கழுவிவைத்து விடுகிறார்களென்றும், சிலர் வலிமார்களால் நஷ்டத்தை பயந்தோ அல்லது இலாபத்தை ஆசைவைத்தோ அவர்களுக்குக்காணிக்கை செலுத்துகிறார்களென்றும், சிலர் வலிமார்களுடையபேரால் நேர்ச்சை நேர்ந்து கொள்ளுகிறார்களென்றும், சிலர் வலிமார்கள் பேரால் ஆடு கோழி முதலிய உயிரினங்களைத் தக்பீர் செய்கிறார்கள் அல்லது உயிராகவே விட்டுவிடுகிறார்களென்றும், சிலர் கப்றுகளுக்கு ஆடுமுதலியவைகளைநேர்ந்து விடுகிறார்களென்றும் சொல்லும் பக்ஷத்தில் அதற்குமறுமொழியாவது:-

இப்படிச் செய்கிறவர்கள் மூடர்களாயும் வழிகேடர்களாயுமிருக்கிறார்கள். இக்காரியங்களில் ஒன்றாவது எங்கள் மார்க்கத்தில் ஆகாது. உங்கள் மார்க்கத்திலோ எல்லாம் ஆகுமானவைகளாயிருக்கின்றன. எங்கள் மார்க்கத்தில் வணக்கம் தேகசம்பந்தமுள்ளதா யிருந்தாலும், திரவியசம்பந்தமுள்ளதா யிருந்தாலும் ஆண்டவனுக்கே யொழிய மற்றவர்களுக்குச் செய்வது கூடாது. இன்னும் ஆண்டவனலன்றி மற்றவர்களால் இலாப நஷ்டங் களுண்டாகு மென்றெண்ணுவதும் ஆண்டவனிடத்திலன்றி மற்றவர்களிடத்தில் ஆசை அச்சங்கள் வைப்பதும்கூடாது.

## 5:வது பிரிவு ஹஜ்ஜைக் குறித்துப் பேசுவது

எங்கள் மார்க்கத்தில் மக்காவுக்குப் போகவழிச்செலவுக்கும் வாகனச் செலவுக்கும் தன் சம் ரக்ஷணைக்குட் பட்டவர்களின் அன்ன வஸ்திரச்செலவுக்கும்போதுமான முதலுள்ளவனுயிருக்கிற ஒவ்வொரு முஸ்லிமானவன் பேரிலும் வழியின் அச்சமில்லாமலிருந்தால் ஒரு தரம் காபாஷரீபுக்குப்போய் ஹஜ்ஜென்னும் வணக்கத்தைச் செய்கிறது பர்லாயிருக்கும்.

காபாஷரீபென்பது பெருமைதங்கிய மக்காப் பட்டணத்தில் சிறப்புற்றோங்கும் ஒரு ஆலயமாயிருக்கும். ஒருவன் தொழுதால் அந்த காபாஷரீபையே நோக்கித் தொழவேண்டுமென்று ஆண்டவன் கட்டளை செய்திருக்கிறான். அதின் திசையை நோக்கியே யொழிய மற்றப்பக்கங்களில் முகம்நோக்கித் தொழக்கூடாது. இப்படி அதையே நோக்கித்தொழுகிறதானது ஆண்டவனுடைய கட்டளைப்படி ஆண்

டவனுக்கே தொழுகிறதல்லாது அந்தக் காபாவுக்குத்தொழுகிறதல்ல. ஆண்டவன் அந்த ஆலயத்துக்குச் சிறப்பும் மேன்மையும் கொடுத்திருப்பதினால் அதை எல்லா இஸ்லாமானவர்களுக்கும் முகம் நோக்கும் கிப்லாவாக அமைத் திருக்கிறான்.

ஆதலால் முஸ்லிம்களாகிய நாங்கள் அத்தலத்திற்குப்போய் ஹஜ்ஜென்றவணக்கத்தில் ஆண்டவனைத்தோத்திரஞ் செய்து எங்கள் கேவலஸ்திதியையும் முறையிட்டு கெஞ்சி துஆ கேட்கிறோம் இன்னும் ஆண்டவனுடைய உத்திரவுப்படி அந்த மகிமைதங்கிய ஆலயத்தைச்சுற்றி தவ்வாபு செய்கிறோம்.

இன்னும் அந்த ஆலயத்துக்குச் சமீபத்தில் அறபா என்ற ஓர் மைதானமிருக்கிறது. அறபாநாளில் (ஹஜ்ஜுலு ௯௨ யில்) அந்த மைதானத்திற்போய்த் தங்கியிருக்கிறோம்.

யாதொருவன் இந்த ஹஜ்ஜென்ற வணக்கத்தைச் செய்தால் அதனால் அவன் ஆண்டவனுக்குச் செய்தகுற்றங்களையும் பாவங்களையும் ஆண்டவன் மன்னித்து விடுகிறான். காபாவென்னும் ஆலயத்துக்கே தவிர மற்றவிடங்களுக்கு ஹஜ்ஜுடைய நாட்டத்தோடு போகக்கூடாது. அப்படிப்போனால் அது ஷிருக்காகும்.

இந்துக்களின் யாத்திரை ஸ்தலங்கள் அநந்தமிருக்கின்றன. அவர்கள் தங்கள் தெய்வங்களின்பேரால் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அந்த ஸ்தலங்களுக்குப்போய் தங்கள் தெய்வங்களை வணங்குகிறார்கள். அப்படிப்பட்ட யாத்திரை ஸ்தலங்கள் நூற்றுக்கணக்கா யிருக்கின்றன. உதாரணமாக:—குர்க்ஷேத்திரம், கங்கை, யமுனை, ஜுவாலைமுகி, காங்டை, சந்திரபூரணி, பாலசுந்தரி, மதுராபுரி, துவாரகாபுரி, காசி, ஜகந்நாதம், இமயமலை இவைகளும் இன்னும் அநேக ஸ்தலங்களு மிருக்கின்றன. ஆனால் இவர்கள் அந்தஸ்தலங்களுக்குப் போகிறதில் எந்தஸ்தலத்திலும் ஆண்டவனுடைய வணக்கத்தைச் செய்யக்காணோம்.

இவ்விடத்தில் யாதொரு ஹிந்து ஆக்ஷேபமாக; "இஸ்லாமானவர்களும் சில பெரியோர்கள் அடங்கியிருக்கும் கப்றுகள் (சமாதிகள்) உள்ளஸ்தலங்களுக்கு உதாரணமாக அஜ்மீர், ஸர்ஹிந்து, பாக்பட்டணம், மக்கன்பூர், நாகூர் முதலான இன்னும் சிலவிடங்களுக்கு தூரதேசங்களிலிருந்து யாத்திரை செய்கிறார்கள். இன்னுமந்தப் பெரியோர்களிடம் தங்கள் கோரிக்கைகளைக் கேட்கிறார்கள்.

இன்னும் ஒருவன் பாக்பட்டணத்திற்குப்போய் அவ்விடத்திலிருக்கிற சொர்க்கவாயில் என்று அர்த்தங்கொள்ளும் ஜன்னத்தீ தர்வாஜா

வில் ஒருதரம்புகுந்து புறப்பட்டால் அவன் சொர்க்கவாசியாய் விடு வானென்று உறுதியாய் நம்பியிருக்கிறார்கள்" என்று சொல்லும் பக்ஷத்தில் அதற்கு மறுமொழியாவது:—

இப்பேர்ப்பட்ட கேள்விகளுக்கு நாம் பலதடவை ஜவாபுகொடுத்திருக்கிறோம். தெரியாத மூடர்கள் செய்கிறசெய்கைகளை ஆதாரமாகக்கொண்டு ஒருபோதும் ஆக்ஷேபிக்கத்தகாது.

✓ கப்றுகளுள்ள ஸ்தலங்களுக்குப் போவதின் உண்மை யென்னவென்றால், அடியில் சொல்லுகிறபடி எங்கள் மார்க்கத்தில் கப்றுகளை ஸியாரத்துசெய்வதில் (போய்க்காணுவதில்) அநேக நன்மைகளிருக்கின்றன.)

ஸியாரத்துசெய்யும் முறையாவது:—ஒருவன் கப்றுகளுள்ள ஸ்தலத்துக்குப்போனால் மார்க்க ஒழுங்குப்படி அங்கு அடங்கியிருக்கிறவர்களுக்கு சலாம்சொல்லவேண்டும். அதெப்படியென்றால்;

السلام عليكم يا اهل القبور من المسلمين انتم لنا سلف ونحن لكم تبع
وانا انشاء الله بكم لاحقون *

அஸ்ஸலாமு அலைக்கும் யாஅஹ்லல் குபூரி மினல்முஸ்லிமீன அன்த்தும் லனா ஸலபுன் வநஹ்னு லகும் தபஉன் வஇன்னா இன்ஷா அல்லாகு பிகும் லாஹிகூன்.

முஸ்லிம்களில் நின்றும் சமாதியடைந்தவர்களே! உங்கள்மீது சலாமுண்டாவதாக, நீங்கள் எங்களுக்கு முந்திவிட்டீர்கள். நாங்கள் உங்களைப் பின் தொடருகிறவர்களா யிருக்கிறோம். ஆண்டவன் நாடினால் இதோ நாங்களும் உங்களோடு சேர்கிறவர்களா யிருக்கிறோம்—என்ற அர்த்தமுள்ள மேற்கண்ட அறபுவாக்கியத்தைச் சொல்லவேண்டும். பின்பு அவர்களுக்கும் தனக்கும் பிரயோசனமுண்டாகும்படி ஆண்டவனிடத்தில் கையேந்தி துவாகேட்கலாம்.

இன்னும் பூலோக இன்பசுகங்கள் தன் மனதுக்கு வெறுப்பாய்த் தோற்றுவதற்கும் பாவங்களைச் செய்யாமல் நீங்கி யிருப்பதற்கும் அனுகூலமாய்த் தன் மரணத்தை அந்தக் கப்றினிடம் நினைவுகூறவேண்டும்.

இன்னும் பெரியோர்களுடைய கப்றுகளின் பேரில் அல்லாகுதஆலாவுடைய றக்மத்து இரங்குகிறதென்றும் அந்தரக்மத்து அவர்கள் மூலமாய்த்தனக்கும் கிடைக்குமென்றும் பக்திவிசுவாசம் வைத்திருக்கிற ஒருவன் யாதொருபெரியோருடைய கப்றை ஸியாரத்து செய்வதற்காக தூரதேசத்திலிருந்து யாத்திரை செய்தாலும் குற்றமில்லை.

இன்னும் சர்வலோகத்துக்கும் நாயகமாயிருக்கிற ஹஜரத்து முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய றவுலாஷரீபை ஸியாரத்து செய்வதில் அநந்தம் நன்மைகளிருக்கின்றன.

ஆனால் இப்படி கப்றுகளுடைய ஸியாரத்துக்குப் போகிறதில், ஹஜ்ஜுக்குப் போகிற மக்காயாத்திரையிற்போல் இஹ்றும் கட்டல் தல்பியா சொல்லல் முதலானகிரியைகளைச் செய்யவும், கபுறுகளை வணங்கவும் நேரே அந்தப்பெரியோர்களிடத்தில் யாதொரு கோரிக்கையைக்கேட்கவும் கூடாது இப்படிச் செய்யலாமென்ற எண்ணமுள்ளவர்கள் எந்த கப்றுக்கும் போகக்கூடாது.

இதுவிஷயத்தில் எவ்வளவு பந்தோபஸ்துகள் செய்யப்பட்டிருக்கின்றன வென்றால், யாதொரு கப்றுக்கு சஜ்தாசெய்யவும் அதைச் சுற்றிவரவும், அதை முத்தமிடவும் கூடவே கூடாதென்று விலக்கப்பட்டிருக்கிறது. மேலும் அவ்விடத்தில் விளக்கேற்றிவைப்பது ஹறாமென்றும் அதைக்காரையால் பூசுவதும் அதன்மேல் கட்டடம் கட்டுவதும் ஆகாதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

இன்னும் பாக்பட்டணத்தில் ஜன்னத்தி தர்வாஜா என்று பிரபல்லியமாயிருக்கிறதே அதற்கு மார்க்க ஆதாரம் யாதொன்று மில்லை. மேலும் உலகவாழ்க்கையை விரும்பின அவ்விடத்தின் முஜாவிர்களென்ற தர்கா ஊழியர்கள்தான் இப்படிப் பிரஸ்தாபப் படுத்தியிருக்கிறார்கள்.

ஒருவன்யாதொரு வாசலால் புகுந்து புறப்படுகிறதினால் சொர்க்கவாளி யாவானென்றசங்கதி எங்கள்மார்க்கத்தில் கிடையாது. மேலும் சொர்க்கம் புகுவதற்கு ஆண்டவனுடைய கிருபையும் தனக்கிருக்கிற பக்தி விசுவாசங்களும் நற்செயல்களுமே காரணங்களாயிருக்கின்றன.

எங்கள் மார்க்கத்தில் ஒருவரையும் சொர்க்கவாளியென்று குறிப்பிட்டுச்சொல்லக்கூடாது. ஆனால் குர்ஆன் ஷரீபிலும் ஹதீசிலும் யார் யார் சொர்க்கவாளியென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறார்களோ அவர்களைமாத்திரம் சொர்க்கவாளிகளென்று சொல்லலாம்.

அவர்களாரென்றால்; எல்லா நபிமார்கள் அலைகி மிஸ்ஸலாமும் இன்னும் அபூபக்கர் ஸித்தீகு, உமர், உஸ்மான், அலி, தல்ஹா, ஸுபைர், அபூஉபைதா, ஸஅது, ஸஈது, அப்துர்ரஹ்மான், பாத்திமா, அசன், உசைன் றலிஅல்லாகு அன்கும் இவர்களும் இன்னும் சிலருமேயாம்.

இப்படியே குர்ஆன்ஷரீப், ஹதீசுகளினால் நரகவாளிகளென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிற இப்லீஸ், தஜ்ஜால், பிருஅவுன், அபூஜஹல், அபூலஹப் முதலான இன்னும் சில பேரைத்தவிர மற்ற எவர்களையும் நரகவாளியென்று குறித்துச் சொல்லக் கூடாது.

ஆகவே ஷைகு பரீது ஷக்கர்கஞ்சு றக்மதுல்லாகி அலைகி அவர்களையே சொர்க்கவாளியென்று சொல்ல மார்க்கம் இடம் கொடுக்காமலிருக்கும்போது, வாசலால் புகுந்து புறப்பட்டவன் சொர்க்கவாளியாவானென்று எப்படிச் சொல்லலாம்.

பாக்பட்டணத்து வாசலின் உண்மையான சங்கதி என்னவென்றால்: ஒருநாள் நிஜாமுத்தீன் அவுலியா அவர்களுக்கு இப்போது அந்தவாசல் கட்டப்பட்டிருக்கிற விடத்தில் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய தரிசனை கிடைத்தது. நிஜாமுத்தீன் அவுலியா அவர்களுக்கு நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய ஆசைமேலிட்டிருந்ததின் நிமித்தம் அவர்கள் அந்தவிடத்தை உவந்திருந்தார்கள். ஆதலால் இப்பொழுது முஜாவிர்களென்ற மேற்படி தர்கா ஊழியர்கள் வருமானத்தை இச்சித்து அந்த விடத்தில் ஒருவாசற்படி கட்டி அதற்கு ஜன்னத்தி தர்வாஜா (சொர்க்கவாசல்) என்று பேரிட்டிருக்கிறார்கள்.

## 6-வது பிரிவு இறந்து போனவர்களுக்கு ஸவாபு செலுத்துவதைக் குறித்துப் பேசுவது.

ஒருவன் இறந்துபோனால் பின்பு அவன் அமல் செய்யமுடியாமல் தடைபட்டுப்போகின்றான். ஆதலால் உயிரோடிருப்பவர்கள் அந்த இறந்து போனவனுக்காக யாதொரு நல்ல அமலைச்செய்து உதாரணமாக ஏழைகளுக்கு அன்ன மிட்டாவது அல்லது வஸ்திரம் கொடுத்தாவது அல்லது காசு, பணம் முதலிய நாணயங்களைக் கொடுத்தாவது அல்லது நபில் தொழுகை தொழுதாவது அல்லது நோன்பு வைத்தாவது அல்லது குர்ஆன்ஷரீபை ஓதியாவது அல்லது இன்னும் யாதொரு நல்ல அமலைச்செய்தாவது அதன் ஸவாபை அதாவது அந்த அமலுக்காக ஆண்டவனிடத்திலிருந்து தனக்குக் கிடைக்கும் நன்மையை அந்த இறந்து போனவனுக்குச் செலுத்தினால் (தத்தம் செய்து விட்டால்) அந்த நன்மை அவனுக்கே சேர்ந்து விடும்.

ஆனால் அப்படிச்சேர்வதற்கு அந்த அமலை ஆண்டவனுக்கென்றே செய்திருக்கவேண்டும். பூலோகத்தின் கீர்த்தி பிரஸ்தாபத்துக்காகச்செய்திருந்தால் செய்தவர்களுக்காவது அந்த இறந்து போனவர்களுக்காவது யாதொரு ஸவாபும் சேராது.

இன்னுமிந்த ஸவாபு செலுத்துகிறது இரண்டுவகையா யிருக்கிறது. 1 - வது யாதொரு நல்ல அமலைச் செய்கிறதாயிருந்தால் முந்தி நான் இன்னாருக்காக நாயிபாகி (பிரதிநிதியாகி) இந்த அமலைச்செய்கிறேனென்று மனதில் நிய்யத்துவைத்துப் பிறகு அந்த அமலைத்தொடங்குவது இது திரவிய சம்பந்தமுள்ள வணக்கத்தில் மாத்திரந்தான் உண்டு.

2 - வது. யாதொரு அமலைச்செய்து முடிந்தபின் ஆண்டவனே ! இந்த அமலின் ஸவாபை இன்னாருக்கு அளிக்கும்படி பிரார்த்திக்கிறேன் என்று ஆண்டவன் சமுகத்தில் கையேந்தி துவாகேட்பது. இது எந்த வணக்கத்திலும் உண்டு.

ஆனால் இந்த ஸவாபு செலுத்துவதற்காக யாதொரு நாட் குறிப்பும் கிழமைக்குறிப்பும் ஏற்பட்டிருப்பதில்லை. எந்த நாளிலும் செலுத்தலாம். என்கினும் றமலான் மாசத்தைப்போல் எந்தெந்த நாட்களுடைய பெருமையைக்குறித்து றசூல்நாயகமவர்கள் அறிவித்திருக்கிறார்களோ அந்த நாட்களில் செலுத்துகிறது அதிக நன்மையாயிருக்கும்.

இன்னும் குறிப்பாய் இன்னாருக்கு இன்ன உணவினாலேயே அல்லது இன்ன அமலினாலேயே ஸவாபு செலுத்தவேண்டுமென்ற ஏற்பாடு கிடையாது. எது வாய்க்குமோ எதைச் செய்யக்கூடுமோ அதனால் ஸவாபுசெலுத்தலாம்; ஆனால் ஹலாலான பொருளாயிருக்கவேண்டியது அவசியம்.

இன்னும் இவ்வகையான உணவை இன்னார் தின்னலாம் இன்னார் தின்னக்கூடாதென்ற ஏற்பாடுமில்லை. ஒவ்வொருவருக்கும் வீட்டிலேயே உண்கக்கொடுக்கிறதும் கொண்டுபோகும்படி அவர்கள்கையில் கொடுத்து விடுகிறதும் இரண்டும் ஆகும். ஆனால் பகீருகள், ஏழைகள், தகப்பனில்லாத எத்தீம்கள், முசாபிர்கள், சிறையிலகப் பட்டவர்கள், தாலிபுல்இல்மென்ற ஓதுகிற பிள்ளைகள் முதலானவர்களுக்குக் கொடுப்பது மற்றவர்களுக்குக் கொடுப்பதைக் காட்டிலும் அதிக நன்மையுள்ளதாயிருக்கிறது.

இன்னுமிந்த ஸவாபு செலுத்துகிறது உண்மையில் இறந்தவர்களின் பேரிலிருக்கிற ஓர் பிரியமேயொழிய மற்றப்படி அவர்களுக்குப் பயந்தாவது அல்லது அவர்களால் நம்முடைய எண்ணங்கள் நிறைவேறுமென்று ஆசைவைத்தாவது செலுத்துகிறதல்ல.

இன்னும் இறந்தவர்கள் கைபென்ற மறைவான சங்கதிகளை அறிவார்களென்பதும் ஸவாபு செலுத்துகிற வேளையில் அவர்களுடைய

அற்வாஹ் (ஆன்மாக்கள்) அவ்விடத்தில் ஹாஜிராகுமென்பதும் கிடையாது. மேலும் அவர்களின் றூகு (ஆன்மா) எங்கேயிருந்தாலும் அங்கே அந்த ஸவாபு சேர்ந்துவிடும்.

இன்னுமிந்த ஸவாபு செலுத்துகிறது கடன் பட்டாவது செலுத்தவேண்டுமென்ற கட்டாயமான பர்லுவாஜிபல்ல. மேலும் கடன் பட்டு யாதொருவருக்கு ஸவாபு செலுத்துகிறது நல்லதல்ல. தன் பிள்ளைகளுடைய செலவுக்குமேல் மிகுதியா யிருக்கிற பொருளில் தர்மம் செய்து அதன் ஸவாபை செலுத்துகிறதுதான் நலம்

இன்னும் ஸவாபு செலுத்துகிறதற்காகத் தயார் செய்யப்படும் உணவு பதார்த்தங்களைச் சமைக்கப் புதிய பாத்திரங்கள் வேண்டுமென்ற அவசியமில்லை. எப்போதும் வழங்குகிற பாத்திரங்களே போதும்.

இன்னுமந்த உணவு பதார்த்தங்களின் பேரில் யாதொன்றை ஓதப்பட்டால் தான் ஸவாபு சேருமென்கிற கட்டாய மில்லை. ஸவாபு செலுத்துகிறேனென்று மனதில் நிய்யத்து செய்து கொள்வதே போதும். இன்னுமந்த உணவு பதார்த்தங்களுடன் தண்ணீர் வைக்கவேண்டுமென்பதும் அவசியமில்லை. இன்னும் ஸவாபு செலுத்துகிறதற்கு முன்னே அந்த உணவு பதார்த்தங்களில் நின்றும் யாராவது ஏதாவது தின்றாலும் ஆகும் தின்னக் கூடாதென்ற தடையில்லை.

இனி இந்து மார்க்கத்தில் ஸவாபு செலுத்துகிற முறை யெப்படி யென்றால்; போஜனம், வஸ்திரம் முதலான யாதொரு பொருளின் ஸவாபை செலுத்துகிறதாயிருந்தால் அதற்கு சங்கற்பம் செய்து அதாவது ஸவாபு செலுத்துகிறவன் தன் வலதுகையில் தண்ணீர் எடுத்துக்கொண்டு சாஸ்திரியார் சொல்கிறபடி இன்னமாதம் இன்ன தேதி இன்ன கிழமையாகிய இன்று இன்னஜாதியும் இன்னானுமாகிய நான் இன்னின்ன பொருளை இறந்துபோன இன்னானுக்காகத் தத்தம் செய்கிறேனென்று மனதிலும் நினைத்து நாவினாலும் சொல்லிப் பின்பு அந்தத் தண்ணீரைக் கொட்டிவிட வேண்டியதாம்.

இன்னு மவர்களிடத்தில் ஸவாபு செலுத்துகிறதற்கு எல்லா நாட்களும் ஆகுமென்றிருந்தாலும் சில நாட்களைக் குறிக்கிறதும் அவசியமென்றெண்ணுகிறார்கள் அதெப்படியென்றால்; கிர்யாகர்மம் செய்கிறதற்காக ஒரு நாள் ஏற்பட்டிருக்கிறது. ஒருவன் இறந்து போனால் இந்தக்கிர்யாகர்மம் கழிக்கிறவரையில் பர்ஜக் என்ற மத்திய லோகத்தில் அவனுக்காக ஓர்சரீரம் தயார்செய்யப்பட்டு அதில் அவன் இன்பதுன்பங்களை யனுபவிக்கத் தகுதியுடையதாகின்றதாம். ஆத

லால் அந்த நாளுக்குக் கிர்யாகர்மம் என்று பேர்வைத் திருக்கிறார்கள். ஏனென்றால் சாஸ்திரபாஷையில் கிர்யாவென்பது சரீரத்துக்குப்பெயர் கர்மம் என்பது செய்கைக்குப்பெயர். இதன் தாத்பரிய மென்ன வென்றால் ஒருவன் இறந்த நாளிலிருந்து இந்தக் கிர்யாகர்ம நாள் வரையில் அந்த இறந்தவனுடைய சம்பபந்துவானவன் இறந்தவனுக்கு மத்தியலோகத்தில் ஓர் சரீரம் தயார் செய்யப்படுவதற்கேதுவான செய்கைகளைச் செய்ய வேண்டுமென்பதே.

பின்பு அந்தநாளில் அந்த இறந்தவனுக்காகச் செய்யப்படுகிற கர்மம் யாதெனில், அந்த இறந்தவன் பேரால் போஜனம், வஸ்திரம், கட்டில், மெத்தை, பாய், ஆபரணம், பாத்திரம், குடை, குதிரை, மற்றும் விநோதமான சாமான்கள் இவைகளை அவரவர்களின் சக்திக்குத் தக்கபடி மஹாப்பிராமணாளுக்குத்தானங்கொடுப்பதாம். இந்தப்பொருள்களெல்லாம் அந்த இறந்தவனுக்குப் போய்ச் சேருகின்றனவென்று நம்பி யிருக்கிறார்கள். இன்னு மந்த நாளில் இதைத்தவிர இன்னு மநேககாரியங்களைச் செய்கிறார்கள். இறந்தவர்கள் பேரால் அளிக்கும் பொருள்களை யாருக்குக் கொடுக்கிறார்களோ அவர்கள் மஹாப்பிராமணாளென்று சொல்லப்படுகிறார்கள்.

இன்னு மிந்தக் கிர்யாகர்மத்தைச் செய்வதற்காக அந்தந்தஜாதியின் மேன்மை தாழ்மைக்குத் தக்கபடி நாள் குறிக்கப்பட்டிருக்கிறது அதெப்படியென்றால் பிராமணன் இறந்துபோனால் இறந்த பதினோராம் நாளிலும், க்ஷத்திரியன் இறந்தால் பதின்மூன்றாம்நாளிலும், வைசியன் இறந்தால் பதினைந்து அல்லது பதினாறாம் நாளிலும், சூத்திரன் இறந்தால் முப்பது அல்லது முப்பத்தோராம் நாளிலும் கிர்யாகர்மம் செய்யவேண்டுமாம்.

இன்னும் இறந்த ஆறாவது மாசமும் அவர்கள் ஸவாபு செலுத்துகிறார்கள். இப்படியே இறந்த ஒன்றாவது வருஷமும் ஸவாபு செலுத்துகிறார்கள் அந்த நாளில் பசுவுக்கும் சாதம் போடுகிறார்கள். இன்னும் இறந்த நான்காவது வருஷத்திற்குப் பின்பும் ஸவாபு செலுத்துகிறார்கள். அந்த நாளுக்கு சுத்தீ என்று பேர் சொல்லப்படுகிறது. இன்னும் வருஷந்தோறும் அற்பசிமாதம் முற்பாதி நாட்களில் தங்கள் முன்னோர்களுக்கு ஸவாபு செலுத்துகிறார்கள். ஆனால் யார் எந்த தேதியில் இறந்து போனார்களோ அந்த தேதியிலேயே அவர்களுக்கு ஸவாபு செலுத்துவது முக்கியமென்றெண்ணுகிறார்கள்.

இன்னும் போஜனத்தினால் ஸவாபு செலுத்துவதற்கு சுறுதா வென்றுபேர்சொல்லுகிறார்கள். சுறுதாளென்ற போஜனம் தயாராய் விட்

டால் முதலில் பண்டிதரைக் கூப்பிட்டு அந்த போஜனத்தின் பேரில் வேதம் ஓதச்சொல்லுகிறுர்கள். அந்தப்பண்டிதருக்கு அவர்கள் பாஷையில் அபிஷ்ரமன் என்று பேர்சொல்லுகிறுர்கள். இப்படியே ஸவாபு செலுத்த இன்னும் அநேக நாட்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இன்னும் தாங்கள் வணங்கும் தெய்வங்களின் ஆன்மதிருப்திக்காக ஏதாவது செய்கிறதாயிருந்தால் அதில் ஸவாபுசெலுத்துகிற எண்ணமே அவர்களுக்குக்கிடையாது. மேலும் அந்தத்தெய்வங்களால் ஏதாவது நஷ்ட முண்டாகுமென்று பயந்தும் அல்லது ஏதாவது இலாப முண்டாகுமென்று ஆசைவைத்தும் அல்லது நேர்ச்சை பிரார்த்தனைகள்போலும் அந்தத் தெய்வங்களுக்குக் காணிக்கை செலுத்துகிறுர்கள். அவைகளுக்கும் நாட்கள் குறிப்புண்டு.

இன்னும் அவர்களுடைய தெய்வங்களின் ஆன்மதிருப்திக்காகச் சிலபோஜன பதார்த்தங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக:— தேவிக்காக சாராயமும் மாம்சமும் வைத்து நைவேத்தியம் செய்வது பெரும் புண்ணியமென்று வாமமார்க்கர் எண்ணுகிறுர்கள். இன்னும் மகாதேவனுக்கு ஊமத்தைப்பூவும், வில்வபத்திர முதலியவைகளும் மிகப்பிரீதியானதாம்.

இன்னு மவர்களின் தெய்வங்களுக்காகப் பிரார்த்தனை செய்யப்பட்ட பொருள்களை எல்லா ஹிந்துக்களும் தின்னலாமென்று அவர்கள் எண்ணினபோதிலும் இறந்துபோன யாதொருவன் பேரால் அல்லது தெய்வத்தின்பேரால் சங்கற்பம் செய்து கொடுக்கப்பட்ட பொருளைப் பிராமணன் தவிர மற்றவர்கள் வாங்குவதும் தின்னுவதும் கூடாதென்று சொல்லுகிறுர்கள். பிராமணன் பிரபுவாயும் இதரஜாதியார் ஏழைகளாயும் இருந்த போதிலும் சரியே. அந்தப்பொருள் பிராமணனுக்கே உரியது.

பிராமணர்களின் முன்னோர்கள் தங்கள் வம்சத்தாரின் ஜீவனத்துக்காக நல்ல உபாயம் செய்திருக்கிறுர்கள். சங்கற்பம் செய்தபொருளை பிராமணர் தவிர மற்றவர்கள் வாங்கக்கூடாதென்று சாஸ்திரங்களில் எழுதிவிட்டார்கள்.

இன்னும் தாங்கள் வணங்கும் தெய்வங்கள் பேரால் கோதுமை, எள், நெய், தேன் முதலிய வஸ்துக்களை நெருப்பிலிட்டுக்கொளுத்துகிறுர்கள் இதற்கு ஹோமம் வளர்க்கிறதென்று பேராம்.

இன்னும் சில தெய்வங்களுடைய பேரையும் இறந்து போனவர்களுடைய பேரையும் சொல்லித் தண்ணீர் அள்ளி யள்ளித் தூவுகிறுர்

கள். அப்படித் தூவும்பொழுது விஷ்ணு, பிரம்மா முதலான தேவர்களின் பேரால் தண்ணீர் தூவ ஆரம்பித்தால் தங்கள் பூணூலே வலது விலாப்புரத்தின் பேரில் ஆக்கிக் கொள்ளுகிறார்கள். இதற்கு விஷ்ணுஸ்வம் என்று பேராம். இன்னும் சிலர் தங்கள் முன்னோர்களாகிய பண்டிதர்களுக்கும் பக்தர்களாகிய ரிஷிகளுக்கும் தண்ணீர் தூவுகிறதாயிருந்தால் பூணூலே மார்பின் பேரில் தொங்கவிட்டுக் கொள்ளுகிறார்கள். இதற்குக் கண்டீயம் என்றுபேராம். இன்னும் தங்கள் பிதுருக்களுக்குத் தண்ணீர் தூவுகிறதாயிருந்தால் பூணூலே இடது விலாவின் பேரில் ஆக்கிக்கொள்ளுகிறார்கள். இதற்குப் பிதுருஸ்வம் என்று பேராம். ஏனென்றால் அவர்கள் பாஷையில் பிதுர் என்பது இறந்துபோன முன்னோர்களுக்குப் பேராயிருக்கிறது. இன்னு மிப்படித் தூவுகிற தண்ணீர் அவர்களுக்குப் போய்ச் சேருகிறதென்று இந்துக்கள் எண்ணியிருக்கிறார்கள். இந்தச் செய்கைக்குத்தான் தற்பணம் என்று சொல்லப்படுகிறது.

ஜனங்களுடைய உபயோகத்துக்காக ஆண்டவனால் படைக்கப்பட்டிருக்கிற பாக்கியங்களை நெருப்பில் போட்டுக் கொளுத்திவிடுகிறதும் கீழே கொட்டிவிடுகிறதும் என்ன மதியீனம். இவ்விதமாய் ஸவாபு செலுத்துகிறதில் யாருக்கு என்ன உபயோகமாயிற்று? ஒரு வஸ்துவில் புண்ணியங் கிடைக்கிறதெல்லாம் அது ஒரு ஏழைக்கு உபயோகப்படுவதினால் தானே? பயன் படும் பொருளைப் பாழாக்குவது பாவமன்றோ? நெருப்பிலிட்ட அந்த வஸ்துக்கள் ஒருவருக்கும் உதவாமல் பாழாய்ப்போயிருக்க அதனால் பாவமணுகு மென்றெண்ணாமல் புண்ணியஞ் சேருமென்றுசைவைப்பது மதிமோசமாயிருக்கிறது *

---

* இந்திரமனன் முறுதாபாதி யென்பவர் இதற்குச் சமாதானமாக ஓமகுண்டத்திலிட்டு எரிக்கப்பட்ட பொருள்களின் சத்தை அக்கினிதேவன் மற்றும் தேவர்களுக்குச் செலுத்துகிறார் என்றும் ஹாபீல் காபீலுடைய காலத்தில் அறுக்கப்படும் குறுபானியாகிய சதகாவை அக்கினிவந்து பக்ஷித்ததாய் உங்கள் மார்க்கத்திலும் கூறப்பட்டிருக்கிறதென்றும் சொல்லுகின்றார்.

அதற்கு மறுப்பு:—நெருப்பிலிட் டெரிந்துபோன பொருள்களின் சத்தாவதென்ன? கோதுமைபோன்ற சடப்பொருள் சாம்பலாய்விட்டது. தேன்போன்ற திரவப்பொருள் தீயாய்ப்போயிற்று. இப்போது காண்பியும் அக்கினிதேவன் மற்றும் தேவர்களுக்குச் சாம்பலைக்கொண்டுபோய்ச் சாப்பிடக் கொடுக்கிறாரா? அல்லது தீயைக்கொண்டுபோய்த் தின்னக்கொடுக்கிறாரா?

ஹாபீல் காபீலுடைய காலத்தில் அறுக்கப்படும் குர்பானியாகிய சதகாவை வாங்கும் ஜனங்களில்லாமையால் அது ஆண்டவன் சமுகத்தில் அங்கிகரிக்கப்பட்ட தென்பதற்கு அறிகுறியாய் அந்தரத்திலிருந்து அக்கினிவந்து அதை பக்ஷித்து வந்தது மெய்தான் என்றாலும் இதற்கும் ஹோமம் வளர்ப்பதற்கும் யாதொரு சம்பந்தமில்லை. ஏனென்றால், இது ஒரு அற்புதமாயும் மனிதர் காணக்கூடாத மறைவான காரியமாயும் மனுஷச் செயலாயல்லாமல் தெய்வச்செயலாய் சம்பவிக்கிறதாயுமிருந்தது. ஹோமம் வளர்ப்பவர்களோ தங்கள் கையினாலேயே இப்பொருள்களை நெருப்பில்போட் டெடுத்துப் பாழாக்குகிறார்கள். சருக்கம். ஸவுத்துல் ஜப்பார் 2-ம் வாலம் 230-முதல் 234-வது பக்கம்வரைபார்க்கவும்.

---

ஆண்டவன் காக்க வேண்டும். ஷைத்தான் எப்பேர்ப்பட்ட துஷ்டனாயிருக்கிறான்! இந்த உபாயத்தினால் மனிதர்களுடைய பொருள்களைபாழாக்கிக் கடைசியில் அவர்களை நரகவேதனையில் அகப்படச் செய்கிறான்.

இன்னும் எந்த நாளில் அவர்கள் இறந்துபோன ஒருவன் பேரால் அல்லது தெய்வங்களின் பேரால் போஜனம் தயார் செய்கிறார்களோ அந்த நாளில் பிராமணன் வந்து அந்த போஜனத்தைச் சாப்பிடாத வரையில் பசியினால் வருந்தும் பாலர்கள் முதல் மற்ற எவருக்கும் அந்தச் சாதத்தைக் கொடுக்கிறதும் அவர்கள் அதைச்சாப்பிடுகிறதும் ஆகாதென்றெண்ணுகிறார்கள்.

ஒருக்கால் இவ்விடத்தில் இந்துக்கள் கீழே எழுதுகிறதுபோல் ஆக்ஷேபிக்கலாம். அதாவது:—

இஸ்லாமானவர்கள் ஸவாபு செலுத்துகிறதிலும் இந்துக்களுடைய எல்லா வழக்கங்களையும் அனுசரிக்கிறார்கள். அதெப்படியென்றால், சில இஸ்லாமானவர்கள் நாள் குறிப்பு செய்துக்கொண்டு மூன்றாம் ஸியாரத்தென்றும், நாற்பதாம் நாள் பாத்திஹா வென்றும் செய்து வருகிறார்கள். அந்த நாற்பதாம் நாள் பாத்திஹாவில் கட்டிலின்மேல் பலவகையான உணவு பதார்த்தங்களை வைத்து இறந்தவர்களுடைய றாகு (ஆன்மா) அவ்விடத்திற்கு வருகிறதென்று எண்ணுகிறார்கள். இன்னும் அந்த நாளில் றாகு வீட்டை விட்டுப்புறப்படுகிறதாயும் சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் ஆறுமாசத்து பாத்திஹாவும் வருஷத்து பாத்திஹாவும் செய்து வருகிறார்கள்.

இன்னும் பீரானபீர் முஹ்யிதீன் அப்துல்காதர் ஜெய்லானியவர்களுடைய பாத்திஹா பதினோராம் தேதியிலும் பதினேழாம் தேதியிலுமே யொழிய மற்ற நாட்களில் செய்கிறார்களில்லை. இன்னும் ஹஜரத்து அமீறுல் ஹம்ஜா றலியல்லாகு அன்கு உடைய பாத்திஹா வராத்து இரவிலும் இமாம் உசைன் றலியல்லாகு அன்கு உடைய பாத்திஹா முகற்றம் மாசம் பத்தாம் தேதியிலும் மாத்திரம் செய்கிறார்கள். இப்படியே முன்னோர்களுக்கு அவர்கள் இறந்ததேதியிலேயே பாத்திஹா ஓதுகிறார்கள்.

இன்னும் சிலபெரியோர்களுடைய றாஹுக்காக சிலஉணவுகளைக் குறிப்பாக்கிவைத்திருக்கிறார்கள். அதெப்படியென்றால், ஷா அப்துல் ஹக் என்பவர்களுக்கு ஹல்வாவின் தோஷாவும், பீவிபாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்களுக்கு தயிர்ச்சோத்தின் சாணுக்கும், ஹஜரத்து பூஅலிகலந்தருக்கு மலீதாவும், ஹஜரத்து அலிறலியல்லாகு அன்கு அவர்களுக்கு இனிப்பரிசிக் கட்டோராகவும், அதன்படியே சோறும் அதுவும் சுடச்சுட இருக்கவேண்டும். அதன் மேல் வாழையிலையும் சிவப்பு நூலும் அகத்தியம்வைக்கிறார்கள். சிலர் அந்த நாளில் நோன்பும் வைக்கிறார்கள் ஹஜரத்து இமாம் உசைன் றலியல்லாகு அன்கு அவர்களுக்கு ஷர்பத்தும், செய்யிது சுல்தான் என்பவர்களுக்கு உரொட்டி அல்லது எள்ளடையும், ஷைக் பரீது என்பவர்களுக்கு இனிப்புக் கிச்சிடியும், பீர்நபவி என்பவர்களுக்கு உப்பும் இன்னு மிப்படிப்போலவே மற்றும்பெரியோர்கள் பேரால் ஒவ்வொரு வஸ்துவைக் குறிப்பாக்கிவைத்திருக்கிறார்கள்.

இன்னும் சிலர் இன்ன பெரியோரின் காணிக்கை ஒண்ணேகால் ரூபாயென்றும், இன்னாருக்கு ஐந்து பைசாவென்றும், இன்னாருக்கு ஒண்ணேகால் மன்உரொட்டியென்றும் இன்னாருக்கு ஐந்துசேர் உரொட்டியென்றும், இன்னாருக்கு மூன்று பலகனைகளென்றும் இப்படிக் குறிப்பாக்கி வைத்திருக்கிறார்கள்.

இன்னும் சிலர் இந்தக் காணிக்கைகளை வாங்கவும் தின்னவும் சிலரைச் சொந்தப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அதெப்படியென்றால் ஷாஅப்துல் ஹக் உடையதோஷாவை உக்கா குடிக்காதவன் தின்னவேண்டுமென்றும், அதை ஒலுச்செய்துகொண்டு தின்ன வேண்டுமென்றும், பீவிபாத்திமா அவர்களுடையதயிர்ச்சோற்றைப்பெண்பிள்ளைகளே தின்கவேண்டுமென்றும், அவர்களும் மறுவிவாகம் செய்யாதவர்களாயிருக்கவேண்டுமென்றும், ஹஜரத்து அப்பாஸ் உடைய காணிக்கை செய்யிதுமார்களே தின்கவேண்டுமென்றும், கந்தூரியின் கா

ணிக்கையைக் கன்னிகையான பெண்களே தின்ன வேண்டுமென்றும், அஸ்ஹாபு கஹபு என்பவர்களுடைய தோஷாவை ஏழுபேர்சேர்ந்து தின்கவேண்டு மென்றும், அதில் ஒரு நாய்க்கும் கொஞ்சம் போட வேண்டுமென்றும் எண்ணுகிறார்கள்.

இன்னும் இந்துக்கள் தஸராவில் (ஆனிமீ தசமியில்) தயிர்ச்சாதமும், தீபாவளியில் இனிப்புப் பலகாரங்களும், செவ்வா, ஞாயிறு இக் கிழமைகளின் விரதங்களில் இனிப்பான பண்டங்களும் புரட்டாசிமீ நவமியில் சேவியானும் இன்னு மிப்படியே சில தினங்களுக்கு சில உணவுகளைக் குறிப்பாக்கி வைத்திருக்கிறது போல் இஸ்லாமானவர்களும் வராத்து இரவில் ஹல்வாக்களியும் முகற்றம்மீ த்தில் ஷர்பத்தும் ஈதுகளில் சேவியானும், மக்தூமே ஜிஹானியான்களுடைய நோன்பில் இனிப்பு ரொட்டிகளும் இவைகளைத் தவிர இன்னும் சில தினங்களுக்குக் குறிப்பான உணவுகளைச்செய்து வருகிறார்கள்.

இன்னும் சில இஸ்லாமானவர்கள் பெரியோர்களுக்குக் காணிக்கை செலுத்துகிறது அவர்கள் நம்முடைய ஜீவனத்திலும் பிள்ளைகளிலும் பரக்கத்துண்டாக்குவார்கள் என்று அல்லது நம்முடைய எண்ணங்களை நிறைவேற்றுவார்கள் என்று ஆசைவைத்தும் அல்லது நாம் அவர்களுடைய காணிக்கையைச் செலுத்தாவிட்டால் அவர்கள் நமக்கு இடையூறு உண்டாக்குவார்களென்று பயந்தும் தான் செலுத்துகிறார்கள்.

இன்னும் சிலர் ஸவாபு செலுத்துகிறது கட்டாயமாய் கடன் போல் எண்ணுகிறார்கள். ஒருவன் கியார்வீன் முதலான பாத்திஹாவை விட்டுவிட்டால் அவனை தூஷிக்கிறார்கள். இன்னும் சிலர் நேர்ச்சை பாத்திஹா முதலிய காரியங்களைச் செய்கிறதாயிருந்தால் அதற்குப் புதுப்பாண்டங்கள் அவசியமாய் வேண்டு மென்றெண்ணுகிறார்கள்.

இந்துக்கள் சுருநா என்ற போஜனத்தின் பேரில் அபிஷ்ரமன் என்னும் பண்டிதனைக் கூப்பிட்டு வேதம் ஓதச்செய்கிறது போல் இஸ்லாமானவர்களும் முல்லாவைக் கூப்பிட்டு சோத்தின்மேல் கத்தம் ஓதச்செய்கிறார்கள். முல்லாவானவர் அந்த சோத்தின் பேரில் கத்தம் ஓதாதவரையில் அந்த சோத்தில் கொஞ்சமாவது ஒருவருக்கும் உண்ணக் கொடுக்கிறார்களில்லை. இன்னும் இந்துக்கள் சங்கல்பம் செய்கிறவேளையில் வலதுகையில் தண்ணீர் எடுத்துக்கொள்ளுகிறது போல் இஸ்லாமானவர்களும் கத்தம் ஓதுகிறவேளையில் சோற்றுடன் தண்ணீர் வைக்கவேண்டிய தவசியமென்றெண்ணுகிறார்கள் இந்துக்கள் தங்கள் முன்னோர்களுக்குத் தர்ப்பணம்செய்து தண்ணீர் செலுத்துகி

றதுபோல் இஸ்லாமானவர்களும் முகர்றம் மாசத்தில் ஹஜரத்து இமாம் உசைன் றலியல்லாகு அன்கு அவர்களுடைய றூகின் திருப்திக்காக பூமியின்மேல் குடங்குடமாய்த் தண்ணீர் ஊற்றுகிறூர்கள்.

இன்னும் இந்துக்கள் எப்படித்தங்கள் தேவர்களின் பேரால் நெய், தேன் முதலான பொருள்களை நெருப்பிலிட்டு அதற்கு ஹோமம் வளர்ப்பதென்று சொல்லுகிறூர்களோ அப்படியே இஸ்லாமானவர்களும் தங்கள் பெரியோர்களின் பேரால் ஆயிரக் கணக்கான விளக்குகளைக் கொளுத்தி அதில் தடையங் தடையங்களாகவும் மணுக்கள் மணுக்களாகவும் எண்ணெயைவிட்டெரித்து ஆண்டவனுடைய பாக்கியத்தை வீணுக்கி அதற்கு றவுஷனி என்று பேர்வைத்திருக்கிறூர்கள்.

இன்னும் சிலர் கத்தம்செய்கிற வேளையில் பெரியோர்களுடைய அர்வாஹுகள் அவ்விடத்திற்கு வருகிறதென்றெண்ணி எழுந்து கைகட்டி நிற்கிறூர்கள். இதைத்தவிர இவ்வகையான சடங்குகள் இன்னும் அநந்தம் இஸ்லாமானவர்களில் வழங்கப்படுகின்றன. அவைகளை விவரிக்கிறதா யிருந்தால் பேச்சு அதிகரிக்கும்.

இதற்கு மறுமொழியாவது:—இந்தக் காரியங்களெல்லாம் எங்கள் மார்க்க புஸ்தகங்களால் ஸ்தாபிக்கப் பட்டவைகளல்ல. அறிவில்லாத ஜனங்கள் ஒருக்கால் இந்துக்களுடைய சடங்குகளைப்பார்த்து இவைகளை ஏற்படுத்தியிருக்கலாம்.

எங்கள் மார்க்கத்தில் இதரமார்க்கத்தாருக்குச் சொந்தமாயிருக்கிற சடங்குகளைச்செய்வது கூடாது. ஏனென்றூல் எங்கள் ரசூல் நாயகமவர்கள் من تشبه بقوم فهو منهم "எவன் எந்தக் கூட்டத்தைக்கொண்டு ஒப்பானுனே அவனும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவனுகும்" என்று திருவுளமாயிருக்கிறூர்கள். இந்தப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற கெட்ட சடங்குகளுக்கு எங்கள் மார்க்கத்தில் யாதொரு ஆதாரமில்லை. ஆதலால் நாங்கள் அச்சடங்குகளை பிதுஅத்தென்றும் இந்துக்களைக்கொண்டு ஒப்பாக்குகிறவைகளென்றும் எண்ணியிருக்கிறேம். அவைகளிற் சிலது ஹறுமாயும் சிலது மக்றூகாயும் சிலது ஷிருக்காயுமிருக்கின்றன. ஆகவே எங்கள் மார்க்கத்தில் இல்லாதகாரியங்களைப் பற்றி ஆக்ஷேபனை செய்கிறதினுல் அந்த ஆக்ஷேபம் எங்கள் மார்க்கத்தைச் சாராது.

## இந்துக்களுடைய கேள்வி.

உங்கள் இஸ்லாம் மார்க்கத்தில் இதர மார்க்கத்தாருடைய வழக்கங்களைச் செய்யக் கூடாதென்று நீங்கள் சொல்லுகிறீர்களே அப்படி

யானால் இதரமார்க்கத்தார் போஜன மருந்துகிறார்கள். தண்ணீர் குடிக்கிறார்கள், நித்திரைசெய்கிறார்கள். பசித்தவர்களுக்கு அன்னங் கொடுக்கிறார்கள், இன்னு மிப்படியே அநேககாரியங்களைச் செய்கிறார் கள் ஆதலால் நீங்கள் இந்த வழக்கங்களை விட்டுவிடவேண்டுமே?

## அதற்கு விடை.

இதரமார்க்கத்தாருடைய எந்த வழக்கம் எங்கள் மார்க்கத்தில் கூடாதென்றால் எதற்கு எங்கள் மார்க்கத்தில் யாதொரு ஆதாரமில்லை யோ இன்னும் எது இதர மார்க்கத்தாருக்கே உரித்தாயிருக்கிறதோ அதை மாத்திரந்தான் செய்யக்கூடாது மற்றப்படி எங்கள் மார்க்க ஆதாரத்தின்மேல் நிலைபெற்றவைகளும் எங்களுக்கும் இதரமார்க்கத் தாருக்கும் பொதுவாயிருக்கிற வைகளுமான காரியங்களை ஏன் செய் யமாட்டோம்?

## 3 - வது அத்தியாயம் வியவகாரம் அதாவது லௌகீக சம்பந்தமான விஷயங்களைக் குறித்தது.

இதில் ஆறுபிரிவுகள் அடங்கி யிருக்கின்றன.

### 1 - வது பிரிவு விவாகத்தைக் குறித்துப் பேசுவது.

எங்கள் மார்க்கத்தில் விவாகம் என்பது யாதொரு பெண்பிள்ளை யானவள் தன்னை யாதொரு ஆண்பிள்ளையின் ஐக்கியத்துக் குள்ளாக்கு கிறதும் அந்த ஆண்பிள்ளை அதை ஒப்புக்கொள்ளுகிறதுமாம். அந்தப் பெண்பிள்ளை பாலிகாகாத (பிரவிடையாகாத) சிறுமியா யிருந்தால் அ வளின் தகப்பன் அல்லது சகோதரன் முதலான வலிக்காரன் அவளை விவாகம்செய்து கொடுக்கவேண்டும். இந்த விவாக பூர்த்திக்காக இ ரண்டுபேர் சாக்ஷியிருக்க வேண்டும். பெண்பிள்ளைக்கு மஹர் நியமிக்க வேண்டும். விவாகம் செய்யும் போது கோத்பா ஓதுவது சுன்னத் தாயிருக்கிறது. கொத்பா என்பது ஆண்டவனுடைய புகழும் நபிய வர்களுடைய தீர்க்கதரிசனமும் சில உபதேசங்களும் அடங்கிய ஒரு வாசகத்திரட்டேயாம். பின்பு மாப்பிள்ளை, பெண் இருவருக்கும் து ஆச்செய்கிறது (ஆசீர்வாதம் கூறுகிறது) சுன்னத்தாயிருக்கும்.

விவாகம் முடிந்தபின் மாப்பிள்ளையானவன் இந்த பாக்கியத்தின் நன்றியறிதலுக்காக ஏழைகளுக்கும், சுத்தத்தாருக்கும் சிநேகிதர்களு க்கும் விருந்துசெய்ய வேண்டியது. இந்த விருந்துக்கு வலீமா என் றுபேர்.

இன்னும் விவாகத்தில் மாப்பிள்ளை, பெண் இருவரும் அழகுக் காக (பேர் பெருமைக்காக அல்ல) நல்லஉடைகளை உடுக்கிறதும் நல்ல வாசங்களைப் பூசுகிறதும் ஆகும்.

இன்னும் புருஷன் தன் பெண்ஜாதியைத் தலாக்கு சொல்லித்திரஸ்கரித்து விட்டாலும் அல்லது புருஷன் இறந்து போனாலும் * இத்தாநாட்கள் கழித்து அந்தப் பெண்பிள்ளை வேறொரு புருஷனை விவாகம் செய்து கொள்வதாகும். மேலும் அது மிக நன்மையாயிருக்கிறது.

இந்துக்களிடத்தில் பிரபல்லியமான விவாகமாவதென்னவென்றால், பெண்ணின் தகப்பன் போன்ற சொந்தக்காரன் அந்தப் பெண்ணை ‡ சங்கற்பம் செய்து யாதொரு புருஷனுக்குக் கொடுக்கிறதும் அந்தப் புருஷன் அப்பெண்ணை ஸ்வஸ்த்து என்ற சொல்லினால் ஒப்புக்கொள்ளுகிறதுமாம்.

பின்பு இந்த விவாக பூர்த்திக்காக நெருப்பை சாக்ஷியாக்கிக் கொள்ளுகிறார்கள். அதெப்படியென்றால் நெருப்பைவளர்த்து புருஷன், பெண் இருவரையும் அதைச் சுற்றிவரும்படி செய்கிறார்கள்.

நெருப்பை சாக்ஷியாக்கிக் கொள்வதில் என்னபயனிருக்கிறதோ தெரியவில்லை. மனிதன் சாக்ஷியாயிருந்தால் அவன் சாக்ஷியம் ஒரு சமையத்தில் உபயோகப்படும். நெருப்போ உயிரும் புத்தியுமில்லாத ஒரு பொருளாயிருக்கிறது.

இவ்விடத்தில் யாதொரு ஹிந்து, "நெருப்புக்கதிகாரியாகிய அக்கினிபகவான் அறிவுடையவரா யிருப்பதால் நாங்கள் அவரையே சாக்ஷியாக்கிக் கொள்ளுகிறோ" மென்று சொல்லும் பக்ஷத்தில் அதற்கு மறுமொழியாவது:—மனிதர்களைச் சாக்ஷியாய்க் கோரிக்கொள்வதில் ஒரு சமையம் அதிகாரியினிடம் வியாச்சியம் போகும் பக்ஷத்தில் அப்பொழுது அந்த சாக்ஷிகள் உபயோகப்படுவார்கள். கண்பார்வைக்குத் தெரியாததும் சந்தேக முள்ளதுமான தேவதைதையைச் சாக்ஷியாய்க் கோருவது என்ன உபயோகத்திற்காகவோ?

இந்துக்களின் விவாகத்தில் அவர்கள் செய்கிற சடங்குகள் முழுமையும் புத்திக்கு விரோதமானவைகளாகவே யிருக்கின்றன. அவைகளிற் சில வாவன:—மாப்பிள்ளை, பெண் இருவருக்கும் கங்கணம், சேராக்கள் கட்டுகிறதும் அன்னிய பெண்பிள்ளைகள் கூட்டங்கூடி எழு

* இத்தாநாட்கள் என்பது கர்ப்பசந்தாபம் நீங்கும்பொருட்டு அவள் காக்கவேண்டிய நாட்களாம்.

‡ சங்கற்பமென்பது வலதுகையில் தண்ணீரெடுத்துக்கொண்டு ஒருவருக்கு ஒருபொருளைக் கொடுத்துவிட்டதாய்ச் சொல்வது. இதன் விபரம் 2-ம் அத்தியாயம் 6-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

நாள் அல்லது ஐந்துநாள் அல்லது மூன்று நாள் ஏழு மங்கிலியஸ்திரிக ளின் கையால் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் நலங்குபூசுகிறதும், எ ண்ணெயிடுகிறதும், கோலம்போடுகிறதும், யாதொரு அவசியமுமில்லா மல் யானை, குதிரைமுதலிய வாகனங்களின்பேரில் ஏறி கொட்டுவாத்தி யங்களுடன் ஊர்கோலம் வருகிறதும் தாசிகளைவைத்து நாட்டிய மாட ச் செய்கிறதும், வாணவேடிக்கைகள் செய்கிறதும், மேளதாளம் தா சா தப்பட்டி முதலியவைகளைக் கொட்டச் செய்கிறதும் சம்பந்தி ஜன ங்கள் ஒருவருக்கொருவர் பரிகாசம் பண்ணிக் கொள்ளுகிறதும் அ ன்னிய பெண்பிள்ளைகள் மாப்பிள்ளையைச் சூழ்ந்துக் கொண்டு செல் லப் பரியாசம் பண்ணுகிறதும், பலவகையான விடிகதைகள் போடுகி றதும், பெண்ணின் ஜஊத்தாவுக்கு மாப்பிள்ளையை வந்தனம்செய்யச் சொல்லுகிறதும் இவைகளைத்தவிர இன்னும் அநேக வீண் சடங்குக ளையும் செய்கிறார்கள். இப்பேர்ப்பட்ட காரியங்களில் என்னபிரயோ ஜன மிருக்கின்றது. மேலும் பொருளை வீணில் அழிப்பதும் அநேக மானங்கெட்ட வேலைகளுமா யிருக்கின்றன.

இவ்விடத்தில் யாதொரு ஹிந்து மேற்சொன்ன சடங்குகளிற் சி ல சடங்குகளைச் சில இஸ்லாமானவர்களும் செய்கிறார்களேயென்று சொல்லும்பக்ஷத்தில் அதற்கு மறுமொழியாவது:—எங்கள் மார்க்க த்தில் இக்காரியங்களெல்லாம் தப்பானவைகளும் ரத்தானவைகளுமா யிருக்கின்றன. தெரியாத மூடர்கள் ஹிந்துக்கள்செய்கிற சடங்குகளை ப்பார்த்துத் தாங்களும்செய்யக் கற்றுக்கொண்டார்கள். அவர்கள் செய்கையை ஆதாரமாகக்கொண்டு எங்கள் மார்க்கத்தின்பேரில் குற் றங் கூறத்தகாது.

இன்னும் யாதொரு ஹிந்து மேற்சொன்ன சடங்குகளிற் சிலது எங்கள் சாஸ்திரங்களிலுமில்லை தெரியாதஜனங்கள் தாங்களே அவை களைச் செய்கிறார்களென்று சொல்லும்பக்ஷத்தில், அதற்கு மறுமொ ழியாவது:—உங்களில் எத்தனை பண்டிதர்க ளிருக்கிறார்களோ அவர்க ளெல்லாரும் அந்தச் சடங்குகளைச்செய்யச் சம்மதித்தும் அதைக் கு ற்றமாக எண்ணுமலிருக்கிறார்கள். எங்கள் மார்க்கத்திலுள்ள ஆலி ம்களோ வீண் சடங்குகள் செய்கிறதைப்பற்றி ஆக்ஷேபித்துக்கொண் டும் கண்டிப்பாய் நிராகரித்துக்கொண்டும் அச்சடங்குகளை அருவருப் பா யெண்ணிக்கொண்டு மிருக்கிறார்கள்.

இனி ஹிந்துக்களுடைய பிரபல்லியமான மார்க்கத்தில் யாதொ ரு பெண்பிள்ளையின் புருஷன் இறந்துபோனல் அவள் மறுவிவாகம் செய்து கொள்ளக்கூடாது. ஆனல் அவர்களில் தாழ்ந்தஜாதிபெண்

றெண்ணப்படுகிறவர்கள் கைப்பெண்ணை மறுபுருஷனுக்கு விவாகம்செய்துகொடுத்து விடுகிறார்கள். அவர்களில் உயர்ந்தஜாதியென்று சொல்லப்படுகிறவர்கள் அறவே இந்தக்காரியம் ஆகாதென்று சொல்லுகிறார்கள். அந்தப் பெண்பிள்ளை சிறுவயசில் புருஷனை யிழந்துவிட்டாலும் பின்பு வயசு முழுமையும் அப்படியே காலங்கழிக்க வேண்டும். இதென்ன அந்நியாயமாயிருக்கிறது பாருங்கள். தாரமிழந்த ஒரு ஆண்பிள்ளைக்கு மறுவிவாகம் செய்விப்பதில் பெரியடம்பம் செய்கிறார்கள். பேதையான பெண்பிள்ளையை மறு விவாகம் செய்யவிடாமல் பெருங்கொடுமை செய்கிறார்கள். அவள் ஒன்றும்செய்ய வகையில்லாமல் காலமெல்லாம் ஏங்கி ஏங்கிப் பெருமூச்சுவிட்டு ஆ! என்விதி யிப்படியாயிற்றேயென்று இக்கொடிய பாவிகளுக்காக மனம் பொறுத்துக் கொண்டிருக்கிறாள்.

பெண்பிள்ளைக்குப் புருஷனில்லாமலிருப்பதில் அநந்தங் கெடுதிக ளிருக்கின்றன. அநேக விதவைகள் விபசாரத்தில் விழுந்துவிடுகிறார்கள். பின்வரும் மானபங்கத்துக்குப்பயந்து சில விதவையான ஸ்திரீகள் விபசாரத்தில் விழாமலிருந்தாலும் கெட்ட எண்ணங்கள் வராதபடி அவர்கள் தங்கள் மனதைக்காப்பது மஹாகஷ்டம்.

ஆண்டவனுடைய ஆழிய பூராயத்தை நோட்டமிடவேண்டும். அதென்னவென்றால், ஆணுக்கும் பெண்ணுக்கும் விவாகம் செய்விப்பதில் உலகத்தில் ஜனங்கள்பெருகி, அவர்கள் ஆண்டவனுக்கு வணக்கம் செய்வதினால் எவ்வளவு பெரிய பிரயோசன மிருக்கிறது! ஆண் அல்லது பெண்ணை விவாகமில்லாமல் சும்மா விட்டுவிடுகிறது ஆண்டவனுடைய பொருத்தத்துக்கு முற்றிலும் விரோதமானதாயிருக்கிறது ஏனென்றால், உதாரணமாக ஒரு எஜமானன் தன் வேலைக்காரர்களுக்குக் கொஞ்சம் நிலத்தைவிட்டு அதிற் பயிரிடும்படி உத்திரவுசெய்தால் அவ்வேலைக்காரர்கள் அந்நிலத்தை வெறுமையாய்ப் போட்டு விட்டு அதிற் பயிர்செய்வது நன்மையல்லவென்று எண்ணங் கொள்வார்களானால் சந்தேகமில்லாமல் அந்த எஜமானன் அவ்வேலைக் காரர்கள்மேல் கோபங்கொள்வானல்லவா? அப்படியே ஆண்டவன் பெண்பிள்ளைகளை ஆண்பிள்ளைகள் விவாகம்செய்து அதனால் சந்தானவிர்த்தி யாகவேண்டுமென்ற நோக்கமாகவே அவர்களைப் படைத்திருக்கிறான். ஆகவே ஒருவன் யாதொரு பெண்பிள்ளைக்கு விவாகம் செய்விக்காமல் சும்மா விட்டுவிடுவானாகில் அவனும் ஆண்டவனுடைய கோபத்துக்குள்ளாகுவான்.

ஒருக்கால் இவ்விடத்தில், அஷ்ராபென்ற மேன்மக்களான முஸ்லிம்களும் கைம் பெண்களை மறுவிவாகம் செய்யவிடுகிறார்களில்லையே என்று ஹிந்துக்கள் ஆக்ஷேபிக்கலாம். அதற்கு மறுமொழியாவது. எங்கள் மார்க்கத்தில் மறுவிவாகம் செய்துகொள்ளத் தடை கிடையாது. மேலும் அது சுன்னத்தாயிருக்கிறது. ஹிந்துக்களுடைய சகவாசத்தினால் ஹிந்துதேசத்தில் வசிக்கும் சில இஸ்லாமானவர்கள் தங்கள் மதியீனத்தினால் கைம்பெண்களுக்கு மறுவிவாகம் செய்விக்காமலிருக்கிறார்கள். அவர்களில் கொஞ்சமாவது புத்தியுள்ளவர்களுக்கு இந்தவழக்கம் மிகக்கெட்டதென்று தோன்றும். அநேகபுத்திமான்கள் கைம்பெண்களாயிருக்கிற தங்கள் சகோதரிகளுக்கும் குமாரத்திகளுக்கும் மறுவிவாகம் செய்விக்கிறார்கள்.

இன்னும் மக்கா, மதீனா முதலிய அறபு தேசம் முழுவதிலும், றாம், பாரிசு, துருக்கிஸ்தானம் முதலிய எல்லாச் சீமைகளிலும் அஷ்ராபென்ற மேன்மக்களான முஸ்லிம்களெல்லாம் தங்கள் கைம்பெண்களுக்கு மறுவிவாகம் செய்வித்து வருகிறார்கள். ஒருபுருஷன் இறந்துபோனாலும் அல்லது தலாகுசொல்லி திரஸ்கரித்து (நீக்கி) விட்டாலும் அவளை வேறுபுருஷனுக்கு விவாகம்செய்விக்கிறார்கள். அந்த வேறு புருஷனும் இறந்துபோனால் மூன்றாவது புருஷனுக்கு அவளை விவாகம்செய்து கொடுக்கிறார்கள். இப்படியே ஒரு பெண்பிள்ளைக்கு எத்தனை விவாகமானபோதிலும் அவர்களதைக் குறைவாயெண்ணுகிறதில்லை. ஹிந்துதேசத்தில் மாத்திரந்தான் இந்த ஆபத்திருக்கிறது இது உங்கள் சகவாசத்தின் பலனேயாம்.

எந்த ஜனங்கள் மறுவிவாகத்தைக் குறைவாகவும் கெட்டதாகவுமெண்ணுகிறார்களோ அவர்கள் முஸ்லிம்களல்ல. மேலும் ஹிந்துக்களின் சகோதரர்களாயிருக்கிறார்கள். அவர்களை அஷ்ராபென்றல்ல அஜ்லாப். (அற்பர்கள்) என்று சொல்லத்தகும்.

இந்தஜனங்களுடைய விஷயத்தில் மவுலானா ஷா அப்துல் அஸீஸ் றச்மத்துல்லாகி அலைகி தங்கள் ரிஸாலயே நிகாஹெஸானி என்ற கிதாபில் எழுதியிருக்கிறதென்னவென்றால், "இந்த ஜனங்கள் தங்களை செய்யிதென்றும் ஷைகு என்றும் எண்ணாமல் ரசபுத்திரர், ராங்கடர் முதலான ஹிந்துதேசத்தின் காபிர்களில் நின்றுமுள்ளவர்களென்று எண்ணிக்கொள்ளக்கடவர்" என்பதே.

இன்னும் இக்காலத்தில் மவுலானாஹாபிஸ் அஹ்மது அலி விஹாராம் பூரியவர்களும் கைம்பெண்களின் விவாக விஷயத்தில் ஒருபத்வாவெழுதியிருக்கிறார்கள். அதன்கருத்தென்னவென்றால் பெண்

பிள்ளைக்கு மறுவிவாகம் செய்விப்பதை எவன் குறைவாய் நினைக்கிறானோ அவன் காபிராகிறான் என்பதே. இந்த பத்வாவில் நாற்பது ஆலிம்களுக்கு மேற்பட்டவர்கள் முத்திரையும் கையொப்பமும் வைத்திருக்கிறார்கள்.

## ஹிக்காயத்து.

ஒருநாள் ஒரு ஹிந்துவானவர், "ஒரு பெண்பிள்ளைக்கு வாய்த்தபுருஷன் அவளுக்குப் பரமேஸ்வரன்போலிருக்கிறான்" என்றும் பரமேஸ்வரன் ஒருவனாயிருப்பதுபோல் பெண்பிள்ளைக்கும் புருஷன் ஒருவனாயிருக்க வேண்டுமென்றும் சொன்னார். அதற்கு மறுமொழி என்னவென்றால், உங்களுடைய இந்தவார்த்தை உபயோக மற்றதும் ஏற்றுக்கொள்ளத் தகாததுமாயிருக்கிறது. மனிதன் ஒருபோதும் ஆண்டவன் போல் ஆகிறதில்லை. அப்படியே பாவனையில் பெண்ஜாதிக்குப் புருஷன் பரமேஸ்வரனாயிருக்கிறான் என்று நீங்கள்நினைக்கும் பக்ஷத்தில் நிலையில்லாத இப்பேர்ப்பட்ட பரமேஸ்வரன் எப்பொழுது மரணத்தின் கையிலகப்பட்டுத் தன்னுடைய பரமேஸ்வர வேலையை விட்டு நீக்கப்பட்டானோ அப்பொழுது அவனுக்குப் பதிலாகவே வேறொருவன் நியமிக்கப்பட்டால் என்ன ஆச்சரியம். மேலும் நீங்கள் சொல்லுகிறபடி முந்தின பரமேஸ்வரன் இறந்துபோனால் அவனுக்குப்பதில் வேறொரு பரமேஸ்வரன் வரவேண்டிய தவசியமாயிருக்கிறது. இல்லாவிட்டால் அந்தப் பெண்பிள்ளைக்குப் பரமேஸ்வரனில்லாத நிமித்தம் என்னகெடுதி சம்பவிக்குமோ தெரியாது.

இன்னும் ஹிந்துமார்க்கத்தில் ஆச்சரியமான ஒரு மஸ்அலா உண்டு. அதென்னவென்றால் மூத்த சகோதரனுக்கு விவாகம் செய்யுமுன்னே இளைய சகோதரனுக்கு விவாகம் செய்வது காராம் பசுவைக்கொன்ற பாவம் போலாம். இன்னும் இராஜனாயிருக்கிறவன் தவிர மற்றவன் இரண்டு ஸ்திரிகளை விவாகம் செய்து கொள்ளக்கூடாதாம்.

இன்னும் மகாபாரதம் ஆதிபருவத்தில் எழுதப்பட்டிருக்கிறதென்னவென்றால், ஒருபெண்பிள்ளை மாத உதிரத்தினின்று சுத்தமாகித் தன்னைச் சேரும்படி அவள் ஒருவனைக்கூப்பிட்டு அவன் அவளைச்சேரவில்லையானால் அவன் கொலைசெய்தவன்போல் ஆயினான், என்பதே.

இன்னும் ஹிந்துக்களுடைய மார்க்கத்தில் எட்டு ஒன்பது வகையான விவாகங்களுண்டு, அவற்றுள் ஒருவகை:—யாதொருக்ஷத்திரியன் யாதொருவனுடைய புத்திரியைப் பலாத்காரமாய்ப்பிடித்துக் கொள்ளுகிறதாம் அதெப்படியென்றால் பீஷ்மர்தம் சகோதரனாகிய விசித்

திர வீரியனுக்காக பனூரசுடைய ராஜகுமாத்திகளைப் பலாத்காரமாய்ப் பிடித்துக் கொண்டுவந்தது போலவாம். இதை குறித்த சரித்திரமும் இவ்வகையான விவாகத்தின் விபரமும் மகாபாரதம் ஆதிபருவத்தில் எழுதப்பட்டிருக்கிறது, இப்புத்தகத்தின் 1-வது அத்தியாயம் 2-வது பிரிவிலும் இச்சரித்திரத்திற்கொஞ்சம் சொல்லப்பட்டிருக்கிறது.

## 2-வது பிரிவு சில ஹலாலான வஸ்துக்களையும். ஹறாமான வஸ்துக்களையும் குறித்துப் பேசுவது.

எங்கள் மார்க்கத்தில் பூமியில் முளைக்கும் தர்க்காரி பதார்த்தங்கள், கீரைகள், பலவகைதானியங்கள், முதலிய இவைகளெல்லாம் * ஹலாலானவைகளா யிருக்கின்றன. ஆனால் எந்தப் பொருள்கள் மனிதனுடைய தேகத்தைக் கெடுக்கிறவைகளாயும், கொல்லுகிறவைகளாயும், போதையுண்டாக்குகிறவைகளாயு மிருக்கின்றனவோ உதாரணமாக:—பாஷாணம், அபினி, கஞ்சா, பங்கு இன்னுமிவைபோன்ற விஷமுள்ள பொருள்கள், மண் இவைகளெல்லாம் † ஹறாமானவைகளா யிருக்கின்றன. வேகாத பச்சைவெள்ளைப் பூண்டு, பச்சை வெங்காயம், இன்னு மிவைபோன்ற துர்வாசமுள்ளபொருகள் ‡ மக்றூஹானவைகளா யிருக்கின்றன,

ஹிந்துக்களுடைய மார்க்கத்தில் தானியங்கள், தர்க்காரி பதார்த்தங்கள் இவைகளில் பனிப்பயர், சிவப்பு முள்ளங்கி, வெள்ளைமுள்ளங்கி இவைகள் மனிதனுடைய தேகத்தைக் கெடுக்காதவைகளும் கொல்லாதவைகளும் போதையில்லாதவைகளும் துர்வாசமில்லாதவைகளுமா யிருக்க வெள்ளைப்பூண்டு, வெங்காயங்கள் எப்படியோ அப்படியே இவைகளையும் தின்னக் கூடாதாம்.

இன்னும் நம்முடையமார்க்கத்தில் எவ்வகையான சாராயமும் எல்லாருக்கும் ஹறாமாயிருக்கிறது. ஹிந்துக்களுடைய மார்க்கத்திலோ சாராயம் மூன்றுவகைப்பட்டிருக்கிறது. ஒன்று அரிசி முதலிய தானியங்களால் செய்யப்பட்டதும், ஒன்று கனிவர்க்கங்களால் செய்யப்பட்டதும், மற்றொன்று வெல்லத்தினால் செய்யப்பட்டதுமாம். பிராமணருக்கு இம்மூவகைச் சாராயமும் ஹறாமாயிருக்கின்றது. க்ஷத்திரியருக்கும் வைசியருக்கும் முந்தின இரண்டுவகைச் சாராயங்களும் ஹ

---

* ஹலாலானவைகள் - புசிக்க விலக்கில்லாத வைகள்.

† ஹறாமானவைகள் - புசிக்க விலக்குள்ள வைகள்.

‡ மக்றூஹானவைகள் - விலக்கில்லையானாலும் புசிக்கத் தகாதவைகள்.

றும், 3 - வது வகை ஆகும், சூத்திரருக்கோ எல்லா வகைச் சாரா யமும் ஹலாலாயிருக்கின்றது. வாமமார்க்கர் மதுபானம் பண்ணுவது எல்லாருக்கும் ஆகுமென்றும் பெரும்புண்ணியமென்றுஞ் சொல்லுகிறுர்கள்.

இன்னும் அவர்கள் மார்க்கத்தில் ஒருவன் சத்தியம் பண்ணுகிற வேளையில் பாஷாணத்தைத் தின்னுகிறது ஆகுமாயிருக்கின்றது. இந்தச்சங்கதி பின்னுல் சொல்லப்படும்.

இவ்விடத்தில் கொஞ்சம் கவனிக்கவேண்டிய தென்னவென்றுல், சாராயம் குடிக்கக்கூடாதென்பது அதில் போதை யுண்டாயிருப்பதினுல்தான். ஏனென்றுல், போதையினுல் மனிதனுடைய சுபாவமான புத்தி தன்னியல்பிலிராமல் கெட்டுப்போகின்றது. மார்க்க சம்பந்தமும் உலக சம்பந்தமுமான சகல காரியங்களுக்கும் புத்தியே ஆதாரமாயிருக்கின்றது. ஆதலால் எந்த வஸ்துவை உபயோகப் படுத்துவதில் புத்தி பேதப்படுமோ அந்தவஸ்து ஹறுமாயிருக்க வேண்டிய தவசியம்.

இன்னும் சாராயம் ஹறுமென்பது அதை உற்பத்திசெய்யப்படும் பொருள்களை நோக்கியா? அல்ல. ஏனென்றுல், அரிசி, கொடிமுந்திரி, வெல்லம் இவைகளெல்லாம் ஹலாலாயிருக்கின்றன. எவரும் இவைகளை ஹறுமென்று சொல்லக்காணேம். பின்பு என்ன காரணத்தினுல் சாராயம் ஹறுமாயிற்றென்றுல் அதிலிருக்கும் போதையினுலேயே அது ஹறுமாயிற்று. ஆகவே எவ்வகையான சாராயத்தினும் போதையிருப்பதால் அது எல்லா ஜனங்களுக்கும் ஹறுமாகவேண்டும். ஏனென்றுல், எல்லா ஜனங்களுக்கும் புத்தியிருப்பதாலும் போதையானது புத்தியைக் கெடுக்கும்பொருளா யிருப்பதாலுமேயாம். அப்படியிருக்க இன்னவகை சாராயம் இன்னருக்கு ஹறுமென்றும் இன்னருக்கு ஹலாலென்றும் குறிப்பிடவேண்டிய காரணம் என்ன? இன்னும் சத்தியம்செய்கிறவனுக்குப் பாஷாணம் தின்னக்கொடுப்பது என்ன ஞாயம்?

எங்கள் மார்க்கத்தில் எந்தத் தொழிலாளிகள் வீட்டிலும் போஜனம்செய்யலாம். ஆனுல் அவர்களின் சம்பாத்தியம் ஹறுமானதொழிலினுல் வரப்பட்ட சம்பாத்தியமா யிருக்கக்கூடாது. எப்படியென்றுல்; கஞ்சினி, வட்டிவாங்குகிறவன், கள்ளன், வழிப்பறிசெய்பவன், லஞ்சம் வாங்குகிறவன், சாராயம் விற்பவன், இவர்கள்போல் யார்யாருடையவீட்டில் ஹறுமான வகையாய்மாத்திரம் வருமானம் வருகின்றதோ அவர்களுடைய வீட்டின் சாப்பாடு ஹறுமாயிருக்கும்.

இந்துக்களுடைய மார்க்கத்தில் தட்டான், கருமான், சாணைபிடிக்கிறவன். நெசவுக்காரன், வண்ணான், தோல்பதஞ் செய்கிறவன், ஆயுதங்கள் விற்பவன், வைத்தியன் இவர்களுடையதொழில் புத்தியினிடம் கெட்டதாயில்லாமலிருக்க இவர்களுடைய வீட்டுச் சாப்பாடும் ஆகாதாம்.

எங்கள் மார்க்கத்தில் ஹலாலான மிருகங்களின் பாலைக்குடிக்கிறது ஆகுமாயிருக்கிறது. இந்து மார்க்கத்திலோ கன்றுசெத்த பசுவின்பாலைக்குடிக்கிறது ஆகாதாம். பயன்படும்பொருளைப் பாழாக்குவதுதான் மார்க்கநெறிபோலிருக்கிறது.

## 3 - வது பிரிவு ஒருவனை ஒருவர் சந்திக்கும்போது செய்யவேண்டிய காரியங்களைக்குறித்துப் பேசுவது.

எங்கள் மார்க்கத்தில் எப்பொழுது இரண்டு முஸ்லிம்கள் ஒருவரையொருவர் சந்திக்கிறார்களோ அப்பொழுது இருவரும் முகமலர்ச்சியோடு ஒருவருக்கொருவர் சலாம் சொல்லுகிறது பெரும் நன்மையாயிருக்கிறது.

ஒருவன் **அஸ்ஸலாமு அலைக்கும் வ றஹ்மத்துல்லாஹி வ பறகாதுஹு** என்றும் மற்றொருவன் அதற்கு ஜவாபாக **வ அலைக்கு முஸ்ஸலாம் வ றஹ்மத்துல்லாஹி வ பறகாதுஹு** என்றும் சொல்லவேண்டும். எவன் முந்திசலாம் சொல்லுகிறானோ அவனுக்கு அதிக நன்மையுண்டென்றும் முந்தி சலாம்சொல்ல வெட்கப்படுகிறவன் பெரும் லோபியென்றும் ஹதீதில் வந்திருக்கிறது.

இன்னுமிந்தசலாம் எல்லா முஸ்லிம்களுக்கும் பொதுவானதாயிருக்கிறது. கிழவன் அல்லது வாலிபனாயிருந்தாலும், சிறுவனாயிருந்தாலும், சீமான் அல்லது ஏழையாயிருந்தாலும், உஸ்தாது அல்லது ஷாகிர்தாயிருந்தாலும், பீர் அல்லது முரீதாயிருந்தாலும், எஜமானன் அல்லது வேலைக்காரனாயிருந்தாலும், அடிமைப்படாதவன் அல்லது அடிமைபட்டவனாயிருந்தாலும், அறிமுகமுள்ளவன் அல்லது அறிமுகமில்லாதவனாயிருந்தாலும் எல்லாரும் ஒருவருக்கொருவர் மேற்கண்ட சலாமையே சொல்லவேண்டும்.

ஆனால் விவாகம் செய்துகொள்ள முறையுமுள்ள வாலிபமான பெண்பிள்ளைகளுக்கு ஆண்பிள்ளைகள் சலாம் சொல்லுகிறதும் இதுபோல் கொள்ளுமுறையுள்ள வாலிபமான ஆண்பிள்ளைகளுக்குப் பெண்பிள்ளைகள் சலாம் சொல்லுகிறதும் கூடாது.

விவாகம் செய்துகொள்ள முறையில்லாதவர்களாகிய தாய், சகோதரி, தாயுடன்பிறந்த சிறியதாயார், பெரியதாயார், தகப்பனுடன் பிறந்த மாமி முதலானவர்களுக்கும், தன் பெண்ஜாதிக்கும் எல்லாருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று சொல்லுகிறது சுன்னத்தாயிருக்கிறது.

முதலில் சலாம் சொல்லுகிறது சுன்னத்தாயும் அதற்கு பதில் சலாம் சொல்லுகிறது வாஜிபாயுமிருக்கிறது. பதில் சலாம் சொல்லாதவன் பாவியாவான். சலாம் சொல்லும்போது குனிவதுகூடாது. கையெடுக்கிறதும் சரியல்ல. முஸாபஹா செய்கிறது அதாவது ஒருவருக்கொருவர் பிரியத்தோடு கைகொடுத்துக்கொள்ளுகிறது மிகவும் நல்ல காரியம்.

ஹிந்துக்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும்போது. செய்கிற மரியாதை பலவகையாயிருக்கிறது. அவர்களிடத்தில் சின்னவனுயிருக்கிறவன் பெரியவர்களுக்குக் கை குவித்துக் கும்பிடவேண்டும். இன்னும் வேலைக்காரன் தன் எஜமானுக்கும், சிஷ்யன் தன் குருவுக்கும், மாணுக்கன் தன் உபாத்தியாயருக்கும், மகன் தன் தகப்பனுக்கும், முந்தி வந்தனம் செய்யவேண்டும். அவர்கள் அதற்குப் பிரத்தியாக துஆசெய்யவேண்டும். அதெப்படியென்ருல் பிராமணர் ஆசீர்பாத் என்றும் சிரஞ்சீவி என்றும் துவாசெய்கிருர்கள். பிராமணருக்கும் மற்றஜாதியார் கைகுவித்துக் கும்பிடவேண்டுமாம். சன்னியாசிகளுக்கு நமோ நாராயணுவென்றும், பைராகிகளுக்கு ஜீ மஹாராஜ், என்றும் சிக்கசாதியார் ஒருவரை யொருவர் சந்திக்கும்போது வாஹ்குரு ஜீபத்தஹ் என்றும் சொல்லுகிருர்கள்.

இன்னும் பிராமணர்களும் சன்னியாசிகளும் இன்னுமவர்களில் பெரியவர்களாயிருக்கிறவர்களும் பெருமையினுல் மற்றவர்களுக்கும் சிறுவர்களுக்கும் வந்தனம் செய்வதில் முந்துகிருர்களில்லை.

இவ்விடத்தில் யாதொரு ஹிந்து ஆக்ஷேபணையாக சில இஸ்லாமானவர்களும், பீர்ஸாதாக்களும், மஷாயிகுகளும் தாங்கள் முந்தி சலாம் சொல்லுவதைக் குறைவா எண்ணுகிறதுந் தவிர தங்கள் முரீதுகள் அஸ்ஸலாமு அலைக்கும் என்று சொல்ல வேண்டியதற்குப் பதிலாக அவர்களை ஹஜ்ரத்து ஸலாமத் என்று சொல்லச்செய்து கொள்ளுகிருர்கள். கைகொடுத்து முஸாபஹா செய்யவேண்டியதற்கு பதிலாக தங்கள் முழங்காலைத்தொடச் செய்கிருர்கள் பாதத்தை முத்தமிடச் செய்கிருர்கள் சிறுவர்களுக்குத் தாங்கள் சலாம் சொல்லவும் தங்களுக்குச் சிறுவர்கள் அஸ்ஸலாமு அலைக்கும் என்று சொல்லவும் கூ

டாதென் றெண்ணுகிறார்கள். சிலர் ஸாஹிப் ஸலாமத்தென்றும் சில ர் மியான்ஜீ ஸலாமத் தென்றும் சொல்லுகிறார்கள். சிலர் தங்கள் உஸ்தாதுகளுக்கு முன்னால் குனிந்து முந்தி பூமியிலும் பின்பு நெஞ்சின் பேரிலும் கையைவைத்து சலாம் சொல்கிறார்கள், அந்த உஸ்தாதுகள் அதைப் பிரியப்படுகிறார்கள். சில பகீருகள் அஸ்ஸலாமு அலைக்கும் என்று சொல்ல வேண்டியதற்குப் பதிலாக யாதுல்லா என்றும், சிலர் அல்மதத் என்றும், சிலர் கரமெ முர்த்தஜா என்றும், சிலர் பஸ்லெஹக் என்றும், சிலர் இஷ்குல்லானன்றும், சிலர் பந்தகீ ஆதாப் என்றும் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் ஆயியே ஹஜ்ரத் ஜனுப் என்கிறார்கள். சிலர் சலாம்சொல்லாமல் கைமாத்திரம் தூக்குகிறார்கள் என்று சொன்னால்; அதற்கு மறுமொழியாவது:—

இவைகளெல்லாம் எங்கள் மார்க்கத்தில் ஆகாது இப்படிச் செய்கிறவர்களெல்லாம் குற்றமே செய்கிறார்கள். ஏனென்றால் ஹஜ்ரத்து நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் எல்லாப் பெரியோர்களுக்கும் பெரியோரா யிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தாங்கள் முந்தி சலாம் சொல்கிறவர்களா யிருந்தார்கள். மேலும் சிறுபிள்ளைகளுக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று சொல்வார்கள்.

அஸ்ஸலாமு அலைக்கும் என்று சொல்வதை ஒருவன் குறைவாயெண்ணுவானாகில் அல்லது நபியவர்களின் சுன்னத்தென்ற நடவடிக்கைகளில் யாதொன்றைக் கெடுதியாய் நினைப்பானாகில் அவன் மார்க்கங் கெட்டவனும் மனஞ் சுத்தமில்லாதவனுயு மிருக்கிறான். ஆதலால் இப்பேர்ப்பட்ட மூடர்களின் நடவடிக்கைகளை ஆதாரமாகக்கொண்டு எங்கள் மார்க்கத்தின்பேரில் ஆக்ஷேபிக்க முடியாது,

உங்கள் மார்க்கத்தில் ஆண்டவனுக்கன்றி மற்றவர்களுக்கு வணங்குவது ஆகுமா யிருப்பதால் சின்னவர்கள் பெரியவர்களுக்கு விழுந்து கும்பிடவேண்டுமென்ற இந்த வழக்கம் ஆதியிலிருந்து நடந்து வருவதாய்த் தெரியவருகின்றது.

## 4 - வது பிரிவு காரியங்களைத் துடங்கும்போது. செய்யவேண்டியதைக் குறித்துப் பேசுவது.

பாவமல்லாத எந்தக் காரியத்துக்கும் துவக்கத்தில் அல்லாவுடைய பேரைச்சொல்லி அவனைப்புகழுகிறது நன்மைக்கும் பரக்கத்துக்கும் காரணமாயிருக்கும். ஆதலால் நாங்கள் எந்தக் காரியத்தைத்துவக்கஞ் செய்தாலும் ஆரம்பத்தில் பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம் அதாவது சர்வஜீவதயாபரனும் பக்தரக்ஷகனுயு மிருக்கிற அல்லாவு

டைய நாமத்தினுல் நான் இந்தக் காரியத்தைச்செய்யத் தொடங்குகி றேன் என்று சொல்லுகிறேம்.

இன்னும் சில காரியங்களின் துவக்கத்தில் பிஸ்மில்லாஹி என்று மாத்திரம் சொல்லும் படிக்கும் சில காரியங்களைத் தொடங்கும் பொழுது வேறு சில துஆக்களை ஓதும் படிக்கும் ஹதீசினுல் நக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த துஆக்களில் அல்லாவுடைய பெருமையும் அடியார்களுடைய தாழ்மையுந்தான் கூறப்பட்டிருக்கிறது.

இந்துக்களுடைய மார்க்கத்தில் எந்தவேலைக்கும் துவக்கத்தில் கணேசனுடைய பேரைச் சொல்லவேண்டிய தவசியம் ஆகையால் ஹிந்துக்கள் எந்த வேலையைத் தொடங்கினுலும் முந்தி ஸ்ரீகணே ஷாய நமா என்கிறுர்கள். அதாவது ஸ்ரீகணேச மூர்த்திக்கு என்னுடைய நமஸ்காரமென்பதாம். கணேசன் ஆரென்றுல் 1 ம் அத்தியாயம் 1 ம் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற மகாதேவனுடைய யானை முகப் புத்திரனேயாம்.

ஆ! ஆ!! என்ன ஆச்சரியம்! எல்லாப் பாக்கியங்களையும் எல்லாக் காரியங்களின் சக்தியையும் கொடுத்தவன் ஆண்டவனுயிருக்க; இவர்கள் அந்த ஆண்டவனைமறந்து எந்த காரியத்துக்கும் துவக்கத்தில் கணேசனுடையபேரைச் சொல்லுகிறுர்கள். உண்ட வீட்டில் இரண்டகம் செய்தானென்பது மெய்யேயாயிற்று.

ஒருக்கால் இவ்விடத்திலும் ஹிந்துக்கள் ஆட்சேபிக்கலாம் அதெப்படியென்றுல் சில இஸ்லாமானவர்களும், சில காரியங்களைச்செய்யத் தொடங்கும்போதும், எழுந்திருக்கும்போதும், உட்காரும்போதும் சில பெரியோர்களுடைய பெயரைச் சொல்லுகிறுர்கள். உதாரணமாக சிலர் யாஅலியென்றும்,சிலர் யாஉசைன் என்றும்,சிலர் யாமஹ்பூப் என்றும் சொல்லுகிறுர்கள். இன்னும் சில தொழிலாளிகள் தங்கள்தொழிலை ஆரம்பிக்கும்போது உஸ்தாத் பீர்லுக்மான் ஹகீம் என்கிறுர்கள். கப்பல் மாலுமிகள் கப்பலைநடாத்தும்பொழுது ஹஜ்ரத்து காஜாகிஜருடைய பெயரைச் சொல்லுகிறுர்கள் என்றுல் அதற்கு மறுமொழியாவது:—இவைகளெல்லாம் எங்கள் மார்க்கத்தில் ஆகாது அது அவர்களின் அறிவின்மையா யிருக்கிறது.

### 5 - வது பிரிவு ஜாதிகளின் மேன்மை தாழ்மையைக் குறித்தும் அவர்களின் தொழிலைக்குறித்தும் பேசுவது.

முஸ்லிம்களாகிய எங்கள் மார்க்கத்தினுல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தென்னவென்றுல்; ஒவ்வொருவருக்கும் மேன்மை தாழ்மை யென்பது இரண்டு காரணங்களால் வருகின்றது.

1 - வது காரணம்:— ஸாலிஹான அமலென்ற நற்செய்கையாம். ஒருவன் நல்ல நிர்ணயமும் நற்குணங்களு முள்ளவனுய் பாவமான வேலைகளைச் செய்யாமல் அல்லா றசூலுக்கு வழிப்பட்டவனுயிருப்பானுகில் அவன் அல்லாவிடத்தில் மேன்மை யுள்ளவனுயும் ஆகிறத்தென்ற மறுமையில் பதவி அதிகரித்தவனுயு மிருக்கிருன்.

ஒருவன் அதற்கு மாருக கெட்ட நிர்ணயமும் கெட்ட குணங்களும் கெட்ட நடக்கையு முள்ளவனு யிருந்தால், அவன் அல்லாவிடத்தில் தாழ்மை யானவனேயாம். ஆனுல் அல்லாவுடைய அன்பும் இரக்கமும் மன்னிப்பும் பிரத்தியேகமா யிருந்துகொண் டிருக்கின்றன. அவன் நாடினுல் கெட்டவனை நல்லவனுக்கவும் கூடும். ஆகக் கூடி மேன்மை தாழ்மைகளுக்கு அமலேகாரணமா யிருக்கிறது இப்படியே ஆண்டவன் குர்ஆன்ஷரீபில் * ان اكرمكم عندالله اتقيكم "திடனுக உங்களில் அதிக பூணிப்புள்ளவனே அல்லாவிடத்தில் அதிக மேன்மையுள்ளவன்"=என்று திருவுளமாயிருக்கிருன்.

2-வது காரணம்:—நபிமார்களுடையவும் வலிமார்களுடையவுமான வம்சமாயிருப்பதாம், எந்தஜாதியார் ஒரு நபி அல்லது ஒரு வலியுடைய வம்சத்தாராயிருக்கிருர்களோ அந்தஜாதியாருக்கு மற்றும் ஜாதியாரைப்பார்க்கிலும் அதிகமேன்மையுண்டு. எப்படியென்ருல் செய்யிது மார்கள், பனிஹாஷிமென்ற ஹாஷிம் சந்ததியார், பனீஇஸ்மாயீல் என்ற இஸ்மவேல் சந்ததியார் இவர்களெல்லாரும் மற்றஜாதியாரைப்பார்க்கிலும் அதிக மேன்மையுடையவர்களா யிருக்கிருர்கள் என்ருலும் இந்த மேன்மைகூட ஈமானென்ற விசுவாசத்தையும் ஸாலிஹான அமலென்ற நற்கிரியைகளையும் பொருத்ததாயிருக்கிறது ஈமானும் ஸாலிஹான அமலும் இல்லாமற்போனுல் ஜாதியின் மேன்மை உபயோகப்படமாட்டாது.

இன்னும் எங்கள் மார்க்கத்தில் எந்தத்தொழில் ஹலாலானதாயிருக்கின்றதோ அந்தத்தொழிலே எல்லாஜாதியாரும் செய்யலாம். எப்படியென்ருல் பயிரிடுதல், வர்த்தகம்செய்தல், நெசவுவேலை, தையல்வேலை, கருமாரவேலை, தச்சுவேலை, கொல்லத்துவேலை, முதலிய இந்தத் தொழில்களையெல்லாம் செய்யலாம். மேலும் பூரணமான முஸ்லிமாயிருக்கிறவன் ஹலாலான எந்தத் தொழிலையும் செய்யவெட்கப்பட மாட்டான்.

எந்தத் தொழில் ஹருமாயிருக்கின்றதோ அந்தத் தொழிலை ஒரு ஜாதியாரும் செய்யக்கூடாது. உதாரணமாக:—சாராயம் உற்பந்தி செய்தல், சங்கிதம் செய்தல், மேள தாள நாகசுர வாத்தியங்கள் வா

சித்தல், இன்னு மிவைபோன்ற வேலைகளை ஒருவரும் செய்யலாகாது. மேலும் புத்திமானுயிருக்கிற எந்த முஸ்லிமுக்கும் இந்த வேலைகளைச் செய்ய அருவருப்பாகவே யிருக்கும். இதேயொழிய இன்ன வேலை இன்ன ஜாதியார் செய்யலாம். இன்ன ஜாதியார் செய்யக் கூடாதென்ப தில்லை. இருலோகத்துக்கும் சர்தாராகிய ஹஜ்ரத்து ரசூல் சல்லல்லா கு அலைகிவசல்லமவர்கள் தங்கள் மோஜாவின்வாரைத் தாங்களே முடிவார்களென்று ஹதீசில் வந்திருக்கிறது.

இந்துக்களுடைய மார்க்கத்தில் நல் நடக்கையினுலும் மேன்மை யுண்டென்றுலும் ஜாதியின் மேன்மையே அவர்களிடத்தில் சிறந்ததா யிருக்கிறது.

எல்லா இந்துக்களும் நான்கு ஜாதிகளாய் வகுக்கப்பட்டிருக்கிருர்கள் 1 - வது பிராமணர். 2 - வது க்ஷத்திரியர். 3 - வது வைசியர். 4 - வது சூத்திரர். இந்த நான்கு ஜாதிகளிலும் பிராமணர் மற்ற ஜாதியாரைப் பார்க்கிலும் மேன்மை யுடையவர்களென்றும், க்ஷத்திரியர்களானவர் வைசியர் சூத்திரர்களைக்காண மேன்மை யுடையவர்களென்றும், வைசியரானவர் சூத்திரர்களைக்காண மேன்மை யுடையவர்களென்றும் எண்ணுகிருர்கள்.

இன்னும் கர்மவியாக மென்னும் சாஸ்திரத்தில் பிராமணருக்கேயொழிய மற்றவர்களுக்கு மோக்ஷமில்லை யென்று எழுதப்பட்டிருக்கிறது. அதாவது மற்றஜாதியார் என்ன நல்நடக்கைகளைச் செய்தாலும் அவர்கள் பிராமண ஜென்ம மெடுக்காதவரையில் அவர்களுக்கு மோக்ஷமில்லையாம். சூத்திரன் தன் ஜீவகாலத்தில் நல்நடக்கைகளைச் செய்தால் அவன் இறந்தபின் வைசியனுகவும் வைசியன் க்ஷத்திரியனுகவும் க்ஷத்திரியன் பிராமணனுவும் ஜென்மமெடுத்துப் பிராமண ஜென்மத்தில் நல் நடக்கைகளைச் செய்து மரணமானுல் அப்போது அவன் மோக்ஷமடைகிருனும்.

இன்னும் பிராமணனை உயர்த்துவதிலும் சூத்திரனைத் தாழ்த்துவதிலும் அளவுக்குமேல் அதிமாய்க் கடப்புசெய்கிருர்கள். அதெப்படியென்றுல், மனுசாஸ்திரத்தில் சுத்தம், செல்வம் இந்த இரண்டும் பிராமணனென்ற பேருக்கு வேண்டியவை=என்றும், ஜெயித்தல், காத்தல் இந்த இரண்டும் க்ஷத்திதிரியனென்ற நாமத்துக்கு வேண்டியவையென்றும், பொருளும் அதை வளர்த்தலும் இந்த இரண்டும் வைசியனென்ற பேருக்கு வேண்டியவை யென்றும், தாழ்மையும் ஒடுங்கி ஊழியஞ் செய்தலும் இந்த இரண்டும் சூத்திர னென்ற சொல்லுக்கு வேண்டியவை யென்றும் எழுதப்பட்டிருகிறது.

இதன் நிமித்தமே இந்துக்களிடத்தில் ஒவ்வொரு ஜாதிக்கும் வெவ்வேறு தொழில்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு ஜாதியார் செய்கிற தொழிலைமற்றொரு ஜாதியார் செய்யக் கூடாதாம். பிராமணர்கள் செய்யவேண்டியவை:—கல்விபடித்தல், கல்விகற்பித்தல், யாகம் செய்தல், யாகம் செய்வித்தல், தானங்கொடுத்தல், தானம்வாங்கல் இக்காரியங்களை யெல்லாம் பிராமணர் செய்யவேண்டுமாம்.

க்ஷத்திரியர்கள் செய்யவேண்டியவை:—கல்விபடித்தல் (கற்பித்தலல்ல) யாகம் செய்தல், தானங் கொடுத்தல் (வாங்கலல்ல) பிராமணருக்குப் பணிவிடை செய்தல், இராச்சியத்தைப் பாதுகாத்தல், பாதுகாப்புச் செலவுக்காகக் குடிகளிடத்தில் தீர்வைவாங்கல், மார்க்கத்தை ஆதரித்தல், குற்றவாளிகளிடத்தில் அபராதம் வாங்கல், அவர்களை சிக்ஷைசெய்தல், திரவியம் சேர்த்து சமயத்தில் செலவழித்தல், யானை, குதிரை, மாடு இவைகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் சம்ரட்சணை செய்தல், இரக்காமலிருத்தல், நல்லோர்களின் வார்த்தையை நம்பல் இவைகளெல்லாம் க்ஷத்திரியருக் குரிய காரியங்களாம்.

வைசியர்கள் செய்யவேண்டியவை:—கல்விபடித்தல், யாகம்செய்தல், தானங்கொடுத்தல், ஊழியம் செய்தல், பயிரிடுதல், வர்த்தகம் செய்தல், மாடுமேய்த்தல், இவைகளெல்லாம் வைசியருக்கு ஏற்பட்ட வேலைகளாம்.

சூத்திரர்களுக்காக ஏற்பட்டிருக்கிற வேலைகளாவன:—பிராமணர் க்ஷத்திரியர், வைசியர் என்றமூன்று ஜாதியாருக்கும் சூத்திரன் வேலைக்காரனாயிருப்பதும் அவர்கள் உடுத்திக் களைந்த வஸ்திரத்தை உடுப்பதும், அவர்கள் தின்றுமிஞ்சின எச்சிலை தின்பதும், படம் எழுதுவதும், தட்டாரத் தொழில் செய்வதும். தச்சுவேலை செய்வதும், உப்பு, தேன் பால், தயிர், நெய், தானியம் இவைகளை விற்பதுமாம்.

இன்னும் சூத்திரனானவன் பிரம்மாவுடைய காலில் நின்று முண்டாயினனென்றும் காலானது மற்றெல்லாவுறுப்புகளினும் தாழ்ந்ததாயிருப்பதுபோல் சூத்திரன் தாழ்ந்தவனா யிருக்கிறானென்றும், அவன் யாதொரு பிராமணனைக் கடிந்துபேசினால் அவன் நாக்கை அறுக்கப்படவேண்டுமென்றும், இன்னும் யாதொரு தாழ்ந்தஜாதியான் ஒரு உயர்ந்த ஜாதியானுடைய ஆசனத்தில் உட்கார்ந்தால் அரசன் அவனுடைய இடுப்பின்பேரில் சூடுபோட்டு அவனைத் தன் ஊருக்கப்புறப்படுத்துவேண்டுமென்றும் அல்லது அவனுடைய புட்டத்தில் காயப்படுத்த வேண்டுமென்றும்,

இன்னும் பிராமணன் செய்த கொலைக்காக அவனை சிக்ஷைசெய்வது பெரிய மூடத்தனமென்றும், மற்ற ஜாதியார்செய்த கொலைக்காக அவர்களை சிக்ஷை செய்யலாமென்றும், பிராமணன் எப்பேர்ப்பட்ட குற்றத்தைச் செய்தாலும் அவனைக் கொல்லக் கூடாதென்றும், மேலும் அவனைத் தன் சொத்து சாமான்களோடு தன் ராச்சியத்தை விட்டு அப்புறப்படுத்த வேண்டுமென்றும்,

இன்னும் சூத்திரனுடைய சொத்து முழுமையும் அவன் எஜமானுகிய பிராமணனுக்கே சொந்தமான தென்றும், சூத்திரனுக்கு ஒன்று மில்லை யென்றும், ஆதலால் சூத்திரனுடைய சொத்தை பிராமணன் அச்ச மில்லாமல் எடுத்துக் கொள்ளலா மென்றும் மனு சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னு மிவ்வகையான அநேகசங்கதிகள் இருக்கின்றன. எவ்வளவென்றுதான் எழுதலாம். சுருக்கிச்சொல்லும் பக்ஷத்தில், பிராமணன் அவர்களெல்லாருக்கும் எஜமானனுயிருக்கிறுன். க்ஷத்திரியன் அவனுக்கு யுத்த சேவகனுயும், வைசியன் அவனுக்கு வர்த்தக ஆளாயும், சூத்திரன் அவனுக்கு அடிமைத்தனம் செய்பவனுயு மிருக்கிறுன். இந்த நான்கு ஜாதிகளைத் தவிர மற்றஜாதியாரை மிலேச்சர்களென்று சொல்கிறுர்கள்.

இப்படி நான்கு ஜாதிகளாய் ஏற்பட்டிருக்கிற காரணத்தைக் குறித்து இவர்களுடைய சாஸ்திர புராணங்கள் பலவகையாய்க் கூறுகின்றன. என்றுலும் பிராமணர் பிரம்மாவுடைய முகத்திலிருந்தும், க்ஷத்திரியர் பிரம்மாவுடைய தோள் புஜத்திலிருந்தும், வைசியர் பிரம்மாவுடைய முழங்காலிலிருந்தும், சூத்திரர் பிரம்மாவுடைய காலிலிருந்தும் உண்டாயினுர்களென்று சாமவேதத்திலுலும் அநேக புராணங்களிலுலும் தெரியலாகின்றது.

இன்னும் பாகவதத்தில், பிரம்மாவானவர் தம்மைத்தாம் இரண்டுபாகங்களாய்ப் பிரித்தாரென்றும், வலதுபாகம் சுவாயம்புவனென்றொரு ஆண்பிள்ளையாகியும், இடதுபாகம் சத்தியரூபை யென்றொரு பெண்பிள்ளையாகியும் தோன்றினுர்களென்றும், அவ்விருவரும் தங்கள் சந்ததிகளை நான்கு வர்ணங்களாய் வகுத்தார்களென்றும் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் சிலர் சோகன் என்ற ஓர் அரசன்காலத்தில் ஜாதிகள் வகுக்கப்பட்டன வென்கிறுர்கள்.

இன்னும் பிராமணனை உயர்த்துவதில் அவர்கள் மார்க்கத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஓர் சுலோகத்தைப் பாருங்கள்.

தெய்வாதீனம் ஜகத்சர்வம் மந்திராதீனம் தேவதா.
தன்மந்திரம் பிராம்மணுதீனம் பிராம்மணோதஸ்மாத் தேவதா.

இதன்கருத்து:—உலகம் முழுவதும் தெய்வத்தின் வசப்பட்டிருக்கிறது; தெய்வம் மந்திரத்தின் வசப்பட்டிருக்கிறது. மந்திரம் பிராமணனுக்கு வசப்பட்டிருக்கிறது. ஆதலால், பிராமணன் எனக்குத் தெய்வமாயிருக்கிறான்—என்பதே.

இன்னும் மனுசாஸ்திரத்தில், பிராமணனானவன் ஒரு நாயையாவது, பூனையையாவது, தவளையையாவது, பல்லியையாவது, காகத்தையாவது, ஆந்தையையாவது கொன்றால் அந்தக் குற்றத்திற்கு, அவன் ஒரு சூத்திரனைக்கொன்றால் என்னசிக்ஷை அவனுக்கு விதிக்கவேண்டுமோ அதேசிக்ஷை விதிக்கவேண்டுமென்று எழுதப்பட்டிருக்கிறது. இதனால் சூத்திரன் மேற்கூறிய நாய் முதலிய பிராணிகளுக்குச் சமமானவனென்று விளங்குகின்றது.

## 6-வது பிரிவு நீதியைக் குறித்துப் பேசுவது.

எவனொருவன் நியாயஸ்தலத்தில்போய் மற்றொருவன்பேரில் பிராதுசெய்கிறானோ அவனை வாதியென்றும், எவன்பேரில் பிராதுசெய்யப்பட்டதோ அவனைப் பிரதிவாதியென்றும் சொல்லப்படுகின்றது.

எங்கள் மார்க்கத்தில் நியாயம் தீர்க்கும் முறை யெப்படியென்றால், வாதியினிடம் நீதமுள்ள இரண்டு சாக்ஷிகள் கேட்கப்படவேண்டும். அப்படிப்பட்ட இரண்டு சாக்ஷிகள் அவனுடைய தாவாவின் பேரில் சாக்ஷி சொன்னால் காஜி (நியாதிபதி) யிடத்தில் அந்த வாதி உண்மையுள்ளவனாகின்றான். வாதியினிடத்தில் சாக்ஷியில்லாவிட்டால் பிரதிவாதியைச் சத்தியம் செய்யச்சொல்ல வேண்டும்.

சத்தியம்செய்வ தெப்படியென்றால்; சத்தியம் செய்பவன் அல்லாவின்பேரில் சத்தியமாக என்றுசொல்லி வாதியினுடைய தாவாவை நிராகரிக்கவேண்டும். அப்பொழுது அவன் உண்மை யுள்ளவனென்று எண்ணப்படுகிறான். அல்லாவின்பேரிலன்றி மற்றவர்பேரில் சத்தியம் செய்தல்கூடாது.

இந்துமார்க்க வியவகார சாஸ்திரத்தில் (நீதியின் சட்டத்தில்) எழுதப்பட்டிருக்கிற தென்னவென்றால்; வாதியானவன் நான்கு அல்லது மூன்று சாக்ஷிகளைக்கொண்டு வரவேண்டும். சாக்ஷி சொல்லுகிறவன் நீதிமானாயிருந்தால் ஒருவனே போதும்.

இன்னு மவர்களிடத்தில் சத்தியம் செய்யவேண்டியவன் வாதியாம். அல்லது அதிகாரி தன் அபிப்பிராயப்படி யாரைச் சத்தியம்செய்யச் சொல்லுகிறானோ அவன் சத்தியம் செய்யவேண்டும். என்றாலும், அவர்கள் சத்தியம் வாங்குகிறவிதம் ஆச்சரியமானதாயிருக்கிறது. அ

தன் அஸ்திபாரம் சந்தேகத்தின்பேரில் எழுதப்பட்டதாயும், அதன் கிரியைகள், சந்தர்ப்பமாய் நேரக்கூடியவைகளாயும் இருக்கின்றன. இன்னும் சில சத்தியம் மனிதனைக் கொல்லுகிறதாயு மிருக்கிறது. அவர்கள் சத்தியம் செய்விப்பது எட்டுவகையாம்.

1 - வது வகை:—சத்தியம் செய்கிறவனைத் தராசின் ஒரு தட்டில் உட்காரவைத்து மந்திரம் ஓதவேண்டும். அவன் உட்கார்ந்ததட்டு எழும்பிவிட்டால் அவனை உண்மையுள்ளவனென்றும், எழும்பாமற்போனால் பொய்யனென்றும் எண்ணவேண்டியது. இந்தச்சத்தியம் பிராமணருக்கே சொந்தம்.

2 - வது வகை:—சக்கரமாக ஏழுகோடுகளைக்கிழித்து சத்தியம் செய்பவனை முழுகும்படிசெய்து மந்திரமோதி ஏழு அரச இலைகளை அவன் கையில்வைத்து அதன்மேல் பச்சைநூலைச்சுற்றி ஒரு இரும்புத்துண்டை நெருப்பில் பழுக்கக்காய்ச்சி அந்த இலைகளின்பேரில் வைத்துவிடவேண்டியது. அவன் அப்படியே அந்தக்கோட்டுக்குள் அடிவைத்துக் கடைசிக் கோடுவரையில் நடந்துபோய் அந்த இரும்பைத்தள்ளிவிட வேண்டியது. இதற்குள்ளாக அவன் கையில் சூடுதாக்காதிருந்தால் அவனை உண்மையுள்ளவனென்று எண்ணவேண்டும். இந்தச் சத்தியம் க்ஷத்திரியருக்கே சொந்தம்.

3 - வது வகை:—சத்தியம் செய்பவனை தொப்புளளவு நிலைத்தண்ணீரில் கிழக்குமுகமாய் நிற்கவைத்து முழுகச்செய்ய வேண்டியது. அவன் முழுகின அந்தக்ஷணமே ஒருவன் ஆறேகால் அங்குலமுள்ள ஒரு வில்லில் முனையில்லாத ஒரு அம்பைப்பூட்டி எய்யவேண்டியது. அப்போதே வேகமாய் நடக்கிற ஒருவன் அந்த அம்பை எடுக்கப்போய் அதையெடுத்துத் தொப்புழுக்குச் சரியாய் உயர்த்துகிற வரையில் இங்கே தண்ணீரில் முழுகினவன் தலையெடுக்காமல் மூச்சைப்பிடித்துக்கொண்டிருந்தால் அவனை உண்மையுள்ளவனென்று எண்ணவேண்டும். இந்தச் சத்தியம் வைசியனுக்குச் சொந்தம்.

4 - வது வகை:—கொஞ்சம் பாஷாணத்தை நெய்யில்கலந்து மந்திரமோதி சத்தியம்செய்கிறவனைத் தெற்குமுகமாய் நிற்கவைத்து அந்தப் பாஷாணத்தை அவனுக்குத் தின்னக்கொடுக்க வேண்டியது. தின்னக்கொடுக்கிறவன் கிழக்குமுகமாயாவது வடக்குமுகமாயாவது நின்று ஐந்நூறுதரம் கைகொட்டிக்கொண் டிருக்கிறவரையில் அந்தப் பாஷாணம் அவனை ஒன்றுஞ்செய்யாதிருந்தால் அவனை உண்மையுள்ளவனென்று எண்ணவேண்டும். பின்பு அந்தப் பாஷாணத்தின் விஷத்தை முறிக்கும்படி அவனுக்கு அமிழ்தம்கொடுக்க வேண்டும். இந்தச் சத்தியம் சூத்திரனுக்கே சொந்தம்.

பரிதாபம்! பரிதாபம்!! இந்துக்களில் பேதையான சூத்திரனுக்கு எவ்வகையிலும் நிர்பந்தமாயிருக்கிறது; சத்தியத்திலும் அவன் சாகும் படியான ஏற்பாடு செய்திருக்கிறார்கள்

5 - வது வகை:—யாதொரு விக்கிரகத்தைக்கழுவி அந்தக் கழுவின தண்ணீரில் மூன்று சிரங்கைத் தண்ணீரைச் சத்தியம் செய்கிறவனுக்குக் குடிப்பாட்ட வேண்டியது; பதினான்கு நாட்களுக் குள்ளாக அவனுக்கு ஒருதுன்பமும் வரவில்லையானால் அவனை உண்மை யுள்ளவனென்றெண்ண வேண்டியது.

6 - வது வகை:—அறுபதாங் குருவையென்னும் அரிசியை ஒரு இரவுமுழுமையும் மண்பாத்திரத்தில் போட்டுவைத்து மந்திரமோதி சத்தியம் பண்ணுகிறவனைக் கிழக்கு முகமாய் நிறுத்தி அந்த அரிசியை அவனுக்குத் தின்னக் கொடுக்கவேண்டியது. பின்பு அரச இலையின்பேரிலாவது பூஜ்பத்தர் என்ற மரப்பட்டையின் பேரிலாவது அவனை எச்சில் உமிழச்செய்ய வேண்டியது அதில் ஏதாவது கொஞ்சம் இரத்தம் தென்பட்டாலும், அல்லது அவனுடைய வாயின் எப்பக்கமாவது வீங்கியிருந்தாலும், அல்லது அவனுக்கு நடுக்கல் கண்டாலும் அவனைப் பொய்யனென்று எண்ணவேண்டியது.

7 - வது வகை:—பதினாறு அங்குலநீளமும் அவ்வளவே அகலமும் நாலு அங்குல ஆழமும் உள்ள ஒரு மண்பாத்திரத்திலாவது செம்புப்பாத்திரத்திலாவது நாற்பதுதிரம் எடையுள்ள நெய்யையாவது நல்லெண்ணெயையாவது விட்டு நன்றாய்க் கொதிக்கவைத்து அதில் ஒரு மஷாநிறையுள்ளபொன்னைப் போட்டுவிடவேண்டியது. சத்தியம் செய்கிறவன் அந்தப் பொன்னை இரண்டு விரல்களால் எடுக்கவேண்டியது அவன்கையில் எரிச்சல் காணாமலிருந்தால் அவனை உண்மையுள்ளவனென்று எண்ணவேண்டும்.

8 - வது வகை: தர்மத்தின் (உண்மையின்) ரூபத்தை வெள்ளியினாலும் அதர்மத்தின் (பொய்யின்) ரூபத்தை இரும்பினாலுஞ்செய்து ஒரு கூசாவில் போட்டுவிட வேண்டியது. அல்லது தர்மத்தின் ரூபத்தை ஒரு வெள்ளைத்துணியிலும் அல்லது பூஜ்பத்தர் என்ற மரப்பட்டையிலும் அதர்மத்தின் ரூபத்தைக் கறுப்புத்துணியிலும் எழுதி கூசாவில் போட்டுவிடவேண்டியது. சத்தியம் செய்கிறவன் அந்த இரண்டில் ஒன்றையெடுக்க வேண்டியது. தர்மத்தின்ரூபம் அவன் கையில்வந்தால் அவனை உண்மையுள்ளவனென் றெண்ணவேண்டும்.

பின்னால் சொன்ன நான்குவகை சத்தியங்களும் நான்கு ஜாதியாருக்கும் பொதுவாம்.

## 4-வது அத்தியாயம் இஸ்லாம் மார்க்கத்தைக்குறித்து இந்துக்கள் ஆக்ஷேபிக்கிற சில சங்கதிகளுக்கு உத்தரம்.

நாம் அந்த ஆக்ஷேபங்களுக்கு முதலில் சமஷ்டியாய் (அதாவது எல்லா ஆக்ஷேபங்களுக்கும் பொதுவாய்) ஒருஉத்தரமும், அதன் பிறகு வியஷ்டியாய் (அதாவது ஒவ்வொரு ஆட்சேபத்துக்கும் தனித்தனி) உத்தரங்களும் எழுதுவோம்.

சமஷ்டியாகிய உத்தரம் என்னவென்றால், மார்க்கத்தில் என்னென்ன சங்கதிகள் உண்டோ அவை ஆண்டவனுடைய உத்திரவின்படி நபிகள் நாயகமவர்களின் மூலமாய் எங்களுக்குச் சேர்ந்திருக்கின்றன; அந்த நபியவர்களின் நற்குணங்களும், அவர்களால் வெளியான அற்புதங்களும், அவர்கள் உண்மையான நபியென்பதை ரூபிக்கிற சாட்சிகளாயிருக்கின்றன. அந்த அற்புதங்களையும், நற்குணங்களையும், இப்புத்தகத்தின் 1-ம் அத்தியாயம் 4-வது பிரிவில் பார்த்துக்கொள்ளலாம். அற்புத திருஷ்டாந்தத்தால் அவர்களை உண்மையான நபியென்று விசுவாசித்தோம். அந்த விசுவாசத்தினால் அவர்கள் ஸ்தாபித்தமார்க்கமும் உண்மையுள்ளதென்று நம்பினோம். அவர்கள் எங்களுக்கு அறிவித்தவைகளை நிறைவேற்ற நாங்கள் கடமைப்பட்டவர்களா யிருக்கிறோம்.

ஆதலால் நீங்கள் எங்கள் மார்க்கத்துடைய எந்தச் சங்கதியைப் பற்றி ஆட்சேபித்தாலும் நாங்கள் அதற்குப்பதில் வேறொன்றும்சொல்லாமல் எங்கள் ரசூல்நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் எங்களுக்கு எப்படி ஆக்கியாபித்தார்களோ அப்படியே நாங்கள் செய்கிறோமென்று சொல்வதே போதுமாயிருக்கிறது.

நீங்கள் இதற்கு ஜவாபாக எங்கள் இந்துமார்க்கத்தில் என்னென்ன சங்கதிகளுண்டோ அவை ஆண்டவனுடைய உத்திரவின்படி பிரம்மாவுடையவும், மற்றும் தேவர்களுடையவும், ரிஷீஸ்வரர்களுடையவுமான வாய்மொழியால் எங்களுக்குத் தெரியலாயின. இன்னும் உங்கள் நபியவர்களால் எப்படி அற்புதங்கள் வெளியாயினவோ, அப்படியே எங்கள் முன்னோர்களாலும் அற்புதங்கள் வெளியாயிருக்கின்றன. அதெப்படி யென்றால் பிரம்மாவானவர் தமது இச்சையினால் தமக்கு நான்கு முகங்களை யுண்டாக்கிக்கொண்டார். விஷ்ணுவானவர் தமது அற்புதத்தினால் ஜலந்திரனுடைய ரூபத்தில்மாறினார். கிருஷ்ணமூர்த்தியானவர் ஓர் இரவில் ஏககாலத்தில் தமது ஆயிரம் மனைவிகளிடத்திலு மிருந்திருக்கிறார். இன்னும் அவர் ஓர் மலையைத் தமது கையால் தூக்கிக்கொண்டார். மகாதேவனுடைய கோபாக்கினியின

ல் ஜலந்தரனுண்டாய்விட்டான். இதுபோலவே இன்னுமநேக அற்புதங்கள் எங்கள் முன்னோர்களால் வெளியாயிருக்கின்றன. ஆதலால் உங்கள் நபியினால் அற்புதம் வெளியானது எப்படி அவர் உண்மையான நபியென்பதை ரூபிக்கின்றதோ அப்படியே எங்கள் முன்னோர்களால் வெளியான அற்புதங்கள் அவர்கள் உண்மையானவர்களென்பதை ரூபிக்கின்றன. உங்கள் நபியவர்கள் உங்களுக்கு அறிவித்ததை நீங்கள்செய்வது உங்கள்பேரில் கடமையாயிருப்பதுபோல், எங்கள்முன்னோர்கள் எங்களுக்கு அறிவித்ததை நாங்கள்செய்வது எங்கள் பேரில் விதியாயிருக்கிறது. மார்க்கவிஷயமான எந்தக்காரியத்தை நாங்கள் செய்கிறோமோ அந்தக்காரியம் அவர்கள் அறிவித்ததாகவே யிருக்கிறது.

நீங்கள் உங்கள் நபியைப் பின்பற்றி நடப்பதுபோல் நாங்களும் பிரம்மா முதலானவர்களைத் தொடர்ந்துநடக்கிறோம். பின்பு நீங்கள்ஏன் எங்கள் மார்க்கத்தைக்குறித்து ஆட்சேபிக்கிறீர்களென்று கேட்கும் பட்சத்தில் அதற்கு மறுமொழியாவது.

எங்கள் நபியவர்களால் வெளியான அற்புதங்கள் நம்பிக்கையுள்ள ராவி என்பவர்களின் மூலமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் நபியவர்களின் நற்குணங்களும் நற்செய்கைகளும் உண்மையான ரிவாயத்துகளால் ஸ்திரப்படுத்தப்பட் டிருக்கின்றன. ராவி என்பவரின் உண்மையைத்தீர அறிவதற்கென்றே பிரத்தியேகமாய் எங்களிடத்தில் ஒரு சாஸ்திரம் உண்டு. அந்த சாஸ்திரப்பயிற்சியுள்ளவர்கள் **உலமாயே முகத்திஸீன்** என்று சொல்லப் படுகிறார்கள் அவர்கள் அந்த சாஸ்திர யுக்தியினால் பலஹீனமான ரிவாயத்துகளைச் சரியான ரிவாயத்துகளில் நின்றும் வேறுபடுத்துவதற்காக எப்போதும் அதேவேலையில் முயர்ச்சியாயிருக்கிறார்கள். ராவியென்பவரின் உண்மையை நிதானிக்க எவ்வளவு விசாரணை செய்யப்படுகிறதென்றால்;

அவர்பேர் என்ன? அவர் யாருடையமகன்? அவர் எங்கேயிருந்தார்? எப்போது பிறந்தார்? எப்போது இறந்தார்? எப்படி யிருந்தார்? பொய் சொல்லுகிறவராயிருந்தாரா? அல்லது மெய் சொல்லுகிறவராயிருந்தாரா? மறதியுள்ளவரா யிருந்தாரா? அல்லது கியாபக முள்ளவரா யிருந்தாரா? ரிவாயத்துகளின் (தாம் கேள்விப்பட்ட சங்கதிகளின்) உண்மையை விசாரிப்பதில் முயர்ச்சியுள்ளவரா யிருந்தாரா? அல்லது அதை அலக்ஷியம் செய்பவராயிருந்தாரா? தாம் பேசுவதில் கோழைத்தன முள்ளவரா யிருந்தாரா? அல்லது தைரியமுள்ளவரா யிருந்தாரா? மெய் பொய்களை வகுத்தறியும் சக்தியுள்ளவரா யிருந்தாரா?

அல்லது இல்லையா? பெரும் பாவங்களைச் செய்யாதவரா யிருந்தாரா அல்லது இல்லையா? அவர் என்னமார்க்க முள்ளவராயிருந்தார், என்பனவாகிய இவைகளெல்லாம் ஒரு ராவியின் விஷயத்தில் தீர விசாரிக்கப் படுகின்றன.

இவ்வளவெல்லாம் ராவியின் சங்கதிகளைத் தீரவிஜாரித்தபின் அவரை நம்புவதில் பின்பும் ஏதாவது சந்தேகமுண்டாய் விட்டால் அவர் சொன்ன ரிவாயத்து அவ்வளவாய் நம்பப்படுகிறதில்லை.

உங்கள் முன்னோர்களாகிய பெரியோர்களின் அற்புதங்கள் உங்கள் புராணங்களில் எழுதப்பட்டிருக்கின்றன என்றாலும் உங்கள் சாஸ்திர புராணங்கள் நம்பத்தகாதனவா யிருக்கின்றன. ஏனென்றால் உங்கள் மார்க்கத்தில் ராவிகள் எப்படிப்பட்டவர்களா யிருந்தார்களென்று ஆராய்ந்தறியும் வழக்கமில்லை. ராவிகளின் உண்மையை அறிவதற்காக உங்களிடத்தில் ஒரு சாஸ்திரமும் கிடையாது; மேலும் யார் என்ன சொன்னார்களோ அதே உங்கள் மார்க்கமாயேற்பட்டிருக்கிறது.

உங்கள் புராணகதைகளை நீங்கள் மெய்யென்று நம்பினாலும் மற்றவர் நம்பத்தகாதவைகளா யிருக்கின்றன. அப்படியே உங்கள் புராணகதைகளை உண்மையென்று கொண்டு உங்கள் பெரியோர்களின் அற்புதங்களை மெய்யென்றே வைத்துக்கொண்டாலும்; அப்பொழுதும் அந்த அற்புதங்கள் அவர்கள் உண்மையானவர்களென்பதை ரூபிக்கிற அற்புதங்களாகமாட்டா. ஏனென்றால், அந்தப் புராணக் கதைகளிலேயே உங்கள் பெரியோர்கள் துற்குணங்களும் துற்செயல்களுமுள்ளவர்களா யிருந்தார்களென்று ஏற்படுகின்றது. அவர்களுடைய குணங்களையும் செயல்களையும் குறித்து இப்புத்தகத்திலும் சில எழுதப்பட்டிருக்கின்றன.

எவனுடைய குணங்களும் நடக்கைகளும் கெட்டவைகளாயிருக்கின்றனவோ அவனால் யாதொரு அற்புதம் வெளியானால் அதை நாங்கள் முஃஜிஸா அல்லது கருமத்தென்று சொல்லுகிறதில்லை. மேலும் அதை இஸ்த்தித்ருஜ்ஜென்று சொல்லுகிறோம் இந்த சொற்களுக்கு அர்த்தம் பின்னால் தெரியலாகும். இஸ்த்தித்ருஜ் என்ற அற்புதம் மார்க்க உண்மைக்கு ஆதாரமாய் நம்பத்தக்கதல்ல.

ஒருக்கால் நீங்கள் சில முஸ்லிமான பகிருகள் கஞ்சாக்குடியராயும், சாராயக் குடியராயும், தொழாதவர்களாயும், பாவங்களைச்செய்கிறவர்களாயு மிருக்கிறார்கள். அவர்களால் அற்புதங்கள் வெளியாகின்றன. இஸ்லாமானவர்கள் அவர்களை நல்லோர்களென்றும், ஒலிமா

ர்களென்றும், அவர்களால் வெளியாகிற அற்புதங்களைக் கருமத்தென்றும் சொல்லுகிறார்களே என்பீர்களானால் அதற்கு மறுமொழியாவது.

இப்பேர்ப்பட்டவர்கள் எங்களிடத்தில் நல்லோர்களுமல்ல, ஒலிமார்களுமல்ல, மேலும் கெட்டவர்களும் பாவிகளுமாயிருக்கிறார்கள். அவர்களால் வெளியான அற்புதம் கருமத்தல்ல. மேலும் இஸ்திற்றாஜாயிருக்கிறது. பின்வரும் சங்கதிகளால் இதன் விபரம் உங்களுக்குத் தெரியலாகும். அதாவது அற்புதமென்பது எங்களிடத்தில் பல வகைப்பட்டிருக்கின்றது.

1 - வது வகை:—யாதொரு நபியானவர் தாம் நபியென்ற பிரஸ்தாபம் பண்ணின பின்பு அவரால் யாதொரு அற்புதம் வெளியானால் அதை முஅஜிஸா என்று சொல்லுகிறோம். அதெப்படியென்றால் இப்புத்தகத்தில் எங்கள் நபியவர்களுடைய சில முஅஜிஸாக்களை எழுதியிருக்குமாப் போலவாம்.

2 - வது வகை:—யாதொரு நபியானவர் தாம் நபியென்று பிரஸ்தாபம் பண்ணுவதற்கு முன்னே அவரால் யாதொரு அற்புதம் வெளியானால் அதை இர்ஹாஸ் என்று சொல்லுகிறோம். அதெவ்விதமென்றால், எங்கள் நபியவர்கள் தங்களை நபியென்று தாங்கள் பிரஸ்தாபம் பண்ணுவதற்கு முன்னே கற்களும், மரங்களும் அவர்களுக்கு சலாம்செய்ததுபோலவாம்.

3 - வது வகை:—ஒரு வலியானவரால் யாதொரு அற்புதம் வெளியானால் அதை கறாமத்து என்று சொல்லுகிறோம். இவ்வகையான அற்புதங்களும் இந்தப் புத்தகத்தில் சில எழுதப்பட்டிருக்கின்றன.

4 - வது வகை:—நல்லவனாயிருக்கிற யாதொரு சாதாரண முஸ்லிமால் யாதொரு அற்புதம் வெளியானால் அதை மஊனத்து என்று சொல்லுகிறோம்.

5 - வது வகை:—தொழுகை யில்லாதவனாயும், கஞ்சாக்குடியனாயும், சாராயம்முதலிய மதுபானஞ் செய்கிறவனாயுமிருக்கிற யாதொரு பாவிகான முஸ்லிமால் அல்லது யாதொரு காபிரால் யாதொரு அற்புதம் வெளியானால் அதை இஸ்திற்றாஜ் என்று சொல்லுகிறோம்.

6 - வது வகை:—தான் நபியென்று பொய்ப் பிரசங்கம் பண்ணுகிற ஒருவனால் வெளியாகிற அற்புதமாம். ஆனால் இந்த அற்புதம் அவன் சுத்தப் பொய்யனென்பதை ரூபித்து அவனைப் பங்கப்படுத்துகிறதாகவேயிருக்கும். இதற்கு இஹானத்து என்றும் தஸ்லான் என்றும்

சொல்கிறோம். இதெவ்விதமெனில், ஹஜரத்து நபியவர்களின் காலத்தில் யமாமா என்ற ஊரில் முஸைலமத்துல் கஜ்ஜாப் என்பவன் தான் நபியென்று பொய்ப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தான். அவன் அஜரத்து நபியவர்களுக்கு ஒரு காயிதம் எழுதினான் அந்தக் காயிதத்தின் வாசகம் யாதெனில், "முஹம்மதுர் றசூலுல்லா அவர்களுக்கு முஸைலமத்து நபியுல்லா எழுதுவதாவது. பூமியில் அரைவாசி உம்முடையதும் அரைவாசி எம்முடையதுமா யிருக்கிறது. ஆனால் குறைஷிகளாகிய நீங்கள் அக்கிரமமாய் பூமி முழுவதையும் அதாவது அறபுதேசத்தின் சகல சுற்றுப்புரங்களையும் உங்கள் கைவசமாக்கிக் கொண்டீர்கள்"—என்பதே.

அதற்கு ஜவாபாக ஹஜரத்துநபியவர்கள் அவனுக்கெழுதின நிருபத்தின் வாசகத்துடைய கருத்தென்னவென்றால், முஹம்மதுர் றசூலுல்லாவுடைய சமுகத்திலிருந்து முஸைலமத்துல் கஜ்ஜாபுக்கு அறிவிப்பது யாதெனில். பூமியானது என்னுடையதுமல்ல உன்னுடையதுமல்ல அல்லாவுடைய ஆதீனமாயிருக்கிறது. நீ, யமாமாவுடைய ஜனங்களைக் கெடுத்துவிட்டாய் அல்லாகுதாலா உன்னைக் கெடுப்பானாக —என்பதே.

இன்னும் சொல்லப்படுகின்றது:—இந்த முஸைலமத்துல் கஜ்ஜாப் என்பவன், நபியவர்கள் வாய்க்கொப்பளித்தத் தண்ணீரை ஒரு கிணற்றில் உமிழ்ந்தார்களென்றும், அதனால் அக்கிணற்றின் ஜலம் அதிகமாய்ப்பெருகி இன்பமும் ருசியுமுள்ளதாக ஆய்விட்டதென்றும் கேள்விப்பட்டுத் தானும் அப்படியேசெய்தான். எந்தக்கிணற்றில் அவன் வாய்க்கொப்பளித்தத் தண்ணீர்விழுந்ததோ அந்தக் கிணற்றின்ஜலம் வற்றி மீதியாயிருந்த ஜலம் உப்பும், கைப்புமாய்ப் போய்விட்டது.

இன்னும் ஹஜ்ரத்து நபியவர்கள் தங்கள் உம்மத்திலுள்ள நோயாளியான பிள்ளைகளுக்காக துஆச்செய்தால் உடனே அவர்கள் சவுக்கியத்தை யடைவார்கள். முஸைலமத்துல் கஜ்ஜாபும் ஒரு பிள்ளையின் தலையைத் தன்கையினால் தடவிவிட்டான். அந்தப்பிள்ளை மண்டைக் குத்தலென்னும் வியாதியில் பீடிக்கப்பட்டது, இன்னுமிவன் ஒரு குழந்தையின்வாயில் தன்விரலை விட்டதினால் அக்குழந்தையின் பல் உடைந்துபோயிற்று. இன்னுமிவன் ஒருதோட்டத்தில் ஒருதரம் ஒளுச்செய்ததினால் அந்தத்தண்ணீர் விழுந்தவிடமெல்லாம் புல்முளைக்காமல் போய்விட்டது.

இப்படியே இவன் யாருக்கு ஆயிசு அதிகப்பட வேண்டுமென்று துவாச்செய்கிறானோ அவன் உடனே சாவான் இன்னும் யாதொருவ

னுக்குப் பார்வைதெளிவாக வேண்டுமென்று துவாச்செய்தானுகில் அவன் உடனே குருடனுய்ப்போவான். ஆகக்கூடி அவனுடைய அற்புதமானது அவன் பிரசங்கத்துக்கு நேர் விரோதமாகவே வெளியாகிக்கொண்டிருந்தது. அதனுல், அவன் பொய்யனென்று எண்ணப்பட்டதுந்தவிர அவன் தானும் அதிகசிறுமை யடைந்துக்கொண் டிருந்தான்.

ஆகவே இந்த எல்லா அற்புதங்களிலும் முற்கூறிய நான்குவகைகளும் அதாவது முஅஜிஸா, இர்ஹாஸ், கருமத்து, மஊனத்தென்ற இவைகள் எவ்விதத்திலும் நன்மையானவைகளாயும், பிரயோசனங்கொடுக்கிறவைகளாயு மிருக்கின்றன. பின் சொல்லிய இரண்டுவகைகளும் (இஸ்தித்றுஜ், இஹானத்து) எவனுல் வெளியாயினவோ அவை அவனுக்கே பிரயோசனம்கொடாமல் முற்றிலும் அவனை நஷ்டப்படுத்துகிறவைகளா யிருக்கின்றன.

இப்பொழுது சொல்லிக்கொண்டுவந்த சங்கதிகளால் எங்கள் நபியவர்கள் புகழுக்குரிய நற்குணங்களையும், நற்செயல்களையும், உடையவர்களா யிருந்தார்களென்றும், அவர்களால் முஅஜிஸா வென்ற அநேக அற்புதங்கள் வெளியாயினவென்றும், அவர்கள் அருளிச்செய்தவைகள் நாம் சாரத்தகுந்த வைகளென்றும்,

உங்கள் பெரியோர்கள் உங்கள் புராணங்களா லாலேயே பழித்தற்குரிய குணங்களையும், செயல்களையும், உடையவர்களா யிருந்தார்களென்றும் அவர்கள் சொன்னவைகளைச் சார்ந்து நடக்கத்தகாதென்றும் நன்றுய் ஸ்தாபிக்கப்பட்டன.

ஆதலால் எந்த சங்கதி நபியவர்களுடைய ஆக்கினைப்படி யிருக்கிறதென்று ஏற்பட்டதோ அந்த சங்கதியின்பேரில் ஒருவருடைய ஆக்ஷேபமும் செல்லாது. இந்துக்களாகிய நீங்கள் ஆர்பேரில் என்ன ஆக்ஷேபம் செய்வீர்கள். முந்தி உங்கள் மார்க்கத்தின்பேரில் வருகிற ஆக்ஷேபங்களை நன்றுய்க் கவனித்து அவைகளுக்குத் தக்கநியாயம் சொல்லிவிட்டுப் பின்பு மற்றவர்கள்பேரில் ஆக்ஷேபணைசெய்யுங்கள். உங்கள் மார்க்கத்தின்பேரில் வருகிற ஆக்ஷேபங்களிற் சில இப்புத்தகத்திலும் பிரிவுகள் தவறுமல்காணலாம்.

எங்கள் மார்க்கத்தில் புத்திக்கு ஒவ்வாதகாரியம் ஒன்றுமில்லை. நீங்கள் உங்கள் குறைந்தபுத்தியினுல் எங்கள் மார்க்கத்தின் சிலசங்கதிகள் புத்திக்கு ஒவ்வாதனவா யிருக்கின்றனவென்று நினைத்து ஆக்ஷேபணை செய்யும்பக்ஷத்தில் ஆண்டவனருளால் அவைகளுக்கு நியாயமான விடைகள் பகரப்படும்.

## இந்துக்களின் ஆக்ஷேபனை·

இஸ்லாமானவர்கள் தங்கள் சகோதரியை விவாகம்செய்து கொள்ளுகிறார்கள். அதெப்படியென்றால் தகப்பனுடன்பிறந்த சிற்றப்பன், பெரியப்பன் இவர்களுடைய மகளும் சகோதரியாயிருக்க அவளை விவாகம் செய்துகொள்வது இஸ்லாமார்க்கத்தில் ஆகுமாம். இதென்ன வெட்கக்கேடாயிருக்கிறது.

### உத்தரம்

சிற்றப்பன் அல்லது பெரியப்பன் மகளை சகோதரியென்று நீங்கள் சொல்வது ஏன்? அவள் தன் பிதாவின் சகோதரனுடைய மகளாயிருக்கிறாளென்றுதானே? அப்படியானால் தன்மாதாவின் சகோதரனாகிய அம்மான்மகளும் சகோதரியாகிறாள். இவளையும் விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்ற ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்.

எங்கள் மார்க்கத்தில் அம்மான்மகளை விவாகம் செய்துகொள்ள ஆகுமாயிருக்கிறதுபோல் சிற்றப்பன் அல்லது பெரியப்பன் மகளையும் விவாகம் செய்துகொள்ள ஆகும். இது ஒரு சட்டத்திற்குள் அடங்குகிறது. ஏனென்றால், ஒருசிசு உண்டாவதற்கு இரண்டுமூலங்கள் வேண்டும். ஒன்று தகப்பனும், மற்றொன்று தாயுமாம். ஆகவே தாயும், தகப்பனும் அந்த சிசுவுக்குப் பந்துத்துவத்தில் சமமாகிறார்கள். பின்பு தாயின் சகோதரனாகிய அம்மான்மகளைக் கட்டுவதாகுமென்றால் தகப்பனுடைய சகோதரன்மகளை ஏன் கட்டக்கூடாது?

இவ்விடத்தில் சில ஹிந்துக்கள் அம்மான்மகளை விவாகம் செய்துகொள்வது எங்கள் மார்க்கத்தில் ஆகாதென்று சொல்லுகிறார்கள். அதற்கு மறுமொழியாவது நீங்கள் உங்கள்மார்க்கம் தெரியாதவர்களா யிருக்கிறீர்கள். ஏனென்றால், “பெண்ணைக்கொடுக்கச் சகோதரியின் மகனைக்காட்டிலும் ஆர் அதிக பாத்தியஸ்தன்?” என்று உங்கள் சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இன்னும் சில சாஸ்திரங்களில்,

> தக்ஷிணே மாத்துலே கன்னியம், உத்தரே மாம்ச போஜனம்,
> பக்ஷமே கிர்யா நாஷமஸ்ச்சே, திர்யோ தோஷ் பந்தத்தே.

தக்ஷணதேசத்தில் அம்மான்மகளை விவாகம்செய்து கொள்வதும், உத்தரதேசத்தில் மாம்சபக்ஷணம் செய்வதும், பக்ஷம தேசத்தில் கிர்யாகர்மநாசம் செய்வதும் இந்த மூன்றுகாரியங்களினும் தோஷமில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் இஷ்குலால் பண்டிதரென்பவர் அம்மான்மகள் தன்குலத்துக்குப் புறம்பேயிருப்பதால் அவளைக் கட்டலாமென்றும், சிற்றப்பன் அல்லது பெரியப்பன்மகள் தன்குலத்துக்கு உள்ளேயிருப்பதால் அ

வளைக் கட்டக்கூடாதென்றும் சொல்லியிருக்கிறார். அதற்கு மறுமொழியாவது. சிற்றப்பன் அல்லது பெரியப்பன்மகள் தன் தகப்பன் குலத்துக்குள்ளேயும், அம்மான்மகள் தன் தாயின் குலத்துக்குள்ளேயு மிருக்கிறார்கள் ஒருத்தியும் குலத்துக்குப் புறம்பானவளா யிருக்கவில்லை.

பின்பும் யாதொரு ஹிந்து நாங்கள் ஆண்வழியைமாத்திரம் அனுசரித்து அம்மானை அன்னியகுலத்திலுள்ளவனென்றும், சிற்றப்பன் அல்லது பெரியப்பனைத் தன் குலத்திலுள்ளவனென்றுஞ் சொல்கிறோம். இதை அனுசரித்தே தன் சகோதரன் மகளையாவது தன் தகப்பனுடைய சகோதரன் மகளையாவது கட்டக்கூடாதென்றும், தன் சகோதரிமகளையும் தன் தகப்பனுடைய சகோதரிமகளையும் கட்டலாமென்றுஞ் சொல்கிறோம்; என்றால் அதற்கு மறுமொழியாவது.

நீங்கள் ஆண்வழியைமாத்திரம் அனுசரிப்பது உண்மையாயிருந்தால் சிறியதாயார் அல்லது பெரியதாயாருடைய மகளை ஏன் விவாகம் செய்து கொள்ளுகிறதில்லை. நீங்கள் சொல்லுகிறபடி இவளும் ஒரு அன்னியகுலத்தான் மகளாயிருக்கிறாளே. இதன்படி பார்த்தால் மகள்பெற்ற பேத்திப்பெண்ணையும் நீங்கள் விவாகம்செய்து கொள்ளலாமல்லவா? ஆம் என்றால் இதுதான் வெட்கக்கேடு.

இன்னும் உங்கள் புராணங்களில் பிரம்மாவானவர் தமது மகள் சரஸ்வதியைத் தமக்கு மனைவியாகவைத்திருந்து பின்பு அவளைத் தம்முடையகுமாரன் சுவாயம்புவனுக்கு விவாகம் செய்வித்தாரென்று எழுதப்பட்டிருக்கிறதே இதுதான் வெட்கக்கேடு.

இன்னும் பராசரரிஷி மச்சகந்தியை விபசாரமாய்ச்சேர்ந்து அதனால் உங்கள் சாஸ்திரங்களைக் கோர்வைசெய்த வியாசர்பிறந்தார் என்கிறீர்களே இதுதான் வெட்கக்கேடு.

இன்னும் கிருஷ்ணபக்தியுள்ள துரோபதை என்பவளுக்குப் பஞ்சபாண்டவாளென்னும் ஐந்து புருஷர்கள் இருந்தார்களென்கிறீர்களே இதுதான் வெட்கக்கேடு.

ஒருக்கால் நீங்கள் இந்த ஐவரும் தம்தம் முறையில் துரோபதையை அக்கினியில் தகனித்துப் பின்பு அவளை உயிர்ப்பித்துத் தம்தம் அநுபோகத்தில் கொண்டுவருகிறவர்களா யிருந்தார்களென்று சொல்லும்பக்ஷத்தில், அதற்கு மறுமொழியாவது. அக்கினியில் தகனமானதெது? உடல்தானே? உடல் தகனமாய்ப்போனால் உயிர் அதாகவேயிருக்கிறது உயிர் தகனமாகமாட்டாது. உடலுங்கூட உங்கள்சொற்படி முன்னிருந்த உடலே உயிர்ப்பிக்கப்பட்டதாயிருந்தது. உடலும் அதுவே உயிரும் அதுவேயானதால் முன்னிருந்த துரோபதையேயானாள்.

இன்னும் பஞ்சபாண்டவர்களின் தாயும், பாண்டுராஜனுடைய மனைவியுமான குந்தியென்பவளைப் பலதேவர்கள் விபசாரமாய்ச்சேர்ந்து அதனால் ஐந்து பாண்டவர்களும் பிறந்தார்களென்கிறீர்களே இதுதான் வெட்கக்கேடு.

இன்னும் உங்கள் வியாசமகாரிஷியானவர் தம்முடைய சகோதரன் மனைவிகளை விபசாரமாய்ச்சேர்ந்து அதனால் திருதராட்சதனும், பாண்டுராஜனும் பிறந்தார்களென்கிறீர்களே இதுதான் வெட்கக்கேடு.

இன்னும் சொர்க்கத்தின் அதிகாரியாகிய தேவேந்திரனானவன் சந்திரனைத் துணைக்கொண்டு கௌதமரிஷியின் மனைவியாகிய அகிலிகையை விபசாரமாய்ச்சேர்ந்தானென்றும், கௌதமரிஷியின் சாபத்தினால் இந்திரனுடைய தேகத்தில் ஆயிரம் யோனிகள் உண்டாயினவென்றும் சொல்கிறீர்களே இதுதான் வெட்கக்கேடு.

இன்னும் இராமருடைய மனைவி சீதையை ராவணன் சிறையெடுத்துக்கொண்டுபோய் பின்பு அவள் இராமருடைய வீட்டுக்குவர இராமர் அவளைக் காட்டுக்குத் துரத்திவிட்டு மீண்டும் கொண்டுவந்து வீட்டில் சேர்த்துக்கொண்டாரென்கிறீர்களே இதுதான் வெட்கக்கேடு.

மேற்கண்ட துரோபதை, சீதை, அகிலிகை முதலான ஸ்திரீகளைக் கன்னிகளென்றும், கற்பழியாதவர்களென்றும் சொல்லுகிறீர்களே இதுதான் வெட்கக்கேடு.

இன்னும் நீங்கள் ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் கூட்டமாய்த்திரண்டு மகாதேவனுடைய லிங்கத்தைப் பூஜிக்கிறீர்களே இதுதான் வெட்கக்கேடு.

இன்னும் பிரம்மாவும், விஷ்ணுவும், மகாதேவனுடைய லிங்கத்தை அளவெடுக்க முயன்றார்களே இதுதான் வெட்கக்கேடு. இன்னும் உங்களில் வாமமார்க்கரென்பவர்கள் அல்குலை வணங்குகிறார்களே இதுதான் வெட்கக்கேடு.

இன்னும் கிருஷ்ணனைப்போலும் அவருடைய மனைவிகளைப்போலும் வேஷம்போட்டு அவர்கள்செய்த அநேகவெட்கங்கெட்ட வேலைகளைக்காட்டி உங்கள்முன்னே ஆடச்செய்கிறீர்களே இதுதான் வெட்கக்கேடு.

இன்னும் மகாதேவன் ஒருதரம் நித்திரைசெய்துகொண்டிருக்கும்போது மோகலாகிரியினால் அவருடைய ஆணங்கம்விம்மி நிமிர்ந்திருப்பதைப் பார்வதிகண்டு தன்னுடைய பெண்ணங்கத்தை அதிற்செலுத்தி அதின்பேரில் உட்கார அது இன்னும் அதிகமாய் விம்மியெழு

ம்பிப் பார்வதியைத் தூக்கிக்கொண்டு வானலோகத்தில் தேவர்களிரு க்கும் ஸ்தலம்வரையில் போயிற்றென்றும், பார்வதி அத்தேவர்களைக் கண்டு வெட்கமடைந்தாளென்றும் சொல்லுகிறீர்களே இதுதான் வெட்கக்கேடு.

இன்னும் மகாதேவன் தமது லிங்கத்தை நிர்மானமாக்கிக்கொண்டு பிராமணரிஷிகளின் மனைவிகளிடம்போய் நின்றாரென்றும், அந்தஸ்திரிகள் காமத்தினால் அவரைக் கட்டியணைத்துக் கொண்டார்களென்றும் சொல்லுகிறீர்களே இதுதான் வெட்கக்கேடு இவைபோன்ற இன்னுமநேக வெட்கக்கேடான சங்கதிகள் உங்கள் மார்க்கத்தில்தான் உண்டு. இவைகளெல்லாம் உங்களுக்கு வெட்கக்கேடென்று தோன்றாமற்போனதும், சிற்றப்பன் அல்லது பெரியப்பன் மகளை விவாகம் செய்வது வெட்கக்கேடென்று தோன்றினதும் உங்கள் புத்திபேதத்தினாலேயாம்.

## இந்துக்களின் ஆக்ஷேபம்.

இஸ்லாமானவர்கள் பெரும் அசுத்தமானவர்களா யிருக்கிறார்கள். மலபாதைக்கிருந்து சுத்திசெய்தபின் கை,கால்களை மண்ணால்தேய்த்துக் கழுவுகிறதும், வாய்க்கொப்பளிக்கிறதும், பாத்திரத்தை விளக்கு கிறதுமில்லை.

## உத்தரம்.

மலபாதை சுத்திசெய்கிறதில் நாங்கள் செய்கிற அவ்வளவு சுத்தம் இந்துக்களாகிய நீங்கள் செய்கிறதில்லை. நாங்கள் முந்தி அசுத்தத்தை மண் கட்டிகளால்துடைத்து அதன்பிறகு அசுத்தத்தின் குணம் நீங்கும்படி தண்ணீரால் கழுவிப்போடுகிறோம். கை கால்களையும் சுத்தம்செய்து கொள்ளுகிறோம். நீங்களோ அசுத்தஸ்தானத்தைக் கட்டிகளால் துடைக்காமல் கொஞ்சந்தண்ணீரைக்கொண்டு தொட்டுத் துடைக்கிறதினால் உங்கள் உடம்பிலும் கையிலும் மலம் இழுவப்பட்டுப் பெரும் அசுத்தர்களாய்ப் போகிறீர்கள். அதற்காக நீங்கள் கையை மண்ணால்த்தேய்க்க வேண்டியது நியாயந்தான். என்றாலும், உங்கள் உடம்பும் வஸ்திரமும் அசுத்தமேயாம். உங்கள் சாஸ்திரப்படி பன்னிரண்டுதரம் வாய்க்கொப்பளித்தால்தான் உங்கள்வாய் சுத்தமாகிறதென்றால் வாயினாலாமலங்கழித்தது? அசுத்தமான கையினால்தொட்ட பாத்திரத்தை விளக்காவிட்டால் துர்க்கந்தம் எப்படிப்போகும்? எந்தஜனங்கள் மாட்டுச்சாணி மூத்திரமிவைகளைச் சுத்தமானவைகளென்றெண்ணி இரவும் பகலும் அதிற்கிடந்து புரள்கிறார்களோ அந்த ஜனங்கள் மற்றவர்கள்பேரில் என்ன ஆக்ஷேபம்செய்கிறது? உங்கள் புத்தியினால் நன்றாயோசித்துப் பாருங்கள்.

## இந்துக்களின் ஆக்ஷேபம்.

இஸ்லாமானவர்கள் மிக அசங்கிதமானவர்கள். ஒரே போஜனபாத்திரத்தில் எல்லாரும் ஒன்றாய்ச்சேர்ந்து சாப்பிடுகிறார்கள். ஒருவர் வாய்வைத்துக்குடித்த பானபாத்திரத்தில் மிஞ்சினதண்ணீரை மற்றவர்களும் குடிக்கிறார்கள். இவர்களுக்கு எச்சிலென்கிற அசங்கிதமே கிடையாது.

## உத்தரம்.

மனிதனுடைய வாய் அசுத்தமானதல்ல. அப்படி அசுத்தமென்றிருந்தால் அந்தவாயால் ஆண்டவனுடைய நாமத்தைச் சொல்லத்தகாது. மனிதன்வாய் சுத்தமானதென்று ஏற்பட்டிருக்கும்போது * ஒருவரோடொருவர் ஏன் சேர்ந்து சாப்பிடக்கூடாது?

நீங்கள் படைப்புகளுக்கெல்லாம் மேன்மையுடையவனாயிருக்கிற மனிதனுடைய வாயை அசுத்தமானதென்றும் குதிரை முதலிய சில ‡ மிருகங்களின் வாயை சுத்தமானதென்றும் நினைக்கிறீர்கள். இன்னும் பஞ்சகவ்வியமும் சாப்பிடுகிறீர்கள். உங்களுக்கு சாணி மூத்திரமென்கிற அசங்கிதமே கிடையாது.

### ஹிக்காயத்து.

ஒருநாள் இந்துக்களின் தலைவரான ஒருகனவான்; ஹஜரத்து பஜ்லு இமாம்மர்ஹூம் என்பவர்களிடத்தில்,, மவுலவிசாகிபே! இந்துக்கள் ஒருவர் மற்றொருவருடைய எச்சிலைப்பற்றி எவ்வளவு அசங்கியப்படுகிறார்கள் பாரும் இஸ்லாமானவர்களோ எல்லாரும் ஒன்றுசேர்ந்து சாப்பிடுகிறார்களென்று சொன்னார். அதற்கு ஷை மவுலானாஅவர்கள் "பசுக்கள் பத்துஞ்சேர்ந்து ஒரு தொழுவத்தில் புல் தின்னும் நாய்கள் இரண்டானாலும் சேர்ந்துதின்னாது, தவிர உங்கள் சாஸ்திரங்களிலும் ஜகந்நாதத்தில் நான்கு வர்ணத்தாரும் ஒன்றுசேர்ந்து சாப்பிடலாமென்றும், பேதம்நினைக்கக்கூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கி

* ஸ்கந்தபுராணம் 58-வது அத்தியாயத்தில், "எல்லா ஜனங்களும் பிரம்மாவுடைய பிள்ளைகளாயிருப்பதால் எல்லாரும் ஒன்றுசேர்ந்து சாப்பிடலாம் பேதம் நினைக்கக் கூடாதென்று விஷ்ணுவானவர் தேவதாசன் முதலான காசிராஜாக்களுக்கு உபதேசித்ததாய் எழுதப்பட்டிருக்கிறது. ஸவுத்துல் ஜப்பார் 28-ம் பக்கம்.

‡ மேற்படி புராணம் நாற்பதாம் அத்தியாயத்தில் ஆட்டின்வாயும், குதிரையின்வாயும் எப்போதும் அசுத்தமாகிற தில்லையென்று எழுதப்பட்டிருக்கிறது. ஸவுத்துல் ஜப்பார் 1-ம் வாலம் 34-ம் பக்கம்.

றதாய்க் கேட்டிருக்கிறேன். இதன்னியில் எங்கள்வாய் சுத்தமான தாயிருக்கிறது. அதனுல்தான் நாங்கள் எச்சிலை அசுத்தமென் றெண் ணுமல் எல்லாருஞ்சேர்ந்து சாப்பிடுகிறேம். உங்கள்வாய் அசுத்தப் பட்டிருக்கிறதோ என்னவோ? அதனுல்தான் நீங்கள் எச்சிலை அசுத்த மென்று நினைக்கிறீர்கள்'' என்று விடையளித்தார். இதைக்கேட்ட ஷை கனவான் தலைகவிழ்ந்தார்.

## இந்துக்களின் ஆக்ஷேபம்.

இஸ்லாம் மார்க்கத்தில் قاطع الشجر மரம் வெட்டுகிறவனையும் دائم الخمر எப்போதும் மதுபானம் பண்ணுகிறவனையும் ذابح البقر மாட றுக்கிறவனையும் ஆண்டவன் மன்னிக்க மாட்டானென்று சொல்லப்பட் டிருக்கிறது. அப்படியிருந்தும் இவர்கள் இந்துக்களுக்கு எதிரியாய் மாட்டுக்குக்கொடுமை செய்கிறர்கள்.

## உத்தரம்.

இது சுத்தப்பொய். ஆண்டவன் இவர்களை மன்னிக்கமாட்டானெ ன்று எங்கள் மார்க்கநூல்கள் ஒன்றிலாவது எழுதியிருப்பதில்லை. மர த்துக்குடையவன் தன் மரத்தைவெட்டினுல் அதனுல் யாதொரு குற்ற மில்லை. மாட்டை அறுக்கக் கூடாதென்பதுமில்லை. ஆனுல், மதுபா னம் செய்வது எங்கள் மார்க்கத்தில் கடினமான பாவமாயிருக்கிறது. என்றாலும், அவனையும் ஆண்டவன் மன்னிக்கமாட்டா னென்பதில்லை. மதுபானம் செய்கிறவனுயிருந்தாலும், மற்றும் பாவங்களைச்செய்கிறவ னுயிருந்தாலும் எப்பொழுது அவன் தவுபாச்செய்கிறுனே அப்பொ ழுதே ஆண்டவன் அவனுடைய பாவத்தைப் பொறுத்துக்கொள்ளுகி றுன்.

தவுபாவென்பது முன்செய்த பாவத்தின்பேரில் மனஸ்தாபப்பட் டு, இனிமேல் பாவஞ்செய்கிற தில்லையென்று வைராக்கியம்பூண்டு, மு ன்னுல் விட்டுப்போன தொழுகை, நோன்பு, ஸக்காத்து, குர்பானி, ஹஜ்ஜு முதலான வணக்கங்களை நிறைவேற்றுகிறதுதான் தவுபா.

இன்னும் லஞ்சம் வாங்கல், களவுசெய்தல், வழிப்பறிசெய்தல், புறம்பேசல், திட்டுதல்போல் எந்தப்பாவங்களில் அடியார்களுக்குத் தீமைசெய்தல் ஏற்படுகிறதோ அந்தப்பாவங்களுக்காக அந்த அடியார் களிடத்தில் மன்னிப்புக்கேட்டுக்கொண்டு ஆண்டவனிடத்திலும் தவு பாச்செய்யவேண்டும்.

இன்னும் ஆண்டவன் அன்பும் இரக்கமும் உள்ளவனுயிருக்கிறு ன். அவன் தன் அன்பினுல் பாவத்துக்குத் தவுபாசெய்யாம லிறந்து போன ஒரு முஸ்லிமை மன்னிக்கநாடினுலும் மன்னித்து விடுவான்.

இன்னும் நாங்கள் மாட்டை அறுப்பதும் உங்களுக்கு எதிரியாக அல்ல, மேலும் ஆடுமுதலான சில மிருகங்கள் எப்படி எங்கள் மார்க்கத்தில் ஹலாலானவைகளா யிருக்கின்றனவோ அப்படியே மாடும் எங்களுக்கு ஹலாலாயிருக்கிறது ஆதலால் ஆட்டை அறுப்பதுபோல் மாட்டையும் அறுக்கிறோம்.

இன்னும் நாங்கள் மாட்டுக்குக்கொடுமை செய்யவில்லை மேலும் நன்மையே செய்கிறோம். ஏனென்றால், எந்தமிருகம் ஆண்டவனுடைய பேரால் அறுக்கப்பட்டதோ அந்தமிருகம் கடைசியில் சொர்க்கத்தின் மண்ணுப்விடும். ஆதலால், இந்த அறுப்பு அதற்கு நன்மையாகுமே யொழிய கொடுமையாகாது.

உங்கள் இந்துமார்க்கத்தில் மாட்டை அறுப்பதும் அதைப் புசிப்பதும் ஆகுமென்று மாத்திரமல்ல * பெரும் புண்ணியமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் பிராமணனுடைய மகன் காசிக்குப்போய் கல்விபடித்துக்கொண்டு பிறகு அங்கிருந்து தன் ஊருக்குத் திரும்பிவந்தால் அவனுடைய தகப்பன் அவனை எதிர்ச்சென்றழைக்கப்போய் ஒரு மாட்டையறுத்து அதன்தோலைக் கதகதப்புடன் தன் மகனுடைய உடம்பின்மேல் வைக்கவேண்டுமென்று மனுஸ்மிருதியில் எழுதப்பட்டிருக்கிறது.

இன்னும் ஒருவன் ஒரு அன்னியனுடையமாட்டைத் திருட்டுத்தனமாய் அறுத்துத் தின்றுவிட்டு அதோடுகூட கொஞ்சம் பொய்யும்சொல்லிவிட்டால் அவனுக்கு மோக்ஷமுண்டாய் விடுமென்று உங்கள் மார்க்கத்தினல் தெரியலாகிறது. அதெப்படியென்றால் மற்ச புராணத்தில், கோதகரென்பாருக்கு ஏழுபுத்திரர்களிருந்ததாகவும் அவர் மரணமான பின் பெரும்பஞ்ச முண்டானதாகவும் அவரின் புத்திரர்கள்கையில்

* மகா பாரதம் இரண்டாம்பர்வம் மூன்றும் பிரிவில், சொல்லப்பட்டிருக்கிற தென்னவென்றால் விராஞ்சனன் என்ற ராஜன் யாகத்தில் கொழுத்த மாடுகளைக்கொன்றான். அதனல் அநேக மாடுகள்சேர்ந்து முறையிட்டுக்கொண்டன. ஆதலால் இராஜன் இரக்கப்பட்டு "யாகத்தில் மாடுகளை அறுத்துப்புசிப்பது நன்மையென்றிருந்தபோதிலும் நான் அதை நன்மையென்றெண்ணவில்லை. எனக் கூறினன்"=என்பதே.

பாருங்கள் வேதக்கட்டளைப்படி மாட்டையறுத்துப் புசிப்பது நன்மையாயிருக்க அதை நன்மையல்லவென்று இராஜன் தன் சுயபுத்தியினல் கூறுகின்றான். இராஜனுடைய புத்தி ஆண்டவனுடைய உத்திரவுக்கு மீறலாமோ - ஸவுத்து-31-32-33 - ம் பக்கங்கள்.

சாப்பாட்டுக்கு ஒன்றுமில்லாதபடியால் அவர்கள் ஒரு ரிஷியிடத்தில் போக அந்தரிஷி அவர்களை மாடுமேய்க்கக் காட்டுக்கு அனுப்பினதாகவும் அவர்கள் அக்காட்டில் பசியினால் அம்மாட்டையறுத்து தேவ, பிதுர்களுக்குப் படைத்துச் சாப்பிட்டுவிட்டு சாயங்காலம் அந்தரிஷியிடத்தில்வந்து உம்முடைய மாட்டைப் புலியடித்துத் தின்றுவிட்டதென்று சொன்னதாகவும் இந்தப் புண்ணியத்தினால் அவர்கள் பரமகதி அடைந்ததாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

இவ்விடத்தில் கொஞ்சம் கவனிக்கவேண்டியதென்னவென்றால், எந்தமார்க்கத்தில் அன்னியருடைய மாட்டை அறுத்துத் தேவர்களுக்கும், பிதுர்க்களுக்கும் படைத்துச் சாப்பிடுகிறதும் பொய்சொல்லுகிறதும் பாவமாகாமல் மோக்ஷத்துக்கே காரணமாயிருக்கிறதோ அந்த மார்க்கத்தை ஆண்டவனால் அருளப்பட்ட மார்க்கமென்றெண்ணுவதும் அதில் நற்கதிகிடைக்குமென்று ஆசைவைப்பதும் வெட்டவெளிச்சமாகிய வழிக்கேடாயும் வேண்டுமென்றே நரகத்தில் விழுவதாயுமிருக்கிறது.

இன்னும் மாட்டைப் பலிசெய்து புசிக்கும்படி ருக்குவேதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

## இந்துக்களின் ஆக்ஷேபம்.

பசுவானது இந்துக்களுக்குப் பாலைத்தருகின்றது. இஸ்லாமானவர்களுக்கு மூத்திரத்தையா கொடுக்கின்றது? ஏன் அவர்கள் அதற்கு மரியாதை செய்கிறதில்லை.

## உத்தரம்.

உண்மையில் பசுவானது உங்களுக்கு மூத்திரத்தைத் தருகின்றது. நீங்களதை வெகு பிரியத்தோடு குடிக்கிறீர்கள். எங்களுக்கோ அது பாலையும் தருகின்றது மாம்சத்தையும் தருகின்றது.

ஆதலால் பசுவில் பொதுப்பாகமென்றும் சொந்தப்பாகமென்றும் இருவகையான பாகங்களுண்டு. அதாவது:—அதன்பால் எங்களுக்கும் உங்களுக்கும் பொதுவாயிருக்கிறது. அதன் மாம்சம் எங்களுக்கே சொந்தம். அதன் மூத்திரம் உங்களுக்கேசொந்தம்.

லிங்கபூஜை, பசுபூஜைகள்செய்கிற இந்துக்களாகிய நீங்களே மாட்டுக்குமரியாதை செய்யத்தகுந்தவர்கள்.

## இந்துக்களின் ஆக்ஷேபனை·

இந்துவாயிருக்கிறவன் இஸ்லாமாகிறதுண்டு இஸ்லாமாயிருக்கிறவன் இந்துவாகிறதில்லை. இதேனென்றால் நல்லதாயிருக்கிற பதார்த்-

தம்கெட்டு ஊசிப்போகிற வழக்கமேயொழிய கெட்டுப்போனபதார்த்தம் நல்லதாகுவது கிடையாது.

## உத்தரம்

இந்துவாயிருந்து இஸ்லாமாகுவதும் இஸ்லாமாயிருந்து இந்துவாகாமலிருப்பதும் நியாயந்தான். ஏனென்ருல் சின்னவனுயிருக்கிறவன் பெரியவனுகிற வழக்கமேயொழிய பெரியவனுயிருக்கிறவன் சின்னவனுகிற வழக்கமில்லை. விக்கிரக ஆராதனைசெய்கிற இந்துக்கள் பொம்மைவிளையாடும் சிறுவர்களா யிருக்கிருர்கள். ஒரேகடவுளை வணங்கும் இஸ்லாமானவர்கள் அறிவையடைந்த பெரியவர்களா யிருக்கிருர்கள்.

இதன்னியில் இருட்டிலிருப்பவன் வெளிச்சத்தில் வர விரும்புவதேயன்றி வெளிச்சத்திலிருப்பவன் இருட்டில்போக இச்சைகொள்வதில்லை. இந்துமார்க்கம் இருட்டு, இஸ்லாமார்க்கம் வெளிச்சம்.

இன்னும் வழிதப்பி அலைபவன் வழிதேடி அடைவதேயன்றி வழிதெரிந்துசெல்பவன் வேறுவழியில் ஏன் பிரவேசிக்கிருன்? வழிதப்பி அலைபவன் ஹிந்து, வழிதெரிந்து நடப்பவன் முஸ்லிம்.

இந்துவாயிருப்பவன் இஸ்லாமாகுவதற்கும் இஸ்லாமாயிருப்பவன் இந்துவாகாமலிருப்பதற்கும் காரணமிதுதான். நீங்கள் இதையறியாமல் பதார்த்த உபமானம் சொன்னது தப்பு. ஏனென்ருல், விக்கிரகத் தொழும்பனுயிருக்கிற ஒருவன் அதை விட்டுவிட்டு பிரமஞானியாய்ப்போனல் அவனை நல்லவனுயிருந்து கெட்டவனுய்ப் போனனென்று எவராயினும் சொல்வதுண்டா? சந்தன என்ற கஸாயிக்காரனும் கங்கா என்ற தாசியும் மீரான்பாயி என்ற ராணியும் கோபிச்சந்து என்பவனும் இவர்களெல்லாம் கெட்டவர்களாயிருந்து தேவபக்தியினுல் நல்லவர்களாய்ப் போனர்களென்று உங்கள் மதநூல்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது இவர்களையும் நல்ல பதார்த்தமாயிருந்து ஊசின பதார்த்தமாய்ப் போனர்களென்று சொல்லுங்கள்.

## இந்துக்களின் ஆக்ஷேபம்.

இஸ்லாமானவர்கள் தங்கள் மார்க்கத்தில் பறையன், சக்கிலி முதலான எந்த ஜாதியையும் சேர்த்துக் கொள்ளுகிருர்கள். இப்பேர்ப்பட்ட ஈனஜாதிகளையும் தள்ளிவைக்கிருர்களில்லை.

## உத்தரம்.

சமுத்திரத்தில் உலகத்திலுள்ள நதிகளெல்லாம்போய்ச் சேருகின்றன. சமுத்திரமானது அவைகளெல்லாவற்றையும் தன்னில்சேர்த்துக் கொள்ளுகிறது. அப்படியே இஸ்லாம்மார்க்கத்தில் எந்தஜாதிக்கும் இடமுண்டு. சிறுகுட்டையில் மற்ற நதிகள்வந்து சேர அதற்கு அவ்வளவு விசாலமான இடமேது?

எவ்வித அசுத்தமான வஸ்துவாயிருந்தாலும் சமுத்திரத்திற்போய்ச்சேர்ந்து எப்படிக் கழுவப்பட்டுச் சுத்தமாய் விடுகின்றதோ அப்படியே எந்தஜாதி மனிதனுயிருந்தாலும் இஸ்லாமார்க்கத்தில் வந்தால் அவன் தன் பாவங்களைவிட்டும் சுத்தமாய்விடுகின்றான்.

சிறு குட்டையிலுள்ள தண்ணீரானது அதுதானே அசுத்தமானதா யிருக்கும்பொழுது அதனல் மற்ற வஸ்துக்கள் எப்படிச் சுத்தமாகும்? உங்கள் மார்க்கமும் சிறுகுட்டைபோல்தானிருக்கிறது. அது மற்றவர்களை எப்படிச் சுத்தமாக்கும்?

அசுத்தம் இரண்டுவகையென்பது எல்லா புத்திமான்களுக்கும் தெரிந்தசங்கதியே. கெட்ட நிர்ணயம், கெட்டகுணம் இவைகளால் இருதயம் அசுத்தமாகுதல் ஒன்று. அருவருப்பான வஸ்துக்களால் சரீரம் அசுத்தமாகுதல் மற்றொன்றும்.

கெட்ட நிர்ணயமாவ தென்னவென்றால், ஆண்டவனைத்தவிர மற்ற யாதொருவரைச் சர்வலோக ஆதீனமும், அதிகாரமு முடையவரென்றும், அநாதித்துவ முடையவரென்றும், கைபை அறிகிறவரென்றும், எண்ணுவதும் ஆண்டவனுக்கன்றி மற்றவர்களுக்கு வணங்குதல் ஆகுமென்றெண்ணுவதும், நபிமார்களையும், வேதங்களையும் விசுவாசிக்காமலிருப்பதும், மலக்குகளையும், மார்க்கத்துடைய கட்டளைகளையும் இலேசாயெண்ணுவதும், கியாமத்துநாள் உண்டாகுமென்பதில் சந்தேகம் கொள்வதும், ஆண்டவனுடைய அன்பை ஆதரவுவைக்காமலும், அவனுடைய வேதனைக்குப் பயப்படாமலுமிருப்பதும் இன்னும் எந்த காரியத்தை நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லம் செய்யவும் சொல்லவுமில்லையோ அந்தக் காரியத்தை அழகானதென்றும் மார்க்கத்துடைய காரியமென்றும் எண்ணுவதும் இன்னு மிவைபோன்றவைகளுமே கெட்ட நிர்ணயங்களாம்.

இனி கெட்டகுணமாவ தென்னவென்றால் தன்னை நல்லவனென்றெண்ணிக்கொள்வதும், தன்னுடைய வணக்கத்தின்பேரில் ஜனங்கள் தன்னைப் புகழவேண்டுமென்று ஆசைவைப்பதும், ஒருவனிடத்தில் யா

தொரு செல்வமிருக்கக்கண்டு அவன்மேல் பொறாமைவைப்பதும், யாதொருவன்மேல் பகைவைப்பதும், பொருளாசைவைப்பதும், நெடுநாள் ஜீவித்திருப்போமென்று மேலெண்ணம்வைப்பதும், பாவஞ்செய்யத்துணிவதும் இன்னு மிவைபோன்றவைகளும் கெட்டகுணங்களாம்.

இந்த இருதய அசுத்தமானது சரீர அசுத்தத்தைக் காட்டிலும் கெட்டதாயிருக்கிறது. ஏனென்றால், சரீர அசுத்தம் நீங்குவது மிக வெளிது. தண்ணீரால் கழுவினால் நீங்கிவிடும். இருதய அசுத்தம் நீங்குவது மகாகஷ்டம் இருதய அசுத்தங்களில் குப்ரியத்தென்ற அசுத்தம் அதாவது ஆண்டவனைவிட்டு மற்றவர்களை வணங்குதலென்கிற அசுத்தமானது எல்லாவற்றிலும் கடினமானது. அது மாறாத வேதனையில் தள்ளுகிறதாயிருக்கிறது. இந்த குப்ரியத்தென்ற அசுத்தத்தினாலேயே நாங்கள் காபிர்களை அருவருப்பாய் நினைக்கிறோம்.

இந்த இருதய அசுத்தமென்னும் குப்ரானது ஈமான்கொள்வதினால் நீங்கிவிடுகின்றது. ஏனென்றால் எப்பொழுது நிர்ணயம் செம்மையாய்விட்டதோ அப்பொழுதே இருதயம் சுத்தமாய்விட்டது அவன்பறைபனாயிருந்தாலும் சக்கிலியாயிருந்தாலும் யாராயிருந்தாலும் சரி. எங்களிடத்தில் பறையன் சக்கிலி முதல் எல்லா ஹிந்துக்களும் சமமாயிருக்கிறார்கள். ஏனென்றால், பறையன் எப்படி ஒரே ஆண்டவனைவிட்டுப் பலதெய்வங்களை வணங்குகிறானோ அப்படியே பாப்பான் முதல் மற்ற ஹிந்துக்களும் பலதெய்வங்களை வணங்குகிறார்கள். இன்னும் பாப்பான்முதல் மற்ற ஹிந்துக்கள் எப்படி இஸ்லாமார்க்கத்தை விரோதமாய் நினைக்கிறார்களோ அப்படியே பறையனும் விரோதமாய் நினைக்கிறான். இன்னும் பாப்பான்முதல் மற்றும் ஹிந்துக்களுக்கு எப்படி கோவிந்தன், நாராயணன், பரசுராமன், கிருஷ்ணன், ஆதிமூலம், ஆறுமுகம், சுப்பிரமணியனென்று பேரிடப்பட்டிருக்கிறதோ அப்படியே பறையருக்கும் பேரிடப்பட்டிருக்கிறது. இப்படி சகல விஷயத்திலும் பறையன் மற்றும் இந்துக்களுக்குச் சமானமாயிருக்கும்போது அவனை மார்க்கத்தில் சேர்க்கக்கூடாதென்பதும் மற்றவர்களைச் சேர்க்கலாமென்பதும் நீதமாகாது. எவனாயிருந்தாலும் எப்பொழுது விக்கிரகவணக்கம், பல தெய்வவணக்கம் முதலான குப்ரான காரியங்களைவிட்டும் தவுபாச்செய்தானோ அப்பொழுதே அவன் எங்கள் சகோதரனாகிறான்.

ஒருவன் இஸ்லாமாக நாடினால் முந்தி அவனுடைய இருதய அசுத்தம் நீங்கும்பொருட்டு “ ஆண்டவனுக்கன்றி மற்றெவருக்கும் வணங்கலாகாதென்றும் முகம்மது அலைஹிவசல்லமவர்கள் ஆலாரு சல்லல்

ண்டவனால் அனுப்பப்பட்ட திருத்தூதராயிருக்கிறார்களென்றும் அவர்கள்தான் நமக்கு நல்வழியைக் காட்டினவர்களென்றும் அவர்களைப் பின்பற்றிநடப்பது எல்லாருக்கும் விதியாயிருக்கிறதென்றும் அவனுக்குப் போதிப்பது பர்லாயிருக்கிறது. பின்பு அவனுக்கு ஈமானுடைய ஒழுங்குகளைப்பொதிந்த வாசகத்தைக்கற்பித்து மற்றும் குப்றுகளை விட்டுத் தவ்பாச்செய்வித்து அதன்பிறகுதான் அவன்சரீர அசுத்தம் நீங்குவதற்காக அவனை முழுக்காட்டவேண்டியதாயிருக்கிறது. நீங்கள் பறையன், சக்கிலி இவர்களைத் தள்ளிவைக்க வேண்டுமென்பது எதற்காக? அவர்கள் சரீர அசுத்தமாயிருக்கிறார்களென்றுதானே? இருதய அசுத்தத்தை நீங்கள் அவ்வளவாய்க் கவனிப்பதில்லை. இது உங்களின் தெரியாமையாயிருக்கிறது. சரீர அசுத்தத்தின் நிமித்தம் பறையர், சக்கிலியர்களை மார்க்கத்தில் சேர்க்காமல் தள்ளிவிடவேண்டுமென்று நீங்கள் சொல்லும்பக்ஷத்தில் உங்கள் சரீரத்திலும் ஒரு சக்கிலியத்தோட்டியிருக்கிறான். அதாரென்றால் உங்கள இடதுகையேயாம். அதனால் தினந்தோறும் உங்கள் மலபாதையின் அசுத்தத்தைக் கழுவுகிறீர்கள்; அதையும் உங்கள் சரீரத்திலிருந்து வெட்டித்தள்ளிவிடுங்கள்.

## இந்துக்களின் ஆக்ஷேபம்.

இஸ்லாமானவர்கள் கத்னு (விர்த்தசேதனம்) செய்துகொள்ளுகிறார்கள் இந்தக்காரியம் ஆண்டவனுக்குப் பிரியமானதாயிருந்தால் பிறப்பிக்கும்போதே ஒவ்வொரு முஸ்லிமையும் கத்னு செய்யப்பட்டவனாகப் பிறப்பிக்கமாட்டானா?

## உத்தரம்.

ஆண்டவனுக்குப் பிரியமானகாரியமும் பிரியமில்லாத காரியமும் நபியவர்களின் திருவாய்மொழியால் தெரியலாகும் ஆதலால் இந்தக் காரியம் ஆண்டவனுக்குப் பிரியமில்லாததாயிருந்தால் நபியவர்களின் மூலமாய் இதைக்குறித்து ஆக்கியாபிக்கமாட்டான். ஆயினும் இதற்கு இரண்டுவித சமாதானங் கூறுகிறோம்.

1-வது இந்துக்கள் பெண்பிள்ளையை உயிராகவே நெருப்பிலெரிந்து சாகவிடுகிறார்கள். இன்னும் சிலர் காசியில்போய் ரம்பத்தில் அறுப்புண்டு சாகிறார்கள். சிலர் கங்கையில்விழுந்து சாகிறார்கள் இன்னும் சிலர் இமயகிரியென்னும் பனிமலையில் உருகிச்சாகிறார்கள். சிலர் கண்களைக் கட்டிக்கொண்டு வழியில் யாதொரு கிணராவது அகழாவது எதிர்ப்பட்டால் அதில்விழுந்து சாகலாமென்ற எண்ணத்துடே

ன் தக்ஷணத்தின் புறமாய்நோக்கிச் செல்கிறார்கள். இவ்வகையாய்ச் சாகிறதைப் பெரும்புண்யமென்று எண்ணுகிறார்கள். இந்தக் காரியங்களில் ஆண்டவனுக்குப் பிரியமிருந்தால் இவர்களைப் பிறப்பிக்கும் போதே சாகடிக்கமாட்டானா?

ஒருக்கால் நீங்கள் இக்காலத்தில் ஒரு இந்துவும் இப்பேர்ப்பட்ட காரியங்களைச் செய்கிறதில்லையென்று சொல்லுவீர்களானால் அதற்கு மறுமொழியாவது:—இக்காரியங்களெல்லாம் உங்கள் மார்க்கத்தில் ஆகுமானவைகளாயும் நன்மையானவைகளாயும் இருக்கின்றன. ஆனால் இப்பொழுது இங்கிலீஷ் துரைத்தனத்தாரால் இப்பேர்ப்பட்டகாரியங்களைச் செய்யக் கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் ஒரு இந்துவும் இவ்வகையான காரியங்களைச் செய்கிறதில்லை.

உண்மையில் தன்னுயிரைத் தானே மாய்த்துக் கொள்ளுகிறது கொடிய பாவமாயும், பெரிய மூடத்தனமாயு மிருக்கிறது. இன்னும் **ஆப்காத்தீ மஹாப்பாப்பி** தற்கொலை செய்துகொண்டவன் பெரும்பாதகனென்று நீங்களும் சொல்லுகிறீர்கள். மேற்கண்டவர்களும் தம்முயிரைத் தாமாய் மாய்த்துக் கொண்டவர்களா யிருக்க அவர்கள் உங்களிடத்தில் பெரும்பதவி யடைகிறவர்களா யிருப்பதெப்படி?

இன்னும் ஒருவன் மிருகத்தின்மேலிருந்து தவறி விழுந்திறந்து போனாலும், தண்ணீரில் தவறி விழுந்திறந்துபோனாலும், அல்லது யாதொரு பெண்பிள்ளை பிரசவித்து இறந்துபோனாலும் இவ்வகையான மாணத்தில் இறந்தவர்கள்பேரில் ஒருகுற்றமு மில்லாமலிருக்க நீங்கள் இதை **ஆப்மரத்** துர்மரணம் என்கிறீர்கள். புத்தியினால் நோக்குகையில் ஒருவன் தன்னுயிரைத் தானாய் மாய்த்துக்கொண்டால் அவன் பெரும்பாதகனென்றும் திடும்பிரவேசமான ஆபத்தினாலிறந்தவன் நன்மையடையப் பாத்தியஸ்தனாக வேண்டுமென்றும் தெரியவருகின்றது. எங்கள் மார்க்கமும் இப்படியே கூறுகின்றது.

2-வது இஸ்லாமானவர்களாகிய எங்களுடைய மர்மஸ்தானரோமங்களை க்ஷவரத்தினால் களைவது அவசியமான சுன்னத்தாயிருக்கிறது இப்படியே இந்துக்களாகிய நீங்கள் உங்கள் தாடி ரோமங்களை க்ஷவரத்தினால் களைவது உங்களுக்கு அவசியமாயிருக்கிறது. இந்தக்காரியம் ஆண்டவனுக்குப் பிரியமானதாயிருந்தால் முந்தியே உங்களுக்குத் தாடிமுளைக்கா திருக்கும்படி செய்யமாட்டானாவென்று நாங்கள் ஆக்ஷேபித்தால் நீங்கள் என்னபதில் சொல்வீர்கள்?

## இந்துக்களின் ஆக்ஷேபம்

இஸ்லாமானவர்கள் தன்ஜீவனெப்படியோ அப்படியே மற்றும் ஜீவர்களென்றெண்ணாமல் ஜீவவதைசெய்து புலாலைப் புசிக்கிறார்கள்.

## உத்தரம்

ஆண்டவன் மனிதனுடைய உபயோகத்துக்காக ஜீவராசிகளில் சிலதை ஏறிப்போவதற்கும், சிலதை சுமைசுமக்கவும், சிலதின் மாம்சத்தைப்புசிக்கவுமாகப் படைத்திருக்கிறான். ஆதலால் எந்த உயிரினங்களின் மாம்சத்தைப் புசிக்கலாமென்று எங்கள் மார்க்கம் கூறுகின்றதோ அதை நாங்கள் புசிக்கிறோம். நாங்கள் ஆண்டவனுடைய உத்திரவில்லாமல் உயிரினங்களை அறுக்கும்பக்ஷத்தில் சந்தேகமில்லாமல் ஆக்ஷேபிக்க இடமிருந்தது.

இன்னும் புத்தியினால் நோக்குகையிலும் மனிதனுடைய உபயோகத்துக்காக உயிரினங்களைக்கொல்வது குற்றமல்லவென்று ஏற்படுகின்றது. ஏனென்றால், உயர்ந்த ஜீவனுடைய உபயோகத்துக்காகத் தாழ்ந்தஜீவனைக் கொல்லப்படுவதுண்டு அதெப்படியென்றால் ஒரு மாடுஅல்லது குதிரையினுடைய தேகத்தில் புண்ணுண்டாகி அதில் புகள் ஜனித்தால் அந்த ஒரு மாடு அல்லது குதிரைக்காக ஆயிரக்கணக்கான புழுக்களை மருந்தினால் கொல்லப்படுவது ஆகுமாயிருக்கிறது. ஏனென்றால், புழுவானது மாடு அல்லது குதிரையைப்பார்க்கிலும் தாழ்ந்தஜீவனாயும் மாடு அல்லது குதிரையானது புழுவைக்காட்டிலும் உயர்ந்த ஜீவனாயும் இருப்பதினாலேயாம். ஆகவே மனிதன் எல்லா ஜீவர்களிலும் உயர்ந்த ஜீவனாயிருக்கிறானாதலால் அவனுக்குபயோகப்படுகிற எந்த ஜீவனையும் அவன்கொல்வது குற்றமல்ல.

* இதுவுமன்றி இந்துக்களாகிய உங்கள் மார்க்கத்திலும் மாம்சபக்ஷணம் செய்யக்கூடாதென்றவிதி யேற்பட்டிருப்பதில்லை, உங்கள் தர்மசாஸ்திரத்தில் "எந்த உயிரினங்கள் புசிக்கப்படுகின்றனவோ அவைகளையும் இன்னும் எந்தமனிதர்கள் அவைகளைப் புசிக்கின்றார்களோ அவர்களையும் பிரம்மாவே சிருஷ்டித்தார் என்றும் சாஸ்திரப்படி அவைகளைப்புசித்தால் யாதொரு தோஷமில்லையென்றும் தேவபிதுர்க்

---

* ருக்குவேதத்தில், "உயிரினங்களை உயிரினங்களும் பக்ஷிக்கின்றனவென்றும் கீழ் பல்லிருந்து மேல் பல்லில்லாத உயிரினங்களானவை பக்ஷணங்கள் என்றும் அதாவது புசிக்கப்படும் ஜீவர்கள் என்றும் கீழ் பல்லும் மேல் பல்லுமுள்ள உயிரினங்களானவை பக்ஷணிகளென்றும் அதாவது புசிக்கும் ஜீவர்கள் என்றும் பக்ஷணத்தைப் பார்க்கிலும் பக்ஷண சிறந்ததென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

களுக்கு மாம்சம்படைத்துச்சாப்பிடுவேது பாவமல்லவென்றும் ஒணான், பல்லி, முதலை, முயல் இவைகளைப் புசிப்பது பிராமணருக்கு ஆகுமென்றும் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் மகாபாரதம் சாந்திபர்வம் மூன்றாம்பிரிவில், "வேதம் ஓதி அறுக்கப்பட்ட ஜீவராசிகளின் மாம்சம் சுத்தமானதாயிருக்கிறதென்றும், அதைப் புசிப்பவனுகிறவன் மாம்சமே புசிக்காதவனுக்குச் சமானமாயிருக்கிறானென்றும், எந்த ஜீவராசியின்பேரில் வேதம் ஓதப்படவில்லையோ அது ஆகாதென்றும் எழுதியிருக்கிறது." இதன்படி உயிரினங்களை அறுப்பதும் மாம்சம் புசிப்பதும் பாவமல்லவென்று ஏற்படவில்லையா?

இன்னும் மனுஸ்மிருதியில் "இன்னின்ன மாம்சங்களால் சிரார்த்தம்செய்தால் இத்தனை இத்தனை காலம்வரையில் உங்கள் பிதுர்க்கள் திருப்தியடைந் திருக்கிறார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் ஐந்து நகங்களுள்ள உயிரினங்களில் உடும்பு, ஆமை, முயல் இவைகளும் மச்சங்களிற் சிலவும் புசிக்கத்தகுந்த வைகளென்று சத்தாக்ஷரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இன்னும் சூரியனுடைய உத்திராயணத்திலும், தக்ஷணாயணத்திலும் அதாவது ஆவணிமீ துவக்கத்திலும் மாசிமீ துவக்கத்திலும் மிருகபலிசெய்து புசிப்பது அவசியம் (பர்லு) என்று மனுசாஸ்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இப்படி உங்கள் மார்க்கத்திலும் ஜீவவதையும், மிருகபலியும், மாம்ச பக்ஷணமும் ஆகுமாயிருக்கும்போது, இஸ்லாமானவர்கள் அப்படிச்செய்கிறார்களென்று ஆட்சேபிப்பானேன்?

இவ்விடத்தில் ஹிந்துக்கள் "எங்கள் மார்க்கத்தில் மாம்சபக்ஷணம் செய்தல் முற்காலத்தில் ஆகுமாயிருந்தது இப்போது நிஷேதமாய் (ஹறாமாய்) விட்டதென்று சொல்லும்பக்ஷத்தில் அதற்கு மறுமொழியாவது:—உங்கள் மார்க்கத்தில் முற்காலத்தில் ஆகுமாயிருந்தால் எங்கள் மார்க்கத்தில், முற்காலத்திலும் இக்காலத்திலும், இனி எக்காலத்திலும் ஆகுமாயிருக்கிறது. எவ்விதத்திலும் உங்கள் ஆக்ஷேபம் எங்களிடம்செல்லாது.

இன்னும் மாம்சபக்ஷணம் செய்தல் இக்காலத்தில் ஹறாமாய்விட்டதென்று சொன்னீர்களே இதுவும் நம்பத்தகாத வார்த்தையாயிருக்கிறது. ஏனென்றால், உங்களில் கோழைமனத்தரான சில ஜனங்கள் மாத்திரம் (வேதகட்டளையினால் அல்ல) தங்கள் சுயபுத்தியினாலும், தங்கள்போன்ற முன்னோர்களின் பின்பற்றுதலாலும் மாம்சபக்ஷணம்

ஆகாதென்று தள்ளிவைத்திருக்கிறார்கள். என்றாலும் இந்துக்களில் பெரும்பாலார் ஆதிகால வேதவழக்கப்படியே சத்திபூஜை முதலிய வைகளில் ஆடுகளையும், எருமைகளையும் பலியிடுகிறார்கள். இப்போது இந்தியாவில் தினந்தோறும் அறுக்கப்படுகிற இலக்ஷக்கணக்கான கஸாயி ஆடுகளின் மாம்சத்தில் பெரும்பாகம் இந்துக்களின் அனுபோகத்துக்கே வருகிறதென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம்.

## இந்துக்களின் ஆக்ஷேபம்.

இஸ்லாமானவர்கள் பிணத்தை நெருப்பில் தகனிக்காமல் பூமியில் புதைக்கிறார்கள். நெருப்பானது சகல அசுத்தமான வஸ்துக்களையும் சுத்தமாக்குகிறதாயும் எல்லா துர்வாசத்தையும் போக்குகிறதாயுமிருக்கிறது. ஆதலால் பிணத்தை நெருப்பில் தகனிக்கிறதே நலம். பூமியில் புதைக்கிறவர்கள் அதை அழுகிப்புழுத்து நாற்றமெடுக்கச் செய்கிறார்கள்.

## உத்தரம்.

நெருப்பானது நம்பத்தகாத மோசக்காரன்போலும் மண்ணானது நம்பத்தகுந்த விசுவாசிபோலுமிருக்கிறது. நெருப்பினிடத்தில் எந்தவஸ்துவை ஒப்புவித்தாலும் பக்ஷித்துவிடுகின்றது. பூமிக்குள்வைக்கப்படுகிற பொருளோ காக்கப்படுகிறது. ஆகலால் பிணத்தை மோசக்கார நெருப்பினிடத்தில் ஒப்புவிப்பதைப்பார்க்கிலும் அதை விசுவாசியான பூமியினுள்வைப்பதே நலம்.

1-வது:—பணங் காசு, பொன், பொருள் முதலிய திரவியத்தைக் காப்பாற்றிவைக்க வேண்டுமென்ற எண்ணமுள்ளவர்கள் அதைப் பூமியில் புதைத்துவைக்கிற வழக்கமேயொழிய நெருப்பில் கருக்குகிறதில்லை. ஆனால் எந்தப்பண்டத்தை நாசமாக்கவேண்டுமென்று எண்ணுகிறார்களோ அந்தப் பண்டத்தை நெருப்பில்கொளுத்திச் சாம்பலாக்கிவிடுகிறார்கள். இறந்தவன்பிணமோ காப்பாற்றிவைக்கவேண்டிய பொருளாயிருக்கிறது. ஏனென்றால், கியாமத்துநாளில் அவன் உயிர்த்தெழும்பவேண்டுமென்பதையும் ஆன்மாக்கள் அவைகள் விட்டுப்பிரிந்த சரீரங்களில் பிரவேசிக்கவேண்டுமென்பதையும் எதிர்ப்பார்க்கப்படுவதினாலேயாம். ஆகவே பிணத்தை நெருப்பில் தகனிப்பது இந்த எதிர்ப்பார்க்குதலுக்கு முற்றிலும் விரோதமாகும்.

2 - வது:—குப்பை கூளத்தைக் கொளுத்துவதுபோல் பிணத்தைக் கொளுத்தி அதன்சாம்பலைக் காற்றில் பறக்கடிப்பதானது இறந்தவனுக்குச் செய்கிற பெரிய மரியாதை தாழ்வாயிருக்கிறது. நீங்க

ள் மண்ணனது பிணத்தை அழுகச்செய்து துர்வாசத்தை யுண்டாக்குகிறதென்று சொல்லுகிறீர்களே இது சரியென்பது எப்பொழுதானல் மீண்டும் அதை நாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமிருந்தால்தான். அப்படிக்கில்லாமல் அதை பூமியிலேயே வைத்திருக்க வேண்டியதா யிருந்தால் அது அழுகிப்போவதினல் நமக்கென்ன? ஏனென்றால், அதன் யாதொருகுணமும் ஜனங்களுக்கு வெளியாகாமல் பூமிக்குள்ளேயே மறைந்திருப்பதுடன் அழுகின சரீரத்தின் நமர்களெல்லாம் நன்ருய்க்காய்ந்து உலர்ந்துபோகின்றது. கை, கால், பொருத்துவாய் முதலான சகல உறுப்புகளும் அதனதன் கோலத்திலிருக்கின்றன, ஆதலால் மனிதன் தன்னுடைய ஜீவகாலத்தில் நித்திரையிலிருந்ததுபோல் இப்பொழுதும் நித்திரையிலிருக்கிறுன். நெருப்பில் தகனிப்பதானது அவனுடைய உறுப்புகளுடையவும், கோலத்துடையவுமான அடையாளம் ஒன்றுமில்லாதபடி அழித்துவிடுகிறது.

3 - வது:—மனிதனுடைய உற்பத்தி மண்ணைக்கொண்டாயிருக்கிறது. ஆதலால், كل شيء يرجع الى اصله எல்லாப்பொருளும் அதன் மூலத்தினிடம் திரும்பும் என்றபடி பிணத்தை அதன்மூலமாகிய மண்ணினிடத்திற்சேர்ப்பதுதான் நியாயமாகும்.

ஹிக்காயத்து,

இஸ்லாம்மார்க்கம் ஊர்ஜிதமான ஆரம்பத்தில் இஸ்லாமுடைய ஒரு பட்டாளம் ஸீஸ்தான்ஜில்லாவில் வந்திறங்கினது. அப்பொழுது இஸ்லாமென்பது ஒரு நூதனமார்க்கமா யிருந்தபடியால் இஸ்லாமானவர்களுடைய நடவடிக்கைகளைப் பார்க்கிறதற்காக கல்விமாகுகிய ஓர் இந்துவானவர் அவ்விடத்திற்கு வந்தார். பின்பு இஸ்லாமானவர்களுடைய நிலைமைகளையும் அவர்களுடைய நடவடிக்கைகளையும் உற்றுணர்ந்து சற்று நிமிர்ந்து ஓ இஸ்லாமானவர்களே! உங்களுடைய எல்லா நடவடிக்கைகளும் நன்ருயிருக்கின்றன. ஆனல், பிணத்தை நெருப்பில் தகனிக்காமல் பூமியில் புதைக்கிறீர்களே இதுமாத்திரம் நல்லதல்ல வென்ருர். அப்பொழுது அவ்விடத்திலிருந்த ஒரு ஆலிமானவர் அந்தக் கல்விமானைநோக்கி நான் உம்மிடத்தில் ஒரு கேள்வி கேள்கிறேன் நீர் முந்தி அந்தக் கேள்விக்குப்பதில் சொல்லும்பக்ஷத்தில் நான் உம்முடைய கேள்விக்கு விடையளிக்கின்றேனென்ருர். அதற்கந்தக் கல்விமான் அப்படியே கேளுமென்ருர் அதற்கு ஆலிமானவர் சொல்லத்தொடங்கினதாவது:—ஒருவன் தன் ஜனனதேசத்திலிருந்து அன்னியதேசத்திற்கு யாத்திரைபோய் அந்தத்தேசத்தில் ஒருஸ்திரீயை விவாகம்செய்துகொண்டான் வேறொரு ஸ்திரீயை சோர்சமைப்ப

தற்காக நியமித்துக்கொண்டான். அந்த விவாக ஸ்திரீயினால் அவனுக்கொரு பிள்ளைபிறந்தது. பின்பு அவன் அத்தேசத்திலிருந்து தன் ஜனன தேசத்திற்குப்போக நேரிட்டால் அந்தப்பிள்ளையை யார்வசம் ஒப்பவிக்கிறது? அந்தச் சமையல்காரிவசமா? அல்லது அந்தப் பிள்ளையின் தாய்வசமா? என்றுகேள்க. இந்துவான அந்தக்கல்விமான், தாயிருக்கச் சமையல்காரிவசம் கொடுக்கவேகூடாது. ஏனென்றால், அந்தப்பிள்ளை தாயின்பிள்ளையேயொழிய சமையல்காரியின் பிள்ளையல்ல" வென்றார். அதற்கந்த ஆலிமானவர் அக்கல்விமானைநோக்கி நீர் சொன்னது சரி இப்பொழுது உம்முடைய கேள்விக்கு விடையளிக்கிறேன் கேளும். வானலோகத்திலிருந்து றாகு யென்ற ஆத்மாவானது பூலோகத்திற்கு யாத்திரையாய்வந்தது பூமியில்நின்றும் ஒருசரீரம் செய்து அதற்குக் கொடுக்கப்பட்டது இன்னும் அந்தச் சரீரம் நிலைத்திருக்கும்பொருட்டு மண்ணிலிருந்தே அநேக போஜனபதார்த்தங்களும், அவிழ்தப்பொருள்களும், வஸ்திரமும், குடியிருப்புஸ்தானமும் இன்னும் பலவகையான பிரயோசனங்களும் அதற்குக் கொடுக்கப்பட்டன. நெருப்பானது சமைத்தல் பொரித்தலுக்கேயொழிய வேறொன்றுக்கும் உபயோகப் படுகிறதில்லை. நெருப்பினாலுண்டாகும் பெரிய பிரயோசன மென்னவென்றால் பூமியிலுண்டாகும் பச்சையானவஸ்துக்களை வேகவைப்பதுதான். ஆதலால் பூமியானது சரீரத்துக்குத் தாயைப்போலும் நெருப்பானது சமையல்காரியைப்போலு மிருக்கிறது. சரீரத்துக்குத் தகப்பனைப்போலிருந்த ஆத்மாவானது எப்பொழுது தன் இருப்பிடத்துக்குப்போக நேரிட்டதோ அப்பொழுது அது தன்னுடையமகனாகிய சரீரத்தை அதன் தாயாகிய மண்ணினிடம்கொடுக்கவேண்டுமேயொழிய சமையல்காரியாகிய நெருப்பினிடம் கொடுப்பது நியாயமாகாது என்றார். இதைக்கேட்ட ஷெ இந்துவானவர் சரியென்று ஏற்றுக்கொண்டார். *

## ஓர் விண்ணப்பம்,

இந்த அத்தியாயத்தில் இந்துக்கள் கேள்கும் சில கேள்விகளை மட்டும் எழுதி அவைகளுக்கு ஜவாபு கொடுக்கப்பட்டது. பாதிரிகள் கேள்கும் அநேகம் கேள்விகளை இந்துக்கள் படித்துக்கொண்டு அவைகளையும் சில ஹிந்துக்கள் கேள்பதுண்டு. அந்தப் பாதிரிகளின் எல்லாக் கேள்விகளுக்கும் கீழ்கண்ட கிதாபுகளில் விபரமாய் ஜவா

* இந்த ஹிக்காயத்தையும் இதைச்சேர்ந்த ஆக்ஷேப உத்தரங்களையும் தப்ஸீறு அஜீஸியிலிருந்து எடுத்தெழுதப்பட்டது.

புகள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்வையிட்டுக் கொள்ளவும்.

அவையாவன

இஸ்திப்ஸார், இஸாலத்துல் அவ்ஹாம், ஸஉத்துல் ஜப்பார், ஸபறுல்முபீன், கில்அத்துல்ஹுனூது, ஹத்யத்துல் அஸ்னும், தஸ்னீபாத்தெ சைய்யிது அபுல்மன்ஸூர், தமிழ்திரியேகத்துவநிவாரணம் இவைகளும் இன்னும் சில கிதாபுகளுமாம்.

அனுபந்தம்,

## இஸ்லாம் மார்க்கத்தின் நன்மைகளைக்குறித்துப் பேசுவது

இஸ்லாம் மார்க்கத்திலுள்ள நன்மைகள் எல்லாவற்றையும் விவரித்துச்சொல்ல நான் அவ்வளவு சக்தியுள்ளவனல்ல. என்கினும் இப்பொழுது என்மனதில் தோன்றியவைகளில் சிலவற்றை என்னாலியன்றமட்டும் விவரமாயெழுதுகிறேன்.

1 - வது நன்மை:—இம்மார்க்கத்தில் ஆண்டவனை ஒன்றுபடுத்தவேண்டுமென்னும் தவ்ஹீதை, வெகுதெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஆண்டவனுடைய ஜாத் தென்ற உள்ளமையிலும் சிபாத் தென்ற அவனுடைய இலக்ஷணங்களிலும் அப்ஆல் என்ற அவனுடைய செயல்களிலும் அவனோடு மற்றவர்களைச் சம்பந்தப்படுத்தக் கூடாதென்பதே.

யூனானிய பலாஸிபர்களும் இந்துக்களிலுள்ள அநந்தங் கல்விமான்களும் தவ்ஹீதை நன்றாயறிந் திருக்கிறார்கள். இந்தத் தவ்ஹீதை இம்மார்க்கத்தில் எவ்வளவு துலக்கமாய்ச் சொல்லப்பட் டிருக்கிறதென்றால். ஆண்டவனுக்கேயொழிய மற்றவர்களுக்கு வந்தனத்துடைய சஜ்தாவும் செய்யக்கூடாதென்றும், துன்பம் நீங்கவும், கோரிக்கைகள் நிறைவேறவும், ஆண்டவனிடத்திலன்றி மற்றவர்களிடத்தில் முறையிடக் கூடாதென்றும் கண்டிப்பாய் தடுக்கப்பட்டிருக்கிறது. சொரூபங்களைச்செய்வதும், யாதொருவருடைய கபுறைப்போல் பொய்யான கபுறுகளுண்டாக்கி அதற்கு ஸியாரத்துசெய்வதும். இன்னுமிப்படியே விக்கிரக வணக்கத்துக்குக் காரணமாயிருக்கிற மற்றுங் காரியங்களைச் செய்வதும் கூடாதென்று விலக்கப்பட்டிருக்கிறது. ஆண்டவன்பேராலன்றி மற்றவர்பேரால் ஆணையிடக் கூடாதென்றும் ஆக்கியாபிக்கப்பட்டிருக்கிறது. இதைக்குறித்த சங்கதிகளிற் சிலவற்றை 1 - வது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

2 - வது நன்மை:—நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சுன்னத்தென்ற நடவடிக்கைகளுக்கு இணங்கிநடப்பது.

இதரமார்க்கங்களில் கெடுதிசம்பவித்ததேனென்றால், அம்மார்க்கத்தார் பெரும்பாலும் பிதுஅத்தென்ற நூதன காரியங்களை வழங்கிவந்ததினாலேயாம். இதன் நிமித்தமே நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "என்னுடையவும் என் அஸ்ஹாபுகளுடையவுமான சொல் செயல்களுக்குமேல் மார்க்கத்தில் அதிகமாய் ஒரு காரியமும் செய்யக்கூடாதென்று ஏற்கெனவே உத்திரவின்மேல் உத்திரவாக எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

இன்னும் என் உம்மத்துடைய மார்க்கத்தை பிதுஅத்தென்ற நூதன காரியங்களில் நின்றும் சுத்தப்படுத்தும்பொருட்டு ஒவ்வொரு நூற்றாண்டின் துவக்கத்தில் ஒவ்வொருவரை ஆண்டவன் உண்டாக்குவானென்று நாயகமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள்." அப்படியே அந்தந்த நூற்றாண்டுகளின் துவக்கங்களில் அம்மாதிரியான மனிதர்கள் உண்டாகிக்கொண் டிருந்தார்கள். இனி கியாமத்துநாள் வரையில் இப்படியே உண்டாகிக்கொண் டிருப்பார்கள்.

3 - வது நன்மை:—அகாயிது என்னும் மார்க்க நிர்ணயங்களை ஸ்திரப்படுத்துவது இது இந்தப் புஸ்தகத்தின் 1 - ம் அத்தியாயத்தினால் வெளியாகும்.

4 - வது நன்மை:—இந்த மார்க்கத்திலுள்ள இபாதத்தேபதனி' இபாதத்தேமாலி யென்ற தேகசம்பந்தமான வணக்கங்களும், திரவிய சம்பந்தமான வணக்கங்களும் மனதுக்கு அதிக திருப்தியை யுண்டாக்குகிறவைகளா யிருக்கின்றன. அந்த வணக்கங்களின் தொகையில் நின்று மொன்றாயிருப்பது தொழுகை. இந்தத்தொழுகை எப்பேர்ப்பட்ட வணக்கமென்றால், சகலபடைப்புகளும் அந்தத் தொழுகையின் ரூபத்தில் அமைக்கப்பட்டனவா யிருக்கின்றன. அதெப்படியென்றால், வானவரென்ற மலக்குகளில் அநேகர் திக்று, ஹமது, தஸ்பீஹ், தக்தீஸ் (தியானித்தல், புகழ்தல், துதித்தல், தூய்மைகூறல்) முதலிய வணக்கங்களில் அமைந்திருக்கிறார்கள். மரங்கள் கியாமென்னும் நிலையிலும், மிருகங்கள் றுகூஉ என்னும் குனிவிலும் மலைகள் கஃதாவென்னும் இருப்பிலும், ஊர்வன சஜ்தாவென்னும் சாஷ்டாங்கத்திலும் அமைந்திருக்கின்றன. ஆண்டவன் இவை யெல்லாவற்றின் வணக்கங்களைத்திரட்டி இஸ்லாமானவர்களுக்குக் கொடுத்திருக்கிறான். இதன் கருத்து:—தொழுகையில் தியானித்தல், புகழ்தல், துதித்தல் தூய்மைகூறல், நிலை, குனிவு, இருப்பு, சஜ்தாமுதலான எல்லாச் செயல்களுமுண்டு என்பதே.

5 - வது நன்மை:- விவகாரங்களும்; குடிகளின் சம்ரட்சணையும் தாய்தந்தையர், பெண்ஜாதிபுருஷர், மற்றும் பந்துக்கள், அண்டைவிட்டார் இவர்கள் விஷயமாய் நடந்துகொள்ளவேண்டிய முறைகளும்; எத்திம்கள், (தகப்பனிழந்த பிள்ளைகள்) முசாபிர்கள், சிறைச்சாலையிலிருப்பவர்கள், ஏழைகள் இவர்களின் விசாரிப்பும்; போஜனமருந்தல் வர்த்தகம்செய்தல், விவாகம்செய்தல், இவைகளின் ஒழுங்குகளும் இந்தமார்க்கத்தில் எவ்வளவு விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன வென்றால், எவருக்கு எந்த விஷயம் சம்பவித்தாலும் அந்த விஷயத்தையேகுறித்த விவரமும் தீர்ப்பும் மார்க்கத்துடைய கிதாபுகளில் ஏற்கெனவே எழுதப்பட்டிருக்கிறது. மலஜலவுபாதை கழிப்பதின் ஒழுங்குகளைக்கூட விடாதபடி நபியவர்கள் காண்பித்து விட்டார்கள். இதன் உண்மையை அறியவேண்டுமானால் பிக்ஹா—கிதாபுகளை (முகம்மதியர்களுடைய தர்மசாஸ்திரத்தை) பார்வையிடவேண்டியது.

ஹிக்காயத்து.

அக்பர் ஆபாதென்னும் நகரத்தில் ஒரு ஐரோப்பிய துரையானவர்மவுலவியென்னும் ஒருமுகம்மதிய சாஸ்திரியிடத்தில் வந்து; உங்கள் இஸ்லாம் மார்க்கம் உண்மையுள்ளதென்பதற்கு என்ன திருஷ்டாந்தமிருக்கிறதென்று கேட்டார். அதற்கந்த மவுலவியானவர் நபியவர்களால் அற்புதங்கள் வெளியானதையும் இன்னும் சில திருஷ்டாந்தங்களையும் எடுத்துச்சொன்னார், அதற்கந்தத்துரை இந்தத்திருஷ்டாந்தங்கள் இருக்கவேயிருக்கின்றன இவைகளைத்தவிர இஸ்லாம் மார்க்க உண்மைக்கு இன்னுமோர் அத்தாக்ஷியுண்டு. அதென்ன வென்றால் எங்கள் கோர்ட்டின் சட்டம் ஏற்பட்டிருக்கின்றதே அதானது பல பட்டணங்களிலிருந்து நூற்றுக் கணக்கான கல்விமான்களும், புத்திமான்களும் ஒன்றுசேர்ந்து அவர்களுடைய புத்தி சாதுரியத்தினாலும் கல்விக் கொழுப்பினாலும் ஏற்படுத்தப்பட்ட சட்டமாயிருக்கிறது. எங்கள் தேசம் யூனான்தேசத்துக்குச் சமீபமாயிருப்பதால் எங்கள் தேசத்துக் கல்விமான்களுடைய புத்தியும் வெகுதீக்ஷண்யமாகவே யிருக்கிறது. இன்னும் இந்தச் சட்டத்தை ஏற்படுத்தி வருங்காலத்தில் இந்தச் சபையில் சேர்ந்த கல்விமான்களில் யாராவது இறந்துபோனால் அவர்கள் தானத்துக்குவேறே கல்விமான்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆகக்கூடி சில நூறுவருஷங்களில் சிலநூறு கல்விமான்கள் சேர்ந்து ஒருவரோடொருவர் ஆலோசிதுத் இந்தச் சட்டத்தை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அப்படியிருந்தும் நாலைந்து வருஷங்களுக்குப் பின்னால் இந்தச் சட்டத்தில் ஏதாவதொருபேதம் சம்பவித்து இதைமாற்ற வேண்டிய

தாய் வருகிறது. உங்கள் ஷராவென்ற மார்க்கத்துக்குரிய * எல்லாச்சட்டங்களையும் ஒரேஒரு மனிதரானவர் (முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம்) மற்றவரோடு ஆலோசிக்காமலே † இருபத்து மூன்றுவருஷங்களுக்குள் ஏற்படுத்திவிட்டார். அதுமுதல் நாளது வரையில் அந்தச் சட்டத்தில் யாதொருபேதம் உண்டாகவில்லை. ஆதலால் ஒரே ஒரு மனிதனால் கொஞ்ச காலத்திற்குள்ளாக இப்பேர்ப்பட்ட உறுதியான சட்டம் தேவ ஏவுதலாலன்றி ஏற்படுத்தமுடியாதென்று நாம் அறிந்திருக்கிறோம் என்றுசொன்னார். இதைக் கேட்ட அந்த மவுலவியானவர் அதே துரையைப்பார்த்து நீர் எங்கள் மார்க்கத்தை உண்மையுள்ளதென்று அறிந்திருக்கிறீரே பின்பு ஏன் இஸ்லாமாகாமலிருக்கிறீர் என்று கேட்டதற்குநான் இஸ்லாமாய் விட்டால் பின்பு ஐநூறு ரூபாய் சம்பளம் எங்கிருந்து கிடைக்கும் என்றார்.

பின்பு அந்தத்துரை இஸ்லாமாய் விட்டார் என்றும் இங்கிலீஷ் துரைத்தனத்தாரால் அவருக்கு நடந்து வந்த சம்பளம் முன் போலவே நடந்துவந்ததென்றும் மவுலானா முகம்மது யாகூபு சாகிபவர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன்.

6-வது நன்மை:- நற்குணங்களைப்பற்றிய கல்வியும் இருதயத்தைச் சுத்தமாக்குகிற முறைகளும் இஸ்லாம் மார்க்கத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது போல் மற்றெந்தமார்க்கத்திலும் அவ்வளவு துலக்கமாய்ச் சொல்லப்பட்டிருப்பதில்லை. இதைக்குறித்து இஹ்யா உல்உலூம், கீமியாயெஸஆதத்து முதலான கிதாபுகளைப் பார்வையிட்டால் அதன் நன்மை விளங்கும். இந்த எல்லாக்கல்விகளும் குர்ஆன் ஷரீபிலிருந்தும் ஹதீசுகளிலிருந்தும் ஏற்பட்டவைகளாயிருக்கின்றன

7-வது நன்மை:- அல்லாவுடைய கலாம் என்ற தேவவசனம் எந்த இலக்ஷணங்களோடிருக்கவேண்டுமோ அந்த இலக்ஷணங்களோடு இந்த மார்க்கத்தில்தான் காக்கப்பட்டு வருகின்றது. மற்றெந்த மார்க்கத்திலும் அப்படி யிருப்பதில்லை. இதன் விவரம் 1வது அத்தியாயம் 3-4-வது பிரிவுகளில் சொல்லப் பட்டிருக்கிறது.

---

* கோர்ட்டு சட்டத்தில் வியவகாரங்களைக் குறித்த சங்கதிகள் மாத்திரந்தானுண்டு. ஷரா எந்த முகம்மதியமார்க்க சட்டத்தில், வணக்கங்கள், வியவகாரங்கள், நிர்ணயங்கள், நற்குண துர்க்குணங்களின் விவரங்கள் இவைகளெல்லாம் அடங்கியிருக்கின்றன.

† முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு 40-வது வயதில் நபிபட்டம்வந்து 63-வது வயதில் ஒபாத்தானார்கள் ஆதலால் நுபுவ்வத்துக்கும் ஒபாத்துக்கும் மத்தியிலுள்ள வயது 23-வருஷங்களாயின.

8 - வது நன்மை:- இலக்ஷக்கணக்கான அவுலியாக்களும், சாதுக்களும், அந்தரங்க பகிரங்க தூய்மையுடையவர்களும், அற்புதங்களையுடையவர்களும் புகழ்தற்குரிய நற்குணங்களுள்ளவர்களாக இந்த மார்க்கத்தில் உண்டாயினார்கள்.

9 - வது நன்மை:- இஸ்லாம் மார்க்கத்தில் புத்திக்கு ஒவ்வாததும் கெட்டதுமான யாதொருசங்கதியும் கிடையாது. இதரமார்க்கத்தார் யாராவது யாதொரு சங்கதியைக் குறித்து ஆக்ஷேபித்தால் அவர்கள் மீண்டும் ஆட்சேபிக்கவாயெடுக்காதபடி இம்மார்க்கத்தின் மவுலவிகள் தக்கவிதமாய் ஜவாபெழுதியிருக்கிறார்கள் உதாரணமாக முஸ்லிம்களில் பேதைகளாயிருக்கிற சாதாரண ஜனங்களை ஏமாற்றுவதற்காகப் பாதிரிகள் வீணான அநேக ஆட்சேபங்களையெழுதி அச்சிட்டிருக்கிறார்கள். அவைகளுக்கு றத்தாக ஸவுலத்துஸ் ஸைகம், இஸ்திப்ஸார், இஸாலத்துல் அவ்ஹாம் முதலான இன்னும் அநேககிதாபுகளை மவுலவிகள் கோர்வைசெய்து அச்சிட்டிருக்கிறார்கள். அவைகளைப் பார்வையிட்டால் உண்மைவிளங்கும்.

10 - வது நன்மை:- ஹஜரத்து நபியவர்களின் குணங்களும், நடவடிக்கைகளும் அழகானவைகளா யிருப்பதும் அவர்களால் பற்பல விதமான அற்புதங்கள் வெளியானதுமாம். ஆண்டவன் எல்லா நபிமார்களுடைய நற்குணங்களையும், அவைகளின் பூரணத்தன்மைகளையும் ஹஜரத்து நபியவர்களில் சேகரமாக்கி விட்டான்.

11 வது. நன்மை:- ஹஜரத்து நபியவர்களும், அவர்களின் அஹ்லெபைத்தென்ற குடும்பஜனங்களும், அஸ்ஹாபென்ற உடன் வாசிகளும், உம்மத்தின் பிரதானஜனங்களும் தங்கள் ராஜரீகத்தை விட்டுவிட்டதும் எழிமைத்தனத்தைத் தெரிந்து கொண்டதுமாம். உதாரணமாக ஹஜரத்து நபியவர்களுடைய அஹ்லெபைத்தின்பேரில் உலகத்தின் பலவிதமான துன்பங்கள் வந்தனவென்பது பிரசித்தமா யிருக்கிறது. அவைகளைச்சொல்ல மனம் அதிகதுக்கப் படுகிறது. இன்னும் ஹஜரத்து உமர்றலியல்லாகு அன்குவுடைய அரசாக்ஷியின் அதிகாரம் சீனதேசம்வரையில் வியாபித்திருந்தும் அதனால் அவர்கள் ஒருசுகத்தையும் அடைய இச்சித்தார்களில்லை. அவர்களுடைய அங்கவஸ்திரத்தில் பதின்மூன்று ஒட்டுகள்போட்டு தைக்கப்பட்டிருந்ததுந்தவிர அவ்வொட்டுகளிற் சிலது தோலாயுமிருந்தன. இன்னும் ஹஜரத்து அபூஹுறைறா றலியல்லாகு அன்கு ஒரு பட்டணத்துக்கு அமீராய் (கவர்னராய்) இருந்தும் அவர்கள் காட்டிலிருந்து விறகு சுமையைத் தூக்கிக்கொண்டு கடைவீதிவழியாய் வருபவர்களாயும் அப்படி வரும்பொ

மூது ﻣﻔﺮﻳﺎﺗُﺮﺯ உங்கள் அமீருக்கு வழிவிடுங்கள் யென்று சொல்பவர்களாயு மிருந்தார்கள். இன்னும் இபுருகீமிப்னு அத்ஹம் முதலான மற்றும் பெரியோர்களும் இப்படியே தங்கள் இன்ப சுகங்களை வெறுத்து எழிமைத்தனத்தை தெரிந்துகொண்டார்கள்.

12 - வது நன்மை:- ஜமாஅத்து (ஜனசங்கம்) அதாவது சத்விஷயத்துக்காக ஜனங்கள் கூட்டங்கூடுவது. ஜமாஅத்தில் பெரியபெரிய பிரயோசனங்களுண்டென்பது எல்லா புத்திமான்களுக்கும் தெரிந்த விஷயமாயிருக்கிறது. அந்தப் பிரயோசனங்களில் ஒன்றென்னவென்றால், ஜனங்கள் ஓரிடத்தில் கூட்டமாய்ச் சேர்ந்தால் ஒவ்வொருவரும் தங்கள் மனநோக்கங்களையும், குறைகளையும் மற்றவரிடத்தில் சொல்லிக்கொள்ளலாம். அதனால் தீன் துன்யாவுடையகாரியங்களில் ஒருவர் மற்றவருக்கு ஒத்தாசையாய் இருக்கக்கூடும்.

ஆண்டவன் எங்களுக்குப் பலஜமாஅத்துகளை ஏற்படுத்தியிருக்கிறான். அவை தெருவுப் பள்ளி ஜமாஅத்தென்றும், ஜும்ஆப்பள்ளிஜமாஅத்தென்றும், ஈதுகாப்பள்ளி ஜமாஅத்தென்றும், மக்காபள்ளிஜமாஅத்தென்றும் நான்குவகைப்பட்டிருக்கின்றன.

1 - வது தெருவு பள்ளிஜமாஅத்தென்பது ஐந்து நேரங்களின் தொழுகைகளுக்காக தன்வீட்டு சொந்த ஜனங்களும், அண்டைவீட்டு ஜனங்களும், அத்தெருவிலுள்ள மற்றும் ஜனங்களும் அத்தெருவு பள்ளியில் ஒன்றாய்ச் சேர்வதாம். இதரஜனங்களின் விசாரிப்பைப் பார்க்கிலும் இந்த ஜனங்களின் விசாரிப்பு முக்கியமானதாயும் முற்படுத்தப்பட்டதாயுமிருப்பதால் ஆண்டவன் இந்த ஜனங்களை அடுத்தடுத்து சந்திக்கும் படியான ஏற்பாடு செய்திருக்கிறான்.

2 - வது ஜும்ஆப்பள்ளி ஜமாஅத்தென்பது எட்டுநாளைக்கொருதரம் வெள்ளிக்கிழமைதினம் ஒரு பட்டணத்திலுள்ள எல்லா இஸ்லாமானவர்களும் ஜாமிஆ மஸ்ஜிதென்றஜும்ஆப்பள்ளியில் சேர்வதாம்.

3 - வது ஈதுகாப்பள்ளி ஜமாஅத்தென்பது வருஷத்திற்கிரண்டு முறை நோன்புபெருநாளிலும், ஹஜ்ஜுப்பெருநாளிலும், ஒருபட்டணத்திலும் அதைச்சேர்ந்த உள்நாடுகளிலுமுள்ள எல்லா இஸ்லாமானவர்களும் ஈதுகாவில் ஒன்றாய்ச் சேர்வதாம்.

4 - வது மக்காப்பள்ளி ஜமாஅத்தென்பது வருஷத்திற்கொருமுறை ஹஜ்ஜுடைய நாளில் உலகமுழுவதிலுமுள்ள இஸ்லாமானவர்களெல்லாம் பெருமைதங்கிய மக்காப்பட்டணத்திலுள்ள அறபா மைதானத்தில் ஒன்று சேர்வதாம்.

13 வது நன்மை:- ஸ்திரீகள் மறைந்திருக்க வேண்டுமென்பது. இது புத்தியினிடம் வெகு அழகான தாயிருக்கிறது. ஆதலால் இந்து மார்க்கத்துடைய வர்களிலும் சிலர் இதை அனுசரித்து வருகிறார்கள் என்றாலும் இது இஸ்லாம் மார்க்கத்திலிருந்து தான் வெளிப்பட்டது.

14 வது நன்மை:- லாகிரியான வஸ்துக்களை வழங்கக் கூடாதென்று விலக்கப்பட்டிருப்பது. ஏனென்றால், அவைகளை வழங்குவதினால் இகபரசாதனங்களுக்கு ஆதாரமாயிருக்கிற புத்தியின் இயல்பு கெட்டுப்போகின்றது.

15 வது நன்மை:- நாளுக்குநாள் இம்மார்க்கம் வியாபித்து வருகின்றது. வெள்ளைக்காரர்கள் தங்கள் மார்க்கத்தை ஜனங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இலக்ஷக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்கிறார்கள். பாதிரிகளை சம்பளத்துக்கு நியமிப்பதும், கல்விச்சாலைகளைக் கட்டுவதும், புஸ்தகங்களை அச்சிட்டு இனமாய்கொடுப்பதும் இதற்காகவேயாம். யாதொருவன் அவர்கள் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டால் அவனுடைய ஜீவனவிஷயத்துக்குத்தக்க ஏற்பாடும் செய்கிறார்கள். இவ்வளவு முயர்ச்சியும் முயர்ச்சிக்குத்தக்க ஏதுக்களுமிருந்தும் புத்திமானாகிய ஒருவனும் அவர்கள் மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. அறிவிலியாயும், ஆபத்திலகப்பட்டவனாயு மிருக்கிற யாதொருவன் பிரபஞ்ச வாழ்க்கையை இச்சித்து அவர்கள் மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளுகிறான். அதுவும் அற்பமேயாம்.

இஸ்லாம் மார்க்கத்தை விர்த்திக்குக் கொண்டுவர இத்தேசத்தில் இஸ்லாமுடைய அரசாக்ஷியும் கிடையாது. இஸ்லாத்தில் வந்த ஒருவனுக்கு அன்புடன் அன்ன வஸ்திரம்கொடுத்துப் பாதுகாக்கத் தாராளமான மனதையுடைய பிரபுக்களுமில்லை. அப்படியிருந்தும் அநேக ஜனங்கள் தங்கள் சுகவாழ்க்கையையும் செல்வத்தையும் விட்டு இஸ்லாம் மார்க்கத்தில் வந்து ஏழைகளாய்ப்போனாலும் அதைப் பெருஞ்செல்வமென்று எண்ணுகிறார்கள். உதாரணமாக: இக்காலத்தில் சில ஊர்களில் அநேகம்பேர் இஸ்லாமா யிருக்கிறார்கள். அவர்களில் நின்றும் என் சிநேகிதர்களா யிருப்பவர்களை மாத்திரம் இங்கு எழுதுகிறேன்.

1 முன்ஷிபிதா உசைன் என்றழைக்கப்படும் ஷைக் அப்துர்றகீம் இவர் இஸ்லாமாகுமுன் ஜவாஹிர்சிங்கென்ற நாமமுள்ளவராயிருந்தார். ஜாதியில் க்ஷத்திரியர். பாயல் என்னும் ஊரிலுள்ளவர். பெரியவீரர் நற்குணமுள்ளவர். எங்கள் ஊராகிய பாயலிலுள்ள சிநேகிதர்கள் எல்லாரிலும் இவர்தான் முதலில் தம்முடைய இஸ்லாமை வெளியாக்கினவர். உள் ஈமான் கொண்டிருக்கும் போது தம்முடைய இஸ்

லாமை வெளிப்படுத்த ரோம்பவும் பயந்திருந்தார். ஓரிரவு ஒருபள்ளி வாசலில் சொன்னபாங்கு சத்தம் இவர்காதில் விழுந்தது. அல்லா, றசூலுடைய திருநாமங்களைக் கேட்டு ஆசை அதிகரித்ததினால் அந்த இரவெல்லாம் இவருக்கு நித்திரைவரவில்லை. விடியற்காலத்தில் இவர் பாட்டனூர் ராம்! ராம்!! என்று இராமனைத் துதித்தார். அல்லாறசூலுடைய ஆசையில் அமிழ்ந்திருக்கிற இவருக்கு அந்த சப்தம் அருவருப்பாயிருந்தபடியால் தமது பாட்டனாரைக் கோபித்து அல்லாஹ்! அல்லாஹ !! என்று சொல்லும் என்றார். பின்பு பயம்பிடித்து அவசரமாய் வீட்டைவிட்டு வெளிப்பட்டு அம்பாலாவுக்குப் போய்ச்சேர்ந்தார். அவ்விடத்தில் தாம் வெளியிரங்கமாய் இஸ்லாமாவதற்கு ஒருவரையும் கண்டடையவில்லை. கொஞ்ச நாள்வரையில் அல்லா றசூலுடைய ஆசையினால் பைத்தியங் கொண்டவர் போலிருந்தார். கடைசியில் கஸோலிமலையில் போய் தமது இஸ்லாமை வெளியாக்கினார். மாதா, மனைவி, இரண்டுபுத்திரர்கள், சொத்துசுதந்தரம், வீடுவாசல் மற்றும் சுகவாழ்க்கைக்குக் காரணங்களாயிருக்கிற சகல வஸ்துக்களையும் விட்டுவிட்டு அல்லா றசூலுடைய பாதையில் பிரயாணப்பட்டு வந்துவிட்டார். இப்பொழுது எவ்விதகெடுதிகளும் சம்பவிக்காதபடி மார்க்க ஒழுங்காயிருக்க வேண்டுமென்று தம்முடைய முன்ஷிவேலையை விட்டு விட எண்ணங் கொண்டிருக்கிறார். ஆண்டவன் அவர் எண்ணத்தை நிறைவேற்றுவானாகவும்.

2. ஷைக் அப்துல்வாஹிது. இவர் முன்ஷிபிதா உசைனுடைய இளையசகோதரர். வெகு சாதுவானவர். அதிக வணக்கமுள்ளவர். இவர் இஸ்லாமான சரித்திரம் வெகு புதுமையானதாயிருக்கிறது சிறுபிராயத்தில் கல்வி படிக்கிறதற்காக முன்ஷிபிதா உசைனிடம் வந்திருந்தார். கோம் என்றவிடத்தில் மவுலானா அலாவுத்தீன் சாகிபவர்களின் பணிவிடையிலிருந்து அவர்களிடம் பாடம் ஆரம்பம் செய்தார். குபிருடைய கெடுதிகளையும், இஸ்லாமுடைய நன்மைகளையும் நன்றாய் உணர்ந்து கொண்டார். ஒருநாள் மாலை மக்ரிபு நேரத்தில் இருந்தாப்போலிருந்து வெகு அவசரத்தோடு தம்முடைய இஸ்லாமை வெளியாக்கினார். குபிரென்ற வியாதியைவிட்டு சவுக்கியமடைந்து ஆரோக்கிய ஸ்நானம்செய்து முஸ்லிம்களோடு கூடித்தொழுதார். இந்த சேதியைக் கேட்ட அவருடைய தாயாரும், இன்னும் சில ஜனங்களும் பாயலிலிருந்து இவ்விடம்வந்து கூக்குரலிட்டு அழத்தொடங்கினார்கள். அவர் அல்லாறசூலைத்தவிர மற்றெவரையும் சட்டைபண்ணவில்லை. அவ்வூர்டாணாக்காரன் இந்துவாயிருந்தான். அவன் மதத்துவேஷத்தினால் இவனைப் பிடித்து இழுத்துக்கொண்டு போங்களென்று மூர்க்கமாய்ச்

சொன்னன். அதற்கவர் நான் ஒருபோதும் போகமாட்டேன் என்று பதில் சொன்னர். அப்போது அந்தடாணுக்காரன் நீயேன் இஸ்லாமானுய் என்று கேட்டான் அதற்கவர், நான் நரகவேதனைக்கு பயந்து இஸ்லாமானேன் என்று சொன்னர். இந்துக்கள் அவரை எவ்விதத்திலாவது கலைத்து அழைத்துக்கொண்டு போய்விட வேண்டுமென்று அநேகம் தந்திரங்கள் செய்தார்கள். அவர் எந்த சொல்லுக்கும் மசியவில்லை. அவர் இப்போது கல்விபடிப்பதில் முயற்சியாயிருக்கிறர். முன்ஷிபிதா உசைன் அவருக்கு சம்ரக்ஷணை செய்துவருகிறர்.

3 மவுலவி ஷிஅமத்துல்லா. பக்தியுள்ளவாலிபர். மகாபுத்திமான். தாலிபுல்இல்மு. நற்செய்கையுள்ள ஆலிமென்றும் சொல்லலாம். பிரசங்கவல்லவி. இவர் பிரசங்கத்தினல் அநேக ஆண், பெண்கள் அறிவையடைந்திருக்கிரார்கள் இப்போதுமடைந்துகொண்டு வருகிறர்கள். இவர் இஸ்லாமாகுமுன் ஹரிநாமதாசென்ற பெயரையுடையவராயிருந்தார். ஜாதி ஆசலக்ஷத்திரியர். பாயலில் உள்ளவர் இவரின் விர்த்தாந்தம் என்னவென்றல், இளம் பிராயத்திலேயே இவர்மனதில் நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய ஆசையென்னும் அக்கினிச்சுவாலைத் தாவிப்பிடித்துக்கொண்டது. நாளுக்கு நாள் இந்து மார்க்கத்தின் கெடுதிகளும், இஸ்லாம் மார்க்கத்தின் நன்மைகளும் இவருக்கு நன்றய் விளங்கிவிட்டன. ஆதலால் திஉலென்று ஊரைவிட்டுப் பிரயாணப்பட்டு லூதியானுவுக்கு வந்து தம்முடைய இஸ்லாமை வெளிப்படுத்தினர். பின்னல் இவர் தந்தையும், சகோதரரும் இன்னும் சில இந்துக்களும் பாயலிலிருந்துவந்தார்கள். இவர் தந்தை இவரைக்கண்டு வெகுதுக்கத்தோடு கதறியழுதார். சில நாள் வரையில் இதைப்பற்றி பெருங்கூக்குரலாயிருந்தது. கச்சேரிவரையில் போகும்படி நேரிட்டது. ஆகிலும் ஆண்டவன் கிருபையால் ஒரு இடையூறும் சம்பவிக்கவில்லை. பின்புநான் இவரை அழைத்துக்கொண்டு கோட்ளாமாலருக்குப் போனேன். இவரை நான் பாயலிலிருந்து பிடித்துக்கொண்டு போய்விட்டதாக பாயலிலுள்ள இந்துக்கள் பைட்டாலாசர்க்காரில் என்பேரில் பிராதுசெய்து பைட்டாலாவின் அதிகாரியிடத்திலிருந்து கோட்ளாமாலேருக்கு சிபாரிசுகாயிதம் கொண்டுவந்தார்கள். கோட்ளாமாலேரிலுள்ள பஞ்சாயத்தாரும் இது விஷயத்தில் இவர்களுக்கு உதவியாயிருந்தார்கள். ஒருதரம் அநேகம் இந்துக்கள் பெருங்கூட்டமாய்க் கூடி நான்இருந்த விடத்துக்கு வந்து பெரும்புகாரா செய்தார்கள். என்றலும் ஆண்டவனுடைய கிருபையானது எவ்விதத்திலும் எங்களைக் காப்பாற்றினது. ஒரு

தரம் இவர்தந்தையானவர் கோட்ளாமாலேருடைய அதிகாரியின் சமுகத்தில் இவரைப்பார்த்துமகனே! நான்உன் பிதாவல்லவா? என்று இரக்கமாய்ச் சொன்னார். அதற்கிவர், என்பிதா முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களா யிருக்கிறார்கள் என்று பதில் சொன்னார். அதிகாரியானவர் இந்த வார்த்தையைக்கேட்டு அதிக சந்தோஷப்பட்டு, உன்னைப் பிடித்துக்கொண்டு போக ஒருவருக்கும் சக்தியில்லை. நீ சுகமாயிரு என்றார். ஆகிலும் இவருடைய தந்தை இவரைவிட்டுப் போக மனங் கொள்ளாமல் வெகுநாள் வரையில் அவ்விடத்திலேயே சுத்திக்கொண்டிருந்தார். கடைசியாய் ஆதரவற்று ஊர்போய்ச் சேர்ந்தார், இப்பொழுது இவர் கோட்ளாமாலேரில் அஜரத்து மவுலானா அப்துர்றகிம் சாகிபவர்களிடத்தில் கல்விபயிர்ச்சி யாகிறார் மற்றவர்களுக்கும் படித்துக் கொடுக்கிறார்.

4 ஷைக் அப்துல்ஹக்கு. விசுவாசமுள்ள நேசர் வெகு கெட்டிக்காரர். இவர் வெகுநாள் என் துணைவராயிருந்தார். என்னோடு கூடவே தமது இஸ்லாமை வெளிப்படுத்தினார் முன்னே சுதாசிங்கென்றபேருள்ளவ வராயிருந்தார். நர்தானா என்றஊரிலுள்ளவர். சிறுவயதில் என்தமயனாரிடத்தில் சம்பளத்துக்கிருந்தார். வாலிபமானபொழுது இஸ்லாம மார்க்கத்தின் உண்மையை அறிந்து நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய பின்பற்றுதலில்வந்தார். வெகுநாள் என்னிடத்திலிருந்தார். அநேகயாத்திரைகள் செய்தார். கடைசியாய் ஹிஜ்ரி 1272-ம் ஹூ ஆகிரத்துக்குப் பிரயாணமாய்விட்டார். ஆண்டவன் அவருக்கு றகமத்து செய்வானாகவும். இவர் தம்பியும் இஸ்லாமாகி சில நாளைக்குப் பிறகு இவரின் ஜீவகாலத்திலேயே மரணத்தையடைந்தார்.

நான் ஒருநாள் சொற்பனத்தில் ஷைக் அப்துல்ஹக்சாகிபைக் கண்டேன். அவர் அருப்ப மிரங்காத அழகிய சிறுவனைப்போல் இருந்தார். நான் அவரைநோக்கி உமக்கு கபுறுடைய வேதனை கொஞ்சமாவது உண்டாகவில்லையா? என்று கேட்டதற்கு அவர் கொஞ்ச வேதனை யுண்டாகிறதென்றார். நான் மூன்றுதரம் சலவாத்து ஓதி அவர்மேல் ஊதினேன். அவர் இப்பொழுது வேதனை நீங்கிவிட்டதென்று சொன்னா.

ہر مرض کی دوا درود شریف * دافع ہر بلا درود شریف*

ஹர் மரஸ் கீ தவா துரூதேஷரீப்.

தாபி ஏ ஹர்பலா துரூதேஷரீப்.

சலவாத்தானது சர்வ ரோகங்களுக்கும் சஞ்சீவியாயும் சகல துன்பங்களையும் நிவர்த்திப்பதாயு மிருக்கிறது.

5 ஷைக் அப்துல்அஜீஸ். இவரை அஜீஜுத்தீன் என்றும் சொல்வதுண்டு. வெகுநல்லவர். இருதய உறுதியுள்ளவர். வித்தையுள்ளவர். தாய்தந்தையர்களையும், பெண்ஜாதிபிள்ளைகளையும், சொத்து சுதந்தரம் முதலான சகலசெல்வத்தையும் விட்டுஇஸ்லாமானார். முன்னே சாயின் தத்தன்என்ற பேருள்ளவராயிருந்தார். ஜாதியில் பிராமணர், பாயலிலுள்ளவர். இவரைப்பற்றி விநோதமான ஓர் சங்கதியுண்டு. அதென்னவென்றால், நான் என் இஸ்லாமை வெளிப்படுத்தாமல் மறைத்துக்கொண்டிருந்த நாட்களில் சுமார் இரண்டு வருஷம் வரையில் வீட்டிலேயே இருக்கும்படி நேரிட்டது. என் சிநேகிதர்களிலும் சிலர் உள் ஈமான் கொண்டிருந்தார்கள் சில நேரங்களில் நாங்கள் இந்துக்களிடத்தில் பகிரங்கமாய் வாதிப்பதுண்டு. அநேக ஜனங்களுக்கு நாங்கள் இஸ்லாமாய் விட்டோமென்ற எண்ணமேயிருந்தது. என் சிறியதந்தையான லாலா கபண்டிராயர் என்பவர் இந்துவாயிருந்தும் எங்கள் பேரில் கிருபையாகவேயிருப்பார். வாதம் நேரிடுகிற சமயத்திலும் யாதொருதுஷ்ட்டன் எங்களுக்கு இடஞ்சல் செய்கிற சமயத்திலும் அவர் எங்களுக்கு உதவியாயிருப்பார். ஆதலால் நாங்கள் அவருக்கு அபூதாலிபு என்றுபேர் ஏற்படுத்திக்கொண்டோம் இன்னுமொரு துஷ்டன் ஒரு சிநேகிதருக்கு சிறிய தந்தையாயிருந்தான் அவன் எங்களுக்குப் பெரும் பகையனாயும், இடஞ்சல் செய்கிறவனாயுமிருந்தான். அவனுக்கு அபூஜஹல் என்று பேரிட்டிருந்தோம். ஒரு நாள் இந்த அபூஜஹல் எங்கள் வீட்டுத் தெரு வாசற்படியில் நின்று கொண்டிருந்தான். அந்தச் சமையத்தில் ஜாதியில் பிராமணரும் எங்களுக்கு புரோகிதருமாயிருந்த இந்த அப்துல் அஜீஸ்சாகிபு அவ்விடத்தில் வந்தார். நான் அந்த அபூஜஹலுக்குக் கேள்கும்படி இவரை நோக்கி புரோகிதரே நான் இஸ்லாமாய் விட்டேன். தங்களுடைய பிரியமெப்படி என்று கேட்டேன். அதற்கிவர், மகாராஜா! *யஜமான் எங்கேயோ புரோகிதனும் அங்கேயே என்றார். என்ன ஆச்சரியம்பாருங்கள்! அப்பொழுது இவருக்கு இஸ்லாம் மார்க்கத்தைக் குறித்து ஒன்றும் தெரியாது அப்படியிருந்தும் இப்பேர்ப்பட்ட அழகான வார்

* இந்துக்களில் ஒவ்வொரு ஜாதியாரும் ஒவ்வொருஜாதி பிராமணனை குருவாக நியமித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் மார்க்கவிஷயமான மஸ்அலாக்களில் ஒன்றையும் அவர்களிடத்தில் படித்துக்கொள்ளுகிறதில்லை. கல்லியாணம், மரணம் முதலான சுகதுக்கங்களான காரியங்களில் அவர்கள் இவர்களுக்கு வேண்டியவர்களா யிருக்கிறார்கள். காணிக்கை, தக்ஷிணை முதலியவைகளைக் கொடுத்து தங்கள் காரியங்களை அவர்களால் நடத்திக் கொள்ளுகிறார்கள். அந்தப் பிராமணர் இவர்களுக்குப் புரோகிதரென்றும், இவர்கள் அந்தப் பிராமணனுக்கு யஜமான் என்றும் சொல்லப்படுகிறார்கள்.

த்தை இவர் வாயிலிருந்து புறப்பட்டது சில நாளைக்குப் பிறகு ஆண்ட வன் இவரை சகல செல்வத்தையும் விட்டு இஸ்லாமாகவும் செய்தான்.

6 ஷைக் குதாபக்ஷ். இவரை அப்துர் றஜாக் என்றும் சொல்வதுண்டு. இவர் இந்துவாயிருக்கும்போது பெருந்துஷ்டனுயிருந்தார். இப்பொழுது ஆண்டவன் இவரைத் தன் கிருபையென்னும் வலையினுலிழுத்து நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமுடைய உம்மத்திலாக்கி விட்டான். முன்னே லக்ஷ்மணன் என்ற பேருள்ளவராயிருந்தார். ஜாதியில் பாஞ்சால க்ஷத்திரியர். பாயலில் உள்ளவர். எனக்கு பந்துவாயுமிருக்கிறுர்.

7 ஷைக் அபதுல்கரீம். பக்தியுள்ளவாலிபர். முன்னே ஆதவன் என்றபேருள்ளவரா யிருந்தார். ஜாதியில் பிராமணர். கோட்ளாமாலேரிலுள்ளவர். லூதியானுவில் வந்து இஸ்லாமானுர். பின்பு இவர் தாயார் இவரைத் தேடிவந்து இவரைக் கண்டபொழுது மிகவும் பரதவித்து அழுதாள். அதற்கு இவர் தம் தாயைநோக்கி உனக்கு என்மேல் அன்பிருந்தால் நீயும் இஸ்லாமாய்விடு என்றுர். பின்பு தாயாரிடத்தில் முன்னுல் தாம் செய்த குற்றங்களுக்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டார். இப்பொழுது கல்விபயிர்ச்சியிலிருக்கிறுர்.

8 ஷைக் அப்துர்றகமான். சாதுவானவாலிபர். ஜாதியில் க்ஷத்திரியர். அமிர்தசரத்திலுள்ளவர். ஊரைவிட்டு யாத்திரைபோயிருந்தார். வெகுநாளாய் இவர் சங்கதி ஒன்றும் தெரியவில்லை.

9 ஷைக் குலாம் முகம்மது. இவர் பஹாடத்தின் தலைவர்களில் ஒருவர். இவருடன் இவர் மனைவிகளில் சிலரும் சிலவேலைக்காரர்களும் இஸ்லாமானுர்கள். முன்னே இவருக்கு கனூர்ஜுவாலாசிங்கென்ற நாமஞ் சூட்டப்பட்டிருந்தது. இவரைக்கண்டு கொள்ள எனக்குவாய்க்கவில்லை. இவரைப்பார்க்கவேண்டு மென்று அதிக ஆசையுள்ளவனுயிருந்தேன். அப்படி யிருக்கையில் இவர் தாருல் பகாவுக்குப் பிரயாணமாய் விட்டதாக சேதிகேட்டேன். ஆண்டவன் இவருக்கு ஜன்னத்து நஸீபுசெய்வானுக.

10 ஷைக் கமாலுத்தீன். வெகுஸமர்த்தர். பாக்கியவந்தர். மனைவியையும், புத்திரபவுத்திரர்களையும், சொத்து சுதந்தரர்களையும் மற்றும் எல்லா பாக்கியங்களையும் விட்டுவிட்டு இஸ்லாமாய்ப்போனுர். முன்னே மங்களசிங்கென்ற பேருள்ளவராயிருந்தார். ஜாதியில் க்ஷத்திரியர். கப்போர்தலம் என்ற ஊரிலுள்ளவர். ஒரு பெண்பிள்ளை க்ஷத்திரிய ஜாதியிலிருந்து இஸ்லாமாயிருந்தாள். அவளை இவர் விவாகஞ்செய்து கொண்டார்.

11 ஷைக் அப்துல்காதிர். வெகுநற்குணமுள்ளவர். ரூபத்திலும் அதிக அழகுள்ளவர். தைரியவான். முன்னே குருதாசனென்று பேருள்ளவராயிருந்தார். ஜாதியில் க்ஷத்திரியர். ஜலந்தரத்திலுள்ளவர். செல்விகர். உத்தியோகத்தி லிருந்தவர். வெகுநாள் வரையில் அந்தரங்கத்தில் இஸ்லாமாயிருந்தார். கடைசியில் பிலால் றலியல்லாகு அன்குவைப்போல் இவர் மனதில் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய ஆசை பொங்கியெழும்பினது. மாதாபிதாக்களையும், வீடுவாசல், நகைநட்டுமுதலிய சகல செல்வத்தையும் வெறுத்து திடீலென்று வேலையைவிட்டுவிட்டு ஊருக்கும்போகாமல் மாமனார் வீட்டுக்குவந்து தம்முடைய பத்னியை அழைத்துக்கொண்டு பிரயாணப்பட்டு லூதியானுவுக்கு வந்தார். அங்கே தம்மனைவியினிடம், நான் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்துபோனேன். நீயும் அம்மார்க்கத்தை எற்றுக்கொள்ளும்பக்ஷத்தில் மகாசந்தோஷம். இல்லாவிட்டால் இந்த ரயிலிலேயே உன்னைத்திரும்ப ஊருக்கு அனுப்பி விடுகிறேன் உன்பிரிய மெப்படிச் சொல்லென்றார். அதற்கந்தப் பதிவிரதாசிரோன்மணி எனக்கும் இஸ்லாம் மார்க்கம் பிரியந்தான் என்றாள். பின்பு அவ்விடத்திலிருந்து பதிபத்னி இருவரும் பிரயாணப்பட்டு மாலேர்கோட்ளாவுக்குவந்தார்கள். அப்பொழுது இந்த ஏழையாகிய அடியேனும் மாலேர்கோட்ளாவிலிருந்தேன். அவர்கள் அவ்விடத்தில் வந்து குப்றுடைய உடைகளை மாற்றி இஸ்லாமுடைய உடைகளால் சிறப்பிக்கப்பட்டார்கள். இதைப்பற்றி அவ்விடத்தில் பெரும் பிரபல்லியமாயிருந்தது. அவர்கள் சிலநாள் அவ்விடமிருந்து பிறகு பானிபட்டுக்கு வந்து அங்கு ஒரு மாசம் வரையில் வசித்து பிறகு அங்கிருந்து ஷாஜிஹான் ஆபாதுக்குவந்து சேர்ந்து அங்கு ஜீவனவிஷயத்துக்காக வெகுநாள் வேலையில் அமர்ந்திருந்தார். இப்பொழுது கல்விபடிக்கவேண்டு மென்கிற எண்ணத்தினால் வேலையைவிட்டுவிட்டார்.

பின்பு இவர் மனைவியின் தந்தைமுதலான பந்துக்கள் மாலேர்கோட்ளாவுக்கு வந்து இவர்களைத் தேடிப்பார்த்து எங்கும் புலம் அகப்படாதபடியால் நிராதரவாகி வெகு துக்கத்துடன் திரும்ப ஊருக்குப் போய்விட்டார்கள். பின்பு இவர்கள் ஷாஜிஹான் ஆபாதிலிருக்கிற சங்கதி தெரிந்து இவர் தந்தை இவருக்கு அநேகம் கடிதங்களை அனுப்பினார் அக்கடிதங்களில் தம்முடைய அன்பையும் ஆசையையும் காண்பித்து உம்மைத்திரும்பவும் நம்ஜாதியில் சேர்த்துக் கொள்ளுகிறோம் நீர் வந்து விடுமென்று ஆவலாயெழுதியிருந்தார். இவர் அதற்கு பதில்காகிதம் எழுதினதாவது:- அடியேன் இஸ்லாம் மார்க்கத்

தின் உண்மையைத்தீர அறிந்து என்முழு இருதயத்தோடு இஸ்லாமானேன் இங்கு எனக்கு எவ்வித கஷ்டமும் இல்லை. அப்படிக் கஷ்டமுண்டானபோதிலும் அது என் அதிஷ்ட மென்றெண்ணுவேன் இப்பொழுது நானாவது என் மனைவியாவது இஸ்லாம் மார்க்கத்தை விட்டுத்திரும்புவோமென்ற ஆசைவைக்கவேண்டாம். மேலும் தங்களுக்கு நற்கதியடைய விருப்பமிருந்தால் தாங்களும் இஸ்லாம் மார்கத்தை ஏற்றுக்கொள்ளும்படி தங்கள் சமுகத்தில் அறிக்கைசெய்து கொள்ளுகிறேன். நான் முன்போலவே இப்பொழுதும் தங்கள் ஊழியனா யிருக்கிறேன். தங்கள் பணிவிடையில் ஒருகுறைவும் செய்யேன். இன்ஷாஅல்லா. ஆனால், மார்க்கவிஷயத்தில் தங்களைத் துயரமாட்டேன்=என்பதே.

12 ஷைக்முஹ்யித்தீன் சாதுவானவாலிபர். முன்னே அரிச்சந்திரனென்று பேரிடப்பட்டிருந்தார் ஜாதியில் க்ஷத்திரியர். பெரிய பிரபுவின் குமாரர். இவர்தந்தை பின்ஷீன்தாராயும் இவர் சகோதரர் சிரஸ்தாதாராயுமிருக்கிறார்கள். வெகுநாள் அந்தரங்கத்தில் இஸ்லாமாயிருந்தார். கடைசியில் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மேலுள்ள ஆசையென்னும் சூரியனை மறைக்கமுடியாமல் திடீலென்று தம்இஸ்லாமை வெளிப்படுத்தினார். இந்த சங்கதி இவர் சகோதரருக்குத் தெரிந்து இவரைவந்து பிடித்துக்கொண்டுபோய் தாமிருக்கும் ஜாகையில்வைத்துக்கொண்டு இரவெல்லாம் புத்திபோதித்தார். இஸ்லாம் மார்க்கத்தை விட்டுவிடும்படி ஆசைபூட்டினார். அந்த இரவில் அவர் வீட்டில் சமையலும் ஆகவில்லை. இவர் தம்சகோதரர் சொல்வதையெல்லாம் காதில் வாங்கிக்கொண்டு ஒன்றும் பதில் சொல்லாமல் மௌனமாய் உட்கார்ந்து கொண்டிருந்தார். இப்படியே அந்த இரவு முழுவதுங் கழிந்தது. விடியற்காலத்தில் அவ்விடத்திலிருந்து அவசரமாயெழுந்து மலபாதைக்குப் போகவேண்டு மென்றார். இவர் தமையனார் காவலுக்காக இவருடன் ஒரு ஆளையனுப்பினார். இவர் அந்தக் காவலாளுடன் பட்டணத்துக்கு வெளியே கொஞ்சதூரம் போய் தம்மிலும் அந்தக் காவல்காரன் பலயீனனென்பதை அறிந்து தரையிலிருந்து சிலகற்களை எடுத்து அந்த ஷைத்தானை கல்வாரி செய்யத்தொடங்கினார். அவன் பின்காட்டியோடினான் இவர் அவனைவிட்டுவிட்டு ஒரு திசையை நோக்கிச் சென்றார். அன்றுபகல் முழுவதும் இரவு முழுவதும் நடந்து விடியற்காலத்தில் அபாசிந்தாவென்னும் ஆற்றோரத்தில் கட்டப்பட்டிருக்கிற பள்ளிவாசலண்டை வந்தார். நித்திரை மயக்கத்தினாலும் நடந்த அலுப்பினாலும் சோர்வடைந்து சற்றுநேரம் அந்தப்

பள்ளிவாசலில் படுத்துறங்கினார். பின்பு அவ்விடம்விட்டெழுந்து அந்த ஆற்றைக்கடந்து பகிராகிய ஒரு பெரியவரிடத்தில் வந்து அவரிடம் கொஞ்சநாள் தங்கியிருந்தார். பின்பு பிஷாவர் முதலான ஜில்லாக்களுக்கு யாத்திரைசெய்து கடைசியாய் ஷாஜிஹான் ஆபாதுக்கு வந்து அங்குள்ள மதரஸாவென்னும் கல்விச்சாலையில் குர்ஆன் ஷரீபை மனப்பாடஞ் செய்யத் தொடங்கினார். இப்போது கொஞ்சநாளாய் ஊருக்குப் போயிருக்கிறார்.

13 ஷைக்அப்துர்ரஹ்மான். ஈகையும் இரக்கமுமுள்ளவர். இருதயசுத்தமுள்ளவர் புகழைவிரும்பாதவர். முன்னே வைரவசிங்கென்ற நாமமுள்ளவராயிருந்தார். பாயலில் உள்ளவர். பாஞ்சாலக்ஷத்திரியர். முறையில் எனக்கு சகோதரனாகிறார் வெகுநாள் வரையில் அந்தரங்க முஸ்லிமாயிருந்தார் அப்போதும், இந்துக்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் விரோதமாய் பஞ்சாபி பாஷையில் நல்லநல்ல பாடல்களைக் கோர்வைசெய்துகொண்டிருந்தார். இன்னும் ஹஜரத்துரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய ஜீவவிர்த்தாந்தங்களைப் பாடல்களாய்க் கோர்வைசெய்துஇராகத்தோடுவாசித்துக்கொண்டிருப்பார். நான் அவரைப் பார்க்கும்போதெல்லாம் கீழ்எழுதும் பய்த்தைச் சொல்வேன்.

جبکہ تھی عین ایمان حب محبوب خدا * الفت حضرت بھلا پھر کیا چھپانا چاھئے

ஜப்க்கெ ட்டைரீ ஐன்ஈமான் ஹுப்பெ மஹ்பூபெ குதா
உல்பத்தே ஹஜ்ரத் பலா ப்பிர்க்கியாச் சுப்பானுச் சாஹ்யே.

இதன்கருத்து: ஆண்டவனுக்குப் பிரியமுள்ள ஹஜரத்து நபியவர்களின் ஆசையென்னும் ஈமானனது மனதிற்குடிகொண்டிருக்க பின்பு அதை மறைப்பானேன்? என்பதே.

பின்பு ஹிஜ்ரி 1271-வூஷத்தில் லூதியானுவிலுள்ள ரிஸாலாமஸ்ஜிதென்னும் பள்ளிவாசலில் அசர்நேரத்தில் இவர்தமது இஸ்லாமை வெளிப்படுத்தினார் அல்ஹம்துலில்லா.

14 ஷைக் அப்துல்ஹக். சாதுவானவாலீபர். எல்லாருக்கும் பிரியமுள்ளவர். பக்தியுள்ளவர். ஹுஸனருள்ளவர். முன்னே ஸோஹன்லால் என்று பேருள்ளவரா யிருந்தார். பாஞ்சாலக்ஷத்திரியர். பாயலில் உள்ளவர். முறையில் எனக்கு சகோதர புத்திரராகின்றார். வாலீபத்தின் துவக்கத்தில் ஷிருக்கை வெறுத்து கத்முல்முர்ஸலீனாகிய ஹஜரத்து நபியவர்களின் பின்பற்றுதலைத் தெரிந்துகொண்டார். வெகு

நாள் அந்தரங்கத்திலேயே இஸ்லாமாயிருந்து கடைசியில் ஆண்டவனுடைய கிருபையினால், தாயார், சகோதரர், சகோதரிகள், முதலான பந்துக்களின் ஆசையிலிருந்து நீங்கி ஊரிலிருந்து அல்லாவுடைய பாதையில் பிரயாணப்பட்டு லூதியானுவுக்கு வந்து ரிஸாலாமஸ்ஜிதில் தமது நெருக்கின பந்துவான மேற்கண்ட ஷைக் அப்துர்றக்மானுடன் அசர் நேரத்தில் வெளியரங்கமாய் இஸ்லாமானார். இப்பொழுது கல்வி பயிற்சியில் முயற்சியாயிருக்கிறார்.

15 ஷைக் அப்துல்கரீம். தைரியமுள்ள வாலிபர் முன்னே நந்துமலன் என்று பேருள்ளவராயிருந்தார். இவர் ஷைக் அப்துர்றக்மானுடைய சிறியதந்தையின் குமாரர். இவருக்கு இந்துமார்க்கம் சீர்கெட்டதென்றும் இஸ்லாம்மார்க்கம் அழகானதென்றும் தெரிந்தபொழுது அந்தரங்கத்தில் இஸ்லாமானார். இவர் ஒருதரம் லூதியானுவுக்கு வந்தார். அப்பொழுது ஷைக் அப்துர்றக்மான் இவரைப்பள்ளி வாசலில் தொழுது கொள்ளும்படி செய்ய வேண்டுமென்று இவரை உள்ளே வரும்படி கூப்பிட்டார். அதற்கிவர் இப்பொழுது என் இஸ்லாமை வெளிப்படுத்த எனக்குப் பிரியமில்லை யென்றார். அதற்கு ஷைக் அப்துர் றக்மான் இது மக்ரிபு நேரமாயிருக்கிறது இப்பொழுது யார்பார்க்கப்போகிறார்கள். வந்து தொழுது கொள்ளுமென்று இவரை அழைத்துக்கொண்டு பள்ளிவாசலுள் போனார். அப்பொழுது யாரோ இந்துக்களிடத்தில் இன்று ஒருவர்வந்து இஸ்லாமானாரென்று சொல்லிவிட்டார்கள். சில இந்துக்கள் பள்ளிவாசலின் வாசற்படியினிடம் வந்து இந்தசங்கதியை விசாரித்தார்கள் அதற்கு ஒருசினேகிதர் இன்று ஒருவரும் இஸ்லாமாகவில்லையென்று ஜவாபு சொல்லிக் கொண்டிருந்தார். அதற்குள்ளாக இந்த அப்துல்கரீம் சாகிபு பள்ளிவாசலிலிருந்து வெளியே வந்து நான் இஸ்லாமாய்விட்டேன். எப்படியும் ஒருநாள் என் இஸ்லாம் வெளிப்படவேண்டியதா யிருந்தது. அது இன்றைக்கே வெளியாய் விட்டதென்றார். பின்பு இவர் தமையனார் இவரை சந்தித்து இவருக்கு புத்திசொல்ல வந்தார். ஆனால் இவர் ஒன்றையும் பாராட்டவில்லை. திரும்பவும் இவர் தமையனாரும் நூற்றுக்கு அதிகமான அநேக இந்துக்களும் கூட்டமாய்வந்து இவரைப் பிடிக்கத் தலைப்பட்டார்கள். அப்பொழுது முகம்மது உசைன்கான் சாகிப் என்பவர் ஒண்டியாய் எல்லா ஹிந்துக்களோடும் எதிர்த்து வாதாடினார். பெருங்கலகமாச்சுது. போலீசுக்கும் பின்பு மாஜிஸ்திரேட்டுக்கும் போனார்கள். இரண்டு இடத்திலும் இந்த அப்துல்கரீம் சாகிபு சொன்னதென்னவென்றால், நான் இந்து மார்க்கத்தின் கெடுதிகளை யுணர்ந்து இஸ்லாம் மார்

க்கத்தில் பிரவேசித்தேன். பிரம்மாவானவர் தமது மகளை இச்சித்தவராயிருக்கிறார். இன்னவர் இன்னது செய்தார் இன்னவர் இன்னது செய்தார் என்று இந்துமார்க்க சுவாமிகளின் தகாக்கிரியைகளை எடுத்துக் காட்டினார். கடைசியாய் மாஜிஸ்திரேட்டார் இந்த அப்துல்கரீம் சாகிபுடைய தமையனாரைச் சேர்த்து நாலு ஹிந்துக்களுக்கு இரண்டு மாதம் காவல் அல்லது பத்து ரூபாய் அபராதம் என்று தீர்மானம் செய்தார். அப்பொழுது இந்த அப்துல்கரீம் சாகிப் தமது தமையனுருக்காக சிபாரிசு செய்து அரைவாசி அபராதத்தை மன்னிக்கச் செய்து அரைவாசி அபராதத்தைதாம் கொடுத்து அவரைக்காவலிலிருந்து விடுவித்தார்.

16 குதாபக்ஷ் ஜாதியில் பூர்பையா. ஷிஹாரம் பூரின்ஜாமிஆப்பள்ளியில் வெள்ளிக்கிழமை தினம் வாசு (பிரசிங்கம்) செய்து கொண்டிருக்கிற தருணத்தில் வந்து இஸ்லாமானார் ஒருவரை இஸ்லாமாக்குவதில் தாமசம் பண்ணக் கூடாதாகையால் கொஞ்சநேரம் பிரசங்கத்தை நிறுத்தி இவருக்கு இஸ்லாமை போதிக்கப்பட்டது.*

ஆண்டவன் இவர்கள் எல்லாரையும் பூலோகத்திலும் பரலோகத்திலும் சந்தோஷப்படுத்துவனாகவும் இன்னும் சகல இஸ்லாமான ஆண்பெண் அனைவரையும் ஈமானுடன் மவுத்தாக்கி நரகவேதனைக்குத்தப்புவித்து எல்லாருக்கும் சொர்க்கபதி யளிப்பானாகவும். மற்றும் காபிர்களையும் நேர் வழியிற்சேர உதவிசெய்வானாகவும். நம்மை எப்பொழுதும் ரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய பின்பற்றுதலில் வைத்து மதீனா முனவ்வராவில் நமக்கு மவுத்தை நஸீபாக்குவனாகவும்.

---

* மொழி பெயர்த்தோனின் ஓர் விண்ணப்பம்.

இப்புத்தகத்தின் மூலப்பிரதியான ஹிந்துஸ்தானி துஹ்பத்துல் ஹிந்துவில், பகிரங்கமாய் இஸ்லாமில் சேர்ந்திருப்பவர்களும் அந்தரங்கமாய் உள் ஈமான் கொண்டிருப்பவர்களுமான இன்னும் அநேகருடைய நாமங்களையும் அவர்களுடைய விர்த்தாந்தங்களையும் கூறப்பட்டிருக்கிறது. இருதரத்தாரின் தொகை நூற்றுக்கு நெருங்குகின்றது. அவர்களெல்லாரையும் குறித்து இவ்விடத்தில் எழுதுவது அநாவசியமென்று அடியேனுக்குத் தோன்றினபடியால் மேற்கண்ட 16 - பேர்வழிகளோடு சங்கதியை நிறுத்தினேன்.

نکل جاوے دم تیرے قدموں کے نیچے * یہی دل کی حسرت یہی آرزو ہے *

§ நிக்கல் ஜாவே தம் தேரேகதமோங்கே நீச்சே
எஹீ தில்கி ஹஸ்ரத் எஹீ ஆர்ஜூஹை.

ஆமீன் யா அர்ஹமர் ருகிமீன் வல்ஹம்துலில்லாகி றப்பில் ஆலமீன். இப்பொழுது எல்லா இஸ்லாமானவர்களுடைய சமுகத்தில் செய்துகொள்ளும் விண்ணப்பம் யாதெனில். இக்கிதாபைக் கோர்வை செய்தவர், மொழிபெயர்த்தவர், எழுதினவர், அச்சுபதிப்பித்தவர், வாசிப்பவர், கேள்பவர் மற்றும் மூமினன ஆண்பெண்கள் இவர்களெல்லாருக்கும் ஈமானின் சலாமத்துக்காகவும். துன்யா ஆகிறத்தின் ஆபியத்துக்காகவும் துவாச்செய்வீர்களாக என்பதே. சந்தோஷமாக ஆசையாக கலப்பறுதலாக சொல்லுங்கள்

லா இலாக இல்லல்லாகு
முகம்மதுர் றசூலுல்லாகி.

முற்றிற்று.

---

§ மேற்கண்ட பய்த்துக்குப்பொருள்=நபிகள் நாயகமே! தங்கள் பாதகமலங்களின் அடியில் என் ஆவி புறப்படுவதாக. இதுவே என் இருதயக்கிலேசமும் இதுவே என் பாசமுமாயிருக்கிறது=என்பதே.

## ஆரிய சமாஜமும் வேதமும்.

இந்துக்களில் ஸ்ரீ தியானந்த சுவாமியென்பவரைப் பின்பற்றினவர்களான ஆரியசமாஜத்தார், புராணாதி பிரமாணங்களால் தங்கள் மார்க்கத்தின்மீது சாருகிற குற்றங்களை நிவர்த்திக்கும்பொருட்டு மற்ற இந்துக்களுக்கு விரோதமாக ஒருபோக்கு சொல்லுகிறார்கள்.

அதாவது:—பதுமபுராணம், சிவபுராணம், பாகவதம், மகாபாரதம் முதலான புராணேதிகாசங்கள் எங்கள் மார்க்கத்துக்குரிய பிரமாண கிரந்தங்களல்லவென்றும் அவைகளில் அசத்தியவாக்கும் அன்னியதெய்வ வணக்கமும் அக்கிரமமான பாவங்களும் நிறைந்திருக்கின்றனவென்றும் நாங்கள் வேதத்தைமாத்திரம் விசுவாசிக்கிறோமென்றும் அதில் மேற்கண்ட குற்றங்கள் யாதொன்றுமில்லையென்றும் இவ்வாறு புராணாதிகளைமறுத்தும் வேதத்தைக் கனப்படுத்தியும் பேசுகிறார்கள்.

அதற்கு மறுமொழியாவது:—மேற்கண்ட புராணாதிகள் மெய்யாகவே உங்கள்மார்க்கப் பிரமாணகிரந்தங்களா யிருக்கின்றன. ஏனென்றால் அவை வேதத்திலிருந்தே வெளிப்பட்டன வென்றும் வேதமானது பிரம்ம ஞானத்தைத்தராத ஓர் சிற்றறி வென்றும் நீங்கள் விசுவாசிக்கிற உங்கள் வேதமே சாக்ஷிபகர்கின்றது.

அதெப்படி யெனில், அதர்வணவேதம் மண்டூக உபநிடதத்தில் " அறிவானது சிற்றறி வென்றும் பேரறிவென்றும் இருவிதப்பட்டிருக்கிறது. நான்கு வேதமும் அதினின்று பிரிந்த ஆறு சாஸ்திரங்களும் பதினெண் புராணங்களும் இலக்கணமும் கவிதை வாசகங்களும் சோதிட வைத்தியங்களும் சிற்றறிவாம். எதனால் என்று மழியாமல் சாஸ்விதமாயிருக்கிற கடவுளை அறியக்கூடுமோ அந்த பிரம்மஞானமே பேரறிவாம்—என்று எழுதப்பட்டிருக்கிறது.

இன்னும் ஸ்ரீராமருக்கு ஆசிரியராயும் மற்றும் இந்துக்களுக்குப் பெரிய குருவாயுமிருக்கிற வசிஷ்ட மாமுனி தம்முடைய யோகவசிஷ்டத்தில் " பிரம்மாவானவர் லோகர்களின் சீர் திருத்தத்துக்காக வேதங்களையும் ஆறு சாஸ்திரங்களையும் பதினெண் புராணங்களையும் பதினெட்டு ஸ்மிருதிகளையும் உண்டு பண்ணினாரென்று கூறியிருக்கிறார். வசிஷ்டருடைய வாக்கியமானது ஆரியர் குருவான ஸ்ரீதியானந்தருடைய வாக்கியத்தைக் காட்டிலும் நூறுமடங்கு மேன்மையுள்ளதென எல்லா ஹிந்துக்களும் விசுவாசிக்கிறார்கள்.

இப்படி வேத சாஸ்திரபுராணுதிகள் யாவையும் பிரம்மாவே உண்டு பண்ணினுரென்று! ஏற்பட்டிருக்கும் போது வேதத்தை மாத்திரம் நம்புவதும் மற்றவைகளை மறுப்பதும் எப்படி ஞாயமாகும். நம்பினுல் எல்லாவற்றையும் நம்பவேண்டும் மறுத்தால் எல்லாவற்றையும் மறுக்க வேண்டும். உண்மையில் இவையாவும் மறுக்க வேண்டியவைகளே யாம்.

வேதத்தில் அன்னிய தெய்வவணக்கம் அசத்தியவாக்கு முதலான குற்றங்கள் யாதொன்றுமில்லை யென்று சொல்லுகிறீர்களே இதுவும் தப்பான வார்த்தையாயிருக்கிறது. ஏனென்றுல், வேதத்தில் அக்கினிவணக்கம், வாயுவணக்கம், ஜலவணக்கம், புவி வணக்கம், ஆகாச வணக்கம் முதலான பஞ்சபூதவணக்கங்களும், இந்திராதி தேவ வணக்கங்களும் எவ்வளவோ நிறைந்திருக்கின்றன. அசத்திய வாக்கியங்களும் அவ்விதமேயாம். உதாரணமாக:-ருக் வேதத்திலிருந்து பொறுக்கி யெடுத்து பராஹீனே அகமதிய்யா வென்னும் கிதாபில் 407-வது பக்கம்முதல் 422-வது பக்கம் வரையில் எழுதப்பட்டிருக்கிற வேத சுருதிகளிற் சிலவற்றை இங்கு எழுதுகிறேன் பாருங்கள்.

## ருக்வேதசுருதிகள்

ஹோமத்துக்குக் குருவாயும் ஹோமகாரியத்தைச் செய்கிறவனுயும் மற்றும் தேவர்களுக்கு காணிக்கையைச் செலுத்துகிறவனுயும் பெரியபாக்கிய வந்தனுயு மிருக்கிற அக்கினிதேவனை நான் மகிமைபடுத்துகின்றேன்.

முற்காலத்துரிஷிகளும் தற்காலத்துரிஷிகளும் மகிமைப்படுத்தி வருகிற அக்கினிதேவன் மற்றும் தேவர்களை இப்பக்கம் நோக்கச் செய்வானுக.

இரண்டு குச்சிகளை ஒன்றோடொன்று இழைப்பதினுல் உற்பத்தியாகின்ற அக்கினியே! கொய்யப்பட்ட இந்த சுத்தமான தர்ப்பைப்புல்லின்மேல் தேவர்களைக் கொண்டுவா. எங்கள் பக்கத்திலிருந்து நீ அவர்களை அழைப்பவனு யிருக்கிறுய். உன்னை வணங்கப்படுகிறது.

ஓ அக்கினியே இன்று நல்ல சுவையுள்ள எங்கள் பலியை தேவர்கள் புசிப்பதற்காக அவர்கள் முன்னே கொண்டுபோய் வை.

ஓ அக்கினியே சிவந்த குதிரைகளையுடைய சுவாமியே நீ எங்கள் ஸ்தோத்திரத்தினுல் பிரசன்னமாகு. முப்பத்து மூன்று தேவர்களையும் இங்கு வரச்செய்.

ஓ அக்கினியே உனக்குக் காணிக்கை செலுத்துகிறவர்களுக்கு உன்னால் கூடிய வரையில் லாபஞ் செய்துவை. மெய்யாக அது உன்னிடத்திற்கே திரும்பி வரும்.

ஓ குற்றமில்லாத அக்கினியே நீ மற்றும் தேவர்களுடைய தொகையில் நின்றும் அறிவாளியான ஒரு தேவனா யிருக்கிறாய் நீயுன் தாய் தந்தையர்களிட மிருக்கிறாய் எங்களுக்கு சந்ததிகளைக் கொடுக்கிறாய் நீயே எல்லாபாக்கியங்களையும் அளிப்பவனா யிருக்கிறாய். (சந்ததிகளையும் மற்றும் பாக்கியங்களையும் அளிப்பவன் ஆண்டவனன்றி மற்றவரல்ல வென்பது இஸ்லாம் மார்க்க நிர்ணயம்.)

ஓ இந்திரனே! ஓ வாயுவே இந்த அர்க்கத்தை (பூஜைக்காக வைக்கப்படும் ஜலத்தை) உங்களுக்காகத் தெளிக்கப்பட்டது எங்களுக்காக இங்கு போஜனங் கொண்டு வாருங்கள்.

யுத்தத்தில் வெற்றிபெறுவதற்காவது புத்திரசம்பத்தை யடைவதற்காவது அறிவுவிளக்கத்தைக் கருதியாவது எந்தஜனங்கள் "இந்திரனை" தியானிக்கிறார்களோ அவர்கள் எல்லாருடைய எண்ணமும் நிறைவேறுகிறது.

நான் நம்முடைய மிருகங்கள் குடிக்கின்ற ஜலதேவனை க்கூப்பிடுகிறேன். வருணதேவன் சொந்தமாய் நமக்குக் கிருபை செய்பவராயிருப்பாராக.

ஓ தர்த்தி (பூமி) தேவி! நீ அதிக விஸ்தாரமாவாயாக. உன்மீது முட்கள் இல்லா திருப்பதாக. நீ எங்கள் குடியிருப்பு ஸ்தானமாய்ப் போவாயாக. நீ எங்களுக்குப் பெரிய சந்தோஷத்தைக் கொடு.

ஓ தேவர்களே சூரியன் உதயமான உடனே தகாக்கிரியைகளினின்று எங்களைக் காப்பாற்றுவீர்களாக. மதுராதேவதை, வருணதேவதை, ஆதித்திதேவி, சமுத்திரதேவதை, தர்த்திதேவி ஆகாசதேவதை இவர்கள் எல்லாரும் எங்களுடைய இந்த இரப்பைக் கவனித்துக் கேள்பார்களாக. (ஆண்டவன் ஒருவன் போதாதா.)

பெரிய தேவர்களுக்கு நமஸ்காரம், சின்ன தேவர்களுக்கு நமஸ்காரம், வாலிப தேவாகளுக்கு நமஸ்காரம் விர்த்தாப்பிய தேவர்களுக்கு நமஸ்காரம். நாங்கள் கூடியவரையில் எல்லா தேவர்களையும் பூஜிக்கிறோம். (ஆனால் ஆண்டவனை வணங்குகிற தில்லை.)

நான் சொர்னக் கைகளையுடைய "சூரியனை" என் காவலுக்காகக் கூப்பிடுகிறேன். நாம் அவனைப்பூஜிக்க ஆசைவைக்கின்றோம்.

உட்காருங்கள் ஓ நேசர்களே! நாம் உண்மையில் சூரியனைப்புகழ்வோம்.

"ஓ சூரியனே" நீ எல்லாவற்றினும் வேகமாய் நடக்கின்றாய். நீ ஒளியின் ஊற்றாயிருக்கிறாய் நீ வானங்கள் எல்லாவற்றின்பேரிலும் பிரகாசிக்கின்றாய். (இந்தப்புகழ் எப்படியிருக்கிறதென்றால் உன் பற்கள் உன் வாய்க்குள்ளே யிருக்கின்றன. உன் கண்கள் உன் புருவங்களினடியிலிருக்கின்றன வென்பதுபோலிருக்கிறது.)

இவைகளன்னியில் யசூர்வேதம் தைத்திரீய உபநிடதத்தில் "சூரியனுடைய பிரகாசம் கண்களில்கொள்ளும்படி சூரியனோடு பராக்காகவேண்டுமென்றும் என்புத்திக்கு நுண்ணறிவையும் என் கண்களுக்குப் பிரகாசத்தையும் கொடு என்று அதனிடத்தில் கேட்கவேண்டு" மென்றும் கூறப்பட்டிருக்கிறது.

சாமவேதம் சாந்தோக்கிய உபநிடதத்தில் "சூரியனைப் பிரமமென்றெண்ணி அதனோடுபராக்குசெய்யென்றும், அறிவுள்ள ஒருவன் சூரியனைப் பிரம்மமென்றெண்ணி அதனோடு பராக்காகுவானாகில் அவனுக்கு எல்லாப் பொருள்களும் எல்லாக் காரியங்களும் வசியமாகுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் அதே உபநிடதத்தில் நாமம், வாக்கு, மனம், சங்கல்பம், சித்தம், தியானம், கியானம், தத்துவம், ஆகாரம், ஜலம், அக்னி, வாயு, ஆகாயம், அடையாப்பொருளின் ஆசை இவற்றைப் பிரம்மமென்றெண்ணி இவைகளுக்கு வணங்கு என்று எழுதப்பட்டிருக்கிறது.

இந்த சுருதிகளால் வேதத்தில் அன்னிய தெய்வவணக்கமுண்டென்று பரிஷ்காரமாய்த் தெரிகிறதல்லவா? இனி அசத்திய வாக்கியங்களில் இரண்டொன்றை எழுதுகிறேன் பாருங்கள்.

### யஜுர்வேதம் தைத்திரீய உபநிடதம் கூறுவது

சூரியனானவன் கொழுமையை அடைவதற்காகச் சுற்றிக்கொண்டிருக்கிறான். ஜலமானது அவனுக்கு ஆகாரமாயிருக்கிறது. அதனால் அவன் ஜீவித்திருக்கிறான்=என்பதே.

இது புத்தி அனுபவங்கட்கு முற்றிலும் விரோதமாயிருக்கிறது. ஜலாகாரத்தினால் சூரியன் ஜீவித்திருக்கிறானென்று எந்தக்கல்விமானாவது சொல்வதுண்டா?

### யஜுர்வேதம் புருஷ உபநிடதம் கூறுவது

இரவில் தன் மனைவியிடத்தில் சேருகிறவனுடைய விந்து வீணாகிறதில்லை. அதனால் பிறக்கும் பிள்ளையானது சந்திரனைப்போல் சவுந்தரியமுள்ளதாகின்றது=என்பதே.

பாருங்கள் இது சுத்தப்பொய். விந்து கர்ப்பத்தில் தரிக்காமல் வீணாய்ப்போவதும், தரித்தபிள்ளை அவலக்ஷணமாய்ப் பிறப்பதும் அநந்தமுண்டு.

## ருக்வேதம் அஸ்ருப உபநிடதம் கூறுவது

யோசித்துப் பார்க்குங்கால், புருஷனானவன் விந்துரூபமாகி மனைவியின் கர்ப்பத்தில் வருகிறானென்றும்; கர்ப்பகாலத்தில் மனைவியானவள் (தன்வயிற்றிலிருக்கும்) புருஷனைக் காக்கிறவளாயிருக்கிறாளென்றும் பிள்ளைபிறக்கும்போது புருஷனே மறுதரம் பிறக்கிறானென்றும் விளங்குகின்றது=என்பதே.

இந்த வேதவிளக்கப்படி வேதத்தை விசுவாசிக்கிற இந்துக்களில் மனைவிக்கு மகனாகாத புருஷனும் புருஷனுக்குத் தாயாகாத ஸ்திரீயும் இல்லையென்று ஏற்படுகின்றது. இந்த வாக்கியத்தினால் ருக்வேதமானது எல்லா ஹிந்துக்களையும் தூஷிக்கின்றது.

## அதர்வணவேதம் யோகதத்வ உபநிடதம் கூறுவது·

பாலப்பருவத்தில் எந்த ஸ்தனங்களிலிருந்து பால் குடித்தார்களோ அந்த ஸ்தனங்களை வாலீப பருவத்தில் கையால் பிடிப்பது இன்பத்துக்குக் காரணமென்று நினைப்பவர்கள் பெரிய மூடர்கள். ஸ்திரீகளின் தேகம் பலவாயிருக்கினும் ஸ்தனங்கள் அவையாகவே யிருக்கின்றன, என்ன மதி மறதி! எந்த வாசலால் புறப்படுகிறார்களோ அந்த வாசலிலேயே நுழைவதை இன்பமாக நினைக்கிறார்கள். எந்த ரூபத்தை ஒருகாலம் தாயென்று சொன்னார்களோ அந்த ரூபத்தையே பெண்ஜாதியென்று சொல்லுகிறார்கள். எந்த ரூபத்தைத் தகப்பனென்று கூறினார்களோ அந்த ரூபத்தையே புருஷனாகவும் பிள்ளையாகவும் பாவிக்கிறார்கள்=என்பதே.

இத்தத் தூஷணையும் வேத விசுவாசிகளான எல்லா இந்துக்களையும் சாருகின்றது. இந்த வேதகட்டளைப்படி இந்துக்களில் சிறியோரானாலும் பெரியோரானாலும் ஆர் தம் மனைவிகளோடுசேர்கிறார்களோ அவர்கள் பெரிய மூடர்களென்றும் மதிமறந்தவர்களென்றும் வேதத்துக்கு விரோதம் செய்கிறவர்களென்றும் ஆகவேண்டும்.

ஆரிய நேசர்களே! நீங்கள் இந்த வேதத்தை விட்டுவிடுங்கள், இல்லாவிட்டால் இது உங்களை மிகப் பங்கப்படுத்தும். குர்ஆன் ஷரீபே மெய்யானவேதமா யிருக்கிறது. அதை மாத்திரம் நீங்கள் விசுவாசிப்பது உங்கள் நன்மைக்குக் காரணமாகும்.

இந்துக்கள் * வேதம் வேதமென்று வேதத்தை கனப்படுத்திப் பேசுகிறதெல்லாம் அவர்கள் வேதவாசகங்களை அறியாமலிருக்கிற காலம்வரையிலேதான். ஜனங்கள் மோசம்போகாதிருக்கும்படி இங்கிலீஷ் துரைத்தனத்தார் லாயக்கான சில ஆரியர்களையும் சில பிரம்ம சமாஜத்தாரையும் சில துரைமார்களையும் மெம்பர்களாக நியமித்து ஒரு கம்டி ஏற்படுத்தி அந்த கம்டியாரைக்கொண்டு வேதவாசகங்களுக்குக் கீழே பதவுரையாய் மொழிபெயர்ப்பித்து பொதுவாய் எல்லா ஹிந்துக்களுக்கும் கொடுக்கும்படிசெய்தால் வெகு நன்மையாயிருக்கும்.

குர்ஆன் ஷரீபுடைய பதவுரையான மொழிபெயர்ப்புகள் பார்சி பாஷையிலும், இந்துஸ்தானி பாஷையிலும், துருக்கி பாஷையிலும், அப்கானி பாஷையிலும் அச்சிடப்பட்டு உலகமெங்கும் பரவிவிட்டன.

* பரேலி என்றஊரில் இந்து மதபரிபாலர்களாய்க் கூடியிருந்த சங்கத்தவர்களான பண்டிதர்களால் எழுதப்பட்ட தத்வபோதினி சபையில் கூறியிருப்பது யாதெனில்:—வேதாரம்பமாவது:—வேதத்தை ருக், யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு நாமங்களால் அறியவேண்டும். ஆனால் பூர்வகிரந்தகர்த்தாக்கள் அதர்வண வேதத்தை ஒப்பு கொள்ளவில்லை. மனுவென்பவரும் வேதங்கள் மூன்றென்றே அறிந்திருக்கிறார். அமரகோசிலும் மூன்றென்றே எழுதப்பட்டிருக்கிறது. ருக்வேதமானது பூர்வஜனங்களின் பாஷையாயிருந்தது. யாராவதொரு தேவன் அவர்களுடைய வீட்டுக்குப் போனால் அவர்கள் அந்தத் தேவனை ஸ்தோத்திரம் செய்வார்கள். அதன் வாசகம் கவியைப்போலும் ஆங்காங்கு கவிமதுரமும் நிறைந்திருக்கிறது. சுருக்கிச் சொன்னால், ருக்வேதமானது பூர்வஜனங்களுடைய பாலப்பருவ வாக்கியத்தில் அமைந்திருக்கிறது. யஜுர் வேதத்தில் பெரும்பாலும் யாகாதிகிர்த்தியங்களின் முறையும் மந்திரமுதலியயாவும் எழுதப்பட்டிருக்கிறது. அதில் அங்கங்கே ருக்வேத வாசகம் ஸ்தோத்திர வாக்கியமாய் நிறைந்திருக்கிறது. சாமவேதம் முழுமையும் ருக்வேதத்தின் மொழிபெயர்ப்பா யிருக்கிறது. அதில் நின்றும் ஸ்தோத்திரவாக்கியங்களை யெடுத்து இராகத்துக்காக நூதனவிதமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. பூர்வசபையின் நிலைமையைத்தெரிந்து கொள்ள எங்களுக்கு ருக்வேதத்தைத் தவிர வேறு பூர்வகிரர்தம் ஒன்றும் தென்படவில்லை. இவையெல்லாம் ருக்வேதந்திலிருந்து ஏற்பட்டனவா யிருக்கின்றன. புராணமதத்தில் நான்குவேதமும் பிரம்மாவினுடைய நான்குவாய்களால் வெளிப்பட்ட வாக்கியமென்று எழுதப்பட்டிருக்கிறது. இது நம்பத்தகுந்த வார்த்தையல்ல. வேதங்கள் வெவ்வேறு பாகங்களாயும் வெவ்வேறு ரிஷிகளால் உண்டாக்கப்பட்டனவாயு மிருக்கின்றன. உண்டு பண்ணினவர்களுடைய நாமங்களும் அங்கங்கு காணப்படுகின்றன. அதெவ்வாறெனின், முன்னிருந்த ரிஷிகள்காலாகாலங்களில் தங்களுடைய சித்தாந்தத்தினால் என்னென்ன வசனங்கள் வசனித்துக் கொண்டிருந்தார்களோ அந்த வசனங்களை அவர்களுக்குக் கீழானஜனங்கள் நித்தியானுசாரமாய் வழங்கி வந்திருக்கிறார்கள். வேதசுலோகங்கள் வெகு நாளாய் சிதறிக் கிடக்கின்றன. பிறகு வியாசமுனி அவைகளுக்கு வியாக்கியானம் செய்திருக்கிறார் இதனாலேதான் நான்கு வேதங்களும் வெவ்வேறாயின—என்பதே. ஸவுத்து 1-வாலம் 6 முதல் 12-வது பக்கம்வரை சுருக்கம்.

இங்கிலாண்டு, அமெரிக்கா, ஜர்மன், பிரான்சு முதலானதேசங்களில் வேதங்களின் மொழிபெயர்ப்பு இலக்ஷக்கணக்கான ஜனங்களின் பார்வைக்கு வந்துவிட்டது. ஒருவராவது வேதத்தில் கடவுளை ஒன்று படுத்த லென்னும் தவுஹீது உண்டென்று சொல்லவில்லை.

இங்கிலீஷ்காரர் குர்ஆன் ஷரீபை மொழிபெயர்த்தபோது குர்ஆனிலுள்ள தவுஹீதானது யூரோப்பு தேசங்களில் நடுக்கத்தைப் போட்டு விட்டது. இதனாலேதான் லாயல், ஜான்டேவன் போர்ட்டு முதலான கீர்த்திபெற்ற ஆங்கிலேயர்கள், நீதத்தை அனுசரித்து குர்ஆன் ஷரீபுடைய பெருமையைப் பற்றியும் அதன் சுத்தமான தவுஹீதைப் பற்றியும் நற்சாக்ஷி பகர்ந்திருக்கிறார்கள். இன்னும் தவுஹீதின் வாசகத்திலும், குற்றமின்றி சுத்தமாயிருப்பதிலும் குர்ஆன்ஷரீபானது நிகரற்ற ஒரு கிதாபாயிருக்கிற தென்று பாரபக்ஷ மில்லாமல் அவர்கள் சொல்லும்படி நேரிட்டது.

இது போலவே பிளண்ட் என்ற பெயரையுடைய ஒரு பெரிய ஆங்கிலேய பண்டிதர் இஸ்லாம் மார்க்கத்தைக் குறித்து தற்போது ஒரு புஸ்தகம் எழுதி யிருக்கிறார். அதில் அவர் கூறிய விஷயங்களில் ஒன்றென்ன வென்றால், தவுஹீதை மறு விடுத்தம் உலகத்தில் நிலை நிறுத்தினவர் இஸ்லாம் மார்க்க நபி (முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம்) அவர்களேயாம். அவர் ஒரே கடவுள் உண்டென்னும் விசுவாசத்தை உலகத்தில் எவ்வளவு பரவச் செய்தாரென்றால் அறபு தேசத்துப் பாலைவனங்களில் நாளது வரையில் தவுஹீதென்னும் நறுமணம் வீசுகின்றது:—என்பதே.

பாருங்கள், வேதத்தைப்பற்றி எந்த மத்தியஸ்தனாவது இவ்விதமாய் சாக்ஷி சொல்லியிருக்கிறானா? குர்ஆன் ஷரீபுடைய மொழி பெயர்ப்புகளும் வேதத்தின் மொழிபெயர்ப்புகளும் இங்கிலாண்டு, பிரான்சு முதலிய தேசங்களுக்குக் கொண்டு போகப்பட்டன. கடைசியாய் அந்த மத்தியஸ்தர்கள் செய்த அபிப்பிராயத் தீர்ப்பு என்னவென்றால், குர்ஆன் ஷரீபில் தவுஹீதும் (ஒரேகடவுள் வணக்கமும்) வேதத்தில் ஷிருக்கும் (பலதெய்வ வணக்கமும்) நிறைந்திருக்கிறது என்பதே.

## பிரம்மசமாஜம்.

இந்துக்களில் பிரம்ம சமாஜத்தார் என்ற சில ஜனங்களுண்டு. இவர்கள், ஆண்டவன் புரத்திலிருந்து * ஒஹியும் † இல்ஹாமும் வேதமும் இறங்குவது மெய்யென்று ஒப்புகொள்ளுகிறதில்லை. மற்றும் ஹிந்து

* ஒஹி=தேவனால் ஏவப்படுவது. † இல்ஹாம்=உதிப்பு.

க்கள் விசுவாசிக்கிறதுபோல் இவர்கள் வேதத்தையும் விசுவாசிக்கிறதில்லை. மனிதர்களுடைய பதவிகளுக்குத் தக்கபடி அவர்களுடைய இருதயங்களின்பேரில் ஆண்டவன் புரத்திலிருந்து வழக்கம்போல் நடந்து வருகிற எண்ணங்களை ஒஹியாயும் இல்ஹாமாயு மிருக்கிறதென்றும் இந்த மனுஷாத்மாவே ஆண்டவனுடைய நித்திய ஜீவவேதமாயிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். என்கிலும் இன்ஸானியத்தென்ற மனுஷத் தன்மையில் நப்ஸானியத்தென்ற தேகாதிசுயேச்சைகளும் சேர்ந்திருப்பதால் அந்த எண்ணங்கள் முழு நம்பிக்கையோடு நாம் சாரத்தகாதனவாயும் மெய்யோ பொய்யோ வென்ற சந்தேகமுள்ளனவாயு மிருக்கின்றன. ஆதலால் அவற்றைப் பிரித்தறியும்பொருட்டு இந்த பிரம்ம சமாஜத்தார் அக்லாகீ குவ்வத்துகளென்ற தத்துவங்களை உரைக்கல்லாக நியமித்திருக்கிறார்கள். எந்த தத்துவத்தின் உதவியால் இதை நிச்சயித் தறியப்படுமோ அந்த தத்துவத்திற்கு புத்தி என்னப்படு மென்கிறார்கள். இதன் கருத்து:—மனிதருடைய சொல், செயல், எண்ணம் இவைகளில் இன்ஸானியத்தைச் சேர்ந்தவை இன்னவை நப்ஸானியத்தைச் சேர்ந்தவை இன்னவை என்று ஒஹியும் வேதமும் இல்லாமலே அவரவர்களும் தங்கள் புத்தியினால் ஊகித்தறிந்து கொள்ளலா மென்பதே.

இதற்கு மறுமொழி,

இந்த புத்தியின்பேரிலும் ஒரு மேலதிகாரியையும் தீர்ப்புசெய்யப்பட்டிருக்கிற ஒரு சட்டத்தையும் ஏற்றுக் கொண்டால் வெகுநலமாயிருக்கும். ஏனென்றால், புத்தியானது சில சமயம் சந்தேகத்துக்கும் சிலசமயம் சுயேச்சைக்கும் சிலசமயம் வழக்கானுசாரத்துக்கும் ஐக்கியப்பட்டு பெரும்பான்மை பிசகிப்போகின்றது. நல்லதைக் கெட்டதென்றும் கெட்டதை நல்லதென்றும் மெய்யைப் பொய்யாகவும் பொய்யை மெய்யாகவும் எண்ணிக் கொள்ளுகின்றது.

பாருங்கள் தவுஹீதானது யாவராலும் நன்கு மதிக்கப்பட்ட ஒரு அரிய பொருளாயிருக்கிறது. மக்காவிலிருந்த முஷ்ரிகானவர்களுடைய புத்திக்கு இந்த தவுஹீதென்பது பெரிய ஆச்சரியமாய்த் தோன்றின படியால் அவர்கள் சொன்னதாவது:—

اجعل الالهة الهاً واحداً إن هذا لشيء عجاب *

முகம்மது (சல்லல்லாகு அலைகிவசல்லம்) எல்லா சுவாமிகளையும் ஒரே சுவாமியென்றா ஆக்கிவிட்டார் ? ஆ! இது பெரிய விந்தையான பேச்சா யிருக்கிறது=என்பதே.

இன்னும் அரஸ்து அல்லது அப்லாத்தூன் என்பவர் மகாபண்டிதரா யிருந்தாரென்பது லோக பிரசித்தமாயிருக்கிறது. இவர் தம்மு

டைய மரணத்தின்போது அருகிலிருந்தவர்களிடத்தில் எனக்காக இன்ன விக்கிரகத்தின்பேரால் சேவலை அறுங்களென்று ஒசியத்து செய்ததாக சரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இன்னும் யூனானிய பண்டிதர்களில் சிலர் பல்லிகளை வணங்கி வந்தார்களென்றுங் கூறப்பட்டிருக்கிறது.

இதன்னியில் புத்திகள் ஒன்றுக்கொன்று பேதப் பட்டனவாயும் முறண்பட்டனவாயு மிருக்கின்றன. உதாரணமாக:—சூபிஸ்தாயிய்யா என்பவர்கள் உலகமென்பது வெறுந் தோற்றமேயொழிய உண்மையில் அது பொருளா யிருப்பதில்லை யென்றுர்கள். தஹ்ரிய்யா வென்ற நாஸ்திகர் உலகத்துக்கு சிருஷ்டிகர்த்தாவான கடவுள் இல்லை யென்கிருர்கள். நெருப்பை வணங்கும் மஜூசுகளென்ற பார்சிகர் சிருஷ்டிகர்த்தர் இருவர் உண்டென்றும் நன்மையை சிருஷ்டிக்கிற கர்த்தாவுடைய பெயர் எஜ்தான் என்றும் தின்மையை சிருஷ்டிக்கிற கர்த்தாவுடைய பெயர் அஹ்ரமன் என்றும் சொல்லுகிருர்கள்.

இன்னும் நீங்கள் பார்க்க வில்லையா? யூனானியர்களும் இந்தியர்களுமான தத்துவ சாஸ்திரிகள் தங்கள் எண்ணங்களிலும் தத்வவிசாரணைகளிலும் எவ்வளவோ பேதப்பட்டும் எவ்வளவோ பிசகிப்போயு மிருக்கிருர்களே. சிலர் ஜென்மமுண்டென்கிருர்கள். சிலர் இல்லையென்கிருர்கள். சிலர் பாகிக்கவராத அணுவுண்டென்கிருர்கள். சிலர் ஹயூலாவென்ற மூல தத்துவ முண்டென்கிருர்கள். சிலர் வானம் பிளப்பதும் சேர்வதும் உண்டென்கிருர்கள். சிலர் இல்லை யென்கிருர்கள். சிலர் வானமென்பதே இல்லையென்கிருர்கள். சிலர் வானம் சுற்றுகிறதென்கிருர்கள். சிலர் பூமியே சுற்றுகிறதென்கிருர்கள். சிலர் ஆண்டவன் சிருஷ்டி கர்த்தனென்கிருர்கள். சிலர் அவன் ஒன்றையும் சிருஷ்டிக்காதவனென்கிருர்கள். சிலர் மறுமையில் நன்மை தின்மைகளுக்குத் தக்கபலனுண்டென்பதை ஒப்புகொள்ளுகிருர்கள். சிலர் இல்லை யென்று மறுக்கிருர்கள்.

சிலர் ஒரே ஆண்டவனுக்கு வணங்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ளுகிருர்கள். சிலர் தேவர்களையும் கிரகங்களையும் பூஜிக்கிருர்கள். சிலர் பஞ்ச பூதங்களிடம் தங்கள் கோரிக்கைகளைக் கெஞ்சிக் கேட்கிருர்கள் சிலர் விக்கிரகங்களுக்கு விழுந்து கும்பிடுகிருர்கள். சிலர் லிங்கத்துக்கு அங்கம் பணிகின்ருர்கள். சிலர் அல்குலை ஆராதிக்கிருர்கள்.

சிலர் பெண்மக்களுக்கு ஆஸ்தியில் பாகமுண்டென்கிருர்கள். சிலர் இல்லையென்கிருர்கள். சிலர் பெண்மக்களை சிறுவயதிலேயே கொன்று போடுகிருர்கள். சிலர் உயிராயிருக்கிற ஸ்திரியை இறந்துபோன

அவள் புருஷனோடு அக்கினியில் தகனித்து விடுகிறார்கள். சிலர் மறுமையில் நன்மையடையவென்று தம்முயிரைத் தாமாய் மாய்த்து கொள்ளுகிறார்கள். சிலர் தேவர்கள் பேரால் நரபலிசெய்கிறார்கள். சிலர் உடன் பிறந்த சகோதரியை சகோதரனுக்கு விவாகம்செய்விப்பது மிக நன்மையென்றும் அவனைவிட வேறு எவன் அவளுக்கு அதிக நன்மையைச் செய்வானென்றும் சொல்லுகிறார்கள். சிலர் கைம்பெண்களுக்கு மறு விவாகம் செய்விப்பது பெரிய குறைவென்று நினைக்கிறார்கள். இன்னுமிப்படியே அநேக விஷயங்களில் சிலருடைய புத்திக்கு சிலருடைய புத்தி பேதமாயும் நேர்மாறாயுமிருக்கிறது.

இதுவுமன்றி சிலருடையபுத்தி ஒருகாலத்தில் ஒருவிதமாயும் பின்பு வேறுவிதமாயும் இப்படி பலகாலங்களில் பலவிதமாய் மாறுகின்றது. உதாரணமாக:—கிறிஸ்தவனாயிருப்பவன் முகம்மதினாய்ப் போகிறான் இந்துவாயிருக்கிறவன் கிறிஸ்தவனாய் மாறுகிறான். பிரம்மசமாஜத்தான் ஆரியனாகின்றான் ஆரியசமாஜத்தான் பிரம்மசமாஜத்தில் சேர்கின்றான். இப்படி மதபேதமாவதும் நடை யுடைபாவனை முதலியவை பேதப்படுவதும் முன்னிருந்த புத்திமாறுதலடைந்த தென்பதிற்கு திருஷடாந்தமாயிருக்கிறது.

நீங்கள் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கவில்லையா? ஸொஸைட்டிகளும் கம்டியார்களும் ஒரு விஷயத்தைப் பற்றி பேசும்பொழுது சிலர் ஒருவிதமாயும் சிலர் வேறுவிதமாயும் அபிப்பிராயங் கூறுகின்றார்கள். கடைசியில் அவர்களில் அநேகருடைய அபிப்பிராயத்தையே பலப்படுத்தி அந்த விஷயத்தை நிலைநிறுத்தப்படுகின்றது.

ஆனால் மார்க்கசம்மந்தமாய் தினந்தோறும் சம்பவிக்கிற ஒவ்வொரு விஷயத்தையும் குறித்துப் பேசுவதற்காக நாள்தோறும் கம்டி கூடுவது அசாத்தியமான காரியம்.

ஆகவே மனிதருடைய எல்லா எண்ணங்களுக்கும் எல்லா புத்திகளுக்கும் மேலதிகாரியாய் ஒரு தீர்ப்பான சட்டத்தை ஏற்றுக் கொள்வது அவசியமென்றும் அந்த சட்டம் ஒஹியினாலறிவிக்கப்பட்ட கலாமே றப்பானி, என்ற தேவவசனமாயன்றி மற்ற தாயிருக்கக் கூடாதென்றும் அந்தவசனம் நபி அலைகிஸ்ஸலாமவர்களுடைய அருள் தங்கிய இருதயத்தின் மூலமாயன்றி வேறெவ்விதத்தாலும் வெளிப்பட ஏதுவில்லையென்றும் சகலபுத்திமான்களும் ஒத்துக் கொள்ளவேண்டியதே. இவ்விஷயத்தை இன்னும் அதிக விவரமாய் அறியப் பிரியமுள்ளவர்கள் பராஹீனே அஹ்மதிய்யாவென்னும் கிதாபைப்பார்வையிடுவார்களாக.

## நம் நபியவர்களைக் குறித்துச் சில சீர்மைத்துரைமார்கள் கொடுத்திருக்கிற நற்சாக்ஷி பத்திரங்கள்.

ஹஜரத்து முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மெய்யான நபி என்பதையும், இஸ்லாம் மார்க்கம் உண்மையான மார்க்கமென்பதையுங் குறித்துக் கல்விமான்களாகிய சில ஐரோப்பியர்கள் சொல்லியிருக்கிற வாக்கியங்களை இதன் மூலப் பிரதியாகிய (துஹ்பத்துல் ஹிந்து) வின் 134-ம் பக்கமுதல் நோட்டாக எழுதியிருக்கிறது. அதைச் சினேகிதர்களின் பார்வைக்குக் கொண்டுவந்தால் நன்மையா யிருக்குமென்று மொழிபெயர்த்து இத்துடன் சேர்த்து அச்சிடப்பட் டிருக்கின்றது.

அதுவருமாறு:—ஜபறுல்முபீன் 555-ம் பக்கமுதல் எழுதப் பட்டிருக்கிற தென்னவென்றால்: மிஸ்ட்டர் ஜான்டெவன் போர்ட் என்பவர் ஹஜரத்து நபியவர்களைக்குறித்து எழுதுகிறதாவது:—

முகம்மது (சல்லல்லாகு அலைகிவசல்லம்) அந்தரங்கசுத்தமா யிருந்தா ரென்பதற்கு, அவரின் நடவடிக்கைகளை நன்கு யறிந்திருந்த அவரின் பந்துக்களும் தோழர்களும் எல்லாரைவிட முந்தி அவரை விசுவாசித்ததே போதுமான திருஷ்டாந்தமா யிருக்கின்றது. ஏனென்றால், அவர் வஞ்சகரா யிருக்கும் பக்ஷத்தில் அவரின் தந்திர உபாயமான வஞ்சகம் இந்த ஜனங்களுக்கு வெளியாகி விடுமாகையால் இவர்கள் அவரை உண்மையுள்ள நபியென்று ஒருபோதும் விசுவாசிக்க மாட்டார்கள். உண்மையில் முகம்மது (சல்லல்லாகு அலைகிவசல்லம்) தமது மார்க்கத்தை ஊர்ஜிதப் படுத்துவதற்காகவும், தமது நபிபட்டத்தை ஸ்தாபிப்பதற்காகவும் ஒருபோதாவது தந்திர உபாயம் செய்தா ரென்றும், பொய்யான அற்புதங்களைக் காட்டினா ரென்றும் ஏற்படவில்லை. இஸ்லாம் மார்க்கம் அவரின் ஜீவகாலத்திலேயே அறபு தேசம் முழுவதிலும் ஸ்தாபிக்கப்பட்டுப் போயிற்று. விக்கிரக ஆராதனை வேர்களையப்பட்டது. அவருக்கு இப்படிப்பட்ட காரியசித்தி யுண்டானது வீரியத்தினாலும் யுத்த பலத்தினாலும் அல்ல. மேலும் அதற்குக் காரணங்களிருந்தன. அவர் மார்க்கங்களைச் சீர்திருத்தினார் இராச்சியங்களை மேற்கொண்டு ஜெயித்தார். இந்த மார்க்கத்தை யார் என்ன எண்ணினாலும் எண்ணட்டும். ஆனால் இதன் உண்மையென்ன வென்

ருல், அக்காலத்தில் அறபு தேசத்தில் வழங்கிவந்த மார்க்கங்களைப் பார்க்கிலும் இவர் மார்க்கம் வெகு சுத்தமானதா யிருந்தது. மக்காவை ஜெயித்த பிறகு அவர் குருனின் ஆக்கியைப்படி ஹஜ்ஜென்ற வணக்கத்தைச் செய்து ஹஜ்றே அஸ்வதென்ற கல்லுக்குச் சமீபத்தில் நின்றுகொண்டு உயர்ந்த சத்தமாகச் கடவுளுடைய நாமத்தைச் சொன்னர். விக்கிரகங்களை வேரோடு பிடிங்கி யெறிந்தார். இஸ்லாம் மார்க்கம் அவரின் ஜீவகாலத்திலேயே அறபு தேசம் முழுவதிலும் ஸ்தாபிக்கப்பட்டுப் போயிற்று. விக்கிரக வணக்கம் அடியோடு ஒழிந்தது. அவருக்குப்பிறகு அவரின் கலீபாமார்களும் அந்த வாளை யிடுப்பில் கட்டினர்கள். ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்காகண்டம் சேர்ந்திருக்கிற ஒரு பெரிய இராச்சியத்தில் அதை ஸ்தாபிக்காத வரையில் அந்த வாளை அவிழ்த்தார்களில்லை. இஸ்லாமானவர்கள் உமருடையவும், காலிதுடையவும், மற்றும் கலீபாக்களுடையவுமான கொடிகளின்கீழிருந்து வெற்றியின்பேரில் வெற்றியடைந்தார்கள். பாரிசு, பலஸ்தீன்,ஷாம், மிசர் இவைகளுக்குப் பின்னல் வேறே யுத்த வீரர்களும் இஸ்லாம் மார்க்கத்துக்கு வழிப்பட்டார்கள். பன்னிரண்டு வருஷ காலத்துக்குள் இவர்கள் முப்பதினயிரம் பட்டணங்களையும் கஸ்பாக்களையும் கோட்டைகளையும் தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள், ஆயிரம் தேவாலயங்களையும் கிறிஸ்தவர் கோயில்களையும் பறக்கடித்தார்கள். தங்கள் மார்க்கத்தையுடையவர்களுக்காக ஆயிரத்து நானூறு பள்ளிவாசல்களைக் கட்டினர்கள். இன்னும் இந்தத் தேசங்களே போது மென்று மிருந்தார்களில்லை.ஹபஷ்தேசத்தாரை மேற்கொள்ளாதவரையில், இன்னும் ஆப்ரிக்கா இஸ்கந்திரிய்யா தேசங்கள் முதல் ஹிஸ்பேனியா தேச முள்பட பஹ்றைன்வரை தங்கள் அரசாக்ஷியில் சேர்த்துக்கொள்ளு மட்டும் இவர்கள் இளைப்பார வில்லை.

டாமஸ்கர்னயல் துரை இந்த உலுல் அஸ்மென்ற தீர்க்கதரிசியின் சங்கதிகளைப் பொதுவாய்ப் பாரபக்ஷ மில்லாமற் சொல்லுகிறர் அதை விட்டுவிட என் மனம் கேட்கவில்லை. ஷெ சரித்திரக்காரர் சொல்லுகிற தென்ன வென்றுல்,

கண்கள் கறுப்பும் ஒளியுமா யிருந்தவரும், மனதில் விஸ்தாரமுள்ளவரும், நற்குண முள்ளவருமான வனந்திரவாசியாகிய அந்தமகா புத்திமானுக்கு (முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு) துராசையும் வீணசையு மிருந்ததில்லை. அவர் உறுதியும் வைராக்கி

யமும் உள்ளவரா யிருந்தார். எந்த ஜனங்கள் விடாமுயற்சியி லிருந்தார்களோ, இன்னும் எந்த ஜனங்களை ஆண்டவன் உண்மைக்காகப் படைத்தானே அந்த ஜனங்களில் அவர் ஒருவராயிருந்தார். மற்ற ஜனங்கள் பஞ்சபுலனறிப் பொருள்களின்பேரிலும் கேள்விப்பட்டவைகளின் பேரிலும் நடவடிக்கை நடத்துகிறார்கள் அவைகளைக்கொண்டே திருப்தியடைகிறார்கள். அவர் எப்பொழுதும் ஞானசொரூபியாய் இருந்தார். அந்தப் பெரிய இரகசியப்பொருளும் அவரில் தான் வெளியா யிருந்தது. அவரே அந்தப் புதைப்பொருளின் மகத்துவ ஸ்தானமா யிருந்தார். நாம்சொன்ன இந்த உண்மையும் சத்தமும் கடவுளைக் கொண்டு கொஞ்சமாவது சம்பந்தப் பட்டதா இருக்கும். இப்படிப்பட்டவருடைய வார்த்தை கடவுளுடைய இருதயத்திலிருந்து புறப்படுகிற ஒரு ஓசையாயிருக்கிறது. மற்றவைகளெல்லாம் அந்த ஓசைக்கு முன்னால் காற்றுக்குச் சமானமா யிருக்கின்றன. எப்பொழுதும் ஹஜ்ஜிலும் யாத்திரையிலும் அவருடைய இருதயத்தில் அனேகமான எண்ணங்கள் ஊசாடிக்கொண்டிருந்தன. அந்த எண்ணங்களாவன:—நான் என்ன? நானிருக்கிறதும் உலகமென்று சொல்லுகிறதுமான இந்தப் பெரிய வஸ்துவான தென்ன? ஜீவிப்பென்பதும் மரணமென்பதும் என்ன? நான் எதை உண்மையென்று கொள்ளவேண்டும்? நான் என்ன செய்யவேண்டும்? என்பதே. ஹிறாப்பர்வதமும், சீனாப்பர்வதத்தின் கருங்கல்லுகளும், சந்தடி யற்ற பயங்கரமான வனாந்தரங்களும் அவருடைய கேள்விகளுக்கு விடைகொடுக்கவில்லை. நீலவர்ணமும் ஜோதி நக்ஷத்திரங்களுடன் சுற்றிக்கொண்டிருக்கிற வானங்களும் அவருக்கு உத்தரம் சொல்லவில்லை. எந்தவஸ்துவும் அவருக்கு மறுமொழி பகரவில்லை. மேலும் அவருடைய மனமும் வஹி என்ற தேவ ஏவுதலுந்தான் அவருக்குப் பதிலளித்துக்கொண் டிருந்தன. இதை யெழுதினவனாகிய நான் (ஜான்டெவன்போர்ட்) சொல்லுகிறேன். வீட்டில் உட்கார்ந்திருந்த முகம்மதென்னும் ஒருவர் அவருடைய குடும்ப ஜனங்களே அவரை நபியென்று ஏற்றுக்கொள்ளும்படிச் செய்தார். ஒரு ஏழை அறபியாகிய முகம்மது (சல்லல்லாகு அலைகி வசல்லம்) தன் தேசத்தின் வனாந்திரவாசிகளும், ஏழைகளும், உண்கச்சோறும் உடுக்கத்துணியு மற்றவர்களுமான சாதிகளை புத்தியும் உறுதியும் உள்ள ஒரு கூட்டமாக ஆக்கிவிட்டார். எல்லா தேசத்தைப் பார்க்கிலும் அவர்களுக்கு வேறே விதமான நடவடிக்கைகளையும் ஒழுங்குகளையும் போதித்தார். முப்பது வருஷகாலத்துக் குள்ளாக இந்த ஜனங்கள் றூம் இராயனை முறியடித்து பார்சுடைய அரசர்களையும் மேற்கொண்டார்கள். ஷாம், இராக், மிசர் இவைகளை ஜெயித்தார்கள்.

கருங்கடல்முதல் அக்ஸர்கடல் ஜீஹூனென்கடல் வரையிலுமுள்ள தேசங்களை உக்கிரத்துடன் மேற்கொண்டார்கள். ஆயிரத்து இருனூறு வருஷகாலத்தில் அவர்களின் அரசாட்சி ஹிஸ்பேனியா தேசந்தவிர மேற்கண்ட தேசங்களில் ஒன்றையும் விட்டுப்போகவில்லை. அவர்களின் மார்க்கம் ஆசியாவின் வடபாகத்திலும் ஆப்ரிக்காவின் மத்தியிலும் அக்ஸர் கடலோரங்களிலும் பரவுகின்றது. நாளதுவரையில் பரவிக்கொண்டு வருகின்றது. உலூல் அஜ்மென்ற தீர்க்கதரிசியான முகம்மது (சல்லல்லாகு அலைகிவசல்லம்) இப்பேர்ப்பட்டவரா யிருந்திருக்கிறார். அவரின் புத்தியும் விடாமுயற்சியும் இப்பேர்ப்பட்ட மார்க்கத்தை உண்டுபண்ணினது, இந்த மார்க்கம் ஸர்தஷ்த்து மார்க்கத்தாரை உக்கிரகத்துடன் மேற்கொண்டு ஜெயித்தது. அதில் சிதறியோடின சில ஜனங்கள்மாத்திரம் தப்பினூர்கள். பின்பு இந்துஸ்தானத்தின் பேரில் படையெடுத்தார்கள். அதன் பூர்வீக மார்க்கமாகிய பிராமண மார்க்கத்தையும், அதிலும் வெகுதூரம்வரையில் பரவியிருந்த புத்த மார்க்கத்தையும் ஒடுக்கிக் கங்கையாற்றுக்கப்புறப் படுத்தினூர்கள்.

ஐரோப்பாக்கண்டத்தின் மேற்றிசையான தேசங்களின்பேரில் படையெடுத்தார்கள். ஹிஸ்பேனியா தேசத்தின் அனேக பட்டணங்களைப் பிடித்துக்கொண்டார்கள். நிவாடென்கிற கடலோரம் வரையில் ஏறினூர்கள். அந்தத்தேசங்களை ஜெயித்ததினூல் றூம் அரசாக்ஷியின் சிம்மாசனத்தில் நடுக்கத்தைப் போட்டார்கள். கடைசியாய்க் கிஸ்த்தந்தீனியா வென்னும் புதிய ரோமாபுரியில் வெற்றியுடன் தங்கள் அதிகாரத்தை ஸ்தாபித்து ஊர்ஜிதப் படுத்தினூர்கள். இதை எழுதினவனூகிய நான் (மிஸ்டர் ஜான்டெவன்போர்ட் அல்லது டாமஸ் கர்னூயல்) சொல்லுகிற தென்னவென்றூல், இவ்விடத்தில் கவனிக்கவேண்டிய ஒருவார்த்தை யிருக்கிறது. அதாவது தீர்க்கதரிசிகளாகிய மூசாவும் ஈசாவும் தங்கள் தீர்க்கதரிசன ஞானத்தினூல் பிற்காலத்தில் எங்களிலும் சிரேஷ்டமான ஒரு தீர்க்கதரிசி யெழும்புவார் என்று முன்னறிவிக்கையாய்ச் சொல்லியிருந்ததும், மஸீஹ் என்ற ஈசாவின் அப்போஸ்தலர்கள் (பாரகலீத்து) தேற்றுகிறவர் வருவாரென்று அறிவித்ததுமான இந்த இரண்டு முன்னறிவிக்கைகளும் அவருக்கு (முகம்மது ஸல்லல்லாகு அலைகிவஸல்லமுக்கு) சம்பந்த மானவைகளா யிருக்கின்றன வென்பதற்கும் அவரில் நிறைவேறின வென்பதற்கும் யாதொரு சந்தேகமில்லை. அவர் ஒரே கடவுளைத் தியானிக்கிறவரா யிருந்தாரென்றும் விக்கிரகங்களையும் மனிதர்களையும் கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் வணங்கக் கூடாதென்று கண்டிப்பாய்த் தடுக்கிறவரா

யிருந்தாரென்றும் குருனால் நன்றாய்வெளியாகின்றது. இஸ்லாமென்பது ஒருசிறந்த மார்க்கமாயிருக்கிறது. அதன் உசூல் என்ற மூல அம்சங்களான பிரதான சங்கதிகளில் எல்லாருக்கும் ஒற்றுமை யுண்டு. புத்தியில் அமையாததும் பலவந்தமாய் ஏற்றுக் கொள்ள வேண்டியதுமான சங்கதி அதில் ஒன்றுமில்லை. அவர் கீழ்த்திசையில் பிறந்து தமது மார்க்கத்தை ஸ்தாபித்து ஆசியா, ஆப்பிரிக்கா, மிசர் தேசங்களின் பெரும்பாகத்தி லிருந்து முற்றிலும் விக்கிரக வணக்கத்தைத் தலை காட்டாமல் அழித்தார். நாளது வரையில் அந்தத் தேசங்களில் ஒரே கடவுளின் வணக்கம் நடந்து வருகின்றது. அந்த அறபி நபியின் வெளியரங்கமும் அந்தரங்கமுமான மகத்துவங்கள் லக்ஷக்கணக்கான ஜனங்களின் இருதயத்தில் குடிகொண்டன. நம்முடைய இருதயத்தின் சுத்தம் கூறுகின்றதாவது:—உண்மையில் அவரை, விசுவாசித்தவர்கள் தங்கள் முழு இருதயத்தோடு விசுவாசித்தார்கள். அவர் பேரில் வஹி என்ற தேவ ஏவுதல் இறங்குகின்றதென்றும், அவர் மெய்யான நபியென்றும், உண்மைகொண்டிருந்தார்கள். முஷ்ரிக்கென்ற விக்கிரக ஆராதனைக் காரருக்கு அவ்ருடைய மார்க்கத்தின் சட்ட திட்டங்கள் வெகுநேர்த்தியா யிருந்ததின் நிமித்தம் அது கடவுளால் அருளப்படுகிறதென்று கட்டாயமாய்த் தெரிந்திருக்கலாம். அவரின் மார்க்கம் ஸர்தஷ்த்துடைய மார்க்கத்தைக் காட்டிலும் அதிக தெளிவானதாகவும் மூசா உடைய மார்க்கத்தைப் பார்க்கிலும் அதிக சுத்தமானதாகவும் தெரிய வந்தது. இதைத் தவிர இன்னுமொரு வார்த்தையினாலும் அவரின் மார்க்கம் உண்மையுள்ளதென்று தெரியவருகின்றது. அதென்னவென்றால், இந்த மார்க்கமுண்டாகி வெகு காலமாகியும் இதில் மற்ற மார்க்கங்களைப்போலப் படைப்புகளின் வணக்கமுதலானது உண்டாகவில்லை. இஸ்லாமானவர்கள் தங்கள் புத்திக்கும் அபிப்பிராயத்துக்கும் இடங்கொடுக்கவில்லை. ஒரே ஆண்டவனுடைய வணக்கத்தின்பேரில் நிலைத்திருக்கிறார்கள். கடவுளை வணங்குவதற்குப் பதிலாக விக்கிரகங்களைவணங்கத் தலைப்பட்டார்களில்லை. அவர்களின் கொள்கைக்கு ஆதாரமான மூல வாக்கியத்தின் அர்த்தமென்னவென்றால், அல்லா ஒருவனென்றும் அவனுடைய நபியான முகம்மது (சல்லல்லாகு அலைகிவசல்லம்) உண்மையானவரென்றும் நான் உறுதியாய்நம்பினேன் என்பதாம். அவருடைய ஜீவகால முழுவதின் ஒவ்வொரு காரியத்தினாலும் அவருக்குப் பெருமையடையநோக்க மிருந்ததில்லையென்று நன்றாய் விளங்குகிறது. இன்னுமொரு காரியத்தை நாம் கூர்மையாய்யோசித்தால் அதாவது இஸ்லாம் மார்க்கம் அவருடைய ஜீவகாலத்திலேயே நன்றாய் ஊர்ஜிதமாகி அவருக்குத் தீர்மானமில்லாத அதிகாரம் கி

டைத்துவிட் டிருந்தும் அதனால் அவர் ஒருபோதும் தமது சொந்தப் பிரயோசனத்தை யடையவில்லை. முதலில் எப்படி யிருந்தாரோ அப்படியே சாதாரணமா யிருந்திருக்கிறார். இந்தக் காரியமும் அவர்பெருமையடைய வேண்டுமென்ற நோக்கமில்லாதவரா யிருந்தாரென்று நாம் சொன்ன சொல்லைப் பலப்படுத்துகின்றது. விக்கிரக வணக்கத்தை இல்லாமற் செய்கிறதும், விக்கிரக வணக்கத்திலேயே மூழ்கிச் சுத்தமாய்க் கடவுளை மறந்துவிட்டிருந்த ஒருகூட்டத்தில் ஒரேகடவுளின் வணக்கத்தை நாட்டுகிறதுமான இந்தக் காரியம் உண்மையில் தேவனால் நியமிக்கப்பட்ட ஒருகாரியமா யிருக்கலா மென்று நம்பத்தக்கதா யிருக்கிறது. இன்னுமவர் அறபு தேசத்தில் ஒரே தேவனுடைய வணக்கத்தை நாட்டினா ரென்பதும் அந்தத்தேசத்தில் விக்கிரக வணக்கத்தை ஆயிரவருஷ காலத்தி லிருந்து நாளது வரையில் ஒருபோதாவது எவ்விதத்திலாவது மீண்டும் தலை காட்டாதபடி நசிக்கச் செய்தா ரென்பதும் உண்மையா யிருக்கிறது.

எவர் அவரின் தேசத்தாராகிய அறபிகள் வெகுகாலம் மூழ்கியிருந்தும், ரொம்பவும் அருவருக்கத் தக்கதுமான விக்கிரக வணக்கத்துக்குப் பதிலாக ஒரே ஆண்டவனுடைய வணக்கத்தை ஸ்தாபித்ததினால் பெரிய பெரிய பூர்வீக வழக்கங்களைச் சீர்திருத்தினாரோ உதாரணமாக: பிள்ளைகளின் கொலையை நிறுத்தினார். குணங்களுக்கு அதிகக் குறைவை யுண்டாக்குகிற லாகிரி வழங்குதலையும் சூது விளையாடலையும் விலக்கினார். அக்காலத்தில் அதிக தாரம் படைக்கிற வழக்கமாயிருந்ததை ரொம்பவேகுறைத்து மட்டுப்படுத்தினார். இப்பேர்ப்பட்ட பெரிய விடாமுயர்ச்சியுள்ள திருத்துகிறவரை ஜாலக் காரரென்று நாம் சொல்லக் கூடுமா? இப்பேர்ப்பட்டவருடைய காரியங்கள் தந்திர உபாயத்தின் பேரிலா யிருந்தனவென்று நாம் மொழியக் கூடுமா? இல்லை, இப்படிச் சொல்லமாட்டோம். சந்தேகமில்லாமல் முகம்மது (சல்லல்லாகு அலைகிவசல்லம்) நல் எண்ணமுள்ள இருதயத்தினாலும் விசுவாசத்தினாலுமே யொழிய மற்றப்படி வேறே காரணத்தினால் இவ்வளவு உறுதியுடன் தம்முடைய காரியத்தை நடாத்துகிறதின் பேரில், வஹி யென்ற தேவ யேவுதல் இறங்கிற்றென்று கதீஜாவினிடம் சொன்னதுமுதல் கடைசியாய் வியாதியின் கஷ்டத்தோடு ஆயிஷாவின் மடியில் மரணமாகிறவரையில் விடாமுயற்சியா யிருக்க முடியாது. எந்த ஜனங்கள் எப்போதும் அவரிடத்தி லிருந்திருக்கிறார்களோ, இன்னும் எந்த ஜனங்கள் அவருடன் அதிக சகவாசமா யிருந்தார்களோ அவர்களுக்குக் கூட ஒருபோதாவது அவர் தன் புகழை விரும்பும் குணமுள்ளவரா யிருப்பாரென்ற சந்தேகமுண்டாகவில்லை. ஒருபோதும் அவர்கள் தங்

கள் நல்ல நடைத்தைகளை விட்டு மீறவில்லை. தமது கடவுளின்பேரில் ஆதரவு உள்ளவரும் விசுவாசத்திலும் வீண் வழக்கங்களிலும் அதிக திருத்துதல் செய்தவருமான ஒரு நல்ல சுபாவமுள்ளவர் உண்மையில் கடவுளின் சுத்தமான ஒரு கருவியா யிருக்கிறார். அவரை நாம் கடவுளுடைய நபியா யிருக்கிறார் என்று சொல்லக்கூடும். அவரின் காலத்திலும் அவருடைய தேசத்திலும் அவரின் கூட்டத்தாருக்குக் கடவுளுடைய ஓர்மையையும் வணக்கத்தையும் கற்பிக்கிற தற்காகவும், அவர்களுடைய நிலைமைக்குத் தக்கபடி அவர்களுக்கு தேச விஷயமும் சற்குண சம்மந்தமுமான காரியங்களில் உபதேசம் செய்கிற தற்காகவும் கடவுள் அவரை அனுப்பியிருந்தா ரென்றும் அவர் மெய்யான பிரசங்கியா யிருந்தா ரென்றும் ஏன் நம்பக் கூடாது?

மிஸ்டர் டாமஸ் கார்லேல் துரை எழுதுகிறதாவது: முகம்மது ஒரு பெரிய தந்திரக்கார ராகவும் யூகை யுள்ளவராகவும் பொய்யவதாரிக் கொப்பானவராகவும் இருந்தாரென்றும், அவரின் மார்க்கம் பைத்தியமும் அவிவேகமும் கூடிய ஒரு குவியலா யிருக்கிறதென்றும் நம்மில் (ஏசுவின் மதஸ்தர்களில்) பிரபல்லியமா யிருக்கிறதே இப்பொழுது இந்த எல்லா வார்த்தைகளும் ஜனங்களிடத்தில் தப்பென்றுகின்றன. புத்தி கூர்மையும் மத வைராக்கியமுமுள்ள ஜனங்கள் (ஏசுவின் மதஸ்தர்கள்) அவரின் விஷயத்தில் என்னென்ன பொய்வார்த்தைகளை ஸ்தாபித்தார்களோ இப்பொழுது அவைகளெல்லாம் நாம் வெழ்க்கமடைவதற்குக் காரணங்களா யிருக்கின்றன. உதாரணமாக பாக்கோக் துரையானவர் குரோய்னி துரையிடத்தில், நீர் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் விஷயத்தில், முகம்மது ஒரு புராவை வளர்த்து அதற்கு அவரின் காது குறும்பி யெடுக்கப் பழகி வைத்திருந்தா ரென்றும், அது அவரிடம் வஹி என்ற தேவ யேவுதலைக் கொண்டுவருகிற மலக்கா யிருக்கிறதென்று அவர் பிரஸ்தாபப் படுத்தினாரென்றும் எழுதியிருக்கிறீரே இந்தச்சரித்திரத்திற்கு ஆதாரமென்ன விருக்கிறதென்று கேட்டதற்கு அவர் சொன்னதாவது:- இச்சரித்திரத்திற்கு யாதொரு ஆதாரமுமில்லை. உண்மையில் இந்த சரித்திரங்களையெல்லாம் சுத்தமாய் விட்டுவிடவேண்டிய காலம்வந்துவிட்டது. அவர் (முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம்) தமது நாவினால் வெளிப்படுத்திய வார்த்தைகளை ஆயிரத்து இருநூறு வருஷத்திலிருந்து பதினெட்டுகோடி ஜனங்கள் ஏற்றுக்கொண்டு நல்வழியில் நிலைத்திருக்கிறார்கள். அந்தப் பதினெட்டுகோடி ஜனங்களையும் கடவுள் நம்மைப் படைத்தது போலவே படைத்திருக்கிறார். இப்பொழுது எவ்வளவு ஜனங்கள் முகம்மதுடைய

வார்த்தைகளை விசுவாசிக்கிறார்களோ அதிலும் மேலாக மற்றவருடையவார்த்தைகளை இக்காலத்தின் ஜனங்கள் விசுவாசிக்கிறார்களில்லை. பின்பு எந்தவார்த்தையின்பேரில் கடவுளுடைய இவ்வளவுஜனங்கள் காலங்கழித்து அதன்பேரில் மரணத்தை யடைந்தார்களோ அந்த வார்த்தையை ஒருஜாலவித்தைக்காரன் காட்டின பொய்விளையாட்டென்று நாம் எண்ணக்கூடுமா ? ஒருபோதும் நான் அப்படி எண்ணமாட்டேன். மேலும் மற்றவைகளைக்காண அதை நான் சீக்கிரத்தில் நம்புகிறேன். பொய்யும் ஜாலமும் தந்திரமுமான வார்த்தைகள் உலகத்தில் இவ்வளவுபலப்பட்டு ஊர்ஜிதமாகிறதாயிருந்தால் பின்பு இந்த உலகத்தின் விஷயத்தில் யார் எதை நிச்சயிப்பான். அதிகமாய் வியாபித்திருக்கிற இவ்வகையான சங்கதிகள்ரொம்பவும் விசனமடையத் தக்கவைகளாயிருக்கின்றன. கடவுளுடைய உண்மையான படைப்புகளை அறிந்துகொள்ள நமக்குப் பிரியமிருக்கும் பக்ஷத்தில் இப்பேர்ப்பட்ட வார்த்தைகளை நம்புகிறது நமக்கு ஒருபோதுங் கூடாது. சந்தேகங்களுக் கிடமுள்ளதும், மனிதருடைய ஆத்மாக்கள் அவர்களைக் கொல்லுதற் கேதுவானகேட்டிலும் விசனத்திலு மிருக்கின்றனவென்று போதித்தவர்க ளிருந்ததுமான காலத்தில் தான் அந்த வார்த்தைகள் பரவி யிருந்தன. ஒரு பொய்யன் ஒரு மார்க்கத்தை உண்டு பண்ணினான் என்றும், அதனால் கெட்டவனும் கடவுளை வணங்காதவனும் உலகத்தில் அதிகமாய் வியாபிக்கவில்லை என்றும் எப்படி சிந்திக்கக்கூடும்? சுண்ணாம்பும் செங்கல்லும் மற்றும் சாமான்களுடைய உண்மையை அறியாத ஒரு பொய்யன் உறுதியான ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டானென்றால் அது எப்படி உறுதியான வீடாகும். மேலும் மண்ணின் ஒரு மேடாகும். அது ஆயிரத்து இருநூறு வருஷம் எப்படி நிலைத்திருக்கும். பதினெட்டு கோடி ஜனங்கள் அதில் எப்படி யிருக்கக்கூடும். மேலும் கட்டி வெகுநாள்சென்ற அந்தவீடு இதுவரையில் இடிந்து விழுந்திருக்கும் என்பதே.

பாருங்கள் இந்த வாக்கியங்க ளெல்லாம் இஸ்லாம் மார்க்கத்துக்கு விரோதிகளா யிருந்தவர்களின் வாக்கியங்களா யிருக்கின்றன. இவைகளால் இஸ்லாம் மார்க்கத்தின் பெரிய மகத்துவம் வெளியாகின்றது * والفضل ما شهدت به الاعداء எதைக் குறித்து விரோதிகள் நற்சாக்ஷிபகர்ந்தார்களோ அதுவே மேலானதென்பதை புத்திமான்கள் உணர்ந்துகொள்வார்கள்.

முற்றிற்று.